# தென்கிழக்கு இலங்கையின் பண்டைய இந்து சமய வரலாறு

(பொ.ஆ.மு. 5100 முதல் பொ.ஆ. 1000 வரை)

என்.கே.எஸ். திருச்செல்வம்



அகில இலங்கை இந்து மாமன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்கிழக்கு இலங்கையின் பண்டைய இந்துசமய வரலாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கிழக்கு இலங்கையின் பண்டைய இந்து சமய வரலாறு

(பொ.ஆ.மு. 5100 முதல் பொ.ஆ. 1000 வரை)

**என்.கே.எஸ். திருச்செல்வம்** B.A

*வரலாற்றுத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்*

அகில இலங்கை இந்து மாமன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்கிழக்கு இலங்கையின் பண்டைய இந்து சமய வரலாறு
(பொ.ஆ.மு. 5100 முதல் பொ.ஆ. 1000 வரை)

என்.கே.எஸ். திருச்செல்வம் எழுதியது
© என்.கே.எஸ். திருச்செல்வம், 2015

அகில இலங்கை இந்து மாமன்றத்தால் வெளியிடப்பட்டது
இல. 91/5, சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு - 2, தொ.பே. 2434990

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அகில இலங்கை இந்து மாமன்றம்

(இலங்கை இந்துமன்ற அமைப்புகளினதும் ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் ஒன்றியம்)

# ALL CEYLON HINDU CONGRESS

**(Federation of Hindu Religious Associations and Temple Trusts in Sri Lanka)**

| | | | |
|---|---|---|---|
| நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத் தலைவர்<br>**Chairman of the Board of Trustees**<br>வி. கயிலாசபிள்ளை<br>*V.Kailasapillai*<br>*Phone:2575566 (Res)*<br>*Fax : 2575472*<br>*hariomak@gmail.com* | தலைவர்<br>**President:**<br>கந்தையா நீலகண்டன்<br>*Kandiah Neelakandan*<br>*Phone: 2580807 (Res)*<br>*2371100 (Off) - Fax : 2371111*<br>*neela@mnlaw.lk* | பொதுச் செயலாளர்<br>**Hony. General Secretary:**<br>முத்தையா கதிர்காமநாதன்<br>*Muthiah Kathirgamanathan*<br>*Phone: 2582139 (Res)*<br>*Fax: 2593997*<br>*mknathan21@yahoo.com* | பொருளாளர்<br>**Hony. Treasurer:**<br>வே. கந்தசாமி<br>*V. Kandasamy*<br>*Phone: 2586620 (Res)*<br>*Mobile: 071-5349150*<br>*vkandasami@gmail.com* |

## மாமன்றத் தலைவரின் செய்தி

இலங்கை இந்து மக்களின் வழிகாட்டிகளாக வடக்கிலும், கிழக்கிலும் பிறந்த இருபெரு மக்கள் - நாவலர் பெருமானும், சுவாமி விபுலானந்தரும் எங்கள் சமூகத்தின் இரு கண்கள். வடக்கில் மட்டுமல்ல கிழக்கிலும் நீண்ட வரலாறு கொண்ட இந்துப் பாரம்பரியம் நிலவி வந்திருக்கின்றது.

கடந்த சில ஆண்டுகளாக எமது வரலாற்றை ஆராய்ந்து எழுதுவதன் மூலம் அரிய பணிகள் ஆற்றிவரும் வரலாற்று ஆய்வாளர் திரு. என் கே. எஸ். திருச்செல்வம் எழுதிய ''தென்கிழக்கு இலங்கையின் பண்டைய இந்து சமய வரலாறு'' எனும் இந்நூலை வெளியிட்டு வைப்பதில் மாமன்றம் பெருமை கொள்கின்றது. இப்படியான ஆய்வுகளையும் வரலாற்று நூல்களையும் வெளியிட்டு, எமது வரலாற்றை உலகறிய வைக்கும் பணியை மாமன்றம் தொடர்ந்தும் செய்யும்.

சுவாமி விபுலானந்தர் பிறந்த கிழக்கு மாகாணப் புண்ணிய பூமியில் நாவலர் பெருமானை நினைவு கூர்ந்து ஆன்மீக எழுச்சிக் கருத்தரங்கையும் சிவதொண்டர் மாநாட்டினையும் மட்டக்களப்பு இந்து இளைஞர் பேரவையின் ஒழுங்கில், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் 60வது ஆண்டு நிறைவு நிகழ்வுகளின் ஓர் அம்சமாக நடத்தும் அதே அரங்கில் இந்த நூலை நாவலரின் வழியில் தொடரும் எங்கள் பணியாக வெளியிட்டு வைக்க மாமன்றத்திற்குக் கிடைத்த வாய்ப்பை இறையருளாகவே கருதி, ஸ்ரீ சிவகாமி சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானின் பாதாரவிந்தங்களில் இந்நூலைச் சமர்ப்பிக்கின்றோம்.

**கந்தையா நீலகண்டன்**
தலைவர்
அகில இலங்கை இந்து மாமன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# வாழ்த்துரை

'தென்கிழக்கு இலங்கையின் பண்டைய இந்து சமய வரலாறு' எனும் தலைப்பில் தென்கிழக்கு இலங்கையின் இந்து பாரம்பரித்தை ஆராய்ந்து அருமையான ஒரு நூலை ஆராய்ச்சியாளர் திரு. என். கே. எஸ். திருச்செல்வம் எழுதியிருப்பது பாராட்டப்பட வேண்டிய பணியாகும்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறைப் பட்டத்தாரியான திரு. திருச்செல்வம் இப்படியான ஆராய்ச்சி முயற்சிகள் எடுத்துவருவதை நாம் அறிவோம். தனது பணியால் இந்நாட்டு இந்து மக்களுக்கு அவர் ஆற்றி வரும் சேவையை மெச்சுகின்றோம்.

பல்வேறு வழிகளில் அறுபது ஆண்டுகளாக மக்களுக்கு இறைபணி யாற்றிவரும் இந்நாட்டின் இந்து மக்களின் உச்ச நிறுவனமான அகில இலங்கை இந்து மாமன்றம் பல நூல்களை வெளியிட்டு நாவலர் காட்டிய பாதையில் கல்விப் பணியும் ஆற்றி வருகின்றது. கிழக்கு மாகாணத்தில் மாமன்றம், மட்டக் களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையுடன் இணைந்து நாவலருக்கு விழா எடுக்கும்போது இந்நூலை மாமன்றம் வெளியிட்டு வைப்பதையும் எல்லோரும் போற்ற வேண்டும்.

''என்றும் வேண்டும் இன்பவன்பு''<br>
இரண்டாவது குரு மஹா சந்நிதானம்<br>
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**<br>
**ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்
நல்லூர், யாழ்ப்பாணம்
இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இலங்கைத் தீவிற்கு மிகப் புராதன இந்து பாரம்பரியம் உள்ளது. குறிப்பாக தென்கிழக்கு இலங்கையிலேயே மிகப் பழைமையான காலம் முதல் கொண்டு இந்து சமயத்தொடர்புகள் இருந்தன. இலங்கையில் நிகழ்ந்த மிகப் பண்டைய நிகழ்வாக முருகனின் சூரசம்ஹாரத்தைக் குறிப்பிடலாம். இதுவே இலங்கையில் நடந்த மிகப் பழைமை வாய்ந்த இந்து சமய நிகழ்வாகும். இது சுமார் 7000 - 10,000 வருடங்களுக்குள் நிகழ்ந்தது என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். தக்ஷிண கைலாய புராணம் இந்நிகழ்வு பற்றிக் குறிப்பிடுகிறது. முருகன் சூரனை அழிக்க இலங்கைக்கு வந்த சம்பவத்துடன் கதிர்காமம், உகந்தை, நாகர்முனை (திருக்கோயில்) மண்டூர், வாகூர மலை போன்ற இடங்கள் தொடர்பு பட்டுள்ளன. இவ்விடயங்களில் மண்டூரைத் தவிர ஏனைய இடங்கள் தென்கிழக்கு இலங்கையில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

முருகனின் படையெடுப்புக்குப் பின் இலங்கையில் நடந்த முக்கிய சம்பவமாக இராமாயணப் போர் விளங்குகிறது. சீதையை மீட்டெடுக்க இலங்கைக்கு வந்த, இராமன் இலங்கை மன்னன் இராவணனுடன் போர் புரிந்தது, மற்றும் இலங்கை மன்னன் இராவணனின் ஆட்சி ஆகியவை தொடர்பான பல இடங்கள் இலங்கையில் உள்ளன. குறிப்பாக தென்கிழக்கு இலங்கையில் உகந்தை, திருக்கோயில், நாகபர்வதமலை, அறுகம்குடா, குடும்பி மலை, இராவணன் கோட்டைகள், கதிர்காமம், கும்புக்கன் ஆறு போன்ற இடங்கள் இராவணனுடன் தொடர்பு பட்டுள்ளன. வால்மீகி எழுதிய இராமாயணம் எனும் நூல் இலங்கையில் இராமாயணச் சம்பவங்கள் நிகழ்ந்தமை பற்றிக் கூறுகிறது. இது சுமார் 7000 வருடங்களுக்கு முன்பு நிகழ்ந்துள்ளது.

எனவே இலங்கையில் இந்து பாரம்பரியம் தொடங்கியது தென் கிழக்கு இலங்கையிலேயே என்பதும் இதன் மூலம் உறுதியாகிறது. மேலும் இப் பகுதியில் நிலவிய பெருங்கற்கால பண்பாட்டு நாகரிகம், மற்றும் பிராமிக் கல்வெட்டுக்கள் போன்றவற்றில் பண்டைய இந்து சமயம் தொடர்பான பல விடயங்கள் உள்ளன. மேலும் கோயில்களில் காணப்படும் சிலைகள், தொல்பொருட் சின்னங்கள் போன்றவையும் இக்காலப் பகுதியில் இருந்த இந்து சமயம் தொடர்பான முக்கிய சான்றுகளாக உள்ளன. சில ஆலயங்களில் மிகப் பண்டைய கல்வெட்டுக்கள் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன. இவற்றைத் தவிர தென்கிழக்கு இலங்கை பற்றித் தெரிந்து கொள்வதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு பூர்வ சரித்திரம், மட்டக்களப்பு மான்மியம், மட்டக்களப்பு தமிழகம் மற்றும் "Monagraph of the Batticaloa district of the Eastern province of ceylon" போன்ற நூல்கள் பேருதவியாக அமைகின்றன.

இந்த அடிப்படையிலேயே முதலில் தென்கிழக்கு இலங்கையில் இந்து பாரம்பரியத்தைப் பற்றி எழுத வேண்டும் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. அதிலும் இத்தகைய தொன்மை மிகு பாரம்பரியத்தைக் கூறும் கண்கண்ட சான்றுகளாக விளங்குபவை இங்கிருக்கும் ஆலயங்களும், பிராமிக் கல்வெட்டுக்களுமே. இலங்கையின் முதலாவது வரலாற்று நிகழ்வாகக் கருதப்படும் கந்தன் படையெடுப்புடன் இப்பிரதேசம் தொடர்புபட்டுள்ளதால் தான் தென்கிழக்கு இலங்கையில் முருக வழிபாடு மேலோங்கிக் காணப் படுகிறது. பண்டைய காலம் முதல் கதிர்காமம், உகந்தை மலை, சங்கமன் கண்டிமலை, திருக்கோயில் போன்ற இடங்களில் இவ் வழிபாடு சிறப்புற்று விளங்குகிறது.

எனவே தென்கிழக்கு இலங்கையின் பண்டைய இந்து பாரம்பரியத்தின் சான்றாக விளங்கும் கல்வெட்டுக்களையும், கோயில்களையும் ஆராய்வது என்ற முடிவுக்கு வந்த நிலையில் கடந்த 2000ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி எனது ஆய்வு முயற்சிகளை தென்கிழக்கு இலங்கையில் ஆரம்பித்தேன். எல்லா ஆலயங்களுக்கும், கற்குகைகளுக்கும் நேரில் சென்று கள ஆய்வை மேற்கொண்டேன். அதன் விளைவாக இப்பகுதியின் புராதன தொன்மை மிகு தெய்வச்சிலைகள், ஐம்பொன் படிமங்கள் மற்றும் கல்வெட்டுக்கள், கருங்கற் சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய தொல்பொருட் சின்னங்கள், புராதன கட்டிட இடிபாடுகள் போன்ற அரிய பொக்கிஷங்களைக் காணக் கூடியதாகவும், அவை பற்றிய தகவல்களைப் பெறக்கூடியதாகவும் இருந்தது.

இப்பகுதியில் இருக்கும் ஆலயங்கள் பற்றிய ஐதீகங்கள், கர்ண பரம்பரைக் கதைகள் ஆகியவற்றை விட இவ்வாலயங்கள் பற்றிய ஆய்வுக் குறிப்புகள், மற்றும் இங்கு கிடைக்கப் பெற்ற தொல்பொருட் சின்னங்கள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து ''தென்கிழக்கிலங்கையின் பண்டைய இந்துசமய வரலாறு'' என்ற பெயரில் இந்த ஆய்வு நூலை எழுதியுள்ளேன்.

தென்கிழக்கு இலங்கை எனும் இன்றைய அம்பாறை மாவட்டத்தில் பண்டைய இந்து பாரம்பரியத்தைக் கூறும் ஏராளமான ஆலயங்கள் இருந்தும் அவை பற்றிய நூல்கள் வெளிவராமை பெரும் குறைபாடாக உள்ளது. பண்டிதர் வி.சி.கந்தையா எழுதிய மட்டக்களப்பு சைவக் கோயில்கள் எனும் நூலில் தென்கிழக்கு இலங்கையில் உள்ள 11 கோயில்கள் மட்டுமே இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுள்ளன. எனது ஆய்வின் படி இப் பகுதியில் சுமார் 150 புராதன ஆலயங்கள் உள்ளன. இவற்றில் 11 கோயில்கள் மட்டுமே நூல் வடிவில் எழுதப்பட்டுள்ளன. எனவே இக் குறையை ஓரளவேனும் தீர்க்கும் வகையில் எனது இந்நூலில் 59 கோயில்கள் பற்றிய விபரங்களை எழுதியுள்ளேன். மேலும் தென்கிழக்கிலங்கையில் இருந்த பண்டைய 10 இந்து இராச்சியங்கள், 9 பெருங்கற்கால தொல்லியல் மையங்கள், 36 பண்டைய இந்துக் கிராமங்கள், இந்து சமய பற்றிக் கூறும் 105 பிராமிக் கல்வெட்டுக்கள் ஆகியவை பற்றிய விபரங்களையும் இந்நூலில் எழுதியுள்ளேன். எனது அடுத்த நூலில் எஞ்சியுள்ளவற்றை முடியுமானவரை எழுதி நூல் வடிவாக்க உள்ளேன்.

கடந்த 14 வருடங்களாக நான் மேற்கொண்ட பெருமுயற்சியின் காரண மாக தினக்குரல் பத்திரிகையில் தொடராக வெளிவந்த இக் கட்டுரைகளை நூல் வடிவாக்க வேண்டும் என்ற நல்ல நோக்குடன் தாமாகவே முன் வந்து இந்நூலை வெளியிட பேருதவி புரிந்த அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் அவர்களுக்கும், தினக்குரல் பத்திரிகையில் என ஆய்வுக் கட்டுரைகளை தொடராக வெளியிட உதவி புரிந்த வாரமலர் பிரதம ஆசிரியர் திரு. பாரதி இராஜரத்தினம் அவர்களுக்கும் எனது சிரம் தாழ்த்தி நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் எனது கள ஆய்வுகளின் போது எனக்கு உதவியாக வந்தவர்களுக்கும், இந்நூல் வெளிவர பல வகையிலும் உதவிய அன்பு உள்ளங்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**என்.கே.எஸ். திருச்செல்வம்**
B.A. வரலாற்றுத்துறை
சென்னை பல்கலைக்கழகம்.
30.11.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூல் வெளிவர பலவகையிலும் உதவிபுரிந்த இவ்வன்பு உள்ளங்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றிகள்

1. இந்நூலை வெளியிட்டு வைத்த அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் திரு.கந்தையா நீலகண்டன் ஐயா.

2. தினக்குரல் வாரமலர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் திரு.ஆர்.பாரதி.

3. என்றும் எனக்கு ஊக்கமளித்து வரும் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி.சாந்தி நாவுக்கரசன்.

4. முன்னாள் இந்துக் கலாசார அமைச்சர் திரு.செ.இராஜதுரை.

5. இந்நூலை அழகாக அச்சிட்டு தந்ததோடு எனக்கு அடிக்கடி ஆலோசனை வழங்கி என்னை ஊக்குவிக்கும் குமரன் புத்தக நிலையத்தினர்.

6. பல இடங்களுக்கும் என்னோடு வந்து ஆய்வுகளை மேற்கொள்வதற்கு துணையாக இருந்த திருமதி.அருந்ததி திருச்செல்வம், மற்றும் திரு. எஸ். கணேசலிங்கம், திரு.வி.கதிர்வேல், திரு.வி.ஜெயச்சந்திரன், திரு.எஸ்.எம்.செல்வமணி, திரு.A.K.Kபவுல் தேவதாஸ்.

7. திருக்கோயில் பொத்துவில் பகுதிகளில் ஆய்வுகளை மேற்கொள்ள எனக்குத் துணையாக வந்த தம்பிலுவிலைச் சேர்ந்த திரு.விஜிதரன்.

8 அக்கரைப்பற்று பகுதியில் ஆய்வுகளை மேற்கொள்ள எனக்குத் துணையாக வந்த திரு.சரவணபவா.

9. இந்நூலை பிழை திருத்தம் செய்ய இரவு பகலாக உதவி செய்த திரு. என்.கே.எஸ்.தமிழ்ச்செல்வம், செல்வி.த.சரண்யா, செல்வி. தி. சனுஜா, செல்வி.அ.ரோபினி.

10. இங்கியாகலைப் பகுதியில் ஆய்வுகளை மேற்கொள்ள எனக்குத் துணையாக வந்த புதிய வளத்தாப்பிட்டியைச் சேர்ந்த மு.தமிழ்ச்செல்வம் (பாசம்)

11. தேவலஹிந்த - திரு. அஜித்குமாரசிறி

12. பரஹாகெலே - திரு.சாந்த டயஸ்.

13. மாணிக்கமடு - திருமதி. S.தங்கமலர், திரு. K.செல்லத்தம்பி

14. குடுவில் - திரு.பாரூக், திரு.ரஹீம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தகவல்கள் வழங்கி உதவியளித்தவர்கள்

» தம்பிலுவில் திரு.க.இராஜரத்தினம் (கண்ணன்)

» அக்கரைப்பற்று திரு.த.கைலாயப்பிள்ளை, திரு..இரா.சிவானந்தராஜா.

» காரைதீவு திரு.R. குணசிங்கம், திரு.S.கங்காதரன், திரு.A.ஜெயநாதன்.

» திரு.தில்லையம்பலம், திரு.பிரகதீஸ்வரசர்மா, திரு. தட்சணாமூர்த்தி.

» பாண்டிருப்பு - திரு P. தர்மலிங்கம், திரு K. சிவலோகநாதன், திரு K. ராஜேந்திரம், திரு.சுரேஷ், திரு. இளையதம்பி கிருஸ்ணப்பிள்ளை.

» சேனைக்குடியிருப்பு - நல்லதம்பி குருக்கள், திரு. என்.கஜேந்திரா.

» தம்பிலுவில் - திரு.தம்பி அப்பா, திரு.சண்முகம்பிள்ளை.

» கோளாவில் - திரு.S.சேகர்.

» அட்டப்பள்ளம் - திரு.P. செல்லப்பா, திரு.ராமச்சந்திரன்

» திருக்கோயில் - திரு. அங்குசநாத குருக்கள், திரு.வன்னியசிங்கம் ஜயந்தன்

» வீரமுனை - திரு.கோவிந்தசாமி, திரு.T.சேனாதிராஜா, திரு.இராஜகோபால், நிமலேஸ்வர குருக்கள் ஐயா.

» நற்பிட்டி முனை - திரு. S. சிவகுருநாதன்.

» கல்முனை - சச்சிதானந்த சிவகுருக்கள்.

» வளத்தாப்பிட்டி - திரு.துரைசிங்கம்.

» மல்லிகைத்தீவு - திரு.இ.காண்டீபன், திரு. இ.ஜெயச்சந்திரன், திரு. இராசையா.

» சம்மாந்துறை - திரு.நிரோஷ், திரு. ஏ.மோகன், திருமதி.தங்கம்மா, திரு.பேச்சிமுத்து.

» கண்ணகிபுரம் - திரு.கந்தசாமி, திரு.சந்திரகுமார், திரு. தியாகராசா, திரு. தங்கவடிவேல், திரு உதயகுமார்.

» கோமாரி - திரு.சுபோகரன்

» பொத்துவில்- திரு.கந்தசாமி, திரு. க. திலகேஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

» பானமை - திரு.கே.பாலச்சந்திரன், திரு. B. ரஞ்சித்

» சங்கமன்கண்டி - திரு.சந்திரசேகரம்

» நிந்தவூர் - திரு. N. பிரபாகர்

» நாவிதன்வெளி - திரு.A.பிள்ளையான் தம்பி.

» பனங்காடு - திரு.நா. நவநாயக மூர்த்தி, திரு.லோகநாதக் குருக்கள்.

» மல்வத்தை - பரமலிங்கக் குருக்கள். திரு.நாதப்பிள்ளை.

» உகந்தை - திரு.முத்துபண்டா வண்ணக்கர்.

» பெரிய நீலாவணை - திரு.கே.சரவணமுத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்


மாமன்றத் தலைவரின் செய்தி v
வாழ்த்துரை vi
முன்னுரை vii
நன்றிக்குரியவர்கள் x
குறுக்கங்கள் xx

1. **தென்கிழக்கிலங்கையின் பூர்வீகம்** 1
2. **தென்கிழக்கிலங்கையின் பண்டைய இராச்சியங்கள்** 6
   - இராவணனின் லங்காபுரியின் தென்பகுதி 6
   - விபீஷனின் கல்யாணி இராச்சியம் 10
   - இயக்கரும், நாகரும் ஆண்ட உகந்தை இராச்சியம் 11
   - நாகர் ஆண்ட நாகர்முனை இராச்சியம் 12
   - காளிசேனன் ஆண்ட காளிதேசம் 13
   - சத்திரிய மன்னர்களின் சந்தனகாமம் 14
   - கதிர்காம பாண்டிய, சத்திரிய மன்னர்களின் சங்கமன் கண்டி எனும் உப இராச்சியம் 15
   - கூத்திக மன்னன் அமைத்த மட்டக்களப்பு இராச்சியம் 18
   - எல்லாள மன்னனின் சிற்றரசர்கள் ஆண்ட தீகவாபி இராச்சியம் 18
   - புவனேககயவாகு அமைத்த உன்னரசுகிரி இராச்சியம் 19
3. **தென்கிழக்கிலங்கையின் பெருங்கற்கால (ஆதி இரும்புக்காலம்) பண்பாட்டு தொல்பொருள் மையங்கள்** 22
   - உகந்தை 22
   - சங்கமன் கண்டி 23
   - மல்கம்பிட்டி 24
   - வீரையடி 24
   - பானமை 25


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | கும்புக்கன் ஆற்றங்கரை | 25 |
| | ஓமுனகல - ஹேனன்னேகல | 25 |
| | ஹூலன்நுகே - லாகுகல | 26 |
| | வாகூர மலை | 27 |
| **4.** | **தென்கிழக்கிலங்கையின் பண்டைய கிராமங்களும், குடியேற்றங்களும்** | 30 |
| | உகந்தை | 30 |
| | நாகர் முனை (திருக்கோயில்) | 31 |
| | காரைதீவு | 31 |
| | மாளிகைக்காடு | 32 |
| | நிந்தவூர் | 32 |
| | அட்டப்பள்ளம் (சிங்காரத்தோப்பு) | 33 |
| | மல்கம்பிட்டி (மண்கல்பிட்டி) | 33 |
| | சம்மாந்துறை | 33 |
| | வீரமுனை | 34 |
| | தம்பிலுவில் (தம்பதிவில்) | 35 |
| | தம்பட்டை | 35 |
| | சங்கமன் கண்டி | 36 |
| | கோமாரி | 36 |
| | பானமை | 38 |
| | கரவாகு | 38 |
| | மல்வத்தை | 40 |
| | கருங்கொடித்தீவு (அக்கரைப்பற்று) | 40 |
| | பனங்காடு | 41 |
| | பெரிய நீலாவணை | 42 |
| | பாண்டிருப்பு | 42 |
| | நற்பிட்டிமுனை | 43 |
| | தீகவாபி | 44 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | கவடா மலை | 44 |
| | சவளக்கடை | 45 |
| | நாவிதன்வெளி | 45 |
| | வளத்தாப்பிட்டி | 46 |
| | மல்லிகைத்தீவு | 46 |
| | சேனைக்குடியிருப்பு | 47 |
| | கல்முனை | 47 |
| | அன்னமலை | 49 |
| | கோரக்களப்பு | 49 |
| | கோளாவில் | 49 |
| | அறுகம்குடா களப்பு | 49 |
| | சொறிக்கல்முனை | 50 |
| | செங்கட்படை | 50 |
| | நாக பர்வதமலை (பம்பரகஸ்தலாவை) | 51 |
| | மேலும் சில பண்டைய கிராமங்கள் | 51 |
| **5.** | **பிராமிக் கல்வெட்டுக்கள்** | **53** |
| | வெஹெரகல்கந்த, உகந்தை | 55 |
| | தமண | 56 |
| | மொட்டைமலை - (மொட்டயா கல்லு) - சாகாமம் | 57 |
| | உஹபிட்ட கல்கே - இங்கினியாகல | 59 |
| | வடினாகல மலை | 60 |
| | மாவறகல மலை - பதியத்தலாவை | 61 |
| | விஹாரேகல - உகந்தை | 62 |
| | திஸ்னாவுல கேம | 63 |
| | நாவலர் குளம் - பொத்துவில் | 63 |
| | குடுவில் - இறக்காமம் | 64 |
| | நியந்தவரகல மலை - புல்லுமலை | 66 |
| | முள்ளிக் கொழுடு மலை - பாலமுனை | 67 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| கோவிந்தஹெல (கோவிந்த மலை) - சியம்பலாண்டுவ | 67 |
| களிஓடை (காளிஓடை) - ஒலுவில் | 70 |
| வெஹெரகம - உகன | 72 |
| தெகியத்த கண்டிய | 73 |
| கரந்தஹெல மலை - லாகுகலை | 74 |
| மலையடி கந்த மலை - ஹிங்குரான | 76 |
| மாதனகந்த மலை - உகனை | 77 |
| பியன்கல - பக்கிஎல்ல | 79 |
| சமன்கல - உகனை | 81 |
| முள்ளிக்குளம் மலை (நந்திகிரி) - பாலமுனை | 82 |
| புத்தங்கல - அம்பாறை | 83 |
| ஹேனன்னேகல மலை - மகாஓயா | 87 |
| நுவர கல மலை - மகாஓயா | 89 |
| நெலும்பத் பொக்குண - கூமுனை | 92 |
| சங்கமன் கண்டி | 93 |
| திவியாகல மலை - பாதாகொடை | 94 |
| கஞ்சிக்குடிச்சாறு | 95 |
| கலகிட்டி ஓடை நாகமலை - பொத்துவில் | 97 |
| நீலகிரி மலை - லாகுகல | 97 |
| லைன் மலை - (சிவன் மலை) - பொத்துவில் | 100 |
| ஹிங்குரான | 102 |
| கிரிபொக்குன ஹெல மலை உகந்தை | 103 |
| கிரலான - உகந்தை | 104 |
| பானமை | 104 |
| மலையாறு | 106 |
| போவத்தகல - (போகசித்தர் மலை) | 107 |
| குடும்பிகல (குடும்பி மலை) | 115 |
| கோன்கல்லு | 117 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டார துாவ 118

பக்கிஎல்ல கல்வெட்டு 119

ஓமுனகல 121

நாகபர்வதமலை (பம்பரகஸ்தலாவை) 122

ரஜகல (இராசமலை) 125

சாஸ்த்ராவெல - பானமை 127

6. **புராதன கோயில்கள்** 129

சித்திர வேலாயுத சுவாமி கோயில் - திருக்கோவில் 129

உகந்தைகிரி சிவாலயம் 138

ஓமுன மலை கந்தசுவாமி கோயில் - மாதுருஓயா 143

அம்பாறை சிவன் கோயில் 150

சன்னாசி மலை முருகன், பிள்ளையார் கோயில்கள் - உப்புக்கரச்சி களப்பு, உகந்தை 159

வைரவர் கோயில் - தேவாலயகுடி, வட்டினாகல 167

காளியம்மன் கோயில் - சம்மாந்துறை 175

விநாயகர் கோயில் - அக்கரைப்பற்று 180

ஐயனார் கோயில் - பனங்காடு, அக்கரைப்பற்று 185

நாக கோயில் - நாகபர்வதமலை (பம்பரகஸ்தலாவ) 189

விஷ்ணு கோயில் - பெரிய நீலாவணை 193

சங்கமன்கண்டி சிவாலயம் 197

கண்ணகி அம்மன் கோயில் - காரைதீவு 202

மடத்தடி மீனாட்சியம்மன் கோயில் 207

கரவாகு ஐயானர் கோயில் - கல்முனை 210

பிள்ளையார் கோயில் - நிந்தவூர் 215

விநாயகர் கோயில் - மல்வத்தை 223

நாக கோயில் - தீகவாபி 227

விநாயகர் கோயில் - பிள்ளையார் காடு, தீகவாபி 227

கொடுப்பத்தை பிள்ளையார் கோயில் - கோமாரி 228


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| கோரக்கர் பிள்ளையார் கோயில் - சம்மாந்துறை | 232 |
| முருகன் மலை கந்தசுவாமி கோயில் - கண்ணகிபுரம் | 237 |
| விநாயகர் கோயில் - நாவிதன்வெளி | 246 |
| சிவன் கோயில் - தீகவாபி | 249 |
| மகா கந்தக் குளம் கந்தசுவாமி கோயில் - உகனை | 253 |
| கந்தசுவாமி கோயில் - கல்முனை | 255 |
| மாணிக்க வைர விநாயகர் கோயில் - தம்பட்டை | 262 |
| சித்தி விநாயகர் கோயில் - சேனைக்குடியிருப்பு, கல்முனை | 265 |
| ஆதி வில்லுப் பிள்ளையார் கோயில் - வளத்தாப்பிட்டி | 269 |
| மாணிக்கப் பிள்ளையார் கோயில் - பாண்டிருப்பு | 274 |
| மல்லிகைத்தீவு சைவக் கோயில் - மல்வத்தை | 277 |
| முத்துமாரியம்மன் கோயில் - கோளாவில், அக்கரைப்பற்று | 283 |
| கந்தன் வெளி கந்தசுவாமி கோயில் - மல்கம்பிட்டி, சம்மாந்துறை | 286 |
| கஞ்சிக்குடிச்சாறு சிவாலயம் - திருக்கோயில் | 288 |
| செண்பக நாச்சியம்மன் கோயில் - ஊரக்கை, சாகாமம் | 292 |
| சிங்காரபுரி மாரியம்மன் கோயில் - அட்டப்பள்ளம் | 295 |
| கண்ணகியம்மன் கோயில் - தம்பிலுவில் | 297 |
| கோளாவில் விநாயகர் கோயில் - அக்கரைப்பற்று | 300 |
| களியோடை காளியம்மன் ஆலயம் - ஒலுவில் | 303 |
| கண்ணகி அம்மன் கோயில் - வீரமுனை | 306 |
| பாலையடிபால விக்னேஸ்வரர் கோயில் - காரைதீவு | 310 |
| மாகாளியம்மன் கோயில் - சொறிக்கல்முனை | 312 |
| திரௌபதி அம்மன் கோயில் - பாண்டிருப்பு | 315 |
| ஜெயங்கொண்ட சலாமேக ஈஸ்வரம் - மகாகிரிந்திகம | 318 |
| ஈஸ்வரன் கோயில் - பிராமணகாமம், பானமை | 323 |
| தீகவாபி முருகன் கோயில் | 331 |
| முருகன், பத்தினியம்மன் கோயில்கள் - பானமை | 336 |
| முள்ளிக்குளம்மலை சிவன் கோயில் - பாலமுனை | 340 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடத்துறை அம்மன் கோயில்
சின்ன கபிலித்தை அம்மன் கோயில்) - கூமுனை 342

ஆலையடி பிள்ளையார் கோயில் - குண்டுமடு, பொத்துவில் 347

மீனோடைக்கட்டு பிள்ளையார் கோயில் 351

முருகன் மலை கந்தசுவாமி கோயில்சங்கமன் கண்டி 354

சங்கமன் கண்டி காட்டுப் பிள்ளையார் கோயில் 358

பானமை பிள்ளையார் கோயில் 361

மாவடி முருகன் கோயில் - மாவடிப் பள்ளி 363

குடும்பி மலை சிவன் கோயில் 364

உகந்த மலை முருகன் கோயில் 369

இராசமலை சிவன் கோயில் - பக்கிஎல்ல 376

சிந்தாயாத்திரை பிள்ளையார் கோயில் - வீரமுனை 380

**7. இந்துக்களின் (தமிழர்களின்) பாரம்பரிய சொத்துக்கள் 384**

உசாத்துணை நூல்கள் 395


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கங்கள்


| | | |
|---|---|---|
| பொ.ஆ. | - | பொது ஆண்டு (கி.பி.) |
| பொ.ஆ.மு. | - | பொது ஆண்டுக்கு முன் (கி.மு.) |
| I.O.C. | - | Inscription of Ceylon |
| JRASCB | - | Journal of the Royal Asiatic Society of Ceylon Branch |
| ம.மா | - | மட்டக்களப்பு மான்மியம் |
| ம.மா.ஓ.ஆ | - | மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி |
| ம.பூ.ச | - | மட்டக்களப்பு பூர்வ சரித்திம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

# தென்கிழக்கிலங்கையின் பூர்வீகம்

தென்கிழக்கிலங்கை என்பது இன்றைய அம்பாறை மாவட்டத்தைக் குறிப்பதாகும். இதன் வடக்கு கரையோர எல்லையாக பெரிய நீலாவணையும், தெற்கு கரையோர எல்லையாக கும்புக்கன் ஆறும் விளங்குகின்றன. இம் மாவட்டம் வடமேற்கில் மகாவலிகங்கை வரை செல்கிறது. இதன் வடக்கில் மட்டக்களப்பு, பொலநறுவை ஆகிய மாவட்டங்களும் மேற்கில் மாத்தளை, பதுளை, மொனராகலை ஆகிய மாவட்டங்களும் தெற்கில் அம்பாந்தோட்டை மாவட்டமும் காணப்படுகின்றன. கிழக்கெல்லையாக வங்கக்கடல் உள்ளது.





தென்கிழக்கிலங்கை தேசப்படம் (அம்பாறை மாவட்டம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்கிழக்கிலங்கை முன்பு மட்டக்களப்பு மாவட்டத்துடன் இணைந்தே காணப்பட்டது. அப்போது வெருகல் ஆறு முதல் கும்புக்கன் ஆறு வரையான பிரதேசம் மட்டக்களப்பு மாவட்டம் (மட்டக்களப்புத் தமிழகம்) என அழைக்கப்பட்டது. 1961 ஆம் ஆண்டு முதலே இதன் தென்பகுதி பிரிக்கப்பட்டு அம்பாறை மாவட்டம் எனப் பெயரிடப்பட்டு புதிய மாவட்டமாக உருவானது. 1891 ஆம் ஆண்டு புள்ளிவிபரத்தின்படி 13 பற்றுக்களில் இருந்த 308 கிராமங்களையும் உள்ளடக்கிய மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 7 பற்றுக்களும், 144 கிராமங்களும் பிரித்தெதடுக்கப்பட்டு அம்பாறை மாவட்டம் உருவாக்கப்பட்டது.

தென்கிழக்கிலங்கையின் பூர்வீக வரலாறு, முருகன் சூரபத்மனை அழிப்பதற்காக தென்கிழக்கிலங்கைக்கு வந்த காலத்துடன் ஆரம்பமாகிறது. இக்காலம் பொ.ஆ.மு. 9600 முதல் 5150 வரையான காலப்பகுதிக்குள் நிகழ்ந்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது. தென்னிந்தியாவிலிருந்து உகந்தைக்கு




அம்பாறை மாவட்டம் தேசப்படம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த முருகன் உகந்தையிலிருந்து கதிர்காமத்திற்குச் சென்று சூரனை அழித் தாகக் கருதப்படுகிறது. முருகனின் படையெடுப்புடன் தொடர்புடைய சில இடங்கள் தென்கிழக்கிலங்கையில் காணப்படுகின்றன. அவை வாகூரமலை, உகந்தை, நாகர்முனை (திருக்கோயில்) ஆகிய இடங்களாகும். இராவணனின் சகோதரனான குபேரன் முருகவழிப்பாட்டை பேணிப் பாதுகாத்ததாக ஆய்வுகள் கூறுகின்றன. முருக வழிபாடு மீது குபேரன் வைத்திருந்த ஈடுபாடு காரணமாகவே விஸ்வகர்மாவின் மூலம் மயில் வடிவில் தனது புஸ்பக விமானத்தை வடிவமைத்துக் கொண்டதாகக் கூறப்படுகிறது.

கந்தனின் படையெடுப்பின் பின் இலங்கையில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வாக இராமாயணப்போர் கருதப்படுகிறது. இது பொ.ஆ.மு. 5100 ஆம் ஆண்டளவில் நிகழ்ந்தது எனக் கணிக்கப்பட்டுள்ளது. இக்காலப்பகுதியில் புகழ்பெற்ற சக்கரவர்த்தியாக விளங்கிய இராவணன் சிவ வழிப்பாட்டை மேலோங்கச் செய்தான். குபேரன், இராவணன் ஆகியோர் இயக்கர் குலத்தைச் சேர்ந்தவர்களாவர்.

இக்காலக் கட்டத்தின் பின்பு விபீஷணனின் ஆட்சியின்போது இலங்கையில் ஏற்பட்ட கடற்கோளினால் இந்நாட்டின் பலபகுதிகள் கடலில் மூழ்கின. இக்காலப்பகுதியில் தென்கிழக்கிலங்கையில் இராவணனின் வம்சத்தவர் களான இயக்கர் மட்டுமே வாழ்ந்து வந்தனர். இவர்கள் அடுத்தடுத்து ஏற்பட்ட கடற்கோளிலிருந்து தப்பி மிகப்பலம் பொருந்திய வலிமை மிக்கவர்களாக மாற்றம் பெற்றனர்.

இவர்கள் உகந்தையை தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்தனர். இக் காலகட்டத்தில் பொ.ஆ.மு. 2300 ஆம் ஆண்டளவில் நாகர் குலத்தவர்கள் இப்பகுதிக்கு வந்து இயக்கருடன் சேர்ந்து தென்கிழக்கிலங்கையில் வாழ்ந்து வந்தனர். இவர்களின் தலைநகராக நாகர் முனை விளங்கியது.

பல நூற்றாண்டுகளின் பின்பு பொ.ஆ.மு. 600 ஆம் ஆண்டளவில் காளிசேனன் எனும் மன்னன் தென்கிழக்குக் கரையோரப் பகுதிக்கு வந்து தனது இராச்சியத்தை இப்பகுதியில் அமைத்துக் கொண்டான். இவனது காலத்திலேயே கலிங்க தேசத்திலிருந்து விஜயன் எனும் இளவரசன் இலங்கைக்கு வந்ததாகவும், இராவணனின் இயக்கர் குலத்தைச் சேர்ந்த குவேனி எனும் அரசியை சூழ்ச்சியால் மணம் முடித்து இலங்கையின் மன்னனானதாகவும், பின்பு குவேனியைத் துரத்திவிட்டு பாண்டிய இளவரசி யை மணம் முடித்து அரசாட்சியைத் தொடர்ந்ததாகவும் நூல்கள் கூறுகின்றன. துரத்தி அடிக்கப்பட்ட குவேனி கொல்லப்பட்டதாகவும், விஜயனுக்கும் குவேனிக்கும் பிறந்த பிள்ளைகள் காட்டில் வாழ்ந்து அவர்கள் மூலம் வேடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் குலம் தோற்றம் பெற்றதாகவும் நூல்கள் கூறுகின்றன. வேடர்கள் முருக வழிபாட்டில் ஈடுபட்டு வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

விஜயன் காலத்தின் பின்பு வடகிழக்கு இந்தியாவிலிருந்து வந்த கலிங்க குலத்தவர்கள் தென்கிழக்கிலங்கையில் குடியேறினர். கலிங்க நாடான ஒரிஸ் ஸாவின் வரலாற்றுத் தகவல்கள் மற்றும் அசோகன் காலத்து கல்வெட்டுக்கள் மூலம் விஜயன் உட்பட இங்கிருந்து இலங்கைக்கு வந்தவர்கள் சிவ வழிபாடு செய்த ஆதி திராவிட மொழி பேசியவர்கள் என்பது தெரிய வருகிறது.

பின்பு கதிர்காம சத்திரிய மன்னர்கள் ஓர் உப இராச்சியத்தை தென் கிழக்கிலங்கையில் அமைத்தனர். சத்திரிய மன்னர்களின் சந்தனக்காமம் எனும் இராச்சியமும் இங்கு உருவானது. பொ.ஆ.மு. 2 ஆம் நூற்றாண்டில் கூத்திக மன்னனின் மட்டக்களப்பு இராச்சியமும், அதன்பின்பு எல்லாள மன்னனின் ஓர் உப இராச்சியமும் தென்கிழக்கு இலங்கையில் அமைக்கப் பட்டன. பின்பு கூத்திக மன்னனின் மட்டக்களப்பு இராச்சியத்தின் தென்பகுதி உன்னரசுகிரி எனும் தனி இராச்சியமாக உருவானது. இந்த பண்டைய இராச்சியங்கள் அனைத்திலும் சில வழிபாடும், முருகவழிபாடும், நாக வழிபாடும், தாய் தெய்வ வழிபாடும் சிறப்புற்று விளங்கின. அத்துடன் பொ.ஆ. 2 ஆம் நூற்றாண்டில் கஜபாகு மன்னன் மூலம் தோற்றுவிக்கப்பட்ட கண்ணகி வழிபாடு பின்பு தென்கிழக்கிலங்கையிலும் பரவியது.

பொ.ஆ.மு. 6ம் நூற்றாண்டில் (பொ.ஆ.மு 543 இல்) வட இந்திய இந்து மன்னனான சுத்தோதனின் மகனான சித்தார்த்தன் எனும் புத்தபகவான் இலங்கைக்கு வந்ததாக பாளி நூல்கள் கூறுகின்றன. அச்சமயம் தென்கிழக்கு இலங்கையில் உள்ள தீகவாப்பியில் இருந்த நாக வழிபாட்டு தலத்திற்கு புத்தபகவான் வந்து வழிபட்டுச் சென்றதாக அந்நூல்கள் கூறுகின்றன. எனினும் இக்காலப்பகுதியில் இலங்கையில் பௌத்த சமயம் இருக்கவில்லை. சில நூற்றாண்டுகளின் பின்பே தேவநம்பியதீசன் காலத்தில் பொ.ஆ.மு 250 - 210 வரையான காலப்பகுதியில் அதாவது சுமார் 300 வருடங்களின் பின்பே அசோக மன்னனின் மகள் சங்கமித்தை மூலம் இலங்கையில் பௌத்த சமயம் பரவியது. இதற்கு முற்பட்ட காலத்தில் தென்கிழக்கு இலங்கை உட்பட இலங்கைத் தீவு முழுவதும் சைவ சமயமே காணப்பட்டது என்பதற்கு மேற் கூறிய விடயங்கள் வலுவான ஆதாரங்களாக உள்ளன.

ஐரோப்பியரின் வருகையின் பின்பே தென்கிழக்கிலங்கையில் கிறிஸ்தவ மதமும், இஸ்லாம் மதமும் பரவியது. பொ.ஆ. 1620 - 1623 காலப்பகுதியில் புளியந்தீவில் (இன்றைய மட்டக்களப்பு) போர்த்துக்கேயர் ஓர் கோட்டையைக் கட்டியபின் இப்பகுதியில் பல இந்துக்களை கத்தோலிக்க கிறிஸ்தவர்களாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதமாற்றம் செய்தனர். இக்காலப்பகுதியில் தென்கிழக்கு இலங்கையில் பிரசித்தி பெற்று விளங்கிய திருக்கோயில் முருகனாலயம் உட்பட பல கோயில்கள் போர்த்துக்கேயரால் இடித்தழிக்கப்பட்டன.

இதே காலப்பகுதியில் கண்டியை ஆட்சி செய்த சேனரதன் எனும் மன்னனால் பொ.ஆ. 1626ல் தென்கிழக்கிலங்கையில் முஸ்லீம்கள் குடியேற்றப்பட்டனர் இக்காலத்திற்கு முன்பு தென்னிந்திய செட்டிமார்களுடன், தென்னிந்திய முஸ்லீம் வர்த்தகர்கள் இப்பகுதியில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த சமயம் சில முஸ்லீம் வர்த்தகர்கள் இங்கிருந்த தமிழ்ப் பெண்களை திருமணம் முடித்து வாழ்ந்து வந்தனர்.

எனவே தென்கிழக்கிலங்கையில் கிறிஸ்தவ சமயமும், இஸ்லாம் சமயமும் ஒரே காலப்பகுதியிலேயே பரவின. அதாவது இவ்விரு சமயங்களும் தென்கிழக்கிலங்கையில் பரவி 392 ஆண்டுகளே ஆகின்றன. 392 ஆண்டுகளுக்கு முன்பு தென்கிழக்கு இலங்கையில் சைவசமயமும், பௌத்த சமயமும் மட்டுமே இருந்தன. அதாவது சைவத் தமிழர்களும், பௌத்தர்களும் மட்டுமே வாழ்ந்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

# தென்கிழக்கிலங்கையின் பண்டைய இராச்சியங்கள்

தென்கிழக்கிலங்கையில் தொன்மையான பல இராச்சியங்கள் இருந்துள்ளன. இவற்றில் இராவணின் லங்காபுரி இராச்சியத்தின் தென்பகுதி தென்கிழக்கி லங்கையில் அமைந்திருந்தது. சுமார் 7000 வருடங்களுக்கு முற்பட்ட இந்த இராச்சியத்தின் உபநகரம் இங்கு அமைந்திருந்தமைக்கான சான்றுகள் பல உள்ளன.

மேலும் கல்யாணி, உகந்தை, நாகர்முனை, காளிதேசம், சந்தனகாமம், சங்கமன்கண்டி, மட்டக்களப்பு, தீகவாபி, உன்னரசுகிரி ஆகிய பண்டைய இராச்சியங்கள் இங்கு இருந்துள்ளன. இந்த இராச்சியங்களில் சிவவழிபாடு, முருகவழிபாடு போன்றவை செல்வாக்குப் பெற்று விளங்கியுள்ளன.

## இராவணனின் லங்காபுரியின் தென்பகுதி

இராவணன் எனும் சிவபக்தன் இலங்கையை பொ.ஆ.மு. 5100 ஆம் ஆண்டளவில் ஆட்சி செய்ததாக ஆய்வுகள் கூறுகின்றன. வரலாற்றுக் குறிப்புகளின் படி தென்கிழக்கிலங்கையிலிருந்த பண்டைய இராச்சியங்களில் இராவணன் ஆட்சி செய்த லங்காபுரியே மிகத் தொன்மை வாய்ந்ததாகும். இந்த இராச்சியத்தின் தலைநகர் திரிகூடகிரியில் இருந்ததாக வால்மீகி இராமாயணம் குறிப்பிடுகிறது. இதுவே திருக்கோணஸ்வரம் அமைந்துள்ள மலையாகும்.

அதேசமயம் இராவணனின் தலைநகர் மாத்தளை பகுதியிலுள்ள லக்கல மலையில் இருந்ததெனவும், வேறு சிலர் சிகிரியா மலைக்குன்று எனவும், மேலும் இந்நகர் கொத்மலைப்பகுதியில் இருந்ததெனவும், இது பம்பர கஸ்தலாவ பகுதியில் இருந்ததாக சிலரும் கூறுகின்றனர். எனவே திருகோண மலை, மாத்தளை, பொலநறுவை, கண்டி, நுவரெலியா, பதுளை, மட்டக்களப்பு, அம்பாறை, மொனராகலை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கிய இலங்கையின் கிழக்கு, மத்திய, தென்பகுதிகளே இராவணின் முக்கிய ஆட்சிப்பகுதியாக விளங்கியுள்ளன. இவற்றில் தென்கிழக்கி லங்கையில் குடும்பிகல, பம்பரகஸ்தலாவ ஆகிய இடங்களை உள்ளடக்கிய மலைப் பகுதியில் இராவணனின் உபநகர் அமைந்திருக்கலாம் எனக் கூறக் கூடியாதாகவுள்ளது. இங்குள்ள பரம்பகஸ்தலாவை எனும் நாகபர்வத மலையில் உள்ள குகையில் இராவணனின் பெயர் பொறிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டு ஒன்று உள்ளமை குறிப்பிடத்தக்கது. தென்கிழக்கிலங்கையில் இராவணனின் உபஇராச்சியம், அல்லது உபநகர் இருந்தமைக்கு முக்கிய ஆதாரமாக பரம்பரகஸ்தலாவை பிராமிக் கல்வெட்டு விளங்குகிறது.




இராவணன்

இதைத்தவிர உகந்தை மலை, (உகந்தை கிரி) திருகோணமலை (தட்சி ணகிரி) ஆகிய இடங்களில் இராவணன் தன் பாவத்தைத் தீர்க்கும் பொருட்டு சிவாலயங்களை அமைத்து வழிப்பட்டதாக மட்டக்களப்பு மான்மியம் போன்ற நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளமையும் இப்பகுதியில் இராவணன் ஆட்சி செய்தமையை உறுதிசெய்கிறது.

மேலும் திருக்கோயில் எனப்படும் நாகர் முனையில் இராவணினின் மாளிகையொன்று அமைந்திருந்தாகவும் கூறப்படுகிறது. தென்கிழக்கி லங்கையில் ஓடும் பிரதான நதியான கும்புக்கன் ஆற்றை மறித்து அதன் குறுக்கே கட்டப்பட்டிருந்த புராதன அணை இராவணன் காலத்தில் அசுரர் களால் கட்டப்பட்டதாகவும், இவ்வாற்றின் நீரைத் தடுத்து அதன் மூலம் பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளங்களை இப்பகுதியில் அமைத்து பெரும் வயல் நிலங்களை உருவாக்கி இப்பகுதியை இராவணன் வளப்படுத்திதாகவும், இவற்றிற்குப் பொறுப்பாக தனது சகோதரன் கும்பகர்ணனை அமர்த்தியதாகவும், கும்ப கர்ணனின் முக்கிய நகரம் அமைந்திருந்த இடமே கும்புக்கன் எனும் இடம் எனவும், இங்கிருந்து பாய்ந்து வரும் கும்புக்கன் ஆறு பண்டைய காலத்தில் இவனது பெயரிலேயே கும்பகர்ணன் ஆறு என அழைக்கப்பட்டதாகவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இன்று பெருங்காடாகக் காணப்படும் குமண, யாள ஆகிய காடுகளில் இடையிடையே காணப்படும் ஏராளமான வெட்டை வெளிகள் அனைத்தும் இராவணன் காலத்தில் நெற்பயிர் செய்யப்பட்ட வயல் நிலங்களே எனவும் ஆய்வுகள் கூறுகின்றன.




கும்புக்கன் ஆற்றின் புராதன அணை

இவ்வனத்தின் தென்கிழக்குப்பகுதியில் கடலில் அமைந்திருக்கும் இரு பாறைகள் இராவணன் கோட்டைகள் என அழைக்கப்படுகின்றன. இக்கடற் பிரதேசத்தில் கற்பாறைகள் பரந்து காணப்படுவதால் ஆங்கிலேயர் காலத்தில் இரு வெளிச்சவீடுகள் இப்பாறைகள் மீது அமைக்கப்பட்டன. மேலும் பொத்துவிலுக்கு அருகில் உள்ள அறுகம் குடா பண்டைய காலத்தில் இராவணனின் துறைமுகங்களில் ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டதாகவும் ஆய்வுகள் கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெரிய இராவணன் கோட்டை வெளிச்சவீடு.



சிறிய இராவணன் கோட்டை வெளிச்சவீடு.

மேற்சொன்ன ஆதாரங்களும், இடங்களும் தென்கிழக்குப்பகுதியில் இராவணன் ஆட்சி செய்தான் என்பதை உறுதி செய்கின்றன. எனவே இராவணனின் லங்காபுரியின் ஓர் முக்கிய பகுதி அல்லது உப இராச்சியம் தென்கிழக்கிலங்கையில் அமைந்திருந்தது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபீஷனின் கல்யாணி இராச்சியம்

இராமாயணப் போரில் இராவணன் இறந்தபின் இலங்காபுரியின் மன்னனாக விபீஷணனுக்கு இலட்சுமணன் முடிசூட்டியதாக இராமாயணம் கூறுகிறது. இராமாயணத்தின் முக்கிய சம்பவங்கள் நிகழ்ந்த சமயம் இருந்த கோள், நாள், நட்சத்திரம் போன்றவற்றை வால்மீகி குறிப்பிட்டுள்ளார். இதன்படி இராவணன் பொ.ஆ.மு. 5076 இல் கொல்லப்பட்டதாக கோள் மண்டல ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். எனவே விபீஷணன் மன்னனாக முடிசூட்டப்பட்டதும் இதே காலத்தில்தான் என்பது உறுதியாகிறது.

விபீஷணன் கல்யாணி இராச்சியத்திலிருந்து ஆட்சி செய்ததாக வரலாற்று நூல்கள் கூறுகின்றன. கல்யாணி இராச்சியம் இலங்கையின் மேற்குப்பகுதியில், இன்றைய களனி நகரின் அருகில் இருந்ததாக நூல்கள் கூறுகின்றன. புத்த பகவான் மூன்றாவது தடவையாக இலங்கைக்கு வந்ததாகவும், அச்சமயம் கல்யாணி இராச்சியத்தை ஆட்சி செய்த மணியக்கிரனின் வேண்டுகோளுக் கிணங்க கல்யாணி நாட்டுக்குச் சென்றதாகவும் மகாவம்சம் கூறுகிறது. நாகவம்சத்து மன்னன் ஆட்சி செய்த பண்டைய நாக இராச்சியமே கல்யாணி என்பதாகும்.

அண்மைக்கால ஆய்வுகளின்படி பேராசிரியர் அபய ஆரியசிங்க இக் கல்யாணி இராச்சியம் பொத்துவிலுக்கு அருகில் உள்ள பானமைப் பகுதி யிலேயே இருந்தது எனக் குறிப்பிட்டுள்ளார். இதற்கு ஆதாரமாக பானமையின் அருகில் உள்ள சாஸ்திராவெல என்றுமிடத்தில் உள்ள கல்வெட்டில் 'கல்யான



சாஸ்த்ராவெல கல்வெட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னிகா' என இவ்விடம் குறிப்பிட்டுள்ளதை அவர் மேற்கோள் காட்டியுள்ளார். மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதும், களனி தீசன் எனும் மன்னன் ஆட்சி செய்ததும் இந்த கல்யாணி இராச்சியமே என அவர் கூறியுள்ளார்.

கல்யாணி நாட்டுக்கு வந்த புத்தபகவான் இங்கிருந்து சுமண கூட மலைக்குச் சென்று விட்டு அங்கிருந்து தீகவாப்பிக்கு சென்றதாக மகாவம்சம் கூறுகிறது. எனவே இம்மூன்று இடங்களும் அருகருகே இருந்திருக்க வேண்டும் எனக் கொள்ள இடமுண்டு. பானமைக்கு தெற்கில் உள்ள குடும்பிமலையே புத்தர் சென்ற சுமணகூட மலை என அவர் மேலும் கூறியுள்ளார்.

பொ.ஆ. 1ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்த தொலமி தனது இலங்கை தேசப்படத்தில் நாக இராச்சியம் மகாவலி கங்கையின் கிழக்குப் பகுதியில் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார். எனவே மேற்கூறிய குறிப்புகளை ஆதாரமாக வைத்து பண்டைய கல்யாணி இராச்சியம் இன்றைய பானமைப் பகுதியிலேயே அமைந்திருந்தது என பேராசிரியர் அபய ஆரியசிங்க கூறியுள்ளார்.

எனவே விபீஷணன் ஆண்ட கல்யாணி இராச்சியம் பானமை பகுதியில் இருந்ததா அல்லது இன்றைய களனி பகுதியில் இருந்ததா என்பதை மேலாய்வு செய்து தெளிவுபடுத்த வேண்டியுள்ளது. இராவணனின் தலை நகரும், உப நகர்களும் இலங்கையின் கிழக்குப்பகுதியில் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இயக்கரும், நாகரும் ஆண்ட உகந்தை இராச்சியம்

இராவணின் ஆட்சிக்குப்பின் ஏற்பட்ட கடற்கோளினால் இலங்கையின் பெரும்பகுதி அழிந்து போன பின்பு சுமார் ஒரு யுகம் வரை இலங்கை பாழ்பட்டுக் கிடந்ததாக மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. இக்காலப் பகுதியில் இயக்கர் மட்டுமே இலங்கையில் ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளனர். இயக்கர் என்பவர்கள் இராவணனின் அசுரர், அல்லது யக்ஷர் ஆகியோரின் வம்சத்தவராவர். இராவணன் இறந்த பின்பு ஏற்பட்ட கடற் கோளில் யக்ஷ வம்சத்தவர்களில் ஏராளமானோர் அழிந்தனர். எஞ்சி இருந்த இராவணனின் சந்ததியினரே நாகர் வரும் வரை இலங்கையை ஆட்சி செலுத்தி வந்துள்ளனர்.

இக்காலப்பகுதியில் அத்தினாபுரத்திலிருந்து குருகுல நாகர் இனத்தவர்கள் தென்கிழக்கிலங்கைக்கு வந்து இங்கிருந்த இயக்கருடன் சேர்ந்து ஆட்சி செலுத்தி வந்ததாக மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உகந்தமலை

இக்காலப்பகுதியில் இவர்கள் உகந்தையை தலைநகராகக் கொண்டு இப்பகுதியை ஆட்சி செய்து வந்தனர். கலி ஆண்டு 806ல் அத்தினாபுரத்து நாகர் இலங்கை வந்ததாக மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடுகிறது. இக் காலம் முதல் 1400 ஆண்டுகள் இயக்கரும் நாகரும் இலங்கையில் ஆதிக்கம் செலுத்தியதாகத் தெரியவருகிறது. இது பொ.ஆ.மு. 2296 முதல் பொ.ஆ.மு. 896 வரையான காலமாகும்.

## நாகர் ஆண்ட நாகர்முனை இராச்சியம்

நாகர்முனை எனப் பெயர் பெற்றிருந்த திருக்கோயில் மிகப் பண்டைய இராச்சியமாகும். இராவணன் காலத்தில் அவனது தாயின் மாளிகையொன்று திருக்கோயிலில் அமைந்திருந்தமை பற்றித் தெரியவருகிறது. இராவணன் காலத்தின் பின்பு நாகரின் ஆட்சி நிலவிய இராச்சியங்களில் ஒன்றாக நாகர்முனை விளங்கியிருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். நாகரின் முக்கிய ஆட்சிப் பகுதியின் தலைநகராக விளங்கியதால் இது நாகர்முனை எனப் பெயர் பெற்றதாகவும் கூறப்படுகிறது.

இராவணனின் பின் இலங்காபுரியை விபீஷனன் ஆட்சி செய்தான். இவன் கல்யாணி எனும் இராச்சியத்திலிருந்து ஆட்சி செய்ததாகவும், இக்காலப்பகுதியில் ஏற்பட்ட கடற்கோளினால் இலங்காபுரியின் பெரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி கடலில் மூழ்கியாதாகவும் வரலாற்று நூல்கள் கூறுகின்றன. இக்கடற் கோளின் பின்பு பல நூற்றாண்டுகள் இலங்கை பாழ்பட்டுக் கிடந்ததாகவும் தெரியவருகிறது. இதன்பின்பு புத்த பகவானின் காலத்தில் இலங்கையின் வடக்குப் பகுதியில் நாகதீபம் எனும் நாக இராச்சியமும், மேற்குப்பகுதியில் கல்யாணி எனும் நாக இராச்சியமும் இருந்தது பற்றியும் இந்த இராச்சி யங்களை மகோதரன், சூலோதரன், மணியக்கிரன் ஆகிய நாகமன்னர்கள் ஆட்சி செய்தது பற்றியும் வரலாற்றுக் குறிப்புக்கள் கூறுகின்றன.

இதன்படி விபீஷணன் பின்பு இலங்கை வரலாறு இந்நாக மன்னர்களின் காலத்திலேயே தொடர்கிறது. இக்காலம் பொ.ஆ.மு. 6 ம் நூற்றாண்டாகும். எனவே விபீஷணன் காலமான பொ.ஆ.மு. 50 ம் நூற்றாண்டுக்கும் நாக மன்னர்களின் காலமான பொ.ஆ.மு. 6ம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட சுமார் 4400 ஆண்டுகள் இலங்கை வரலாற்றின் இருண்ட காலப்பகுதியாகும். இக்காலப்பகுதியிலிருந்த மன்னர்கள், மக்கள், வாழ்வியல் போன்ற எந்த விபரங்களும் இதுவரை கண்டறியப்படவில்லை.

இவ்விருண்ட காலத்தின் முற்பகுதியில் இராவணனின் வம்சமான இயக்கரும், இக்காலத்தின் முடிவில் இயக்கரும் மற்றும் நாக வம்சத்தினரும் இலங்கையை ஆட்சி செய்திருந்தபடியால், இந்த இருண்ட காலத்தில் இராவணனின் சந்ததியினரான இயக்கரினதும், அஸ்தினாபுரத்திலிருந்து வந்த நாகரின் சந்ததியின்ரினதும் ஆட்சியே இலங்கையில் நிலவியிருக்கலாம் என நம்பக் கூடியதாக உள்ளது.

## காளிசேனன் ஆண்ட காளிதேசம்

பொ.ஆ.மு. 5 ஆம் நூற்றாண்டில் விஜயன் இலங்கைக்கு வரும் போது காளிதேசம் எனும் இராச்சியம் கிழக்கிலங்கையில் அமைந்திருந்ததாக மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. பொ.ஆ.மு. 6 ஆம் நூற்றாண்டளவில் அயோத்தியிலிருந்து வந்த இரகுவம்சத்தைச் சேர்நத காளிசேனன் என்பவன் தென்கிழக்கிலங்கைக்கு வந்து தனது பெயரிலேயே காளிதேசம் எனும் இராச்சியத்தை அமைத்து ஆட்சி புரிந்து வந்ததாக மட்டக்களப்பு மான்மியம் மேலும் விபரித்து கூறுகிறது.

இக்காளிதேச இராச்சியம் இன்றைய மாளிகைக்காடு, காரைதீவு, நிந்தவூர், அட்டப்பள்ளம் ஆகிய இடங்களை உள்ளடக்கிய பிரதேசம் என ஆய்வாளர் களால் அடையாளம் காணப்பட்டுள்ளது. காளிசேனனை சூழ்ச்சியால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொன்றே இலங்கையை விஜயன் கைப்பற்றியதாக வரலாற்று நூல்கள் கூறுகின்றன.

விசயதுவீபத்தை ஆண்ட சிறிகுலசேனன் தனது மகனான கூத்திகனுக்கு காளிதேசத்தை ஆளும் பொறுப்பைக் கொடுத்ததாகவும், இதன் எல்லை தென்கிழக்கு வரை பரவியிருந்ததாகவும் மட்டக்களப்பு மான்மியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.


## சத்திரிய மன்னர்களின் சந்தனகாமம்

பொ.ஆ.மு. 3 ஆம் நூற்றாண்டில் தென்கிழக்குப்பகுதியில் இருந்த இராச்சியங்களில் சந்தனகாமமும் ஒன்றாகும். தேவநம்பியதீசன் அநுராதபுரத்தில் வெள்ளரசு மரக்கிளையை நாட்டும் வைபவத்திற்கு கஜரகாமம், சந்தனகாமம் ஆகிய இராச்சியங்களிலிருந்த சிற்றரசர்களை வரவழைத்தான் என மகாவம்சம் கூறுகிறது. சந்தனகாமம் சந்தநகர் எனவும், சிங்கள மொழியில் சந்துன்னொருவ எனவும் அழைக்கப்பட்டது.

சந்தனகாமம் அரசு இன்றைய சம்மாந்துறை, அம்பாறை, இறக்காமம், இங்கினியாகலை, தமன ஆகிய இடங்களை உள்ளடக்கிய இராச்சியமாக விளங்கியதாக கூறப்படுகிறது. சம்மாந்துறை, இறக்காம்ம் ஆகிய இடங்களுக்கிடையில் செந்துறை, சுங்காத்துறை ஆகிய இடங்கள் பண்டைய காலத்தில் இருந்தன. செந்துறை, சுங்காத்துறை எனும் பெயர்கள் சந்தனகாமம் எனும் பெயரின் திரிபுகளே எனக் கூறப்படுகிறது.

இப்பகுதியில் கைகாட்டிமலை எனும் மலைப்பகுதி அமைந்துள்ளது. இது சம்மாந்துறையின் தெற்கில் உள்ள மல்கம்பிட்டி எனும் இடத்தின் அருகில் உள்ளது. இப்பகுதியில் பாண்டியர் காலத்து நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டன. மேலும் கஜலக்ஸ்மி வடிவம் பொறிக்கப்பட்ட நாணயங்கள் சிலவும் கண் டெடுக்கப்பட்டன. இதன் மூலம் இம்மலைப்பகுதியில் பண்டைய காலத்தில் பாண்டியர் ஆட்சி நிலவியிருக்கலாம் என நம்ப இடமுண்டு. இம்மலையின் தென்மேற்பகுதியிலேயே செந்துறை, சுங்காத்துறை ஆகிய இடங்கள் உள்ளன. மேலும் கைகாட்டி மலையின் தெற்குப்பக்கத்தில் 'பாண்டிய தீவு' எனும் பெயரில் ஓர் இடம் இருந்துள்ளது. அட்டாளைச் சேனையின் அருகில் இவ்விடம் இருந்துள்ளது. 1871 ம் ஆண்டு இலங்கை குடிசன மதிப்பீட்டில் பாண்டிய தீவு எனும் பெயர் உள்ளது. பின்பு 1901 ஆம் ஆண்டு குடிசனமதிப்பீட்டு புள்ளி விபரத்தில் இது 'பனையடித் தீவு' என மாற்றப்பட்டுள்ளது. 1921 இல் இது பனையடிப்பிட்டி எனத் திரிபடைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிந்தவூர் லக்ஸ்மி நாணயம்



கைகாட்டி மலை


அதன்மூலம் சந்தனகாமம் இராச்சியத்தை ஆண்ட சத்திரிய மன்னர்களும் இந்து சமயத்தை தழுவிய பாண்டிய வம்சத்தவர்கள் என கூறக்கூடியதாக உள்ளது.

## கதிர்காம பாண்டிய, சத்திரிய மன்னர்களின் சங்கமன் கண்டி எனும் உப இராச்சியம்

சங்கமன் கண்டி கதிர்காம சத்திரிய மன்னர்களின் உப இராச்சியமாக இருந் தமைக்கான சான்றுகள் இங்கு காணப்படுகின்றன. சங்கமன் கண்டி மலைப் பறைக்குகைகளில் காணப்படும் தமிழ் பிராமிக் கல்வெட்டுக்களில் ‘உதியனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குகை' எனவும், இன்னுமோர் கல்வெட்டில் 'குசனின் குகை' எனவும் பொறிக்கப் படுள்ளது . உதியன், குசன் ஆகியோர் கஜரகம எனும் கதிர்காமத்தை ஆண்ட சத்திரியர் மன்னர்கள் 10 பேரில் இருவராவார். இவர்கள் பாண்டிய வம்சத்தை சேர்ந்தவர்கள் என்பது இவர்கள் பற்றிய கல்வெட்டுக்கள் மூலம் தெரிய வருகிறது. கொட்டதாமுஹெல, போவத்தகல, மாதனகந்த, புதுபட்டுன்கந்த ஆகிய இடங்களில் காணப்படும் கதிர்காம சத்திரியர்கள் தொடர்பான பிராமிக் கல்வெட்டுக்களில் மீன் சின்னங்களும், சுவாஸ்திகா குறியீடுகளும் பொறிக்கட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



மீன் சின்னம் பொறித்த மாதனகந்த கல்வெட்டு

சங்கமன் கண்டி காட்டுப்பிள்ளையார் கோயிலின் பின்பக்கத்தில் சுமார் ஒரு கிமீ தூரத்தில் ஓர் பண்டைய நகரத்தின் இடிபாடுகள் காணப்படுகின்றன. சுமார் 4 மைல் பரப்பளவில் இவை உள்ளதாக இப்பகுதி மக்கள் கூறுகின்றனர். இந்நகரில் காவடி வடிவில் சுற்று மதில்களுடன் கிழக்கிலும், மேற்கிலும் வாயில்கள் அமைக்கப்பட்டதற்கான எச்சங்கள் காணப்படுகின்றன. இங்கிருக்கும் ஓர் தட்டையான பாறையில் ஏராளமான கற்தூண்களும், கைப்பிடிச்சுவர்களும், உரல்வடிவ குழிக்கற்களும், கழிவறைக்கற்களும் காணப்படுகின்றன. இவை யாவும் இங்கு ஆட்சி செயத மன்னனின் அரண்மனை இடிபாடுகளாகும். இதனருகில் 40 அடி நீளமும் 30 அடி அகலமும் கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் தடாகத்தின் எச்சங்கள் காணப்படுகின்றன. இது அரண்மனைத் தடாகம் எனக் கூறப்படுகிறது.

இதன் அருகில் ஆசனக்கற்கள், அரைவட்டக்கல், சிறிய அறைகளின் இடிபாடுகள், கற்பலகைகள் ஆகியவையும் ஆங்காங்கே வெவ்வேறு இடங்களில் நாகக்கற்கள் சிலவும், வெவ்வேறு இடங்களில் சிறிய கோயில்கள் பலவும் இருந்தமைக்கான இடிபாடுகளும் பரந்து காணப்படுகின்றன. சில இடங்களில் புராதன காலத்து செங்கட்டிகள் சிதறிக் காணப்படுகின்றன. இவை அனைத்தும் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலங்களில் இப்பகுதியை ஆட்சி செய்த கதிர்காம சத்திரிய மன்னர்களின் அரண்மனையும், அதை ஒட்டிய நகரத்தினதும் இடிபாடுகள் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.



சங்கமன் கண்டி அரண்மனை இடிபாடுகள்

கதிர்காம சத்திரியர்களின் பின் இவ்விடம் கோதாபயனின் ஆட்சியிலும், பின்பு சோழர் காலத்தில் கதிர்சுதன், மதிசுதன் ஆகிய சோழ சிற்றரசர்களின் ஆட்சியிலும், அதன்பின்பு விஜயபாகுவின் ஆட்சியிலும், இறுதியில் குளக்கோட்டன் ஆட்சியின் கீழும் இப்பகுதி விளங்கியது என்பது வரலாற்றுக் குறிப்புகள் மூலம் அறியப்படுகிறது.

கதிர்காம சத்திரியர்கள் இப்பகுதியை ஆட்சி செய்வதற்கு முன்பு பூர்வீக நாகர் குலத்தவர்களின் இராஜதானியாக சங்கமன் கண்டி விளங்கியமையும், பின்பு கலிங்கரின் செல்வாக்குடன் விளங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூத்திக மன்னன் அமைத்த மட்டக்களப்பு இராச்சியம்

பொ.ஆ.மு. 2 ம் நூற்றாண்டில் வீரமுனை, சம்மாந்துறை, மல்கம்பிட்டி ஆகிய இடங்களை முக்கிய ஆட்சிப் பகுதியாக உள்ளடக்கியதாக கூத்திக மன்னன் அமைந்த இராச்சியமே மட்டக்களப்பு இராச்சியமாகும். இன்றைய மட்டக்களப்பு நகரம் ஒல்லாந்தர் காலத்திலேயே உருவானமை குறிப்பிடத்தக்கது.

பண்டைய மட்டக்களப்பு இராச்சியத்தை பல மன்னர்கள் ஆட்சி செய்து வந்துள்ளனர். கூத்திகனுக்குபின் சேனன், இரஞ்சலன், ஸ்ரீகுலன் வாகூரன், பிரசின்னசித்து, தாசகன், தன சேனன், பிரசேது தினகர சேனன், அமர சேனன், அதிசுதன், வங்கவாடன், சமுகதிரன், பரதசுந்தரன், இராசசந்திரன், யாகசேனன், குகசந்திரன், வங்கன் ஆகிய தமிழ் சிற்றரசர்கள் ஆட்சி செய்துள்ளனர்.

இவர்களைத் தவிர குமாரசிங்கன், கதிர்சுதன், மதிசுதன், நாதன், தினசிங்கன் ஆகியோர் இந்த இராச்சியத்தை ஆண்டு வந்தனர். பொ.ஆ.மு. 234 முதல் பொ.ஆ. 1719 ஆம் ஆண்டு ஒல்லாந்தர் காலம்வரை மட்டக்களப்பு இராச்சியம் நிலைகொண்டிருந்தது.

மட்டக்களப்பு இராச்சியம் வீரமுனை முதல் தெற்கில் கும்புக்கன் ஆறுவரை பரந்திருந்தது. இந்த இராச்சியத்தின் தென்பகுதியையே பிர சின்னசித்து எனும் மன்னன் புவனேகபாகு எனும் மன்னனுக்கு கொடுத்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

## எல்லாள மன்னனின் சிற்றரசர்கள் ஆண்ட தீகவாபி இராச்சியம்

பௌத்தர்களின் 16 புனிதத்தலங்களின் ஒன்றாகக் கருதப்படும் இடங்களில் ஒன்றான தீகவாபி பொ.ஆ.மு. 2 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியிலேயே ஓர் தனி சிற்றரசாக விளங்கியுள்ளது. எல்லாள மன்னன் அனுராதபுரத்திலிருந்து முழு இலங்கையையும் ஆட்சி செலுத்தி வந்த காலத்தில் அவனது சிற்றரசு களில் ஒன்றாக தீகவாபி விளங்கியுள்ளது.

இலங்கையில் பௌத்த சமயம் அறிமுகமாவதற்கு முன்பு தீகவாபியில் நாக, சிவ, முருக வழிபாடுகள் நிலவியமைக்கான சான்றுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. எல்லாளன் 44 ஆண்டுகள் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் தீகவாபியில் சிவ வழிபாடு மேலோங்கிக் காணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாளனின் தமிழ் சிற்றரசர்கள் இருவர் தீகவாபிப் பகுதியை பொ.ஆ.மு. 205 முதல் 161 வரை ஆட்சி செய்துள்ளனர். எல்லாளனுடன் போரிட மாகமையிலிருந்து வந்த துட்டகைமுனு தீகவாபியில் இரண்டு தமிழ் மன்னர்களை வெற்றிகொண்டபின் 'அம்பரகிராமம்' என்றுமிடத்தின் அருகிலிருந்த அம்பிலபிட்டி ''பியங்கன'' எனும் இடத்தில் முகாம் அமைத்து சில நாட்கள் தங்கியிருந்து முன்னேறியதாக 'சகஸ்ஸவத் துப்பகரணய' எனும் பண்டைய நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி தீகவாபி பகுதியை எல்லாளன் காலத்தில் இரு தமிழ் சிற்றரசர்கள் ஆட்சி செய்துள்ளனர் என்பது நிரூபனமாகிறது.

## புவனேககயவாகு அமைத்த உன்னரசுகிரி இராச்சியம்


தென்கிழக்கிலங்கையில் மட்டக்களப்பு இராச்சியத்தின் பின் தோற்றம் பெற்றதே உன்னரசுகிரி இராச்சியமாகும். பொ.ஆ. 30 ஆம் ஆண்டளவில் புவனேகயபாகு எனும் மன்னன் இந்த இராச்சியத்தை முதன் முதலாக ஆட்சி செய்தான். இந்த இராச்சியத்துடன் மட்டக்களப்பு இராச்சியமும் ஒன்றாகி, சில நூற்றாண்டு காலம் இவை இரண்டும் ஒரே இராச்சியமாக இருந்தன.

புவனேகயபாகுவின் பின் மனுநேயகயபாகு, ஆடகவுந்தரி, சிங்ககுமாரன், சிறிசிங்கன், பானு ஆகியோர் உன்னரசு கிரியை ஆட்சி செய்த மன்னர்களாவர். பொ.ஆ. 10 ஆம் நூற்றாண்டளவில் மட்டக்களப்பு இராச்சியத்தை ஆண்ட பிரசின்னசித்து எனும் மன்னனே உன்னரசுகிரி எனும் இராச்சியத்தை உருவாக்கி புவனேககயபாகுவிற்குக் கொடுத்தான். நாகர்முனை முருகனாலயத்தை பிரசின்னசித்துவின் வேண்டுதலுக்கிணங்க புவனேககயபாகு திருப்பணிகளை நல்ல முறையில் செய்து முடித்து மன்னன் பிரசின்னசித்துவிடம் கொடுத்த போது அவன் மகிழ்ச்சியடைந்து தனது நாட்டின் தென் பகுதியில் 'புன்னரசுகிரி' எனும் இராச்சியத்தை உருவாக்கி புவனேககயபாகுவிடம் கொடுத்து ஆளும்படி பணித்தான்.

புன்னரசுகிரி இராச்சியமே உன்னரசுகிரி என அழைக்கப்பட்டது. உன்னரசுகிரி இராச்சியத்தின் தலைநகராக குடும்பி மலை விளங்கியதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். வேறு சிலர் சன்னாசி மலையே உன்னரசு கிரி இராச்சியத்தின் தலைநகர் எனக் கூறுகின்றனர். இவற்றில் ஒரு இராச்சியத்தின் தலைநகருக்குரிய அம்சங்களுடன் பண்டைய கட்டிட இடிபாடுகள், கல்வெட்டுக்கள், கற்குகைகள், பாதுகாப்பு அரண்கள், வணக்கத் தலங்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்ச்சுனைகள் ஆகியவற்றின் எச்சங்களுடன் குடும்பி மலைப்பகுதி காணப் படுவதால் இதுவே இந்த இராச்சியத்தின் தலைநகராக இருக்க வேண்டும் என நம்ப இடமுண்டு.



குடும்பி மலை

அதேசமயம் சன்னாசி மலையில் நான்கு கட்டிடங்களின் எச்சங்கள் மற்றும் இரண்டு நீர்ச்சுனைகள் ஆகியவை மட்டுமே காணப்படுவதால் இம்மலை உன்னரசு கிரி இராச்சியத்தின் ஓர் உப நகராக இருந்திருக்கலாம் என நம்ப இடமுண்டு. பானமையின் தெற்கில் 8 கி.மீ. தொலைவில் சன்னாசி மலையும், இங்கிருந்து தென்மேற்குப் பக்கத்தில் 8 கி.மீ. தொலைவில் குடும்பிமலையும் அமைந்துள்ளது.



சன்னாசி மலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொ.ஆ. 8 ஆம் ஆண்டளவில் மட்டக்களப்பை ஆட்சி செய்த பிரசின்ன சித்து என்ற தமிழ் மன்னன் கலிங்க நாட்டிலிருந்து வந்த புவனேககயபாகு என்பவனுக்காக தனது ஆட்சிப்பிரிவின் தென்பகுதியை தனியாட்சிப் பிரிவாக வகுத்து (நாகர் முனைக்குத் தெற்கில்) உன்னரசுகிரி எனும் ஆட்சிப் பிரிவை உருவாக்கி அவனுக்குக் கையளித்துச் சென்றதாக மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. இந்த உன்னரசு கிரியின் தெற்கு எல்லையாக மாணிக்க கங்கை விளங்கியுள்ளது. பொ.ஆ. 28 முதல் பொ.ஆ. 398 வரை சுமார் நான்கு நூற்றாண்டுகள் இம்மன்னர்களால் ஆளப்பட்ட உன்னரசுகிரி இராஜதானி வடக்கில் மக்கனல் வெட்டு வாய்க்காலையும், கிழக்கில் வங்கக் கடலையும், தெற்கில் மாணிக்கங்கையையும், மேற்கில் மத்தங்கடவத்தனையையும் எல்லைகளாகக் கொண்டிருந்ததாக மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. மத்தங்கடவத்தனை தற்போதைய வெல்லவாய, மொனராகல எல்லைகளில் அமைந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

இந்த நான்கு நூற்றாண்டுகளில் இப்பகுதியில் ஏராளமான ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்றிடண்டே தற்போதும் நிலைத்து நிற்கின்றன. ஏராளமானவை இப்பகுதியிலுள்ள அடர்ந்த காடுகளுக்குள் இடிபாடுகளாகவும், மண்ணுள் புதையுண்டும் காணப்படுகின்றன. மாணிக் கங்கை முதல் விலா ஓயா வரையான அடர்ந்த காடுகளுக்குள் பெருந் தொகையான இடிபாடுகள் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

இப்பகுதியில் ஆங்காங்கே புராதன செங்கற்களும், கருங்கல் தூண்களும் தென்படு கின்றன. மலைக்குகைகளில் காணப்படும் கல்வெட்டில் தமிழ் பிராமிக்குரிய உதியன், அபயன் போன்ற சொற்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இக்குகைகளில் ஆதியில் தமிழர்கள் வாழ்ந்து வந்துள்ளமை உறுதியாகத் தெரிகிறது.

பொ.ஆ.மு. 4 ஆம், 3 ஆம் நூற்றாண்டுகளில் கதிர்காமம், சந்தனகாமம் ஆகிய அரசுகள் பாண்டிய குலதமிழ் மன்னர்களால் ஆளப்பட்டது. மாகமை அரச குலத்தவருக்கும் கதிர்காம தமிழ் அரச குலத்தவருக்குமிடையே திருமணத் தொடர்புகள் இருந்து வந்தன. போவத்தகல்லில் கிடைக்கப் பெற்ற கல்வெட்டொன்றின் மூலமாக இத்தகவல்களை அறியக்கூடியதாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

# தென்கிழக்கிலங்கையின் பெருங்கற்கால [ஆதி இரும்புக்காலம்] பண்பாட்டு தொல்பொருள் மையங்கள்

தென்கிழக்கிலங்கையில் பெருங்கற்கால பண்பாட்டு தொல்லியல் மையங்கள் பல கண்டறியப்பட்டுள்ளன. இக்காலம் பொ.ஆ.மு. 1000 ஆண்டளவில் ஆரம்பமானதாக ஆய்வுகள் கூறுகின்றன. இது ஆதி இரும்புக்காலம் எனவும் அழைக்கப்படும். இப்பண்பாட்டு நாகரீகம் தென்னிந்தியாவிலிருந்து இலங்கையின் மேற்குக் கரையோரத்திற்கும் அங்கிருந்து வடமத்தி, மற்றும் கிழக்குக் கரையோரப் பகுதிகளுக்கும் பரவியதாக ஆய்வுகள் கூறுகின்றன.

ஆதி இரும்புக்கால பண்பாட்டைப் பரப்பியோர் பேசிய மொழி பற்றி பல கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இதில் பலரும் கூறிய கருத்தாகவும், ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகவும் இருப்பது இம்மக்கள் திராவிட மொழிகளைப் பேசினர் என்பதாகும். இவர்களின் எழுத்துக்கள் பண்டைய மட்பாண்டங்களில் எழுதப்பட்டுள்ளன. தமிழ் நாட்டிலும், இலங்கையிலும் ஆதி வரலாற்றுக் கால தொடக்கத்தில் பயன்படுத்தப்பட்ட மொழிகள் என இரண்டு மொழிகள் ஆராய்ச்சியாளர்களால் கண்டறியப்பட்டுள்ளன. அவை பிராகிருதம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளாகும். இந்த அடிப்படையில் ஆதி இரும்புக்காலம் எனப்படும் பெருங்கற்கால தொல்பொருள் மையங்கள் சில தென்கிழக்கிலங்கையில் கண்டறியப்பட்டுள்ளன.

## உகந்தை

பானமையின் தெற்கில் 12 கி.மீ. தூரத்தில் உகந்தை அமைந்துள்ளது. தென்கிழக்கிலங்கையில் காணப்படும் பெருங்கற்காலத் தொல்பொருள் மையங்களில் உகந்தை மிக முக்கியமானதாகும். உகந்தையில் பெருங்கற்கால மையம் அமைந்திருந்த பகுதியில் புராதன தொல்பொருட் சின்னங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இக்காலத்திற்குரிய கறுப்பு, சிவப்பு நிற மட்பாண்டங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஈமத்தாழிகள் மற்றும் ஒரு தலை, இரு தலை, முத்தலைச் சூலங்கள் போன்றவையும் கிடைக்கப் பெற்றுள்ளன. இதன்படி இங்கு மிகப் பண்டைய காலத்தில் ஓர் மக்கள் குடியிருப்பு அமைந்திருந்தமையும், இவர்களால் சிவ வழிபாடும், வேல் வழிபாடும் பேணப்பட்டு வந்துள்ளமையும் தெளிவாகத் தெரிகிறது. இவற்றை மேற்கொண்டவர்கள் பெருங்கற்கால பண்பாட்டு மையங்களில் வாழ்ந்த ஆதி தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பெருங்கற்கால நாகரீகம் பொ.ஆ.மு. 1000 ஆண்டளவில் தோற்றம் பெற்றதாக ஆய்வுகள் கூறுகின்றன. உகந்தையில் 1920 ஆம் ஆண்டளவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் இப்பகுதி ஓர் பெருங்கற்கால நாகரீகம் நிலவிய இடம் என்பது தெரியவந்துள்ளது. இந்நாகரீக காலத்திற்குரிய பெருங் கற்களைக் கொண்ட சவ அடங்க மையங்கள் இங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

## சங்கமன் கண்டி

திருக்கோயிலிலிருந்து பொத்துவிலுக்கு செல்லும் வீதியில் சங்கமன் கண்டி அமைந்துள்ளது. இங்குள்ள காட்டுப் பிள்ளையார் கோயிலின் பின்பக்கம் இருக்கும் காட்டில் பண்டைய குறுகிய மன்னர்களின் இராஜதானி அமைந்திருந் தமைக்கான எச்சங்கள் காணப்படுகின்றன.

இப்பகுதியில் பெருங்கற்கால நாகரீக மக்கள் வாழ்ந்தமைக்கான எச்சங்களும் காணப்படுகின்றன. இம்மக்களின் சவ அடக்க கல்லறையின் மூடி இங்கே காணப்படுகிறது. இது ஆதி இரும்பு கால மக்கள் இங்கு வாழ்ந் தமைக்கான முக்கிய சான்றாகும். மேலும் இங்கு இப்பண்பாட்டு நாகரீக மக்களின் மட்பாண்டத்தின் துண்டங்களும் கிடைக்கப் பெற்றுள்ளன. இவற்றில்



சங்கமன் கண்டியில் கிடைத்த மட்பாண்டத் துண்டுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று ஓடுகளில் எழுத்துக்கள் காணப்படுகின்றன. இவற்றில் தமிழ் மொழிக் குரிய 'ன்' எனும் எழுத்து காணப்படுவதால் இவை ஆதி தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட கலவோடுகள் என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். பெருங் கற்காலப் பண்பாடு தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு பரவியதால் ஆதி தமிழ்மொழியும் இலங்கையில் பரவியமை குறிப்பிடத்தக்கது.

## மல்கம்பிட்டி

சம்மாந்துறை நகரின் தெற்குப்பக்கத்தில் சுமார் 5 கி.மீ தூரத்தில் மல்கம்பிட்டி அமைந்துள்ளது. இலங்கையில் ஆதிதிராவிடரான தமிழ்க்குடிகள் வளர்த்த பெருங்கற்காலப் பண்பாடு மல்கம்பிட்டியிலும் நிலவியதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. பொ.ஆ.மு. 1000 - 500 வரையான காலப் பகுதியிலேயே இப்பண்பாடு தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் நிலவியது. ஆதி திராவிடக் குடிகளின் பெருங்கற்கால இடுகாடுகள் அமைந்திருந்ததற்கான தடயங்கள் தீவின் பல பாகங்களிலும் கிடைத்துள்ளன. இதில் ஈமத்தாழிகள் முக்கியமானவையாகும். ஈமத்தாழியொன்றின் கல்லால் ஆன மூடியொன்றே மல்கம்பிட்டியில் கிடைக்கப் பெற்றுள்ளது. இது இங்கு நிலவிய ஆதிதமிழ்க் குடிகளின் பண்பாட்டை உறுதி செய்கிறது.

## வீரையடி

அம்பாறை நகரின் தெற்கில் அமைந்துள்ள இறக்காமம் என்னுமிடத்தின் அருகில் வீரையடி என்னுமிடம் உள்ளது. இங்கு பெருங்கற்கால நாகரீக மக்களின் சவ அடக்கமுறைக்கு பயன்படுத்தப்பட்ட கல்லினால் ஆன சவப் பெட்டி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இங்கு ஆதிமக் களின் இடுகாடும், அதன்கருகில் ஆதி குடியிருப்பும் இருந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

இது அனுராதபுரம், மிகிந்தலை ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட கற்சவப்பெட்டிகளை ஒத்திருந்தாலும், வேற்று இன கலாசாரத்தைக் கொண்டுள் ளதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பானமை

பானமைப் பகுதியிலும் ஆதி இரும்புக்கால நாகரீகம் இருந்துள்ளமை ஆய்வுகள் மூலம் தெரிய வருகிறது. இங்கும் இக்காலப்பகுதியில் வாழ்ந்த ஆதி தமிழர்களினால் பயன்படுத்தப்பட்ட கறுப்பு மற்றும் சிவப்பு நிற மட்பாண்டங்களின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

## கும்புக்கன் ஆற்றங்கரை

அம்பாறை மாவட்டத்தின் தென் எல்லையாக கும்புக்கன் ஆறு அமைந்துள்ளது. இவ்வாற்றின் வடக்குப் பகுதி அம்பாறை மாவட்டத்திற்குரியதாகும். ஆற்றின் வடக்கில் பல இடங்களில் ஆதி இரும்புக்காலத்திற்குரிய எச்சங்கள் பல காணப்படுகின்றன. இங்கு கறுப்பு மற்றும் சிவப்பு நிற மட்பாண்ட ஓடுகள் பரவலாகக் கிடைக்கப் பெற்றுள்ளன. இதன் மூலம் இப்பகுதியில் ஆதி மனிதர்கள் வாழ்ந்துள்ளனர் என்பது உறுதியாகிறது.

இலங்கையின் கிழக்குக் கரை வடமேற்குக் கரையைப் போலவே ஆதி இரும்புக்காலத்தில் தென்னிந்தியாவின் நாகரீக செல்வாக்கு பரவிய பகுதிகளில் ஒன்றாக விளங்கியதாக கலாநிதி இந்திரபாலா குறிப்பிட்டுள்ளார். ஆதி இரும்புத் தென்னிந்திய நாகரீகம் என்பது ஆதி தமிழர்களின் நாகரீகமாகும். எனவே இங்கு இக்காலத்தில் ஆதி தமிழர்களின் குடியிருப்புகள் இருந்துள்ளன. இவர்கள் இந்து தெய்வ வழிபாட்டில் ஈடுபட்டிருப்பர் எனவும் நம்ப இடமுண்டு.

## ஓமுனகல - ஹேனன்னேகல

மகாஓயாவிலிருந்து மாதுருஓயாவிற்குச் செல்லும் வழியில் பாதையின் கிழக்குப் பக்கத்தில் சுமார் 3 கி.மீ. தூரத்தில் ஓமுனகல மலை உள்ளது. ஓமுனமலைப் பகுதியில் புராதன காலத்தில் வேல் வழிபாடு நிலவியமைக்கான தொல்பொருட் சான்றுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இம் மலையின் தெற்கில் சுமார் 4.கி.மீ தொலைவில், பாதையின் கிழக்குப் பக்கத்தில் ஹேனன்னேகல எனும் ஓர் சிறிய மலைக்குன்று காணப்படுகிறது.

இங்குள்ள குகையில் பொ.ஆ.மு.10ம் - 5ம் நூற்றாண்டு காலப் பகுதியில் ஆதிதிராவிடர்கள் வாழ்ந்த எச்சங்கள் காணப்படுகின்றன. இங்கு இரும்பினால் செய்யப்பட்ட வேல் உள்ளது. இது இப் பகுதியில் ஆதி காலத்தில் நிலவிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேல் வழிபாட்டை உறுதி செய்கிறது. இது போன்ற இரும்பு வேல் இலங்கையின் மிகப் புராதன ஆதிதமிழர் வாழ்ந்த பெருங்கற்கால பண்பாட்டு மையமான பொம்பரிப்பில் கிடைக்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.




ஹேனென்னேகலவில் கண்டெடுக்கப்பட்ட இரும்பு வேல்.

## ஹுலென்நுகே - லாகுகல

பொத்துவிலிலிருந்து சியம்பலாண்டுவைக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் 188வது மைல் கல்லின் அருகில் இவ்விடம் அமைந்துள்ளது. இங்கு உள்ள மலைக்குகைகளில் ஆதிவேடர்கள் வரைந்த ஓவியங்கள் காணப்படுகின்றன. இவை பெருங்கற்காலத்தில் வாழ்ந்த மக்களால் வரையப்பட்டுள்ளன. மனிதர்கள் மற்றும் மிருகங்கள் ஆகியவற்றின் உருவங்கள் கற்பாறைகளில் வரையப்பட்டுள்ளன. இவற்றில் திரிசூல வடிவங்களும் காணப்படுகின்றன. இதன் மூலம் இங்கிருந்தவர்கள் சிவ வழிபாட்டை மேற் கொண்டவர்கள் எனத் தெரிகிறது. இங்கு காணப்படும் மலைக்குகையொன்று இலங்கையிலேயே மிக நீளமான மலைக்குகை என ஆய்வாளர்களால் கூறப்பட்டுள்ளது. முன்பு தொல்பொருள் திணைக்களத்தின் ஆணையாளராகப் பணியாற்றிய பேராசிரியர் ரொனால்ட் சில்வா இவ்விடத்தில் ஆய்வுகளை மேற் கொண்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹுலன்நுகே - மலைக்குகையில் ஆதிவேடர்கள் வரைந்த ஓவியத்தில் திரிசூலக் குறியீடு.

## வாகூர மலை

உகந்தையின் தெற்கில் சுமார் 6 கி.மீ தொலைவில் வாகூர களப்பு அமைந்துள்ளது. இக்களப்பின் வடமேற்கில் தட்டையான நீளமான மலைப் பாறையொன்றைக் காணக் கூடியதாக உள்ளது. சுமார் 60 அடி உயரமும் 150 அடி நீளமும் கொண்ட இம் மலைப் பாறையே சரித்திரப் பிரசித்தி பெற்ற வாகூர மலையாகும். இது சிங்கள மொழியில் ''பாகுரகல'' என அழைக்கப்படுகிறது.

இம்மலைக்கும் கந்தன் படையெடுப்புக்கும் நெருங்கிய தொடர்புள்ளது. சூரனை அழிப்பதற்காக முருகப் பெருமான் வீசிய வேல் உக்கிரம் தாங்க முடியாது சமுத்திரத்தை நோக்கி வரும் வழியில் எதிர்ப்பட்ட வாகூர மலையை இரண்டாகப் பிளந்து கடலில் மூழ்கி பின் வெள்ளை நாவலில் உறைந்ததென்று மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடுகின்றது. கடலில் மூழ்கிக் கிளம்பிய வேல் மூன்று கதிர்களாகப் பிரிந்து உகந்தை, திருக்கோயில், மண்டூர் ஆகிய இடங்களில் வீழ்ந்ததாகவும் இவ்விடங்களில் ஆதி நாகர்களால் முருகனுக்கு ஆலயங்கள் எழுப்பப்பட்டதாகவும் மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி உட்பட பல நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி முருகப் பெருமானின் வேலினால் இரண்டாகப் பிளக்கப்பட்டு சுக்குநூறான மலை வாகூரக் களப்பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகில் நாம் காணும் மலையே எனவும், வேல் மூழ்கிய கடல் வாகூரக் களப்பின் கிழக்கில் காணப் படும் வங்கக் கடலே எனவும் தெரிய வருகிறது.



வாகூர மலை.

வாகூர மலை மிகப் பெரிதாகக் காணப்பட்டதாகவும், இரண்டாகப் பிளக்கப்பட்ட இதன் பாகங்களே எல்லா இடங்களிலும் சிதறி துண்டு துண்டாகக் கிடப்பதாகவும் கூறப்படுகிறது. இன்று நாம் காணும் தட்டையான வாகூர மலை கந்தன் படையெடுப்பு காலத்திற்கு முன்பு மிகப் பெரியதாகக் காணப்பட்டதாகவும், வாகூர மலையின் வடமேற்கிலும், மேற்குப் பக்கத்திலும் காணப்படும் மலைப் பாறைகள் அனைத்தும் வாகூர மலையிலிருந்து சிதறிய துண்டுகளே எனவும் கூறுப்படுகின்றது. வாகூர மலையின் அருகில் உள்ள பால்சுனைக் கற்பாறை, யாழ்ச்சுனைக் கற்பாறை போன்றவையும் இம் மலையின் துண்டுகளே. வாகூர மலையின் சிதறிய பாறைத் துண்டுகளைப் பார்க்கும் பொழுது வட இந்தியாவில் மதுரா நகருக்கு அருகில் உள்ள கோவர்த்தனம் எனும் இடமே நினைவுக்கு வருகிறது. இங்குதான் கிருஷ்ண பகவான் தனது ஒற்றை விரலால் கோவர்த்தன மலையைத் தூக்கி பின் கீழே போட்டதாகவும், கீழே விழுந்த மலையின் துண்டுகள் சிதறியதாகவும் கூறப்படுகிறது. கோவர்த்தனம் கிருஷ்ணர் கோயிலில் இப்படிப்பட்ட ஓர் துண்டுக் கல்பாறையே புனிதப் பொருளாக வைத்துப் பூஜிக்கப்படுகிறது. கோவர்த்தனம் என்னும் இடத்தில் சுமார் 10.கி.மீ நீளத்திற்கு கீற்று கீற்றாக கோவர்த்தன மலைப்பாறைகள் இன்றும் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது போலவே வாகூர மலையின் துண்டுகளும் கீற்றுக் கீற்றாக மலையின் வடமேல் பகுதியில் காணப்படுகின்றன. வாகூர வெட்டையின் வடக்குப் பக்கத்திலும் வாகூர மலையின் சில துண்டுகள் காணப்படுகின்றன.

வாகூர மலையின் அடிவாரத்தில் ஆதி தமிழர்கள் வாழ்ந்த சில கற்குகைகள் காணப்படுகின்றன. இவற்றில் ஆதிவாசிகள் வரைந்த சித்திரங்கள் சிலவும் காணப்படுகின்றன. வாகூர வெட்டையிலிருந்து மேற்கு நோக்கிச் செல்லும் ஒற்றையடிப் பாதை மூலமாக சென்றால் இரண்டு கி.மீ தூரத்தில் வாகூர மலையை அடையலாம். அங்கிருந்து 500 மீற்றர் தொலைவில் பால்ச்சுனையும் அதை அடுத்து யாழ்ச்சுனையும் அமைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

# தென்கிழக்கிலங்கையின் பண்டைய கிராமங்களும், குடியேற்றங்களும்

தென்கிலக்கிலங்கையில் பூர்வீகமாகவே பல கிராமங்கள் உள்ளன. உகந்தை, நாகர்முனை, காளிதேசம், மட்டக்களப்பு, உன்னரசுகிரி ஆகிய இராச்சியங் களுக்குட்பட்ட காரைதீவு, வீரமுனை, மாளிகைக்காடு, அட்டப் பள்ளம், நிந்தவூர், மல்கம்பிட்டி, சம்மாந்துறை, வீரமுனை மற்றும் சங்கமன் கண்டி, வீரையடி, பானமை, கும்புக்கன் போன்ற இடங்களில் மக்கள் பூர்வீக மாகவே வாழ்ந்து வருகின்றனர். இவை சுமார் 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட கிராமங்களாகும். மேலும் பிராமிக் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்ட இடங் களும் பூர்வீகமாக மக்கள் வாழ்ந்த இடங்களாகும். இதன் பின்பு பொ.ஆ.மு. 3 ஆம் நூற்றாண்டு காலம் முதல் கலிங்க நாட்டிலிருந்தும், தென்னிந்தியாவி லிருந்தும் வந்த மக்கள் தென்கிழக்கிலங்கையில் குடியேற்றப்பட்டனர். இவ்வாறு காலத்திற்கு காலம் தென்கிழக்கிலங்கையில் மக்கள் குடிய மர்த்தப்பட்ட 85 க்கும் மேற்பட்ட பண்டைய கிராமங்கள் காணப்படுகின்றன.

இக்கிராமங்களில் கூத்திக மன்னன், ஆடக சவுந்தரி, உலகநாச்சி, சோழ மன்னர்கள், கலிங்க மாகோன் ஆகியோரின் காலத்தில் மக்கள் அதிகமாக குடியமர்த்தப்பட்டனர். பொ.ஆ.மு. 3ம் நூற்றாண்டு முதல் பொ.ஆ. 2ம் நூற்றாண்டு வரையான காலத்தில் பிராமிக் கல்வெட்டுக்கள் பொறிக்கப் பட்டிருந்த மலைக் குகைகளை அண்டி பூர்வீகமாக மக்கள் வாழ்ந்துள்ளனர் எனவும் கருத இடமுண்டு.

## உகந்தை

தென்கிழக்கிலங்கையின் பண்டைய குடியிருப்புக்களில் முதன்மையானதும் மிகப்பழையதுமானதாக உகந்தை விளங்குகின்றது. தென்கிழக்கிலங்கையில் கந்தன் படையெடுப்பு காலத்துடன் தொடர்புடைய இரண்டு இடங்களில் உகந்தையும் ஒன்றாகும். முருகன் சூரனை அழிக்க கதிர்காமத்திற்கு வந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வே இலங்கை வரலாற்றின் மிகப்பண்டைய நிகழ்வாகும். இது பொ.ஆ.மு. 9600ம் ஆண்டு முதல் பொ.ஆ.மு. 5150ம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் நிகழ்ந்திருக்கலாம் எனக்கருத இடமுண்டு. இக்காலப் பகுதியிலேயே உகந்தையில் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. எனவே இக்காலப்பகுதியில் இங்கு ஆதி தமிழர்கள் வாழ்ந்துள்ளனர்.

மேலும் இலங்கையில் பெருங்கற்கால நாகரீகம் நிலவிய பண்டைய மையங்களில் உகந்தையும் ஒன்றாகும். இது ஆதி இரும்புக் காலம் எனவும் அழைக்கப் படுகிறது. இக்காலம் இலங்கையில் பொ.ஆ.மு. 1000 ஆண்டளவில் தொடங்கியதாக ஆய்வுகள் கூறுகின்றன. எனவே உகந்தையில் மிகப் பண்டைய மக்கள் குடியிருப்பு இருந்தமை உறுதியாகிறது. இதன்படி இது சுமார் 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட குடியிருப்பாகும்.

## நாகர் முனை (திருக்கோயில்)

தென்கிழக்கிலங்கையின் மிகத் தொன்மை வாய்ந்த இரண்டு குடியிருப்புக் களில் ஒன்றாக நாகர்முனை விளங்குகின்றது. நாகர்முனை என்பது இன்றைய திருக்கோயிலின் பண்டைய பெயராகும். பொ.ஆ.மு. 9600ம் ஆண்டு முதல் பொ.ஆ.மு. 5150 வரையான காலப்பதிக்குள் இலங்கையில் நிகழ்ந்த முதலாவது வரலாற்று நிகழ்வான கந்தன் படையெடுப்புடன் நாகர்முனைக்கு தொடர்புள்ளது.

இக்காலப்பகுதியில் இங்கு முருகனாலயம் அமைக்கப்பட்டு மக்களால் பூஜிக்கப்பட்டுள்ளது. பொ.ஆ.மு. 5ம் நூற்றாண்டில் இங்கு நாகர் குடியமர்ந்ததால் இவ்விடம் நாகர்முனை எனப்பெயர் பெற்றது. மேலும் பொ.ஆ. 1ம், 2ம் நூற்றாண்டு காலப்பகுதியிலும் இங்கு மக்கள் குடியேறியுள்ளனர். எனவே நாகர்முனை எனும் இன்றைய திருக்கோயில் சுமார் 3000 வருடங்களுக்கு முற்பட்ட குடியிருப்பாகும்.

## காரைதீவு

பொ.ஆ.மு. 6ம் நூற்றாண்டளவில் தென்கிழக்கிலங்கையில் இருந்த காளிதேசம் எனும் இராச்சியத்தின் ஓர் பகுதியே காரைதீவாகும். இக்காலப்பகுதியில் இங்கு மக்கள் வாழ்ந்துள்ளனர். பொ.ஆ.மு. 3ம் நூற்றாண்டில் கூத்திக மன்னன் காலத்தில் இங்கு மக்கள் குடியேறியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே சுமார் 2600 வருடங்களுக்கு மேற்பட்ட பாரம்பரிய குடியிருப்புக் களில் காரைதீவும் ஒன்றாகும். பொ.ஆ.மு. 1ம் நூற்றண்டளவில் இங்கு கலிங்கர் குடியேறியதாகவும், பின்பு பொ.ஆ. 2ம், 9ம், 10ம் நூற்றாண்டு காலப்பகுதியிலும் காரைதீவில் மக்கள் குடியேறியதாகவும் தெரியவருகிறது.

## மாளிகைக்காடு

பொ.ஆ.மு. 6ம் நூற்றாண்டில் காளிசேனன் எனும் மன்னன் ஆட்சி செய்த காளிதேசம் எனும் இராச்சியத்தின் ஓர் பகுதியாக மாளிகைக்காடு விளங்கி யுள்ளது. இக்காலப்பகுதியில் இங்கு மக்கள் வாழ்ந்துள்ளனர். பிற்காலத்தில் இங்கு ஓர் சிற்றரனின் அரசமாளிகை இருந்த படியால் இவ்விடம் மாளிகைக் காடு எனப் பெயர் பெற்றது. இக்கிராமம் சுமார் 2600 வருடங்கள் பழமை வாய்ந்ததாகும்.

## நிந்தவூர்

நிந்தவூர் மிகப் பழமை வாய்ந்த தமிழர் குடியிருப்பாகும். பொ.ஆ.மு. 6ம் நூற்றாண்டளவில் காளிசேனன் எனும் மன்னன் ஆண்ட காளிதேசத்தின் ஓர் பகுதியே இன்றைய நிந்தவூர் என தொல்லியல் ஆய்வாளர் தனபாக்கியம் குணபாலசிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

பொ.ஆ.மு. 2ம் நூற்றாண்டில் இலங்கையை ஆட்சி செய்த கூத்திகன் எனும் மன்னன் இப்பகுதியில் தனது கோடை வாசல் தலத்தையும், உப நகரையும் அமைத்திருந்தான். இக்காலப்பகுதியில் தென்னிந்தியாவிலிருந்து தமிழ் மக்களை வரவழைத்து தென்கிழக்கிலங்கையில் குடியமர்த்தினான். அவ்வாறு தமிழர்கள் குடியமர்த்தப்பட்ட இடங்களில் நிந்தவூரும் ஒன்றாகும். கூத்திக மன்னனின் உப நகராக சம்மாந்துறையும், கோடைவாசல் தலமாக நிந்தவூரை அடுத்துள்ள அட்டப்பள்ளத்திலுள்ள சிங்காரபுரி என்னுமிடமும் விளங்கியுள்ளன.

இதன்படி நிந்தவூர் 2600 ஆண்டுகள் பழமை வாய்ந்த தமிழ்க்கிராம மாகும். இன்று நிந்தவூரில் நாம் காணும் பழமைவாய்ந்த பிள்ளையார் ஆலயத்திற்கு முன்னோடியாக அமைக்கப்பட்ட சைவக்கோயில் கூத்திக மன்னன் காலத்தில் அமைக்கப்பட்டதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டப்பள்ளம் (சிங்காரத்தோப்பு)

பொ.ஆ.மு. 6ம் நூற்றாண்டில் இருந்த காளிதேசம் எனும் இராச்சியத்தின் ஒரு பகுதியே அட்டப்பள்ளம் எனும் இடமாகும். இங்கு இக்காலப்பகுதியில் மக்கள் வாழ்ந்ததுள்ளனர். கூத்திக மன்னன் காலத்தில் சிங்காரத் தோப்பு அமைக்கப்பட்டதும் இவ்விடத்திலேயே என மட்டக்களப்பு மான்மியம், மற்றும் மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி போன்ற நூல்கள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. மன்னனின் சிங்காரத் தோப்பு இன்றும் சிங்கார வத்தை என அழைக்கப்படுகிறது.

## மல்கம்பிட்டி (மண்கல்பிட்டி)

பொ.ஆ.மு. 3ம் நூற்றாண்டில் கூத்திக மன்னன் காலத்தில் மக்கள் இங்கு குடியமர்த்தப்பட்டனர். இதற்கு முன்பே பொ.ஆ.மு. 1000 ஆண்டளவில் இங்கு மக்கள் வாழ்ந்தமைக்கான தொல்லியல் ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. தென்னிந்தியாவிலிருந்து பரவிய ஆதி இரும்புக்கால மக்களின் குடியிருப்புக்களில் மல்கம்பிட்டியும் ஒன்றாகும். இவ்விடம் சுமார் 3000 வருடங்களுக்கு முற்பட்ட தமிழர் குடியிருப்பாகும்.

## சம்மாந்துறை

சம்மாந்துறை என இன்று அழைக்கப்படும் இடம் பண்டைய காலத்தில் கூத்திக மன்னன் ஆட்சி செய்த மட்டக்களப்பு இராச்சியத்தின் முக்கிய பகுதியாகும். பொ.ஆ.மு. 3ம் நூற்றாண்டு காலப்பகுதியில் ஆட்சி செய்த கூத்திகன் காலத்தில் இங்கு மக்கள் வாழ்ந்துள்ளனர். கிழக்கிந்தியாவிலுள்ள கலிங்க நாடு எனும் ஒரிஸ்ஸா பகுதியிலிருந்து இன்றைய மட்டக்களப்புப் பகுதிக்கு வந்த கலிங்கர் அங்கிருந்து பொ.ஆ.மு. 1ம் நூற்றாண்டளவில் தெற்கு நோக்கி வந்து சம்மாந்துறையில் குடியேறியதாக ஆய்வுகள் கூறுகின்றன. சம்மாந்துறையில் முதல் குடியேற்றம் சுமார் 2300 ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்துள்ளது.

இதன்பின்பு பொ.ஆ. 4ம் 5ம் நூற்றாண்டு காலப்பதியில் உலக நாச்சி மண்முனைப்பகுதியை ஆட்சி செய்த காலத்திலும் சம்மாந்துறையில் மக்கள் குடியேறியதாகத் தெரியவருகிறது. இக்காலப்பகுதியில் மருத்துவக் குடிகள் என்றழைக்கப்படும் நாவிதர் இங்கு குடியமர்ந்ததாக ஆய்வுகள் கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் மண்முனைப் பகுதியிலிருந்து சம்மாந்துறைக்கு வந்து குடியமர்ந்ததாகத் தெரிய வருகிறது.

இவை தவிர பொ.ஆ. 13ம் நூற்றாண்டில் கலிங்க மாகோன் தனதாட்சிக் காலத்தில் நாவிதரைக் குடியமர்த்திய 5 இடங்களில் சம்மாந்துறையும் ஒன்றாகும். இது பற்றிய பாடல் ஒன்று மட்டக்களப்பு மான்மியத்தில் காணப்படுகிறது. எனவே பொ.ஆ.மு. 1ம் மற்றும் பொ.ஆ. 4ம், பொ.ஆ. 13ம் நூற்றாண்டு ஆகிய மூன்று காலகட்டங்களில் சம்மாந்துறையில் இந்துக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

## வீரமுனை

வீரமுனை சுமார் 2300 ஆண்டுகள் பழமைவாய்ந்த கிராமமாகும். பொ.ஆ.மு. 3ம் நூற்றாண்டில் இலங்கையை ஆட்சி செய்த தமிழ் மன்னனான கூத்திகனால் வீரமுனை கிராமம் உருவாக்கப்பட்டது. அனுராதபுரத்தை தலைநகராகக் கொண்டு தனது சகோதரன் சேனனுடன் பொ.ஆ.மு. 237 - 215 வரையில் 22 வருடகாலம் ஆட்சி செய்தவன் கூத்திகன். இம்மன்னன் தனது பொழுது போக்கு வாசல்தலமாக தென்கிழக்கின் காட்டுப் பகுதியில் தோப்பு ஒன்றை நிர்மாணித்து அதில் சிங்காசன மண்டபத்தையும், பூஞ்சோலையும் அமைத்து அதற்கு 'சிங்காரத் தோப்பு' எனப் பெயரிட்டான். இதன் அருகிலிருந்த இடங்களை அபிவிருத்தி செய்து அங்கு மக்களை குடியமர்த்தினான்.

இதற்கு முந்திய காலத்தில் காடடர்ந்த தென்கிழக்குப் பிரதேசத்திலிருந்த பெரிய வாவியை அண்டிய பகுதிகளில் சில இடங்களில் இந்தியாவிலிருந்து வந்த தமிழ் மக்கள் குடியேறி வாழ்ந்தனர். இவ்வாவியின் தென்முனையை 'களப்பு முனை' எனக் கூறினர். இதுவே முதன் முதலாக மட்டக்களப்பு எனப்பெயர் பெற்றது. கூத்திக மன்னன் அமைத்த சிங்கார தோப்பிற்கு மேற்கில், களப்பு முனைக்கு தெற்கில் மண், கல் மேடாக இருந்த பகுதியிலிருந்து மண்ணையும், கல்லையும் வெட்டி எடுத்து மூடுவித்தான். அந்த இடத்திற்கு மண்கல்புட்டி எனப் பெயரிட்டான். மூடுவித்த இடத்தில் அழகான அரசமாளிகையொன்றைக் கட்டினான். இவ்வரச மாளிகைக்கு காவலாக படைப்பிரிவொன்றை உருவாக்கி களப்பு முனையில் காவலுக்கு வைத்தான். அத்துடன் இப்பகுதியில் சாலைகளை அமைத்து வீரர்களை குடியமர்த்தினான். வீரர்கள் காவல் புரிந்த களப்புமுனை 'வீரர் முனை' எனப் பெயர் பெற்றது. அதுவே இன்று வீரமுனை என வழங்கலாயிற்று. தோப்பு அமைந்திருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்காரத் தோப்பு இன்றைய அட்டப்பளத்திலுள்ள ''சிங்காரவத்தை'' எனவும், மண், கல் எடுத்த மண்கல் புட்டி இன்றைய ''மல்கம்பிட்டி'' எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இப்படியாக அக்காலத்தில் தமிழருக்கென தனி இராஜதானியை தென்கிழக்கில் உருவாக்கியவன் கூத்திக மன்னன் இந்த இராஜதானி அமைந்திருந்த இடம் இன்றைய வீரமுனைக்கும், மலுக்கம்பிட்டிக்கும் அருகில் உள்ள பகுதி என அடயாளம் காணப்பட்டுள்ளது.

## தம்பிலுவில் (தம்பதிவில்)

பொ.ஆ. 1ம் நூற்றாண்டில் உன்னரசுகிரி இராச்சியத்தை ஆட்சி செய்த மனு நேயகயவாகு எனும் மன்னன் காலத்தில் உருவான கிராமமே தம்பதிவில் என்பதாகும். இது பிற்காலத்தில் தம்பிலுவில் எனத் திரிபடைந்தது. இக்காலப் பகுதியில் இங்கு மக்கள் குடியமர்த்தப்பட்டனர். அதன் பின்பு 11ம், 13ம் நூற்றாண்டிலும் இங்கு மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இதன்படி தம்பிலுவில் கிராமம் சுமார் 1900 ஆண்டுகள் பாரம்பரியம் மிக்கது. தனது தாயான தம்பதி நல்லாளின் நினைவாக மகனான மனுநேய கயவாகு எனும் உன்னரசுகிரி மன்னன் ஓர் குளத்தை அமைத்து அதற்கு தாயின் பெயரைச் சூட்டியதாகவும், இதன் காரணமாக இவ்வூருக்கு தம்பதி நல்லாள் வில் எனப் பெயரேற்பட்டதாகவும், இதுவே தம்பதிவில் என அழைக்கப்பட்டு பின்பு தம்பிலுவில் எனத் திரிபடைந்ததாகவும் தெரிய வருகிறது.

## தம்பட்டை

தம்பட்டை நான்கு பக்கங்களும் நீரினால் சூழப்பட்ட ஓர் தீவாகும். திருக் கோயில் முருகன் ஆலயத்திற்கு பணி செய்யும் முகமாக தென்னிந்தியாவி லிருந்து வந்த அந்தணர் குலத்தவரை உன்னரசு கிரியை ஆட்சி செய்து வந்த மனுநேயகயவாகு தம்பட்டையில் குடியமர்த்தினான் இது பொ.ஆ. 1ம் நூற்றாண்டு காலப்பகுதியாகும்.

இதன்படி தம்பட்டை கிராமத்தில் இற்றைக்கு 1900 ஆண்டுகளுக்கு முன்பு மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கமன் கண்டி

மிகப் பண்டைய காலத்தில் ஆதி தமிழர்கள் வாழ்ந்த இடங்களில் சங்கமன் கண்டியும் ஒன்றாகும். பொ.ஆ.மு. 1000 ஆண்டளவில் வாழ்ந்த பெருங்கற்கால மக்களின் குடியிருப்பே சங்கமன் கண்டியாகும். இது சங்கமன் கண்டு என பண்டைய காலத்தில் அழைக்கப்பட்டுள்ளது.

திருக்கோயில் முருகனாலயத் திருப்பணிகளுக்காக தாசகன், மனுநேய கயபாகு ஆகிய மன்னர்கள் குளங்களை வெட்டி வயற்காணிகளை அமைத்து விவசாயத்தை மேற்கொண்டதாகவும், இவ்வாறு சங்கமன்கண்டு முதல் தாடகிரி வரை 24 குளங்களை ஒன்றோடு ஒன்றாக இணைத்ததாகவும் மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது.

சிறிய ஊரிகள் நிறைந்த மண்ணைக் கொண்ட பிரதேசமென்பதால் இதற்கு சங்கு, மண், கண்டு எனும் பெயர் உருவானதாகக் கூறப்படுகிறது. அதே சமயம் தம்பட்டையில் குடியமர்த்தப்பட்ட சங்கமர் எனும் பூசகர் குலத்தவர்கள் இப்பகுதியில் குடியமர்த்தப்பட்டதால் 'சங்கமர் கண்டி' என இவ்வூருக்குப் பெயர் வந்ததாகவும் அப்பெயரே சங்கமன் கண்டி எனத் திரிபடைந்ததாகவும் கூறப்படுகிறது. எனவே சங்கமன் கண்டி சுமார் 3000 ஆண்டுகள் பழமைவாய்ந்த குடியிருப்பாக இருந்துள்ளது. பின்பு பொ.ஆ. 1ம் நூற்றாண்டில் சங்கமர் இங்கே குடியமத்தப்பட்டுள்ளனர்.

## கோமாரி

பொத்துவிலிருந்து அக்கரைப்பற்றுக்கு செல்லும் வீதியில் 16 கி.மீ தூரத்தில் கோமாரி எனும் கிராமம் அமைந்துள்ளது.

கோமாரி கிராமம் சுமார் 3 கி.மீ நீளமும் 500 மீற்றர் அகலமும் கொண்ட ஒடுங்கிய பகுதியில் அமைந்துள்ளது. கிராமத்தின் மேற்குப்பகுதியில் கோமாரி களப்பும், கிழக்கப் பகுதியில் வங்கக்கடலும் இதன் எல்லைகளாக அமைந்துள்ளன. உமிரிக் களப்பிற்கும், கோமாரிக் களப்பிற்கும் இடைப்பட்ட மலைப் பிரதேசத்திலேயே பண்டைய காலத்தில் சங்குமன் எனும் தமிழ் சிற்றரசனின் சங்கமன் கண்டி இராஜதானி அமைந்திருந்தது. கேந்திர முக்கியத் துவம் வாய்ந்த இந்த இராஜதானியின் தென் எல்லையில், சங்கமன் கண்டி மலைத்தொடரின் தென்கோடியில் கோமாரி அமைந்துள்ளமை குறிப் பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகப் பண்டைய காலம் முதல் கிழக்குக் கரையிலுள்ள முக்கிய துறை முகங்களில் ஒன்றாக கோமாரியும் விளங்கியுள்ளது. அக்கரைப்பற்று எனும் கருங்கொடித்தீவிற்கு தெற்குப் பகுதியில் இருக்கும் 12 களிமுகங்கள் பல்வேறு கால கட்டத்தில் சிறு துறைமுகங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்றாக கோமாரி களப்பு களிமுகத்தில் கோமாரி துறைமுகம் பண்டைய காலத்தில் அமைந்திருந்தது.

சுமார் 2000 வருடங்களுக்கு முன்பு தென்னிந்தியாவிலிருந்து யாத்திரை வந்த ஓர் தமிழ் இராஜகுமாரியின் கப்பல் உடைந்து இப்பகுதியில் கரை ஒதுங்கியதாகவும், இராஜகுமாரி தனது படை, பரிவாரங்களுடன் இங்கேயே தங்கி இப்பகுதியை ஆட்சி செய்ததாகவும் தெரிய வருகிறது. அவளின் தலைநகராக விளங்கியதால் இவ்விடம் 'குமரிமுனை' எனப் பெயர் பெற்றிருந்ததாகவும், இக்களப்பு குமரிமுனைக்களப்பு என்ற பெயரில் அழைக்கப் பட்டதாகவும், அதுவே பின்பு பேச்சு வழக்கில் கொமரிமுனை என்றும், கொமரி எனவும் பின்பு கோமாரி எனவும் திரிபடைந்து விட்டதாகவும் கூறப்படுகிறது.

அரசகுமாரியோடு வந்த பரிவாரங்கள் களப்பின் கிழக்குப் பகுதியில் இருந்த நிலப்பரப்பில் குடியமர்ந்தனர். அரச படையினர் களப்பின் தெற்குப் பகுதியில் பாசறை அமைத்துத் தங்கியிருந்தனர். குமரிமுனைக் களப்பில் இருந்த துறைமுகத்தில் பொருள்களை ஏற்றி இறக்கும் வேலை நடைபெற்றது. அதைவிட இக்களப்பின் பூலோக அமைப்பின் படி பெரும்புயல் காற்றிலும் கப்பல்களுக்கு பாதுகாப்பான ஓர் ஒதுக்கிடமாகவும் இத்துறைமுகம் பயன் பட்டது. இதன்படி கோமாரியில் பொ.ஆ.மு. 2ம், 1ம் நூற்றாண்டுகளில் முதன் முதலாக தமிழ் மக்கள் குடியேற்றம் நிகழ்ந்துள்ளது. எனவே கோமாரி கிராமத்தின் பாரம்பரியம் சுமார் 2100 ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கி யுள்ளது.

பொ.ஆ. 15ம் நூற்றாண்டில் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்கு வந்த கடற் பயணிகள் இலங்கையின் கிழக்குக் கரையில் நீண்ட முனையில் அமைந் திருந்த 'குமரிமுனை' எனும் துறைமுகத்தை தாம் கடந்து சென்றதாக தமது பயணக்குறிப்பில் எழுதியுள்ளனர். இதன்படி பொ.ஆ.மு. 2ம் நூற்றாண்டு முதல் ஐரோப்பியர் காலம் வரையான சுமார் 1700 ஆண்டுகளாக குமரிமுனை எனும் கோமாரி ஓர் துறைமுகமாக விளங்கியுள்ளது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பானமை

பொ.ஆ.மு. 1000 ஆண்டளவில் ஆதி தமிழர்கள் வாழ்ந்த பெருங்கற்கால குடியிருப்புகளில் பானமையும் ஒன்றாகும். உன்னரசுகிரியை மனுநேயகயபாகு எனும் மன்னன் ஆட்சி செய்த காலத்தில் அழகிய ஓர் பெண்குழந்தை பேழையுடன் கடற்கரையில் ஒதுங்கிய இடம் இப்பானமையாகும். அக்குழந்தையை எடுத்து வளர்த்த மன்னன் இவ்விடத்திற்கு குழந்தையின் நினைவாக ''பாலர் நகை'' எனப் பெயரிட்டதாகவும், இப்பெயரே பானகை என மருவி பின்பு பானமை என அழைக்கப்பட்டதாகவும் மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது.

சுமார் 3000 ஆண்டுகள் பழமை வாய்ந்த இவ்வூரில் பொ.ஆ.மு. 500ம் ஆண்டளவில் மக்கள் குடியமர்த்தப்பட்டதாகத் தெரியவருகிறது. யாழ்ப்பாண வரலாற்றுக் குறிப்புக்களின் படி உசுமன் என்பவன் தலைவனாக இருந்த மீனவர் குலமொன்று பண்டுவாசுதேவன் காலத்தில் அங்கிருந்து வெளியேற்றப் பட்டதாகவும், இவர்கள் பானகையில் குடியமர்ந்ததாகவும் தெரியவருகிறது. இதன் பின்பு பொ.ஆ. 1ம் நூற்றாண்டில் ஆடகசவுந்தரியின் காலத்தில் இங்கு மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

## கரவாகு

கல்முனையிலிருந்து காரைதீவுக்குச் செல்லும் வழியில் 2 கி.மீ. தூரத்தில் கரவாகு அமைந்திருந்தது. பொ.ஆ.மு. 3ம் நூற்றாண்டில் இலங்கையை ஆட்சி செய்த தமிழ் மன்னர்களான சேனன், கூத்திகன் ஆகியோர் சேர நாட்டிலிருந்து வந்தவர்கள் என வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. இக்காலப்பகுதியில் பெருமளவு தமிழர்கள் மட்டக்களப்புப் பகுதியில் குடியமர்த்தப்பட்டனர். கூத்திக மன்னன் மட்டக்களப்பு எனும் புராதன காலத்து சம்மாந்துறையில் ஓர் கோடை வாசல்தலத்தை அமைத்து அங்கு மக்களையும் குடியமர்த்தினான். அப்போது சேர நாட்டின் பெரும் படைவீரர்களாக விளங்கிய பணிக்கர் குலத்தவர்கள் இப்பகுதியில் குடியமர்த்தப்பட்டனர். இவர்களில் சிலர் கரவாகு பகுதியிலும் குடியமர்த்தப் பட்டனர். இதன்படி கரவாகு பிரதேசம் சுமார் 2300 வருடங்களுக்கு முன்பு தோற்றம் பெற்ற பழமை வாய்ந்த கிராமமாகும். கேரள மாநில ஆய்வாளரான கிருஸ்ண ஐயரும் கூத்திகன் காலத்தில் மட்டக்களப்பு பகுதியில் படைவீரர்களான பணிக்கர் குடியினர் குடியமர்த்தப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொ.ஆ. 2ம் நூற்றாண்டில் கண்ணகிக்கு சிலையெடுத்த விழாவில் கலந்து கொண்டு சேரநாட்டிலிருந்து கண்ணகி அம்மன் சிலைகளுடன் இலங்கைக்கு வந்த கஜபாகு மன்னன் தான் வரும்போது பெருமளவு சேரநாட்டுக் குடிகளையும் அழைத்து வந்தததாக வரலாறுக் குறிப்புகள் கூறுகின்றன. இவர்கள் கரவாகு பகுதியிலும் குடியமர்த்தப்பட்டதாக ஆய்வுகள் கூறுகின்றன.

எனவே கரவாகு 2300 வருட பாரம்பரியமிக்க கிராமம் என்பது மேற் குறிப்பிட்ட குடியேற்றங்கள் மூலம் நிரூபணமாகிறது. வரலாற்றுக் குறிப்புகளின் படி இங்கிருந்த பழமையான ஆலயமான ஐயனார் ஆலயம் சுமார் 500 வருட வரலாற்றைக் கொண்டதாகும். கூத்திக மன்னன் காலத்தில் பணிக்கர் குடியினரால் கரவாகு கிராமத்தில் அமைக்கப்பட்ட ஆதி ஆலயம் போர்த்துக் கேயர் அல்லது ஒல்லாந்தர் காலத்தில் அழிக்கப்பட்டிருக்கலாம் என நம்பப் படுகிறது. கரவாகு ஐயனார் ஆலயம் போர்த்துக்கேயர் இங்கு வருவதற்கு சற்று முந்திய காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தாலும் இது திறந்தவெளி மரத்தடிக் கோயிலாக இருந்திருக்க வேண்டும்.

பழம்பெரும் தமிழ்க்கிராமமான கரவாகு எனும் பெயரிலேயே இப்பிரதேசம் கரவாகு பற்று என தனிப்பிரிவாக உருவாக்கம் பெற்றது. அம்பாறை மாவட்டம் தனி மாவட்டமாக பிரிக்கப்படுவதற்கு முன்பு மட்டக் களப்பு மாவட்டத்தில் இருந்த 13 பிரிவுகளில் கரவாகு பற்றும் ஒன்றாகும். இவற்றில் 7 பிரிவுகளை உள்ளடக்கியதாக அம்பாறை மாவட்டம் உருவான பொது அதிக சனத்தொகையைக் கொண்ட மிகச் சிறிய நிலப்பரப்பாக கரவாகு பற்று விளங்கியது. 1891ம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின் படி 22,059 பேரும், 1921ம் ஆண்டு மதிப்பீட்டின் படி 27,202 பேரும் இப்பிரிவில் வாழ்ந் துள்ளனர். இக்கணக்கெடுப்பின்படி 14,840 முஸ்லீம் மக்களும், 12,048 தமிழ் மக்களும், 121 சிங்கள மக்களும் கரவாகு பற்று பிரிவில் வாழ்ந்துள்ளனர். இது 54.5 சதவீத முஸ்லீம் மக்களையும், 44.3 சதவீத தமிழ் மக்களையும், 0.4 சதவீத சிங்கள மக்களையும் கொண்டதாகும்.

1921ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி கரவாகு பற்று பிரிவில் காரைதீவு, சல்லித்தீவு, நற்பிட்டிமுனை தெற்கு, பாண்டிருப்பு, சேனைக் குடியிருப்பு, துறைவன்னியாமடு, துறை நீலாவணை, பெரிய நீலாவணை, சாய்ந்தமருது தமிழ்ப்பிரிவு ஆகிய இடங்களில் இந்துக்கள் அதிகளவில் இருந்துள்ளனர். இவ்விடங்களைத் தவிர கல்முனை நகரில் 1967 இந்துக்கள் இருந்ததாகவும் கணக்கெடுப்பு கூறுகிறது. இது தற்போதைய கல்முனை, கல்முனைக்குடி ஆகிய இடங்களை உள்ளடக்கிய பகுதியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த 1967 இந்துக்களில் அதிகளவு இந்து மக்கள் வாழ்ந்த இடம் ஐயனார் கோயில் அமைந்திருந்த அன்றைய கரவாகு கிராமம் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. தற்போது கல்முனைக் குடி எனப் பெயர் பெற்றுள்ள இடமே பழம்பெரும் கிராமமான கரவாகு என இவ்விடத்திலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் கூறுகின்றனர்.

## மல்வத்தை

மல்வத்தை கிராமம் 2000 வருடங்களுக்கு மேற்பட்ட பாரம்பரியத்தை உடையதாகும். பொ.ஆ.மு. 177 - 155 வரை இலங்கையை ஆட்சி செய்த சேனன், கூத்திகன் ஆகிய மன்னர்களோடு இக்கிராமத்திற்கு தொடர்புள்ளது. சேனனின் நான்கு தலைமுறை சந்ததியினர் 230 வருடங்கள் மட்டக்களப்பு பகுதியை ஆட்சி செய்தனர். இவ்வாட்சிக் காலத்தின் போது அரசன் தன் சிற்றரசர்களை சந்திக்கும் இடங்களில் ஒன்று மலகவத்தை என்பதாகும். இவ்விடம் மல்வத்தை, மல்லிகைத் தீவு ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய பிரதேசம் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சேனனின் காலத்திலேயே இங்கு இந்து தெய்வ வழிபாடு தோற்றம் பெற்றுள்ளது. கோயில்கள் ஸ்தாபிக்கப்பட்டு பூஜிக்கப்பட்டுள்ளன. எனவே சேனன் காலத்தில் இது ஓர் சிற்றரசாக விளங்கியதோடு அரசனின் பிரதானி ஒருவனின் பரிபாலனத்தின் கீழும் இவ்விடம் விளங்கியுள்ளது.

பொ.ஆ. 8ம் நூற்றாண்டில் சோழ இளவரசியான சீர்பாத தேவியுடன் ஒற்றியூர், பெருந்துறை, கட்டு மாவட்டம் ஆகிய இடங்களிலிருந்து வந்தவர்களில் சிலர் இப்பகுதியில் குடிமயர்த்தப்பட்டனர்.

## கருங்கொடித்தீவு (அக்கரைப்பற்று)

தென்கிழக்கிலங்கையின் பண்டைய குடியேற்றங்களில் ஒன்றாக அக்கரைப்பற்று விளங்குகிறது. இற்றைக்கு 2300 ஆண்டுகளுக்கு முன்பு கலிங்க நாட்டின் புவனேஸ்வரத்திலிருந்து மட்டக்களப்புக்கு வந்த கலிங்கர் பின்பு அங்கிருந்து கருங்கொடித்தீவுப்பகுதிக்கு வந்து குடியேறியதாக ஆய்வுகள் கூறுகின்றன. எனவே கருங்கொடித்தீவின் முதல் குடியேற்றம் பொ.ஆ.மு. 2ம் அல்லது 1ம் நூற்றாண்டில் நிகழ்ந்திருக்கலாம் என நம்ப இடமுண்டு.

அதன்பின்பு பொ.ஆ. 1ம், 2ம், 4ம், 5ம் நூற்றாண்டு காலப்பகுதியிலும், பின்பு பொ.ஆ. 8ம், 9ம் நூற்றாண்டிலும் இங்கு மக்கள் குடியேறியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின்பு பொ.ஆ. 11ம் நூற்றாண்டில் சோழர் காலத்தில் இங்கு மக்கள் குடியேறியுள்ளனர். இதன்படி கருங்கொடித்தீவு சுமார் 2300 ஆண்டுகள் பழமை வாய்ந்த கிராமங்களில் ஒன்றாக விளங்குகிறது.

## பனங்காடு

அக்கரைப்பற்று நகரின் தெற்கில் சாகாமம் செல்லும் வீதியில் 4 கி.மீ தொலைவில் பனங்காடு கிராமம் அமைந்துள்ளது.

மட்டக்களப்பு தமிழகத்தில் சைவமும், தமிழும் செழிப்புடன் விளங்கி யிருந்த ஊர்களில் பனங்காடும் ஒன்றாகும். இப்பழம்பெரும் கிராமத்தின் வடக்கில் தில்லையாறு எனும் வற்றாத நதியும், கிழக்கில் பெரியகளப்பு வாவியும், தெற்கில் வாவியும், நீத்தை ஆறும், மேற்கில் பட்டிநகர், கவடா ஆகிய கிராமங்களும் எல்லைகளாக அமைந்துள்ளன. இக்கிராமம் புளியம் பற்றை, சிப்பித்திடல், கேணிக்கரை, வட்டைமடு, புட்டம்பை ஆகிய இடங் களை கொண்டுள்ளது. பனைமரங்கள் அதிகம் இருந்தபடியால் பனங்காடு என்ற பெயர் வந்ததாக கூறப்படுகிறது. வரலாற்று நூல்களில் 'பனோவா' எனக் குறிப்பிடப்பட்டுள்ள இடம் பனங்காடு கிராமமே என சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர். எனினும் பனோவா என்றழைக்கப்பட்டது பானமை பகுதியையே என குறிப்புகள் கூறுகின்றன. பொ.ஆ.மு. 137 - 119 வரை இலங்கையை ஆட்சி செய்த சத்தாதீசன் காலத்தில் பனங்காடு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாக இருந்தது. பொ.ஆ. 2ம் நூற்றாண்டில் தாடகிரி எனும் குறுநில இராச்சியம் நிலவிய காலத்தில் பட்டிப்பளை ஆற்றின் வடகரை வழியாக பனங்காடு விளங்கியுள்ளது. பனங்காட்டின் தெற்கில் சுமார் 7 கி.மீ தொலைவில் உள்ள சாகாமமே தாடகிரி அரசு எனக் கூறப் பட்டாலும், பனங்காடு கிராமத்தின் தெற்கில் சுமார் 3 கி.மீ தூரத்தில் உள்ள மொட்டைமலையே தாடகிரி என ஆய்வாளர் நவநாயக மூர்த்தி குறிப் பிட்டுள்ளார்.

பனங்காடு கிராமத்தில் இற்றைக்கு 2200 ஆண்டுகளுக்கு முன்பு பொ.ஆ.மு. 2ம் நூற்றாண்டில் மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இது சத்தாதீசன் தீகவாப்பி பகுதியை ஆட்சி செய்த காலமாகும். இதன் பின்பு பொ.ஆ. 1ம் நூற்றாண்டில் இக்கிராமத்தில் மக்கள் குடியேறியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரிய நீலாவணை

பொ.ஆ. 2ம் நூற்றாண்டில் சேரநாட்டில் நடந்த கண்ணகி விழாவில் கலந்து கொண்டு இலங்கைக்குத் திரும்பும் போது கஜபாகு மன்னன் சேரநாட்டி லிருந்து பணிக்கர் எனும் குலத்தவர்களை கிழக்கிலங்கையில் குடியமர்த் தியதாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. இவர்கள் குடியமர்த்தப்பட்ட இடங்களில் ஒன்றாக பெரிய நீலாவணை விளங்குகிறது. எனவே பெரிய நீலாவணையின் முதல் குடியேற்றம் பொ.ஆ. 2ம் நூற்றாண்டில் நிகழ்ந்துள்ளது. இக்காலப்பகுதியில் இங்கு நிலவிய வழிபாடு மற்றும் தெய்வம் பற்றிய தகவல்கள் கிடைக்கப் பெறவில்லை.

இன்று பெரிய நீலாவணையில் நாம் காணும் விஷ்ணு வழிபாடும், கோயிலும் பொ.ஆ. 15ம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றவையாகும். எனவே பொ.ஆ. 2ம் நூற்றாண்டு முதல் பொ.ஆ. 15ம் நூற்றாண்டு வரையான சுமார் 1300 வருடங்கள் இங்கு எந்த தெய்வத்திற்குரிய வழிபாடு நிலவியது என்பது ஆராயப்பட வேண்டியதாகும். பெரிய நீலாவணையின் ஆரம்ப குடியேற்ற காலத்தை வைத்துப் பார்க்கும் பொழுது இக்கிராமம் சுமார் 1800 வருடங்கள் பழமைவாய்ந்தது எனக் கூறலாம்.

பொ.ஆ. 1025ம் ஆண்டு சோழர் இலங்கையையும், தென்னிந்தியாவையும் ஆட்சி செய்து வந்த காலத்தில் கஜனிமுகம்மது வடஇந்தியாவிற்கு படை யெடுத்து வந்து ஏராளமான செல்வங்களைக் கொள்ளையடித்துச் சென்றான். இந்தியா மீது மீண்டும் மீண்டும் இவனது படையெடுப்புக்கள் நிகழ்ந்த போது ஏராளமான இந்தியர்கள் அகதிகளாயினர். இவர்களில் சிலர் படகுகள் மூலம் இலங்கையின் தென்கிழக்குக் கரைக்கு வந்து சேர்ந்து கண்டு முனையில் இறங்கினர். இக்கண்டு முனையே இன்றைய கல்முனை ஆகும்.

அப்போதிருந்த சோழரின் கிழக்குப் பிரதிநிதியான கதிர்சுதன் எனும் சிற்றரசன் அம்மக்களை நீலாவணைப் பகுதியிலும் குடியேற்றினான் என வரலாறு கூறுகிறது. எனவே சோழர் காலத்திலும் நீலாவணையில் மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

## பாண்டிருப்பு

பாண்டிருப்பில் பொ.ஆ.மு. 2ம் நூற்றாண்டில் கூத்திக மன்னன் காலத்தில் மக்கள் முதன்முதலில் குடியமர்த்தப்பட்டனர். மேலும் பொ.ஆ. 11ம் நூற்றாண்டில் சோழர் காலத்தில் பாண்டிருப்பு பகுதியில் கம்மாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியமர்ந்ததாக ஆய்வுகள் மூலம் தெரியவருகிறது. கம்மாளரை பொற் கொல்லர் என்றும் அழைப்பர். இவர்களின் வழிவந்த ஒருவரே பஞ்ச பாண்டவர் சிலைகளையும், திரௌபதி அம்மன் சிலையையும் இந்தியா விலிருந்து கொண்டு வந்து இங்கே ஆலயத்தை அமைத்ததாக ஜேம்ஸ் ஹாட்மன் கூறுவது உற்று நோக்கத்தக்கது.

பொ.ஆ. 13ம் நூற்றாண்டில் கலிங்க மாகோன் காலத்திலும் மக்கள் பாண்டிருப்பில் குடியேறியதாக ஆய்வுகள் கூறுகின்றன. இதன்படி பாண்டிருப்பு சுமார் 2200 வருட பாரம்பரியமிக்க கிராமமாகும். அதே சமயம் இன்று பாண்டிருப்பில் பிரசித்தி பெற்று விளங்கும் திரௌபதி அம்மன் வழிபாடு 400 வருடங்களக்கு முன்பே தோன்றியதாக வரலாறு கூறுகிறது.

பாண்டிருப்பில் 2200 வருடங்களுக்கு முன்பு குடியமர்த்தப்பட்ட மக்கள் கைக்கொண்ட வழிபாடும், வணங்கிய தெய்வமும் எது என்பது தெரியவில்லை இங்கிருந்த பண்டைய கோயில் ஐரோப்பியா ஆட்சியின்போது அழிக்கப்பட்டிருக்கலாம்.

## நற்பிட்டிமுனை

மட்டக்களப்பு மான்மியத்தில் நற்பிட்டி முனை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. கூத்திகன் மகன் சேனன் மட்டக்களப்பை ஆட்சி செய்து வந்த காலத்தில் இந்தியாவிலிருந்து தனது சந்ததியினரின் குடும்பங்களை வரவழைத்து மட்டக்களப்பின் பல பகுதிகளில் குடியமர்த்தியதாக மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. இக்காலப்பகுதியின் பின்பு இவனது நாலு தலைமுறையினர் 230 வருடங்கள் மட்டக்களப்பை ஆட்சி செய்து வந்ததாகவும், இக்காலப்பகுதியில் மட்டக்களப்பில் சிற்றரசர்கள் கூடும் பத்து இடங்களில் ஒன்றாக நாப்புட்டி என்னுமிடம் இருந்ததாகவும் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாப்புட்டி எனும் இடம் இன்றைய நற்பிட்டி முனை என அடையாளம் காணப்பட்டுள்ளது. சேனன், கூத்திகன் காலமான பொ.ஆ.மு. 177 - 155 காலப் பகுதியின் பின் 230 ஆண்டுகள் என்பது பொ.ஆ.மு. 155 முதல் பொ.ஆ. 75 வரையான காலப்பகுதியாகும். இக்காலப்பகுதியிலேயே நாப்புட்டி எனும் இடம் இருந்துள்ளது. இதன்படி இக்கிராமம் சுமார் 2000 வருடங்கள் பழமை வாய்ந்ததாகும். எனவே சேனன் காலத்தில் மக்கள் குடியமர்ந்த இடங்களில் நற்பிட்டி முனையும் ஒன்றாக இருக்கலாம். அத்துடன் இவ்விடம் ஓர் சிற்றரசாகவும் விளங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொ.ஆ. 11ம் நூற்றாண்டில் சோழர் காலத்தில் தமிழகத்திலுள்ள கோயம்புத்தூர் பகுதியிலிருந்து வந்த தனக்காரர் என்றழைக்கப்படும் மக்கள் யாழ்ப்பாணத்தில் குடியமர்த்தப்பட்டதாகவும், அங்கிருந்து மட்டக்களப்புப் பகுதிக்கு வந்தவர்கள் குடியேறிய இடங்களில் நற்பிட்டி முனையும் ஒன்றாகும் எனவும் ஆய்வுக் குறிப்புகள் கூறுகின்றன. இதன்படி நற்பிட்டி முனைக் கிராமத்தில் கூத்திகன் காலத்திற்கு பின்பும் சோழர் காலத்தில் அல்லது அதற்கு சற்று பிற்பட்ட காலத்திலும் மக்கள் குடியேறியிருக்கலாம் என நம்ப இடமுண்டு.

## தீகவாபி

பொ.ஆ.மு. 6ம் நூற்றாண்டில் நாகர் வாழ்ந்த பண்டைய குடியிருப்புகளில் தீகவாப்பியும் ஒன்றாகும். புத்தபகவான் தனது மூன்றாவது விஜயத்தின் போது தீகவாப்பிக்கு வந்ததாக பாளி நூல்கள் கூறுகின்றன. அக்காலகட்டத்தில் தீகவாபியில் நாகர்களால் நாகவழிபாடு நிலவிய ஆலயமே இருந்தது. பாளி நூல்களில் இது நாகவிஹாரை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது நாகவழிபாடு செய்யப்பட்ட ஆலயம் என்பதே சரியானதாகும்.

எனவே சுமார் 2600 வருடங்களுக்கு முன்பு பூர்வீகமாக இங்கு நாகர் வாழ்ந்தனர் எனக் கூறலாம்.

## கவடா மலை

பொ.ஆ. 1ம் நூற்றாண்டில் உருவான பண்டைய இடங்களில் கவடா மலையும் ஒன்றாகும். பொ.ஆ. 28ம் ஆண்டில் மட்டக்களப்பை ஆட்சி செய்த பிரசின்ன சித்து மட்டக்களப்பு இராச்சியத்தின் தென்பகுதியில் ஓர் இராச்சியத்தை உருவாக்கி புவனேக கயபாகு எனும் மன்னனுக்குப் பரிசாகக் கொடுத்தான் எனவும், இந்த இராச்சியத்திற்கு புன்னரசுகிரி எனப் பெயரிட்டதோடு கவடா மலையில் ஓர் மாளிகையையும் அமைத்துக் கொடுத்ததாகவும் மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது.

இதில் குறிப்பிடப்பட்டுள்ள கவடா மலை என்பது அக்கரைப்பற்றின் தெற்கில் அமைந்துள்ள பனங்காடு கிராமத்தின் தென்மேற்கில் அமைந்துள்ள கண்ணகிபுரம் முருகன் மலையைக் குறிப்பதாகும் என ஆய்வுகள் மூலம் தெரிய வருகிறது. பண்டைய காலத்தில் இது கபாடமலை என்ற பெயரையே கொண்டிருந்தது. கபாடம் என்பது வாயில் எனப் பொருள்படும். அதாவது மட்டக்களப்பு இராச்சியத்திலிருந்து பிரிக்கப்பட்டு புதிய இராச்சியமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கப்பட்ட புன்னரசுகிரி இராச்சியத்தின் வாயில் பகுதியே கபாட மலையாகும். எனவே தான் பிரசின்னசித்து இம்மலையில் மாளிகையை அமைத்து புவனேக கயபாகுவுக்கு கொடுத்துள்ளான். இங்கிருந்து கும்புக்கன் ஆறு வரை புன்னரசுகிரி இராச்சியம் இருந்துள்ளது. புன்னரசுகிரி என்பதே பின்பு உன்னரசுகிரி என அழைக்கப்பட்டுள்ளது. கபாட மலை எனும் பெயர் பிற்காலத்தில் திரிபடைந்து கவாடமலை எனவும் பின்பு கவடா மலை எனவும் அழைக்கப்பட்டுள்ளது.

பிரசின்னசித்து கபாடமலையில் அமைத்த மாளிகையின் எச்சங்களை இன்றும் மலையில் நாம் காணக்கூடியதாக உள்ளது. இம்மலை உச்சியில் பண்டைய காலம் முதல் முருகவேல் வழிபாடு நிலவியுள்ளது. இம்மலையைச் சுற்றி குடியிருப்புகள் அமைக்கப்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே கவடாமலை சுமார் 1900 வருடங்கள் பழமைவாய்ந்த இடமாகும்.

## சவளக்கடை

சவளக்கடை கிராமம் பொ.ஆ. 5ம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றதாக குறிப்புகள் மூலம் தெரியவருகிறது. மண்முனை இராச்சியத்தை ஆட்சி செய்த உலகநாச்சி எனும் இளவரசி காலத்தில் இக்கிராமம் உருவாகியுள்ளது. பொ.ஆ. 13ம் நூற்றாண்டில் கிழக்கிலங்கைப் பகுதியில் பல திருப்பணிகளைச் செய்த கலிங்க மாகோன் காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து வந்த மக்களை சவளக்கடையில் குடியமர்த்தியதாக ஆய்வுகள் கூறுகின்றன.

சவளக்கடை கிராமம் தோற்றம் பெற்ற காலத்திலேயே இங்கே ஆலயமும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. ஆனால் இவ்வாலயம் போர்த்துக்கேயர் காலத்தில் அழிக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. ஏனெனில் இன்று நாம் காணும் ஆலயம் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பு தோற்றம் பெற்றதாகும். இருப்பினும் இக்கிராமம் சுமார் 1500 ஆண்டுகள் பழமையானதாகும்.

## நாவிதன்வெளி

நாவிதன்வெளி கிராமம் பொ.ஆ. 5ம் நூற்றாண்டளவில் உலக நாச்சியின் காலத்தில் தோற்றம் பெற்றதாகக் கூறப்படுகிறது. இக்காலப்பகுதியில் இந்தியா விலிருந்து வந்த மக்கள் இப்பகுதியில் குடியமர்த்தப்பட்டதாக ஆய்வுகள் கூறுகின்றன. இக்காலப்பகுதியிலேயே மக்கள் இங்கு ஓர் ஆலயத்தை அமைத்து பூஜித்து வந்துள்ளனர். பொ.ஆ. 8ம் நூற்றாண்டில் சீர்பாததேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்திலும் இங்கு இன்னுமோர் குடியேற்றம் நிகழ்ந்ததாக ஆய்வுகள் கூறுகின்றன.

எனவே நாவிதன்வெளி கிராமமும் இங்கு அமைக்கப்பட்டிருந்த கோயிலும் சுமார் 1500 வருட பாரம்பரியமிக்கவையாகும். அதேசமயம் இக்கிராமத்தில் மக்கள் குடியேறிய போது அவர்களின் வழிபாட்டுத் தேவைக்காக அமைத்த ஆலயம் எந்தத் தெய்வத்திற்குரியது எனவும் இது கிராமத்தில் எங்கு அமைந்திருந்தது என்பதும் தெரியவில்லை. இக்கோயில் போர்த்துக்கேயர் அல்லது ஒல்லாந்தர் காலத்தில் அவர்களால் அழிக்கப் பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

## வளத்தாப்பிட்டி

அம்பாறையிலிருந்து கல்முனைக்குச் செல்லும் வீதியில் வளத்தாப்பிட்டி கிராமம் அமைந்துள்ளது. இது சுமார் 1000 ஆண்டுகள் பழமை வாய்ந்த கிராமமாகும். வீரமுனை சிந்தாத்திரி பிள்ளையார் கோயிலுக்கு நெற்களனி களை மானியமாக வழங்கிய வாலசிங்க மன்னன் இவற்றிற்கு நீர்பாசனம் வழங்குவதற்காக வளத்தாப்பிட்டியில் ஓர் குளத்தை அமைத்து வீரமுனையி லிருந்த மக்களில் சிலரை குடியமர்த்தியதாகவும், இம்மக்கள் ஆலய நெற்காணி களில் விவசாயம் செய்து இப்பகுதியை வளப்படுத்தியதோடு இதில் வரும் இலாபத்தை ஆலயத்திற்கும் அனுப்பி வந்தனர். எனவும் ஆய்வுகள் மூலம் தெரியவருகிறது.

## மல்லிகைத்தீவு

அம்பாறை - கல்முனை வீதியில் உள்ள மல்வத்தையின் தெற்கில் 3 கி.மீ தூரத்தில் மல்லிகைத் தீவு கிராமம் அமைந்துள்ளது. பொ.ஆ. 9ம் நூற்றாண்டில் வீரமுனை சிந்தாத்திரி பிள்ளையார் ஆலயத்திற்கு இப்பகுதியில் உள்ள நிலங்களை மானியமாக எழுதிக் கொடுத்த வாலசிங்கன் எனும் மன்னன், வீரமுனையிலிருந்த மக்களில் சிலரை விவசாயம் செய்யும் பொருட்டு மல்லிகைத்தீவில் குடியமர்த்தினான். இதன்படி இக்கிராமம் சுமார் 1000 வருடங்கள் பழமை வாய்ந்ததாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேனைக்குடியிருப்பு

சேனைக்குடியிருப்பு கிராமம் பழமை வாய்ந்தது என்பதை வரலாற்று ஆய்வுக் குறிப்புகளின் மூலமாக பெறக் கூடியதாக உள்ளது. இக்கிராம மக்கள் வீரமுனைப் பகுதியிலிருந்து இங்கு வந்ததாக அறியப்படுகிறது. வீரமுனைக் கிராமத்தில் குடியேறிய மக்களில் சிலர் சில காலத்தின் பின்பு வீரமுனையிலிருந்து அருகிலிருந்த வேறு சில இடங்களுக்குச் சென்று குடியமர்ந்ததாகவும் தெரியவருகிறது.

சேனைக்குடியிருப்பு கிராமம் பொ.ஆ. 9ம் அல்லது 10ம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றிருக்கலாம். அல்லது இதற்கு சற்று பிற்பட்ட காலத்தில் கூட இக்கிராமம் உருவாகியிருக்கலாம். எனவே சேனைக்குடியிருப்பு கிராமம் சுமார் 1000 அல்லது 800 ஆண்டுகள் பழமை வாய்ந்தது என நம்ப இடமுண்டு.

## கல்முனை

கல்முனைப் பகுதியில் 1000 வருடங்களுக்கு முன்பு தமிழ் மக்கள் குடியமர்ந்து வாழ்ந்து வந்தமை பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் காணப்படுகின்றன. பொ.ஆ. 998 - 1030 வரையான காலப்பகுதியில் வட இந்தியாவை கஜனி முகம்மது பல தடவைகள் படையெடுத்து பல கோயில்களில் இருந்த செல்வங்களை சூறையாடியபோது வட இந்தியாவிலிருந்த இந்துக்கள் துன்புறுத்தப்பட்டனர். இக்கால கட்டத்தில் வடமதுரையிலிருந்து பலர் படகுகள் மூலம் பல்வேறு இடங்களுக்கு குடிபெயர்ந்தனர். இவர்கள் சிலர் படகுகள் மூலம் இலங்கையின் தென்கிழக்குக் கரையில் உள்ள கண்டுமுனையில் வந்து சேர்ந்து அங்கு குடியமர்ந்ததாகவும், இவர்கள் குகவம்சத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் ' மட்டக்களப்பு மான்மியம்' மற்றும் ' மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி' போன்ற நூல்கள் விபரிக்கின்றன.

இக்கண்டுமுனை எனும் ஊர் படகுகள் வந்து தரித்துச் செல்லும் வகையில் ஓர் முனையும் அதை ஒட்டிய சிறிய குடாவாகவும் இருந்த படியால் இது ஓர் சிறிய படகுத்துறையாக உருவாக்கம் பெற்று வடமதுரை வர்த்தகர்களின் வணிகப்படகுகளும் போக்குவரத்து செய்யும் வண்ணம் மாற்றம் பெற்றது. கடலோரத்திலே கற்புட்டிகள் திரண்டு நிறைந்து காணப்பட்ட முனையாக இருந்தபடியால் 'கண்டுமுனை' என இவ்விடம் பெயர் பெற்று விளங்கியது. காலப்போக்கில் இப்பகுதியில் ஏற்பட்ட கடலரிப்பின் காரணமாக இம் முனையும், குடாவும் கடல்நீரில் மூழ்கியதோடு கற்புட்டிகளும், திடர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிக்கப்பட்டு கடலில் மூழ்கி மறைந்துவிட்டன. இருப்பினும் கடலின் அடியில் இப்பாறைத்திடர்கள் இன்னும் நிறைந்து காணப்படுகின்றன. பண்டைய காலம் முதல் அண்மைக்காலம் வரை இக்கரையோரத்திற்கு வரும் சிறிய கப்பல்களும், படகுகளும் இப்பாறைப்புட்டிகளுக்குள் இறுகி நகர முடியாமல் கடலுள் மூழ்கியுள்ளன. சுமார் 20 வருடங்களுக்கு முன்பு இப்படி மூழ்கிய ஒரு கப்பலின் உச்சிப் பகுதியை கரையிலிருந்து பார்க்கக் கூடியதாக இருந்தது.

இந்தியாவின் வடமதுரையிலிருந்து மக்கள் தென்கிழக்குக் கரையோரத்தில் குடிபெயர்ந்த காலப்பகுதியில் இலங்கையில் சோழர் ஆட்சி நிலவி வந்தது. சோழர்களில் அரசுப் பிரதிநிதியான கதிர்சுதன் உன்னரசுகிரியிலிருந்து தென்கிழக்கிலங்கைப் பகுதியை ஆட்சி செய்த காலமிது. இவனே இந்தியா விலிருந்து அகதிகளாக குடிபெயர்ந்த மக்களை கண்டு முனையில் குடிய மர்த்தியதாக வரலாற்றுக் குறிப்புகள் மூலம் தெரியவருகிறது. அத்துடன் கண்டுமுனை துறைக்கும், சோழநாட்டுக்குமிடையில் வர்த்தகத் தொடர்புகளும், போக்குவரத்தும் நடைபெற்றதாகவும் அறியக்கூடியதாக உள்ளது. இதன் மூலம் கண்டுமுனைப் பகுதியில் தமிழர்களின் குடியேற்றம் அதிகரித்ததாகவும், இங்கு சைவசமயம் சிறப்புற்று விளங்கியதாகவும் 'ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள்' எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழும், சைவமும் செழிப்புற்று விளங்கிய இக்கண்டுமுனை காலப்போக்கில் 'கல்லேறுமுனைத்துறை' என அழைக்கப்பட்டு இன்று 'கல்முனை' எனச் சுருக்கம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. பண்டைய வரலாற்றுச் சிறப்பைக் கொண்ட இக்கண்டு முனையில் பல சைவக் கோயில்கள் சோழர் காலத்தில் அமைக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. ஏனெனில் இப்பகுதியை ஆட்சி செய்த சோழர் பிரதிநிதியான கதிர்சுதன் சைவ சமயத்தையும், பௌத்த சமயத்தையும் பேணிப் பாதுகாத்ததோடு பல சிவாலயங்களையும், பௌத்த ஆலயங்களையும் அமைத்ததாகவும் மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. எனவே இவனால் கண்டு முனையில் சைவ மக்கள் குடியமர்த்தப்பட்ட போது இங்கு சைவக் கோயில்கள் அமைக்கப்பட்டிருக்கலாம் என எண்ண இடமுண்டு. தென்கிழக்கி லங்கையில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் போன்ற அந்நியர்களால் பானமை முதல், மட்டக்களப்பு வரையுள்ள இந்துக் கோயில்கள் அழிக்கப்பட்ட வேளை கண்டு முனையில் இருந்த கோயில்கள் அழிக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னமலை

கல்முனை நகரின் வடமேற்கில் அன்னமலை கிராமம் அமைந்துள்ளது. வரலாற்று ஆய்வுகள் மூலம் இக்கிராமம் பொ.ஆ. 11ம் நூற்றாண்டில் சோழர் காலத்தில் தோற்றம் பெற்றதாகக் கூறப்படுகிறது. மேலும் சில அறிஞர்கள் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் அன்னமலையில் மக்கள் குடியேறியதாகக் கூறுகின்றனர். எனினும் இக்கிராமத்திலோ அல்லது ஆலயத்திலோ அத்தனை மிகப்பழமைவாய்ந்த சின்னங்கள் எதுவும் காணப்படவில்லை. இருப்பினும் சோழர் காலத்தில் இக்கிராமம் உருவாகியிருக்கலாம் என எண்ணக் கூடியதாக உள்ளது. இக்காலப்பகுதியில் இங்கு அமைக்கப்பட்டிருந்த ஆலயம் போர்த்துக் கேயரால் அழிக்கப்பட்டிருக்கலாம். எனவே இக்கிராமம் சுமார் 1000 வருட வரலாற்றைக் கொண்டது எனலாம்.

## கோரக்களப்பு

திருக்கோயிலுக்கு தெற்கில் சுமார் 2 கி.மீ தூரத்தில் கோரக்களப்பு எனும் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் பொ.ஆ. 13ம் நூற்றாண்டில் மாகோன் காலத்தில் திருக்கோயில் ஆலயப் பணிகளுக்காக ‘கலிங்க வேளாளர்’ குலத்தவர்கள் குடியமர்த்தப்பட்டனர். இதன்படி கோரக்களப்பு சுமார் 700 வருடங்கள் பழமை வாய்ந்த கிராமமாகும்.

## கோளாவில்

அக்கரைப்பற்றின் தெற்கில் அமைந்துள்ள கோளாவில் கிராமத்தில் பொ.ஆ. 11ம் நூற்றாண்டில் சோழர் காலத்தில் மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இதன்படி கோளாவில் கிராமம் 900 ஆண்டுகள் பழமைவாய்ந்த கிராமமாகும்.

## அறுகம்குடா களப்பு

பொத்துவில் நகரின் தெற்கில் அறுகம்குடா களப்பு அமைந்துள்ளது. இக் களப்பு இராவணன் காலம் முதல் ஒல்லாந்தர் காலம் வரை ஓர் துறைமுகமாக விளங்கியுள்ளது. பொ.ஆ.மு. 2ம் நூற்றாண்டில் மட்டகளப்பை ஆட்சி செய்த கூத்திகளின் மகன் சேனன் காலத்தில் மன்னன் தன் சிற்றரசர்களை சந்திக்கும் இடங்களில் ஒன்றாக அறுகமணப்பூமனை என்னுமிடம் விளங்கியதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. அறுகமனப்பூமனையே இன்றைய அறுகம்குடா என அடையாளம் காணப்பட்டுள்ளது.

எனவே இக்காலப்பகுதியில் அறுகம்குடா ஓர் குடியிருப்பாக இருந்திருக்க வேண்டும். இது ஓர் சிற்றரசனால் பரிபாலிக்கப்பட்டிருக்க வேண்டும். இதன்படி அறுகம்குடா சுமார் 2200 வருடம் பழமையான கிராமமாகும்.

## சொறிக்கல்முனை

வீரமுனையிலிருந்து மண்டூருக்கு செல்லும் வழியில் சொரிக்கல்முனை அமைந்துள்ளது. இக்கிராமம் பொ.ஆ. 8ம் நூற்றாண்டில் சீர்பாததேவி எனும் இளவரசியுடன் வந்த பரமன் என்பவன் மூலம் உருவாகியுள்ளது. இவன் கொண்டு வந்த மாகாளி அம்மன் சிலை இங்கு ஸ்தாபிக்கப்பட்டு ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. இதன்படி சொறிக்கல்முனை கிராமம் சுமார் 1200 வருடங்கள் பழமை வாய்ந்ததாகும்.

## செங்கட்படை

சம்மாந்துறையிலிருந்து இறக்காமத்திற்குச் செல்லும் வழியில் செங்கட்படை எனும் பண்டைய கிராமம் அமைந்துள்ளது. நிந்தவூரின் அருகில் உள்ள அரசடி சந்தியிலிருந்து மேற்குப் பக்கமாக உள்ள மல்கம்பிட்டி ஊடாகவும் செங்கட்படைக்குச் செல்லலாம்.

பொ.ஆ.மு. 2ம் நூற்றாண்டில் இப் பகுதியை ஆட்சி செய்த கூத்திகனின் முக்கிய ஆட்சிப் பிரதேசமாக செங்கட்படை, மல்கம்பிட்டி போன்ற இடங்கள் விளங்கியுள்ளன. இதன்படி இக்கிராமத்திற்கு 2200 வருட பாரம்பரியம் உள்ளது. செங்கட்படை கிராமத்தைச் சுற்றி ஓடும் ஆறுகள் இப் பகுதியை வளப்படுத்தியதால் இக்கிராமம் என்றும் செழிப்புடன் காணப்பட்டது. கல்லோயா ஆற்றுக்கும், மொறவில் ஆற்றுக்கும் இடையில் இக்கிராமம் அமைந்துள்ளது. செங்கட்படையில் கல்லோயா ஆற்றிலிருந்து பிரிந்து செல்லும் குடப்பெனி ஆறும், மொறவில் ஆற்றிலிருந்து பிரிந்து செல்லும் குருநல்கந்தி ஆறும், கல்லோயா ஆற்றுடன் இணையும் உடங்கை ஆறும், ஆலடி ஓடை எனும் சிற்றாரும் இப் பகுதியை வளப்படுத்தி செங்கட்படை கிராமத்தை பசுமையாக வைத்துள்ளன. மேலும் இவ்வாறுகளை மறித்துக் கட்டியுள்ள செங்கட்படை அணைக்கட்டு, வீரையடி அணைக்கட்டு, குருநல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தி அணைக்கட்டு, பட்டம்பிட்டி அணைக்கட்டு ஆகியவற்றின் மூலம் நீரைத் தேக்கி இப்பகுதியை பொன் விளையும் பூமியாக மாற்றியுள்ளனர்.

செங்கற்படை, மல்கம்பிட்டி ஆகிய இடங்களில் வடக்குப் பக்கத்தில் வீரமுனைக்குத் தெற்கில் கூத்திக மன்னின் கோட்டை இருந்ததாக நம்பப்படும் கைகாட்டி மலை அமைந்துள்ளது. பண்டைய மட்டக்களப்பு இராச்சியத்தின் கோட்டைப் பகுதி இருந்த இம்மலையில் உள்ள கற்பாறைகள் உடைக்கப்பட்டு கற்கள் எடுக்கப்படுவதால் பண்டைய இராஜதானியின் தொல்பொருட் சின்னங்களும் உருத்தெரியாமல் அழிந்து போகின்றமை கவலைக்குரிய விடயமாகும். இதுவே ஓர் சிங்கள மன்னனின் பண்டைய இராச்சியமாக இருந்தால் இது போன்ற நிலைமை ஏற்பட்டிருக்குமா?

இம் மலைப் பகுதியிலேயே லக்ஸ்மி வடிவம் பொறிக்கப்பட்ட புராதன பாண்டியர் காலத்து நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## நாக பர்வதமலை (பம்பரகஸ்தலாவை)

உகந்தையின் தென்மேற்கில் சுமார் 10 கி.மீ. தொலைவில் நாகபர்வதமலை அமைந்துள்ளது. நாகமலை பகுதியில் சுமார் 500 ஏக்கர் பரப்பளவில் அடர்ந்த காட்டின் நடுவில் புராதன கட்டிட இடிபாடுகள் காணப்படுகின்றன. பம்பரகஸ்தலாவ மலை மீதும், அடிவாரத்திலும், மலையைச் சுற்றிய பகுதி களிலும் இவை காணப்படுகின்றன. கற்தூண்களும், புராதன செங்கற்களும் ஆங்காங்கே தெரிகின்றன. மலை அடிவாரத்திலிருந்து உச்சிக்கு செல்வதற்கான கற்படிகள் செதுக்கப்பட்டுள்ளன. இவை இடையிடையே மறைந்து உள்ளன. மலையடி வாரத்தில் கற்தூண்களை மட்டும் கொண்ட கட்டிட அத்திவாரங்கள் சிலவும் காணப்படுகின்றன. இப் பகுதியில் மலையாறு எனும் சிற்றாறு ஒன்றுக்கு குறுக்கே கட்டப்பட்ட புராதன அணைக்கட்டின் சிதைவுகளும் காணப்படுகின்றன. இவை யாவும் பண்டைய காலத்தில் இங்கு செல்வாக்குப் பெற்றிருந்த நாகர் குடியிருப்பின் அடையாளங்களாகும்.

## மேலும் சில பண்டைய கிராமங்கள்

பொ.ஆ. 13 ஆம் நூற்றாண்டில் இலங்கையின் பெரும்பகுதியை ஆட்சி செய்த கலிங்க மாகோன் தென்னிந்தியாவில் உள்ள புத்தூர், மருங்கூர், கரைக்கால் ஆகிய இடங்களிலிருந்து வந்த மக்களை தென்கிழக்கிலங்கையில் சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்களில் குடியமர்த்தியதாக முக்குகர் வன்னிமை பற்றிய கல்வெட்டுப் பாடல் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. இவர்கள் அம்பாறை நகரிலிருந்து அக்கரைப்பற்றுக்குச் செல்லும் வழியில் உள்ள இடங்களில் குடியமர்த்தப்பட்டனர். அக்கிராமங்களாவன : பெரிய கல்மடு, (கல்மடு) முதலி மூவாங்கல்லு (முவாங்கலை) பள்ளச்சேனை (வரிப்பத்தாஞ்சேனை) ஆகியவையாகும்.

மேலும் கூமுனை, பொத்துவில், சாகாமம், தமனை, அம்பாறை, உகனை, சாய்ந்தமருது, பக்கிஎல்லை, வீரக்கொடை, மகாஓயா, பதியத்தலாவை, காளிஓடை, கஞ்சிக்குடிச்சாறு, குடுவில், குடும்பிமலை, கோயில் மடு (இறக்காமத்தின அருகில் இருந்தது) ஆண்டிமடு (மாணிக்கமடு அருகில் இருந்தது.) ஆகிய கிராமங்களும் பண்டைய கிராமங்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

# பிராமிக் கல்வெட்டுக்கள்

இலங்கையில் மொத்தமாக சுமார் 1500 பிராமிக் கல்வெட்டுக்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் தென் கிழக்கிழங்கையில் சுமார் 225 பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. பேராசிரியர் எஸ். பரணவித்தான மற்றும் பூஜ்ய எல்லாவெல மேதானந்த தேரர் ஆகியோர் பெருந்தொகையான கல்வெட்டுக்களை கண்டுபிடித்துள்ளனர்.

இவற்றில் இந்து தெய்வங்கள், தமிழர், பிராமணர், இந்துத் துறவிகள் ஆகியவை பற்றிய சுமார் 125 பிராமிக்கல்வெட்டுக்கள் அம்பாறை மாவட்டத்தில் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுக்களில் 105 கல்வெட்டுக்கள் பற்றிய விபரங்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

## தென்கிழக்கிலங்கையில் 2000 ஆண்டுகளுக்கு முன்பு தமிழர் வாழ்ந்தது பற்றி கூறும் பிராமிக் கல்வெட்டு

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கிழக்கு மாகாணம் தமிழர்கள் வாழ்ந்த பூர்வீகப்பிரதேசம் என்பதற்கு மிக முக்கிய சான்றாக விளங்குவது இப்பகுதியில் பொறிக்கப்பட்டுள்ள பிராமிக் கல்வெட்டுக்களாகும். இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பிராமிக் கல்வெட்டுக்களில் தமிழர் எனப் பொறிக்கப்பட்டுள்ள 5 கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவற்றில் இரண்டு கல்வெட்டுக்கள் கிழக்கு மாகாணத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

திருகோணமலையில் உள்ள சேருவில என்னுமிடத்தில் பொறிக்கப்பட்டுள்ள ஓர் கல்வெட்டில் இங்கிருந்த தமிழ் குடியிருப்பாளன் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அடுத்த கல்வெட்டு அம்பாறை மாவட்டத்தில் உள்ள குடுவில் என்னுமிடத்தில் காணப்படுகிறது. இக்கல்வெட்டில் இங்கிருந்த தமிழ் வணிகன் பற்றி குறிப்பிடப் பட்டுள்ளது.

பொ.ஆ. 2 ஆம் நூற்றாண்டில் சேருவில கல்வெட்டும், பொ.ஆ.மு. 1ம் நூற்றாண்டில் குடுவில் கல்வெட்டும் பொறிக்கப்பட்டுள்ளன. சேருவில கல்வெட்டு மாலினி டயஸ் பதிப்பித்த Epigraphical Notes - Nos.1-18 எனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலில் 13-6 எனும் இலக்கத்திலும், குடுவில் கல்வெட்டு பேராசிரியர் பரணவித்தான பதிப்பித்த 'Inscription of ceylon - volume 1 - Early Brahmi Inscriptions' எனும் நூலில் 480 ஆம் இலக்க கல்வெட்டாகவும் பதிவு செய்யப் பட்டுள்ளது. இந்நூல்கள் இரண்டும் இலங்கை தொல்பொருட் திணைக் களத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டுக்கள் மூலம் 2000 வருடங்களுக்கு முன்பு கிழக்கிலங்கை தமிழர் வாழ்ந்த பகுதியாக விளங்கியுள்ளது என்பது உறுதியாகிறது. தமிழர் எனும் பெயரைத் தவிர வேறு எந்த இனத்தின் பெயரும் எந்த ஒரு பிராமிக் கல்வெட்டிலும் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## தென் கிழக்கிலங்கையில் இந்து தெய்வ வழிபாடு பற்றி கூறும் 41 பிராமிக் கல்வெட்டுக்கள்

கிழக்கு மாகாணத்தில் 2000 வருடங்களுக்கு முன்பிருந்தே இந்து தெய்வ வழிபாடுகள் நிலவியமைக்கான ஏராளமான சான்றுகள் காணப்படுகின்றன. இவற்றில் முக்கியமாக பிராமிக் கல்வெட்டுக்களைக் கூறலாம். கிழக்கில் மொத்தமாக 48 கல்வெட்டுக்களில் இந்து தெய்வங்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவை முறையே அம்பாறை மாவட்டத்தில் 41, மட்டக்களப்பு மாவட்டத்தில் 4 திருகோணமலை மாவட்டத்தில் 3 ஆகிய எண்ணிக்கையில் காணப்படுகின்றன. இவற்றில் சிவனின் பெயர் பொறிக்கப் பட்ட 18 கல்வெட்டுக்களும், நாகம் என்னும் பெயரில் 14 கல்வெட்டுக்களும், முருகன் பெயர் பொறிக்கப்பட்ட 4 கல்வெட்டுக்களும், திருமால், கண்ணன், மாயோன் ஆகிய பெயர்களில் 8 கல்வெட்டுக்களும், லக்ஸ்மி பெயர் பொறிக்கப்பட்ட 4 கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன. கிழக்கின் மூன்று மாவட்டங்களிலும் அம்பாறை மாவட்டத்திலேயே மிக அதிகளவில் பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இவற்றின் மூலம் தென்கிழக்கிலங்கையில் சிவவழிபாடும், முருகவழிபாடும், நாக வழிபாடும் 2000 வருடங்களுக்கு முன்பு சிறப்புற்று விளங்கியமை தெளிவாகத் தெரிகிறது. இவை பற்றி பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் ஈழத்து இந்து சமய வரலாறு எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துத் துறவிகள் மற்றும் பிராமணர்கள் பற்றிக் கூறும் 60 பிராமிக் கல்வெட்டுக்கள்

இவற்றைத் தவிர பிராமணர் மற்றும் சுவாமி ஆகிய பெயர்களில் பிராமிக் கல்வெட்டுக்களும் கிழக்கு மாகாணத்தில் காணப்படுகின்றன. அம்பாறை மாவட்டத்தில் சுவாமி எனப் பொறிக்கப்பட்டுள்ள 60 பிராமிக் கல்வெட்டுக் கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. பிராமணர் எனப் பொறிக்கப்பட்ட நான்கு பிராமிக் கல்வெட்டுக்கள் அம்பாறை மாவட்டத்தில் உள்ளன. திருகோணமலை மாவட்டத்தில் சுவாமி எனும் பெயரில் 02 கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. மொத்தமாக 68 கல்வெட்டுக்களில் பிராமணர், சுவாமி எனும் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்திலேயே இந்துத் துறவிகள் மற்றும் பிராமணர்கள் பெருமளவில் வாழ்ந்துள்ளனர் என்பது தெரிகிறது. இக்கல்வெட்டுக்கள் பற்றி பேராசிரியர் பரணவித்தான எழுதி இலங்கைத் தொல்பொருட் திணைக்களம் வெளியிட்ட 'Inscription of ceylon - volume 1' எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வெஹெரகல்கந்த, உகந்தை

உகந்தையின் மேற்குப்பக்கமாக சுமார் 16 கி.மீ தொலைவில் அடர்ந்த காட்டின் மத்தியில் வெஹெரகல்கந்த அமைந்துள்ளது. விஹாரேகல மலையிலிருந்து 4 கி.மீ தூரத்தில் இவ்விடம் உள்ளது.

இம்மலையிலுள்ள இரு கற்குகைகளில் இரண்டு தமிழ் பிராமிக் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பொ.ஆ.மு. 1ம் நூற்றாண்டுக்கும் பொ.ஆ. 2ம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பொறிக்கப்பட்ட இக்கல்வெட்டுக்களில் ஒன்று ''சிவனின் பாதுகாவலனின் குகை'' எனும் பொருளில் சிவரக்கித்தனின் குகை என பொறிக்கப்பட்டுள்ளது. இக்குகையின் அருகில் சிவவழிபாடு நிலவிய குகை அல்லது கோயில் அமைந்திருக்கலாம் எனவும் இதைப் பாதுகாத்தவனின் குகையிலேயே கல்வெட்டு பொறிக்கப் பட்டுள்ளமையும் உறுதியாகத் தெரிகிறது.

இம்மலையிலுள்ள இரண்டாவது கல்வெட்டு குடும்பத் தலைவனான சூளவின் குகை எனும் பொருளில் ''கஹபதி சூளவின் குகை'' எனக் கூறு கின்றது. கிருஹபதி எனும் சமஸ்கிருத சொல்லின் பிராகிருத வடிவமே கஹபதி என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே வெஹெரகல்கந்த மலைப்பகுதியில் சிவவழிபாடு நிலவியதோடு தமிழ்க் குடும்பத்தலைவன் வாழ்ந்திருந்தமையும் இக்கல்வெட்டுக்கள் மூலம் நிரூபனமாகின்றது. பேராசிரியர் பரணவித்தான இக்கல்வெட்டுக்களை பதிவு செய்துள்ளார். இவை இலங்கை தொல்பொருட் திணைக்கள நூலில் 536 537 ஆகிய இலக்கங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.



537

*சிவன் பெயர் பொறிக்கப்பட்டுள்ள வெஹெரகல்கந்த கல்வெட்டுக்கள் (No. 537)*

## தமண


அம்பாறையிலிருந்து சியம்பலாண்டுவைக்கு செல்லும்வீதியில் 18கி.மீ தொலைவில் தமன என்னும் கிராமம் அமைந்துள்ளது. பொ.ஆ.மு. 1ம் நூற்றாண்டு காலப்பகுதியில் இங்கு சிவவழிபாடு நிலவியமைக்கான ஆதாரங்கள் உள்ளன.

இங்குள்ள மலைப்பாறையில் உள்ள குகையில் இரண்டு தமிழ் பிராமிக் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இக் கல்வெட்டுக்களில் ஒன்றில் சிவனை வணங்குபவனின் குகை என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இங்கு ஓர் சிவ வழிபாடு நிலவிய ஆலயம் அல்லது கற்குகை அமைந்திருந்தது என யூகிக்கக் கூடியதாக உள்ளது.

இலங்கைத் தொல்பொருட் திணைக்களத்தினால் 1970 ஆண்டு பேராசிரியர் எஸ். பரணவித்தான மூலம் பதிவு செய்யப்பட்ட பிராமிக் கல்வெட்டுக்களில் இலக்கம் 478, 479 ஆகியவை தமனைக் கல்வெட்டுக் களாகும். இரண்டாவது கல்வெட்டு கிராமத்தின் முக்கிய ஆலோசகர் ''திச'' என்பவனைப் பற்றிய கல்வெட்டாகும். இங்கிருந்து கிழக்குப்பக்கமாக சுமார் 5கி.மீ தொலைவில் உள்ள இறக்காமத்திற்கு அருகில் உள்ள குடுவில் எனும் கிராமத்தில் ''திச'' எனும் தமிழன் பற்றிய கல்வெட்டு காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் மூலம் இப்பகுதியில் திச என்ற பெயரில் தமிழர்கள் வாழ்ந்திருந் தமை உறுதியாகிறது. எனவே தமனையில் 2000 வருடங்களுக்கு முன்பு தமிழர்கள் வாழ்ந்திருந்ததோடு சிவவழிபாட்டை மேற்கொண்டிருந்தமையும் இக்கல்வெட்டுக்கள் மூலம் தெளிவாகத் தெரிகிறது.



சிவன் பெயர் பொறிக்கப்பட்டுள்ள தமனை கல்வெட்டுக்கள் (No478)

## மொட்டைமலை - (மொட்டயா கல்லு) - சாகாமம்

பொத்துவிலிலிருந்து அக்கரைப்பற்றுக்கு செல்லும் வீதியில் உள்ள திருக் கோயிலின் மேற்கில் 6கி.மீ தொலைவில் சாகாமம் என்னும் பழைமை வாய்ந்த தமிழ்க்கிராமம் அமைந்துள்ளது. இங்கிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் வீதியருகே காணப்படும் நெற்கழனிகளின் மத்தியில் கூளாவடி என்னுமிடத்திற்கருகில் காணப்படும் தட்டையான மலைக்குன்றே மொட்டை மலை என அழைக்கப்படுகின்றது



மொட்டையாகல்லு மலை

அம்பலன் ஓயா குளத்தை நிரப்பி கிழக்கு நோக்கி பாய்ந்து, அக்கரைப் பற்று திருக்கோயிலுக்கிடைப்பட்ட பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய களப்பு வாவியில் சங்கமமாகும். அம்பலன் ஓயாவிலிருந்தும், பன்னல்கம குளத்தை நிரப்பி கிழக்கு நோக்கிப் பாய்ந்து இதே பெரிய களப்பு வாவியின் தென் பகுதியில் சங்கமமாகும் பன்னல் ஓயா ஆற்றிலிருந்தும், மொட்டைமலைப் பகுதியின் வயற்கழனிகளுக்கு நீர்ப்பாசனம் கிடைக்கும் வகையில் பண்டைய காலத்தில் சாகாமத்தை ஆட்சிசெய்த பாண்டிய மன்னர்களால் நன்கு அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாக இப்பகுதி விளங்கியுள்ளது.

இம்மலையில் கிடைக்கப்பெற்ற பண்டைய பிராமிக் கல்வெட்டொன்றின்படி இது ஓர் நாக வழிபாடு நிலவிய பிரதேசமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. பொ.ஆ.மு 3ம் நூற்றாண்டில் கதிர்காமத்தை ஆட்சி செய்த கதிர்காம சத்திரியர்கள் எனும் பத்து பாண்டிய வம்சத்து அரசர்களில் இளையவனாகிய மகாநாகன் என்பவன் பற்றிய குறிப்பு இக்கல்வெட்டில் காணப்படுகின்றது. இதன் மூலம் மொட்டயாகல்லுப் பகுதியில் இந்துக்களாகிய கதிர்காம சத்திரியர்களின் ஆட்சி நிலவியமை தெளிவாகத் தெரிகிறது.


மொட்டைமலை உச்சிக்குப் போக மலையின் கிழக்குப் பக்கத்தில் பாறையில் படிக்கட்டுக்கள் செதுக்கப்பட்டுள்ளன. மலை உச்சிக்கு சற்று கீழே ஓர் நீர்ச்சுனை காணப்படுகின்றது.மலையின் தென்கிழக்குச் சரிவில் ஓர் புடைப்புச் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. முற்றுப் பெறாத நிலையில் இச்சிற்பம் இருப்பதால் இது யாருடைய உருவம் என்பதை கணிக்க முடியாதுள்ளது. சமாதி நிலையிலுள்ள புத்தரின் வடிவம் போல இது காணப்பட்டாலும் உடலில் பூணூல் போன்ற ஓர் கோடும் இலேசாகத் தெரிகிறது. இம்மலை உச்சியில் ஓர் வழிபாட்டுத் தலம் அமைந்திருப்பதற்கான அடையாளங்கள் உள்ளன. இங்குள்ள கல்வெட்டின்படி இது ஓர் நாக வழிபாட்டுத் தலம் என எண்ணக் கூடியதாக உள்ளது.

மேலும் இக்கல்வெட்டு தமிழ் பிராமி எழுத்தில் பொறிக்கப்பட்டதாகும். இதில் ''மருமகன்'' எனும் சொல் பொறிக்கப்பட்டுள்ளது. தமிழ் பிராமிக்கே சிறப்பாக உள்ள ''ற'' எனும் எழுத்து இதில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

பேராசிரியர் பரணவித்தான இக்கல்வெட்டை 487 எனும் இலக்கமிட்டு பதிவு செய்துள்ளார். இக்கல்வெட்டு ''தச பதிக்க ரன ..... வக நய உபரஜ நாக உபரஜ நாகக மருமகனேகே மஹ ... சதிக அபய ரஜஹக புத காமனி திசஹ விகரே அகத அனகத பிகு சகச நியதே'' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. ''மன்னன் மஹா சதிக்க அபயனின் மகனும், உபராஜ நாகனின் மருமகனும், பத்து சகோதர மன்னர்களின் ஜாவக தலைவனான காமனி திசனுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மடாலயம் பிக்குகள் சங்கத்தார்க்கு தானமாக கொடுக்கப்படுகிறது.'' எனும் தகவலை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.



நாகம், மருமகன் ஆகிய பெயர்கள் பொறிக்கப்பட்ட மொட்டையாகல்லு கல்வெட்டு (No. 487)

## உஹபிட்ட கல்கே - இங்கினியாகல

அம்பாறை நகரிலிருந்து 22கி.மீ தொலைவில் இங்கினியாகல என்னுமிடம் அமைந்துள்ளது. இங்கிருந்து கிழக்குப்பக்கமாக சுமார் 4 கி.மீ தொலைவில் உஹபிட்டகல்கே என்னுமிடம் உள்ளது. இங்கு ஓர் தமிழ் பிராமிக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.

இக் கல்வெட்டில் ''பெருமகன் வேலனின் மகன் பெருமகன் உத்தராச னின் குகை'' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டின் மூலம் இங்கு முருக வழிபாடு நிலவியமை தெரியவருகிறது. இப்பகுதியில் முருகப் பெருமானின் வேல் வழிபாடு கூட நிலவியிருக்கலாம். இக்கல்வெட்டு இலங்கைத் தொல்பொருட் திணைக்களத்தின் மூலம் டாக்டர் பரணவித்தான வெளியிட்ட பிராமிக் கல்வெட்டுக்கள் எனும் நூலில் 477வது கல்வெட்டாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.



வேலன் என்ற பெயர் பொறிக்கப்பட்ட உஹபிட்ட கல்கே கல்வெட்டு.(No.477)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடினாகல மலை

அம்பாறை நகரிலிருந்து சியம்பலாண்டுவைக்குச் செல்லும் வீதியில் 34கி.மீ தூரத்தில் வடினாகல சந்தி அமைந்துள்ளது. இச் சந்தியின் மேற்குப் பக்கத்தில் 2 கி.மீ தூரத்தில் பள்ளன் ஓயா குளம்(ஜெயந்தி வெவ) அமைக்கப்பட்டுள்ளது. வடக்கு தெற்காக நீண்டு காணப்படும் இக்குளத்தின் மேற்குப் பகுதியில் வடினாகல மலைத்தொடர் இயற்கை அணையாக அமைந்துள்ளது. இம் மலையின் உயர்ந்த பகுதியே வடினாகல மலை உச்சியாகும். இது 2400 அடி உயரமுடையதாகும்.


வடினாகல சந்தியிலிருந்து சியம்பலாண்டுவ பக்கமாக மேலும் 12கி.மீ தூரம் சென்றால் பல்லேவெல சந்தியை அடையலாம். இங்கிருந்து மேற்கு நோக்கி 7கி.மீ தூரத்தில் புத்தம எனும் கிராமம் உள்ளது. இக்கிராமத்திலிருந்து வடக்குப் பக்கமாக 6 கி.மீ தூரத்தில் வடினாகல மலை அமைந்துள்ளது.புத்தம கிராமத்தின் வடக்கில் மிரிஸ்வத்தை எனும் கைவிடப்பட்ட கிராமம் காணப் படுகின்றது. இப்பகுதியில் யானைகள் அதிகம் காணப்படுவதால் மக்கள் அங்கிருந்து வெளியேறி விட்டதாகக் கூறப்படுகின்றது. வடினாகல மலையின் அடிவாரத்தில் மிரிஸ்வத்தை அமைந்துள்ளது. இங்கிருந்து மலை உச்சிக்கு ஏறும் போது இரண்டு பெரிய குன்றுகளையும், மேலும் சில சிறிய குன்று களையும் கடக்க வேண்டியுள்ளது. இவற்றைக் கடந்தவுடன் பல நீரோடைகளும், சிறிய அருவிகளும் மலை உச்சியிலிருந்து கீழ்நோக்கிப் பாய்கின்றன. இவைகளைக் கடந்த பின் ஓர் கற்குகை காணப்படுகின்றது. ஓடைகளில் நீர் பருக காட்டு யானைகள் இங்கு அடிக்கடி வருவதாக கிராமவாசிகள் கூறுகின்றனர்.

குகையைக் கடந்ததும் செங்குத்தான ஓர் பாறையைக் கடந்து போக வேண்டும். இங்கிருந்து சுமார் 100 மீற்றர் தூரத்தில் மலையின் உச்சிப்பகுதி அமைந்துள்ளது. மலை உச்சி சிறிய பரப்பளவை உடைய சாய்வான பாறை யாகும். இவ்வுச்சியில் தான் கிழக்கு, ஊவா மாகாண எல்லைக்கான அடையாளம் பொறிக்கப்பட்டுள்ளது. இப்பகுதி கிராமவாசிகள் இது புதையல் இருப்பதைக் காட்டும் அடையாளம் எனக் கூறுகின்றனர். மலை உச்சியின் பக்க வாட்டில் இரு பாறைகளுக்கு இடையில் ஓர் சதுரமான இடைவெளி உள்ளது. இது ஓர் இயற்கையான யன்னல் போலக் காணப்படுகின்றது.

மலையில் சில இடங்களில் வழிபாட்டுத் தலங்கள் அமைந்திருந் தமைக்கான எச்சங்கள் காணப்படுகின்றன. பீடக்கற்கள், காவற்கற்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்தூண்கள், கைப்பிடிவரிசை கற்கள், ஆகிய புராதன சின்னங்கள் காணப் படுகின்றன.



475

உற்பலவன் என்ற விஷ்னு பெயர் பொறிக்கப்பட்ட வடினாகல கல்வெட்டு (No.475)

வடினாகல மலையில் காணப்படும் குகையில் ஓர் பிராமிக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இதில் ''பத திச குதஹ கமிக சலுக உபசிக உபலய'' என எழுதப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் உள்ள ''உபலய'' என்பது மாயோனைக் குறிப்பதாக பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் குறிப்பிட்டுள்ளார். உற்பலவன் என்பது விஷ்னுவைக் குறிக்கும்.பழைய பதமாகும்.

வடினாகல மலைப்பகுதி பண்டைய காலங்களில் கதிர்காம பாண்டிய சத்திரிய மன்னர்களின் ஆட்சியின் கீழிருந்த பகுதியாகும். எனவே இங்கு மிகப்பண்டைய காலத்தில் இந்து தெய்வ வழிபாடு நிலவிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

## மாவறகல மலை - பதியத்தலாவை

மட்டக்களப்பிலிருந்து பதுளைக்குச் செல்லும் வீதியில் பதியத்தலாவை என்னுமிடம் அமைந்துள்ளது. இங்கிருந்து கொலமந்தலாவைக்குச் செல்லும் வீதியின் வலதுபக்கத்தில் மாவறகல மலை அமைந்துள்ளது. பதியத்தலாவையின் தெற்கில் 3கி.மீ தூரத்தில் இம்மலை காணப்படுகின்றது.

இம்மலையிலுள்ள கற்குகைகளில் ஆதி தமிழர்கள் வாழ்ந்தமைக்கான பிராமிக் கல்வெட்டாதாரங்கள் காணப்படுகின்றன. இக்கற்குகைகளில் மொத்த மாக ஆறு கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 3 கல்வெட்டுக் களில் தமிழ் பிராமிக்குரிய ''பருமக'' எனும் சொல் பொறிக்கப்பட்டுள்ளது. இரண்டு கல்வெட்டுக்களில் ''அசரிய'' எனும் பதம் காணப்படுகின்றது. ''அசரிய'' என்பது ஆசிரியர் எனும் தமிழ் பிராமிக்குரிய சொல்லாகும். எனவே மாவறகல மலையில் ஆதி தமிழர்கள் வாழ்ந்துள்ளமை உறுதியாகிறது.


இங்கு காணப்படும் இரண்டு கல்வெட்டுக்களில் ''கணதத'' எனும் சொல் பொறிக்கப்பட்டுள்ளது.''கண'' என்பது வடமொழியில் ''கிருஸ்ண''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதன் திரிபாகும் என பேராசிரியர் பரணவித்தாண தெரிவித்துள்ளார். இது மாயோனின் அம்சமாகிய பழந்தமிழரின் கடவுளான கண்ணனைக் குறிப்பதாகும் என பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் குறிப்பிட்டுள்ளார். கண தத்த என்பது கண்ணனால் அளிக்கப்பட்டவன் எனப்பொருள்படுகிறது. இதன் மூலம் இம்மலையில் கண்ணன் வழிபாடு நிலவியுள்ளது எனக் கூறக் கூடியதாக உள்ளது.

## விஹாரேகல - உகந்தை

உகந்தை மலையின் மேற்குப் பக்கத்தில் 12கி.மீ தூரத்தில் அடர்ந்த காட்டின் மத்தியில் விஹாரேகல மலை அமைந்துள்ளது. இம்மலையில் உள்ள கற் குகையில் மொத்தமாக 7 பிராமிக் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 3 கல்வெட்டுகள் இந்து சமயம் தொடர்பானவையாகும்.



529

*வேலன் என்ற பெயர் பொறிக்கப்பட்ட விஹாரேகல கல்வெட்டு (No.529)*

முதலாவது கல்வெட்டில் ''அச சிரிகுதஹ பருமக சுமக வேலுஹ திசஹலேன'' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இதில் பருமகன் எனும் தமிழ்ச் சொல்லும், வேலு என முருகனைக் குறிக்கும் சொல்லும் காணப்படுகிறது. இதன் மூலம் இங்கு முருக வழிபாடு நிலவியமை புலனாகின்றது.

அடுத்த இரண்டு கல்வெட்டுக்களில் ஒன்றில் ''பருமக கணதத்த ஜகய உபசிகய லேன'' எனவும், அடுத்ததில் ''பருமக கணதத்த புதன லேன'' எனவும் பொறிக்கப்பட்டுள்ளது. இவ்விரு கல்வெட்டுக்களிலும் ''பருமக'' எனும் தமிழ்ச் சொல்லும், ''கணதத்த'' எனும் சொல்லும் காணப்படுகின்றது. '' கண'' என்னும் பதம் மாயோனின் அம்சமாகிய பழந்தமிழரின் கடவுளான கண்ணனையே குறிப்பதாகும் என பேராசிரியர் சி.க சிற்றம்பலம் குறிப் பிட்டுள்ளார். இது வடமொழிக் கிருஸ்ணன் என்பதன் திரிபே என பேராசிரியர் பரணவித்தான கூறியுள்ளார். கணதத்த என்பது கண்ணனால் அளிக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டவன் எனப் பொருள்படுகிறது. எனவே விஹாரேகல மலைக் குகைகளில் கண்ணன் எனப்படும் கிருஸ்ணர் வழிபாடு நிலவியுள்ளமை உறுதியாகிறது.



531



532

*கண்ணன் எனும் பெயர் பொறிக்கப்பட்ட விஹாரேகல கல்வெட்டுக்கள் (No.530, 531, 532)*

## திஸ்னாவுல கேம

பானமையைக் கடந்து செல்லும் போது காணப்படும் சலவைக் களப்பின் வடமேற்கில் 3கி.மீ தூரத்தில் அடர்ந்த காட்டின் மத்தியில் திஸ்னாவுல கேம மலைப்பகுதி அமைந்துள்ளது. திஸ்னாவுல மலைப் பாறையில் ஓர் நீர்ச்சுனை காணப்படுவதால் இவ்விடம் திஸ்னாவுல கேம என அழைக்கப்படுகின்றது.


இங்குள்ள கற்பாறைக் குகையில் ஓர் பிராமிக் கல்வெட்டு பொறிக்கப் பட்டுள்ளது. ''கபதி நகுலிய லேன'' என இச் சிறிய கல்வெட்டு காணப் படுகின்றது. இது திருகபதி நகுலியின் குகை எனப்பொருள்படும். இக்குகை சீதையுடன் தொடர்புபட்டது எனவும், நகுலி என்பது சீதையின் இயற்பெயர் எனவும், சீதை இராவணனால் சிறைவைக்கப்பட்ட இடங்களில் இதுவும் ஒன்று என ஆய்வாளர்கள் கூறுகின்றனர் . திஸ்னாவுல கல்வெட்டு இலக்கம் 421 என பேராசிரியர் பரணவித்தானவால் இக்கல்வெட்டு பதிவு செய்யப் பட்டுள்ளது.

## நாவலர் குளம் - பொத்துவில்

பொத்துவிலிலிருந்து பானமைக்கு செல்லும் வீதியில் உள்ள 73ம் கட்டையில் உள்ள சந்தியின் மேற்குப் பக்கத்தில் 3 கி.மீ தொலைவில் நாவலர் குளம் அமைந்துள்ளது. இங்குள்ள மலைக்குகையில் ஓர் பிராமிக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இதில் ''அதி அகரிய கமணி பதும புத பதும குதச பியதசனே நம லேன சகயே நியதே'' என எழுதப்பட்டு அருகில் இரு குறியீடுகளும் பொறிக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கல்வெட்டில் காணப்படும் பதுமகுத்த என்பது தாமரையாளாற் பாதுகாக்கப்படுபவன் எனப் பொருள்படுகிறது. பதும என்பது பத்மா எனப் படும் தாமரையாள் அல்லது கமலா என்றழைக்கப்படும். லக்ஸ்மியையே குறிப்பதாகும் என பேராசிரியர் சி. க சிற்றம்பலம் குறிப்பிட்டுள்ளார். பதும என்ற பெயர் பொறிக்கப்பட்ட இன்னுமோர் பிராமிக் கல்வெட்டு குருநாகல் மாவட்டத்தில் சஸ்ஸேருவ என்னுமிடத்தில் உள்ளது.



494

லக்ஸ்மியைக் குறிக்கும் பதும என்ற பெயர் பொறிக்கப்பட்ட நாவலர்குளம் கல்வெட்டு (No.494)

## குடுவில் - இறக்காமம்

அம்பாறை நகரிலிருந்து தெற்கு நோக்கி சியம்பலாண்டுவைக்குச் செல்லும் வீதியில் 9கி.மீ தூரத்தில் வரிப்பத்தாஞ்சேனை சந்தி அமைந்துள்ளது. இங்கிருந்து கிழக்குப் பக்கமாக தீகவாப்பிக்கு செல்லும் வீதியில் 6கி.மீ தொலைவில் குடுவில் எனும் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தின் தெற்குப் பக்கத்தில் இறக்காமம் குளத்தின் கிழக்குக் கரைப்பக்கமாக ஆங்காங்கே மலைப்பாறைகள் பல காணப்படுகின்றன. இப்பாறைகளில் ஒன்று மலைக்குகையுடன் கூடியதாகக் காணப்படுகின்றது. இக்குகையிலேயே ஓர் தமிழ் பிராமிக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.

2000 வருடங்களுக்கு முன்பு தென்கிழக்கிலங்கையில் தமிழர்கள் வாழ்ந் தார்கள் என்பதற்கு இக்கல்வெட்டு தெளிவான, உறுதியான சான்றாக உள்ளது. இக்கல்வெட்டில் ''திகவபி பொறன வணிகன...ய புதன பரியாய தமெத திசய லென'' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் பொருள் ''தீகவாவியின் குடிமகனான தமிழ் வணிகனின் மனைவியான திசவின் குகை'' என்பதாகும். இக்கல்வெட்டின் மூலம் தீகவாவி பகுதியில் குடியிருப்பாளர்களாக தமிழர்கள் விளங்கியதோடு வணிகத்திலும் ஈடுபட்டுள்ளனர் என்பது உறுதியாகத் தெரிகிறது.

இதுபோன்று தமிழர் எனப் பொறிக்கப்பட்ட மேலும் 4 கல்வெட்டுக்கள் இலங்கையில் காணப்படுகின்றன. இவை அனுராதபுரம், வவுனியா, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் உள்ள அநுராதபுரம், பெரிய குளியங்குளம் (2 கல்வெட்டுக்கள்), சேருவில ஆகிய இடங்களில் பொறிக்கப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளன. இதன்மூலம் குறிப்பாக வடக்கு, வடமத்திய, கிழக்கு பகுதிகளில் 2000 வருடங்களுக்கு முன்பு தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்பது உறுதி யாகின்றது.



குடுவில் மலைப்பாறைகள்

இரண்டாயிரத்துக்கும் மேலான பிராமிக் கல்வெட்டுக்களில் 5 தமிழர் பற்றிக் குறிப்பிடும் அதேவேளை சிங்களவர் பற்றி ஒரு கல்வெட்டேனும் காணப்படவில்லை எனவும், பிராமிக் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்ட காலத்தில் சிங்களவர் என்ற ஓர் இனம் உருவாகியிருக்கவில்லை எனவும் பேராசிரியர் சி. பத்மநாதன் ''இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்'' எனும் நூலில் தனது முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.




தமிழ் என்ற பெயர் பொறிக்கப்பட்ட குடுவில் கல்வெட்டு (No.480)

குடுவில் கிராமத்தின் கிழக்குப்பக்கத்தில் 3கி.மீ தொலைவில் பண்டைய உப இராசதானியான தீகவாபி அமைந்துள்ளது. பொ.ஆ.மு. 250 - 210 காலப் பகுதியில் தேவநம்பியதீசன் அனுராதபுரத்திலிருந்து ஆட்சி செய்த வேளை வட இந்திய மற்றும் தென் இந்திய இராச்சியங்களுடன் நட்புறவு கொண்டிருந்தான். இலங்கையின் தென் கிழக்குப் பகுதியை கதிர்காமத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைநகராகக் கொண்டு பாண்டிய தமிழ் சத்திரிய வம்சத்தவர்கள், தேவநம்பிய தீசன் மற்றும் மகாநாகன் ஆகியோரின் ஆதரவுடன் சிற்றரசர்களாக ஆட்சிபுரிந்தனர். இவர்களின் ஆட்சியின் கீழ் இருந்த பிரதேசங்களில் தீகவாபியும் ஒன்றாகும்.

பொ.ஆ.மு. 145 - 101 வரை எல்லாளன் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் எல்லாளனின் தமிழ் சிற்றரசர்கள் தீகவாபி பகுதியை ஆட்சி செய்துள்ளனர். துட்டகைமுனு மாகாமத்திலிருந்து படையெடுத்து அனுராத புரத்திற்கு வந்த வேளை தீகவாபியில் இரண்டு தமிழ் மன்னர்களுடன் போர் புரிந்ததாக ''சகஸ்ஸவ துப்பகரணய'' எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி எல்லாளன் காலத்தில் தீகவாபி பிரதேசம் தமிழ் மன்னர்களால் ஆட்சி செய்யப்பட்டுள்ளது. குடுவில் கல்வெட்டு பொறிக்கப்பட்ட காலமும் இதுவே. எனவே இக்காலப்பகுதியில் தீகவாபி எனும் உப இராசதானி தமிழர்களின் ஆட்சிப் பிரதேசமாக இருந்தது. இக்காலக்கட்டத்தில் இங்கு இந்து சமயம் செல்வாக்கு பெற்று விளங்கிருக்கும் என்பதில் ஐயமில்லை.

## நியந்தவரகல மலை - புல்லுமலை

மஹா ஓயாவிலிருந்து மட்டக்களப்புக்கு செல்லும் வீதியில் உள்ள புல்லு மலையை அடுத்து 74ம் கட்டை சந்தி அமைந்துள்ளது. இங்கிருந்து வடக்கு நோக்கி 9கி.மீ தூரத்தில் நியந்தவரகல மலை அமைந்துள்ளது. இம்மலையில் உள்ள கற்குகையில் 4 பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இக்கல் வெட்டுக்களில் இரண்டு சிவவழிபாடு தொடர்புடையதாகக் காணப்படு கின்றது. இவை 401, 402 ஆகிய இலக்கங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.



401



402

*சிவன்பெயர் பொறிக்கப்பட்டுள்ள நியந்தவரகல கல்வெட்டுக்கள் (No.401, 402)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் முதலாவது கல்வெட்டில் ''சகஸ உபசக சுடக அசிய சிவஹ சடி சடய'' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இதில் சிவன் என்ற பெயர் காணப் படுகிறது. இரண்டாவது கல்வெட்டில் ''பத சிவஹ உபசக சுடஹ சடி சடயே லேன சகஸ'' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் ''கடவுள் சிவனின் குகை'' எனக் கூறப்பட்டுள்ளது.எனவே இக் குகையில் சிவ வழிபாடு நிலவிய கோயில் இருந்துள்ளது என்பது இக்கல்வெட்டின் மூலம் நிறுபன மாகிறது.

## முள்ளிக் கொழுடு மலை - பாலமுனை

அக்கரைப்பற்றிலிருந்து கல்முனைக்குச் செல்லும் வீதியில் 7 கி.மீ தொலைவில் உள்ள பாலமுனை சந்தியிலிருந்து மேற்கு நோக்கி செல்லும் போது 4 கி.மீ தூரத்தில் வயல்களில் மத்தியில் முள்ளிக்குளம் மலை அமைந்துள்ளது. இம் மலையில் தெற்கில் உள்ள இன்னுமொரு மலைக் குன்றே முள்ளிக் கொழுடு மலை என அழைக்கப்படுகின்றது.

மிகப்பண்டைய காலத்தில் இங்கு முருக வழிபாடு நிலவியமைக்கான சான்றுகளாக இம்மலையில் உள்ள கற்குகைகளில் பொறிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இக்குகைகளில் உள்ள 3 கல்வெட்டுக்கள் பேராசிரியர் பரணவித்தானவினால் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் இலக்கம் 481வது கல்வெட்டில் ''உபசக தனக வேலு தன'' எனப் பொறிக்கப் பட்டுள்ளது. இது ''இப்பகுதியை ஆட்சி செய்யும் பக்தன் வேலு'' எனப் பொருள்படுகிறது. இதன் மூலம் வேலன் எனும் தமிழ் சிற்றரசன் இப்பகுதியை ஆட்சி செய்துள்ளமையும், இவன் ஒரு பக்தன் என்பதும் புலனாகின்றது. இவன் வேலு எனும் பெயரைக் கொண்டிருப்பதனால் இங்கு வேல் வழிபாடு அல்லது முருக வழிபாடு நிலவியிருக்கலாம் எனவும், இம் மன்னன் ஓர் முருக பக்தன் எனவும் கொள்ள இடமுண்டு. இம்மலையின் அருகில் வடக்கு பக்கத்தில் உள்ள முள்ளிக்குளம் மலையில் நந்தி அல்லது சிவன் ஆகியவர் களுக்கான வழிபாடு இருந்தமை இங்கே குற்ப்பிடத்தக்கது.


## கோவிந்தஹெல (கோவிந்த மலை) - சியம்பலாண்டுவ

அம்பாறை நகரிலிருந்து சியம்பலாண்டுவைக்குச் செல்லும் வழியில் 46கி.மீ தொலைவில் பல்லேவெல என்னுமிடம் அமைந்துள்ளது. சியம்பலாண்டுவ சந்தியிலிருந்து 9 கி.மீ தூரத்தில் பல்லேவெல அமைந்துள்ளது.இவ்விடத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதை அருகில் பழமைவாய்ந்த ஓர் சிறிய கந்தசுவாமிக் கோயில் காணப் படுகின்றது. இக்கோயிலின் இடது பக்கமாகச் செல்லும் பாதை அருகில் சிறிது தூரத்தில் புவனேகபாகு விஹாரை அமைந்துள்ளது. இங்கிருந்து சிறிது தூரத்தில் காட்டின் மத்தியில் கோவிந்த மலை அமைந்துள்ளது.

கோவிந்த மலை சுமார் 500 மீற்றர் உயரமானதாகும். ஊவா மலைத்தொடர் களில் காணப்படும் மலைகளில் கோவிந்தமலை முக்கியத்துவம் பெற்றுள்ளது. இதற்குக் காரணம் மலையின் உச்சிப் பகுதி செங்குத்தாக அமைந்திருப்பதே. உச்சியை அடைவதற்கு நான்கு செங்குத்தான, கடினமான இடங்களைக் கடக்க வேண்டி இருப்பதால் இலகுவில் யாராலும் ஏற முடியாத ஓர் மலைச்சி கரமாக கோவிந்த மலை விளங்கியது.இன்று இந்நான்கு இடங்களைக் கடக்க இரும்பு ஏணிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் முக்கியத்துவம் கருதி ஆங்கிலேயர் இம்மலைக்கு ''வெஸ்ட்மினிஸ்டர் அபெ'' (Westminister Abbey) எனப் பெயரிட்டு அழைத்தனர்.



கோவிந்த மலை

மிகப்பண்டைய காலத்தில் இம்மலையில் ஆதி தமிழர்கள் வாழ்ந்துள்ளனர். இம்மலைச்சாரலில் இயற்கையாக அமைந்திருந்த குகைகளில் இவர்கள் வாழ்ந்தமைக்கான ஆதாரங்களாக குகைகளின் மேலே தமிழ் பிராமி எழுத்துக்களில் கல்வெட்டுக்களைப் பொறித்துள்ளனர். இங்கு காணப்படும் கல்வெட்டுக்களில் இரண்டு பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு கல்வெட்டில் ''விசதேவனின் மகளின் குகை'' பற்றி குறிப்பிடப் பட்டுள்ளது. விசவ எனும் பெயர் இராவணனின் தந்தையான விஸ்ரவ முனிவரைக் குறிப்பதாகும் என கலாநிதி ஜெயரத்ன பத்திரஆராச்சி குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''விசவ'' எனும் பெயர் பொறிக்கப்பட்ட மேலும் 7 பிராமிக் கல்வெட்டுக்கள் அனுராதபுரம், ஹொரவப்பொத்தான, கண்டி ஆகிய இடங்களில் காணப் படுகின்றன. இதன் மூலம் சிவபக்தனான இராவணின் பரம்பரையினர் கோவிந்த மலையில் வாழ்ந்துள்ளமை உறுதி செய்யப்படுகின்றது. எனவே இங்கு இந்து தெய்வ வழிபாடு நிலவியிருக்கலாம் என யூகிக்கக்கூடியதாய் உள்ளது.

கோவிந்த மலையில் காணப்படும் இரண்டாவது கல்வெட்டில் ''மகாசு தர்சன குகை'' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. மகாசுதர்சன என்பதன் அர்த்தம் Great good view என பேராசிரியர் பரணவித்தான கூறியுள்ளார். சுதர்சன என்பது விஷ்னு பகாவானின் சக்கரத்தைக் குறிப்பதாகும். எனவே விஷ்னு பகவானின் சுதர்சன சக்கர வழிபாடு இங்கு நிலவியுள்ளமை இக்கல்வெட்டின் மூலம் வெளிப்படுகிறது. இங்கு விஷ்னு வழிபாடு நிலவியமையாலேயே இம்மலை விஷ்னு பகவானின் பெயரில் ''கோவிந்த மலை'' எனப் பெயர் பெற்றருக்கலாம்.


மேலும் பொ.ஆ. 13ம் நூற்றாண்டில் கலிங்க மாகோன் ஆட்சிக் காலத்தில் கோவிந்தமலை ஓர் முக்கிய அரணாக விளங்கியுள்ளது. இக்காலப்பகுதி யிலேயே இம்மலை கோவிந்த ஹெல எனப் பெயர் பெற்றதாக குறிப்புக்கள் கூறுகின்றன. இப்பெயர் உண்டானதற்கு இரு காரணங்கள் கூறப்படுகின்றன. கலிங்க மாகோன் காலத்தில் பொலநறுவையிலிருந்து சிங்கள மன்னர்கள் தெற்கு நோக்கிச் சென்று சில மலைகளில் மறைந்து வாழ்ந்து வந்தனர். விஜயபாகு தம்பதெனியாவில் உள்ள மாளிகாகல எனும் மலையிலும், தளபதி சுபா என்பவன் யாப்பகுவா மலையிலும், தளபதி சங்க என்பவன் மினிப்பே மலையிலும், புவனேகபாகு கோவிந்த மலையிலும் மறைந்து வாழ்ந்து வந்தனர்.


புவனேகபாகுவின் அன்புக்கும் மரியாதைக்குமுரிய தமிழ் யுவராஜாவான கோவிந்தன் என்பவனே இம்மலையில் பாதுகாப்பான கோட்டை ஒன்றைக் கட்டி அங்கு புவனேகபாகுவை பாதுகாத்து வைத்திருந்ததனால் இம்மலை அவனது பெயரில் கோவிந்த மலை எனப் பெயர் பெற்றதாகக் கூறப் படுகின்றது.

மேலும் புவனேகபாகு இம்மலையில் மறைந்து வாழ்ந்து வந்த சமயம் மாகோன் சிங்கள மன்னர்களைத் தேடித்தேடி அழித்து வந்ததாகவும், புவனேகபாகு மறைந்திருந்த இந்த மலையையும் கைப்பற்றி இங்கு தனது ஓர் தளபதியான கோவிந்தன் என்பவனை இம்மலைக்குப் பொறுப்பாக நியமித்ததாகவும், கோவிந்தன் இம்மலையில் கோட்டை ஒன்றைக் கட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவல் கோயில்களை அமைத்து கற்சுனைகளையும் வெட்டி இப்பகுதியை பரிபாலனம் செய்து வந்ததாகவும், இதன்காரணமாக அவனது பெயரிலேயே இம்மலை கோவிந்த மலை எனப்பெயர் பெற்றதாகவும் கூறப்படுகின்றது. கோவிந்தன் கட்டிய கோட்டையின் இடிபாடுகளையும், கல் நீர்ச்சுனைகளையும் இன்றும் இம்மலையில் காணலாம்.

(256) 

(257) 

*இராவணின் தந்தை விஸ்ரவசு மற்றும் சுவாமி ஆகிய பெயர்கள் பொறிக்கப்பட்ட கோவிந்தஹெல கல்வெட்டுக்கள் (No.256, 257)*

கோவிந்த ஹெல மலைப்பகுதியை F. லூயிஸ் எனும் ஆய்வாளர் 1907ம் ஆண்டில் ஆய்வு செய்து அதன் குறிப்புக்களை 1908ம் ஆண்டு ரோயல் ஆசியாக் கழக வெளியீட்டில் எழுதியுள்ளார். இதில் இப்பகுதியில் வாழ்ந்த வர்கள் சிங்கள மொழி பேசும் வேடர்கள் எனவும் இவர்கள் ஆதிதிராவிடர் களின் வழித்தோன்றல்கள் எனவும், இதன் காரணமாகவே இவர்கள் வாழ்ந்த இப்பகுதி கோவிந்த மலை எனப்பெயர் பெற்றதாகவும் குறிப்பிட்டுள்ளார். இவரின் ஆய்வுக்குறிப்பின் படி இப்பகுதி தமிழ் வேடர்கள் வாழ்ந்த வனப் பகுதி என்பது உறதியாகின்றது.

## களிஓடை (காளிஓடை) - ஒலுவில்

அக்கரைப்பற்று நகரிலிருந்து கல்முனைக்குச் செல்லும் வீதியில் 8கி.மீ தொலைவில் ஒலுவில் என்னுமிடம் அமைந்துள்ளது. இவ்விடத்தின் மேற்கில் களியோடை அமைந்துள்ளது. இங்குள்ள மலைப் பாறைக் குகைகளில் 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராமிக் கல்வெட்டுக்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவை இலங்கை தொல்பொருட் திணைக்களத்தால் 484, 485, 486 எனும் இலக்கங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவற்றில் 484வது கல்வெட்டு மிக முக்கியமான தகவல்களைத் தருகிறது. ''கபதி திக நகுலிய லேன'' என இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இது ''கிருகபதி நகுலியின் குகை'' என பொருள்படும். இக்குகை சீதையுடன் தொடர்புபட்டது எனவும், நகுலி என்பது சீதையின் இயற்பெயர் எனவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

''நகுலி'' என்ற பெயர் பொறிக்கப்பட்ட எட்டு பிராமிக் கல்வெட்டுக்கள் இலங்கையில் காணப்படுகின்றன. இவை அம்பாறை, மாத்தளை, குருநாகல், அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள சமன்கல, திஸ்னா உலகம, களிஓடை, சீகிரியா, நாதகனே, தாகம, தலபிட்டியாவ, ரிடிகல ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. ''நகுலி'' எனும் பதம் ''லாங்குலி'' எனும் சொல்லிலிருந்து மருவியதெனவும், நாஞ்சிற் படையை உடைய பல ராமனையே இது குறிக்கும் எனவும் பேராசிரியர் பரணவித்தாண குறிப் பிட்டள்ளார். சங்க இலக்கியங்களில் நகுலி என்பவன் கண்ணனின் உடன் பிறப்பாக குறிப்பிடப்பட்டுள்ளான்.

அதேசமயம் சீகிரியாவில் உள்ள நய்ப்பென குகையில் காணப்படும் கல்வெட்டை ஆராய்ந்தோர் நகுலி என்பது சீதையைக் குறிக்கும் பெயர் எனக் கூறியுள்ளனர். இக்கல்வெட்டில் ''பருமக நகுலிய லேன'' (பெருமகள் நகுலியின் குகை) எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இந்திய இலக்கியங்களில் சீதையை கலப்பையின் அடியில் இருந்தே ஜனக மகாராஜா பெற்றதாகவும், ஜனகனே சீதை எனப் பெயர் சூட்டியதாகவும், கலப்பையிலிருந்து கிடைத்த தினால் சிறுவயதில் எல்லோரும் சீதையை நகுலி என்றே அழைத்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. சமஸ்கிருத - ஆங்கில அகராதிகளும் இச்செய்தியை உறுதி செய்கின்றன.

இலங்கை வேந்தன் இராவணன் சீதையைக் கவர்ந்து வந்து இலங்கையில் பல இடங்களில் உள்ள குகைகளில் வைத்திருந்ததாகவும், சீதை இருந்த குகைகளை பரம்பரை பரம்பரையாகப் பயன்படுத்தி வந்தவர்கள் இக்குகை களை சீதையின் பெயரிலேயே ''நகுலியின் குகை'' என அழைத்து வந்த தாகவும், பின்பு கல்வெட்டைப் பொறித்தபோது இதே பெயரிலேயே பொறித்த தாகவும் ஆய்வாளர்கள் கூறகின்றனர். அந்த வகையில் சீதையுடன் தொடர்பு பட்ட இடங்களில் களி ஓடையும் ஒன்று எனக் கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெஹெரகம - உகன

அம்பாறை நகரிலிருந்து வடக்கு நோக்கி மகாஓயாவிற்கு செல்லும் வீதியில் 11கி.மீ தொலைவில் உகனை அமைந்துள்ளது. உகனையிலிருந்து 3 கி.மீ தூரத்தில் உள்ள கோமாரி சந்தியூடாக வடகிழக்குப் பக்கம் செல்லும் வீதியில் 19 கி.மீ தொலைவில் மண்டூர் அமைந்துள்ளது. கோமாரி சந்தியூடாக கிழக்குப் பக்கமாக செல்லும் வீதியில் சடயந்தலாவை ஊடாக கல்முனையை அடையலாம். இவ்விரு வீதிகளுக்குமிடையில் 10ம் கொளனி எனும் கிராமம் உள்ளது. இதன் அருகில் புளியங்குளம் எனும் கிராமமும் அமைந்துள்ளது. இப்பிரதேசம் வெஹெரகம என அழைக்கப்படுகின்றது. இங்கு சுமார் 30 அடி உயரமான இரு மலைப் பாறைகள் காணப்படுகின்றன. இப்பாறை மீது ஓர் கல் நீர்ச்சுனை இயற்கையாக அமைந்துள்ளது.

இம்மலைப் பாறையில் புராதன கட்டிடங்கள் இருந்தமைக்கான அடையாளங்கள் காணப்படுகின்றன. பாறைமீது ஓர் பிராமிக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இதில் ''குபிர தெரஹ வன'' என குறிப்பிடப்பட்டுள்ளது. இதை ''மூத்தவன் குபேரனின் காடு'' என பேராசிரியர் பரணவித்தான விளக்கமளித்துள்ளார். குபேரன் என்பவன் இலங்கை வேந்தன் இராவணனின் மூத்த சகோதரன் என்பது குறிப்பிடத்தக்கது. "Inscription Of Ceylon - Volume 1" எனும் நூலில் பேராசிரியர் பரணவித்தான இக்கல்வெட்டை இலக்கம் 469ல் பதிவு செய்துள்ளார்.



469

*இராவணனின் சகோதரன் குபேரன் பெயர் பொறிக்கப்பட்ட உகனை கல்வெட்டு (No.469)*

இக்கல்வெட்டின் மூலம் இப்பகுதி இராவணனின் சகோதரன் குபேரனின் வனம் எனும் செய்தியை பொ.ஆ.மு. 2ம் நூற்றாண்டில் இப்பகுதியில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசித்தவர்கள் தெரிவித்துள்ளனர். குபேரன் முருக வழிபாட்டை பேணி வந்த தோடு இலங்கையில் அழகாபுரியை தலைநகராகக் கொண்டு இராவணனிற்கு முன்பு இலங்கையை ஆட்சி செய்த இலங்கையின் முதலாவது மன்னன் என மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி எனும் நூலில் குறிப்பிட்டுள்ளது. குபேரன் தொடர்பான மேலும் நான்கு பிராமிக் கல்வெட்டுக்கள் மட்டக்களப்பு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் காணப்படுவதாக கலாநிதி ஜயரத்ன பத்திர ஆராச்சி தெரிவித்துள்ளார்.

## தெகியத்த கண்டிய

மகியங்கனையிலிருந்து வடக்கு நோக்கி கிராந்துரு கோட்டை ஊடாக செல்லும் வீதியில் 45 கி.மீ தொலைவில் தெகியத்த கண்டிய என்னுமிடம் அமைந்துள்ளது. மாதுருஓயா குளத்தின் மேற்கில் இப்புதிய நகரம் அமைக்கப் பட்டுள்ளது. இங்கிருந்து 18 கி.மீ தூரத்தில் உள்ள மலைத்தொடரில் பல குகைகள் காணப்படுகின்றன.

இக்குகைகளில் இரண்டில் இந்து தெய்வங்கள் பற்றிய பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவற்றில் ஒன்றில் ''உல்ஹிட்டியாவை பரிபாலனம் செய்யும் பெருமகன் வேலனின் குகை'' எனப் பொறிக்கப் பட்டுள்ளது. இக்கல்வெட்டின் மூலம் உல்ஹிட்டியா எனும் பிரதேசம் வேல் வழிபாடு நிலவிய இடம் என்பதும் இங்கிருந்த குகையில் வேல் வழிபாடு நிலவியிருந்தது என்பதும் தெளிவாகிறது. மேலும் பெருமகன் எனும் தமிழ்ச் சொல் இக்கல்வெட்டில் பயன்படுத்தியுள்ளமை இங்கு ஆதி தமிழர்கள் வசித்தமையை உறுதி செய்கின்றது.





*வேலன், சிவன் ஆகிய பெயர்கள் பொறிக்கப்பட்ட தெஹியத்த கண்டி கல்வெட்டுக்கள் (No.91, 92)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தக் கல்வெட்டில் ''சுவாமி சிவனின் குகை'' எனப் பொறிக்கப் பட்டுள்ளது. இக்குகையில் சிவவழிபாடு நிலவியமை இதன் மூலம் உறுதியாகிறது. இதன் மூலம் இங்கு வாழ்ந்த ஆதி தமிழர்கள் வேல் வழி பாட்டையும், சிவ வழிபாட்டையும் மேற்கொண்டுள்ளனர் என்பது தெளிவாகத் தெரிகிறது. மக்கள் செல்லமுடியாத அடர்ந்த காட்டின் மத்தியிலே உள்ள மலைக்குகைகளிலேயே இக்கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

## கரந்தஹெல மலை - லாகுகலை

பொத்துவிலிலிருந்து மொனராகலைக்குச் செல்லும் வீதியில் 14கி.மீ தொலைவில் லாகுகலை என்னுமிடம் இருக்கிறது. இவ்விடத்தை அடுத்து 5கி.மீ தூரத்தில் உள்ள ஹுலன்நுகே சந்தியிலிருந்து வடக்கு நோக்கி கும்புக் கொல்லைக்குச் செல்லும் வீதியில் 2கி.மீ தொலைவில் கரந்தஹெல விஹாரை அமைந்துள்ளது. இவ் விஹாரை அமைந்துள்ள மலையின் மேற்குப் பகுதியில் உள்ள மலைச்சாரலில் சில கற்குகைகள் காணப்படுகின்றன. இக்குகைகளிலே சில பிராமிக் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.




இராவணனின் சகோதரன் கும்பகர்ணனின் பெயர் பொறிக்கப்பட்ட கரந்தஹெல கல்வெட்டு (No. 78)

இவற்றில் 3 கல்வெட்டுக்கள் தொல்லியல் ஆய்வாளர் எல்லாவல மேதானந்த தேரரால் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் ஒன்று ''ஆச்சார்ய உத்தியனின் குகை'' எனும் வாசகத்தைக் கொண்டுள்ளது. உத்தியன் என்பவன் கதிர்காமத்தை அட்சி செய்த 10 கதிர்காம பாண்டிய சத்திரிய சிற்றரசர்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவனாவான். இவனின் எட்டு சகோதரர்களை கோதாபயன் அழித்து கதிர்காமத்திற்கு அரசனானான். பின்பு உதியன் தனது சகோதரன் தர்ம ராஜாவுடன் கிரிந்தையில் தஞ்சமடைந்திருந்தான். உதியனின் மகனான தீசனின் மூத்த மகனே துட்டகைமுனுவின் தாயான விகாரமாதேவியாவாள். கதிர்காம சத்திரிய சிற்றரசனான உதியன் இருந்த இடங்களில் கரந்தஹெல பகுதியும் ஒன்றாகும். கதிர்காம சத்திரியர்கள் இந்துக்கள் என்பதும் பாண்டிய வம்சத்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.எனவே இப்பகுதியில் இந்து சமய வழிபாடு நிலவியிருக்க வேண்டும்.

அடுத்து கல்வெட்டு இராவனின் சகோதரனான கும்பகர்ணனின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டாகும். இதில் ''கும்பகர திஸ்ஸனின் குகை'' எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. இக்குகை கும்பகர்ணன் பயன்படுத்திய குகை களில் ஒன்றாக இருக்க வேண்டும். அவனின் விசுவாசிகள் வழிவழியாக இக்குகையைப் பயன்படுத்தியிருக்க வேண்டும். அப்படிப் பயன்படுத்தி யவர்களில் திஸ்ஸன் என்பவன் காலத்தில் இக்கல்வெட்டு பொறிக்கப் பட்டுள்ளது. கும்பகர்ணன் பெயர் பொறிக்கப்பட்ட இன்னுமோர் பிராமிக் கல்வெட்டு கண்டி மாவட்டத்தில் வேகிரிய என்னுமிடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

கரந்தஹெல மலையில் உள்ள சில குகைகளில் இந்து சமய அடையாளங் களில் ஒன்றான சுவாஸ்திகா வடிவம் பொறிக்கப்பட்டுள்ளது. இம்மலை அடிவாரத்தில் புராதன செங்கட்டிகளும், கட்டிட இடிபாடுகளும் காணப் படுகின்றன. இங்கே இந்து சமய அடையாளங்கள் காணப்படுவதால் இம் மலைப் பகுதியில் இந்துக்கள் வாழ்ந்துள்ளமை தெரிய வருகின்றது. மேலும் இங்குள்ள கட்டிட இடிபாடுகள் ஓர் இந்து ஆலயத்திற்குரியவையாக இருக் கலாம் எனவும் நம்பப்படுகிறது.

கரந்தஹெல மலையில் காணப்படும் மேலும் 4 பாறைக் கல்வெட்டுக்கள் பேராசிரியர் பரணவித்தானவால் 2001ம் ஆண்டு வெளியிடப்பட்ட "Inscription of Ceylon - Volume 2 - part 2" எனும் நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுக்களில் ஒன்று இங்கு நாகவழிபாடு நிலவியமை தொடர்பானதாகும். இதில் ''ஜதக பண .... நாக தேரஹ பதகதி'' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இது ஜாதகங்களைப் படிக்கும் மூத்தவன் நாகனின் படி என அர்த்தமாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலையடி கந்த மலை - ஹிங்குரான

அம்பாறை நகரிலிருந்து சியம்பலாண்டுவைக்குச் செல்லும் வீதியில் 10 கி.மீ தொலைவில் ஹிங்குரான என்னுமிடம் அமைந்துள்ளது. இவ்விடத்திலேயே சீனித்தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது. சீனித்தொழிற்சாலையின் பின்பக்கமாகச் செல்லும் வீதியில் 2 கி.மீ தூரத்தில் மலையடிகந்த எனும் மலை அமைந்துள்ளது. ஹிங்குரானையிலிருந்து 8 கி.மீ தூரத்திலுள்ள தமன என்னுமிடத்தில் உள்ள பாடசாலை அருகில் கிழக்குப் பக்கமாக செல்லும் வீதியில் 4கி.மீ பயணம் செய்தால் மலையடி கந்த மலையை அடையலாம்.

இம் மலையடிவாரத்தில் பல கற்குகைகள் காணப்படுகின்றன. இக்குகைகளில் ஆதிவேடர்கள் வரைந்த சித்திரங்களும், குறியீடுகளும் காணப்படுகின்றன. கல் மேடையுடன் கூடிய ஓர் குகையிலும் வேடர்கால சித்திரங்கள் வரையப்பட்டுள்ளன. இக்குகைகளில் 15 பிராமிக் கல்வெட்டுக்கள் உள்ளன. இவற்றில் இந்து சமய தெய்வங்கள் தொடர்பான 4 கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.


முதலாவது கல்வெட்டில் ''கமினி நாகனின் மகன் அபயவின் மகன் திஸ்ஸவின் குகை'' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு நாக வழிபாட்டை மேற்கொண்ட கமினி என்பவனினதும் அவனது இரண்டு பரம்பரையினர் பற்றியதுமான கல்வெட்டாகும்.கமினி என்பவனே கதிர்காமத்தை ஆட்சி செய்த பாண்டியவம்ச சத்திரிய சிற்றரசர்கள் 10 பேரின் தந்தையாவான். கமினியின் 10 புதல்வர்களின் ஒருவன் பெயர் அபயன் என்பதாகும். அபயனுக்கு தீசன் என்ற பெயரில் ஒரு மகன் இருந்திருக்கலாம். தீசன் தனது குகையிலேயே கல்வெட்டை பொறித்திருக்கலாம். இவர்கள் மூவரும் பாண்டிய வம்சத்தவராவார். இவர்கள் பற்றிய பிராமிக் கல்வெட்டுக்களை கிழக்கிலங்கையில் பல இடங்களில் காணலாம்.

இரண்டாவது கல்வெட்டும் நாகவழிபாடு தொடர்பானதாகும் ''அஷி நாகதத்தனின் குகை'' என இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. நாக தத்த என்பது நாகத்தினால் வழங்கப்பட்டவன் எனப் பொருள்படுகிறது. ''நாகதத்த'' எனும் பெயருடன் தம்புள்ளை யிலும் ஓர் கல்வெட்டு காணப்படுகின்றது. மூன்றாவது கல்வெட்டில் ''சூரியனி னதும் புஸ்ஸனினதும் குகை'' என எழுதப்பட்டுள்ளது. இப்பகுதியில் சூரியனை வழிபட்டவர்கள் இருந்தமை இக்கல்வெட்டின் மூலம் உறுதியாகிறது.

நான்காவது கல்வெட்டில் ''கௌத்திமத்த சிவரக்கித்தனின் குகை'' என எழுதப்பட்டுள்ளது. சிவரக்கித்த என்பது சிவனால் பாதுகாக்கப்பட்டவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப்பொருள்படும். எனவே இப்பகுதியில் சிவ வழிபாட்டை மேற் கொண்டவர்கள் வாழ்ந்துள்ளனர் என்பது புலனாகின்றது. சிவரக்கித்த எனப் பொறிக்கப் பட்ட பல கல்வெட்டுக்கள் இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் காணப் படுகின்றன.

(41) 

*சிவன் பெயர் பொறிக்கப்பட்ட மலையடிகந்த கல்வெட்டு (No.41)*

அடுத்த கல்வெட்டு தமிழ்ச் சொல்லான பருமகன் என்ற சொல் காணப்படும் கல்வெட்டாகும்.இதில் ''பருமகன் கொட்டக சுமனனின் மனைவி உபாசிக்க அயதயேவின் குகை'' என எழுதப்பட்டுள்ளது. இதன் மூலம் இங்கு ஆதி தமிழர்கள் வாழ்ந்ததோடு இந்து சமய வழிபாடுகளை மேற்கொண்டுள்ளனர் என்பது புலனாகிறது. இன்னுமோர் கல்வெட்டில் ''கிராமத் தலைவன் உதியனின் சுவாமி உத்தரவின் ....'' எனப் பொறிக்கப் பட்டுள்ளது. கதிர்காம பாண்டிய சத்திரியர்களில் ஒருவன் பெயர் உதியன் என்பது குறிப்பிடத்தக்கது.

## மாதனகந்த மலை - உகனை


அம்பாறையிலிருந்து மகாஓயாவிற்கு செல்லும் வீதியில் 11கி.மீ தொலைவில் உகனை என்னுமிடம் அமைந்துள்ளது. இங்கிருந்து மேற்குப் பக்கமாக 16கி.மீ தூரத்தில் உள்ள மகாகண்டிய குளத்தின் வட மேற்கில் காணப்படும் மலைத் தொடர்களில் ஒன்றாக மாதனகந்த மலை அமைந்துள்ளது. இம் மலையின் மேற்குப் பக்கச் சாரலில் வரிசையாக இயற்கையாக அமைந்த பல கற்குகைகள் காணப்படுகின்றன. இக்குகைகளில் மக்கள் வாழ்ந்தமைக்கான அடையாளங்கள் தெரிகின்றன. இங்குள்ள இரண்டு குகைகளில் மட்டுமே பிராமிக் கல்வெட்டுக் கள் 2 பொறிக்கப்பட்டுள்ளன.

தென்கிழக்கிலங்கையில் கதிர்காமத்தை ஆட்சி செய்த பாண்டிய சத்திரிய சிற்றரசர்கள் பற்றிய கல்வெட்டுக்கள் போவத்தகல, மொட்டையாகல்லு போன்ற இடங்களில் டாக்டர் பரணவித்தானவினால் பதிவு செய்யப்பட்டன. மாதனகந்த மலைக் கல்வெட்டுக்கள் இவரால் பதிவு செய்யப்படவில்லை. இவை அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டவையாகும். இங்கு காணப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு கல்வெட்டுக்களில் ஒன்று கதிர்காம சத்திரிய மன்னர்கள் பற்றியதாகும். இதில் "தர்மராஜாவின் மகன் தீசகுமாரனின் மகளான பாச்சீன பூமியின் அரசனின் மாதாவான சவெர குமாரியின் மகாசுதர்சன எனும் பெயருடைய குகை" எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கதிர்காம சத்திரியர்கள் 10 பேரில் ஒருவனான தர்மராஜாவின் மூன்று தலைமுறையினர் பற்றி தெரியவருகிறது.

(36)



*பாண்டியரின் மீன் சின்னம் பொறிக்கப்பட்ட மாதனகந்த கல்வெட்டு (No.36)*


இக்கல்வெட்டு 5 வரிகளில் மிகப்பெரிய கல்வெட்டாகப் பொறிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கல்வெட்டின் முடிவில் தண்டுடன் கூடிய சுவாஸ்திகா அடையாளமும், மீன் வடிவமும் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கதிர்காம சத்திரியர்கள் பாண்டிய வம்சத்தை சேர்ந்த இந்துக்கள் என்பது உறுதியாகிறது. இக்கல்வெட்டு தொல்லியல் ஆய்வாளர் பூஜ்ய எல்லாவல மேதானந்த தேரரால் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் கல்வெட்டு பொறிக்கப்பட்ட இக்குகை "மகா சுதர்சன குகை" எனக் கூறப்பட்டுள்ளது. மகாவிஷ்ணுவின் சக்கரத்தையே சுதர்சன சக்கரம் என்பர். இச்சக்கர வழிபாடு வல்லிபுரம், பாணந்துறை ஆகிய இடங்களில் வழிபடப்பட்டது. மாதனகந்த மலையிலும் இவ் வழிபாடு நிலவிய குகை இருந்துள்ளமை இக்கல்வெட்டின் மூலம் நிரூபனமாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பியன்கல - பக்கிஎல்ல

அம்பாறை நகரிலிருந்து மகா ஓயாவிற்கு செல்லும் வீதியில் 23கி.மீ தூரத்தில் பக்கிஎல்ல என்னுமிடம் அமைந்துள்ளது. இவ்விடத்தின் மேற்குப் பக்கத்தில் நவக்கிரி ஆறு குளமும், குளத்தை ஒட்டி ரஜகல எனப்படும் இராசமலைத் தொடரும் காணப்படுகின்றன. இம்மலைத் தொடரின் கிழக்குப் பக்கமாக உள்ள அடிவாரத்தில் பியன்கல அமைந்துள்ளது. இது பக்கிஎல்லையிலிருந்து 2கி.மீ தூரத்தில் உள்ளது.



*பியங்கல மலைக்குகை.*

பியங்கல மலைப்பகுதியில் ஏராளமான கற்குகைகள் காணப்படுகின்றன. இக்குகைகளில் 19 பிராமிக் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 7 கல்வெட்டுக்களில் தமிழ் பிராமிக்கே உரிய ''பருமகன்'' எனும் சொல்லும், ஒரு கல்வெட்டில் ''மருமகன்'' எனும் சொல்லும் பொறிக்கப் பட்டுள்ளன. மேலும் 3 கல்வெட்டுக்கள் இந்து சமயம் தொடர்பானவையாகும்.

(16) 


*சிவன் பெயர் பொறிக்கப்பட்ட பியங்கல கல்வெட்டு (No.16)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து சமயம் தொடர்பான ஒரு கல்வெட்டில் ''சுவாமி சிவபூதியின் குகை'' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. சிவ பூதிய என்பது சிவனின் அருளைப் பெற்றவன் எனப் பொருள்படுகிறது. எனவே இங்கு சிவ வழிபாடு நிலவியமையும், சிவனின் அருளைப் பெற்ற ஓர் சிவ பக்தன் இருந்தமையும் தெளிவாகத் தெரிகிறது.

அடுத்தக் கல்வெட்டில் வேலன் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. ''பெருமகன் தெழுவேலு உத்தியனின் மருமகன் பெருமகன் உதியின் மகன் ராமக்க வேலுவின் மகா சுதர்சன குகை'' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இங்கு வேல் வழிபாடு நிலவியுள்ளமை தெரிகிறது.

அடுத்த கல்வெட்டு வேலன் பற்றியும், பிராமணன் வேலுவின் மனைவியாகிய பருமகன் பற்றியும் குறிப்பிடுகிறது. ''பிராமணன் பகனின் புத்திரியாகிய பருமகள் திஸ்ஸவின் மகா சுதர்சன குகை'' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட இரண்டு கல்வெட்டுக்களிலும் ''மகா சுதர்சன குகை' எனப் பொறிக்கப்பட்டுள்ளமை இங்கு விஷ்ணு பகவானின் சுதர்சன சக்கர வழிபாடு நிலவியமையை எடுத்துக் காட்டுகிறது.

(13)


(14)


*வேலன், மருமகன், பிராமணன் ஆகிய பெயர்கள் பொறிக்கப்பட்ட பியங்கல கல்வெட்டுக்கள் (No.13, 14)*

பியன்கல கல்வெட்டுக்களில் ஒன்று வேதகாலத் தெய்வங்களின் ஒன்றான அக்கினியை குறிப்பிட்டுக் கூறுகின்றது. இதில் ''கமிக அக்கினியின் குகை'' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இக் கல்வெட்டுக்களை தொல்லியல் ஆய்வாளர் பூஜ்ய எல்லாவல மேதானந்த தேரர் பதிவு செய்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## சமன்கல - உகனை

அம்பாறையிலிருந்து மஹாஓயாவிற்கு செல்லும் வீதியில் உள்ள உகனை என்னுமிடத்திற்கும் பக்கிஎல்ல என்னுமிடத்திற்கும் இடையில் 28ம் கொலனி அமைந்துள்ளது. அம்பாறை நகரிலிருந்து 16 கி.மீ தூரத்தில் இவ்விடம் உள்ளது. இங்கிருந்து மேற்கு நோக்கி பண்டாரதுவ என்னுமிடத்திற்குச் செல்லும் வீதியில் 8 கி.மீ தூரத்தில் சமன்கல அமைந்துள்ளது.

சமன்கல மலையில் பல கற்குகைகள் காணப்படுகின்றன. இக் குகைகளில் ஒன்றில் ஆதிவேடர்கள் வரைந்த சித்திரங்கள் காணப்படுகின்றன. கற்குகைகளில் மொத்தமாக 16 பிராமிக் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் தமிழ் பிராமிக்குரிய ''பருமக'' எனும் சொல் பொறிக்கப்பட்ட 3 கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. ''பரத'' என்ற தமிழ்ச் சொல் பொறிக்கப் பட்ட கல்வெட்டு ஒன்றும் காணப்படுகின்றது.

(26)

(27)



*பெருமகன், பரதன் ஆகிய பெயர்கள் பொறிக்கப்பட்ட சமன்கல கல்வெட்டுக்கள் (No.26,27)*


மேலும் விஷ்ணு பகவானின் சுதர்சன சக்கர வழிபாடு நிலவிய ஓர் குகையும் இங்கு உள்ளது. இக்குகையில் ''தீசதெரச சுதர்சன'' எனப் பொறிக் கப்பட்டுள்ளது.

இங்குள்ள இன்னுமோர் கல்வெட்டில் சீதையின் இயற்பெயரான ''நகுலி'' என்ற சொல் பொறிக்கப்படடுள்ளது. ''சோமகண நகுலிய பஹினிய பருமக சூடகலச லேன'' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இதில் ''கண'' என்பது கண்ணன் எனப் பொருள்படும். இதன்படி இக்கல்வெட்டு சோம கண்ணன் நகுலியின் சகோதரி பெருமகள் சூளகலசவின் குகை எனும் பொருளில் காணப்படுகின்றது. இதில் சோமகண்ணன் எனும் இந்து சமய தெய்வத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது. ''கண'' எனும் சொல் பொறிக்கப்பட்ட பல கல்வெட்டுக்கள் அம்பாந்தோட்டை, அம்பாறை, அனுராதபுரம், குருநாகல் ஆகிய மாவட்டங்களில் பல இடங்களில் காணப் படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ள நகுலி எனும் பெயர் சீதையைக் குறிப்பதாகும். நகுலி எனும் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் சிலவே காணப்படுகின்றன. சீகிரியா, களிஒடை, திஸ்னாவுல கேம, வெலியாய ஆகிய இடங்களில் இவை காணப்படுகின்றன.

(34) (35)



(දකුණේ සිට වමට ලියා ඇත.)

*நகுலி, சுவாமி ஆகிய பெயர்கள் பொறிக்கப்பட்ட சமன்கல கல்வெட்டுக்கள் (No.34, 35)*

## முள்ளிக்குளம் மலை (நந்திகிரி) - பாலமுனை

அக்கரைப்பற்று நகரிலிருந்து கல்முனைக்குச் செல்லும் வீதியில் 7கி.மீ தூரத்தில் பாலமுனை என்னுமிடம் அமைந்துள்ளது. இங்கிருந்து மேற்கு நோக்கி வயல் வெளியூடாகச் செல்லும் பாதையில் சுமார் 4கி.மீ தொலைவில் வயல்கள் மத்தியில் நான்கு மலைகள் காணப்படுகின்றன. இம்மலைகளில் ஒன்றே முள்ளிக்குளம் மலையாகும். அம்பாறை நகரிலிருந்து இறக்காமம் ஒட்டுத் தொழிற்சாலை ஊடாக பயணம் செய்தும் முள்ளிக் குளம் மலையை அடையலாம்.




*முள்ளிக்குளம் மலை மலைக்குகை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைய காலங்களில் இங்கு சிவவழிபாடு நிலவியமையும், இதன் காரணமாக இம்மலை "நந்தி கிரி" எனப் பெயர் பெற்றமையும் இம்மலையில் பொறிக்கப்பட்டுள்ள பிராமிக் கல்வெட்டின் மூலம் தெரியவருகிறது. இக்கல்வெட்டில் "நதிகிரிய மத உபசிக திஸகுதஹ துத உபசிக திஸய" எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள "நதி கிரிய" எனும் பதம் நந்திகிரி எனப் பொருள்படுவதாக இக்கல்வெட்டைப் பதிவு செய்த தொல்லியல் ஆய்வாளர் எல்லாவல மேதானந்த தேரர் குறிப்பிட்டுள்ளார். இதன்படி நந்திகிரி எனப்படும் இம்மலையில் நந்திதேவர், அல்லது சிவன் வழிபாடு நிலவியிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.


(82)



*நந்திகிரி என்ற பெயர் பொறிக்கப்பட்ட முள்ளிக்குளம் மலை கல்வெட்டு (No.82)*

## புத்தங்கல - அம்பாறை

அம்பாறை நகரின் வடகிழக்குத் திசையில் 4கி.மீ தொலைவில் உள்ள அம்பாறை வைத்தியசாலையின் பின்பகுதியில் உள்ள காட்டின் மத்தியில் புத்தங்கல மலை அமைந்துள்ளது. இம்மலையின் கிழக்கில் ஒன்றரை கி.மீ தொலைவில் வளத்தாப்பிட்டி குளம் அமைந்துள்ளது.




*சீதாதேவி என்ற பெயர் பொறிக்கப்பட்ட புத்தங்கல மலைக்குகைக் கல்வெட்டு (No.471)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தங்கல மலையில் 5 மலைப்பாறைகள் காணப்படுகின்றன. இம் மலைப் பாறைகளிலும், மலைச்சாரலிலும் புராதன வழிபாட்டுத் தலங்கள் இருந்தமைக்கான ஆதாரங்களாக கருங்கற்தூண்கள், புராதன செங்கட்டிகள் ஆசனக்கற்கள் போன்றவை காணப்படுகின்றன. இம்மலை பாறைகளில் உயரமான பாறையில் 6 புராதன கட்டிட இடிபாடுகள் காணப்படுகின்றன. இங்கு தற்போது தூபி ஒன்றும், சிலைமனை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. மூன்று மலைப் பாறைகளுக்கு மத்தியில் ஓர் இயற்கையான நீர்ச்சுனை அமைந்துள்ளது. நீர்ச்சுனைக்கு இறங்குவதற்கு கல்லில் படிக்கட்டுக்கள் செதுக்கப்பட்டுள்ளன.

புத்தங்கல மலையில் ஒரு காலத்தில் இந்து சமய வழிபாடுகள் நிலவியமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன. இங்கு தூபி அமைப்பதற்காக ஓர் பழமை வாய்ந்த கட்டிடத்தை அகழ்ந்த போது அங்கு புதைத்து வைக்கப் பட்டிருந்த பெறுமதி வாய்ந்த ஓர் வெண்கலப் பேழை கிடைக்கப் பெற்றுள்ளது. இப் பேழையில் இந்து தெய்வச் சிலைகள் நான்கும், தங்கத்தோடும் காணப் பட்டுள்ளன. மேலும் இவ்விடத்தில் ஓர் சுவாஸ்திகா சின்னமும், சிறிய எட்டு வைரவர் சிலைகளும், மூன்று நந்தி உருவங்களும், புராதன மட்பாண்டத் துண்டுகளும், ஏராளமான புராதன நாணயங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இச்சின்னங்கள் யாவும் இங்குள்ள தொல்பொருள் காட்சி சாலையில் வைக்கப் பட்டுள்ளன.



*சீதாதேவி என்ற பெயர் பொறிக்கப்பட்ட புத்தங்கல மலைக்குகைக் கல்வெட்டு*

இங்கு காணப்படும் புராதன கருங்கற் தூண்களிடையே எட்டுபட்டை லிங்கக்கல் ஒன்றும் காணப்படுகின்றது. மலைப்பாறையின் கிழக்குப் பக்க சாரலில் கற்பாறையில் படிக்கட்டுக்கள் செதுக்கப்பட்டுள்ளன. இதன் வடக்குப் பக்கத்தில் 15 அடி நீளமும், 10 அடி அகலமும் கொண்ட ஓர் கட்டிடத்தின் இடிபாடுகள் உள்ளன. இக்கட்டிடத்தின் நடுவில் ஓர் குழி அமைக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளது. இதில் சிறிய நாயின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்விடத்தில் பாதச்சுவடு பொறிக்கப்பட்ட ஆசனக்கல் ஒன்றும் காணப் படுகின்றது. இவை யாவும் இங்கு நிலவிய இந்து சமய வழிபாட்டின் எச் சங்களாகக் கருதப்படுகின்றன. நந்தி உருவங்கள் சிவ வழிபாட்டையும், நாயின் வடிவம் வைரவர் வழிபாட்டையும் உறுதி செய்கின்றன.






திரிசூலம், நாகம், அம்மன், வைரவர், நந்தி சுவாஸ்திகா உருவங்கள்-புத்தங்கல.

பண்டைய காலங்களில் இங்கு ஓர் சிவவழிபாட்டுத் தலம் இருந்தமைக்கான ஆதாரமாக ஓர் பிராமிக் கல்வெட்டு இங்கு காணப்படுகின்றது. மொத்தமாக இங்கு 3 கல்வெட்டுக்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் இரண்டு 1970 ஆண்டு பேராசிரியர் பரணவித்தானவால் பதிவு செய்யப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் ஒன்று அண்மையில் தொல்லியல் ஆய்வாளர் பூஜ்ய எல்லாவல மேதானந்த தேரரால் பதிவு செய்யப்பட்டள்ளது. இவையாவும் புத்தங்கல மலைச்சாரலில் காணப்படும் கற்குகைகளில் பொறிக்கப்பட்டுள்ளன. இதில் எல்லாவல மேதானந்த தேரர் பதிவு செய்த கல்வெட்டில் ''கமிக சிவ புத திசமித்த'' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இங்கு சிவ வழிபாடு நிலவியுள்ளது என்பதை கூறக் கூடியதாக உள்ளது. இங்கு காணப்படும் லிங்கக் கல், சுவாஸ்திகா சின்னம், வைரவர் சிலைகள், நான்கு இந்து தெய்வச் சிலைகள், நந்தியின் வடிவம், நாயின் குறியீடு போன்றவை இங்கு ஓர் சிவாலயம் இருந்ததை மேலும் உறுதி செய்கின்றன.

இதைத் தவிர இங்கு இன்னுமோர் முக்கிய பிராமிக் கல்வெட்டு காணப் படுகிறது. இக்கல்வெட்டில் ''சீதா தேவிய அயக பருமக உதி புத பருமக சுஜிஹதச லேன அகத அனகத கடு திச சகச'' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இதில் பெருமகன் என்று குறிப்பிடப்பட்டுள்ள சொல் தமிழ் பிராமிக்குரிய சொல்லாகும். மேலும் ''பருமக உதி'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளமை இங்கு 10 கதிர்காம சத்திரிய மன்னர்களில் ஒருவனான உதியன் ஆட்சி நிலவிய மையைக் குறிப்பதாகும்.



*லிங்கக்கல்-புத்தங்கல (படத்தின் மத்தியில் உள்ளது.)*

இதை விட முக்கியமாக ''சீதாதேவி'' எனும் சொல் பொறிக்கப் பட்டுள்ளமை இங்கே இராமயண கால தொடர்பை காட்டுவதாக அமைகிறது. சீதையை இராவணன் சிறை வைத்த குகைகளில் சீதையின் பெயரை ''நகுலி'' என்றே குறிப்பிட்டுள்ளதாக ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். ஆனால் புத்தங்கல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வெட்டில் மட்டுமே சீதாதேவி என நேரடியாகவே பெயர் பொறிக்கப் பட்டுள்ளது. எனவே சீதையுடன் தொடர்புடைய குகைகளில் ஒன்று புத்தங்கல குகையாக இருக்கலாம்.

## ஹேனன்னேகல மலை - மகாஓயா

அம்பாறை நகரிலிருந்து கண்டிக்குச் செல்லும் வீதியில் 56கி.மீ தொலைவில் மகாஓயா என்னுமிடம் அமைந்துள்ளது. இங்கிருந்து வடமேற்காக ஓர் காட்டுப் பாதை மாதுருஓயா குளத்தின் ஊடாக மன்னம்பிட்டிக்குச் செல் கிறது. இப்பாதையில் மகாஓயாவிலிருந்து 12கி.மீ தூரத்தில் ஹேனன்னே கல மலை அமைந்துள்ளது. இம்மலையில் மிகப்பண்டைய காலத்தில் இந்து சமய தெய்வ வழிபாடுகள் நிலவியமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன.

இம்மலையிலுள்ள குகையில் ஓர் பிராமிக் கல்வெட்டு பொறிக்கப் பட்டுள்ளது. இதில் ''கமினி திசஹ பிதஹக மஜிம ரஜஹக நியதக மணி சபரிபோகனி சகஸ கிரிதிஸ்ஸ கமே கரஜினி திசஹமே விலகமே கசப நகரே மழுகமே நொகாபிக'' என இக்கல்வெட்டு கூறுகிறது. மேலும் கல் வெட்டின் முடிவில் ஓர் மீன் சின்னமும், சுவாஸ்திகா அடையாளமும் பொறிக்கப் பட்டுள்ளன.



406


*பாண்டியர்களின் மீன் சின்னமும், சுவாஸ்திகா சின்னமும் பொறிக்கப்பட்ட ஹேனென்னேகல கல்வெட்டு (No.406)*

இக்கல்வெட்டில் கமினி திசவின் தந்தையான மஜிமராஜன் பற்றி குறிப் பிடப்பட்டுள்ளது. கதிர்காமத்தை ஆட்சி செய்த 10 கதிர்காம பாண்டிய சத்திரிய வம்சத்து மன்னர்களின் தந்தையே கமனி என்பவனாவான். இக்கல் வெட்டில் கமினி திச எனக் குறிப்பிடப்பட்டிருப்பது இம்மன்னனையே. ஏனெனில் கல்வெட்டில் கமினிதிசவின் தந்தை மஜிமராஜ எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. மஜிமராஜா என்பது மீனவ ராஜன் அல்லது மீன் ராஜன் என்ப தாகும். மீன் சின்னம் பாண்டியருக்குரியதாகும். எனவே மீன் சின்னத்தைக் கொண்டுள்ள பாண்டிய மன்னன் என்பதையே மஜிமராஜன் என கல்வெட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்டுள்ளனர். அத்துடன் இதை உறுதிப்படுத்தும் விதத்தில் மீன் வடிவ கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான கல்வெட்டுக்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் குசலானகந்த முதல் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கொட்டதாமு ஹெல வரை உள்ளன.

இதுபோன்ற மீன் சின்னம் பொறிக்கப்பட்ட கதிர்காம சத்திரிய மன்னர்கள் பற்றி பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் கிழக்கிலங்கையில் பல இடங்களில் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுக்கள் பற்றி பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் குறிப்பிடுகையில் இக்கல்வெட்டுகளுக்குரியோர் பாண்டி நாட்டில் ஆட்சி செய்த ''ஆய்'' என்ற குறுநில மன்னர்களின் பட்டத்தினையும் தாங்கி காணப்படுவதாகவும், ஆய் என்ற குறுநில மன்னர்களது கல்வெட்டுக்கள் இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் காணப்பட்டாலும் இவ்விடத்திலேயே அதிகமாக காணப்படுவதாலும், மீனவன் எனப் பொருள் தரும் ''மஜி'' என்ற சொல் இக்கல்வெட்டுக்களில் ஒன்றில் காணப்படுவதாலும், பாண்டிய வம்சத்தவர் இல்லாவிட்டாலும் பாண்டியரின் கீழ் ஆட்சி செய்த குறுநில மன்னர்களாக இவர்கள் விளங்கியிருக்க வேண்டும் எனவும், அம்மரபை பேணிப் பாதுகாப்பதற்காக தமது கல்வெட்டுக்களில் இவ்வாறு மீன் சின்னத்தைப் பொறித்திருக்கலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் சாசனங்களிலும், இலக்கியங்களிலும் பாண்டியரைக் குறிக்கும் சொல்லாக ''மஜி'' என்ற பாளி சொல்லின் தமிழ்ப் பதமான ''மீனவன்'' காணப்படுவது ஈண்டு அவதானிக்கத்தக்கது என பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் குறிப்பிட்டுள்ளார்.



*ஹேனென்னேகல மலை.*

ஹேனன்னே கலகல்வெட்டின் படி கதிர்காம 10 சகோதரர்களின் தந்தையான கமனி என்ற மன்னனின் தந்தை மஜிமராஜன் என்பதும் கதிர்காம பாண்டிய சத்திரிய வம்ச சிற்றரசர்களின் கூட்டாட்சி தெற்கில் கதிர்காமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் வடக்கில் மாதுரு ஓயா வரை பரந்திருந்தது என்பதும் இக்கல் வெட்டுக்கள் மூலம் உறுதியாகிறது. மேலும் இக்கல்வெட்டில் பொறிக்கப் பட்டுள்ள சுவாஸ்திகா அடையாளம் இவர்கள் இந்துக்கள் என்பதையும் உறுதி செய்கிறது.

இப்பகுதியிலுள்ள மலைக் குகைகளில் பண்டைய காலம் முதல் வேடர்கள் வசித்து வந்துள்ளனர். இப்பகுதியிலுள்ள ஒமுனகல மலை, கொக்காகல மலை, நுவரகல மலை ஆகிய இடங்களில் இவர்கள் முருக வழிபாடு செய்துள்ளமை வரலாற்றுக் குறிப்புகள் மூலம் தெரிய வருகிறது. இது போன்றே ஹெனன்னேகல மலையிலுள்ள குகையிலும் ஆதி தமிழர்கள் வாழ்ந்துள்ளமைக்கான அடையாளங்களும், இவர்கள் வேல் வழிபாட்டில் ஈடுபட்டமைக்கான எச்சங்களும் காணப்படுகின்றன. இங்குள்ள ஓர் மலைக் குகையில் இரும்பினால் செய்யப்பட்ட வேல் சின்னங்கள் கண்டுப்பிடிக் கப்பட்டுள்ளன. இதே அமைப்பையுடைய வேல் சின்னங்கள் புத்தளம் மாவட்டத்திலுள்ள பொம்பரிப்பு எனும் பெருங்கற்கால மையத்தின் இடு காட்டிலும் கண்டெடுக்கப்பட்டன. இதன் மூலம் ஹேனன்னேகல புராதன காலத்தில் ஓர் இந்து வழிபாட்டுத் தலம் என்பதும், முருக வழிபாட்டில் ஈடுபாடுடைய கதிர்காம சத்திரிய மன்னர்களின் ஆட்சி இங்கு நிலவியுள்ளது எனவும் கூறக்கூடியதாக உள்ளது.

## நுவர கல மலை - மகாஓயா

மகாஓயாவிலிருந்து தென்கிழக்காக முல்லேகமவுக்கு செல்லும் வீதியில் 9கி.மீ தூரத்தில் உள்ள பொல்லேபெத்த என்னுமிடத்திலிருந்து கிழக்கு நோக்கி ரம்புக்கன் ஓயா ஆற்றைக் கடந்து மேலும் 4 கி.மீ சென்றால் நுவரகல மலை அடிவாரத்தை அடையலாம்.



404

*கதிர்காம பாண்டிய சத்ரிய மன்னர்கள் இருவரின் பெயர்கள் பொறிக்கப்பட்ட நுவரகல கல்வெட்டு* (No.404)

இம்மலை அடிவாரத்திலிருந்து மலை உச்சிக்கு ஏறுவதற்கு மேற்குப் பக்கத்தில் ஓர் வழி உள்ளது. ஏனைய பகுதிகள் செங்குத்தாக அமைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கிருந்து ஒன்றரை கி.மீ தூரத்திற்கு ஓர் பழமை வாய்ந்த மலை ஏறும் பாதை காணப்படுகிறது. இப்பாதை ஓர் கற்குகையில் முடிவடைகிறது. இக்கற்குகை மிகவும் விசாலமானதாகக் காணப்படுகிறது. சுமார் 150 பேர் வரை வெயில், மழை படாமல் இருக்கக் கூடிய அளவு பெரியது இக்குகை. இக்குகையின் மேலே பிராமி எழுத்தில் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டில் ''தெவன பிய மஹாரஜஹ கமணிதிசஹ புத மஹாதிச அயஹ லேன சஹிக'' எனும் வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. இது ''தெவனபிய மகாராஜனின் கமனிதிசனின் புதல்வன் மகாதிசனின் குகை'' என்பதாகும். கமனிதிசன் என்பவனே கதிர்காம பாண்டிய சத்திரிய மன்னர்கள் 10 பேரின் தந்தையாவான். இவனின் புதல்வர்களில் ஒருவனின் பெயர் மகாதீசன் என்பதாகும். கமனிதீசன் தேவ நம்பிய தீசனின் ஆட்சியில் கதிர்காமத்தை சுயாதீனமாக ஆண்ட சிற்றரசனாவான். மேற்குறிப்பிட்ட இரண்டு பேரின் பெயர்களும் இக்கல்வெட்டில் காணப்படுவதோடு இப்பகுதி கதிர்காம பாண்டிய சத்திரியன் மகாதீசனின் ஆட்சியின் கீழ் இருந்தது என்பதும் இக்கல்வெட்டின் மூலம் உறுதியாகிறது. கதிர்காம சத்திரிய மன்னர்கள் முருக வழிபாட்டில் மிகுந்த ஈடுபாடுடையவர்களாதலால் நுவரகல மலையிலும் முருக வழிபாடு நிலவியிருந்துள்ளது எனக் கூறலாம்.

நுவரகல மலைப் பகுதி புராதன காலம் முதல் ஆதிகால வேடர்கள் வாழ்ந்த பகுதியாக விளங்குவதாகும். வேடர்களால் தமது குல தெய்வமான முருகனுக்கு கோயில்கள் அமைத்து வழிபட்ட ''கோயில் வனமே'' எனும் பகுதியில் ஒன்றாகவே நுவரகல மலை விளங்குகிறது. ஆதிகாலம் முதல் முருக வழிபாடு நிலவிய இடங்களில் நுவரகல மலையும் ஒன்றாகும். ஹென்றி பார்க்கர், சீ.ஜீ.செலிக்மன் ஆகியோரின் நூல்கள் மூலம் இக்கூற்று மேலும் உறுதியாகின்றது.


நுவரகல மலை கற்குகையிலிருந்து மேலும் மலை உச்சிக்கு ஏறும் போது ஓர் பெரிய கல் நீர்ச்சுனையைக் காணக்கூடியதாக உள்ளது. இந்நீர்ச் சுனை எந்தக் காலத்திலும் வற்றுவதில்லை என இப்பகுதியில் வசிக்கும் பழங்குடி மக்கள் கூறுகின்றனர். சுமார் 80 அடி நீளமும், 70 அடி அகலமும் கொண்ட இச்சுனையின் நீர் மிகவும் சுத்தமாகக் காணப்படுகின்றது.

நுவரகல மலையைச் சுற்றியும் அருகில் உள்ள பொல்லேபெத்த எனும் வேடர் கிராமம் வரையிலும் சுமார் 100 ஏக்கர் பரப்பளவில் புராதன கட்டிடங் களின் இடிபாடுகளும், கருங்கற் தூண்களும், புராதன செங்கட்டிகளும் பரந்து காணப்படுகின்றன. மலை மீதுள்ள பெரிய நீர்ச்சுனை, விசாலமான கற்குகை, அடிவாரத்தில் பரந்த அளவில் காணப்படும் இடிபாடுகள், மன்னர்கள் பற்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வெட்டு, இவையனைத்தும் இம்மலை ஓர் கோட்டையாகவும், இங்கு ஓர் உப இராசதானியும், மலையடிவாரத்தில் ஓர் பண்டைய நகரமும் அமைந் திருந்தமையை உணர்த்துகிறது. இந்த உப இராசதானி கதிர்காம பாண்டிய சத்திரிய மன்னர்களால் ஆளப்பட்டுள்ளது என்பதும் இங்குள்ள கல் வெட்டின் மூலம் உறுதியாகிறது.

களனியை ஆட்சி செய்த சிவன் எனும் மன்னனின் மருமகனான காக்க வண்ண தீசனின் (கவந்தீசன்) சகோதரியான சோமதேவி, கிரி அபயன் எனும் இளவரசனை மணம் முடித்து அவனுடன் கிரி நுவர எனும் இடத்தில் ஆட்சி செய்ததாக தாதுவம்சம் எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. கிரி அபயன் கிரிநுவரவில் ஆட்சி செய்து வந்த காலத்தில் துட்டகைமுனு தாவா எனும் தளபதியுடன் இங்கு வந்ததாகவும், கிரி அபயனுக்கும், துட்டகைமுனுவுக்கும் இவ்விடத்தில் இனம் தொடர்பான வாக்குவாதம் ஏற்பட்டதாகவும், இதன் காரணமாக கிரி அபயன் தனது மனைவியுடன் சேரு நாட்டுக்குச் சென்ற தாகவும் இந்நூலில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.



*நுவரகல மலை.*

இக்குறிப்பின்படி களனியை ஆட்சி செய்த சிவன் எனும் மன்னன் தமிழ் மன்னன் என்பதாலும், இவனின் மருமகனான காக்கைவண்ணதீசனின் சகோதரி கிரி அபயன் எனும் தமிழ் இளவரசனை மணம் முடித்ததாலும், இவர்களுக்குள் தமிழர் தொடர்பு இருப்பதனாலும், துட்டகைமுனுவுடன் தமிழர் இன தொடர்பான வாக்குவாதம் இடம் பெற்றுள்ளது. கிரி அபயன் என்பவன் இங்கு பொறிக்கப்பட்ட கல்வெட்டில் குறிப்பிட்டுள்ள மகா தீசனின் சகோதரன் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெலும்பத் பொக்குண - கூமுனை

பொத்துவிலில் இருந்து கூமுனை செல்லும் கிழக்குக் கரையோரப் பாதையில் பானமை, உகந்தை ஆகிய கிராமங்களைக் கடந்து சென்றதும் வாகூர களப்பு என்ற இடம் உள்ளது. இங்கிருந்து வாகூரகளப்பின் தெற்குப் பக்கமாக 5கி.மீ தூரத்தில் நெலும்பத் பொக்குண அமைந்துள்ளது. அடர்ந்த காட்டின் நடுவில் இப்பகுதி உள்ளது.

இங்கு சுமார் 280அடி உயரமான மலை ஒன்று உள்ளது. இம்மலை மீதுள்ள குன்றில் இரு பெரிய நீர்ச்சுனைகள் காணப்படுகின்றன. இவற்றின் அருகில் ஓர் புராதன வழிபாட்டிற்குரிய கட்டிடங்கள் இருந்தமைக்கான சான்றுகளாக கற்தூண்களும், செங்கற்களும், கட்டிட இடிபாடுகளும் காணப் படுகின்றன. மலை மீது கல்வெட்டொன்றும் பொறிக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.



No. 95

*நாகமகாராஜன் எனும் பெயர் பொறிக்கப்பட்ட நெலும்பத்பொக்குன கல்வெட்டு* (No.95)

நெலும்பத் பொக்குன எனும் தாமரைச் சோற்றுக்கேணி (கற்சுனை) அமைந்துள்ள மலைப் பாறையில் பொறிக்கப்பட்டுள்ள பிராமிக் கல்வெட்டு இரண்டு வரிகளில் நீளமாகக் காணப்படுகின்றது. இதில் நாகமகாராஜனின் மகனான மளுதீச மகாராஜனால் மகாநகரம் எனும் இடத்தில் அறவிடப்பட்ட நீர் வரியை இங்கிருந்த தொசகல எனும் வழிபாட்டுத்தலத்தில் இடம்பெற்ற ஆரியவாச எனும் திருவிழாவிற்காகக் கொடுத்தமை பற்றிய செய்தி கல் வெட்டாகப் பொறிக்கப்பட்டுள்ளது. இதில் நாகமகாராஜா எனக் குறிப்பிடப் பட்டுள்ள மன்னன் கதிர்காம பாண்டிய வம்ச சத்திரிய மன்னர்கள் 10 பேரில் ஒருவனாவான். இவன் நாக வழிபாடு மேற்கொண்டவன் என்பதோடு, முருக வழிபாட்டையும் இம்மன்னர்கள் பேணி வந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கமன் கண்டி

திருக்கோயிலிலிருந்து தெற்குப் பக்கமாக 13 கி.மீ தூரத்தில் சங்கமன் கண்டி மலை அமைந்துள்ளது. இங்குள்ள ஓர் மலைப்பாறைக் குகையில் தமிழ் பிராமிக் கல்வெட்டுக்கள் இரண்டு பொறிக்கப்பட்டுள்ளன.

இக் கல்வெட்டுக்களில் ஒன்றில் ''பருமக'' எனும் தமிழ் பிராமிக்கே உரிய சொல் காணப்படுகின்றது. இதில் ''பருமக வரளி புதஹ உபசக உதிய லேன'' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இது பெருமகன் வரளியின் மகன் பக்தன் உதியனின் குகை எனப் பொருள்படுகிறது. உதியன் என்பவன் கதிர்காம இராச்சியத்தை ஆட்சி செய்த 10 பாண்டிய சத்திரிய வம்சத்து மன்னர்களில் ஒருவனாவான். இரண்டாவது கல்வெட்டின் முற்பகுதி அழிந்த நிலையில் இறுதிப்பகுதியில் மட்டும் ''குச லேன'' அதாவது குசனின் குகை எனப் பொறிக்கப்பட்டுள்ளது.




சங்கமன் கண்டி கல்படுக்கை இடிபாடுகள்.

குசன் என்பவனும் 10 கதிர்காம சத்திரிய சகோதரர்களில் ஒருவனாவான். எனவே சங்கமன் கண்டி கற்குகைகளிலுள்ள கல்வெட்டுக்கள் மூலம் இப்பகுதி கதிர்காம சத்திரியர்களால் கூட்டாக ஆட்சி செய்யப்பட்ட பிரதேசம் என்பது தெளிவாகத் தெரிகிறது.

சங்கமன்கண்டி காட்டுப் பிள்ளையார் கோயிலின் பின்பக்கத்தில் சுமார் ஒரு கி.மீ தூரத்தில் ஓர் பண்டைய நகரத்தின் இடிபாடுகள் காணப்படுகின்றன. சுமார் 4 மைல் பரப்பளவில் இவை உள்ளதாக இப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலங்களில் இப்பகுதியை ஆட்சி செய்த கதிர்காம சத்திரிய மன்னர்களின் அரண்மனையினதும், அதை ஒட்டிய நகரத்தினதும் இடிபாடுகள் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.



*சங்கமன் கண்டி கல்வெட்டு*

கதிர்காம சத்திரியர்கள் இப்பகுதியை ஆட்சி செய்வதற்கு முன்பு பூர்வீக நாகர் குலத்தவர்களின் இராஜதானியாக சங்கமன்கண்டி விளங்கியமையும், பின்பு கலிங்கரின் செல்வாக்குடன் விளங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

## திவியாகல மலை - பாதாகொடை

அம்பாறை நகரின் தென்மேற்கில் சுமார் 20 கி.மீ தூரத்தில் திவியாகல மலை அமைந்துள்ளது. அம்பாறையிலிருந்து 18 கி.மீ தூரத்தில் உள்ள தமனை சந்தியிலிருந்து பாதாகொடை என்னுமிடத்திற்கு செல்லும் வீதியிலிருந்து உள்பக்கமாக காட்டின் மத்தியில் இவ்விடம் உள்ளது. அம்பாறை நகரிலிருந்து 14 கி.மீ தூரத்திலுள்ள பரஹாக்கலை என்னுமிடத்திலிருந்து பாதாகொடை ஊடாகவும் திவியாகல மலைக்குச் செல்லலாம். சேனநாயக்க சமுத்திரத்தின் தெற்கு வாய்க்காலின் ஓரத்தில் இம்மலை காணப்படுகிறது.

திவியாகல மலை சுமார் 4 ஏக்கர் பரப்பளவுடைய விசாலமான படர்ந்த மலையாகும். இம்மலையில் புராதன காலத்து வழிபாட்டுத்தலங்கள் இருந்தமைக்கான கற்தூண்கள், புராதன செங்கட்டிகள், ஆசனக்கற்கள், குழிக்கற்கள் போன்றவை பரவிக் காணப்படுகின்றன. மேலும் கற்சுனைகள் இரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு காணப்படுகின்றன. அடிவாரத்தில் இருந்து மலைக்கு ஏறுவதற்கு சுமார் 75 படிகள் பாறையில் செதுக்கப்பட்டுள்ளன. மலையின் மேற்கிலும், தெற்கிலும் இறங்குவதற்கான வழிகள் உள்ளன. வடக்குப் பக்கத்தின் பல கற்குகைகள் காணப்படுகின்றன. இக்குகைகளில் ஆதியில் மக்கள் வாழ்ந் தமைக்கான அடையாளங்கள் காணப்படுகின்றன. இக்குகைகளில் இரண்டு பிராமிக் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. மலைப்பாறை மீது மேலும் ஓர் பிராமிக் கல்வெட்டு காணப்படுகிறது.



திவியாகல கல்வெட்டு


கற்குகையில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்களில் ஒன்றில் ''மனொர குட வ..... ஸித'' என எழுதப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் நடுப்பகுதி எழுத்துக்கள் அழிந்துள்ளன. ''மனோர'' எனும் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் இதுவரை வேறெங்கும் கிடைக்கவில்லை. அடுத்த கல்வெட்டு ''மஹாதிச ஜிதய உபசிக'' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இதில் குறிப் பிடப்பட்டுள்ள மகாதிச கதிர்காம இராஜதானியை ஆட்சி செய்த பாண்டிய சத்திரிய சகோதரர்களில் ஒருவனாவான். மகாதிசவின் பெயர் பொறிக்கப்பட்ட பல கல்வெட்டுக்கள் தெற்கு, மற்றும் கிழக்கு பகுதிகளில் காணப்படுகின்றன. பாண்டிய தமிழ் இந்து மன்னர்களான இவர்களின் ஆதிக்கத்தின் கீழ் திவியாகல மலைப்பகுதியிலும் இந்து சமய வழிபாடுகள் செல்வாக்குடன் விளங்கியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

## கஞ்சிக்குடிச்சாறு

திருக்கோயிலில் இருந்து தென்மேற்கில் 19 கி.மீ தொலைவில் கஞ்சிக்குடிச் சாறு கிராமம் அமைந்துள்ளது. இங்குள்ள குளத்தின் அருகில் சுமார் 150

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடி உயரமான பரந்த ஓர் மலைப்பாறை காணப்படுகிறது. இதன் மேற்குப் பக்கத்தில் கஞ்சிக்குடிச்சாறு குளம் கட்டப்பட்டுள்ளது. இம்மலை வள்ளி யம்மன் மலை என அழைக்கப்படுகிறது. வள்ளி மலையின் மேற்குப் பக்கத்தில் குளத்தை நோக்கியவாறு 10 கற்குகைகள் காணப்படுகின்றன.



*கஞ்சிக்குடிச்சாறு மலைக்குகைகள்.*

இக்குகைகளில் ஆதியில் மனிதர்கள் வாழ்ந்தமைக்கான எச்சங்கள் தென்படுகின்றன. இவற்றில் இரண்டு தமிழ் பிராமிக் கல்வெட்டுக்கள் பொறிக் கப்பட்டுள்ளன. ''பருமக வசப புத வச'' என ஓர் கல்வெட்டும், ''பருமகன புனச குத பத மஹதிசஹ லென'' என அடுத்த கல்வெட்டிலும் வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன. இவ்விரண்டு கல்வெட்டுக்களிலும் தமிழ் பிராமிச் சொல்லான ''பருமக'' எனும் பதம் காணப்படுகிறது. முதலாவது கல்வெட்டு ''பெருமகன் வசபனின் மகன் வச.....'' எனவும், அடுத்தது ''பெருமகன் புனசகுத்தனின் மகன் பெருமகன் மஹாதீசனின் குகை'' எனவும் பொருள் படுகிறது.

கல்வெட்டில் காணப்படும் மஹாதீசன் என்பவன் கதிர்காம பாண்டிய சத்திரிய மன்னர்கள் 10 பேரில் ஒருவனாவான். இம்மன்னர்களின் கூட்டாட்சி கஞ்சிக்குடிச்சாறு பகுதியிலும் நிலவியுள்ளமை கல்வெட்டின் மூலம் உறுதி யாகிறது. இவர்கள் காலத்தில் இப்பகுதியில் முருகவழிபாடும், சிவ வழிபாடும் கஞ்சிக்குடிச்சாறு பகுதியில் செல்வாக்கு பெற்று விளங்கியுள்ளன. இங்கிருந்து எடுக்கப்பட்ட ஓர் கல்வெட்டுதுண்டு திருக்கோயில் காஞ்சிரங் குடா எனும் இடத்தில் உள்ளது. இதில் திரிசூலக் குறியீடும், இரு மீன் சின்னங்களும், சில பிராமி எழுத்துக்களும் காணப்படுகின்றன. இதன் மூலம் கஞ்சிக்குடிச்சாறு பகுதியில் சிவ வழிபாடு நிலவியுள்ளமை தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## கலகிட்டி ஓடை நாகமலை - பொத்துவில்

பொத்துவிலில் இருந்து சியம்பலாண்டுவைக்குச் செல்லும் வழியில் உள்ள 9 வது மைல் கல்லின் தெற்கில் 3 கி.மீ தொலைவில் கலகிட்டி ஓடை மலை அமைந்துள்ளது. இம்மலையில் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது.

இக்கல்வெட்டில் மகாநாக எனும் மன்னனின் பெயர் பொறிக்கப் பட்டுள்ளது. இது கதிர்காமத்தை ஆட்சி செய்த 10 பேரில் ஒருவனது பெயராகும். மேலும் இம்மலை நாகபப்பத என கல்வெட்டில் பொறிக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் கதிர்காம சத்திரியர்களின் ஆட்சி இங்கு நிலவி யமையும், கலகிட்டி ஓடைமலை பண்டைய காலத்தில் நாகமலை என்ற பெயரைக் கொண்டிருந்தமையும் தெரிய வருகிறது. அதே சமயம் இம் மலையில் நாகவழிபாடு செல்வாக்கு பெற்றிருந்தமையும் உறுதியாகிறது.

## நீலகிரி மலை - லாகுகல

பொத்துவிலில் இருந்து சியம்பலாண்டுவைக்குச் செல்லும் வழியில் 14 கி.மீ தூரத்தில் லாகுகல என்னுமிடம் அமைந்துள்ளது. இங்கிருக்கும் 305 வது கி.மீ கல்லின் தெற்குப் பக்கமாக 6 கி.மீ தொலைவில் காட்டின் மத்தியில் நீலகிரிமலை அமைந்துள்ளது. லாகுகலையிலிருந்து 4 கி.மீ தூரத்தில் ஹெடஓயா எனும் ஆறு குறுக்கிடுகிறது. இவ்வாற்றைக் கடந்து மேலும் 2 கி.மீ சென்றதும் நீலகிரி மலையைக் காணலாம்.



*நீலகிரி மலை*

நீலகிரி மலையில் ஏறுவதற்கு அடிவாரத்திலிருந்து மலைப்பாறையில் படிகள் செதுக்கப்பட்டுள்ளன. மலை உச்சிவரை சுமார் 200 அடி தூரத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிகள் செதுக்கப்பட்டுள்ளன. சுமார் 50 அடிக்கு ஒன்று என்ற வகையில் இடையில் களைப்பாறும் இடங்கள் காணப்படுகின்றன. இவ்விடத்தில் ஓர் சிறிய சமதளமும் அதில் அரைவட்டக்கல்லும் காணப்படுகின்றன. இப்படிகளின் முடிவில் கற்குகைகள் சில வரிசையாகக் காணப்படுகின்றன. இக்குகைகளில் இரண்டில் பரிவார மூர்த்திகள் இருந்தமைக்கான ஆசனங்களின் எச்சங்கள் காணப்படுகின்றன. மேலும் இங்கு சுவர்கள் இருந்தமைக்கான அடையாளங்களும் செங்கற்கள் சிலவும் தெரிகின்றன.

இக்குகைகளின் கிழக்குப் பக்கத்தில் சற்று தூரத்தில் மேலும் சில கற்குகைகள் வரிசையாகக் காணப்படுகின்றன. இக்குகைகளுக்குச் செல்ல சற்று இறக்கத்தில் ஒடுங்கிய பாதையூடாக சிறிய வழி ஒன்று காணப்படுகிறது. இங்கு பல குகைகள் இருந்தாலும் 3 குகைகளில் மாத்திரமே கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பிராமி எழுத்துக்களில் பொறிக்கப்பட்ட இக்கல்வெட்டுக்களில் ஒன்று "பருமக" எனும் தமிழ்மொழிக்குரிய பிராமிச் சொல்லுடன் காணப்படுகிறது. இதில் "பருமக நமர புத புசஹ" எனப் பொறிக்கப்பட்டுள்ளது.

நீலகிரிமலை உச்சியில் மலைப்பாறைகள் இரண்டு காணப்படுகின்றன. இவை இரண்டிலும் இரு வழிபாட்டுத்தலங்கள் இருந்தமைக்கான அடையாளங்கள் தெரிகின்றன. புராதன செங்கட்டிகள் பல பரவலாக ஆங்காங்கே காணப்படுகின்றன. மலையிலும், மலை அடிவாரத்திலும் பல கற்தூண்கள் காணப்படுகின்றன. குழிக்கற்கள், ஆசனக்கற்கள், பாதச்சுவடு கல், கற்படுக்கை, காசுகள் வைக்கப்பட்டிருந்த குழி போன்றவை காணப்படுகின்றன. இவற்றைவிட முக்கியமாக ஆவுடையார் இல்லாத லிங்கம் போன்ற கல் ஒன்றும் காணப்படுகின்றது. இது இங்கு நிலவிய சிவவழிபாட்டின் சின்னமாகும்.

நீலகிரி மலையின் வடக்குப் பக்கமாக சற்று தூரத்தில் பழமைவாய்ந்த ஓர் தூபியின் இடிபாடுகள் காணப்படுகின்றன. நீலகிரி மலை, தூபி ஆகியவற்றை மையமாகக் கொண்ட சுமார் 90 ஏக்கர் பரப்பளவில் இடிபாடுகள் காணப்படுகின்றன. இவை இங்கிருந்த பழமையான ஓர் குடியிருப்பின் எச்சங்கள் எனக் கூறப்படுகிறது. இக்குடியிருப்பின் அருகில் நீலகிரிகுளம் காணப்படுகிறது. இது "ஹத்பிந்து மகடவெவ" என அழைக்கப்படுகிறது.

நீலகிரி மலைப்பகுதியில் பௌத்த, இந்து சமய வழிபாடுகள் நிலவியுள்ளன. இங்கிருந்த ஆதி மக்கள் இந்து தெய்வங்களை பயபக்தியுடன் வழிபட்டு வந்துள்ளனர். நீலகிரி மலைக்குச் செல்லுமுன் அடிவாரத்தில் ஓர் வட்டமான மேடையில் மரக்கொப்புகளை முறித்துப் போட்டு விநாயகரையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகப்பெருமானையும் வணங்கிச் செல்வது இன்னும் காணப்படும் நடைமுறையாகும். இவ்விடத்தில் விநாயகர் கோயில் ஒன்று புராதன காலத்தில் அமைந்திருந்ததாகக் கூறப்படுகிறது.

நீலகிரி மலைப்பகுதியில் புராதன காலத்தில் ஓர் பிராமணர் குடியிருப்பு இருந்தமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன. இங்கு குகைக் கல்வெட்டுக்களைத் தவிர இரு பாறைக் கல்வெட்டுக்களும் பிராமி எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. நீலகிரி தூபியின் வடக்கில் உள்ள கொட்ட பெதுரு கல (தலையணை பாய் கல்) என்னுமிடத்தின் அருகில் அமைந்துள்ள ஓர் சிறிய மலைக் குகையின் பக்கத்தில் இருக்கும் பாறை மீதே இக்கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டுக்களில் முதலாவது கல்வெட்டு பொ.ஆ. 1ம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்டுள்ளது. தேவநம்பியதீசனின் மருமகளான குட்டகண்ண தீசனின் மகனான உபராஜதீசனின் மனைவியான சூலசிவதேவியால் உத்தர சிவபர்வதத்தில் உள்ள வழிபாட்டுத் தலத்திற்கு (விகாரைக்கு) கபுறுகமகுளம், சேத்திய குளம், அக்கரக்க குளம் ஆகியவையும் இவற்றின் பாசன நிலங்களும் நாலா பக்கமும் உள்ள சங்கத்தார்க்கு வழங்குதல் வேண்டும் எனக் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு தமிழ்ப் பிராமி எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. இதில் தமிழ் பிராமிக்குரிய ''மருமகன'' எனும் பதம் காணப்படுகிறது. இக்கல்வெட்டில் எழுத்துக்கள் ஆறுவரிகளில் பொறிக்கப்பட்டுள்ளன. இக் கல்வெட்டில் உள்ள சூல சிவதேவி, உத்தரசிவபர்வதம் ஆகிய பெயர்கள் இங்கு நிலவிய சிவவழிபாட்டைக் கூறுவதாகும். நீலகிரி மலையின் வடக்கில் ஓர் சிவனின் மலை இருந்துள்ளது. இதுவே ''உத்தரசிவபர்வத'' என அழைக்கப்பட்டுள்ளது.



நீலகிரி மலைக் கல்வெட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது கல்வெட்டு சற்று சேதமடைந்தும் எழுத்துக்கள் பொறிக்கப் பட்டுள்ள பாறையின் மேற்பரப்பு சிதைவடைந்தும் காணப்படுகிறது. ஆறு வரிகளில் பொறிக்கப்பட்டுள்ள இக்கல்வெட்டின் எல்லா வரிகளிலும் முற்பகுதி சிதைவடைந்துள்ளது. மேலும் மூன்றாவது வரியின் எழுத்துக்கள் முற்றாக சிதைவடைந்துள்ளன. இக்கல்வெட்டே இங்கிருந்த பிராமணர் குடியிருப்பு பற்றிக் கூறுகிறது. இதில்

....... அரசனின் மகனான ஜேட்டதிஸ்ஸ அரசனின்

............. மூன்றாவது தினத்தில் மகேஷிகா

.............. பமுனுகமவில்

............. சகோதரியான மந்திரி

........ யின் பக்கத்தில் அமைந்துள்ள

........... மகாபிக்கு சங்கத்தார்க்கு .........

எனப் பொறிக்கப்பட்டுள்ளது.

இதில் குறிப்பிடப்பட்டுள்ள அரசனான ஜேட்டதீசன் பொ.ஆ. 266-276 காலப்பகுதியில் இலங்கையை ஆட்சி செய்த மன்னனாவான். இவனது காலத்தில் நீலகிரி மலைப்பகுதியில் ஓர் பிராமணர் கிராமம் இருந்துள்ளமை. இக்கல்வெட்டின் மூலம் நிரூபனமாகிறது. கல்வெட்டில் பிராமணர் கிராமம் ''பமுனுகம'' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பிராமணர் கிராமத்தின் பிரதானி ஒருவரின் சகோதரி அமைச்சராகவும் இருந்துள்ளமை கல்வெட்டின் மூலம் தெரியவருகிறது.

## லைன் மலை - (சிவன் மலை) - பொத்துவில்

பொத்துவில் நகரிலிருந்து அக்கரைப்பற்றுக்கு செல்லும் வழியில் 5 கி.மீ தொலைவில் உள்ள றொட்ட சந்தியிலிருந்து மேற்குப்பக்கமாக ஒன்றரை கி.மீ தூரத்தில் றொட்டகுளம் அமைந்துள்ளது. இக்குளத்தின் அருகில் லைன் மலை அமைந்துள்ளது. இம்மலைக்குச் செல்ல இன்னுமோர் வழியும் உள்ளது. பொத்துவிலில் இருந்து சியம்பலாண்டுவைக்குச் செல்லும் வீதியில் 9 கி.மீ தூரத்தில் செங்காமம் (செங்கமுவ) என்னுமிடம் உள்ளது. இங்கிருந்து வடக்குப்பக்கமாக ஒரு கி.மீ தூரத்தில் உள்ள செங்காமம் குளத்தைக் கடந்து அருகில் உள்ள கரந்தஓயா ஆற்றையும் கடந்ததும் லைன் மலையை அடையலாம்.

லைன் மலைப்பகுதி சிற்றாறுகள் பல ஓடும் வளமான நீர்ப்பாசனப் பிரதேசமாகும். றொட்ட குளத்தின் வடமேற்குப் பக்கத்தில் 30 கி.மீ தூரத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள கோவிந்தமலையின் வடக்குப்பக்கத்தில் உற்பத்தியாகி தென்கிழக்கு நோக்கி ஓடும் கோவிந்த ஓயாவும், கந்தகெட்டிய மலைப்பகுதியிலிருந்து வரும் புஸ்காவுல ஓயாவும் பல்லேகம என்னுமிடத்தில் இணைந்து கரந்தஓயா எனும் பெயரில் கிழக்கு நோக்கி ஓடுகிறது. கரந்த ஓயாவின் வடபகுதியில் உள்ள பக்மிட்டியாவ, மிரகல ஆகிய பகுதிகளில் உள்ள மலைக்காடுகளிலிருந்து வரும் தூவிலிகல்ஓயா எனும் ஆறும், அதன் தென்பகுதியிலிருந்து வரும் கும்புக்கொல்ல ஓயாவும் இணைந்து நாவல் ஆறு எனும் பெயரில் தென்கிழக்கு நோக்கிக் ஓடுகிறது. கரந்த ஓயாவும், நாவல் ஆறும் ரத்தல்குளம் எனும் பழைய வில்லுக்குளத்தின் அருகில் ஒன்றிணைந்து பின்பு பிரிகிறது. அதன் ஒரு கிளை ரொட்டை ஆறு என்ற பெயரில் கிழக்குப் பக்கமாகப் பாய்ந்து ரொட்டை குளத்திற்கு நீரை வழங்குகிறது. அடுத்த கிளை கரந்த ஓயா என்ற பெயரிலேயே மேலும் மூன்று கிளைகளாகப் பிரிந்து அறுகம் குடா களப்பில் சங்கமாகிறது. ரொட்டை குளத்திற்கு கும்புக்கொல்ல பகுதியில் இருந்து வரும் மூங்கில் ஆற்றின் (கொய்பல ஆறு) மூலமும் நீர் கிடைக்கிறது. இப்படி பல சிற்றாறுகள் நிறைந்த பகுதியிலேயே லைன்மலை அமைந்துள்ளது.


லைன்மலையிலும் மலையைச் சுற்றியும் வழிபாட்டுத்தலங்கள் இருந்தமைக்கான அடையாளங்கள் தெரிகின்றன. சிதறிக்கிடக்கும் புராதன செங்கட்டிகள், அரைவட்டக்கல், கற்தூண்களின் துண்டுகள் போன்றவற்றைக் காணக்கூடியதாக உள்ளது. இம்மலையில் புராதன காலத்தில் ஓர் சிவாலயம் இருந்தமைக்கான சான்றுகள் உள்ளன. இம்மலையில் மூன்று பிராமிக் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்றே வாசிக்கக் கூடியதாக உள்ளது. ஏனைய இரண்டு கல்வெட்டுக்களும் சிதைவடைந்து எழுத்துக்கள் அழிந்துபோன நிலையில் காணப்படுகின்றன. எழுத்துக்கள் வாசிக்கக் கூடிய நிலையில் உள்ள கல்வெட்டு 4 வரிகளைக் கொண்டதாகும்.

இக்கல்வெட்டில் ''சித்தம் தேவநம்பிய திசமஹரஜஹ மனுமகரகே குடகன ரஜஹ புத ரஜ அபய க நாக மஹரஜ க தகபுனக ஆதி கிரிகமக ஆதி க சிபவதஹி பிகு சகயே நியதே மி தி அலசரஹி கர கடிதே'' என எழுதப்பட்டுள்ளது. இது கடவுளின் நண்பனான தீசனின் பேரனும், குட்டகண்ணனின் மகன்மார்களான நாகன், அபயன் ஆகியோர் சிபப்பத (சிமலை) மலையிலுள்ள சங்கத்தார்க்கு தக்கபுன, கிரிகம ஆகிய கால்வாய்கள் இரண்டையும் மானியமாக வழங்கியுள்ளனர் எனப் பொருள்படுகிறது.

இதில் லைன்மலையின் பழைய பெயர் ''சிபப்பத'' எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கல்வெட்டை ஆராய்ந்து பேராசிரியர் பரணவித்தான ''சிபப்பத'' என்பது சிம்ஹபப்பத், சிஹபப்பத அல்லது சிறிபப்பத என்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்படும் எனக் குறிப்பிட்டுள்ளார். இதற்கு 3 பதங்களை குறிப்பிட்ட அவர் இது ''சிவபப்பத'' எனப் பொருள்படும் என்பதை ஏனோ கூறவில்லை. அப்படிக் கூறினால் அது சிவாலயம், இந்து சமயம், தமிழர் என்ற விடயத்திற்குள் வந்துவிடும் என்பதற்காக அப்பதத்தை குறிப்பிடவில்லை. சிம்ஹபப்பத. சிஹபப்பத, சிறிபப்பத என்பதை விட சிவபப்பத என்ற பெயரே சரியானது என்பதற்கான ஆதாரங்கள் சில உள்ளன. லைன் மலையின் தெற்கில் நீலகிரி மலை அமைந்துள்ளது. இங்குள்ள கல்வெட்டில் ''உத்தர சிவபர்வத'' என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இது லைன் மலையின் பெயராக இருக்க வேண்டும். ஏனெனில் நீலகிரி மலையின் வடக்கில் (உத்தர என்பது வடக்கு) லைன் மலை உள்ளது.



No. 19

*சிவன்மலை என்ற பெயர் பொறிக்கப்பட்ட லைன் மலைக்கல்வெட்டு* (No.19)

பொ.ஆ.மு. 4ம் நூற்றாண்டில் இப்பகுதி முழுவதும் இந்து மன்னர்களான கதிர்காம சத்திரியார்களால் ஆளப்பட்டு வந்தது. இவர்கள் சிவனையும், முருகனையும் வணங்கினர். இவர்களின் பின் கூத்திகன், எல்லாளன் ஆகியோரின் ஆட்சி இப்பகுதியில் நிலவியது. இவர்களால் இப்பகுதியில் சிவ வழிபாடு பேணப்பட்டு வந்தது. இக்காலகட்டத்திலேயே பிராமிக் கல்வெட்டுக்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

எனவே லைன்மலையின் பண்டைய பெயர் சிம்ஹபப்பத, சிஹபப்பத, சிறிபப்பத என்பதை விட சிவபப்பத (சிவன்மலை) என்பதே சரியானதாகும். இப்பகுதிக்கு பௌத்த சமயம் பரவுவதற்கு முன்பு இம்மலையில் சிவ வழிபாடு நிலவியிருக்கும் என்பது உறுதி.

## ஹிங்குரான

அம்பாறை நகரிலிருந்து சியம்பலாண்டுவைக்கு செல்லும் வீதியில் 12 கி.மீ தொலைவில் ஹிங்குரானை என்னுமிடம் அமைந்துள்ளது. இங்கு தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனித்தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலையின் அருகில் ஓர் சிறிய மலைக்குன்று காணப்படுகிறது. இம்மலைக்குன்றில் இரண்டு கற்குகைகள் உள்ளன. இவை இரண்டிலும் இரண்டு பிராமிக் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

இவற்றில் முதலாவது கல்வெட்டில் ''அஸ குதஸ லேன'' எனவும் இரண்டாவது கல்வெட்டில் ''பத பமததஸ லென ஸகஸ தினே'' எனவும் பொறிக்கப்பட்டுள்ளது. இதில் இரண்டாவது கல்வெட்டு வாசகமே ''சுவாமி பிராமண தத்தவின் குகை'' எனப் பொருள்படுகிறது. இதன் மூலம் இம்மலைப்பகுதியில் பிராமணர் வாழ்ந்துள்ளார்கள் என்பதும் இந்துசமய வழிபாடு இங்கு நிலவி யிருக்கும் என்பதும் உறுதியாகிறது.

## கிரிபொக்குன ஹெல மலை உகந்தை

உகந்தையின் தென்மேற்கில் காணப்படும் இன்னுமோர் மலையே கிரி பொக்குன ஹெல மலையாகும். இது உகந்தையிலிருந்து சுமார் 10 கி.மீ தொலைவில் உள்ளது. இம்மலையிலுள்ள கற்குகைகளில் 6 பிராமிக் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன.

இதில் ஒரு கல்வெட்டு தமிழ் பிராமிக்குரிய ''பருமக'' எனும் சொல்லுடன் காணப்படுகிறது. ''பருமக சுமணச லென சகச'' எனும் இந்த வாசகம் பெருமகன் சுமணவின் குகை எனப்பொருள்படுகிறது. இக்கல்வெட்டின் மூலம் இங்கு ஆதி தமிழர்கள் வாழ்ந்துள்ளமை தெரியவருகிறது.

இங்குள்ள இன்னுமோர் கல்வெட்டில் ''பத்த சோம தேவ லேன'' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இது சுவாமி சோம தேவனின் குகை எனப் பொருள் படுகிறது. சோம தேவன் எனும் பெயருள்ள ஓர் சுவாமி இக்குகையில் தங்கி யிருந்துள்ளார். என்பதை கல்வெட்டு கூறுகிறது.



529

பெருமகன் எனப் பொறிக்கப்பட்ட கிரிபொக்குனு ஹெல கல்வெட்டு (No.529)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிரலான - உகந்தை

உகந்தை மலையின் தென்மேற்கில் 5 கி.மீ தூரத்தில் காட்டின் மத்தியில் கிரலான மலை அமைந்துள்ளது. இம்மலையில் காணப்படும் கற்குகைகளில் இரண்டில் தமிழ் பிராமிக் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

முதலாவது கல்வெட்டில் ''பருமக சுமண புதச திஸ்ஸ லென'' எனவும் இரண்டாவது கல்வெட்டில் ''பருமக மித்தபுத பருமக ரதிய லென சகச'' எனவும் பொறிக்கப்பட்டுள்ளது. இவ்விரு கல்வெட்டுக்களிலும் ''பருமக'' எனும் தமிழ் பிராமிக்குரிய சொல் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் இப்பகுதியில் ஆதி தமிழர்கள் வாழ்ந்துள்ளனர் என்பது புலனாகிறது. மேலும் கதிர்காம சத்திரியர் ஆட்சியின் கீழ் இப்பிரதேசம் இருந்தமையும் பின்பு உன்னரசுகிரி இராச்சியத்தின் கீழ் இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



496

பெருமகன் எனப் பொறிக்கப்பட்டுள்ள கிரலான கல்வெட்டு (No.496)

இக்கல்வெட்டுக்கள் இரண்டும் 496, 497 ஆகிய இலக்கங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.


## பானமை

பானமை சந்தியின் மேற்குப்பக்கத்தில் 3 கி.மீ தூரத்தில் பானமை குளம் அமைந்துள்ளது. பானமை வில்லு ஒரு கி.மீ தூரத்தில் உள்ளது. பானமை வில்லுவின் மேற்குக் கரையில் ஓர் முச்சந்தி காணப்படுகிறது. இச்சந்தியிலிருந்து தெற்கு பக்கமாக உகந்தை மலை அமைந்துள்ளது. சந்தியின் மேற்கில் 6 கி.மீ தூரத்தில் வெதகம எனும் கிராமம் உள்ளது. இப்பாதையின் அருகில் பானமைகுளத்தை ஒட்டி புராதன வழிபாட்டுத்தலங்களின் இடிபாடுகள் காணப்படும் ஓர் இடம் அமைந்துள்ளது. இவ்விடம் வெஹெர கொடல்ல என அழைக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு ஓர் சிறிய மலைப்பாறையும் அதன் மேற்பகுதிக்குச் செல்ல நான்கு பக்கங்களிலும் படிகளும் செதுக்கப்பட்டுள்ளன. இம்மலைப்பகுதியின் வடகிழக்குப் பக்கத்தில் 6 கற்குகைகள் காணப்படுகின்றன. இங்கு உள்ள ஒரு குகையில் ஓர் பிராமிக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. குகையில் கற்புருவம் வெட்டப்பட்ட இடத்தின் கீழே கல்வெட்டு காணப்படுகிறது.

இக்கல்வெட்டு பொ.ஆ. 1ம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்டதாகும். இதில் ''பருமக திச ஜிதி பருமக அடிலிய லென ஸகஸ'' எனப் பொறிக்கப் பட்டுள்ளது. இது பெருமகன் திசவின் புத்திரி பெருமகள் அடிலியவின் குகை எனப் பொருள்படுகிறது. ''பருமக'' என்பது தமிழ் பிராமிக்குரிய சொல்லாகும். இக்கல்வெட்டில் புத்திரி அடிலிய எனக் குறிப்பிடப்பட்டிருப்பது உன்னரசுகிரியை பொ.ஆ. 78ல் ஆட்சி செய்த ஆடக சவுந்தரியாக இருக்கலாம் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இவர்களின் காலம் பொ.ஆ. 1ம் நூற்றாண்டு என்பதும் கல்வெட்டு பொறிக்கப்பட்ட காலமும் இதுவே என்பதும் குறிப்பிடத்தக்கது.



495

அடிலிய என்ற பெயர் பொறிக்கப்பட்ட பானமை கல்வெட்டு (No.495)

பொ.ஆ. 68ல் மனுநேயகயபாகு எனும் மன்னன் உன்னரசு கிரியிலிருந்து ஆட்சிசெய்த போது கடற்கரையோரத்தில் ஓர் பேழை கரை ஒதுங்கியதாகவும் அதில் ஓர் பாலகி சிரித்தபடி இருந்ததாகவும், மன்னன் அப்பெண் குழந்தையை எடுத்து ஆடகசவுந்தரி எனப் பெயரிட்டு, பாலகி நகைத்தபடி இருந்த இடத்தை ''பாலகர் நகை'' எனப் பெயரிட்டு அங்கு மக்களைக் குடியமர்த்தியதாகவும் தனது நண்பனான மட்டக்களப்பு மன்னன் தாசகனிடம் புதிய நகரைக் கையளித்து விட்டு உன்னரசுகிரிக்குச் சென்றதாகவும் மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. தாசகமன்னன் பாலர் நகை நகரை படகு கட்டும் துறையாக்கி அணையும் கட்டி, வடநாட்டு வர்த்தகளை அழைத்து வந்து வர்த்தகம் புரிய வைத்ததாகவும், மனுநேய கயபாகு தான் இறப்பதற்கு முன்பு ஆடக சவுந்தரியை உன்னரசுகிரியின் இராணியாக பட்டம் சூட்டியதாகவும் மட்டக் களப்பு மான்மியம் மேலும் விபரிக்கிறது. இதன்படி மட்டக்களப்பு மன்னன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாசகன் பானமை பகுதியை ஆட்சி செய்துள்ளான். ஆடக சவுந்தரி உன்னரசு கிரியை ஆட்சி செய்த காலத்தில் அதன் கீழிருந்த பானமை பகுதியில் கல்வெட்டு பொறிக்கப் பட்டிருந்த குகையை பயன்படுத்தி இருக்கிறாள். எனவே தான் கல்வெட்டில் பானமை பகுதியை ஆட்சிசெய்த இவளது பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

இவர்களின் ஆட்சியின் கீழும், இவர்களுக்கு முன்பு கதிர்காம சத்திரியர்கள் ஆட்சியின் கீழும் பானமைப் பகுதியில் இந்துசமய வழிபாடுகள் செழிப்புற்று விளங்கியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

## மலையாறு

உகந்தை மலையின் மேற்கில் மலையாறு எனும் இடம் அமைந்துள்ளது. இங்கு மலையாறு எனும் சிற்றாறு ஓடுகிறது. இதன் குறுக்கே பண்டைய காலத்தில் ஓர் கல்லணை கட்டப்பட்டுள்ளது. சுமார் 100 அடி நீளத்தில் கட்டப்பட்டுள்ள இவ்வணை பழுதடைந்து ஆங்காங்கே உடைந்து காணப் படுகிறது. இவ்வணையின் வடக்கிலும், தெற்கிலும், கிழக்கிலும் புராதன கட்டிட இடிபாடுகளும், மலைப்பாறைகளும் பரவிக் காணப்படுகின்றன.

மலையாற்றில் மழை காலங்களில் நீர்பெருகி ஓடுவதும் கோடை காலங் களில் ஒரு சொட்டு நீர் கூட இல்லாமல் ஆறு வெறும் மணல் தரையாகத் தோற்றமளிப்பதும் அடிக்கடி காணக்கூடிய காட்சியாகும்.

மலையாற்றிலிருந்து சற்று தூரத்தில் பண்டைய வழிபாட்டிடம் ஒன்று அமைந்திருந்தமைக்கான ஆதாரங்களாக சில கருங்கற் தூண்கள் காணப் படுகின்றன. இவற்றிடையே 15 அடி நீளமும் 6 அடி அகலமும் கொண்ட ஓர் கருங்கற் பீடமும் காணப்படுகிறது. இங்கு 4 அடி உயரமான லிங்கக் கல் ஒன்றும் காணப்படுகிறது. மேலும் இரு காவற்கற்களும், சுமார் 6 அடி நீளத்தில் சில கற்படிகளும் இவ்விடத்தில் உள்ளன. மலையாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள கல் அணையின் அருகில் இன்னுமோர் கட்டிடம் இருந் தமைக்கான இடிபாடுகள் காணப்படுகின்றன.

மலையாற்றின் சற்று தூரத்தில் வடமேல் பக்கமாக சுமார் 50 அடி உயரமான ஓர் கற்பாறை அமைந்துள்ளது. இம்மலைப் பாறையில் ஏறுவதற்கு இரண்டு பக்கங்களில் கற்படிகள் செதுக்கப்பட்டுள்ளன. பாறையின் உச்சியில் இரண்டு கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றின் அருகில் ஓர் கட்டிடம் இருந்தமைக்கான இடிபாடுகள் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மலைப்பாறையின் அருகில் இன்னுமோர் பாறை அமைந்துள்ளது. இதில் இரண்டு கற்குகைகள் உள்ளன. இக்குகைகளின் மேல் பகுதியில் கற்புருவங்கள் செதுக்கப்பட்டு பிராமிக் கல்வெட்டுக்கள் இரண்டு பொறிக்கப் பட்டுள்ளன. இக்குகைகளில் முனிவர்கள் தங்கியிருந்தமை பற்றி கல்வெட்டில் எழுதப்பட்டுள்ளது. ஒரு கல்வெட்டில் 'பத்த தினக லேன சகச' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இது 'சுவாமி தினகரின் குகை' எனப் பொருள் படுகிறது.

அடுத்த கல்வெட்டில் 'சகரகித்தஹ லேன சுதசனே' எனப் பொறிக்கப் பட்டுள்ளது. இது 'சங்க ரக்ஷித்தனின் சுதர்சன குகை' எனப் பொருள்படுகிறது. இக்கல்வெட்டுக்களின் படி இங்கு தினகர் எனும் ஓர் முனிவர் இங்கிருந்த குகையொன்றில் இருந்தமை தெரியவருகிறது.

இக்கற்பாறைக்கு சுமார் 50 அடி தூரத்தில் மேலும் மூன்று கற்பாறைகள் கற்குகைகளுடன் காணப்படுகின்றன. இவற்றிலும் ஒவ்வொன்றாக மூன்று பிராமிக் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இம்மூன்று குகைகளும் மூன்று முனிவர்களுக்கு சொந்தமாக இருந்தமை பற்றி கல்வெட்டு செய்தி கூறுகிறது. முதலாவதில் 'பத்த சோமகுத்தச லேன' எனவும், இரண்டாவதில் 'பத்த திசகுத்தஹ லேன' எனவும், மூன்றாவதில் 'பத்த மேருதத்தச லேன' எனவும் பொறிக்கப்பட்டுள்ளது. இது முறையே, சுவாமி சோமகுத்தரின் குகை, சுவாமி திசகுத்தரின் குகை, சுவாமி மேருதத்தரின் குகை எனப் பொருள்படுகிறது.

மலையாற்றின் வடமேற்குப் பக்கத்தில் சிறிது தூரத்தில் மேலும் பல கற்குகைகள் காணப்படுகின்றன. இவற்றில் சிலவற்றில் மட்டுமே பிராமிக் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இங்கு காணப்படும் மேலும் இரு கல்வெட்டுக்களில் தேரர்கள் இருந்தமை பற்றி கூறப்பட்டுள்ளது. ஒன்றில் 'உத்திதேரஹ பத்திக திசதேரஹலேன' எனவும் அடுத்ததில் 'வினயதர புசதேரஹ மதய உபசிக்க சிவலய லேன சகஸ நியத்தே தேவரமனே லேன' எனப் பொறிக்கப்பட்டுள்ளது.


## போவத்தகல - (போகசித்தர் மலை)

பொத்துவிலில் இருந்து தெற்கு நோக்கி பானமை, உகந்தை ஊடாக செல்லும் காட்டுப்பாதையில் 47 கி.மீ தொலைவில் குமண (கூமுனை) அமைந்துள்ளது. குமண வில்லு என்றழைக்கப்படும். பறவைக் குளத்தின் தெற்குப் பக்கம் கூமுனை கிராமம் அமைந்திருந்தது. குமண வில்லுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளத்தின் வடமேற்கில் 4 கி.மீ தூரத்தில் குமண குளம் அமைந்துள்ளது. குமண குளத்தின் வடக்குத் திசையில் ஒரு கி.மீ தூரத்தில் போவத்தமலை காணப்படுகிறது. போவத்தகல மலைக்குச் செல்ல இன்னுமோர் வழியும் உள்ளது. குமண கிராமத்தின் தெற்குப் பக்கம் ஒரு கி.மீ தூரத்தின் கும்புக்கன் ஆறு ஓடுகிறது. இவ்வாற்றங்கரையில் சின்ன கபிலித்தை காளிகோயில் அமைந்துள்ளது. இங்கிருந்து கும்புக்கன் ஓயா ஆற்றின் வலது கரையோரமாக 4 கி.மீ தூரம் சென்றதும் 'மஹாகல் அமுன' என்றழைக்கப்படும் கல் அணைக் கட்டு காணப்படுகிறது. இவ்விடத்தில் அணைகட்டி இதிலிருந்து நீரை வாய்க் கால் மூலம் குமண குளத்திற்கு அனுப்பியுள்ளனர். இவ்வாய்க்கால் கரை ஓரமாக ஒன்றரை கி.மீ சென்றால் குமண குளத்தை அடையலாம். அங்கிருந்து சிறிது தூரத்தில் போவத்தகல் மலை காணப்படுகிறது.

ஊவா மலைத்தொடர்களில் உற்பத்தியாகி 116 கி.மீ தூரம் ஓடி கூமுனைக் கருகில் கடலில் சங்கமமாகும் கும்புக்கன் ஆற்றின் மூலம் புராதன காலத்தில் அமைக்கப்பட்ட பல குளங்களுக்கு நீர் கிடைக்கப்பெற்றது. இதுபோன்ற 81 குளங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இவற்றில் ஒன்றே கூமுனைக் குளமாகும். புராதன காலத்தில் இப்பகுதியில் பெருமளவில் ஆதி தமிழ் மக்கள் வாழ்ந்திருந்தமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன.



*போவத்தகல மலை*

அடர்ந்த காட்டின் மத்தியில் அமைந்துள்ள போவத்தகல் மலைக்குன்றில் பல குகைகள் காணப்படுகின்றன. இவற்றில் பண்டைய காலங்களில் மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்தமைக்கான சான்றுகள் தெரிகின்றன. இவற்றில் தமிழ் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. மலைப்பாறை மீதும் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இம்மலைக்குன்றில் வழிபாட்டுக்குரிய கட்டிடங்கள் அமைந்திருந்தமைக்கான இடிபாட்டு எச்சங்கள் சில காணப்படுகின்றன.


போவத்தகல மலையின் பழைய பெயர் போகசித்தர் மலை என்பதாகும். பொ.ஆ. 2ம் நூற்றாண்டில் உகந்தை வழியாக கதிர்காமத்திற்கு பாத யாத்திரையாக வந்த சித்தர் போகர் இம்மலையில் தங்கிச் சென்றதாகக் கூறப்படுகிறது. இதன் காரணமாக இம்மலை போக சித்தர் மலை எனப் பெயர் பெற்றது. இதுவே காலப்போக்கில் மருவி போசித்த மலை எனவும், பின்பு போவத்த மலை எனவும் அழைக்கப்பட்டு தற்போது போவத்தகல எனப் பெயர் பெற்றுள்ளது. இங்கு அரசமரங்கள் பல இருந்ததாகவும் எனவே இது போவத்தகல என சிங்கள மொழியில் அழைக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

கதிர்காம சத்திரிய மன்னர்கள் இப்பகுதியில் ஆட்சி செய்த காலத்தில் அனுராதபுரத்திலிருந்து தேவநம்பியதீசனால் கொடுக்கப்பட்ட வெள்ளரசு மரக்கிளை இங்குதான் நடப்பட்டதாகவும், அதனால் இவ்விடம் போவத்தகல எனப் பெயர் பெற்றதாகவும் கூறப்படுகிறது. ஆனால் கதிர்காம சத்திரியர்கள் அனுராதபுரத்திலிருந்து கொண்டு வந்து நட்ட வெள்ளரசுமரம் கதிர்காமத்தில் முருகன் கோயிலின் பின் பக்கம் காணப்படும் மரமாகும். 'அஸ்ட போதி' என அழைக்கப்படும் எட்டு போதி மரக்கிளைகள் எட்டு இடங்களில் நடப் பட்டன. அவற்றில் ஓர் இடம் கஜரகம எனும் இன்றைய கதிர்காமமாகும். எனவே போதி மரம் நடப்பட்டதால் போவத்தகல எனும் பெயர் உருவானது எனும் கருத்தை ஏற்க முடியாதுள்ளது. மேலும் போவத்தகல மலைப்பகுதியில் போதிமரம் இருந்ததற்கான அடையாளங்கள் எதுவும் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே போவத்தகல என்பது 'போகசித்தர் மலை' என்பதன் திரிபேயாகும். போகசித்தர் இவ்வழியாக வந்தமையை பானமை யிலுள்ள சாஸ்திராவெளி கல்வெட்டு உறுதி செய்கிறது. போக சித்தரால் பொ.ஆ. 2ம் நூற்றாண்டில் இம்மலையில் முருகனுக்கோர் ஆலயம் அமைக்கப்பட்டு இங்கு முருக வழிபாடு சிறப்புற்று விளங்கிருக்கும் என்பதில் ஐயமில்லை.

பொ.ஆ.மு. 3ம் நூற்றாண்டு காலப்பகுதியில் கதிர்காம இராச்சியத்தை ஆட்சி செய்த பத்து பாண்டிய சத்திரிய மன்னர்களின் முக்கிய இடமாக போவத்தகல மலை விளங்கியுள்ளது. இச்சத்திரிய மன்னர்கள் தொடர்பான பிராமிக் கல்வெட்டுக்கள் இம்மலையில் காணப்படுகின்றன. அம்பாந்தோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டத்தினுள்ள கிரிந்த முதல் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள குசலான மலை வரையும் மற்றும் மொனராகலை மாவட்டம், அம்பாறை மாவட்டம் ஆகியவையும் இக்கதிர்காம சத்திரியர்களின் ஆட்சியின் கீழ் 'கஜரகம இராச்சியம்' என அழைக்கப்பட்டது.



போவத்தகல மலை - மீன் சின்னம்

கஜரகம இராச்சியத்தின் சத்திரிய மன்னர்களை தேவநம்பியதீசன் வெள்ளரசு மரக்கிளை நடும் விழாவிற்கு அழைத்திருந்தமை பற்றிய தகவல்கள் மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ளன. இவர்கள் அனுராதபுரத்தில் நிகழ்ந்த இவ்விழாவில் பங்குகொண்டு திரும்பிய போது வெள்ளரசு மரக்கிளை யொன்றையும் கொண்டு வந்து தமது இராச்சியத்தில் நட்டனர் என வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.


இதன்படி பாண்டிய இந்து தமிழ் மன்னர்களான கதிர்காம சத்திரியர்கள் இந்து சமயத்தை வளர்த்ததோடு, பௌத்த சமயத்திற்கும் ஆதரவாக இருந்துள்ளனர் என்பது தெளிவாகத் தெரிகிறது. இதன் காரணமாகவே இச் சத்திரிய மன்னர்களின் தந்தையான கமனிதீசன் தேவநம்பிய கமனிதீசன் எனப்பெயர் பெற்றுள்ளான். இராசமலைக் கல்வெட்டுக்கள் (ரஜகல) இதை உறுதி செய்கின்றன. இவர்கள் தொடர்பான மூன்று பிராமிக் கல்வெட்டுக்கள் போவத்தகல மலையில் பொறிக்கப்பட்டுள்ளன.

போவத்தகல மலையில் உள்ள கற்குகைகளில் காணப்படும் ஏழு கல்வெட்டுக்களில் 3 கல்வெட்டுக்கள் இப்பகுதியை ஆட்சி செய்த கதிர்காம சத்திரியர்கள் தொடர்பானவையாகும். இக்கல்வெட்டுக்கள் மூன்றிலும் சுவஸ்திகா சின்னங்களும், இரண்டில் மீன் சின்னங்களும் பொறிக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளன. முதலாவது கல்வெட்டில் 'கமனியின் புதல்வர்கள் பத்து பேரில் மூத்தவனான தர்மராஜாவின் புதல்வனான இளவரசன் மகாதீசனின் மகா சுதர்சன எனும் பெயருடைய குகை' எனப் பொறிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது கல்வெட்டில் 'கமனியின் மகன் உத்தியனின் மகனான இளவரசன் அபயவினதும் மகளான இளவரசி அனுராதியினதும் குகை' எனவும், மூன்றாவது கல்வெட்டில் 'தர்மராஜாவின் மகன் இளவரசன் மகாதீச னின் குகை' எனவும் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுக்களின் படி கதிர்காம சத்திரிய பாண்டிய வம்சத்தினரின் மூன்று தலைமுறையினரின் பெயர்கள் காணப்படுகின்றன. சிவ வழிபாட்டையும், முருக வழிபாட்டையும் மேற்கொண்ட இச்சத்திரிய மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் போவத்தகல மலையிலும் இவ்வழிபாடுகள் செழிப்புற்று விளங்கின எனலாம். இக் கல்வெட்டுக்கள் 549,550,551 ஆகிய இலக்கங்களில் பேராசிரியர் பரணவித்தானவினால் பதிவு செய்யப்பட்டுள்ளன.




*பாண்டியரின் மீன் சின்னங்களும், சுவாஸ்திகா சின்னமும் பொறிக்கப்பட்ட போவத்தகல கல்வெட்டுக்கள்* (No.549, 550, 551)

இவை தவிர போவத்தமலையில் பிராமி எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ள 4 பாறைக்கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன. இவை நான்கும் நன்றாக சேதமடைந்துள்ளன. இவற்றில் சில எழுத்துக்களே வாசிக்கக்கூடியதாக உள்ளன. இதில் ஒரு கல்வெட்டில் 'நக அமெதி' எனக் காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது நாக அமைச்சர் எனப் பொருள்படும். இதன் மூலம் இங்கு நாகவழிபாடு செய்த அமைச்சர் இருந்தமை புலப்படுகிறது. இன்னுமோர் கல்வெட்டில் 'ஜெடதிச மஹரஜ' எனவும் அடுத்ததில் 'மஹசென மஹரஜ அபய' எனவும் பொறிக்கப்பட்டுள்ளது. இது மகாசேன மகாராஜன் அபயன் எனப் பொருள் படுகிறது. மகாசேனன் என்பது முருகனைக் குறிக்கும் பெயராகும். எனவே மகாசேனன் எனும் முருகனை வழிபட்ட அபயன் எனும் மகாராஜன் இங்கு இருந்துள்ளான் எனும் செய்தி இக்கல்வெட்டில் உள்ளதாக சில ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

அதே சமயம் மகாசேனன் எனும் மன்னன் பொ.ஆ. 276 -303 வரையான காலப்பகுதியில் இலங்கையை ஆட்சி செய்துள்ளான். இம்மன்னனுக்கும், தென் கிழக்கிலங்கைக்கும் உள்ள தொடர்புகள் பற்றி பாளி நூல்களிலும், இலங்கை வரலாற்றைக் கூறும் ஏனைய நூல்களிலும் சொல்லப்படாத சில முக்கிய தகவல்கள் மட்டக்களப்பு மான்மியத்தில் கூறப்பட்டுள்ளன. தென்கிழக்கிலங்கையில் இருந்த உன்னரசுகிரி எனும் இராச்சியத்தை ஆட்சி செய்த பெண்ணரசியான ஆடகசவுந்தரிக்கும், மகாசேனனுக்கும் உள்ள தொடர்புபற்றி மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது.

மகாசேனன் வைதூலிய சமய நெறியில் ஈடுபாடுடையவனாக இருந்த தாகவும், கலிங்க நாட்டிலிருந்த சங்க மிகுந்துவின் ஆலோசனைப்படி வங்க தேசம் சென்று சிற்பாசாரியர்களையும், திரவியங்களையும் கொண்டு வந்து இலங்கை அரசன் தெத்ததீசனுடன் நட்பு கொண்டு, சிதைவுற்றுக் கிடந்த திருக்கோணேசர் ஆலயத்தை புனர்நிர்மாணம் செய்ததாகவும், தெத்ததீசனை அடக்கி பௌத்த விகாரைகளை இடித்தழித்ததாகவும், பின்பு உன்னரசு கிரிக்குச் சென்று ஆடகசவுந்தரியைச் சந்தித்து நட்புறவாகி அவளையும் வைதூலிய சமய ஈடுபாடுடையவளாக்கி அவளைத் திருமணம் செய்த தாகவும், பின்பு மனம் மாறி தான் இடித்த புத்த விஹாரைகளைத் திருத்தி அமைத்தோடு, ஒவ்வொரு விஹாரைத் தலங்களிலும் கதிரேசன் ஆலயங் களையும் கட்டுவித்ததாகவும், மகாசேனனுக்கும் ஆடகசவுந்தரிக்கும் சிங்க குமாரன் எனும் மகன் இருந்ததாகவும் மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது.

ஆனால் மகாவம்சத்தில் மனம் மாறிய பின்பு மகாசேனன் சிவாலயங்கள் மூன்றை இடித்தழித்து அவ்விடங்களில் பௌத்த விஹாரைகளைக் கட்டினான் எனக் கூறப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மான்மியம், மட்டக்களப்பு பூர்வ சரித்திரம், மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி ஆகிய நூல்கள் மகா சேனன் புத்தவிஹாரைகளைக் கட்டியதோடு ஒவ்வோர் இடத்திலும் முருகன் கோயில்களைக் கட்டினான் எனக் கூறுகின்றன. எனவே உன்னரசுகிரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராச்சியத்தை ஆடக சவுந்தரியுடன் சேர்ந்து மகாசேனன் சிலகாலம் ஆட்சி செய்துள்ளான் என்பது மட்டக்களப்பு மான்மியத்தின் மூலம் எமக்குத் தெரிய வரும் அரிய தகவலாகும். இதன்படி மகாசேன மன்னன் சிவவழிபாட்டிலும், முருக வழிபாட்டிலும் மிகுந்த ஈடுபாடுடையவனாக விளங்கியுள்ளான் என்பது உறுதியாகிறது. மேலும் இவன் காலத்தில் பல சிவாலயங்களும், முருகனாலயங்களும் இலங்கை முழுவதிலும் அமைக்கப்பட்டுள்ளன என்பதே நமக்குத் தெரியாத உண்மையாகும். இலங்கை வரலாற்று நூல்களிலும், பாளி இலக்கியங்களிலும் மறைக்கப்பட்டுள்ள இத்தகவல்களை மட்டக்களப்பு மான்மியம் வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது.

மகாவம்சத்திலே குறிப்பிடப்பட்டுள்ள மன்னர்களில் அதிகமான இந்துக் கோயில்களைக் கட்டிய மன்னன் மகாசேனனே. பௌத்த சமயத்தின் புகழ்பாடும் நூலாக மகாநாமதேரரால் எழுதப்பட்ட மகாவம்சத்திலே இந்துக் கோயில்கள் பல மகாசேனன் எனும் பௌத்த மன்னனால் கட்டப்பட்ட வரலாற்றை எழுத விரும்பாத மகாநாமதேரர் அதற்கு எதிர் மாறாக மகாசேனன் இந்துக் கோயில்களை அழித்ததாகக் குறிப்பிட்டுள்ளமையானது பௌத்த மன்னர்கள் பௌத்த மதத்தைத்தவிர வேறெந்த சமயத்தையும் (குறிப்பாக இந்து சமயத்தை) எழுச்சி பெறச் செய்யவில்லை என்பதைக் காட்டுவதற்காகவேயாகும்.

மேலும் மகாவம்சத்தில் தமிழ் மன்னர்களாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் சேனன், கூத்திகன், எல்லாளன், புலகத்தன், பாகியன், பணயமாறன், பிளைய மாறன், தாதிகன், குகன், பாண்டு, பாரிந்தன், குட்டபாரிந்தன், திரிதரன், தாதியன், பித்தியன் ஆகிய 15 தமிழ் மன்னர்களால் கட்டப்பட்ட இந்துக் கோயில்கள் பற்றியோ அல்லது இந்துசமயப் பணிகள் பற்றியோ குறிப்பிடப் படவில்லை. மட்டக்களப்பு மான்மியத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் மகாசேனன் பற்றிய தகவல்களில் கிழக்கிலங்கையில் ஆடகசவுந்தரியெனும் தமிழரசியுடனான தொடர்பு மற்றும் கிழக்கில் சிவாலயங்களை அழித்தமை ஆகிய இரு விடயங்களைத் தவிர ஏனைய அனைத்து விடயங்களும் மகாவம்சத்துடன் ஒத்துப் போகின்றமையும் இங்கே குறிப்பிடத்தக்கது. மகாசேனனுக்கும் கிழக்கின் தமிழர்களுக்கும், இந்து சமயப் பணிகளுக்கும் இருந்த தொடர்பை மகாவம்ச ஆசிரியர் வேண்டுமென்றே மறைத்துள்ளமை இதன் மூலம் தெளிவாகத் தெரிகிறது.

உன்னரசு கிரியின் ஆட்சிப் பகுதியான தென்கிழக்கிலங்கையில் மகாசேனன் தொடர்பான கல்வெட்டுக்கள், கதிர்காமம், போவத்தகல், லாகுகலை போன்ற இடங்களில் காணப்படுகின்றன. இவை மகாசேன மன்னனுக்கும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்கிழக்கிலங்கைக்கும் உள்ள தொடர்பைக் காட்டுவதோடு, மட்டக்களப்பு மான்மியத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் இம்மன்னன் பற்றிய தகவல்களையும் உறுதி செய்கின்றன.

இலங்கை மன்னர்களிலே அதிகமான குளங்களைக் கட்டியவன் என்ற பெருமையும் இம்மன்னனுக்குண்டு. மொத்தமாக 16 குளங்களை மகாசேனன் கட்டியுள்ளான். இதனால் 'பெருங் குளங்கள் கட்டிய மகாராஜன்' எனவும் 'மின்னேரி தெய்வம்' எனவும் இவன் போற்றப்பட்டான். தமிழிலும் 'குளக்கோட்டன்' என்ற பெயர் பெற்றான். மட்டக்களப்பு மான்மியத்தில் ஆடகசவுந்தரி மற்றும் மகாசேனன் தொடர்பாக கூறப்பட்டுள்ள விடயங்கள் கோணேசர் கல்வெட்டிலேயும் கூறப்பட்டுள்ளன. ஆனால் கோணேசர் கல்வெட்டில் மகாசேனனுக்குப் பதிலாக குளக்கோட்டன் என்றபெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் மகாசேனனுக்கு குளக்கோட்டன் என்ற பெயரும் இருந்தமை உறுதியாகிறது.

எனவே போவத்தகல மலையிலுள்ள கல்வெட்டில் 'மகாசேன மகாராஜன்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது உன்னரசுகிரியின் தமிழரசியான ஆடகசவுந்தரியை மணம் முடித்த மகாசேனன் பற்றியதே என்பதில் தவறில்லை. இதன்படி மகாசேனன் காலத்தில் போவத்தகல மலையில் சிவவழிபாடும், முருக வழிபாடும் சிறப்புற்று விளங்கியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

போவத்தகல மலையிலுள்ள நான்கு பாறைக் கல்வெட்டுகளில் இரண்டில் 'ஜெட்டதிச மகாராஜ' எனப் பொறிக்கப்பட்டுள்ளமையும் உற்று நோக்கத்தக்கது. இவன் மகாசேனனின் இரண்டாவது புதல்வனாவான். இலங்கையை ஆட்சி செய்த மன்னர்கள் வரிசையில் மகாசேனனுக்குப் பின் அவனது மூத்த மகனான ஸ்ரீ மேகவர்ணனும், இவனுக்குப் பின் இரண்டாவது புதல்வனான ஜெட்டதீசனும் ஆட்சி செய்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மகாசேனனுக்கும், ஆடகசவுந்தரிக்கும் மகனாகப் பிறந்து ஆடக சவுந்தரியின் பின் உன்னரசுக்கிரி இராச்சியத்தை ஆட்சி செய்ததாக மட்டக்களப்பு மான்மியமும், கோணேசர் கல்வெட்டும் குறிப்பிடும் சிங்ககுமாரனின் அரசு விருதுப் பெயரே ஜெட்டதீசனாக இருக்க வேண்டும் என நம்பக் கூடியதாக உள்ளது.


ஏனெனில் மகாசேனனின் தந்தையின் பெயரே ஜெட்டதீசன் என்பதாகும். அப்பெயரே 2ம் ஜெட்டதீசன் என மகாசேனனின் இரண்டாவது மகனுக்கும் சூட்டப்பட்டுள்ளமையும், இவனது இயற்பெயர் குறிப்பிடப்படாமையும் அவதானிக்கத்தக்கது. உன்னரசுகிரி இராச்சியத்தை ஆட்சி செய்த தந்தையினதும், மகனினதும் பெயர்கள் போவத்தகல மலையில் பொறிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போவத்தகல மலையில் ஜெட்டதீசன் பெயர் பொறிக்கப்பட்டுள்ள இரண்டாவது கல்வெட்டு இவனது 8ம் ஆட்சி ஆண்டில், அதாவது பொ.ஆ. 336ல் பொறிக்கப்பட்டதாகும். போவத்தகல மலையில் ஓர் பூஜை இம் மன்னனால் நடத்தப்பட்டது பற்றியும், இதில் ஆரியவம்சம் பற்றிய சொற் பொழிவு இடம்பெற்றது பற்றியும் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. பூஜை எதற்காக எந்தக் கடவுளுக்காக என்பதைத் தெரிந்து கொள்ள முடியாதபடி கல்வெட்டின் சில பகுதிகள் சேதமடைந்துள்ளன. ஆடக சவுந்தரி ஆரியவம்ச த்து இராம கோத்திரத்தை சேர்ந்தவள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதன்மூலம் தன் தாயாருக்காக இப்பூஜையை மகன் செய்துள்ளான் என்றே நம்பக் கூடியதாக உள்ளது. இதன்மூலம் ஜெட்டதீசன் என்ற பெயரில் இலங்கையை ஆட்சி செய்த மன்னன் தமிழரசி ஆடகசவுந்தரியின் மகனான சிங்ககுமாரனே எனும் முடிவுக்கு வரக்கூடியதாக உள்ளது.

## குடும்பிகல (குடும்பி மலை)

பானமையை அடுத்து உகந்தைக்கு செல்லும் வழியில் உள்ள சலவைக் களப்பின் மேற்குப் பக்கமாக சுமார் 4 கி.மீ தூரத்தில் அடர்ந்த காட்டின் மத்தியில் குடும்பிமலை அமைந்துள்ளது. சலவைக்களப்பின் தெற்கில் 3 கி.மீ தூரத்தில் உகந்தைமலை முருகன் கோயில் உள்ளது.



நந்தியின் பாதமும் கல்வெட்டும் பொறிக்கப்பட்ட குகை.

குடும்பிமலையில் மொத்தமாக 105 மலைக்குகைகள் காணப்படுகின்றன. இக்குகைகளில் சிலவற்றில் பிராமிக் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. மொத்தமாக 17 கல்வெட்டுக்கள் இங்கு காணப்படுகின்றன. இவற்றில் 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இலங்கையின் பிராமிக்கல்வெட்டுக்கள் - பகுதி ஒன்று' எனும் நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவை 498, 499, 500, 501, 502 எனும் இலக்கங்களைக் கொண்டவையாகும். இவற்றில் 498ம் மற்றும் 500ம் இலக்க கல்வெட்டுக் கள் இந்து சமயம் தொடர்பானவையாகும்.


இதில் 'பெருமகன் மித்தவின் மகன் பெருமகன் நதிக்கவின் மகாசுதர்சன குகை' எனப் பொறிக்கப்பட்டு நந்தியின் பாதமும் பொறிக்கப்பட்டுள்ளது. தமிழ் பிராமிக்கே உரிய 'பருமக' எனும் சொல் இதில் காணப்படுகிறது. அத்துடன் 'சுதர்சன குகை' எனவும் எழுதப்பட்டுள்ளது. சுதர்சன என்பது மகாவிஷ்ணுவின் சக்கரமாகும். சில ஆலயங்களில் இச்சக்கர வழிபாடே நிலவுகிறது. எனவே இங்கிருந்த குகையில் சுதர்சன சக்கர வழிபாடு நிலவி யிருக்கலாம் என நம்பப்படுகிறது. இக்கல்வெட்டின் இலக்கம் 498. இதில் நந்தியின் பாதம் பொறிக்கப்பட்டிருப்பதால் இங்கு சிவவழிபாடும் இருந்திருக் கலாம் எனக் கருதப்படுகிறது.

500ம் இலக்க கல்வெட்டு 'நாகம்' தொடர்பானதாகும். இதில் நாகவழி பாட்டை மேற்கொண்டவர்கள் பற்றி கூறப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் 'கமிக நாகவின் மகனான கமிகதிச' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. திச என்ற பெயரில் தமிழ் வணிகன் இருந்தது பற்றி குடுவில் கல்வெட்டில் கூறப் பட்டுள்ளது.

குடும்பிமலையில் மேலும் 12 பிராமிக் கல்வெட்டுக்கள் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றில் 5 வது கல்வெட்டில் 'உபாசக வேலுவின் குகை' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இது பக்தன் வேலனின் குகை எனப் பொருள்படுகிறது. இதன்படி இக்குகையில் வேல் வழிபாடு அல்லது வேலை வழிபட்டவன் இருந்தமை தெரிய வருகிறது.



498



499



500

*நந்தியின் பாதக்குறியீடு மற்றும் சுவாமி, நாகம் ஆகிய பெயர்கள் பொறிக்கப்பட்ட குடும்பிகல கல்வெட்டு (No.498, 499, 500)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இரு கல்வெட்டுக்களின் தமிழ் மொழிக்கே உரிய 'பருமக', 'கஹபதி' ஆகிய சொற்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இக்குகைகளில் ஆதி தமிழர்கள் வாழ்ந்திருந்தமை புலனாகிறது.

குடும்பிமலையில் உள்ள இந்துசமயம் தொடர்பான கல்வெட்டுக்கள் மூலம் இங்கு சிவவழிபாடு, நாகவழிபாடு, வேல் வழிபாடு, சுதர்சன சக்கர வழிபாடு போன்றவை இங்கிருக்கும் குகைகளில் வாழ்ந்த ஆதி தமிழர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளமை உறுதியாகத் தெரிகிறது.

## கோன்கல்லு

உகந்தையிலிருந்து கூமுனைக்குச் செல்லும் வழியில் உள்ள வாகூரக்களப்பிலிருந்து சிறிது தூரத்தில் உள்ள நெலும்பத்பொக்குண என்னுமிடத்திலிருந்து தெற்கு நோக்கி சுமார் 1 மைல் தொலைவில் கோன்கல் மலை அமைந்துள்ளது.

இங்கு பண்டைய காலத்தில் சைவ ஆலயங்கள் இருந்த தற்கான இடிபாடுகள் காணப்படுகின்றன. சுமார் 275 அடி உயரமான மலைமீது புராதன ஆலயங்கள் இருந்தமைக்கான ஆதாரங்களாக தூண்களும், செங்கற்களும் ஆங்காங்கே காணப்படுகின்றன.

இங்கு சைவ ஆலயம் இருந்திருக்கலாம் எனக் கொள்வதற்கான முக்கிய ஆதாரமாக உள்ளது இங்குள்ள குகையில் காணப்படும் கல்வெட்டு சாசனமாகும். இக்கல்வெட்டின் படி இங்குள்ள குகைகளில் இந்து தமிழ்ப் பிராமணர்கள் வாழ்ந்துள்ளனர். இவர்கள் பௌத்த சங்கத்திற்கு அளித்த குகைத் தானங்கள் பற்றி இச்சாசனம் குறிப்பிடுகிறது. இதில் 'பமண அதிமதகஹலேன' என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. இது 'பிராமணன் அதிமதகனின் குகை' எனப் பொருள்படுகிறது.

பிராமணர்கள் தாம் வாழ்ந்த, இடங்களில் கோயில்கள் அமைத்து வழிபட்டார்கள் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. இலங்கைத் தொல்பொருள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ சாசனப்பதிவு இலக்கம் 545ல் கோன்கல சாசனம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.



545

*பிராமணர் என்ற சொல் பொறிக்கப்பட்டுள்ள கோன்கல கல்வெட்டு (No.545)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராமணர்கள் இங்கிருந்த குகைகளில் வாழ்ந்திருந்த காலத்தில் அவர்களால் இம்மலை மீது சைவ ஆலயங்கள் அமைக்கப்பட்டிருந்தன. பின்பு இக்குகைகள் பௌத்தர்களுக்கு தானம் செய்யப்பட்டுள்ளன. அதன் பின் இங்கிருந்த பிராமணர்கள் புலம்பெயர்ந்துள்ளனர். எது எப்படி இருப்பினும் பண்டைய காலங்களில் நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் இந்துமத வழிபாடு பரவலாகக் காணப்பட்டுள்ளது. பிராமணர்கள் பரந்து வாழ்ந்துள்ளனர் என்பது மறுக்க முடியாத உண்மை.

கோன்கல மலையில் உள்ள குகைகளில் மொத்தமாக 11 கல்வெட்டுக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 5 கல்வெட்டுக்கள் தமிழ், இந்துசமயம் தொடர்பானவையாகும். இதில் தமிழ் பிராமிக்குரிய பருமக, கிருகபதி ஆகிய சொற்கள் காணப்படுகின்றன. இன்னுமோர் கல்வெட்டு 'கபதி மணிகர திசஹ லேன சகச' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இது குடும்பஸ்தனான தீசன் எனும் மாணிக்ககல் வியாபாரியின் குகை எனப் பொருள்படுகிறது. தீசன் எனும் பெயரில் தமிழ்வணிகன் இருந்ததாக குடிவில் கல்வெட்டு கூறுகிறது. எனவே மாணிக்ககல் வியாபாரியான தீசன் என்பவனும் ஓர் தமிழ் வணிகனே என்பது உறுதியாகிறது. இக்கல்வெட்டு இலக்கம் 546 எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலக்கம் 538 எனப் பதிவு செய்யப்பட்டுள்ள. கல்வெட்டு மிக முக்கியமானதாகும். இதில் 'உதி நகரியன அடகுலஹ லேன சகச' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இது 'உதி நகர பிரஜையான சூளனின் அஸ்டகுலிக குகை' எனப் பொருள்படுகிறது.


இக்கல்வெட்டின் மூலம் கோன்கல பகுதி 'உதிநகரம்' என்ற பெயரைப் பெற்றுள்ளது. அத்துடன் கதிர்காம பாண்டிய சத்திரிய வம்சத்தினரின் ஒருவனான உத்தியனின் ஆட்சியிலிருந்த ஓர் முக்கிய நகரமாக இது விளங்கியுள்ளது என்பது உறுதியாகிறது.

## பண்டார தூவ

அம்பாறை நகரிலிருந்து மகாஓயாவிற்கு செல்லும் வீதியில் 16 கி.மீ தூரத்தில் உள்ள 28ம் கொலனி சந்தியிலிருந்து மேற்கு நோக்கி செல்லும் வீதியில் பண்டாரதூவ என்னுமிடம் அமைந்துள்ளது. இவ்விடத்திலிருந்து சுமார் 6 கி.மீ தொலைவில் காட்டின் மத்தியில் உள்ள மலைப்பாறையில் சில பிராமிக் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 3 கல்வெட்டுக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்லியல் ஆய்வாளர் பூஜ்ய எல்லாவல மேதந்த தேரரால் பதிவு செய்யப் பட்டுள்ளன.



*சுவாமி, தேவன் ஆகிய சொற்கள் பொறிக்கப்பட்ட பண்டாரதுவ கல்வெட்டுக்கள். (No. 93,94)*

இம்மூன்று கல்வெட்டுக்களில் ஒன்றில் சிவன் தொடர்பான சொல் பொறிக்கப்பட்டுள்ளது. கல்வெட்டின் வாசகம் 'தேவ குத்தனின் குகை' என்பதாகும். (தேவகுத்தஹ லேன) 'தேவ' என்பது சிவனைக் குறிக்கும் பதம் என J.V பனர்ஜி குறிப்பிட்டுள்ளார். அதே சமயம் டாக்டர் பரண வித்தான இச்சொல் பொதுவாகக் கடவுளுக்குரிய பதம் எனக் கூறியுள்ளார். 'தேவ' எனும் பதம் இலங்கையில் 23 கல்வெட்டுக்களிலும், 'தேவி' எனும் பதம் 4 கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. பண்டார தூவ கல்வெட்டில் காணப்படும் 'தேவகுத்தனின் குகை' என்பது சிவனால் பாதுகாக்கப்பட்டவனின் குகை எனப் பொருள்படுகிறது.

## பக்கிஎல்ல கல்வெட்டு

அம்பாறையிலிருந்து மகா ஓயாவிற்குச் செல்லும் வழியில் சுமார் 23 கி.மீ தூரத்தில் பக்கிஎல்ல எனும் ஓர் இடம் உள்ளது. இங்கு 1956ம் ஆண்டு சில கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இக் கல்வெட்டுக்களில் ஒன்றில் இப் பகுதியில் இருந்த சில குளங்கள், கால்வாய்கள், வயல் நிலங்கள் ஆகியவை இங்கிருக்கும் ''குபில விதிச பவத்த'' எனும் மலையிலுள்ள விஹாரைக்கு நிவந்தமாக வழங்கப்பட்டது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.



No. 14 (4)

*பிராமணகம எனப் பொறிக்கப்பட்ட பக்கிஎல்ல கல்வெட்டு*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள குளங்களில் ஒன்று பிராமணக கம வாவி என பொறிக்கப்பட்டுள்ளது. எனவே இப்பகுதியில் ஓர் பிராமணர் களின் கிராமமும், அங்கு குளமும் இருந்துள்ளது. இக் கல்வெட்டு பொ.ஆ.மு. 1ம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்டுள்ளது. இதன்படி இக்காலப் பகுதியில் இங்கு பிராமணர்களின் கிராமம் இருந்தபடியால் இப் பகுதியில் கோயில்கள் இருந்திருக்கலாம் என நம்ப இடமுண்டு. பல கோயில்களை பராமரிக்கும் பொருட்டே பிராமணர்கள் ஒன்றாக வாழும் ஓர் கிராமம் மன்னர்களால் உருவாக்கப்படும். எனவே பக்கிஎல்ல பகுதியில் பல கோயில்களைப் பராமரிக்கும் பூசகர்கள் வாழ்ந்த ஓர் கிராமமாக பிராமணகாமம் விளங்கி யிருக்கும் என்பதில் ஐயமில்லை.

பக்கிஎல்ல சந்தியிலிருந்து கிழக்கு நோக்கி வெல்லாவெளிக்குச் செல்லும் வீதியில் சுமார் 2.கி.மீ. தூரத்தில் உள்ள கிரிகும்பர விஹாரையிலேயே இக்கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இங்குள்ள இன்னுமோர் கல்வெட்டில் தேவநம்பிய திச மஹரகஹ மருமகன.... எனப் பொறிக்கப்பட்டுள்ளது. அம்பாறை மாவட்டத்தில் மொட்டையாகல்லு என்னுமிடத்தில் உள்ள பிராமிக் கல்வெட்டிலும் மருமகன எனும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. மருமகன என்பது மருமகன் எனும் தமிழ் பிராமிக்குரிய சொல்லாகும் என பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம் குறிப்பிட்டுள்ளார். இதன்படி பக்கிஎல்ல பகுதியில் பண்டைய காலங்களில் பிராமணர்களின் கிராமமும், குளமும் இருந்ததோடு தமிழ் மக்களும் வாழ்ந்துள்ளனர் என்பது இக் கல்வெட்டுக்கள் மூலம் நிரூபண மாகின்றது.



No. 14 (3)

*மருமகன் எனப் பொறிக்கப்பட்ட பக்கிஎல்ல கல்வெட்டு.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓமுனகல

மகாஓயவிலிருந்து மாதுருஓயாவிற்குச் செல்லும் வழியில் ஓமுனகல மலை அமைந்துள்ளது. இம் மலையிலுள்ள கற்குகைகளில் பொ.ஆ.மு.3ம் நூற்றாண்டு முதல் பொ.ஆ.1ம் நூற்றாண்டு வரையான காலப் பகுதியில் பொறிக்கப்பட்ட தமிழ் பிராமிக் கல்வெட்டுக்கள் 4 காணப்படுகின்றன. ஒரு குகையில் முருகன் சம்பந்தமான ஓர் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இக் கல்வெட்டில் ''பெருமகன் வேலனின் குகை'' என எழுதப்பட்டுள்ளது. எனவே இக் குகையில் வேலன் எனும் முருகனின் குகைக் கோயில் அமைந்திருந்தது என கூறக்கூடியதாக உள்ளது. கல்வெட்டில் வேலன் எனக் குறிப்பிட்டுள்ள படியால் இக் குகையில் முருகனின் வேலாயுதத்தை மட்டும் வைத்து வழிபாடு மேற்கொண்டிருக்கலாம்.

இங்கு தலவிருட்சமான புளியமரத்தின் அருகில் முருகன் கோயிலும், கற்குகையில் வேல் கோயிலும் அமைக்கப்பட்டிருக்கலாம் என நம்ப இடமுண்டு. ஓமுனமலையில் உள்ள நான்கு கல்வெட்டுக்களில் வேலன் என பொறிக்கப்பட்டுள்ள இக் கல்வெட்டு மாத்திரமே இலங்கை தொல் பொருட் திணைக்களத்தினால்"Inscriptions of Ceylon - Volume -1" எனும் நூலில் 403 வது கல்வெட்டாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.



**403**

*வேலன் என்ற பெயர் பொறிக்கப்பட்ட ஓமுனகல கல்வெட்டு* (No.403)

ஓமுனமலையில் உள்ள இன்னுமொர் குகையில் சிவன் சம்பந்தமான ஓர் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இதன்படி இக்குகையில் சிவவழிபாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது தெளிவாக தெரிகிறது. எனவே ஓமுன மலையில் முருக வழிபாடு மட்டுமல்லாது சிவ வழிபாடும் நிலவியிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இங்குள்ள குகைகளில் காணப்படும் மேலும் இரு கல்வெட்டுக்களில் தமிழ் பிராமிக்கே உரித்தான பருமகன் என சொல் இடம்பெற்றுள்ளது. பருமகன் என்பது பெருமகன், தலைவன், உயர்ந்தவன், அரசன், பெரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன், மூத்த மகன், அண்ணன் என்ற கருத்தைக் கொண்டுள்ள சொல்லாகும். எனவே பொ.ஆ.மு. 3ம் நூற்றாண்டளவில் இப் பகுதியில் தமிழரின் செல்வாக்கு மேலோங்கிக் காணப்பட்டுள்ளது. இச் சொல் இலங்கையில் உள்ள 374 கல்வெட்டுக்களில் பொறிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாகபர்வதமலை (பம்பரகஸ்தலாவை)

உகந்தையின் தென் மேற்குப் பக்கத்தில் 10 கி.மீ தொலைவில் நாகபர்வதமலை அமைந்துள்ளது. இங்கு 38 பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவற்றில் நாகம் சம்பந்தமான 3 கல்வெட்டுக்களும், சிவன் தொடர்பான 3 கல்வெட்டுக்களும், சுதர்சன எனும் சொல்லுடன் 3 கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன. அத்துடன் இராவணனின் பெயர் பொறிக்கப்பட்ட ஓர் கல்வெட்டும் இங்கே உள்ளது.

நாகபர்வதமலைப் பகுதி இராவணனின் இராஜதானி அமைந்திருந்த இடத்தின் அருகில் காணப்படுகிறது. இராவண இராஜதானியின் முக்கிய நகரங்களாக உகந்தை, குடும்பிமலை ஆகிய இடங்கள் அமைந்திருந்ததாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. மட்டக்களப்பு மான்மியமும் இவ்விரு இடங்களுக்கும் இராவணனுக்கும் உள்ள தொடர்புகள் பற்றி விபரிக்கின்றது.

இதன்படி இவ்விரு இடங்களுக்கு மிகவும் அருகில் உள்ள நாகபர்வதமலையும் இராவணனுடன் நெருங்கிய தொடர்புடைய இடங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. நாகமலைப் பகுதியில் காணப்படும் தமிழ் பிராமிக் கல்வெட்டொன்றில் இராவணன் சம்பந்தமான செய்தி பொறிக்கப்பட்டிருக்கிறது. ''பெருமகள் இராவணின் மகள் சொஹிலியின் குகை'' என்ற வாசகம் இங்கு காணப்படுகிறது. இக் கல்வெட்டு மூலம் இராவணன் நாகமலையுடன் தொடர்புபட்டிருந்தமை தெளிவாகத் தெரிகிறது.

இராவணனின் பெயர் பொறிக்கப்பட்ட இக்கல்வெட்டில் இராவணனின் மகள் சொஹிலி எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் இப் பகுதியில் இராவணனின் ஆட்சி நிலவியமையும், அவனது பரம்பரையினர் வாழ்ந்திருந்தமை பற்றியும் தெரிய வருகிறது. இராமாயணம் என்பது ஓர் காவியம் எனவும், கற்பனைக் கதை எனவும், இதற்கு சரித்திரப் பின்னணி கிடையாது எனவும், இதன் கதாபாத்திரங்கள் கவிஞர்களினால் படைக்கப்பட்டவை என்பதும் பலரின் கருத்தாக உள்ளது. ஆனால் இராமாயணத்தின் முக்கிய கதாபாத்திரங்களில் ஒன்றான இராவணன் மற்றும் இந்திரஜித்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபீஷணன், கும்பகர்ணன் ஆகியோரின் பெயர்கள் உள்ள கல்வெட்டுக்கள் இலங்கை முழுவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் இராவணன் இலங்கை வேந்தன் என்பதும், இராமாயணத்தின் கதாபாத்திரங்கள் உண்மை யானவை என்பதும் உறுதியாகிறது.

இக் கல்வெட்டுக்களின் காலம் பொ.ஆ.மு. 6000-8000 வரையானது என கலாநிதி ஜயரத்ன பத்திர ஆரச்சி குறிப்பிட்டுள்ளார். எனினும் இக்காலக் கணிப்பை ஏற்றுக் கொள்வதற்கில்லை. இலங்கை பிராமிக் கல்வெட்டுக்களின் தொடக்க காலம் பொ.ஆ.மு. 3ம் நூற்றாண்டு (பொ.ஆ.மு. 201 - 300) எனக் கண்டறியப்பட்டுள்ளது. பிராமிக் கல்வெட்டுக்களை ஆராய்ந்த பல ஆய்வாளர்கள் இக்காலத்தையே கல்வெட்டுக்களின் தொடக்க காலம் எனக் குறிப்பிட்டுள்ளனர். எனவே நாகமலைக் கல்வெட்டும் இதே காலப் பகுதியில் பொறிக்கப்பட்டதென்பதே சரியான கூற்றாகும்.



515

இராவணன் பெயர் பொறிக்கப்பட்ட பம்பரகஸ்தலாவ கல்வெட்டு (No.515)


இராவணனின் காலத்தை பல ஆய்வாளர்கள் பல்வேறு விதமாக கணித்துள்ளனர். பொ.ஆ.மு. 900 முதல் பொ.ஆ.மு. 5200 வரை இக்காலங்கள் காணப்படுகின்றன. பல அறிஞர்கள் இராவணன் காலத்தின் பின்பு இலங்கையில் நிகழ்ந்த ஓர் கடற்கோளை மேற்கோள் காட்டி காலத்தைக் கணித்துள்ளனர். இதன்படி இராவணனின் ஆட்சி பொ.ஆ.மு.1800 முதல் 2400 வரையான காலப் பகுதிக்குள் இலங்கையில் நிலவியது என்பதே பல அறிஞர்களின் முடிவாக உள்ளது. இருப்பினும் அண்மைக்கால ஆய்வுகள் மூலம் இராமாயண காலம் பொ.ஆ.மு. 5100 என இரண்டு வானியல் ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.

எனவே பிராமிக் கல்வெட்டுக்களின் காலத்திற்கும் இராவணனின் காலத்திற்கும் குறைந்த பட்சம் 1500 ஆண்டுகால வேறுபாடு உள்ளது. இராவணன் இறந்த பின்பு அவனது பரம்பரையினர், அல்லது அரச பிரதானிகள், அல்லது விசுவாசிகள் பேணிப் பாதுகாத்து வந்த குகைகளாக இவை இருக்க வேண்டும். அல்லது இராவணனின் மற்றும் அவனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரர்களின் பிள்ளைகள் ஆகியோர் பயன்படுத்திய இக்குகைகளில் ஏனையோர் இவர்களை தெய்வங்களாக போற்றி பரம்பரை பரம்பரையாக வழிபட்டு வந்திருக்க வேண்டும். அல்லது இராவணன் மற்றும் அவனது குடும்பப் பெயர்களை அவனின் பரம்பரையினர், அரசப் பிரதானிகள், விசுவாசிகள் போன்றோர் தங்களுக்கு சூடிக் கொண்டிருக்க வேண்டும். மேற்கூறப்பட்டுள்ள ஏதோ ஒரு வகையில் இராவணன் காலத்தில் பயன்படுத்தப்பட்ட குகையில் பிற்காலத்தில் கல்வெட்டு பொறிக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படியான ஓர் கல்வெட்டே நாக மலையில் காணப்படுகிறது.

நாகமலையில் சிவன் பற்றிய கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் சிவ, சிவாலய போன்ற பெயர்கள் காணப்படுகின்றன. இதன் மூலம் இங்கு சிவ வழிபாடு நிலவியுள்ளது எனக் கூறக் கூடியதாக உள்ளது. இராவணன் ஆட்சிக் காலத்தின் போது இலங்கையெங்கும் சிவலிங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டதாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. இராவணனின் ஆட்சிப் பகுதியில் முக்கிய இடமாக விளங்கிய நாகபர்வத மலையிலும் சிவலிங்கங்களில் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு வழிபாடு நடைபெற்றிருக்க வேண்டும் என யூகிக்கக் கூடியதாக உள்ளது.



518

*சிவன் பெயர் பொறிக்கப்பட்ட பம்பரகஸ்தலாவ கல்வெட்டு* (No.518)

சிவன் தொடர்பான கல்வெட்டுக்களில் ஒன்று ''கபதி சிவஹ லேன கட்டு திகச சகஸ தின'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது கிருஹபதி சிவன் நான்கு விடுதிகளை சங்கத்திற்கு வழங்கினான் எனப் பொருள்படுகிறது. இதன் மூலம் சிவன் என்பவன் பல விடுதிகளுக்கு சொந்தக்காரனாக இருந்துள்ளான் என்பது தெரிகிறது. இவ்விடுதிகள் மலை அடிவாரத்தில் இருந்திருக்கலாம். இக் கல்வெட்டு பேராசிரியர் பரணவித்தானவின் நூலில் 518வது இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இங்கு நாகம் சம்பந்தமான மூன்று கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன. இவற்றில் ஒன்றிலே தான் ''நாகபர்வதம்'' எனும் சொல் பொறிக்கப்பட்டுள்ளது. இவை தவிர தமிழ் பிராமிக்கே உரிய பருமகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் சொல் பொறிக்கப்பட்ட நான்கு கல்வெட்டுக்கள் நாகமலையில் காணப்படுகின்றன. இவற்றின் இலக்கங்ககள் 507, 513, 522 ஆகும். இக் கல்வெட்டுக்கள் மூலம் பம்பரகஸ்தலாவை மலைப் பகுதியில் நாக வழிபாடு, சிவ வழிபாடு போன்றவை காணப்பட்டுள்ளன என்பதை உறுதியாகக் கூறலாம். அத்துடன் இப்பகுதியில் ஆதி தமிழர்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பதும் நிரூபணமாகிறது.



507

நாகம் பெயர் பொறிக்கப்பட்ட பம்பரகஸ்தலாவ கல்வெட்டு (No.507)

இக் கல்வெட்டுக்களில் பெரும்பாலானவை இங்குள்ள 200 அடி நீளமான ஓர் மலைக் குகையில் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் சில பொ.ஆ. 7ம் நூற்றாண்டுக்குரியவை எனக் கண்டறியப்பட்டுள்ளது. பெருமகன் எனும் பட்டத்தையுடைய நாகர் தலைவன் இங்குள்ள குகைகளுக்கு சொந்தக்காரனாக இருந்தமையும் கல்வெட்டுக்கள் மூலம் தெரிய வருகிறது. மேலும் சுவாமி எனும் பொருள் கொண்ட ''பத்த'' எனும் சொல்லுடன் மூன்று கல்வெட்டுக்கள் இங்கு உள்ளன. இதன் மூலம் இங்கு இந்து முனிவர்கள் வாழ்ந்துள்ளமை தெரியவருகிறது.

## ரஜகல (இராசமலை)

அம்பாறையிலிருந்து மகா ஓயாவிற்கு செல்லும் வழியில் உள்ள பக்கிஎல்ல என்னுமிடத்தில் இருந்து 5 கி.மீ தூரத்தில் நவக்கிரி ஆறு குளத்தின் அருகில் ரஜகல எனும் இராசமலை அமைந்துள்ளது. இது ராஸ்ஸஹெல (ராசமலை) என பண்டைய காலத்தில் அழைக்கப்பட்டுள்ளது.

இம்மலையில் நூற்றுக்கணக்கான கற்குகைகளும், வழிபாட்டுத் தலங்களின் இடிபாடுகளும் பெருமளவில் காணப்படுகின்றன. இக்கற்குகைகளில் ஏராளமான பிராமிக் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. மொத்தமாக 48 குகைக் கல்வெட்டுக்களும், 4 பாறைக் கல்வெட்டுக்களும் இராசமலையில் காணப்படுகின்றன.இந்த 48 பிராமிக் கல்வெட்டுக்களும் பொ.ஆ.மு. 3ம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டு முதல் பொ.ஆ. 1ம் நூற்றாண்டு வரையான காலப் பகுதியில் பொறிக்கப்பட்டவையாகும்.



449


450

*சிவன் பெயர் பொறிக்கப்பட்ட ரஜகல கல்வெட்டுக்கள்* (No.449, 450)

இக் கல்வெட்டுக்களில் இந்த தெய்வங்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட பல கல்வெட்டுக்கள் உள்ளன. சிவன் எனும் பெயர் பொறிக்கப்பட்ட 4 கல்வெட்டுக்களும், நாகம் எனும் பெயர் பொறிக்கப்பட்ட 2 கல்வெட்டுக்களும் சுதர்சன எனும் பெயர் உள்ள 2 கல்வெட்டுக்களும், இந்திரன், சூரியன் ஆகிய பெயர் பொறிக்கப்பட்ட ஒவ்வொரு கல்வெட்டும் இங்கு காணப் படுகின்றன. இதன் மூலம் இராசமலையில் சிவ வழிபாடு மற்றும் நாக வழிபாடுகள் இருந்தமை தெரிய வருகிறது.

இக் கல்வெட்டுக்கள் யாவும் 1970ம் ஆண்டு பேராசிரியர் S. பரணவித் தானவினால் "Inscription of ceylon - vol.1" எனும் நூலில் பதிவு செய்யப்பட் டுள்ளன. இந்நூலில் இலக்கம் 422 முதல் 468 வரை ரஜகல கல்வெட்டுக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் 431ம் இலக்க கல்வெட்டில் ''சிவ தேரஹ லேன எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இது மதிப்பிற்குரிய சிவனின் குகை என பொருள்படுகிறது.


457


458

*நந்தி, இந்திரன், நாகம் ஆகிய பெயர்கள் பொறிக்கப்பட்ட ரஜகல கல்வெட்டுக்கள்* (No.457, 458)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

443ம் இலக்க கல்வெட்டில் ''பத்த சிவபூதிய லேன சுபதித்தித்த'' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இது சுவாமி சிவபூதியின் சுபதித்தித்த எனும் குகை எனப் பொருள்படுகிறது. 449ம் இலக்க கல்வெட்டில் ''சிவ தேரச லேன'' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இது மதிப்பிற்குரிய சிவனின் குகை என பொருள்படும். 450ம் இலக்க கல்வெட்டில் சிவதேர.... என பொறிக்கப் பட்டுள்ளது. இதுவும் மதிப்பிற்குரிய சிவன் எனப் பொருள்படும். இந்த 4 கல்வெட்டுக்கள் மூலம் இங்கு சிவ வழிபாடு நிலவியுள்ளமை தெரிய வருகிறது. மேலும் 454ம் இலக்க கல்வெட்டில் சூரியன் பற்றியும் 457ம் இலக்க கல்வெட்டில் இந்திரன் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

நாக வழிபாடு தொடர்பான இரண்டு கல்வெட்டுக்களில் 458ம் இலக்க கல்வெட்டில் "நாக தேரஹ லேன இடசலகொஹப" எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இது மதிப்பிற்குரிய நாகனின் இந்தசலகுகை எனப் பொருள்படுகிறது. பேராசிரியர் பரணவித்தானவினால் கண்டுபிடிக்கப்பட்டு, தொல்பொருட் திணைக்கள பணிப்பாளர் மாலினி டயஸ் 2001ம் ஆண்டு பதிப்பித்த Inscription of Ceylon - Vol.11-part 2 எனும் நூலில் 161ம் இலக்க கல்வெட்டில் நாகனின் மகன் நாகனால் திஸ்ஸ மஹாவிஹாரைக்கு மானியம் வழங்கப் பட்டது பற்றி குறிப்பிட்டுள்ளது.


1983ல் பேராசிரியர் S.பரணவித்தான பதிப்பித்த Inscription of Ceylon - Vol.11-part 1 எனும் நூலில் 2ஆம், 13ம் இலக்க கல்வெட்டுக்களில் மருமகன் எனும் தமிழ்ச் சொல் பொறிக்கப்பட்டுள்ளது. அதுபோல இவர் 1970ம் ஆண்டு பதிப்பித்த நூலில் 435, 460, 462 ஆகிய இலக்க கல்வெட்டுக்களில் தமிழ் மொழிக்குரிய ''பருமக'' எனும் சொல் பொறிக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. இக்கல்வெட்டுக்களும் ராசமலையில் காணப்படுகின்றன.

## சாஸ்த்ராவெல - பானமை

பொத்துவிலில் இருந்து பானமைக்கு செல்லும் வழியில் பானமையில் அருகில் சாஸ்த்ராவெல எனும் சாத்திரவெளி அமைந்துள்ளது. இங்கு மலை மீது பெரிய கற்குகையொன்றில் ஓர் பிராமிக் கல்வெட்டும், மலைப்பாறை மீது இரண்டு பிராமிக் கல்வெட்டுக்களுமாக மொத்தம் 3 கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. குகைக் கல்வெட்டில் நாக மலை ''நாகபர்வத'' என்னும் சொல் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இம் மலை நாக வழிபாடு செய்யப்பட்ட இடம் என்பது உறுதியாகத் தெரிகிறது. மேலும் இக் கல்வெட்டில் போககிரி, வேலமுகம், மருமகன் ஆகிய சொற்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்காமத்திற்கு தீர்த்த யாத்திரை வந்த போகர் இக் குகையில் தங்கிச் சென்றதாகவும் இதன் காரணமாக குகை இருந்த மலை போகர் மலை (போககிரி) என அழைக்கப்பட்டதாக நம்பப்படுகிறது. மேலும் இம் மலை அடிவாரத்தில் ஓடும் நாவலாறு கடலுடன் கலக்கும் கழிமுகம் ''வேலமுகம்'' என பெயர் பெற்றிருந்துள்ளது. இது போகரினால் முருகனின் வேல் வைத்து வழிபடப்பட்ட இடமாகக் கூட இருக்கலாம். அத்துடன் ''மருமகன்'' எனும் தமிழ்ச் சொல்லும் இக் கல்வெட்டில் காணப்படுகிறது.



No. 23

*போககிரி, வேலமுகம், மருமகன் ஆகிய சொற்கள் பொறிக்கப்பட்ட சாஸ்த்ராவெல கல்வெட்டு* (No.23)

கல்வெட்டாய்வாளர் நிக்கலஸ் 1934ல் இக்கல்வெட்டு பற்றிய தகவல்களை எழுயுள்ளார். இலங்கைத் தொல்பொருள் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட "Inscription of Ceylon - Later Brahmi Inscription" எனும் பெயரில் பேராசிரியர் பரணவித்தான வெளியிட்ட இந்நூலில் 23ம் இலக்க கல்வெட்டாக இது இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

# புராதன கோயில்கள்

தென் கிழக்கிலங்கை ஏராளமான பண்டைய ஆலயங்களைக் கொண்ட பிரதேசமாகும். இப்பிரதேசத்தில் உள்ள சுமார் 85 பண்டைய கிராமங்களிலும் நூற்றுக்கும் மேற்பட்ட புராதன ஆலயங்கள் இருந்துள்ளன. இவை யாவும் பொ.ஆ. 16 ஆம், 17 ஆம் நூற்றாண்டு காலப் பகுதியில் ஐரோப்பியர்களால் இடித்தழிக்கப்பட்டுள்ளன. இன்று நாம் காணும் ஆலயங்கள் 200 வருடங்களுக்குள் கட்டப்பட்டவையே. பண்டைய ஆலய இடிபாடுகள் அடையாளம் காணப்பட்டு இவ்வாலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் சில ஆலயங்கள் மண்ணுள் இருந்து வெளிப்பட்ட புராதன தெய்வச்சி லைகளை வைத்து வேறு இடங்களில் கட்டப்பட்டவையாகும்.

இன்று தென்கிழக்கிழங்கையில் (அம்பாறை மாவட்டம்) பதிவு செய்யப்பட்ட 200 கோயில்கள் உட்பட சுமார் 350 இந்துக் கோயில்கள் உள்ளன. இவற்றில் 120 கோயில்கள் புராதன கோயில்களாகும். இவ்வத்தியாயத்தில் 59 புராதன ஆலயங்கள் பற்றிய விபரங்கள் உள்ளன.

## சித்திர வேலாயுத சுவாமி கோயில் - திருக்கோவில்

பொத்துவிலிலிருந்து வடக்கு நோக்கி மட்டக்களப்பு செல்லும் வீதியில் 32 கி.மீ. தொலைவில் திருக்கோவில் அமைந்துள்ளது. இங்கு பிரதான வீதியிலிருந்து கிழக்குப் பக்கமாக அரை கிலோ மீற்றர் தூரத்தில் கடற்கரையை ஒட்டி சித்திரவேலாயுத சுவாமி கோயில் அமைந்துள்ளது. தென்னிந்தியாவுக்கு ஒரு திருச்செந்தூர் போல இலங்கைக்கு திருக்கோயில் முருகன் ஆலயம் அமைந்துள்ளது. இது ஈழத்துத் திருச்செந்தூர் எனவும் அழைக்கப்படுகிறது. மட்டக்களப்பில் பழைமை வாய்ந்ததும், மன்னர்களாலும் வன்னிமைகளாலும் திருப்பணிகள் செய்யப்பட்டதுமான ஆலயங்கள் திருப்படைக் கோயில்கள் எனவும், தேசத்துக் கோயில்கள் எனவும் அழைக்கப்படுகின்றன. இவற்றில் முதல் திருப்படைக்கோயில் என்ற சிறப்பை திருக்கோயில் பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தில்லை சிதம்பரத்திற்கு அடுத்தபடியாக திருக்கோயில் என்ற சிறப்புப் பெயர் பெற்ற ஒரே திருத்தலம்

இதன் பழைய பெயர் நாகர் முனையாகும். முதன் முதலில் வேடர்களால் கொத்துப் பந்தலிட்டு வழிபடப்பட்ட போது வடக்கு முகமாக இருந்த வேல் பிற்காலத்தில் கிழக்கு நோக்கித் திரும்பியபடியால் திருக்கோயில் என்ற பெயரைப் பெற்றது எனக் கூறப்படுகிறது. உலகிலேயே திருக்கோயில் எனும் சிறப்புப் பெற்ற திருத்தலமாக விளங்குவது திருச்சிற்றம்பலம் எனப்படும் சிதம்பரமே. அதற்கு அடுத்தபடியாக இப்பெயர் இம்முருகன் கோயிலுக்கே வழங்கப்படுகிறது. திருக்கோயில் என்பது ஊருக்கும் கோயிலுக்கும் ஒரே பெயராக வழங்கப்படும் சிறப்பு தமிழ்நாட்டில் கூட எந்தக் கோயிலுக்கும் இல்லை. இத்திருத்தலத்திற்கு நாகர்முனை, கந்தபாணத்துறை, வேலூர், திருச்செந்தூர் என்ற பெயர்களும் உண்டு. புராதன காலத்தில் இவ்வாலயம் 'சிவஞான சங்கரர் கோயில்' என்ற பெயரைப் பெற்றிருந்தது. கந்தன் எய்த பாணம் வேலுருக்கொண்டு இங்கிருந்த வெள்ளை நாவல் மரத்தில் தங்கியதால் இவ்விடம் கந்தபாணத்துறை என்ற பெயர் பெற்றது. மேலும், வெள்ளை நாவல்பதி, நாகர்முனை, போன்ற பெயர்களும் ஆதியில் திருக்கோயிலுக்கு வழங்கப்பட்டன.



*திருக்கோயில் முருகன் ஆலயத்தின் தோற்றம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தன் படையெடுப்பு காலத்துடன் தொடர்புடைய மூன்று கோயில்களில் ஒன்று

வரலாற்றுக்கு முற்பட்ட கந்தன் படையெடுப்புக் காலத்துடன் இக்கோயிலின் சரித்திரம் தொடங்குகிறது. சூரபத்மனை அழிக்க படைதிரட்டி வந்த முருகப் பெருமான் எய்த வேலாயுதம் அவனை அழித்து உக்கிரவேகத்தில் கடலை நோக்கி வந்த போது இடையிலிருந்த வாகூர மலையை இரண்டாகப் பிளந்து கடலில் வீழ்ந்து மூன்று கதிர்களாகப் பிரிந்து அவை நாகர்முனையெனும் திருக்கோயிலிலும், மண்டூரிலும், உகந்தை மலையிலும் விழுந்ததாக ஐதீகம். முருகனின் வேல் கதிர்கள் விழுந்த இம்மூன்று இடங்களிலும் இலங்கையின் ஆதிக்குடிகளாக அன்று வாழ்ந்து வந்த நாகர் மற்றும் வேடர் குலத்தவர்களால் முருகனாலயங்கள் அமைக்கப்பட்டன.

## இராவணனின் இராச்சியத்தின் ஒரு பகுதியில் நாகர்களால் கட்டப்பட்ட மிகப் புராதன ஆலயம்

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நாகர்களால் ஆரம்பிக்கப்பட்ட புராதன ஆலயமே திருக்கோயில் கந்தசுவாமிக் கோயிலாகும். இலங்கையின் முதல் மன்னனாக புராணங்கள் கூறும் குபேரன் முருக வழிபாட்டைப் பேணி வந்தவனாவான். இவனுக்கு பின் இலங்காபுரியை ஆட்சி செய்த இராவணன் சிவலிங்க வழிபாட்டை கைக்கொண்டு வந்தான். இவனது இலங்காபுரி நகரம் இலங்கையின் கிழக்கில் அமைந்திருந்ததாகவும், இலங்காபுரி அரசின் பெரும் பகுதி கடற்கோள்களினால் கடலில் மூழ்கிவிட்டதாகவும் வரலாற்று நூல்கள் கூறுகின்றன. திருக்கோயிலின் தென்கிழக்கிலுள்ள கடற்பரப்பில் காணப்படும் மலைக்குன்றுகள் இராவணன் கோட்டைகள் என அழைக்கப்படுகின்றன. யால தேசிய வனவிலங்கு சரணாலயத்திற்கு தெற்கிலும், மேற்கிலும் உள்ள கடற் பரப்பில் காணப்படும் மலைக்குன்றுகள் பெரிய இராவணன் கோட்டை, சிறிய இராவணன் கோட்டை என அழைக்கப்படுகின்றன. இதன்படி திருக் கோயிலை அண்மித்த பகுதிகள் இராவணனின் இலங்காபுரி இராஜதானியின் முக்கிய பகுதியாக இருந்திருக்க வேண்டும் என நம்பப்படுகிறது.

## பொ.ஆ.மு. 4ஆம் நூற்றாண்டில் காளிசேனனால் அழிக்கப்பட்ட ஆலயம்

பொ.ஆ.மு. 4ஆம் நூற்றாண்டில் அயோத்தியிலிருந்து வந்த இரகுவம் சத்தைச் சேர்ந்த காளிசேனன் என்பவனால் இவ்வாலயம் அழிக்கப்பட்டதாகவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பல காலமாக அழிந்து சிதைந்து கிடந்த இவ்வாலயத்தை பொ.ஆ. 1ஆம் நூற்றாண்டில் மட்டக்களப்புப் பகுதியை ஆட்சி செய்து வந்த பிரசின்ன சித்து எனும் மன்னன் புவனேக கயபாகு என்பவனின் உதவியுடன் திருத்தியமைத்ததாகவும், இக்காலத்திலே கோயிலும் இவ்வூரும் திருக்கோயில் எனப் பெயர் பெற்றதாகவும் மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. இவனே உன்னரசு கிரியை தலைநகராகக் கொண்டு இப்பகுதியை ஆண்டு வந்தான். புவனேக கயபாகுவின் பின் அவனது மகனான மனுநேய கயபாகு சோழ நாட்டிலிருந்து சிற்பிகளை அழைப்பித்து வந்து திருக்கோயில் ஆலயத்தில் ஏழு மாடத் தூபியை எழுப்பியதோடு மதில், மண்டபங்கள், வாகனசாலை, கோபுர வாசல் போன்றவற்றையும் கட்டி தங்கத்தகடு பூட்டிய கொடித்தம் பத்தையும் அமைத்து, ஏழு தட்டுத் தூபியின் மீது ஏழு தங்கக் குடங்களையும் வைத்து, ஆலயத்திற்கு ஆறு வீதிகளையும் அமைத்து குடமுழுக்கு விழாவை சிறப்பாகக் கொண்டாடியதாக மட்டக்களப்பு மான்மியம் மேலும் விபரிக்கிறது. இவன் கோயில் திருப்பணிகளை நன்கு மேற்கொள்வதற்காக ஏரிகளை அமைத்ததோடு நெல் கழனிகளையும் அமைத்து, ஆறுகாலப் பூஜைகளுக்கு ஊழியர்களையும் நியமித்தான் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மனுநேய கயபாகுவால் கற்கோயிலாக கட்டப்பட்ட ஆலயம்

இம்மனுநேயபாகு மனுமன்னன் என போற்றப்பட்டவன். மனுநீதிச் சோழனுக்கு நிகராக சிங்கள இலக்கியங்களில் போற்றப்பட்ட எல்லாளனே மனு மன்னனாவான் எனவும், பொ.ஆ.மு. 145-101 காலப்பகுதியில் இலங்கை முழுவதையும் 44 வருடம் ஆண்ட எல்லாளனே 'மனு மன்னன்' எனப்படுபவன் எனவும், திருக்கோயில் முருகன் ஆலயத்தை முதன்முதல் கற்கோயிலாகக் கட்டி குடமுழுக்கு விழாவை சிறப்பாகக் கொண்டாடியவன் இவனே எனவும், பல நூற்றாண்டு காலமாக மண் கோயிலாகவும், மரக் கோயிலாகவும் இருந்த இக்கோயிலை, பொ.ஆ.மு. 2ஆம் நூற்றாண்டில் முதன்முதலாக சிறிய கற்கோயிலாக கட்டியவன் மனுநேயபாகு எனும் எல்லாள மன்னனே எனவும் சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மட்டக்களப்பு மான்மியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மனுநேயபாகுவின் காலம் கலி 3150. இது பொ.ஆ. 48க்கு சமமானது. எல்லாள மன்னனின் காலம் பொ.ஆ.மு. 145-101 காலமாகும். இக்காலப்பகுதி கிட்டத்தட்ட பொருந்துகிறது. எனவே மனுநேயகயபாகுவே எல்லாளன் என அவர்கள் கூறுகின்றனர். பாண்டிய இளவரசர்கள் ஐவர் அநுராதபுரத்தை வெற்றிகொண்டு பொ.ஆ.மு. 44-29 வரையான 15 வருட காலப்பகுதியில் ஒருவர் பின் இன்னொருவராக ஆட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்தினர். புலகத்தன், பாகியன், பனையமாறன், தத்திகன், பிலய மாறன் எனப்படும் இவ்வைவரும் பொ.ஆ.மு. முதலாம் நூற்றாண்டில் தெற்கில் உருகுணை வரை ஆட்சி செலுத்தினர். தமிழ், இந்து மன்னர்களான இவர்கள் திருக்கோயில் கந்தசுவாமிக் கோயிலுக்கு திருப்பணிகள் செய்து வழிபட்டனர். ஏற்கனவே கட்டப்பட்டு முடிக்கப்படாத பகுதிகளை இவ்வரசர்கள் கட்டி முடித்ததாக வரலாற்று நூல்கள் கூறுகின்றன.



*பாண்டியர் கால கருவறையின் வெளித்தோற்றம்*

## பிற்காலப் பாண்டியர் கட்டிடக்கலை அம்சங்கள் நிறைந்த ஆலய அமைப்பு

பொ.ஆ. 11ஆம் நூற்றாண்டில் சோழர் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் கதிர்சுதனால் இவ்வாலயம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டதாகவும், அதன் பின்பு பொ.ஆ. 13ஆம் நூற்றாண்டில் கலிங்க மாகோன் காலத்தில் குளக்கோட்டு மன்னனாலும், பொ.ஆ. 13ஆம் நூற்றாண்டில் பாண்டியர் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்திலும் இவ்வாலயம் புனரமைக்கப்பட்டதாக வரலாறு கூறுகிறது. பொ.ஆ. 11ஆம் நூற்றாண்டில் இவ்வாலயம் ஏழு தட்டுத் தூபிகளுடனும், ஏழடுக்குக் கோபுரங்களுடனும், ஏழு வீதிகளுடனும் அமைந்திருந்ததாக அறியப்படுகிறது.

இவையாவும் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டுள்ளன. தற்போதைய ஆலய அமைப்பு பாண்டியர் பாணியில் காணப்படுகிறது. ஆலயம் அழிக்கப் பட்ட பின் சிதைவுற்றுக் காணப்பட்ட கருவறை விமானமும் அதன் தூண்களும் அரைத்தூண்களும், அவற்றில் காணப்படும் போதிகைகளும் பாண்டியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிடக்கலைப் பாணியில் அமைக்கப்பட்டுள்ளன. இப்பகுதி கூடியவரை பழுதடையாது பேணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இது பொலனறுவையில் உள்ள முதலாம் சிவாலயத்தை பெரிதும் ஒத்துள்ளது. கற்பக்கிரகம், அந்தராளம், அர்த்தமண்டபம் போன்றவை சோழர் காலக் கோயில் அமைப்பை ஒத்துள்ளன. எனினும், தேவகோஷ்டம், தாமரைப் போதிகை, கீர்த்தி முகம், யாளி வரிசை போன்றவை பாண்டியர் சாயலை ஒத்ததாகும். இவ்வமைப்புகளின்படி இவ்வாலயம் பொ.ஆ. 13ஆம் நூற்றாண்டில் மாகோன் ஆட்சியின்போது குளக்கோட்டு மன்னனாலும் அதற்குப் பின் இப்பகுதியில் பாண்டியர் செல்வாக்குப் பெற்ற பொ.ஆ. 1284-1304 வரையான காலப்பகுதியிலும் புனரமைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே, சோழர் காலத்தில் அவர்களது பாணியில் அமைக்கப்பட்ட ஆலயத்தில் பாண்டிய கலைமரபுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

## குளக்கோட்டன், 6ஆம் விஜயபாகு, விமலதர்மசூரியன் ஆகியோரின் திருப்பணிகள்


இவ்வாலயத்திற்கு 16ஆம் நூற்றாண்டில் 6ஆம் விஜயபாகு திருப்பணிகள் செய்தான் என்பதை கல்வெட்டு ஒன்று கூறுகிறது. ஒரு தடவை கண்டி மன்னனான விமலதர்ம சூரியனாலும் திருப்பணிகள் செய்யப்பட்டு, மானியங்கள் வழங்கப்பட்டும் உள்ளதாகத் தெரியவருகிறது. பொ.ஆ. 1603இல் மட்டக்களப்புக்கு வந்தவேளை விமலதர்ம சூரியன் திருக்கோயிலைத் தரிசித்துள்ளான். இவ்வாலயத்திற்கு பொ.ஆ.மு. 2ஆம் நூற்றாண்டு முதல் போர்த்துக்கேயர் காலம் வரை மன்னர்கள் தொடர்ச்சியாக திருப்பணிகள் செய்து வந்துள்ளனர்.

பொ.ஆ. 13ஆம் நூற்றாண்டில் கலிங்க மாகோன் இவ்வாலய பரிபாலனத்திற்கென வன்னிமைகள் வகுத்ததாகவும் தென்னிந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட மக்களை இங்கு குடியமர்த்தி திருப்பணிகள் செய்வித்தான் எனவும் தெரியவருகிறது. திருக்கோயில் பணிகளுக்கென்றே கொண்டுவரப்பட்டு கோரைக்களப்பு என்னுமிடத்தில் குடியேற்றப்பட்ட பூபால கோத்திரக் குடியினர் மாகோன் காலத்தில் ஏழு குடிகளாக வகுக்கப்பட்டு திருக்கோயில் ஆலயத்திற்கு திருப்பணிகள் செய்ய அமர்த்தப்பட்டதாக ‘குளிக்கல்வெட்டு முறை’ பாடல் கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோயில் முருகனாலயம் பற்றிய நான்கு கல்வெட்டுக்கள்

திருக்கோயில் ஆலயத்தில் வேறெந்த ஆலயங்களிலும் இல்லாத சரித்திர சான்றுகள் பல காணப்படுகின்றன. இலங்கையில் அதிகளவில் கல்வெட்டுக் களைக் கொண்ட ஒரு சில இந்து ஆலயங்களில் திருக்கோயிலும் ஒன்றாகும். இங்கு நான்கு தமிழ்க் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இதேபோன்று அதிக கல்வெட்டுகளைக் கொண்ட கோயில்களாக பெரியகுளம் நாதனார் சிவன்கோயிலும், கந்தளாயில் அமைந்துள்ள இராஜராஜேஸ்வரமும், திருக்கோ ணேஸ்வரமும் விளங்குகின்றன. இவை மூன்றும் திருகோணமலை மாவட் டத்தில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.




தூண் கல்வெட்டு

திருக்கோயில் கல்வெட்டுக்கள் நான்கில் ஒரு துண்டுக் கல்வெட்டும், தூண் கல்வெட்டும் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. தூண் கல் வெட்டு 5 அடி உயரமானதும், மூன்று பக்கங்களிலும் தமிழ் எழுத்துக்களும் நான்காவது பக்கம் மயிலின் உருவமும், முச்சூலமும் செதுக்கப்பட்ட கல் வெட்டாகும். இதில் 38 வரிகளில் எழுத்துகள் காணப்படுகின்றன. தொடக் கத்தில் சூரியனும் சந்திரனும் பொறிக்கப்பட்டுள்ளன. பொ.ஆ.12ஆம் நூற்றாண்டிற்குரிய இக்கல் வெட்டு மாகோன் காலத்தில் பொறிக்கப்பட்டதென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில ஆய்வாளர்களும், 6ஆம் விஜயபாகுவின் காலத்திற்குரியது என வேறு சில ஆய்வாளர்களும், கூறுகின்றனர். பொ.ஆ. 1513 - 1521 வரை கோட்டையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த வேளை, தனது மூன்று புதல்வர்களால் கொல்லப்பட்டவனே 6ஆம் விஜயபாகுவாகும். இக்கல் வெட்டில் விஜயபாகுவின் 10ஆவது ஆட்சியாண்டில் சங்கரன் கோயிலுக்கு வோவில் எனும் இடம் நன்கொடையாகக் கொடுக்கப்பட்டது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் படி திருக்கோயில் ''சிவஞான சங்கரன் கோயில்'' என்ற பெயரைப் பெற்றுள்ளது என அறியக்கூடியதாக உள்ளது. இதில் குறிப்பிட்டுள்ள வோவில் என்னுமிடம் இங்கிருந்து தெற்கில் 4 மைல் தொலைவில் இருப்பதாக ஆய்வாளர் எஸ்.ஓ. கனகரட்னம் தெரிவித்துள்ளார். இக்கல்வெட்டு தம்பிலுவில் கண்ணகியம்மன் கோயிலிலிருந்து கிடைக்கப் பெற்றுள்ளது.



கற்பலகைக் கல்வெட்டு

திருக்கோயில் துண்டுக் கல்வெட்டு 2 அடி நீளமும், அகலமும் கொண்ட சற்சதுர வடிவம் கொண்ட கல்லாகும். இதில் 12 வரிகளில் தமிழ் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் சில வரிகள் மிகவும் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன. பொ.ஆ. 12ஆம் நூற்றாண்டுக்குரிய எழுத்துக்களைக் கொண்ட இக்கல்வெட்டில் சித்திரவேலாயுத சுவாமி கோயிலுக்குரிய ஒரு எல்லை சம்பந்தமான திருப்பணி பற்றிய செய்தி எழுதப்பட்டுள்ளது. இதன் எழுத்துகள் அதிகளவில் சிதைந்து காணப்படுவதால் இக்கல்வெட்டு எழுதப் பட்டதன் நோக்கம் சரியாகத் தெரியவில்லை. இக்கல்வெட்டும் மாகோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்திற்குரியதென அறியப்பட்டுள்ளது. இது 16ஆம் நூற்றாண்டிற் குரியதெனவும் சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இங்குள்ள இன்னுமோர் கல்வெட்டு 4 அடி உயரமும் 9 அங்குல அகலமும் கொண்டது. இதில் ஆறு வரிகளில் மட்டுமே எழுத்துகள் பொறிக்கப் பட்டுள்ளன. இதன் காலம் 18ஆம் நூற்றாண்டு என கண்டறியப்பட்டுள்ளது. இதிலும் எல்லை சம்பந்தமான ஓர் தகவல் சொல்லப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

## போர்த்துக்கேயத் தளபதி அசவிடோ செய்த அக்கிரமமும், பாதிரியார் குவைரோசின் குறிப்பும்

இவ்வாலயம் பொ.ஆ.17 ஆம் நூற்றாண்டில் அசவிடோ என்னும் போர்த்துக் கேயத் தளபதியால் இடித்தழிக்கப்பட்டது. இவ்வாலயம் அழிக்கப்படுவதற்கு முன்பு இதனைக் கண்ட குவைரோஸ் என்னும் போர்த்துக்கேய பாதிரியார் திருக்கோயில் முருகனாலயம் பற்றி தனது குறிப்பில் எழுதியுள்ளார். அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் மூன்று கோபுரங்கள் இங்கு காணப்பட்டதாகவும், இவர்கள் முக்கியமாக கடற்கரையை ஒட்டி அமைந்திருந்த கோயில்களையே அழித்ததாகவும், மட்டக்களப்பின் உட்பகுதியில் இருந்த கோயில்களை இவர்கள் எக்காரணத்தினாலோ அழிக்கவில்லை எனவும் அவரது குறிப்பு தெரிவிக்கிறது.

இவ்வாலயத்தின் பண்டைய அமைப்பு ஏனைய கோயில்களிலிருந்தும் வேறுபட்டிருந்தது. தில்லை சிதம்பரத்தின் கனகசபை அமைப்பைப் போல் இரண்டு பக்கங்களிலும் சந்நிதிக்குள் புகுவதற்கு வழி அமைக்கப்பட்டிருந்தது. இவை இரண்டும் வேட முகப்பு, சாமி முகப்பு எனப் பெயர் பெற்றிருந்தன. சுவாமி வலம் வருவதற்கு மூன்று வீதிகள் அமைக்கப்பட்டிருந்தன. இவ்வீதி களின் அடித்தளங்களை இன்றும் காணக்கூடியதாக உள்ளது.

## ஆலயத்தில் காணப்படும் தொல்பொருள் சின்னங்கள்

திருக்கோயில் முருகன் ஆலயம் பல தொன்மை வரலாற்றுச் சின்னங்களைக் கொண்ட ஓர் பண்டைய பொக்கிஷமாக விளங்குகிறது. ஆலயத்தினுள்ளும் ஆலய வளாகத்திலும் ஏராளமான புராதனச் சின்னங்கள் காணப்படுகின்றன. கல்வெட்டுகள் எல்லாம் பாதுகாக்கப்பட்டு ஆலயத்தின் இடதுபக்கத்தில் ஓர் அறையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அர்த்த மண்டபத்தின் தெற்கு வாசலில் உள்ள கல்லினால் ஆன வாசல் படிக்கட்டுகளும், இரு பக்கங்களிலு முள்ள கைப்பிடி வரிசைகளும், கருவறையின் உள்ளே உள்ள கற்றூண்களும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதவு நிலையும் மற்றும் தெற்கு, வடக்கு வாசல் படிக்கற்களும் புராதன சின்னங்களாகும். இவற்றைத் தவிர ஆலயத்தின் உள்வீதியில் ஆங்காங்கே பல புராதன ஆலயச் சின்னங்கள் காணப்படுகின்றன. பிள்ளையார் பரிவாரக் கோயிலின் கோமுகி, கருவறைக் கோமுகி, பீடக் கற்கள், வட்ட வடிவமான சிறிய கற்தொட்டி, ஐந்து கற்பூரக்கற்கள் போன்றவையும் பிரதான வாசலின் இடதுபக்கத்தில் 6 கற்றூண்களும் காணப்படுகின்றன. இக்கற்றூண்களில் ஒன்று முழுமையானதும், அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடனும் காணப் படுகிறது. இப்பண்டைய சின்னங்கள் அனைத்தும் பேணிப் பாதுகாக்க வேண்டியவையாகும்.

## இலங்கையில் வேறெந்த கோயில்களிலும் காணக்கிடைக்காத அரிய காட்சி

திருக்கோயில் முருகனாலயத்தில் கருவறையில் மயில் மீது அமர்ந்திருக்கும் முருகப் பெருமானின் பின்பக்கம் நிலைக்கண்ணாடி ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. கிழக்கு நோக்கிய கருவறையில் பொருத்தப்பட்டுள்ள கண்ணாடி யில் எதிரிலுள்ள கடலின் விம்பம் தெரிகிறது. காலைவேளையில் சூரிய உதயத்தின் போது கடலிலிருந்து எழும் சூரியனின் விம்பம் கந்தக் கடவுளின் சிரசிலிருந்து எழுவது போன்று அழகிய காட்சியை இங்கு காணலாம். இலங்கையில் வேறெந்தக் கோயிலிலும் காணக்கிடைக்காத இவ்வரிய காட்சியை இங்கு மட்டுமே காணக்கூடியதாக உள்ளது.


## உகந்தைகிரி சிவாலயம்

பானமையில் இருந்து தெற்கு நோக்கி செல்லும் காட்டுப்பாதையில் சுமார் 12 கி.மீ. தூரத்தில் உகந்தை அமைந்துள்ளது. கிரவல் மண்ணினால் அமைக்கப் பட்ட காட்டுப்பாதையின் கிழக்கில் சுமார் 500 மீற்றர் தூரத்தில் ஆலயங்கள் நிறைந்த மலைப்பகுதி காணப்படுகிறது. இங்கிருந்து 100 மீற்றர் தொலைவில் வங்கக்கடல் அமைந்துள்ளது. இங்கிருக்கும் உயரமான மலைக் குன்றில் புராதன சிவாலயம் அமைக்கப்பட்டிருந்ததாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.

கதிர்காமத்திற்கு செல்லும் பாத யாத்திரீகர்கள் அனைவரும் தங்கிச் செல்லும் முக்கிய இடமாக உகந்தை முருகனாலயம் விளங்குகிறது. கதிர்காம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாத்திரை மேற்கொள்ளும் அதிகமான பக்தர்கள் இங்கிருந்தே தமது பாதயாத்திரையை தொடங்குகின்றனர்.



உகந்தை கிரி மலையின் தோற்றம்

## கந்தன் படையெடுப்பு காலம்

இலங்கையின் பூர்வீக வரலாறு கந்தன் படையெடுப்பு காலத்தில் ஆரம்பமாகி, இராமாயண காலத்துடன் தொடர்வதாக ஐதீகம். கந்தன் படையெடுப்புடன் இலங்கையின் பூர்வீக வரலாறு தொடர்பு கொண்டுள்ளபடியால் இலங்கையில் இடம்பெற்ற முக்கிய வரலாற்று நிகழ்வாக கந்தன் படையெடுப்பைக் கொள்ளலாம்.


கந்தன் படையெடுப்பின்போது சூரபத்மனை அழிக்க முருகப்பெருமான் விட்ட வேலானது சூரன் மலையை அழித்த பின் வாகூர மலையைப் பிளந்து கடலில் வீழ்ந்து மூன்று வேலுருக் கொண்ட கதிர்களை வீசியதாகவும் அவை மூன்றும் நாகர்முனை, மண்டூர், உகந்தை ஆகிய இடங்களில் வீழ்ந்ததாகவும் ஐதீகம். பொ.ஆ.மு. 5ஆம் நூற்றாண்டில் சமஸ்கிருத மொழியில் எழுதப் பட்டதாக நம்பப்படும் கந்தபுராணத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட கால சோழ அரசர்களில் ஒருவனான முசுகுந்தனை கந்தன் படையெடுப்புக் காலத்துடன் தொடர்புபடுத்திக் கூறப்பட்டுள்ளது. இதன்படி வரலாற்றுக்கு முற்பட்ட சோழ மன்னனான முசுகுந்தன் காலத்திலே கந்தன் படையெடுப்பு நிகழ்ந்தது எனக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருக வழிபாட்டைப் பேணிவந்த குபேரன்

இதன்படி இலங்கையின் முதன் முதலான வரலாற்று நிகழ்வுடன் தொடர்புள்ள இடங்களில் ஒன்றாக உகந்தை விளங்குகிறது. இதன் பின் புண்ணிய பூமியாகக் கருதப்பட்ட உகந்தை மலையில் ஆதிநாகர் இன மக்களால் முருகன் ஆலயம் எழுப்பப்பட்டு வழிபடப்பட்டது. முருகப் பெருமான் கதிர்காமத்தில் குடி கொள்ளும் முன்பு உகந்தையில் உவந்து அமர்ந்ததாகக் கூறப்படுகிறது. இக்காலப்பகுதியில் இலங்கையை ஆண்ட குபேரன் இராவணனின் சகோதரனாவான். நாகர் குடிகளை தன்னாட்சியின் கீழ் வைத்திருந்த குபேரன் முருக வழிபாட்டைப் பேணிய காலத்தில் உகந்தை மேலும் சிறப்புடன் விளங்கியது எனலாம்.

இலங்கையில் நிகழ்ந்த முக்கிய வரலாற்று நிகழ்வான இராமாயணப் போர் பொ.ஆ.மு. 5000 ஆண்டளவில் நிகழ்ந்தது எனக் கருதப்படுகிறது. இக் காலத்தில் குபேரனை ஆட்சியிலிருந்து நீக்கி இலங்காபுரியைத் தலைநகராகக் கொண்டு இலங்கையை இராவணன் ஆட்சி செய்தான் என வால்மீகி இராமாயணம் கூறுகிறது. இலங்கையின் முதல் தலைநகரான இலங்காபுரி கிழக்கிலங்கையில் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



*உகந்தைகிரி மலை கல்வாசல்*


## வரலாற்றுக்கு முற்பட்ட இலங்கையின் இரண்டாவது தலை நகரம்

இராமாயண காலத்திலே தான் உகந்தை கிரியில் இராவணன் சிவாலயம் அமைத்து வழிபட்டான் என்பது ஐதீகம். பொ.ஆ.மு. 5000ஆம் ஆண்டளவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சிவாலயம் அமைக்கப்பட்டது. இராவணனின் மகன் இந்திரஜித்தினால் இலங்கையெங்கும் 1008 சிவலிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டதாகவும், இராவணன் தான் செல்லும் இடங்களுக்கெல்லாம் கையோடு சிவலிங்கங்கைக் கொண்டு செல்வதாகவும் அறியப்படுகிறது. இராவணன் இராமாயணப் போரில் உயிர் துறந்தபின் இலங்கையில் ஏற்பட்ட கடல்கோளினால் இலங்காபுரி நகரம் அழிந்து போயுள்ளது. உகந்தையின் தென்கிழக்குக் கடற்பரப்பில் இன்றும் காணப்படும் மலைக்குன்றுகள் இராவணன் கோட்டைகள் என அழைக்கப்படுகின்றன.

கடல்கோளின் அழிவினால் பல நூற்றாண்டுகளாக இலங்கை செழிப் பிழந்து காணப்பட்டது. இச்சமயத்தில் தான் வட இந்தியாவின் அஸ்தினா புரத்திலிருந்து குருகுல நாகர் எனும் வம்சத்தினர் இங்கு வந்தனர். இவர்கள் இலங்கையிலிருந்த இயக்கர்களோடு இணைந்து உகந்தையைத் தலைநகராக்கி ஆட்சிபுரிந்தனர். இதன்படி இலங்கையின் இரண்டாவது தலைநகராக விளங் கியது உகந்தையாகும். இது நிகழ்ந்தது மகாபாரதப் போருக்கு பிற்பட்ட காலத்திலாகும். ஆய்வாளர்களின் கருத்துப்படி மகாபாரதப் போர் பொ.ஆ.மு. 3100 ஆம் ஆண்டளவில் நிகழ்ந்ததாகக் கருதப்படுகிறது. ஆகவே, இலங்கையின் தலைநகராக பொ.ஆ.மு. 3100 ஆம் ஆண்டளவில் உகந்தை விளங்கியுள்ளது. இக்காலப்பகுதி முதல் பொ.ஆ.மு. 500ஆம் ஆண்டுவரை முற்கால நாகர், இயக்கர் ஆகியோர் உகந்தையைத் தலைநகராகக் கொண்டு இலங்கையை ஆண்டு வந்தனர்.



*உகந்தை மலை உச்சி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் பெருங்கற்கால மையங்களில் ஒன்று

உகந்தையில் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களின் இடுகாடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இலங்கையில் பெருங்கற்கால பண்பாடு நிலவிய காலமானது பொ.ஆ.மு. 1000 - 500 வரையான காலப்பகுதியாகும். உகந்தை தலைநகராக இருந்ததும் இதே காலப்பகுதியாகும். எனவே, இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட தலைநகரமாக உகந்தை விளங்கியுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது.

## உன்னரசுகிரி மன்னனால் மீண்டும் அமைக்கப்பட்ட சிவாலயம்

உகந்தையின் வடக்கு தெற்குப் பகுதிகளில் புராதன இராஜதானியான உன்னரசுகிரி அமைந்திருந்தது. உகந்தையின் தென் பகுதியிலுள்ள குமுக்கன் ஆற்றுக்கும், வடக்கில் உள்ள கவடா மலைக்கும் இடைப்பட்ட பிரதேசத்திலே உன்னரசுகிரி அமைந்திருந்ததாகக் கூறப்படுகிறது. இந்த உன்னரசுகிரியை ஆட்சிபுரிந்த ஆடகசவுந்தரி எனும் இளவரசி மகாசேனன் எனும் மன்னனை மணந்து கொண்டாள் எனவும், இவர்களின் மகன் சிங்ககுமாரன் உன்னரசுகிரியின் மன்னனாக விளங்கிய காலத்தில் உகந்தகிரியில் மீண்டும் சிவாலயம் அமைக்க விரும்பி வட இந்தியாவிலிருந்து சிற்பிகளை வரவழைத்தான் எனவும் வரலாற்று நூல்கள் கூறுகின்றன. மேலும், மலையுச்சியில் சிவனுக்கும், விஷ்ணுவுக்கும், பிரம்மாவுக்கும் ஆலயங்கள் அமைத்தோடு, மலையடிவாரத்தில் எட்டுத்திசைகளிலும் இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் ஆகிய எட்டு காவல் தெய்வங்களுக்கும் கோயில் அமைத்து செப்புக் கொடித் தம்பமும், மலையுச்சியில் தங்கக்கொடித் தம்பமும் நிறுவினான் எனவும் மட்டக்களப்பு மான்மியத்தின் மூலம் அறியக்கூடியதாக உள்ளது.

இதன்படி உகந்தகிரியை ஆண்ட சிங்ககுமாரன் ஆட்சிக்கு வந்தது கலியுக ஆண்டு 3337 இல் ஆகும். இக்காலம் பொ.ஆ.மு. 235 இல் என்பதாகும். ஆகவே, சிங்ககுமாரனால் அமைக்கப்பட்ட சிவாலயம் சுமார் 2200 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றைக் கொண்ட புராதன ஆலயமாகும். சிங்ககுமாரன் தான் கட்டிய இவ்வாலயங்களுக்கு பணி செய்யும் முகமாக 700 அவண நெல் விதைப்புத் தரையை திருத்தி அதில் வரும் வருவாயில் 500 அவண நெல்லை கோயில்களின் திருப்பணிக்காகவும் 200 அவண நெல்லை அந்தணர் முதலான ஊழியர்களுக்கும் வழங்கவும் ஏற்பாடுகள் செய்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராவணனுக்கு தீபமேற்றி வழிபாடுகள் செய்யப்பட்ட ஆலயம்

இராவணனால் சிவாலயம் அமைத்து வழிபட்ட தலமாகையால் ஆடித்திங்களிலும், அமாவாசையிலும், இராவணேசுவரருக்கு தீபமேற்றி வழிபாடுகள் நடத்தப்பட்டன. இவ்வாறு காலத்தால் முற்பட்ட வைதீக சைவநெறி வழிபாடுகள் இங்கு பேணப்பட்டு வந்தன. சிங்ககுமாரன் காலத்தில் சீரோடும் சிறப்போடும் விளங்கிய இவ்வாலயம் பின்னர் இப்பகுதிக்கு வந்த சிங்கர் மரபு வழிவந்த தினசிங்கன் என்பவனால் அழிக்கப்பட்டு இதன் செல்வங்கள் சோழ நாட்டிற்கு அனுப்பப்பட்டதாகத் தெரியவருகிறது. அதன் பின் இம்மலையில் முருகனுக்கும், பிள்ளையாருக்கும் மீண்டும் ஆலயங்கள் அமைக்கப்பட்டு பூஜிக்கப்பட்டன.

## திறந்தவெளி மலைக்கோயில்

இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களில் வழிபாடுகள் நிகழ்ந்த திறந்தவெளி மலைக்கோயில்களில் உகந்தை மலையும் ஒன்றாகும். இங்குள்ள மலைக்குன்றில் மித்திரன் வழிபாடு நிகழ்ந்ததாகத் தெரிய வருகிறது. சூரியனின் உதயகாலத் தோற்ற நிலைப்பாடுகளில் ஓர் நிலை மித்திரன் எனக் கருதப்படுவதாக வரலாற்றாசிரியர் திருமதி ஜி. தனபாக்கியம் குறிப்பிட்டுள்ளார். இதன்படி உகந்தை மலையில் சிவ வழிபாடு, வேல் வழிபாடு மட்டுமல்லாது சூரியவழிபாடும் பேணப்பட்டு வந்துள்ளமை தெரியவருகிறது. சிவன் குடிகொண்டிருந்த உகந்தகிரி மலையில் அவரின் புதல்வன் முருகனின் அருளாட்சி இன்று மேலோங்கிக் காணப்படுகிறது.

## ஓமுன மலை கந்தசுவாமி கோயில் - மாதுருஓயா

மட்டக்களப்பு - பதுளை வீதியிலுள்ள மகா ஓயாவிலிருந்து வடமேற்காக அரலகங்வில என்னும் இடத்திற்குச் செல்லும் காட்டுப்பாதையில் சுமார் 17 கி.மீ. தூரத்தில் பாதையின் மேற்கில் மாதுருஓயா குளம் அமைந்துள்ளது. பாதையின் கிழக்குப் பக்கத்தில் 3 கி.மீ. தொலைவில் அடர்ந்த காட்டின் நடுவில் ஓமுனகல மலை அமைந்துள்ளது.

## ஓமுனகல என திரிபடைந்த 'ஓம் அணைமலை'

இம்மலையில் மிகப் பண்டைய காலத்தில் முருக வழிபாடு நிலவியமைக்கான சான்றுகள் உள்ளன. முருக வழிபாடு இங்கு வாழ்ந்த பண்டை வேடர்களினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு ஆரம்பிக்கப்பட்டது. இதன் காரணமாக இம்மலை 'ஓம் மலை' என்ற பெயரைப் பெற்றிருந்தது. மலையின் உச்சியிலிருந்து உருவாகி பெருக்கெடுத் தோடும் அருவியை இடைமறித்து மலையின் அடிப்பகுதியை அடுத்துள்ள சமதரையில் ஒரு சிறிய அணை கட்டப்பட்டிருந்தது. இதனால் இவ்விடம் 'ஓம் அணை' என்ற பெயரைப் பெற்றது. இப்பெயர் காலப்போக்கில் ஓமனை, ஓமன என மருவி இன்று ஓமுன என அழைக்கப்படுகிறது.

## ஓமுன மலை பற்றியும் கந்தேயக்கா பற்றியும் கூறும் ஹென்றி பாக்கர்

வரலாற்றாய்வாளர் ஹென்றி பாக்கர் இம்மலை பற்றியும் இங்கு நிலவிய வழிபாடு பற்றியும் 1909ஆம் ஆண்டு தான் எழுதிய 'Ancient Ceylon' (பண்டைய இலங்கை) எனும் நூலில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். ஹென்றி பாக்கர் இம்மலையை 'ஓமுன் - கல' எனக் குறிப்பிட்டுள்ளார். ஓமுன் எனும் சமஸ்கிருத சொல்லின் அர்த்தம் (Favour) விருப்பமான, தகுந்த, உகந்த எனப் பொருள்படுவதாகவும் இங்கு வந்த மலைத்தெய்வம் இம் மலையில் விரும்பி தங்கியதால் 'ஓமன் கல' எனப் பெயர் பெற்றதாகவும் குறிப்பிட்டுள்ளார். இம்மலைத் தெய்வமே 'கந்தேயக்கா', 'கந்தேதெவியா' என அழைக்கப்பட்ட கந்தசுவாமி கடவுள் என பல ஆய்வாளர்கள் குறிப் பிட்டுள்ளனர்.


தென்னிந்தியாவிலிருந்து கடல் வழியாக படகு மூலம் இலங்கையின் கிழக்குக் கரையில் வாழைச்சேனைக்கு அருகில் உள்ள 'பெரிய குடுவைக் கரை' என்னுமிடத்தில் இம்மலைத் தெய்வம் இறங்கியதாகவும், இங்கு வாழ்ந்து வந்த பழங்குடி மக்களான வேடர் இனத்தவர் இத்தெய்வத்திற்கு கோயில் அமைத்து வழிபாடு நடத்தியதாகவும், ஒரு சமயம் இப்பகுதியில் கடும் வரட்சி ஏற்படவே இங்கிருந்த வேடர்கள் இவ்விடத்தைக் கைவிட்டு விட்டு வேறுபகுதிக்குச் சென்றதாகவும், இதன் காரணமாக மலைத் தெய்வம் குடிகொண்டிருந்த கோயிலும் இடமும் கைவிடப்படவே இத்தெய்வம் இவ்விடத்திலிருந்து உள்நாட்டிற்குச் சென்றதாகவும் ஹென்றி பாக்கர் குறிப்பிட்டுள்ளார்.

## 2400 சதுரமைல் பரப்பளவைக் கொண்ட வேடர் நாடு

உள்நாடு என்பது மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் மேற்குப் பகுதிகளையும், பொலனறுவை மாவட்டத்தின் தெற்குப் பகுதியையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொனராகலை மாவட்டத்தின் வடக்குப் பகுதியையும், பதுளை மாவட்டத்தின் வடக்கு மற்றும் மேற்குப் பகுதிகளையும் உள்ளடக்கிய பிரதேசமாகும். இப்பிரதேசம் 'வேடர் நாடு' என அழைக்கப்படும் 2400 சதுர மைல் பரப்பளவைக் கொண்ட பகுதியாகும். மலையும் மலை சார்ந்த பிரதேசமுமான ஊவா மலைப்பகுதியில் இந்த வேடர் நாடு அமைந்துள்ளது. இப்பிரதேசம் ஐவகை நிலங்களிலே குறிஞ்சி எனும் நிலமாகும்.



*ஓமுனகல மலை*

## கந்தசுவாமி கடவுளுக்கு வேடர் நடத்தும் 'குறிஞ்சி வெறியாட்டம்'

இலங்கையில் அமைந்திருந்த இந்த வேடர் நாட்டில் உள்ள மலைகளிலும், குன்றுகளிலும் வேடர்குல தெய்வமான இம்மலைத் தெய்வத்தின் கோயில்கள் அமைந்திருந்தன. மலை மட்டுமல்லாது பெரிய மரமும் இத் தெய்வம் குடிகொண்டிருக்கும் இடமாக நம்பப்பட்டது. இக்குறிஞ்சி நில வேடர்களின் முக்கிய ஆயுதங்களாக அம்பு, வில், ஈட்டி போன்றவை பயன்படுத்தப்பட்டன. தமக்கு உணவளிக்கும் இவ்வாயுதங்களில் முக்கியமானதாகக் கருதப்படும் அம்பை தமது குலதெய்வத்தின் உறைவிடத்தில் உள்ள முற்றத்தில் ஊன்றி வைத்து அதைச் சுற்றி ஆடிப்பாடும் வழக்கம் இவ்வேடர்களின் முக்கிய சமய நிகழ்வாக இருந்தது. இது 'குறிஞ்சி வெறியாட்டம்' என்றழைக்கப்பட்டது.

தாம் வணங்கும் இம்மலைக் கடவுளை சிங்கள மொழியில் கந்தேயக்கா, கந்தே தெவியா என்றழைத்தனர். தமிழில் மலைப்பேய், மலையான், மலைய சுவாமி போன்ற பெயர்களில் அழைத்தனர். இந்த கந்தே தெவியா அல்லது மலைய சுவாமியே காலப்போக்கில் கந்தசுவாமி என்ற பெயரில் வழிபடப்பட்ட முருகப் பெருமானாகும். தென்னிந்தியாவில் மலைக் கடவுள், குறிஞ்சிக் கடவுள் எனப் போற்றி வணங்கப்படுபவர் முருகப் பெருமானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிந்தென்ன காட்டிலுள்ள இரு மலைகளில் குடிகொண்ட கந்தக் கடவுள்

இலங்கையில் இம்மலைக் கடவுளின் கோயில்கள் திறந்தவெளி, மலைக் கோயில்களாகவும், திறந்தவெளி மரக் கோயில்களாகவும் அமைந்திருந்தன. தென்னிந்தியாவிலிருந்து கிழக்கு கரையோரத்திற்கு வந்த இம்மலைத் தெய்வம் இலங்கையின் பிந்தென்ன காட்டு மலைப்பகுதியில் உள்ள இரு மலைகளில் குடிகொண்டதாக ஹென்றி பாக்கர் குறிப்பிட்டுள்ளார். இவ்விரு மலைகளில் ஒன்று 'கொக்காகல' எனும் மலைக் குன்றாகும். அடுத்தது 'ஓமுனகல' மலைக்குன்றாகும். இங்கிருந்து தான் இம்மலைத் தெய்வம் கதிர்காமம் சென்றதாகவும் இப்பகுதி வேடர்கள் கூறியுள்ளனர்.

## ஓமுன மலையில் உள்ள ஆலய எச்சங்கள்

ஓமுன மலை அடர்ந்த காட்டின் நடுவே காணப்படும் ஓர் மலைக்குன்றாகும். இங்கு புராதன தொல்பொருட் சின்னங்களும், வழிபாட்டிடங்களும் காணப் படுகின்றன. இவற்றை மலையடிவாரத்தில் உள்ளவை, மலை உச்சியில் உள்ளவை என இருவகையாகப் பிரிக்கலாம். மேலும் ஆதி தமிழர்கள் வாழ்ந்த கற்குகைகளும் இங்கு காணப்படுகின்றன.



*ஓமுனகல மலையிலுள்ள குகை*

மலையடிவாரத்தில் சுமார் 7 அடி உயரமான கற்றூண்கள் 5 காணப் படுகின்றன. தூண் நாட்டப் பயன்படும் சதுரத் துளைக்கற்கள் சிலவும், வாசல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைப்பிடி வரிசையும் காணப்படுகின்றன. மலைமீது ஏறுவதற்கு கற்படிகள் சில காணப்படுகின்றன. அவை உடைந்தும் இடையிடையே சிதைந்தும் உள்ளன. படிகளின் அருகில் ஓர் புராதன கட்டிடம் அமைந்திருந்த எச்சங்கள் உள்ளன. புராதன செங்கற்கள் ஆங்காங்கே சிதறிக் கிடக்கின்றன. இவ்விடத்தில் இரு காவற்கற்களும், சில கருங்கற் தூண்களும் காணப்படுகின்றன.

## கந்தசுவாமி கோயிலைக் காத்து வந்த பழைமை வாய்ந்த புளியமரம்

இவற்றிற்கு சற்று மேலே மலை மீது ஓர் பழைமை வாய்ந்த புளியமரம் ஓங்கி வளர்ந்து காணப்படுகிறது. இதுவே இங்கிருந்த முருகன் கோயிலை காத்து வந்த தலவிருட்சமாகும். இதனருகில் காலத்தால் பிற்பட்ட அரசமரம் ஒன்று வளர்ந்துள்ளது. இப்புளியமரத்தின் கீழே தான் ஆதி தமிழர்களாலும், வேடர்களாலும் வணங்கப்பட்ட மலைச்சாமி எனும் முருகப் பெருமானின் திறந்த வெளிக் கோயில் அமைந்திருந்தது.

## கந்தசுவாமிக் கோயிலின் இடிபாடுகள்

புளியமரத்தின் அருகில் 7 அடி வட்டவடிவமான ஓர் கருங்கல் காணப் படுகிறது. இக்கல்லில் விநாயகரை நினைத்து தேங்காய் உடைக்கப்படுகிறது. அன்றிருந்த தேங்காய் உடைக்கும் வழமையை இன்றும் இப்பகுதியிலுள்ள சிங்கள மக்கள் பேணி வருகின்றனர். புளியமரத்தின் மேற்குப் பக்கத்தில் கந்தன் ஆலயத்தின் இடிபாடுகள் எனக் கருதப்படும் ஓர் கட்டிடத்தின் சிதைவுகளை காணக்கூடியதாக உள்ளது. பற்றைகள் வளர்ந்து காணப்படும் இவ்விடத்தில் ஆலயத்தின் சில கற்றூண்கள் காணப்படுகின்றன. இதன்படி திறந்தவெளி மரக்கோயிலாக இருந்த இது பின்பு சிறிய கற்கோயிலாகக் கட்டப்பட்டுள்ளது.

## ஆலயத்தின் தீர்த்த சுனையும், ஏழுதலை நாகநாதர் சிற்பமும்

மலை உச்சியிலிருந்து ஓர் சிற்றருவி கீழ்நோக்கிப் பாய்கிறது. அது ஆலயம் அமைந்திருந்த இடத்திற்கு சற்றுக் கீழே ஓர் சமதரையை வந்தடைகிறது. இவ்விடத்தில் ஓர் கல் நீர்ச்சுனை காணப்படுகிறது. இதுவே ஆலயத்தின் தீர்த்தமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனருகில் உள்ள பாறை மீது ஓர் வட்டவடிவம் பொறிக்கப்பட்டுள்ளது. இதனருகில் உள்ள இன்னுமோர் பாறையில் ஏழு தலை நாகத்தின் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. ஓமுனகல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மலையில் முருக வழிபாடு மட்டுமல்லாது நாக வழிபாடும் மேற்கொள்ளப் பட்டுள்ளது என்பதற்கு இது ஓர் சான்றாக அமைகிறது.

## ஆதி தமிழர்கள் வாழ்ந்த கற்குகைகள்

ஓமுனமலையில் மொத்தமாக 5 கற்குகைகள் காணப்படுகின்றன. இவற்றில் ஒன்று 40 அடி நீளமும் 10 அடி அகலமும் கொண்டது. மேலும் 80 அடி நீளம், 30 அடி அகலம் கொண்ட ஓர் குகையும் உள்ளது. மிகப் பெரிய குகை சுமார் 120 அடி நீளமான, விசாலமான குகையாகும். இவற்றில் ஆதி தமிழர்கள் வாழ்ந்த தடயங்கள் காணப்படுகின்றன. ஏனைய இரண்டு குகை கள் அளவில் சிறியவையாகும். இயற்கையாக அமைந்துள்ள இக்குகைகளுக்கு செல்லும் வழியெங்கும் பற்றைகள் வளர்ந்து காணப்படுகிறன.

## ஓமுனமலையில் உள்ள குகைகளில் முருகன், சிவன் சம்பந்தமான தமிழ் பிராமிக் கல்வெட்டுகள்


மலையிலுள்ள கற்குகைகளில் பொ.ஆ.மு. 3ஆம் நூற்றாண்டு முதல் பொ.ஆ. 1ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் பொறிக்கப்பட்ட தமிழ் பிராமிக் கல்வெட்டுக்கள் 4 காணப்படுகின்றன. ஒரு குகையில் முருகன் சம்பந்தமான ஓர் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் 'பெருமகன் வேலனின் குகை' என எழுதப்பட்டுள்ளது. எனவே, இக் குகையில் தான் வேலன் எனும் முருகனின் குகைக் கோயில் அமைந்திருந்தது எனக் கூறக்கூடியதாக உள்ளது. கல்வெட்டில் 'வேலன்' எனக் குறிப்பிட்டுள்ள படியால் இக்குகையில் முருகனின் வேலாயுதத்தை மட்டும் வைத்து வழிபாடு மேற்கொள்ளப்பட்டிருக்கலாம்.



*கந்தக் கடவுளின் மலைக்குகைக் கோயில்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலவிருட்சமான புளியமரத்தின் அருகில் முருகன் கோயிலும், கற் குகையில் வேல் கோயிலும் அமைக்கப்பட்டிருக்கலாம் என நம்ப இடமுண்டு. ஓமுன மலையில் உள்ள இன்னுமோர் குகையில் சிவன் சம்பந்தமான ஓர் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இதன்படி இக்குகையில் சிவவழிபாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது தெரிகிறது. இங்குள்ள குகைகளில் காணப்படும் மேலும் இரு கல்வெட்டுகளில் தமிழ் பிராமிக்கே உரித்தான 'பருமகன்' என சொல் இடம்பெற்றுள்ளது. எனவே, பொ.ஆ.மு. 3ஆம் நூற்றாண்டளவில் இப்பகுதியில் தமிழரின் செல்வாக்கு காணப்பட்டுள்ளது.



ஹேனென்னேகல மலையில் கண்டெடுக்கப்பட்ட இரும்பு வேல்


## ஓமுன மலை அருகில் ஆதி தமிழர்கள் வாழ்ந்த பெருங்கற்கால மையமும், இரும்பு வேலும்

ஓமுன மலைப்பகுதியில் புராதனகாலத்தில் வேல் வழிபாடு நிலவியமைக்கான தொல்பொருட் சான்றுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இம்மலையின் தெற்கில் சுமார் 4 கி.மீ. தொலைவில் பாதையின் கிழக்குப் பக்கத்தில் ஹேனனேகல எனும் சிறிய மலைக்குன்று காணப்படுகிறது. இங்குள்ள குகையில் பொ.ஆ.மு. 10ஆம் - 5ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் ஆதி தமிழர்கள் வாழ்ந்த எச்சங்கள் காணப்படுகின்றன. இவற்றில் இரும்பினால் செய்யப்பட்ட வேல் உள்ளது. இது இப்பகுதியில் ஆதிகாலத்தில் நிலவிய வேல் வழிபாட்டை உறுதி செய்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பாறை சிவன் கோயில்

அம்பாறை நகரிலிருந்து மேற்கு நோக்கி இங்கினியாகலைக்கு செல்லும் வீதியில் சுமார் ஒரு கி.மீ. தொலைவில் அம்பாறைக் குளத்தின் தென்கரையில் அம்பாறை வில்லுப் பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது. 1950ஆம் ஆண்டளவில் கட்டப்பட்ட இக்கோயிலுக்கு முன்னோடியாக புராதன காலத்தில் ஓர் சிவாலயம் இங்கு அமைந்திருந்தது. பொ.ஆ. 2 ஆம் நூற்றாண்டில் சத்தாதிஸ்ஸன் அநுராதபுரத்தை ஆட்சி செய்த காலத்தில் சந்தன காமத்தில் ஆட்சி செய்து வந்த தமிழ் சிற்றரசர்களால் அம்பாறையில் சிவாலயம் உருவாகியிருக்கலாம் என நம்பப்படுகிறது. பொ.ஆ. 9ஆம் நூற்றாண்டுகளில் இவ்வாலயம் சிங்கள மன்னர்களின் ஆதரவைப் பெற்று விளங்கியது.



*அம்பாறை பிள்ளையார் கோயிலும் குளமும்*

## சத்தாதீசன் காலத்தில் இருந்த சிறிய குளமும், சிவன் கோயிலும்


மகாகனிய, நாமல் ஓயா மலைத்தொடர்களில் உருவாகி தென்கிழக்கு நோக்கிப் பாயும் சிற்றாறு ஒன்றின் மூலம் அம்பாறைக் குளத்திற்கு நீர் கிடைக்கப்பெறுகிறது. இக்குளம் பண்டைய காலத்தில் சிறிய குளமாக இருந்துள்ளது.

அம்பாறை, கொண்டை வெட்டுவான், இறக்காமம் ஆகிய இடங்களில் இயற்கையாகவே அமைந்திருந்த மிகப் பெரிய பள்ளங்களில் ஆற்று நீரும், மழைநீரும் தேங்கியதன் மூலம் இக்குளங்கள் உருவாகியுள்ளன என ஆர்.எல். புரோகியர் குறிப்பிட்டுள்ளார். ஒல்லாந்தர் காலத்தில் (பொ.ஆ. 1658-1795) மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தின் தலைமை அதிகாரியாகப் பணி யாற்றிய பிரான்கே என்பவரே அம்பாறைக் குளத்தின் அணைக்கட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைத்ததாக குறிப்புகள் கூறுகின்றன. இக்குளம் 'அம்பாறைவில்' என அழைக்கப்பட்டுள்ளது.

இந்த அணை அமைக்கப்படுவதற்கு முன்பு வடக்கிலும் மேற்கிலும் மலைத் தொடர்களாலும், தெற்கில் காடுகளாலும் சூழப்பட்ட பகுதியாக இக்குளம் விளங்கியுள்ளது. இந்தக் குளத்தின் கரையில் புராதன காலத்தில் ஓர் சிவன் கோயில் அமைக்கப்பட்டிருந்ததாகக் குறிப்புகள் கூறுகின்றன. அருகிலிருந்த இச் சிறிய குளமே ஆலயத்தின் தீர்த்தக் குளமாக விளங்கியுள்ளது. குளத்தின் வடக்கு, மேற்குப் பகுதியிலிருக்கும் காடுகளிலிருந்து யானைகள் வந்து இவ்வாலயத்தை தரிசித்து செல்வதாகவும் கூறப்படுகிறது. இவ்வழக்கம் இன்றும் நிலவுவதாக இப்பகுதி மக்கள் கூறுகின்றனர். இப்போது அம்பாறைக் குளம் பெரிதாக்கப்பட்டுள்ளதால் காட்டு யானைகள் குளத்தின் அக்கரையிலிருந்து ஆலயத்தை தரிசித்து செல்கின்றன.




குளக்கரையில் யானை

## அம்பாறை சிவன் கோவில் பற்றி ஆய்வாளர் சி.எஸ். நவரட்ணத்தின் குறிப்பு

அம்பாறை சிவாலயம் பற்றி சி.எஸ். நவரட்ணம் 'A Short History of Hinduism in Ceylon' எனும் நூலில் இலங்கையின் புராதன இந்துக் கோயில்கள் எனும் பட்டியலில் குறிப்பிட்டுள்ளார். பொ.ஆ. 700 இற்கு முற்பட்ட ஓர் தூண் கல்வெட்டு அம்பாறைக் கச்சேரியில் காணப்படுகிறது. இது தப்புல மன்னன் காலத்தில் பொறிக்கப்பட்டதாகும். அம்பாறைக் குளத்திற்கு அருகில் சுமார் 2 கி.மீ. தொலைவில் உள்ள கொண்டை வெட்டுவான் எனும் குளக்கரையில் இக்கல்வெட்டு கண்டெடுக்கப்பட்டது. அன்றைய காலத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்ப்பாசன திட்டம், வயல்கள் சம்பந்தமான சில தகவல்கள் இக்கல்வெட்டில் பொறிக்கப் பட்டுள்ளன. இக்கல்வெட்டை ஆராய்ந்தோர் அம்பாறை என்ற பெயர் 'அம்பாள்' என்பதன் திரிபாக உள்ளதாகக் கூறுகின்றனர். இக்கல்வெட்டுக்கும் அம்பாறையில் இருந்த சிவாலயத்திற்கும் தொடர்புள்ளதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இது பற்றி சி.எஸ். நவரட்ணம் பின்வருமாறு தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். "The Pillar Inscription that is in the Amparai Kachcheri reveals the Existence of a temple to siva before 700 A.C. some derive the word Amparai from Ampal (Consort of siva)"



*அம்பாறைக் கச்சேரி கல்வெட்டு*


## அம்பாறை என திரிபடைந்த 'அம்பாள் பாறை'

இவ்வாலயம் இங்கு அமைந்திருந்ததன் காரணமாக இவ்விடம் அம்பாறை என்ற பெயரைப் பெற்றது என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும். ஆதியில் இங்கு திறந்தவெளிக் கோயில் ஒன்றே அமைந்திருந்தது. இங்கு அம்பாள் சிலையும், சிவலிங்கமும் வைத்து வணங்கப்பட்டுள்ளன. இது ஓர் சிவாலயமாக உருவாகும் முன்பு அம்மன் சந்நிதிக்கே முக்கியத்துவம் இருந்தது. மதுரையில் மீனாட்சி அம்மனும், காஞ்சியில் காமாட்சியம்மனும் முதலிடம் பெறுவது போல இவ்வம்பாள் சிலை பெருவிருட்சத்தின் கீழ் இருந்த பாறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீது வைத்து வணங்கப்பட்டது. பாறை மீது அம்பாள் இருந்தபடியால் 'அம்பாள் பாறை' அல்லது அம்மன் பாறை எனப் பெயர் பெற்றது. இவ் ஊரும் இதே பெயரில் அழைக்கப்பட்டது. காலப் போக்கில் இது மருவி அம்பாறை என்றாகிவிட்டது.

அம்பாறை, அம்பாள் பாறை, அம்மன் பாறை என்பவை தூய தமிழ் சொற்களாகும். பாறை அல்லது பாற என முடிவுறும் எந்த சிங்களப் பெயர் கொண்ட இடமும் இலங்கையில் வேறெங்கும் இல்லை என்பது குறிப்பாக நோக்கத்தக்கது. பாற என்பது தெரு அல்லது வீதி என சிங்கள மொழியில் பொருள்படுகிறது. எனவே, அம்பாறை என்பது தமிழ்ச் சொல் என்பதில் ஐயமில்லை. புராதன காலத்தில் இருந்த ஆலயம் சிதைவுற்று இங்கிருந்த பெருவிருட்சமும் அழிந்து போயுள்ளது. பல நூற்றாண்டுகளின் பின் இங்கு மீண்டும் பிள்ளையார் ஆலயம் எழுந்தபோது புராதன அம்பாள் இருந்த அதே பாறை மீது பிள்ளையார் விக்கிரகமும் வைத்து வணங்கப்பட்டது. இன்றும் இவ்வாலயத்தின் கருவறை பாறையின் மீது அமைந்திருப்பதை காணலாம்.



*அம்பாள் பாறையில் கருவறை*

தமிழகத்தில் திருச்சி மாவட்டத்தில் மணப்பாறை, கோயம்பத்தூர் மாவட்டத்தில் வால்பாறை, கொடைக்கானலுக்கு அருகில் பூம்பாறை போன்ற பழம் பெரும் இடங்கள் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. இவை போலவே இலங்கையில் அம்பாள் பாறை அல்லது அம்மன் பாறை எனும் ஊர் அமைந்திருந்தது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பாறைப் பகுதியில் சிவன் சம்பந்தமான பத்து பிராமிக் கல்வெட்டுக்கள்

கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலங்களிலிருந்து அண்மைக் காலம் வரையிலும் அம்பாறையை அண்டியுள்ள பகுதியில் ஆதிதமிழ் மக்கள் வாழ்ந்திருந்தமைக் கான கல்வெட்டு சான்றுகள் கிடைத்துள்ளன. இப்பகுதியில் சிவ வழிபாடு, சக்தி வழிபாடு போன்றவை செல்வாக்குப் பெற்றிருந்தமைக்கான பிராமிக் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இலங்கை முழுவதிலும் இப்படி யான 80 கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் சிவன், அம்பிகை, துர்க்கை, காளி, மீனாட்சி, நந்தி போன்ற சிவ வழிபாடு சம்பந்தமான சொற்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகள் தவிர தமிழ் பிராமிச் சொற்கள் பொறிக்கப்பட்ட 500க்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள் தீவெங்கிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சிவன் சம்பந்தமான 80 கல்வெட்டுக்களில் அதிகமானவை அநுராதபுரப் பகுதிகளிலும், அடுத்தபடியாக அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இதற்கடுத்தபடியாக இவ்வாறான கல்வெட்டுக்கள் அதிகமாக உள்ள இடம் அம்பாறைப் பிரதேசமாகும். இங்கு பத்து கல் வெட்டுக்கள் காணப்படுகின்றன. ரஜகல, ஓமுனகல, பம்பரகஸ்தலாவ, வெகெரகல்கந்த, குடும்பிகல ஆகிய இடங்களில் சிவன் சம்பந்தமான பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

இவை தவிர தமிழ் பிராமிச் சொற்கள் காணப்படும் ஏராளமான கல் வெட்டுக்கள் அம்பாறைப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. குடும்பிகல, பானமை, பம்பரகஸ்தலாவ, விஹாரகல, கிரிபொக்குணுஹெல, நீலகிரி, ஓமுனுகல, பியங்கல, சமன்கல, இலுக்பிட்டிகந்த, உகபிட்டகல்கே, முவன்கல, புத்தங்கல, சங்கமான் கண்டி, ரஜகல என்று இப்பட்டியல் தொடர்ந்து செல்கிறது.

## பாண்டியகுல மன்னர்களால் ஆளப்பட்ட சந்தனகாம அரசின் ஓர் பகுதி

இக்கல்வெட்டுக்கள் யாவும் இப்பகுதியில் நிலவிய சிவவழிபாட்டின் தொன்மையையும் தமிழர் செல்வாக்கையும் உறுதிப்படுத்துபவையாக அமைகின்றன. பொ.ஆ.மு. 145-101 வரை 44 ஆண்டுகள் இலங்கையை ஆட்சி செய்த தமிழ் மன்னன் எல்லாளன் காலத்தில் அம்பாறை மாவட் டத்தில் பெருமளவில் தமிழர்கள் வாழ்ந்து வந்துள்ளனர். பொ.ஆ.மு. 4ஆம், 3ஆம் நூற்றாண்டுகளில் தென்கிழக்கிலங்கையில் கதிர்காமமும், சந்தனகாமமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனி அரசுகளாக விளங்கியுள்ளன. இவை பாண்டிய குலத்து தமிழ் அரசர்களால் ஆளப்பட்டு வந்தன. தமிழும் சைவமும் செழிப்புடன் விளங்கிய இச்சந்தணகாமம் அரசின் முக்கிய பகுதிகளில் ஒன்றாக அம்பாறை இருந்துள்ளது. சந்தணகாமம் அரசின் பாண்டிய குல மன்னர்கள் வெள்ளரசு மர நடுகை விழாவிற்கு தேவநம்பிய தீசனால் அனுராதபுரத்திற்கு அழைக்கப்பட்டமை பற்றி மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அம்பாறைப் பகுதியில் சந்தணகாம பாண்டிய குல மன்னர்களின் ஆட்சி நிலவியமை பற்றி கல்வெட்டாதாரங்கள் உள்ளன. அம்பாறை நகரின் வட மேற்கில் சுமார் 20 கி.மீ. தூரத்தில் மாதனகந்த எனும் மலை அமைந்துள்ளது. இது அம்பாறைக்கு வடக்கில் உள்ள உகனை என்னுமிடத்தின் மேற்குப் பகுதியில் சுமார் 13 கி.மீ. தூரத்தில் உள்ளது. இம்மலையில் உள்ள ஓர் குகையில் தமிழ் பிராமிக் கல்வெட்டு ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல் வெட்டில் முடிவில் சுவாஸ்திகா சின்னமும், பாண்டியர்களின் மீன் சின்னமும் காணப்படுகின்றன. இதன் மூலம் இப்பகுதியில் சந்தணகாமத்து பாண்டிய குல மன்னர்களின் ஆட்சி நிலவியிருந்தமை உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

## காட்டின் மத்தியில் புராதன முனியப்ப சுவாமி திறந்த வெளிக் கோயில்

அம்பாறை சிவன் கோயில் அமைந்திருந்த இடத்திலிருந்து சுமார் 4. கி.மீ. மேற்கில் இறக்காமம் வீதிக்கு அருகில் புராதன கோயில் ஒன்று அமைந்திருந்ததாகத் தெரியவருகிறது. மொறவில் ஆற்றின் கரையில் ஆல மரத்தின் கீழ் இக்கோயில் இருந்ததாகக் கூறப்படுகிறது. இது திறந்த வெளி மரக் கோயிலாக வழிபடப்பட்ட புராதன சிவன் கோயில் எனவும் மக்கள் கூறுகின்றனர். இங்கு ஓர் ஆலமரத்தின் கீழ் அமைக்கப்பட்டிருந்த கருங்கற் பீடத்தின் மீது சிலையொன்று வைத்து வணங்கப்பட்டதாகவும், இது 'முனியப்பர் சுவாமி' என வழங்கப்பட்டதாகவும் இப்பகுதியிலிருந்த முதியவர்கள் கூறினார்கள்.

காடு மண்டிய பிரதேசமாகக் காணப்பட்ட இப்பகுதி சீனிக் கூட்டுத்தாபனத்தினால் கரும்புப் பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்காக அழிக்கப்பட்டது. கரும்புத் தோட்டங்களும் நெற்பயிர் காணிகளும் பெருமளவில் உருவாயின. காடுகள் அழிக்கப்பட்டு மக்கள் குடியமர்த்தப்பட்டபோது புராதன ஆலயம் கண்டுபிடிக்கப்பட்டது. ஆலய எச்சங்களும் காணப்பட்டன. காலப்போக்கில் இங்கிருந்த ஆலயச் சின்னங்கள் மாயமாய் மறைந்து போயுள்ளன. இப்பகுதியில் உள்ள அருங்காட்சியகத்தில் இவ்வாலயத்திலிருந்த கருங்கற் பீடம் ஒன்று காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சுற்றுச் சூழலில், தமிழ் மக்கள் வாழ்ந்தமைக்கான பிராமிக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. சிவன் சம்பந்தமனான கல்வெட்டுகளும் உள்ளன. இக்கோயிலுக்கு மிகக் கிட்டிய தூரத்தில் முவன்கல என்னுமிடத்தில் தமிழ் பிராமி கல்வெட்டு காணப்படுகிறது.

## மகோன் காலத்தில் குடியேற்றப்பட்ட தமிழ் மக்களும், தமிழ் கிராமங்களும்

பொ.ஆ. 13ஆம் நூற்றாண்டில் கலிங்க மாகனால் அம்பாறை மாவட்டத்தில் பெருமளவில் தமிழ் மக்கள் குடியேற்றப்பட்டனர். தமிழ்நாட்டில் புத்தூர், மருங்கூர், காரைக்கால் போன்ற பகுதிகளிலிருந்து தமிழ்க் குடிகள் கொண்டு வரப்பட்டு குடியேற்றப்பட்ட இடங்களில் பெரிய கல்மடு, முதலி மூவாங்கல்லு ஆகிய இடங்களும் அடங்குகின்றன. மேற்சொல்லப்பட்ட இறக்காமம் வீதி கோயிலுக்கு சற்று தெற்கில் கல்மடு, மூவாங்கல் ஆகிய கிராமங்கள் அடுத்தடுத்து அமைந்துள்ளமை இப்பகுதியை மாகோன் காலத்துடன் தொடர்பு படுத்திப் பார்க்க வேண்டிய அவசியத்தை உணர்த்துகிறது.

மேற்கூறப்பட்டுள்ள கல்மடு என்னும் கிராமத்திற்கு அடுத்ததாக தெற்கு நோக்கி சுமார் 3 கி.மீ. தொலைவில் வரிப்பத்தாஞ்சேனை என்றோர் கிராமம் அமைந்துள்ளது. மாகோன் காலத்தில் காரைக்காலில் இருந்து அழைத்து வரப்பட்டு கிழக்கிலங்கையில் குடியேற்றப்பட்டவர்களில் 'வரிப்பத்தார்' என்னும் குடியினரும் அடங்குவர். மாகான் காலத்தில் இவர்கள் குடியமர்த்தப்பட்ட பகுதிகளில் ஒன்றாக வரிப்பத்தாஞ்சேனையும் விளங்கியிருக்க வேண்டும். 'வரிப்பத்தார் சேனை' என்பது பிற்காலத்தில் 'வரிப்பத்தாஞ் சேனை' என மருவியிருக்கலாம்.



*வழிப் பிள்ளையார் கோயில்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்படி மாகோன் காலமான பொ.ஆ. 1215-1255 வரையான 40 ஆண்டு காலத்தில் இப்பகுதி செழிப்புற்று விளங்கியிருக்க வேண்டும். இங்கிருந்த ஆலயங்களும் நன்கு பராமரிக்கப்பட்டிருக்க வேண்டும். இதன் பின்பு ஏற்பட்ட அரசியல் சூழ்நிலை காரணமாக இப்பகுதிகளில் வாழ்ந்த பெருமளவான தமிழ் மக்கள் கிழக்குக் கரையோரங்களை நோக்கி புலம் பெயர்ந்துள்ளனர். மக்களற்ற இப்பிரதேசம் காடு வளர்ந்து ஆலயங்களும் பராமரிப்பின்றி அழிந்து போயுள்ளன.

## சிங்கள மன்னர்களின் ஆதரவைப் பெற்றிருந்த சிவாலயம்

பொ.ஆ. 2ஆம் நூற்றாண்டளவில் ஸ்தாபிக்கப்பட்டதாகக் கருதப்படும் அம்பாறை சிவன் கோயில் பொ.ஆ. 9ஆம் நூற்றாண்டிற்கு முன்பு பெரிய கோயிலாக அமைக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. அம்பாறைக் குளத்தின் அருகில் தற்போது பிள்ளையார் கோயில் அமைந்திருக்கும் பகுதியில் இச்சிவாலயம் கட்டப்பட்டிருந்ததாகத் தெரிய வருகிறது. இது சிங்கள அரசர்களின் ஆதரவையும் பெற்று சிறப்புடன் விளங்கியதாக வரலாறு கூறுகிறது. முதலாம் சேனன் (பொ.ஆ. 833-853), இரண்டாம் சேனன் (பொ.ஆ. 853-887), நான்காம் தப்புலன் (பொ.ஆ. 924-935) போன்ற மன்னர்களால் இவ்வாலயம் ஆராதிக்கப்பட்டு வந்துள்ளது. முதலாம் சேனன் அநுராதபுரத்தில் 1000 பிராமணர்களுக்கு தானங்கள் அளித்தது பற்றி சூளவம்சம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இக்காலப் பகுதியில் அம்பாறை, தீகவாவி போன்ற பிரதேசங்களில் தமிழர்கள் பெருமளவில் வாழ்ந்து வந்தனர். அன்று அம்பாறைப் பிரதேசம் 'அம்பாறை வில்' என்ற பெயரில் வழங்கப்பட்டு வந்தது.

## குளத்திலிருந்து கிடைக்கப்பெற்ற புராதன ஆலயத்தின் விநாயகர் சிலை

சீரும் சிறப்புடனும் உன்னத நிலையிலும் வழிபடப்பட்ட இச்சிவாலயம் பின்பு கைவிடப்பட்ட நிலையில் பாழடைந்து முற்றாக அழிந்து போயுள்ளது. அதன்பின்பு அடர்ந்த காடாகி விட்ட இப்பிரதேசத்தை 1950ஆம் ஆண்டளவில் கண்ட சைவப் பெரியார்கள் இருவர், இக்காடும், இதனருகில் கவனிப்பாரற்றுக் கிடந்த குளமும் ஓர் புராதன சைவத்தலத்திற்குரியவை என அடையாளம் கண்டனர். எனினும், புராதன ஆலயச் சின்னங்கள் எதுவும் காணப்படவில்லை. அதேசமயம் பாதுகாப்புக் கருதியோ அல்லது மதப்பூசல்கள் காரணமாகவோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராதன சிவாலய சின்னங்கள் அதனருகிலிருந்த குளத்தில் போடப்பட்டிருக்கலாம் என ஊகித்த அவர்கள் பல நாட்கள் குளத்தில் தேடுதல் நடத்தினர். ஈற்றில் புராதன ஆலயத்தின் சிவலிங்கமோ, ஆவுடையாரோ, நந்தியோ கிடைக்காத நிலையில் ஒரு பிள்ளையார் விக்கிரகம் மட்டும் வெளிப்பட்டது.

புராதன சிவாலயச் சின்னங்களில் ஒன்றான இச்சிலை சிறிது சிதலமடைந்திருந்தது. அக்குளத்தின் அருகிலேயே புராதன சிவாலயம் அமைந்திருந்ததாகக் கருதப்படும் இடத்திலே ஓலையில் பந்தலமைத்து பீடமும் அமைத்து அவ்விக்கிரகத்தை வைத்து வழிபட்டார். இப்புதிய ஆலயம் 'அம்பாறை வில்லுப் பிள்ளையார் கோயில்' என அழைக்கப்பட்டது. ஆதி மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே இணையப்பெற்ற இவ்வாலயம் தல விஷேடத்தையும் கொண்டமையால் இங்கு வந்து குடியேறிய பக்தர்களால் பெருங்கோயிலாகக் கட்டியெழுப்பப்பட்டது. யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு வரப்பட்ட புதிய விநாயகர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டது. புராதன கோயிலின் விநாயகர் சிலை பாதுகாப்பாக வைக்கப்பட்டு பூஜிக்கப்படுகிறது. அன்று முதல் 'அம்பாறை ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார்' என்ற பெயரையும் பெற்று விளங்குகிறது. புராதன காலத்தில் சிவன் அருளாட்சி செய்த இடத்தில் இன்று விநாயகர் ஆட்சி செய்து வருகிறார்.

## புராதன காலம் முதல் இந்துக்கள் வாழ்ந்து வந்த அம்பாறை

பண்டை காலம் முதல் பொ.ஆ. 1750ஆம் ஆண்டு வரை அம்பாறைப் பகுதி தமிழர் செல்வாக்குப் பெற்று விளங்கியதாகத் தெரியவருகிறது. அப்போது கண்டி மன்னனாக இருந்த கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் இப்பகுதியை இராஜபக்ஷ என்னும் சிங்களப் பிரதிநிதிக்கு கையளித்ததாகவும் அதன் பின்பே இப்பகுதியில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டதாகவும் 'பரவணிக் கல்வெட்டு' கூறுகிறது. ஆனால் கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தின் பின்பு 1949ஆம் ஆண்டின் பின்பே இங்கு சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

புராதன காலத்தில் அம்பாள்பாறை, அம்பாறை வில்லு எனப் பெயர் பெற்று விளங்கிய இவ்விடம் 1871, 1891, 1901 ஆகிய காலப் பகுதியில் 'அம்பாறைக் குளம்' என்ற தமிழ்ப் பெயருடன் விளங்கியமை பற்றி குறிப்புகள் கூறுகின்றன. 1891ஆம் ஆண்டு சனத்தொகை குறிப்பேட்டின் படி அம்பாறைக் குளம் என்னுமிடத்தில் 19 பேர் மட்டுமே குடியிருந்துள்ளனர். 1901ஆம் ஆண்டு இத்தொகை ஆறு பேராகக் குறைந்துள்ளது. 1911 ஆம் ஆண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலே 'அம்பாறை' என்ற பெயர் காணப்படுகிறது. அப்போது அங்கு 79 பேர் வசித்துள்ளனர். 1921 ஆம் ஆண்டு இது 43 பேராக குறைந்துள்ளது.

1921 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டுக் குறிப்பேட்டில் 245, 246, 247ஆம் பக்கங்களில் அம்பாறை என்னுமிடத்தில் 19 இந்துக்கள் வசித் துள்ளனர். எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. சிங்கள மக்கள் யாரும் இல்லை என இக்குறிப்பேடு கூறுகிறது. இதன்படி அம்பாறையில் புராதன காலம் முதல் இந்துக்கள் மட்டுமே வாழ்ந்து வந்துள்ளனர் என்பது உண்மைத் தகவலாகும். புராதன காலம் முதல் அம்பாறை நகரில் சிங்கள மக்கள் வாழ்ந்திருந்தால் இக் குடிசன மதிப்பீடு பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். ஆனால், பதிவேட்டில் ஒரு சிங்கள இனத்தவர் தானும் குறிப்பிடப்படவில்லை. 1949ஆம் ஆண்டில் கல்லோயா அபிவிருத்திச் சபை உருவாகிய பின்பே அம்பாறை நகரில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர். எனவே, புராதன காலம் முதல் இங்கு வாழ்ந்து வந்த இந்துக்கள் அம்பாறை சிவாலயத்தைப் பேணி பராமரித்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.


இன்று அம்பாறை நகர் பகுதியில் மிக சொற்ப எண்ணிக்கையில் மட்டுமே இந்துக் குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில் இங்குள்ள மாணிக்கப் பிள்ளையார் கோயில் பௌத்த மக்களால் மிகவும் பயபக்தியுடன் வழிபடப்பட்டும், பேணிப் பாதுகாக்கப்பட்டும் வருகிறது. அதேவேளை, இவ்வாலயத்தில் நடைபெறும் விஷேட பூசைகளிலும் திருவிழாக் காலங்களிலும் பௌத்த மக்கள் கலந்து கொண்டு ஆதரவளிப்பதும், அனுசரனையாக விளங்குவதும் பாராட்டத்தக்க விடயமாகும். நாட்டின் பல பாகங்களிலும் குறிப்பாக சிங்கள மக்கள் பெரும்பாண்மையாக வாழும் பகுதிகளில் உள்ள இந்துக் கோயில்களுக்கு பௌத்த மக்கள் வழங்கும் இப்படிப்பட்ட ஆதாரவானது அவர்கள் இந்து தெய்வங்கள் மீது வைத்திருக்கும் அதீத பக்தியையே உணர்த்துகிறது.

## சன்னாசி மலை முருகன், பிள்ளையார் கோயில்கள் - உப்புக்கரச்சி களப்பு, உகந்தை

பானமை சந்தியிலிருந்து கூமுனை வரை செல்லும் கிரவல் காட்டுப்பாதையில் சுமார் 12 கி.மீ. தொலைவில் உகந்தை அமைந்துள்ளது. உப்புக்கரச்சி களப்பைக் கடந்ததும் சுமார் 1 கி.மீ. தூரத்தில் பாதையின் வலது பக்கத்தில் ஒரு சிறிய குட்டையையும் (மிகச் சிறிய குளம்) அதை அடுத்து ஓர் சிறிய மலைக்குன்றையும் காணலாம். பானமையை அடுத்து இக்காட்டுப் பாதையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணிக்கும்போது பாதையின் அருகில் நாம் காணும் முதலாவது பெரிய மலைக்குன்று இதுவாகும். இம்மலையே சன்னியாசி மலை என அழைக்கப் படுகின்றது. சிங்கள மொழியில் 'வெஹெர கெம' என இம்மலைக்குன்றை அழைக்கிறார்கள். இம்மலையின் அடி வாரத்தில் புராதன காலத்தில் சந்நியாசி களால் அமைக்கப்பட்ட பிள்ளையார் கோயில் காணப்படுகின்றது.



*சன்னாசி மலைக்குன்று*

## வேடர்கள் அமைத்த வேல் கோயில்

மிகப் பண்டைய காலத்திலே, சுமார் 3000 வருடங்களுக்கு முன்பு இலங் கையின் கிழக்கு மற்றும் தென்கிழக்குப் பகுதிகளில் உள்ள மலைக்குன்று களிலும், மலைக்குகைகளிலும் வேடர்களால் வேல்வழிபாடும், முருக வழி பாடும் மேற்கொள்ளப்பட்டமையை ஹென்றி பாக்கரின் குறிப்புகள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. இவ்வாறான மலைக்கோயில்கள் குடும்பி மலை, உகந்தை மலை, கதிரை மலை போன்ற இடங்களில் வேடர்களால் அமைக்கப் பட்டன.

தம் குலத்தவர்களால் அமைக்கப்பட்ட கோயில்களைத் தரிசிக்க பிந்தென்ன மலைப்பகுதியிலுள்ள வேடர் நாட்டிலிருந்து வேடர்கள் தெற்கு நோக்கி நுவரகல, நில்கல, வட்டினாகல, கோவிந்தகல, லாகுகல ஊடாக குடும்பிமலை, உகந்தமலை, கதிரமலை போன்ற இடங்களுக்கு கால்நடையாக சென்று தமது குறிஞ்சி வெறியாட்டதை நிகழ்த்தி வேலாயுதத்திற்கும், கந்தனுக்கும் பூஜைகள் நடத்துவது வழக்கமாக இருந்தது. இவ்வழியிலே இவர்கள் பல இடங்களில் தங்கிச் செல்வதுண்டு. தாம் தங்கிச் செல்லும் இடங்களில் உள்ள மலைக் குன்றுகளில் தமது குலதெய்வமான கந்தசுவாமிக் கடவுளின் வேலாயுதத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து வணங்கி வெறியாட்டம் நிகழ்த்தி பூஜை செய்வதுண்டு. அப்படி வேடர்கள் தங்கிச் செல்லும் ஓர் இடமாக சன்னாசிமலை இருந்த காலத்தில் இம்மலைக் குன்றில் முதன்முதலாக வேடர்களால் வேலாயுதம் வைத்து வேல், கோயில் ஸ்தாபிக்கப்பட்டது.



*சன்னியாசி மலையில் வேல்*

## பானமைப் பகுதியில் சித்தர் போகநாதர்

அன்று முதல் இன்று வரை சன்னாசி மலை, கதிர்காமம் செல்லும் பாதயாத்திரிகர்கள் தங்கிச் செல்லும் ஓர் முக்கிய இடமாக விளங்குகிறது. அன்று வேடர்கள் ஆரம்பித்த பாதயாத்திரையை பிந்தென்ன காடுகளிலிலிருந்து இன்றும் வேடர்கள் மேற்கொள்வது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இலங்கையின் வரலாற்றுதய காலம் முதல் கதிர்காமத்தை தரிசிக்க பல யோகிகளும், ஞானிகளும், சித்தர்களும், சந்நியாசிகளும் பாதயாத்திரையாக கிழக்கு கரையோரமாக வந்துள்ளமை வரலாற்றுக் குறிப்புகள் மூலம் தெரிய வருகிறது. இவர்களும் சன்னாசி மலையில் தங்கி இங்கிருந்த வேலாயுதத்தை வணங்கிப் பூஜை நடத்திச் சென்றுள்ளனர்.

பழனி மலையிலிருந்து வந்த சித்தர் போகநாதர் இவ்வழியாக கதிர்காமத்திற்கு சென்றுள்ளார். இவ்வழியில் உள்ள பானமையின் வடக்கில் சுமார் 8 கி.மீ. தொலைவில் உள்ள சாஸ்த்ராவெல என்னுமிடத்தில் உள்ள ஓர் மலையில் போகர் தங்கிச் சென்றுள்ளார். இதன் காரணமாக இம்மலை 'போககிரி' எனப் பெயர் பெற்றுள்ளது. பொ.ஆ. 2ஆம், 3ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மலையில் பொறிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டில் 'போககிரி' என இம்மலை குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே இங்கு தங்கிச் சென்ற போகர் சன்னாசி மலையிலும் தங்கியிருந்து அங்கிருந்த வேலாயுதத்தை வழிபட்டு சென்றிருப்பார் என நம்பக் கூடியதாக உள்ளது. போகநாதரை இமயமலையிலிருந்து வந்த பாபாஜி பொ.ஆ. 2ஆம் நூற்றாண்டில் கதிர்காமத்தில் சந்தித்ததாக குறிப்புகள் கூறுகின்றன. இதன்படி போகர் பொ.ஆ. 2ஆம் நூற்றாண்டில் இப்பகுதிக்கு வந்துள்ளார் எனக் கூறக் கூடியதாக உள்ளது. 'போககிரி' என்ற பெயர் பொறிக்கப்பட்ட சாஸ்த்ராவெல கல்வெட்டும் இதே காலப்பகுதியில் பொறிக்கப்பட்டமை இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் ஆரம்பமான இப்பாத யாத்திரையின் தங்குமிடங்களில் சந்நியாசி மலையும் ஓர் முக்கிய இடமாக பண்டைய காலம் முதல் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இன்னும் இப்பாதயாத்திரை தொடர்ந்து நடை பெறுகிறது.

## சந்நியாசிகள் வாழ்ந்து வந்த மலை

மிகப் பண்டைய காலம் முதல் சந்நியாசி மலையில் இந்தியாவிலிருந்து வந்த துறவிகள் தங்கி வாழ்ந்து வந்துள்ளனர். சந்நியாசிகளில் சிலர் கதிர்காமத்திற்கு சென்று முருகனைத் தரிசித்து விட்டு இம்மலைக்கு வந்து இங்கு தவம் செய்துள்ளனர். சித்தர் போகநாதர் இம்மலைக்கு வந்து சென்றமையால் அவரின் சக்தி இங்கு இருப்பதாக அறிந்த சந்நியாசிகள் இம்மலைக்கு வந்து இங்கு தவம் புரிந்ததாகக் கூறப்படுகிறது. இம்மலையில் சில சந்நியாசிகள் வாழ்ந்து இங்கேயே சமாதி அடைந்ததாகவும், இதனால் இங்கு அபூர்வ சக்திகள் இருப்பதாகவும் இதன் காரணமாகவே இம்மலை 'சந்நியாசி மலை' எனப் பெயர் பெற்றதாகவும் தெரியவருகிறது. இப்பெயர் மருவி இன்று 'சன்னாசி மலை' என அழைக்கப்படுகிறது.

## தம்பதி நல்லாளின் திருப்பணி


உன்னரசுகிரி இராஜதானியை ஆட்சி செய்து வந்த புவனேகபாகுவின் மனைவியான சோழ இளவரசி தம்பதி நல்லாள் தன் கணவனுடன் நாகர் முனை முருகன் கோயிலை திருத்தியமைக்கும் திருப்பணியில் ஈடுபட்டிருந்த சமயம் சன்னியாசி மலையிலிருந்த வேல் கோயிலையும் பராமரித்து வந்ததுடன் இங்கு வாழ்ந்து வந்த சன்னியாசிகளுக்கு தானமாக மாதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதம் நெல் மூடைகளை அனுப்பி வந்ததாகவும் வரலாற்றுக் குறிப்பொன்று கூறுகிறது. இதன்படி சோழ இளவரசி தம்பதி நல்லாளின் போஷிப்பையும் சன்னாசி மலைக் கோயில் பெற்றுள்ளது என்பது தெரிகிறது. புவனேகபாகுவின் காலம் பொ.ஆ. 28 என தொல்லியல் ஆய்வாளர் க. தங்கேஸ்வரி கணித்துள்ளார். எனவே, இக்காலப்பகுதியில் இங்கு வேல் கோயில் இருந்தமையும், சன்னியாசிகள் வாழ்ந்தமையும் உறுதியாகிறது. தம்பதி நல்லாள் சில காலம் வாழ்ந்த ஊரே அவளின் பெயரில் 'தம்பதிவில்' எனப் பெயர் பெற்றது. இங்கு ஓர் குளத்தை வெட்டி தனது தாயின் பெயரில் தம்பதிவில் என மனுநேயகயபாகு பெயர் சூட்டியதாக மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடுகிறது. இவ்வூரே பின்பு தம்பிலுவில் எனப் பெயர் பெற்றது.

## உன்னரசுகிரி இராஜதானியின் ஓர் பகுதி

சன்னாசிமலையே உன்னரசுகிரி என வி.சி. கந்தையா அடையாளம் கண்டுள்ளார். ஆனால், இதற்கு சற்று தெற்மேற்கில் உள்ள குடும்பிமலை தான் உன்னரசுகிரி என சி. கணபதிப்பிள்ளை குறிப்பிட்டுள்ளார். ஓர் இராஜதானியின் தலைநகருக்குரிய எல்லா அடையாளங்களையும் கொண்ட சங்கமன் கண்டி மலையே உன்னரசுகிரி எனவும் கூறப்படுகிறது. அரண்மனை இடிபாடுகள் ஆலய எச்சங்கள் நீர்ச்சுனைகள், கல்வெட்டுக்கள், கட்டிட எச்சங்கள் போன்றவை இங்கு காணப்படுகின்றன. உன்னரசுகிரி இராஜதானி நாகர் முனைக்கும் கும்புக்கன் ஆற்றுக்கும் இடையில் அமைந்திருந்ததாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. இந்த இராஜதானியின் முக்கிய பகுதிகளாக குடும்பிமலை, நாகபர்வதமலை, சங்கமன் கண்டி மலை, சன்னாசி மலை போன்றவை அமைந்திருந்தன. தமிழ் அரசர்களால் ஆளப்பட்ட இப்பகுதிகளில் கோயில்களும், குளங்களும், குடியிருப்புக்களும் அமைந்திருந்தன.



பண்டைய ஆலய இடிபாடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நியாசிகள் ஸ்தாபித்த விநாயகர் கோயில்

மிகப் பண்டைய காலத்தில் பாதயாத்திரையாக கதிர்காமம் செல்ல இலங்கை வந்த தெனனிந்திய துறவி ஒருவரால் சன்னியாசி மலையின் அடிவாரத்தில் ஓர் கல்லை வைத்து பிள்ளையாராக வழிபடப்பட்டதாகவும், பிற்காலத்தில் கதிர்காமம் செல்லும் பாத யாத்திரை பக்தர்களால் வழித்துணைக் கடவுளாக இப்பிள்ளையார் வணங்கப்பட்டு வந்ததாகவும் தெரிய வருகிறது. அடர்ந்த காட்டின் மத்தியில் உகந்தை செல்லும் காட்டுப்பாதையின் அருகில் காணப் படும் இச்சிறிய ஆலயம் மிகவும் கீர்த்தி பெற்றதாகக் கருதப்படுகிறது. உகந்தை முருகனை தரிசிக்கச் செல்லும் பக்தர்கள் முதலில் இப்பிள்ளை யாரைத் தரிசித்த பின்னரே முருகனைத் தரிசிப்பர். பழம்பெருமை வாய்ந்த இப்பிள்ளையார் ஆலயம் தோன்றிய காலம் சரியாகத் தெரியாவிட்டாலும் சுமார் 2000 வருடங்களுக்கு மேற்பட்ட பாரம்பரியத்தைக் கொண்ட கோயிலாகவே இது கருதப்படுகிறது.



*அடிவாரத்திலுள்ள பிள்ளையார் கோயில்*


## மலையடிவாரப் பிள்ளையார் கோயிலும், அதன் புராதன சின்னங்களும்

சன்னாசிமலையின் அடிவாரத்தில் பாதையருகில் உள்ள ஓர் பழைமை வாய்ந்த புளிய மரத்தின் கீழ் பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது. பண்டைய காலத்தில் முனிவர்களால் இம்மரத்தின் கீழ் ஒரு பிள்ளையைார் கல் ஸ்தாபிக்கப்பட்டு திறந்த வெளி வழிப்பிள்ளையார் கோயிலாக வணங்கப் பட்ட இது வருடாவருடம் கதிர்காமம் செல்லும் யாத்திரிகர்களால் பூஜிக்கப் பட்டு வந்தது. பின்பு பிள்ளையார் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டு அதை பாதுகாக்கும் பொருட்டு சிறிய கோயில் கட்டப்பட்டது. அதன் பின்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உகந்தை முருகனாலயத்தை தரிசிக்க வரும் பக்தர்களும், முக்கியஸ்தர்களும் ஒன்று சேர்ந்து இச்சிறிய ஆலயத்திற்கு ஓர் மண்டபத்தையும் கட்டியெழுப்பினர். இன்று கதிர்காமம், உகந்தை போன்ற ஆலயங்களுக்குச் செல்லும் பக்தர்களின் முக்கிய வழிபாட்டுத் தலமாக சன்னாசிமலைக் கோயில் விளங்குகிறது.

ஆலயத்தின் கருவறையில் மிகப்பழைமை வாய்ந்த உயரமான வேலாயுதம் ஒன்று உள்ளது. மேலும் பழைமை வாய்ந்த திரிசூலங்கள் இரண்டும், முனிவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட புராதன பிள்ளையார் கல்லும், மரத்தினால் செதுக்கப்பட்ட புராதன விநாயகர் சிலை ஒன்றும், வலம்புரி பிள்ளையார் கற்சிலை ஒன்றும் காணப்படுகின்றன. இவை யாவும் பண்டைய காலம் தொட்டு வருடாவருடம் வரும் சன்னியாசிகளால் இங்கு வைத்து பூஜிக்கப் பட்டவையாகும். ஆலயத்தின் முன்பு கற்பூரம் கொளுத்த பயன்படுத்தப்படும் ஓர் பழைமைவாய்ந்த பீடக்கல் காணப்படுகிறது.




பிள்ளையார் கோயில் விக்கிரகங்களும், வேலும், சூலமும்

## மலைமீதுள்ள ஆலய இடிபாடுகளும் நீர்ச்சுனைகளும்

பிள்ளையார் ஆலயத்தின் இடது பக்கத்தில் சன்னாசிமலைக் குன்றுக்கு செல்லும் பாதை உள்ளது. மலைக்குச் செல்லும் அடிப்பாதையில் முதலாவதாக ஓர் நீர்ச்சுனை அமைந்துள்ளது. இயற்கையான பாறை ஊற்றின் மூலம் பாறையில் அமைந்துள்ள இச்சுனையில் குளிர்ந்த சுத்தமான நீர் காணப்படுகிறது. பண்டைய காலம் முதல் இது மலை உச்சியில் இருந்த வேல் கோயிலின் தீர்த்தமாக விளங்கியுள்ளது. இன்றுவரை ஆலயத்தை தரிசித்து தங்கிச் செல்லும் பக்தர்களுக்கு இந்நன்னீர்ச்சுனை மிகவும் பயனுள்ளதாக விளங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. இதன் இடதுபக்கத்தில் சற்றுத் தூரத்தில் இன்னுமோர் இயற்கையான நீர்ச்சுனையும் காணப்படுகிறது.



*நீர்ச்சுனை*

இவற்றைக் கடந்து மலையின் உச்சிப்பகுதிக்கு சென்றதும் அங்கு ஓர் மரத்தின் கீழ் புராதன வேல் கோயில் உள்ளது. இச்சமதரையில் ஆலயத்தின் இடிபாடுகளான செங்கற்கள், கற்றூண்களின் பாகங்கள், துளைக் கற்கள் போன்றவை ஆங்காங்கே காணப்படுகின்றன. கற்சுவர் ஒன்று இருந்ததற்கான அடையாளங்கள் தெரிகின்றன. இவற்றின் மத்தியில் உள்ள இரு கள்ளி மரங்களுக்கிடையில் லிங்கம் போன்ற ஓர் கல்லும் அதைச் சுற்றி ஏராளமான சிறிய கற்களும் காணப்படுகின்றன. இச் சிறிய கற்கள் இங்கு வரும் பக்தர்கள் நேர்த்திக்காக வைத்த கற்களாகும்.

மலைக்குன்றின் உச்சியிலிருந்து வடக்குப் பக்கமாக சற்று உயரம் குறைவாக மலைப்பாறை நீண்டு காணப்படுகிறது. சிறிது தூரத்தில் இன்னுமோர் சமதரை அமைந்துள்ளது. இங்கும் ஓர் கட்டிட இடிபாடு உள்ளது. இதைக் கடந்து சிறிது தூரம் சென்றதும் இன்னுமோர் இயற்கையான நீர்ச்சுனையை பாறையில் காணக்கூடியதாக உள்ளது. இதனருகில் ஓர் பழைமை வாய்ந்த வேலும் அதைச் சுற்றி சிறிய கற்கள் நூற்றுக்கணக்கில் காணப்படுகின்றன. இங்கும் துளைக்கற்கள், தூண்களின் துண்டுகள் போன்ற புராதன சின்னங்கள் காணப்படுகின்றன.

## இன்றும் மலையில் நிலவும் சன்னியாசிகளின் அபூர்வ சக்தி

உகந்தை மலையில் உள்ளது போல் இம்மலைக் குன்றிலும் பல நீர்ச்சுனைகள் இயற்கையாக அமைந்துள்ளன. மலையின் முடிவில் வட கிழக்கு அடிவாரத்தில் ஓர் சிறிய குளம் காணப்படுகிறது. மலையின் மேற்குப் பக்கத்தில் உள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டில் பல கற்குகைகளும் காணப்படுகின்றன. இவை இங்கு வாழ்ந்து வந்த சந்நியாசிகளால் பயன்படுத்தப்பட்டுள்ளன. சன்னியாசி மலைக்கு யாத்திரை செல்லும் பக்தர்கள் இக்காட்டுப் பகுதிக்கு செல்ல அஞ்சுவதாகக் கூறப்படுகிறது. இக்குகைகளில் சன்னியாசிகளினதும், சித்தர்களினதும் சக்தி இன்றும் உள்ளதாக நம்பப்படுகிறது.

பானமைப் பகுதியில் உள்ள பழங்குடி மக்கள் சன்னாசி மலைக் காட்டுப் பகுதிக்கு தேன் எடுக்கவும், காய் கனிகள் பறிப்பதற்கும் வேர், மூலிகை போன்றவற்றை எடுப்பதற்கும், மரங்கள் வெட்டுவதற்கும் வருவதுண்டு. இம்மலையிலுள்ள சக்தி மீது மிகவும் பயபக்தி கொண்ட இவர்கள் முதலில் அடிவாரத்திலுள்ள பிள்ளையாருக்கு தேங்காய் உடைத்துவிட்டு மலை உச்சிக்கு சென்று வேலை வழிபட்டு சிறிய கல்லை வேலின் முன்பாக வைத்து நேர்ந்து விட்டு தம்மை காக்கும்படி வேண்டிக் கொண்ட பின்பே இக்காட்டுக்குள் செல்கிறார்கள். இந்த வழக்கம் இன்றும் நிகழ்வது குறிப்பிடத்தக்கது. இவ் வழியில் செல்லும் பல யோகிகளும், ஞானிகளும் சன்னாசி மலைக்கு அப்பால் செல்ல முடியாமல் ஏதோ ஓர் சக்தி தம்மைத் தடுப்பதாகவும் இம் மலையே முருகனின் சக்தி உள்ள இடம் எனவும் கூறுகின்றனர்.

### சாமியாரின் சமாதி

சன்னியாசி மலையில் வடக்குப் பக்கத்தில் உள்ள சிறிய குளத்தின் எதிர்ப் புறமாக பாதையின் அருகில் வேலுப்பிள்ளை சாமியாரின் சமாதி காணப் படுகிறது. வட்டவடிவமாக அகில் மரங்களும் இவற்றின் மத்தியில் சாமி யாரின் சமாதியும் காணப்படுகிறது.

இத்தனை சிறப்புகள் நிறைந்ததும், பல அபூர்வ சக்தியைக் கொண்டதும், புராதன இந்து சமயச் சின்னங்கள் நிறைந்ததும், தொல்லியல் முக்கியத்துவம் பெற்றதுமான சன்னாசி மலையையும் அதன் இந்து பாரம்பரியத்தையும் போற்றிக் காக்க வேண்டியது இந்துக்களின் தலையாய கடமையாகும்.

## வைரவர் கோயில் - தேவாலயகுடி, வட்டினாகல

அம்பாறை நகரிலிருந்து சியம்பலாண்டுவைக்கு செல்லும் வீதியில் சுமார் 18 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள தமன என்னுமிடத்திலிருந்து மேற்கு நோக்கி பாதாகொட, கொக்நகர, கிவுலேகம ஊடாக வட்டினாகல செல்லும் வீதியில் கொக் நகருக்கும், பன்னத்கொடவிற்கும் இடையில் உள்ள பழைமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ந்த இடமே தேவாலயக்குடி ஆகும். இவ்விடம் 'தேவாலயப்பிட்டி' எனவும் அழைக்கப்பட்டது. தற்போது இது சிங்கள மொழியில் 'தேவாலஹிந்த' எனப் பெயர் பெற்றுள்ளது. இவ்விடத்தில் தான் புராதன வைரவர் கோயில் அமைந்திருந்தது. மேலும், இவ்விடத்திற்கு அலுகிலுள்ள கொக்நகர மலை யிலும் சில ஆலய இடிபாடுகள் காணப்படுகின்றன.

## மூன்று பாதைகளுக்கும், மூன்று குளங்களுக்கும், இரண்டு மலைகளுக்கும் மத்தியில் அமைந்துள்ள கிராமம்

தேவாலயக்குடிக்கு வருவதற்கு மொத்தமாக மூன்று வழிகள் உள்ளன. ஒன்று ஏற்கனவே குறிப்பிட்ட தமனயிலிருந்து பாதாகொட ஊடாக வரும் வழி. இரண்டாவது தமனையைக் கடந்து சியம்பலாண்டுவ செல்லும் வீதியில் உள்ள வட்டினாகல சந்தியிலிருந்து, மேற்கு நோக்கி இங்கினியாகலைக்கு செல்லும் வீதியில் உள்ள பள்ளன் ஒயா குளத்தின் பிரதான கால்வாயை ஒட்டிச் செல்லும் வீதியில், சுமார் 4 கி.மீ. பயணம் செய்தும் தேவாலயக் குடியை அடையலாம். மூன்றாவதாக அம்பாறையிலிருந்து இங்கினியாகலை வட்டினாகல ஊடாக சியம்பலாண்டுவைக்கு செல்லும் வழி. இப்பாதையில் இங்கினியாகலையில் உள்ள சேனநாயக்க சமுத்திரத்தின் ஊடாக வட்டினாகல செல்லும் போது சுமார் 8 கி.மீ. தூரத்தில் உள்ள கொக்நகர சந்தியின் கிழக்குப் பக்கம் செல்லும் பாதையில் 4 கி.மீ. பயணம் செய்தும் தேவாலயக் குடியை அடையலாம்.

இன்று தேவாலஹிந்த என அழைக்கப்படும் இப்புராதன கிராமம் அம்பாறை மாவட்டத்தின் முக்கிய மூன்று குளங்களுக்கு மத்தியில் அமைந் துள்ளமை இதன் சிறப்பம்சமாகும். இதன் கிழக்கில் சுமார் 3 கி.மீ. தொலைவில் எக்கல் ஆறு குளமும், தெற்கில் சுமார் 4 கி.மீ. தொலைவில் பள்ளன் ஒயா குளமும், வட மேற்கில் சுமார் 6 கி.மீ. தூரத்தில் பிரசித்தி பெற்றதும் இலங்கை யின் மிகப் பெரிய குளமுமான சேனநாயக்க சமுத்திரமும் அமைந்துள்ளன.

பள்ளன் ஒயா குளத்தின் பிரதான கால்வாய் தேவாலஹிந்த கிராமத்தை ஊடறுத்துச் செல்வதால் இப்பகுதியில் கால்வாயை ஒட்டி ஐந்துக்கும் மேற் பட்ட சிறிய குளங்கள் உருவாகி உள்ளன. இதன் காரணமாக எல்லாக் காலங்களிலும் செழிப்புற்ற பிரதேசமாக இது விளங்குகிறது. இக்கிராமத்தின் மேற்கில் கொக்நகர மலையும், கிழக்கில் எக்கல ஓயா குள மலையும் அமைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## கொக்நகரத்தின் புராதன எச்சங்களும் காவற்கோட்டையும்

தேவாலயக் குடியின் மேற்கில் உள்ள கொக்நகர மலைத்தொடரில் பண்டைய கால வழிபாட்டுத் தலங்களுக்குரிய கட்டிட இடிபாடுகள் ஏராளமாக காணப் படுகின்றன. சுமார் 500 அடி உயரமானதும் பல சமதரைகளைக் கொண்டதுமான இம்மலைக்கு ஏறுவதற்கு அடிவாரத்திலிருந்து கற்படிகள் அமைக்கப் பட்டுள்ளன. இப்படிகள் மூலம் சுமார் 50 அடி தூரம் ஏறியதும் ஓர் சமதரை காணப்படுகின்றது. இச்சமதரையில் பல கட்டிட இடிபாடுகளும், கற்பீடங்களும், செங்கட்டிகளும் காணப்படுகின்றன. இயற்கையான கற்சுனைகளும் உள்ளன. இங்கிருந்து மேலும் 200 அடி உயரத்தில் உள்ள சமதரையின் ஒரு பகுதியில் 5 அடி உயரமானதும், 7 அடி அகலமானதும் கொண்ட மிக நீண்ட மதிற்சுவரின் இடிபாடுகள் காணப்படுகின்றன. சுமார் 600 அடி நீளமான இச்சுவர் இங்கு அமைந்திருந்த மாளிகைக்கும், வழிபாட்டுத்தலத்திற்கும் பாதுகாப்பாக அமைக்கப்பட்டிருந்த தடுப்புக் சுவராகக் கருதப்படுகிறது. மலை உச்சிக்கு ஏறுவதற்கு அடிவாரத்தின் கிழக்கிலும், வடக்கிலும் படிகள் செதுக்கப் பட்டுள்ளன. மலையின் இரண்டாவது சமதரையிலிருந்து 200 அடி உயரத்தில் இன்னுமோர் சமதரை காணப்படுகிறது. இங்கு ஓர் மதிற்சுவரின் இடிபாடுகள் காணப்படுகின்றன. இங்கிருந்து மேலும் 50 அடி உயரத்தில் மலை உச்சி உள்ளது. மலையுச்சியில் சுமார் 10 ஏக்கர் விஸ்தீரணமுடைய சமதரை காணப்படுகின்றது. இங்கும் கட்டிட இடிபாடுகள் ஆங்காங்கே காணப் படுகின்றன. அழகிய இயற்கையான பாறை நீர்ச்சுனையும் இங்குள்ளது.

இம்மலை உச்சியிலிருந்து பார்க்கும்போது வடக்கில் அம்பாறை நகரப் பகுதியில் கல்லோயா ஆற்றின் வடிநிலங்களும், மேற்கில் சேனநாயக்க சமுத்திரமும், அதனை ஒட்டிய ஊவா மலைத்தொடர்களும், தெற்கில் பள்ளன் ஓயா குளம், வெஸ்ட் மினிஸ்டர் மலை, பன்னல்கம குளம் போன்றவையும் கிழக்கில் அக்கரைப்பற்று, திருக்கோயில் பகுதிகளை ஒட்டிய வங்கக் கடலும் மிக அழகாகத் தெரிகின்றன. இம்மலை மீதுள்ள கட்டிட இடிபாடுகளையும் நீண்ட தடுப்புச் சுவர்களையும் நோக்கும்போது இம்மலை உச்சி ஓர் காவற்கோட்டையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளமை தெளிவாகத் தெரிகிறது. சந்தனகாமத்து அரசின் மேற்கெல்லைக் கோட்டையாக இது விளங்கியிருக்க வேண்டும். இது எல்லையின் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகையால் குடியிருப்புகளும், மாளிகைகளும், ஆலயங்களும் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் எனக் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை யாவும் முன்பு இங்கிருந்த பௌத்த வழிபாட்டுத் தலத்தின் இடிபாடுகள் என அடையாளம் காணப்பட்டுள்ளன. இதேசமயம் இங்கு ஓர் பெரிய இந்து வழிபாட்டுத்தலம் இருந்திருக்க வேண்டும் என ஊகிக்கக் கூடியதாக உள்ளது. பௌத்த வழிபாட்டுத் தலங்கள் அமைக்கப்பட முன்பு இப்பகுதி இந்து வழிபாட்டிடமாக செல்வாக்குப் பெற்று விளங்கியுள்ளது.



*வடினாகல மலை*

## கோயிலும் சுனையும் அமைந்திருந்த இடம்

தேவாலஹிந்த என அழைக்கப்படும் இவ்விடம் பண்டைய காலந்தொட்டு தேவாலயக் குடி என்ற பெயருடன் அழைக்கப்பட்டுள்ளது. இங்கு பெரியதொரு சைவக் கோயிலும், அதன் கேணியும் அமைந்திருந்தபடியால் ஆதிகாலம் முதல் இப்பெயர் வழங்கப்பட்டுள்ளது. சிங்கள மொழியில் 'தேவால' என்பது கோயில் எனவும் 'ஹிந்த' என்பது தீர்த்தக்கேணி, சுனை, பொய்கை எனவும் பொருள்படும். பௌத்த வழிபாட்டுத் தலங்கள் விஹாரை, ஸ்தூபி, ஆராமய போன்ற பெயர்களில் அழைக்கப்படும். இந்து வழிபாட்டுத் தலம் மட்டுமே தேவாலய என அழைக்கப்படும். சிங்கள பகுதிகளில் உள்ள புகழ் பெற்ற முன்னேஸ்வரம், 'முன்னேஸ்வர தேவாலய' எனவும் கதிர்காமம் முருகன் கோயில் 'கத்தரகம தேவாலய' எனவும் உகந்தை மலை முருகன் கோயில் 'ஒகந்த தேவாலய' எனவும் சிங்கள மொழியில் அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. இதுபோலவே பண்டைய காலத்தில் கோயிலும், சுனையும் அமைந்திருந்த இப்பகுதி பிற்காலத்தில் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழத்தொடங்கியபோது சிங்கள மொழியில் 'தேவால ஹிந்த' என்று இன்றுவரை வழங்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தன காமத்து பாண்டிய மன்னர்களாலும், கலிங்க மாகோனாலும் ஆளப்பட்ட பகுதி

கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் சந்தனகாமத்து தமிழ் மன்னர்களால் ஆளப்பட்ட பிரதேசத்தின் மேற்கெல்லையாக இங்கினியாகல பிரதேசம் விளங்கியுள்ளது. இங்கினியாகலவிற்கு சற்று தெற்கில் அமைந்துள்ள தேவால ஹிந்த பகுதியும் இவ்வரசிற்குட்பட்ட பகுதியாக விளங்கியுள்ளது. அப்போது முதல் கலிங்க மாகோன் ஆட்சி முடிவடைந்த பொ.ஆ. 1255ஆம் ஆண்டு வரை இப்பகுதி தமிழ் மன்னர்களின் செல்வாக்கிற்கு உட்பட்ட பகுதியாக விளங்கியுள்ளது. பண்டைய காலம் முதல் மாகோன் ஆட்சிக் காலம் வரை இங்கு அமைக்கப்பட்டிருந்த சைவ ஆலயம் சிறப்புடன் விளங்கியிருந்ததாக நம்பப்படுகின்றது. அதன்பின் இங்கிருந்த தமிழர்கள் கிழக்குக் கரையோரம் நோக்கி இடம்பெயர்ந்ததுடன் இப்பகுதியும் கைவிடப்பட்டு ஆலயங்களும், குடியிருப்புகளும் அழிந்து போயுள்ளன. பிற்காலத்தில் இங்கு குடியேறிய சிங்கள மக்களால் கோயிலும், சுனையும் சிதைவுகளாகக் கிடந்த இடம் 'தேவாலஹிந்த' எனப் பெயரிடப்பட்டு அழைக்கப்பட்டுள்ளது. பின்பு பௌத்த வழிபாட்டுத் தலங்கள் இப்பகுதியில் எழுந்த பின்பு காலப்போக்கில் இங்கு கிடைக்கப்பெற்ற சைவாலய சின்னங்களும், ஆதாரங்களும் மறைக்கப் பட்டிருக்க வேண்டும் எனக் கூறப்படுகிறது.

இன்று முழுமையாக சிங்கள மக்கள் வாழ்ந்து வரும் பகுதியான இப்பிரதேசத்தில் இருந்த சைவ ஆலயச் சின்னங்கள் காலத்துக்கு காலம் வெளிப்பட்டாலும் அவை பற்றிய செய்திகள் வெளியே வருவதற்கான எந்த சாத்தியக் கூறுகளும் இல்லை. இந்து சமயம் இப்பிரதேசத்தில் நிலவியிருந் தமையை எப்படி மறைத்தாலும் 'தேவாலஹிந்த' என்ற பெயரை இன்று வரை யாராலும் மறைக்க முடியவில்லை. இப்பெயரே இங்கு இருந்த மிகப்பெரிய பிரசித்தி பெற்ற ஆலயத்திற்கான அழியாத சான்றாக உள்ளது.


## கொங்கு மண்டலத்திலிருந்து வந்தவர்கள் குடியிருந்த கொங்கு நகரம்

தேவாலஹிந்த மலையடிவாரத்தில் அமைந்துள்ள இன்னுமோர் இடம் 'கொக்நகர' என அழைக்கப்படுவதும் ஈண்டு நோக்கத்தக்கது. இது 'கொங்கு நகரம்' என வழங்கப்பட்டு பின்பு 'கொக்கு நகரம்' என மருவி தற்போது 'கொக்நகர' என மாற்றமடைந்துள்ளது. பொ.ஆ. 13ஆம் நூற்றாண்டில் கலிங்க மாகோனின் ஆட்சி தென்கிழக்கில் கோவிந்த மலைக் கோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை பரவியிருந்தது. புராதன சந்தனகாம அரசுக்குட்பட்ட பகுதிகளிலெல்லாம் மாகோனால் தென்னிந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட தமிழ்க்குடிகள் குடியமர்த்தப்பட்டனர். இவர்களில் வீரம் மிக்க 'படையாட்சிக் குடி' யினரும் கொண்டுவரப்பட்டு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் குடியமர்த் தப்பட்டு பாதுகாப்பிலும் ஈடுபடுத்தப்பட்டனர். தமிழ்நாட்டின் பாண்டிய மண்டலம், சோழ மண்டலம், கொங்கு மண்டலம், தொண்டை மண்டலம் போன்ற பகுதிகளிலுமிருந்து அழைத்து வரப்பட்ட இப்படையாட்சிக் குடியி னரில் கொங்கு மண்டலத்திலிருந்து வந்தவர்கள் குடியமர்த்தப்பட்ட பகுதியாக இப்பகுதி விளங்கியிருக்க வேண்டும் என நம்பப்படுகிறது. முக்கியத்துவம் வாய்ந்த இப்பகுதியில் கொங்கு மண்டல படையாட்சிக் குடிகள் குடியிருப்பு களை அமைத்து இந்நகருக்கு 'கொங்கு நகரம்' எனப் பெயரிட்டதாகவும் இங்குள்ள மலையுச்சியிலிருந்த கோட்டையைப் பலப்படுத்தி பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தாகவும் கொங்கு நகரத்தில் தமது வழிபாட்டுத் தேவைக்காக கோயில் குளங்களை அமைத்திருந்ததாகவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

அம்பாறை நகரின் தெற்கில் உள்ள கல்மடு, மூவாங்கலை, வரிப்பத்தாஞ் சேனை போன்ற இடங்களில் மாகன் காலத்தில் புத்தூர், மருங்கூர், காரைக்கால் போன்ற பகுதிகளிலிருந்து வந்த குடிகள் குடியமர்த்தப்பட்டு, வன்னிமை வகுக்கப்பட்டு, காடுகளை கழனிகளாகத் திருத்தி வேளாண்மையில் ஈடுபடுத் தப்பட்டமை இங்கே குறிப்பிடத்தக்கது.



நாகக்கல்


## வைரவர் கோயிலும் அதன் அமைவிடமும்

தேவாலயக்குடி கிராமத்தின் கிழக்குப் பக்கத்தில் புராதன காலத்தில் அமைக்கப் பட்ட வைரவர் கோயிலின் எச்சங்களைக் காணக்கூடியதாக உள்ளது. எக்கல் ஆறு குளத்தின் மேற்குப் பக்கமாக காணப்படும் மலைத்தொடரின் அடிவாரத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலேயே இக்கோயில் அமைக்கப்பட்டிருந்தது. இவ்விடம் தற்போது தேவால ஹிந்த புராணவிஹாரை என அழைக்கப்படுகிறது.

பள்ளன் ஓயா குளத்திலிருந்து தேவாலயக்குடி கிராமத்தின் ஊடாக செல்லும் பிரதான கால்வாயை ஒட்டி அமைக்கப்பட்டுள்ள பாதையில் சுமார் 4 கிலோ மீற்றர் சென்றதும் ஓர் சிறிய குளம் காணப்படுகிறது. இக்குளத்தின் அருகிலுள்ள கால்வாயைக் கடந்து சுமார் 200 மீற்றர் தூரம் சென்றதும் வைரவர் கோயில் அமைந்திருந்த இடத்தைக் காணக்கூடியதாக உள்ளது. ஆலய வளாகத்தில் முதலில் காணப்படுவது ஆலயத்தின் வாசல் படியும், சில கற்றூண்களுமாகும். வாசல் படியில் ஓர் நாகக் கற்தூணும் காணப் படுகிறது. வாசல்படி வழியாக ஆலய வளாகத்திற்கு செல்லும் பொழுது ஆங்காங்கே கருங்கற்தூண்கள் சில காணப்படுகின்றன. இவற்றைக் கடந்து சென்றதும் தேவாலய என்றழைக்கப்படும் புதிதாகக் கட்டப்பட்ட நான்கு இந்து தெய்வங்களின் கோயில்கள் காணப்படுகின்றன. இவற்றின் இடதுபக்கம் ஓர் மலைப்பாறையும், அதில் ஓர் நீர்ச்சுனையும் அமைந்துள்ளது. தேவாலயங் களின் வலதுபக்கத்தில் பிக்குகளின் மடாலயமும், அதன் இடதுபக்கம் இன்னு மோர் கட்டிடமும் காணப்படுகிறது. இவற்றின் முன் பக்கம் ஆலய வளாகத் தின் நடுவில் பௌத்த சிலைமனை அமைக்கப்பட்டுள்ளது. இவை யாவும் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களாகும். சிலைமனையின் தெற்குப் பக்கத்தில் உள்ள பாறைத் தொடரின் அருகில் புராதன வைரவர் கோயில் இடிபாடுகள் காணப்படுகின்றன. பற்றைகள் வளர்ந்து காணப்படும் இவ்விடத் தில் ஆலயத்தின் நான்கு புராதன கற்தூண்கள் காணப்படுகின்றன. இவற்றின் முன்பு ஓர் பள்ளம் தோண்டப்பட்டிருக்கிறது. இப்பகுதிக்கு வந்த தொல் பொருள் திணைக்கள ஆய்வாளர்கள் சிலர் இங்கு ஓர் இந்து தெய்வச் சிலையைக் கண்டெடுத்ததாகவும், அவர்கள் மூலமே இது ஓர் இந்துக்கோயில் என அடையாளம் காணப்பட்டதாகவும், தாம் கண்டெடுத்த சிலையை அவர்கள் தம்மோடு கொண்டு சென்றதாகவும் இப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.




தேவாலயக்குடி வைரவர் கோயில் இடிபாடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்பாறையில் வைப்புத் திரவியம்

வைரவர் கோயில் அமைந்திருந்த இடத்தின் இடது பக்கத்தில் காணப்படும் நீண்ட பாறையின் மத்தியில் வைப்புத் திரவியம் இருந்தமைக்கான அடையாளம் தெரிகிறது. பாறையில் சுமார் 24 அங்குல விட்டத்தில் ஓர் வட்ட வடிவமான குழி காணப்படுகிறது. அதன் மத்தியில் 10 அங்குலம் விட்டமும் சுமார் 15 அங்குல ஆழமும் கொண்ட ஓர் குழி காணப்படுகிறது. இதனுள்ளேயே வைப்புத் திரவியம் இருந்ததாகவும், பெறுமதிமிக்க இப்புதையலை திருடர்கள் எடுத்து விட்டதாகவும் இப்பகுதியில் உள்ள மக்கள் கூறுகின்றனர். கல் மூடியொன்றினால் மூடக்கூடிய வகையில் இவ்வைப்புத்திரவியம் இருந்த குழி அமைக்கப்பட்டுள்ளது.



புதையல் இருந்த பாறைக்குழி

## புதையலைக் காத்த காவல் தெய்வம்

இப்பகுதியை பரிபாலனம் செய்த மன்னர்கள் அல்லது சிற்றரசர்களால் பாறையின் மத்தியில் வைப்புத் திரவியம் சேமித்து வைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதனைக் காக்கும் காவல் தெய்வமாகவே வைரவர் கோயில் இதனருகில் அமைக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது. சிறியதாக பாறைத் தொடரின் ஓரத்தில் அமைக்கப்பட்ட இக்கோயில் அன்று ஓர் பரிவாரக் கோயிலாக இருந்திருக்கலாம் எனவும், இன்று பௌத்த சிலைமனை காணப்படும் இடத்தில் புராதன காலத்தில் பெரிய கோயில் அமைக்கப்பட்டிருக்கலாம் எனவும் கூறப்படுகிறது. இதன் காரணமாகவே இக்கிராமம் தேவாலயக்குடி எனவும் பின்பு தேவாலஹிந்த எனவும் பெயர் பெற்றதாகவும் இக்கிராம மக்கள் கூறுகின்றனர். ஆலய வளாகத்தின் மேற்குப் பக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசல்படி உள்ள இடத்தின் இடது பக்கத்தில் உள்ள பற்றைகளுக்குள்ளும், மரங்களிடையும் மிகப் பண்டைய காலத்து கற்தூண்கள் சிலவும் காணப் படுகின்றன.

## காளியம்மன் கோயில் - சம்மாந்துறை

மட்டக்களப்பிலிருந்து பொத்துவிலுக்கு செல்லும் வீதியில் உள்ள காரைதீவுச் சந்தியிலிருந்து மேற்கு நோக்கி அம்பாறை செல்லும் வீதியில் சுமார் 5 கி.மீ. தொலைவில் சம்மாந்துறை அமைந்துள்ளது. இங்குள்ள பாடசாலையின் வலது பக்கத்தில் இக்காளி கோயில் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயிலின் முன்பக்கம் தற்போது வயல் காணிகளாக உள்ளன. அன்று இப்பகுதி மட்ட க்களப்பு வாவியின் தென்முனையாக விளங்கியுள்ளது. இவ்வாவியின் கரையிலேயே இக்காளியம்மன் கோவிலும் அமைந்திருந்தது. மட்டக்களப்பு வாவியூடாக நுழையும் சிறிய கப்பல்கள் இங்கு வந்து தரித்துச் சென்றுள்ளன. இது சிறிய துறைமுகமாகவும் விளங்கியுள்ளது. அக்காலகட்டத்தில் இங்கு காளியம்மன் கோயிலும் அமைந்திருந்தபடியால் இத்துறை 'அம்மன் துறை' எனப் பெயர் பெற்றுள்ளது. இதவே காலப்போக்கில் அம்மான் துறையாகி, பின்பு சம்மான்துறையென மருவி தற்போது சம்மாந்துறையாகிவிட்டது. மேலும் சம்மான் என்றழைக்கப்படும் தோனிகள் இத்துறைமுகத்திற்கு வந்து சென்றமையால் சம்மான்துறை என்ற பெயர் வந்தது எனவும் கூறுவர்.



*சம்மாந்துறை காளிகோயில்*

## பூர்வீகக் குடிகளான இயக்கர்களால் ஸ்தாபிக்கப்பட்ட கோயில்

பண்டைய காலத்தில் கூத்திக மன்னன் ஆட்சியில் உருவான மட்டக்களப்பு அரசு இப்பகுதியிலேயே காணப்பட்டுள்ளது. இவ்வரசுக்குட்பட்ட முக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதியாக சம்மாந்துறை விளங்கியுள்ளது. இதற்குச் சான்றாக தற்போது சம்மாந்துறை பொலிஸ் நிலையம் அமைந்துள்ள பகுதி 'மட்டக்களப்பு தரவை' என இன்றும் அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. இப்பகுதியிலுள்ள காணி உறுதிகளில் கூட மட்டக்களப்பு தரவை என்றே எழுதப்பட்டுள்ளது. இப்பெயரில் இரண்டு கிராம சேவையாளர் பிரிவுகளும் இங்கு இன்றும் உள்ளன.

புராதன வரலாற்றைக் கொண்ட இக்காளி கோயில் ஈழத்தின் பூர்வீகக் குடிகளான இயக்கர்களால் ஸ்தாபிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. பொ.ஆ.மு. 3 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்து வழிபாட்டைக் குறிக்கும் ஏராளமான பிராமிக் கல்வெட்டுகள் இலங்கை முழுவதிலும் காணப்படுகின்றன. இவற்றில் பத்துக்கும் மேற்பட்டவை அம்பாறை பகுதியில் உள்ளன. இக்கல்வெட்டு களில் காளி, அம்பிகை பற்றிய குறிப்புகள் காணப்படுவதால் இக்காலப் பகுதியில் அம்பாறை மாவட்டத்தில் காளி கோயில்களும், அம்மன் கோயில் களும் அமைந்திருந்தன எனக் கொள்வது பொருத்தமானதாகும்.

பொ.ஆ.மு. 5ஆம் நூற்றாண்டில் இப்பகுதியில் இயக்கர் எனும் பழங்குடி மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர். இவர்கள் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள். சம்மாந்துறை பகுதியில் பெருமளவில் வாழ்ந்து வந்த இம்மக்கள் இயக்கி எனும் தாய்த் தெய்வத்தை வழிபட்டு வந்ததாகத் தெரிய வருகிறது. இவ் வியக்கி வழிபாட்டின் தொடர்ச்சியாகவே காளி வழிபாடு பரவியுள்ளது. பொ.ஆ.மு. 4ஆம் நூற்றாண்டில் அநுராதபுரத்தை ஆட்சி செய்த பண்டுகாபயன் அங்கு பெருமளவில் வாழ்ந்து வந்த இயக்கர் குலத்தவர்களுக்கு அவர்களின் குலதெய்வமான இயக்கி அம்மன் ஆலயமொன்றை அமைத்துக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

## கூத்திக மன்னனின் இராஜதானி அமைந்திருந்த பிரதேசம்

பொ.ஆ.மு. 4 ஆம், 3 ஆம் நூற்றாண்டுகளில் பாண்டியரால் ஆளப்பட்ட சந்தனகாமம் எனும் அரசுக்குட்பட்ட பகுதியாக சம்மாந்துறை விளங்கியுள்ளது. பாண்டியர் குலத்து தமிழ் குறுநில மன்னர்கள் தென்கிழக்கு இலங்கையை ஆட்சி செய்துள்ளனர். இவர்கள் காலத்தில் இப்பகுதியில் தமிழர் பண்பாடும், காளி வழிபாடும் சிறப்புற்று விளங்கியுள்ளன. பொ.ஆ.மு. 177-155 காலப்பகுதியில் இலங்கையை கூத்திக மன்னன் ஆட்சி புரிந்த வேளையில் அவனது இராஜதானிக்குட்பட்ட பிரதேசமான சம்மாந்துறை நன்கு அபிவிருத்தி செய்யப்பட்டது. பிறநாடுகளினூடாக வீரமுனை, சம்மாந்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய பிரதேசங்கள் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தன. பிற நாடுகளிலிருந்து வரும் சிறிய கப்பல்கள் மட்டக்களப்பு வாவியினூடாக புகுந்து சம்மாந்துறையில் தரித்து நின்று சென்றுள்ளன. இக்கப்பல்கள் இங்கு குடிநீர் நிரப்பி சென்றுள்ளன. இவற்றிற்கும் பயன்படுத்தப்பட்ட பழைமை வாய்ந்த ஆறு கிணறுகள் வீரமுனையில் உள்ளன.

பொ.ஆ.மு. 161-137 காலப்பகுதியில் துட்டகைமுனுவின் தம்பியான சத்தாதீசன் தீகவாபிப் பகுதியில் உபராஜதானி அமைத்து ஆட்சி செய்த வேளையில் மட்டக்களப்பு பகுதியை இவனது தமிழ் குறுநில மன்னர்கள் ஆட்சி செய்துள்ளனர். பொ.ஆ.மு. 62-50 காலத்தில் சோரநாகன் அநுராதபுரத்தை ஆட்சி செய்த வேளை மட்டக்களப்பை இரஞ்சலன் எனும் கலிங்க வம்சத்து மன்னன் ஆண்டு வந்துள்ளான். இவனது காலத்தில் சம்மாந்துறையிலும், போரதீவிலும் வாழ்ந்து வந்த இயக்கர் குடியின மக்கள் புலம்பெயர்ந்துள்ளனர். இதனைத் தொடர்ந்து இரஞ்சலன் தென்னிந்தியாவிலிருந்து தமிழ் மக்களை அழைத்து வந்து சம்மாந்துறையில் குடியமர்த்தியுள்ளான். இம்மக்களிடையே காளியம்மன் வழிபாடு செழிப்புற்று விளங்கியுள்ளது. அதுவரை செல்வாக்கு பெற்றிருந்த இயக்கியம்மன் வழிபாடு காளியம்மன் வழிபாடாக மாறிய வேளையில் சம்மாந்துறை காளிகோயில் ஸ்தாபிக்கப் பட்டுள்ளது.



நாகசிற்பம்

## பல மன்னர்களின் போஷிப்பைப் பெற்ற ஆலயம்

மட்டக்களப்பு மன்னன் இரஞ்சலன் காலத்தில் சிறப்புற்று விளங்கிய இவ்வா லயம் இப்பகுதியில் நிலவிய தமிழர் செல்வாக்கினாலும் காலத்திற்குக் காலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரமாகவும், சிங்கள மன்னர்களின் மேலாதிக்கத்தின் கீழும் இப்பகுதியை நிர்வகித்து வந்த மன்னர்களாலும் சிறப்பாக பரிபாலிக்கப்பட்டு வந்தது. பொ.ஆ. 819-839 வரை அநுராதபுரத்தை ஆண்ட முதலாம் சேனன் காலத்தில் வட இலங்கையை ஆட்சி செய்த ஜெயதுங்க பரராஜ சிங்கம் எனும் பாலசிங்க மன்னனால் சோழநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட தமிழ்க் குடிகள் இப்பகுதியில் குடியேற்றப்பட்டனர். இவர்களாலும் சம்மாந்துறை காளி கோயில் நன்கு பூஜிக்கப்பட்டு வந்துள்ளது. பொ.ஆ. 839-873 வரை அநுராத புரத்தை ஆண்ட 2ஆம் சேனன் காலத்தில் சம்மாந்துறைப் பிரதேசத் திலிருந்து மட்டக்களப்பை ஆண்டு வந்த தருமசிங்கன் என்னும் சிற்றரசன் வருணகுல பாண்டியனின் அரசை மீட்டெடுக்கும் பொருட்டு 2ஆம் பாண்டியசேனன் படைகளுக்கு தலைமை தாங்கி தென்னிந்தியாவுக்கு சென்று பாண்டிய அரசை மீட்டு வருணகுலசிங்க பாண்டியனிடம் ஒப்படைத்து விட்டு வந்தான். தருமசிங்கனை சிங்கள நூல்கள் குட்டகன் எனக் குறிப்பிடுகின்றன. இவன் காலத்திலும் சம்மாந்துறை காளி கோயில் சிறப் புற்று விளங்கியுள்ளது.



*புராதன வீரபத்திரர் சிலை*


## சம்மாந்துறையில் பாண்டியர் செல்வாக்கு

பொ.ஆ. 1215-1255 வரை இலங்கையை ஆண்ட கலிங்க மாகோனால் நாவிதர் எனும் குடியினர் சம்மாந்துறையில் குடியமர்த்தப்பட்டனர். மாகோனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத் திலும் பொ.ஆ. 13ஆம் நூற்றாண்டில் (பொ.ஆ. 1284-1310) பாண்டியர்களின் செல்வாக்கு இலங்கையில் நிலவிய காலத்திலும், தமிழர் நாகரிகமும் சைவசமயமும் சம்மாந்துறைப் பகுதியில் செழிப்புடன் விளங்கியது. இக்காலப் பகுதியிலும் காளிகோயில் உன்னத நிலையில் இருந்தது. சம்மாந்துறையை ஒட்டி அமைந்திருக்கும் கைகாட்டிமலைப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட பாண்டியர் நாணயங்களும், தொல்லியல் எச்சங்களும் இப்பகுதியில் நிலவிய பாண்டியர் செல்வாக்கை உறுதிப்படுத்து கின்றன.

பொ.ஆ. 1450-1500 காலப் பகுதியில் மட்டக்களப்பு, வன்னி சிற்றரசுகள் சுதந்திரமாக இயங்கின. இச்சிற்றரசுகளில் சம்மாந்துறையும் ஒன்றாகும். பொ.ஆ. 1592-1604 காலப்பகுதியில் கண்டியை ஆட்சி செய்த முதலாம் விமலதர்ம சூரியன் சம்மாந்துறைக்கு விஜயம் செய்தவேளை, இங்கிருந்த வன்னிய மன்னனின் மாளிகையில் தங்கியிருந்து இக்காளி கோயிலையும், இப்பகுதியிலிருந்த ஏனைய கோயில்களையும் தரிசித்து சென்றுள்ளான் என வரலாற்றாய்வாளர் பி.ஈ. பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். இக்குறிப்பின்படி பொ.ஆ. 15ஆம் நூற்றாண்டிலும் இவ்வாலயம் செழிப்புற்று விளங்கியமை தெரிய வருகிறது.



*புராதன பீடக்கல்*

## காளி கோயிலின் புராதன தொல்பொருள் சின்னங்கள்

இங்கு புராதன காலத்தில் அமைந்திருந்த ஆலயத்தின் எச்சங்கள் சில இன்றும் இவ்வாலய வளவில் காணப்படுகின்றன. தற்போதுள்ள ஆலயத்தின் பின்புறம் கல்லொன்றில் புடைப்புச் சிற்பமாக செதுக்கப்பட்டுள்ள நாகசிற்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றுள்ளது. இது 3 அடி உயரமும் $1^1/_2$ அடி அகலமும் கொண்டது இதனுடன் கருங்கல்லில் செதுக்கப்பட்ட $1^1/_2$ அடி உயரமான வைரவர் சிலை, மூன்று கற்றூண்கள், இரண்டு கற்பூரக் கற்கள், இரண்டு பீடக் கற்கள் போன்றவையே இவ்வாலயத்தில் புராதன சின்னங்களாகத் தெரிகின்றன. இவற்றுடன் குழிக்கல், பலியிடுதலுக்கு பயன்படுத்தப்பட்ட காட்டேரிக்கல், இரும்பு யந்திரம், பித்தளை மணி, செம்புகள் போன்றவையும் காணப்படுகின்றன. இவற்றுடன் மிகப் பழைமை வாய்ந்த வீரபத்திரர் சிலையொன்றும் இங்கு உள்ளது. இவை அனைத்தையும் பாதுகாக்க வேண்டியது இந்துக்களின் கடமையாகும். ஒரு புராதன சின்னம் 1990ஆம் ஆண்டு கலவரத்தின்போது காணாமல் போய்விட்டதாகத் தெரியவருகிறது. கல்லில் செதுக்கப்பட்ட 3 அடி உயரமான யானையொன்றின் சிற்பமே இங்கிருந்து மறைந்து போயுள்ளது. இந்த யானைச் சிற்பத்தை அம்பாறைப் பகுதியிலிருந்து வந்த சிலர் வாகன மொன்றில் ஏற்றிக்கொண்டு சென்றதை மக்கள் கண்டுள்ளனர்.

இங்குள்ள புராதன சின்னங்களைப் பார்க்கும்போது பண்டைய காலத்தில் பல பரிவார தெய்வங்களுடன் வழிபடப்பட்டு வந்த திறந்த வெளிக் கோயிலாக இது விளங்கியிருக்க வேண்டும் என நம்பக்கூடியதாக உள்ளது. சுமார் 2000 வருட வரலாற்றைக் கொண்ட இவ்வாலயம் தற்போது புனர் நிர்மாணம் செய்யப்பட்டு புதுப்பொலிவு பெற்றுள்ளது. இக்காளி கோயிலின் மேற்கில் சுமார் 1 கி.மீ. தூரத்தில் சரித்திரப் பெருமை வாய்ந்த வீரமுனை சிந்தாத்திரிப் பிள்ளையார் கோயிலும், கண்ணகியம்மன் கோயிலும் அமைந் துள்ளமை இங்கே குறிப்பிடத்தக்கது.

## விநாயகர் கோயில் - அக்கரைப்பற்று


அக்கரைப்பற்று பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து 500 மீ. தூரத்தில் அம்பாறை வீதியின் இடதுபக்கத்தில் இப்பழைமை வாய்ந்த விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது.

### நான்கு பக்கங்களும் நீரினால் சூழப்பட்ட கருங்கொடித் தீவு

பண்டைய காலத்தில் அக்கரைப்பற்று பிரதேசம் 'கருங்கொடித் தீவு' என்ற பெயரில் அழைக்கப்பட்டுள்ளது. நான்கு பக்கங்களிலும் நீரால் சூழப்பட்ட தீவாக இப்பகுதி விளங்கியுள்ளது. கிழக்குப் பகுதியில் வங்கக் கடலும், மேற்குப் பகுதியில் தில்லையாறு சம்புக்களப்பு, மருதவெட்டுவான் குளம் போன்ற நீர் நிலைகளும் அமைந்திருந்தன. கல்லோயா ஆற்றின் கிளை ஆறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று அட்டாளைச்சேனைக்கருகில் இரண்டாகப் பிரிந்து ஒன்று அட்டாளச் சேனையின் தெற்குப் பகுதியில் கடலில் கலந்து அக்கரைப்பற்றின் வட பகுதியை பிரிக்கும் அதேவேளை, அடுத்த கிளை ஆறு தில்லையாற்றுடன் இணைந்து தெற்கு நோக்கிப் பாய்ந்து பனங்காடு வரை ஓடி அங்கிருந்து கிழக்குப் புறமாக பெரிய களப்பு வாவியில் சங்கமித்து அக்கரைப் பற்றின் மேற்கு, தெற்குப் பகுதிகளையும் துண்டிக்கிறது. கிளை ஆறு வாவியில் சங்கமிக்கும் இடத்திற்கு நேர் கிழக்கில் உள்ள சின்ன முகத்துவாரம் என்னுமிடத்தில் பெரிய களப்பு வாவி கடலுடன் கலந்து அக்கரைப்பற்றின் தென்பகுதியை முற்றாகத் துண்டித்திருந்தது. இதனால் நான்கு பக்கங்களிலும் நீரினால் சூழப்பட்ட இப்பிரதேசம் கருங்கொடித்தீவு என அழைக்கப்பட்டது. இப்பிரதேசத்தைச் சுற்றியிருந்த நீர்ப் பரப்பெங்கும் 'கருங்கொட்டி' எனும் ஒரு வகை நீர்த்தாவரம் பரவலாகக் காணப்பட்டதாகவும், இத்தாவரம் பூத்துக்குலுங்கி இத்தீவு முழுவதும் மிகவும் அழகாகக் காட்சியளித்த வேளை இதைக்கண்ட கலிங்க மன்னன் இத்தீவுக்கு 'கருங்கொட்டித் தீவு' எனப் பெயரிட்டதாகவும் கூறப்படுகிறது. பண்டைய காலத்தில் இத்தீவில் காணப் பட்ட கருங்கொட்டி செடியின் கிழங்கும், காயும், பூவும் இப்பகுதி மக்களின் சுவையுணவாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. கருங்கொட்டித்தீவு என்பது மருவி 'கருங்கொடித் தீவு' எனப்பட்டது. கருங்கொடித்தீவின் நீர்நிலைகளைக் கடக்க அக்காலப்பகுதியில் தோணிகள் பயன்படுத்தப்பட்டன. வரட்சியான காலங்களில் கால்நடையாகவும் அவற்றை மக்கள் கடப்பதுண்டு.




*அக்கரைப்பற்று விநாயகர் கோயில்*

## ஆங்கிலேயர் காலத்தில் அக்கரைப்பத்தூர்

கருங்கொடித்தீவு எனும் புராதன காலத்துப் பெயருடன் விளங்கிய இப்பகுதி ஆங்கிலேயர் காலத்தில் அக்கரைப்பற்று எனப் பெயர் பெற்றதாகத் தெரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிறது. அப்போது களியோடை ஆற்றின் குறுக்கே பாலம் எதுவும் அமைக்கப்பட்டிருக்கவில்லை. மட்டக்களப்புப் பகுதியிலிருந்து தெற்கு நோக்கி வரும் மக்கள் தோணி வழியாகவே களியோடை ஆற்றைக் கடந்து அக்கரைப்பற்று பகுதிக்கு வந்தனர். ஒரு தடவை ஆற்றின் இக்கரையில் நின்ற அரசப் பிரதானி அக்கரையில் எத்தனை ஊர்கள் உள்ளன எனக் கேட்ட போது மக்கள் பத்து ஊர் எனப் பதிலளித்ததாகவும், அப்போது களியோடை ஆற்றின் தெற்கில் பத்து ஊர்கள் இருந்ததாகவும் அவை ஒலுவில், பாலமுனை, மீனோடைக்கட்டு, அட்டாளைச்சேனை, கருங்கொடித்தீவு, கோளாவில், பனங்காடு, தம்பட்டை, தம்பிலுவில், திருக்கோயில் என்னும் பத்து ஊர் களெனவும் கூறப்படுகிறது. இதனால் 'அக்கரை பத்தூர்' என இப்பகுதி அழைக்கப்பட்டது. காலப்போக்கில் இப்பத்து ஊர்களுக்கும் மையமாகவும், பட்டினமாகவும் உருப்பெற்ற கருங்கொடித் தீவுக்கே இப்பெயர் வழங்கப்பட்டு வந்து காலப்போக்கில் இதுவே மருவி அக்கரைப்பற்று எனத் திரிபடைந்துள்ளது.



*தில்லை ஆறு*

## அக்கரைப்பற்று பிரதேசத்தின் அமைப்பு

அக்கரைப்பற்றின் மேற்குப் பக்கத்தின் பட்டியடிப்பிட்டி, பள்ளிக் குடியிருப்பு, இசங்கண்ணிச்சீமை, இலுக்குச் சேனை போன்ற கிராமங்களும், தெற்குப் பக்கத்தில் கோளாவில், பனங்காடு, அம்பலத்தாறு, புட்டம்பை, கண்ணகிபுரம், தேவபுரம் (அளிக்கம்பை), கவடாப்புட்டி போன்ற கிராமங்களும் அமைந்துள் ளன. அக்கரைப்பற்று வடக்குத் தெற்காக 3 மைல் நீளத்தையும் கிழக்கு மேற்காக 2 மைல் அகலத்தையும் கொண்ட 6 சதுரமைல் பரப்பளவையுடைய பிரதேசமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பகுதியில் பல புராதன குளங்கள் உள்ளன. இவற்றில் சில தூர்ந்து போயும் சில குளங்கள் கழனிகளாக மாற்றப்பட்டும் உள்ளன. இவற்றில் சேம்புக்குளம், சம்புக்களப்புக் குளம், சங்கரப்பத்தான் குளம், அகத்திக்குளம், சின்னகத்திக்குளம், மன்னன் குளம், பெரியகுளம், முள்ளிக்குளம், ஓடமெடுத் தான் குளம், ஏத்தாலைக்குளம், ஆலையடிக்குளம், கருங்கொடித்தீவுக்குளம், அம்மாள் குளம், வேப்படியக்குளம், முறாணைவட்டிக்குளம், மருதவெட்டு வான்குளம், மலையடிக்குளம், பறவைக்குளம், ஆனைவிழுந்த குளம், தாழங்குளம், பாலையடி மடுக்குளம், முறாவோடைக்குளம், குடாவெளிக் குளம், சிறிய மருத வெட்டுவான் குளம், அவக்கர் குளம், சம்பமாரிக் குளம் போன்றவை அடங்குகின்றன. தற்போது சாகாமம் குளம், இலுக்குச் சேனைக்குளம், நீத்தைக்குளம், வம்மியடிக்குளம் போன்றவற்றிலிருந்தும் வேறு சில சிறுகுளங்களிலிருந்தும் அக்கரைப்பற்றின் நெற்காணிகளுக்கு நீர்ப்பாசனம் கிடைக்கிறது.

பண்டைய காலத்தில் கருங்கொடித் தீவின் மேற்குப் பக்கமாக மட்டக் களப்பு பகுதிக்குச் செல்ல பழைமை வாய்ந்த பாதையொன்று இருந்தது. இப்பாதை திருக்கோயில், தம்பிலுவில், தம்பட்டைமுனை வழியாக பனக்காட்டின் மேற்கில் உள்ள காட்டுக்குடுப்பு, புல்மேடு, பட்டியடிப்பிட்டி மொட்டையான் வெளி, முள்ளிக்குளம் மலை, காக்காத்திப் புட்டி, மல்லிகைத் தீவு, மல்வத்தை, சவளக்கடை, கொக்கட்டிச்சோலை, முதலைக்குடா வழியாக படுவான் கரையை அடைந்துள்ளது. மட்டக்களப்புக்கும், திருக்கோயிலுக்கும் இடையில் பல ஆறுகளும், களப்புகளும் குறுக்கிடுவதால் தற்போது உள்ள கரையோரப் பாதை பண்டைய காலத்தில் அமைந்திருக்கவில்லை.



*புராதன சிலைகளும், வேலும்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அக்கரைப்பற்றின் பழைமை வாய்ந்த ஆலயங்களில் ஒன்று

இத்தனை சிறப்புகளையுடைய அக்கரைப்பற்றில் இவ்விநாயகர் கோயில் பொ.ஆ.மு. 4ஆம் நூற்றாண்டின் மூத்த சிவன் எனும் தமிழ் மன்னன் இலங்கையை ஆட்சி செய்து வந்த காலத்தில் இப்பகுதியை பரிபாலித்து வந்த ஸ்ரீகுல சேனன் எனும் சிற்றரசனால் ஸ்தாபிக்கப்பட்டதாக நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. சிங்காரபுரிக்கு வந்த க்ஷத்திக மன்னன் இவ் வாலயத்தைத் திருத்தி கோபுரமும் அமைத்து பொ.ஆ.மு. 262இல் குடமுழுக்கு விழாவை நடத்தியதாக குறிப்புகள் கூறுகின்றன. பொ.ஆ.மு. 161-137 காலப் பகுதியில் இலங்கையை ஆட்சி செய்த துட்டகைமுனுவின் காலத்தில் இங்கிருந்த சிற்றரசனால் இவ்வாலயத்திற்கு மானியங்கள் வழங்கப்பட்டு பரிபாலனம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டதாகவும் ஆலையடி வெளி, குருக்கள் குடா, சங்குவெளிப்பற்றை போன்ற இடங்களில் இருந்த நெற்காணிகளே மானியமாக வழங்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

## போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட ஆலயம்

இவ்வாறு காலத்துக்கு காலம் சிற்றரசர்களாலும் சிங்காரபுரியை ஆட்சி செய்து வந்த வன்னியர்களாலும் பரிபாலிக்கப்பட்டு சீரும் சிறப்புடனும் விளங்கிய இவ்வாலயம் பொ.ஆ. 1622இல் போர்த்துக்கேய தளபதியான அசவீடோ வினால் இடித்தழிக்கப்பட்டது. ஆலயத்தில் இருந்த விநாயகர் சிலையும் ஏனைய தெய்வ சிலைகளும் அருகிலிருந்த துரவுக்குள் வீசியெறியப்பட்டன.


பொ.ஆ. 1626 இல் கண்டியை ஆண்ட 2ஆம் இராஜசிங்க மன்னன் போர்த்துக்கேயரை வென்று மட்டக்களப்பு பிரதேசத்தை தன்னாட்சிக் குட்படுத்திய காலத்தில் இம்மன்னனின் ஆணைப்படி ஆலய சுற்றாடலில் தேடுதல் நடத்தி பிள்ளையார் விக்கிரகம் மட்டும் கண்டு எடுக்கப்பட்டது. இவ்விக்கிரகம் மரத்தால் அமைக்கப்பட்ட புதிய ஆலயத்தில் பிரதிஸ்டை செய்யப்பட்டு வழிபடப்பட்டு வந்தது. சில காலத்தின் பின்பு சுற்றுமதில், மண்டபங்கள், மடாலயம் போன்றவை கட்டப்பட்டன.

## ஆலயத்தின் தொல்பொருட் சின்னங்கள்

தொன்மை வரலாற்றைக் கொண்ட இவ்வாலயத்தில் ஓரிரு பண்டைய சின்னங்களே காணப்படுகின்றன. புராதன ஆலயத்தின் கற்தூண் ஒன்று இங்கு காணப்படுகிறது. ஆலயத்தின் முன் பக்கம் மண்டபத்தில் வைக்கப் பட்டிருக்கும் இது கற்பூரம் கொளுத்தப் பயன்படுத்தப்படுகிறது. இவ்வாலய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றாடலில் அகழ்வாய்வுகள் மேற் கொண்டால் மேலும் பல பண்டைய சின்னங்களையும் தகவல்களையும் பெறலாம்.



ஆலயத்தின் புராதன தூணின் துண்டு

## ஐயனார் கோயில் - பனங்காடு, அக்கரைப்பற்று

அக்கரைப்பற்றின் தெற்கில் 4 கி.மீ. தொலைவில் பனங்காடு கிராமம் அமைந்துள்ளது. மிகப் பண்டைய வரலாற்றைக் கொண்ட இக்கிராமத்தின் அருகிலுள்ள பெரியகளப்பு வாவியின் மேற்குக் கரையில் ஐயனார் கோயில் அமைந்துள்ளது.



பனங்காடு ஐயனார் சிவன் கோயில்

### பனங்காட்டில் நடுகல் வழிபாடு

வரலாற்று சிறப்புமிக்க பனங்காட்டில் மிகப் பண்டைய காலத்தில் நடுகல் வழிபாடு நிலவியிருந்தது. இவ்வழிபாடு சங்ககாலம் தொடக்கம் தமிழ் மக்களிடையே இருந்து வந்த வீரவழிபாடாகும். பனங்காடு கிராமத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவிவந்த இவ்வீர வழிபாடே ஐயனார் வழிபாட்டுக்கு முன்னோடியாக இருந்தது.

இலங்கைத் தீவில் நிலவிய பழைமையான வழிபாடுகளில் ஐயனார் வழிபாடும் ஒன்றாகும். ஊரையும், நிலபுலங்களையும் காவல் காக்கும் தெய்வமாக பண்டைய காலத்தில் ஐயனார் விளங்கினார். குளக்கரைகளிலும், ஊர் எல்லைகளிலுமே ஐயனாருக்கு திறந்தவெளிக் கோயில்கள் அமைக்கும் வழக்கம் பழங்காலத் தமிழர்களிடையே நிலவியது. ஊரைக்காப்பவன் என்பதால் 'தானவன்' என்ற பெயரும் ஐயனாருக்கு உண்டு. மற்றும் சாஸ்தா, கையனார், சாதவாகனன், கோழிக் கோடியோன், சாத்தன் போன்ற பெயர்களும் இக்காவல் தெய்வத்திற்குண்டு.

## பொ.ஆ. 15ஆம் நூற்றாண்டிற்கு முன்பு உருவான ஆலயம்

பனங்காடு ஐயனார் ஆலயத்தின் ஆரம்பகால வரலாற்றை நோக்குமிடத்து பொ.ஆ. 15ஆம் நூற்றாண்டளவில் வர்த்தகம் புரிய இப்பகுதிக்கு வந்த தென்னிந்திய செட்டிமார் இவ்வூரில் வாழ்ந்து வந்த கன்னியரை மணம் புரிந்ததாகவும், இவர்கள் குடியிருந்த பகுதி காடாக இருந்ததாகவும், இக்காட்டுப் பகுதியில் நடுகற்கள் சில காணப்பட்டதாகவும், பழைமையான வழிபாடு நிலவியதை எண்ணிய செட்டிமார் இக்கற்களை ஒன்று சேர்த்து இங்கிருந்த மாவிலங்கை மரத்தின் கீழ் மேடையொன்றை அமைத்து அதில் ஐயனார் சிலையொன்றை வைத்து வழிபட்டு வந்ததாகவும் தெரிய வருகிறது. அன்று இது ஓர் திறந்தவெளிக் கோயிலாகக் காணப்பட்டது.

## சிங்காரபுரி வன்னியராசா வழங்கிய மானியங்கள்

இவ்வாறு தோற்றம் பெற்ற ஐயனார் வழிபாடு பொ.ஆ. 16ஆம் நூற்றாண்டில் இப்பகுதியில் சிறப்புற்று விளங்குவதற்கு சிங்காரபுரி வன்னியராசா காரணமாக இருந்தான். திறந்தவெளி கோயிலாக இருந்த இவ்வாலயத்தை கட்டியெழுப்பும் பொருட்டு மானியங்களை வழங்கினான். இதன் பின் இவ்வாலயம் மிகவும் சிறப்புடன் விளங்கியது.


சிங்காரபுரி வன்னிய சிற்றரசனால் இவ்வாலயத்திற்கு மானியங்களாக நெற்கழனிகளும், குளமும் வழங்கப்பட்டன. ஆலயத்தின் வடகிழக்கில் சுமார் 40 ஏக்கருக்கும் மேற்பட்ட வயற்காணிகள் உள்ள பகுதி இன்றும் 'ஐயனார் வெளி' என அழைக்கப்படுகிறது. இதுதவிர ஆலயத்தின் முன்பாக புராதன காலத்தில் அமைக்கப்பட்ட குளம் 'ஐயனார் குளம்' எனவும் அழைக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகிறது. இதுவே ஆலயத்தின் புராதன தீர்த்தக்குளமாக விளங்கியுள்ளது. ஐயனார் சிலைக்குப் பாதுகாப்பாக இருந்த 'மாவிலங்கை மரம்' தலவிருட்சமாகவுள்ளது.

இத்தலவிருட்சத்தின் கீழ் ஐயனாருக்கு பெருமடை பரவி மஞ்சள் கலந்த அரிசியையும், கமுகம் பூ முதலான பூஜைப் பொருட்களையும், மாவிலங்கை மரத்தின் மேலே எறிந்தபோது அவை கீழே விழாத வண்ணம் ஐயனாரின் பரிகலங்கள் அவற்றைப் பற்றிக் கொண்ட அதிசயங்களும், வேறுபல அற்புதங்களும் இவ்வாலயத்தில் முற்காலத்தில் நிகழ்ந்ததாக இங்குள்ள முதியோர் கூறுகின்றனர்.

தென்னிந்திய செட்டிமாரால் இவ்வாலயம் தோற்றுவிக்கப்பட்டதால் ஐயனாருக்கு பூஜைகள் நடைபெறும்போது 'செட்டிகள் உள்ள நாளையத் தெய்வமே' என ஐயனாரைப் போற்றி வழிபடும் மரபு இங்கிருந்தது. ஐயனார் வழிபாட்டில் செட்டிமார்களுக்கிருந்த தொடர்பை இது உறுதிப்படுத்துகிறது. இவ்வாலயம் பொ.ஆ. 17, 18, 19ஆம் நூற்றாண்டுகளில் ஆலையடி வேம்பு பிரதேச மக்கள் மத்தியில் மிகவும் செல்வாக்குப் பெற்று விளங்கியது.



*புராதன பீடக்கல்*

## பொ.ஆ. 17ஆம் நூற்றாண்டில் பாடப்பட்ட ஐயனார் அகவல்

இக்காலப்பகுதியில் மட்டக்களப்புத் தமிழகமெங்கும் மிகப் பிரபல்யம் பெற்று விளங்கிய இவ்வாலயம் சம்பந்தமாக 17ஆம் நூற்றாண்டில் 'ஐயனார் அகவல்' எனும் காவியம் எழுதப்பட்டது. பொ.ஆ. 18 ஆம் நூற்றாண்டில் 'ஐயனார் காவியம்' பாடப்பட்டது. இதில் இவ்வூர் 'பனங்காமச் சோலை'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற சிறப்புப் பெயரில் புகழப்பட்டது. இவ்வாலயத்தில் வீரபத்திரர், காத்தவராயன், வதனமார் ஆகிய காவல் தெய்வங்களுக்கும் வழிபாடு நடந்து வந்தது. பூசாரிமார்களே பூசைகள் நடத்தி வந்தனர். இப்பூசைகளில் பெண்களும் சிறுவர்களும் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு 19ஆம் நூற்றாண்டின் இறுதிவரை இவ்வழிபாடு நிலவிவந்தது. இதன்பின் ஐயனார் வழிபாடு குன்றி ஆலயமும் செழிப்பிழந்து காணப்பட்டது. ஆலயத்தைச் சூழவுள்ள பகுதிகள் காடாக மாறின. இக்காலப் பகுதியில்தான் இவ்வாலயம் மீண்டும் புத்துயிர் பெறும் வகையில் ஓர் சம்பவம் நிகழ்ந்தது.

## ஐயனாருடன் ஒன்றிணைந்த பாசுபதேஸ்வரர்

1942ல் இவ்வாலயத்தின் சிறப்பையும் அற்புதங்களையும் கேள்வியுற்று இப்பகுதிக்கு வந்த முப்பெரும் சித்தர்களில் ஒருவரான சித்தானைக்குட்டி சித்தர் பனங்காட்டில் குடிகொண்டிருந்த ஐயனாரை வழிபட்டு வந்தார். தான் இங்கிருந்து செல்லும் சமயம் தனது பிரம்பினால் மாவிலக்கை மரத்தை அடித்து தனது காலினால் ஓர் கோடும் கீறி இவ்விடத்தில் சிவாலயம் கட்டுங்கள் என்று கூறிச் சென்றார். சித்தானைக்குட்டி சித்தர் கூறியதன்படி ஐயனார் ஆலயத்தின் அருகிலேயே ஓர் சிவாலயம் கட்டப்பட்டது. லிங்க வடிவில் சிவன் பிரதிஷ்டை செய்யப்பட்டு இவ்வூர் மக்களால் பூஜிக்கப்பட்டு வந்தார். இதன்பின் இவ்வாலயம் பாசுபதேஸ்வரம் எனவும் மூர்த்தி பாசுபதேஸ்வரர் எனவும் அழைக்கப்பட்டது.

துரியோதனனைக் கொல்ல பாசுபதம் என்னும் சர்வசக்தி வாய்ந்த ஆயுதத்தை பெறுவதற்காக சிவனை வேண்டிக் கடுந்தவம் புரிந்த அர்ச்சுனனுக்கு பாசுபதத்தை கொடுக்க சிவன் கொண்ட வடிவமே பாசுபதேஸ்வரராகும். இம்மூர்த்தியே தென்னிந்தியாவில் திருமுல்லை வாயிலிலும், திருவேட் களத்திலும் குடிகொண்டு பக்தர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருப்பவர். இதே வடிவம் கொண்ட ஈஸ்வரனே பனங்காடு பாசுபதேஸ்வரர் ஆலயத்திலும் வீற்றிருப்பவர். இன்று பாசுபதேஸ்வரர் ஐயனார் ஆலயம் என இக்கோயில் பெயர்பெற்று விளங்குகிறது.


## புராதன ஆலயத்தின் தொல்பொருட் சின்னங்கள்

இவ்வாலயத்தில் பூர்வீக ஐயனாருக்கு தனியாக சந்நிதி உள்ளது. இவ்வாலயத்தின் பாரம்பரியச் சின்னமாக இன்றும் ஆலயத்தில் காணப்படுவது 500

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடங்களுக்கு முற்பட்ட ஐயனார் விக்கிரகமும் இதன் பீடக்கல்லொன்றுமே. இப்பீடக்கல் ஆலயத்தின் பிரதான வாயிலில் முன்பாக தேங்காய் உடைக்கும் முன்னடிக் கல்லாக பயன்படுத்தப்படுகிறது. இவற்றைவிட மிகப் பழமை வாய்ந்த ஓர் லிங்கக்கல்லின் உடைந்த துண்டும் இங்கு காணப்படுகிறது.

மாவிலங்கை மரத்தின் கீழ் இப்பீடத்தின் மீது ஐயனார் சிலை வைக்கப் பட்டு முதன் முதலாக இவ்வாலயம் உருவானதாக கூறப்படுகிறது. ஆலயத் தின் பின்புறமாக மேலும் ஓரிரு கற்பீடங்களும், கற்றூண்களின் துண்டுகளும் காணப்படுகின்றன. இவையும் புராதன ஐயனார் ஆலயத்தின் வரலாற்றுச் சின்னங்களாக கருதப்படுகின்றன. இன்று மிகவும் அமைதியான சூழலில் சோலைகள் மத்தியில் குளக்கரையில் மிக ரம்மியமாக காட்சியளிக்கும் ஐயனார் பாசுபதேஸ்வரர் ஆலயம் பனங்காடு கிராமத்தின் புகழை பறை சாற்றும் ஓர் ஆலயமாகத் திகழ்கிறது.



*புராதன சிவலிங்கத்தின் துண்டு*


## நாக கோயில் - நாகபர்வதமலை (பம்பரகஸ்தலாவ)

உகந்தை மலையின் தென் மேற்கில் சுமார் 10 கி.மீ. தொலைவில் அடர்ந்த காட்டின் மத்தியில் நாகமலை அமைந்துள்ளது. இது நாகபர்வத மலை எனவும் பெயர் பெற்று விளங்கியுள்ளது. யால வனவிலங்கு சரணாலயத்திற்குப்பட்ட வடகிழக்கு பகுதியில் நாகபர்வத மலை அமைந்துள்ளது. தற்போது இம்மலை பம்பரகஸ்தலாவ என அழைக்கப்படுகிறது. இம் மலையில் தான் மிகப் பண்டைய காலத்தில் நாகவழிபாடு நிலவிய நாக கோயில் அமைந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகத்தின் தலை போன்ற அமைப்புடன் காணும் நாகமலை

நாககோயில் அமைந்திருந்த நாகபர்வத மலை மிகவும் வித்தியாசமான முறையில் காணப்படுகிறது. ஓர் இராட்சத நாகபாம்பு படமெடுத்த வண்ணம் இருப்பது போன்ற வடிவத்தில் இம்மலை அமைந்துள்ளது. இம்மலைப் பகுதிக்குச் செல்வதற்கு அடர்ந்த காட்டின் மத்தியில் உள்ள காட்டுப் பாதையைத் தவிர வேறு சீரான வழிகள் எதுவும் கிடையாது. மலை உச்சியில் இருந்து பார்க்கும் போது கிழக்கில் உகந்த மலைக் கோயிலும், வடக்கில் குடும்பி மலையும், இவைகளுக்கு இடையில் சலவைக்களப்பும், அதை அடுத்து வங்கக் கடலும் அழகிய காட்சிகளாக தெரிகின்றன.



*நாகத்தின் தோற்றமுடைய நாகபர்வதமலை*


## பெருந்தொகையான தமிழ் பிராமிக் கல்வெட்டுகள்

அம்பாறை மாவட்டத்தில் அதிகப்படியான பிராமிக் கல்வெட்டுக்களை உடைய இடம் ரஜகல எனும் இராசமலையாகும். இங்கு 48 கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதற்கு அடுத்தபடியாக அதிக பிராமிக் கல் வெட்டுக்களைக் கொண்ட இடமாக நாகமலை (பம்பரகஸ்தலாவ) காணப் படுகிறது. இங்கு மொத்தமாக 38 தமிழ் பிராமிக் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இவற்றில் 21 கல்வெட்டுகள் ஆரம்பத்தில் கண்டறியப்பட்டு 1970 ஆம் ஆண்டு இலங்கைத் தொல்பொருள் திணைக்களத்தால் வெளியிடப் பட்டன. ஏனைய 17 கல்வெட்டுகள் பிற்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டன.

இவற்றில் இந்து சமயம் சம்பந்தமான கல்வெட்டுகள் பல உள்ளன. நாகம் சம்பந்தமான 3 கல்வெட்டுகளும், சிவன் சம்பந்தமான 3 கல்வெட்டு களும் சுதர்சன எனும் சொல்லுடன் 3 கல்வெட்டுக்களும் இராவணன் பெயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறிக்கப்பட்ட ஒரு கல்வெட்டும் காணப்படுகின்றன. சுதர்சன என்பது மகாவிஷ்ணுவின் சக்கரமாகும்.



*பிராமிக் கல்வெட்டு*


## நாகமலையின் குகைகளும், இடிபாடுகளும்

பண்டைய காலங்களில் இப்பகுதியில் வாழ்ந்த ஆதிக்குடிகளான நாகர்களால் இங்கு அமைக்கப்பட்டிருந்த நாகவழிபாட்டுத் தலம் பற்றிய கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. நாகமலையிலிருந்து சுமார் 500 யார் தூரத்தில் அமைந்துள்ள சிறிய பாறைத்தொடரின் மத்தியில் வடக்கு தெற்காக ஒரு குகை அமைந்துள்ளது.

சுமார் 225 அடி சுற்றளவைக் கொண்ட இக்குகையில் ஆதி தமிழ்க் மக்கள் வாழ்ந்தமைக்கான தடயங்கள் காணப்படுகின்றன. இவர்கள் வரைந்த ஓவியங்கள் சிலவும் இங்கு காணப்படுகின்றன. குகையின் மூன்று பக்கங் களிலும் சுவர்கள் இருந்ததற்கான அடையாளங்கள் உள்ளன. செங்கட்டிகளைக் கொண்டு இச்சுவர்கள் அமைக்கப்பட்டிருந்தன. சுவர்களின் பின்னால் செதுக்கப்பட்ட செங்கற்களைக் கொண்டு அன்னப் பறவை சிற்பங்கள் அழகாக அமைக்கப்பட்டுள்ளன. குகையின் முன்பக்கம் 15 அடி அகலமும் 50 அடி நீளமும் கொண்ட மண்டபம் ஒன்றிருந்ததற்கான அடித்தளமும் காணப்படுகின்றது. கற்தூண்கள் சிலவும், வாசல் படிக்கல்லும் இம்மண்டபத்தில் உள்ளன. மண்டபத்தின் வடக்குப் புறத்தில் தாழ்வாரம் இருந்ததற்கான அடையாளமும் உள்ளது. கிழக்கு நோக்கிய வாசலையுடைய, இக்குகை மண்டபமே புராதன நாக வழிபாட்டுத் தலமாக இருந்திருக்க வேண்டும் என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நம்பப்படுகிறது. கிழக்கு நோக்கிய பிரதான வாசலும் மண்டபத்தின் வடக்கில் தாழ்வாரத்தின் பக்கம் இன்னுமொரு வாசலும் அமைக்கப்பட்டுள்ளன.



மலைக்குகை

## கதிர்காம பாண்டிய சத்திரிய மன்னர்களின் ஆட்சி நிலவிய இடம்

பொ.ஆ.மு. 3ஆம் நூற்றாண்டு காலப் பகுதியில் கதிர்காம பாண்டிய சத்திரியர்களின் இளைய சகோதரனாகிய மகாநாகனின் ஆட்சி அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் பரந்திருந்தது. பௌத்த மதம் இங்கு அறிமுகமாகியிருந்தபோதும் கதிர்காமத்தை ஆட்சி செய்த இந்துக்களாகிய கதிர்காம சத்திரியர்களின் பரம்பரையில் சிலர் நாகவழிபாட்டைப் பேணி வந்துள்ளனர். கதிர்காமம், திஸ்ஸமகராமை ஆகிய பகுதிகளில் நாகவழிபாடு தொடர்ந்தும் பேணப்பட்டு வந்தமை பற்றி தொலமியின் குறிப்புகளில் தெரிவிக்கப்பட்டுள்ளன. அத்தோடு பிற்பட்ட காலத்தில் பொறிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டுகளும் இதை உறுதிப்படுத்துகின்றன. எனவே, இக்காலப் பகுதியில் நாக வணக்கத்தைப் பேணி வந்த கதிர்காம பாண்டிய சத்திரிய மன்னர்களால் நாகமலை பகுதியிலும் நாகவழிபாடு பேணப்பட்டிருக்கலாம் என்பதில் ஐயமில்லை.



நாகமலை நீர்ச்சுனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன்னரசுகிரி இராஜதானியின் முக்கிய பகுதி


அம்பாறை மாவட்டத்தில் புராதன காலத்தில் அமைந்திருந்த உன்னரசுகிரி இராஜதானி பற்றி மட்டக்களப்பு மான்மியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் தலைநகரம் சன்னாசி மலையே என வி.சி. கந்தையாவும், குடும்பி மலையே என சி. கணபதிப்பிள்ளையும் குறிப்பிட்டுள்ளனர். ஆய்வாளர்களின் குறிப்புகளின் படி பானமைக்கும், மாணிக்ககங்கைக்கும் இடையிலுள்ள ஓர் மலையே உன்னரசுகிரி இராஜதானி எனத் தெரியவருகிறது. அதே சமயம் கவடா மலை முதல் கும்புகன் ஆறு வரையான பகுதியே உன்னரககிரி இராச்சியம் எனவும் அதன் தலைநகரம் சங்கமான் கணடிமலை எனவும் ஓர் கருத்து உண்டு. பொ.ஆ. 1ஆம் நூற்றாண்டு முதல் பொ.ஆ. 3ஆம் நூற்றாண்டு வரை இவ்வாட்சிப் பிரிவு இருந்துள்ளது.

பானமைக்கும் மாணிக்க கங்கைக்கும் இடையில் மொத்தமாக 18 மலைகள் புராதன வரலாற்றுடன் தொடர்புபட்டுக் காணப்படுகின்றன. இவற்றில் ஓர் இராஜதானிக்குரிய புராதன இடிபாடுகளையும் அதிகமான கல்வெட்டாதாரங்களையும் கொண்ட மூன்று மலைகள் உள்ளன. ஒன்று குடும்பிமலை. ஏனையவை நாகபர்வத மலை, சிதுல்பவ்வ மலை ஆகியன வாகும். இவற்றில் குடும்பி மலை பற்றி சி. கணபதிப்பிள்ளை குறிப்பிட்டுள்ளார். அதேவேளை நாகபர்வத மலை, சிதுல்பவ்வ மலை போன்றவற்றுடன் உன்னரசுகிரி இராஜதானிக்குரிய தொடர்பை யாரும் குறிப்பிடவில்லை. ஓர் இராஜதானிக்குரிய அமைப்புடன் காணப்படும் நாகமலை, உன்னரசுகிரி ஆட்சிப் பிரிவின் ஓர் முக்கிய பகுதியாக விளங்கியிருக்க வேண்டும் என்பது மட்டும் உறுதியாகத் தெரிகிறது.

## விஷ்ணு கோயில் - பெரிய நீலாவணை

கல்முனை நகரின் வடக்குப் பக்கத்தில் 4 கி.மீ. தூரத்தில் அம்பாறை மாவட்டத்தின் எல்லையில் நீலாவணை எனும் பழம்பெரும் சைவத் தமிழ்க் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமம் பெரிய நீலாவணை, துறை நீலாவணை என இரு பகுதிகளாக உள்ளது. பிரதான வீதியின் இரு மருங்கிலும் உள்ள பகுதி பெரிய நீலாவணை என்றும், பிரதான வீதியின் மேற்கு நோக்கி மட்டக்களப்பு வாவிக்கரையை ஒட்டிய பகுதி துறைநீலாவணை எனவும் அழைக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெரிய நீலாவணை விஷ்ணு கோயில்

## 600ஆண்டுகள் பழைமை வாய்ந்த ஆலயம்

அம்பாறை - மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக்கருகில் அமைந்துள்ள பெரிய நீலாவணையில் புராதன விஷ்ணு ஆலயம் உள்ளது. சுமார் 600 ஆண்டுகள் தொன்மை வாய்ந்த இவ்வாலயம் பொ.ஆ. 1414ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. பொ.ஆ. 1414ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து இலங்கை வந்து கிழக்கிலங்கையின் துறைமுகமான 'கந்தபாணந்துறை' எனும் திருக் கோயிலில் இறங்கிய தாதன், கவுத்தன் எனும் இரு முனிவர்களே இவ்வாலயம் உருவாகக் காரணமாக இருந்தவர்கள் ஆவர். தாதன் முனிவர் திரௌபதி, விஷ்ணு, பஞ்ச பாண்டவர்கள் ஆகியோரின் விக்கிரகங்கள் அடங்கிய பேழையுடனும், கவுத்தன் முனிவர் மகா விஷ்ணு, பேச்சியம்மன் போன்ற விக்கிரகங்கள் அடங்கிய பேழையுடனும் இப்பகுதிக்கு வந்தனர் தாதன் 'பாண்டூர்' என்றழைக்கப்பட்ட பாண்டிருப்பிலும், கவுத்தன் நீலாவணையிலும் தங்கினர். கவுத்தன் முனிவர் தான் கொண்டு வந்த மகா விஷ்ணு, பேச்சியம்மன் மூல விக்கிரகங்களை ஓர் மரத்தின் கீழ் பிரதிஷ்டை செய்து பூஜைகள் செய்து வந்தார். இதைக் கண்ட இவ்வூர் மக்களும் விஷ்ணுவைப் பூஜித்ததோடு கொத்துப் பந்தலிட்டு இங்கோர் சிறிய ஆலயம் அமைக்க கவுத்தன் முனிவருக்கு உதவியாக இருந்தனர். பின்பு கவுத்தன் முனிவராலும் கிராம மக்களினாலும் பராமரிக்கப்பட்டு வந்த இவ்வாலயம் சில காலத்தின் பின் கவுத்தன் இறந்து போகவே பராமரிப்பின்றிக் கிடந்தது. காலப்போக்கில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சிறிய ஆலயம் சிதைந்து போய் விக்கிரகங்களும் மண்ணில் புதையுண்டு விட்டன.

## மீண்டும் புத்துயிர் பெற்ற ஆலயம்

சில காலத்தின் பின் இந்தியாவிலிருந்து இப்பகுதிக்கு வந்த காசிப் பிராமணர் எனும் பக்தர் சிதைந்து போயிருந்த இவ்வாலயத்தைக் கண்டதுடன் மண்ணுள் புதையுண்டு கிடந்த மூல விக்கிரகங்களையும் கண்டுபிடித்தார். இதே இடத்தில் மீண்டும் ஓர் ஆலயத்தைக் கட்டியெழுப்பி அங்கு தான் கண்டெடுத்த விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்து, நன்கு பராமரித்து வந்தார். இக்கிராம மக்களும் மீண்டும் கட்டப்பட்ட இவ்வாலய பராமரிப்புக்கு பேருதவியாக இருந்தனர்.

பெரிய நீலாவணைக் கிராமத்தின் தெற்கில் 2கி.மீ. தொலைவில் பாண்டிருப்பு கிராமம் அமைந்துள்ளது. பெரிய நீலாவணை மகாவிஷ்ணு ஆலயத்தின் ஆரம்பகர்த்தாவான கவுத்தன் முனிவருடன் வந்த தாதன் முனிவரால் ஸ்தா பிக்கப்பட்ட திரௌபதி அம்மன் பஞ்சவாண்டவர் ஆலயம் இங்கு அமைக்கப்பட்டுள்ளது. அன்று இப்பகுதியை ஆட்சி செய்த எதிர்மன்ன சிங்கனால் திரௌபதி அம்மன் ஆலயத்தின் திருப்பணிகள் மேற்கொள்ளப் பட்டன. இதே காலப்பகுதியில் பெரிய நீலாவணை மகாவிஷ்ணு ஆலயமும் இம்மன்னனின் போஷிப்பைப் பெற்றிருக்க வேண்டும் என கூறப்படுகிறது. மகா விஷ்ணு ஆலயத்தின் தொன்மை பற்றி பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலய வரலாறும் உறுதிப்படுத்துகிறது.




*புராதன கருவறை கோமுகி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயத்தின் தொன்மையை பறைசாற்றும் புராதன சின்னங்கள்

கிழக்கு நோக்கி அமைக்கப்பட்டிருக்கும் இவ்வாலயத்தில் பல புராதன சின்னங்கள் காணப்படுகின்றன. ஆலயத்தின் பிரதான வாசலில் கல்லினால் செதுக்கப்பட்ட இரு நீண்ட படிக்கற்களும், கருவறைக்குப் பின் பக்கமாக உள்ள சிற்பங்கள் செதுக்கப்பட்ட கற்பீடமும், பிள்ளையார் பரிவாரக் கோயிலின் கோமுகியும், வடக்குப் பக்கத்தில் உள்ள புராதன கிணறும், ஆலய வளவில் ஆங்காங்கே காணப்படும் கற்றூண்களும், கருவறையின் வலது பக்கமுள்ள கோமுகியும் இவ் ஆலயத்தின் தொன்மையைப் பறை சாற்றும் சான்றுகளாக உள்ளன. இவ்வாலயத்தின் அர்த்த மண்டபத்தின் வாசலில் உள்ள மரத்தினால் வெதுக்கப்பட்டுள்ள கதவும் பழமை வாய்ந்த சின்னமாகும். இக்கதவு நிலையின் மேல் பக்கம் ஓர் சாசனம் பொறிக்கப் பட்டுள்ளது. இதில் கதவு நிலை அமைக்கப்பட்ட காலமும் அமைத்தவரின் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கதவில் பல சிற்பங்கள் செதுக்கப் பட்டுள்ளன. ஆலயத்தின் கருவறையின் பின்பக்கம் ஓர் பழைமை வாய்த எட்டுப்பட்டை லிங்கக்கல் காணப்படுகிறது. இது கற்பூரம் கொழுத்தப் பயன்படுத்தப்படுகிறது.




*மிகப்பண்டைய சிவலிங்கம்*

இவற்றோடு தாமிரத்தில் செய்யப்பட்ட பேச்சியம்மன், மாரியம்மன் படிமங்களும் 21 சின்னங்கள் அடங்கிய பண்டைய பேழையும் கருங் கல்லினால் செதுக்கப்பட்ட பலிபீடம், போன்றவையும் இவ்வாலயத்தின் புராதன சின்னங்களாகும். இவை யாவற்றையும் பேணிப் பாதுகாக்க வேண்டியது இந்துக்களின் கடமையாகும். இவ்வாலய வளாகத்தின் வெளியே பேச்சியம்மன் ஆலயமும் பல பரிவாரக் கோட்டங்களும் அமைக்கப்பட்டுள்ளன. பொ.ஆ. 15ஆம் நூற்றாண்டில் கவுத்தன் முனிவரால் இவ்வாலயத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிவந்தமாக வழங்கப்பட்ட 6 ஏக்கர் நெற்காணி 'அமுது இலவசம்' என்ற பெயரில் ஆலயத்தின் பின்புறம் காணப்படுகிறது.



சாசனம் பொறிக்கப்பட்ட மரக்கதவு.

## சங்கமன்கண்டி சிவாலயம்

திருக்கோயிலிலிருந்து 13 கி.மீ. தூரத்தில் சங்கமன்கண்டி அமைந்துள்ளது. மிகப் புராதன காலத்தில் தென்கிழக்கிலங்கையில் வாழ்ந்து வந்த பூர்வீகக் குடிகளான நாகர் குலத்தவர்களின் இராஜதானியாக சங்கமன்கண்டி விளங்கி யுள்ளது. முன்பு 'கண்டி' என்பது ஒரு அரசின் தலைநகரைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தில் பல செப்பேடு களில் கண்டி என்னும் சொல் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போதைய கண்டி என்னும் நகரம் பொ.ஆ. 1540இல் உருவானது. அன்று சங்குமன் எனும் நாகர்குல சிற்றரசனால் ஆளப்பட்ட இராஜதானியின் தலைநகரமாதலால் சங்குமன் கண்டி என்ற பெயரைப் பெற்றது.



சங்கமன் கண்டி மலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கமன் கண்டி மலையும், சிவவழிபாடும்

இன்று கதிர்காம யாத்திரை செல்வோரும் ஏனையோரும் வணங்கிச் செல்லும் சங்கமன் கண்டி பிள்ளையார் கோயில் பிரதான வீதியோரமாக அமைந்துள்ளது. இவ்விடத்திலிருந்து மேற்கு நோக்கி சுமார் 500மீற்றர் தொலைவில் சங்கமன் கண்டி காட்டுப் பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலின் முன்பக்கம் ஓர் மலைப்பகுதி உள்ளது. இம்மலையில் புராதன சிவாலயத்தின் இடிபாடுகள் காணப்படுகின்றன. கட்டிட இடிபாடுகள், கற் தூண்கள், செங்கற்கள், அத்திவாரங்கள், மட்பாண்டத் துண்டுகள் போன்ற வற்றைக் காணக்கூடியதாக உள்ளது. அத்துடன் இங்கு சிவாலயச் சின்னங் களும் காணப்படுகின்றன.

இங்கு உள்ள வில்வமரத்தின் கீழ் இருக்கும் ஓர் பீடத்தில் ஆவுடையார் அற்ற லிங்கம் போன்ற உருவங்கள் மூன்று காணப்படுகின்றன. இவை இங்கு அமைக்கப்பட்டிருந்த சிவாலயத்தின் எச்சங்களாகக் கருதப்படுகின்றன. பொ.ஆ. 12ஆம் நூற்றாண்டின் குளக்கோட்டன் காலத்தில் கோணேஸ்வரப் பெருமானின் எல்லைப் பூமியாக மேற்கே முனீஸ்வரத்திலும் வடக்கே கரம்பகத்திலும், கிழக்கே வங்கக் கடலோரத்திலும் தெற்கே சங்கமன் கண்டியிலும் சூலங்கள் நாட்டப்பட்டிருந்ததாக கோணேசர் கல்வெட்டு கூறுகிறது. இதன்படி மேற்கிலும் வடக்கிலும் சூலம் நாட்டப்பட்டிருந்த இடங்களில் சிவாலயங்கள் அமைந்திருந்தது போல தெற்கிலும் சூலம் நாட்டப்பட்டிருந்த இடமான சங்கமன் கண்டியிலும் சிவாலயம் அமைந்திருக் கலாம் என உறுதியாக நம்ப இடமுண்டு. இவ்வாலயமும் குளக்கோட்டு மன்னன் காலத்தில் சிறப்புற்று விளங்கியிருக்கலாம் என நம்பப்படுகிறது.



*லிங்கக்கல்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புராதன லிங்கக் கற்கள்

லிங்க வடிவமுள்ள இம்மூன்று விக்கிரகங்களும் இவ்வூர் மக்களால் பிள்ளையார் என நினைத்தே வழிபாடு நடத்தப்படுகின்றன. இது சங்கமன் கண்டிக் காட்டுப்பிள்ளையார் என தற்போது வழங்கப்படுகிறது. இப்புராதன சிவாலயம் இருந்த இடத்தைச் சுற்றி மரங்கள் வளர்ந்து அடர்ந்த காடாகக் காட்சி தருகிறது. இக்காட்டில் வசிக்கும் காட்டு விலங்குகள் இப்பகுதிக்கு வந்து செல்வதாகவும் கூறப்படுகிறது. சில சமயங்களில் இங்கு வரும் யானைகள் இந்த லிங்கங்களை புரட்டி உருட்டி பக்கத்திலுள்ள குளத்தில் போட்டு விடுமாம். பின் அங்கு செல்லும் பக்தர்கள் லிங்கங்களைத் தேடிப் பிடித்து வில்வமரத்தின் கீழ் வைத்து பூஜித்துச் செல்வார்களாம்.

ஆலயத்தின் கிழக்கில் உள்ள மலையில் நீர்ச்சுனையொன்று உள்ளது. அல்லிப் பூக்கள் நிறைந்து காணப்படும் இது அன்று இங்கிருந்த கோயிலுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கலாம். மேற்குப் புறத்தில் உள்ள மலையில் ஒரு குகை காணப்படுகிறது. இதுவே துவட்டா முனிவர் குகைக் கோயிலாக இருக்க வேண்டும் என நம்பப்படுகிறது. சங்கமன் கண்டி மலையில் இருந்தது முருகன் கோயில் எனவும் வரலாறுகள் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. இன்று வீதியோரத்தில் பிள்ளையார் கோயில் மட்டுமல்லாது முருகன் கோயிலும் கட்டப்பட்டுள்ளது. அத்துடன் மலை அடிவாரத்தில் பிள்ளையார் கோயில் அமைக்கப்பட்டு பிரதான வீதியிலுள்ள பிள்ளையார் கோயிலிலிருந்து மலைக்கோயில் வரை பாதையும் போடப்பட்டுள்ளது.




*10 பட்டை சிவலிங்கம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கமன் கண்டி அரண்மனை இடிபாடுகள்

இங்கிருந்து சுமார் ஒரு மைல் தொலைவில் அழிந்துபோன நிலையில் ஓர் அரண்மனையின் இடிபாடுகள் காணப்படுகின்றன. சோழர் காலத்தில் அவர்களின் பிரதிநிதிகளான கதிர்சுதன், மதிசுதன் ஆகியோரின் அரச மாளிகையே இதுவெனக் கூறப்படுகிறது. பொ.ஆ. 11 ஆம் நூற்றாண்டில் சோழர் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் அவர்களது தெற்கெல்லையாக மாணிக்க கங்கை விளங்கியுள்ளது. இக்காலப்பகுதியில் சோழரின் பிரதிநிதியாக கதிர்சுதன் எனும் சிற்றரசன் ஆட்சி செய்து வந்தான். பொ.ஆ. 1013 ஆம் ஆண்டளவில் மட்டக்களப்பு தமிழகத்தை உன்னரசுகிரி, மட்டக்களப்பு, மண்முனை ஆகிய மூன்று ஆட்சிப்பிரிவுகளாக பிரித்து பரிபாலனம் செய்து வந்த கதிர்சுதன் காலத்தில் பல சைவ ஆலயங்கள் புனரமைக்கப்பட்டதாக வரலாறு கூறுகிறது. இவனுக்குப் பின் வந்த மதிசுதனும் சைவ ஆலயங்கள் பலவற்றை புனரமைத்தான். போரதீவு சித்திரவேலாயுதசுவாமி கோயில், மண்டூர் முருகன் கோயில் போன்றவை இவனது திருப்பணிகளுக்குட்பட்ட ஆலயங்களாகும்.




*அரண்மனை இடிபாடுகள்*

சோழர் ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்ட சங்கமன் கண்டி அரச மாளிகை, அவர்களுக்கெதிராக போர் தொடுத்த முதலாம் விஜயபாகுவினால் கைப்பற்றப்பட்டதாகவும் இம்மாளிகையை மேலும் பலப்படுத்திய விஜயபாகு சிலகாலம் இங்கு பாசறையமைத்து தங்கியிருந்தே சோழர்களில் பலம் வாய்ந்த சாகாமம் எனும் படை முகாமைக் கைப்பற்றியதாகவும் கூறப்படுகிறது.மேலும், இப்பகுதியில் பல சிறிய குளங்களும் ஏரிகளும் அமைக்கப்பட்டதாகவும் திருக்கோயில் திருப்பணிக்காக சங்கமன்கண்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் தாடகிரி என்னும் சாகாமம் வரை 24 ஏரிகள் ஒன்றிணைக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது. மக்களால் கைவிடப்பட்ட இவ்வேரிகள் அடர்ந்த காட்டின் மத்தியில் ஆங்காங்கே காணப்படுகின்றன.



சங்கமன் கண்டி சிவன்மலை

இவ்வரலாற்று ஆதாரங்கள் மூலம் தொடர்ச்சியான நாகரீகம் நிலவியிருந்த ஒரு புராதன நகரம் சங்கமன் கண்டி என அறியக்கூடியதாக உள்ளது. பொ.ஆ. 9 ஆம் நூற்றாண்டு முதல் 12 ஆம் நூற்றாண்டு வரை இப்பகுதி உன்னத நிலையிலிருந்ததாகவும், இக்காலப்பகுதியில் சங்கமன் கண்டி மலை மீதிருந்த சிவாலயமும் சிறப்புற்று விளங்கியிருந்ததாகவும் கூறப்படுகிறது.



நாகக்கல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## கண்ணகி அம்மன் கோயில் - காரைதீவு

காரைதீவில் அம்பாறைக்குத் திரும்புச் சந்திக்கு சற்று முன்பாக பாதையின் கிழக்குப் பக்கத்தில் கண்ணகி அம்மன் கோயில் அமைந்துள்ளது.

### காளி தேசம் எனும் இராஜதானியின் ஓர் பகுதி

பொ.ஆ.மு. 5 ஆம் நூற்றாண்டில் விஜயன் இலங்கைக்கு வருவதற்கு முன்னதாக இப் பகுதி நாகரின் செல்வாக்குப் பெற்று விளங்கியது. இக்காலப்பகுதியில் அயோத்தியின் ரகுவம்சத்தைச் சேர்ந்த காளிசேனன் என்பவன் படை திரட்டி வந்து நாகர்களையும், இயக்கர்களையும் வென்று காளிதேசம் என்னும் இராஜதானியை அமைத்து ஆண்டு வந்ததாக மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. இக்காளிதேசம் இன்றைய காரைதீவு, மாளிகைக்காடு, நிந்தவூர், அட்டப்பள்ளம், சிங்காரத்தோப்பு ஆகிய ஊர்களை உள்ளடக்கிய பகுதியாக இருந்தது. காரைதீவின் வடக்கில் ஒரு கி.மீ. தூரத்திலுள்ள 'மாளிகைக்காடு' என்னுமிடத்தில் புராதன அரசமாளிகை கட்டப்பட்டிருந்தது. இதன் காரணமாக இவ்விடம் மாளிகைக்காடு என்ற பெயர் பெற்றது.

காளிசேனனின் பின்பு இப்பகுதிக்கு நகர்வலம் வந்த கூத்திக மன்னனும் காளிதேசத்தை உள்ளடக்கிய தனது இராஜதானியை வைத்திருந்தான் எனவும், அன்று முதல் ஒல்லாந்தர் காலம் வரை காளி தேசத்தின் பெருமையும் பெயரும் நீடித்திருந்ததாகவும் மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. 1807ஆம் ஆண்டில் ஒல்லாந்தர் மட்டக்களப்பை நிர்வாகம் செய்த வேளை போர்த்துக்கேயப் பிரதிநிதி ஒருவன் காளிதேசத்தில் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்ததாக ஒல்லாந்தரின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



காரைதீவு கண்ணகி அம்மன் கோயில் பஞ்சதள இராஜகோபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரைதீவு எனும் பெயரை உருவாக்கிய கரைச்சி களப்பு

இப்பகுதிக்கு காரைதீவு எனும் பெயர் வழங்கப்பட்டு வருவதற்கு இங்குள்ள கரைச்சி களப்பு காரணமாக உள்ளது. இக்களப்பு தெற்குப் பகுதியில் காரை தீவையும், நிந்தவூரையும் பிரிக்கும் வெட்டு வாய்க்கால் அருகில் கடலுடன் இணைகிறது. வடக்குப் பகுதி இன்றைய சாய்ந்த மருது பகுதியில் உள்ள மாவடி வீதிவரை நீண்டு சென்று கடலில் கலக்கிறது. இதன் மூலம் நான்கு பக்கங்களும் நீரினால் சூழப்பட்டுள்ள இப்பகுதி ஒரு தீவாக உருவாகி இருந்தமையால் இது காரைதீவு என அழைக்கப்பட்டது.

வடக்கு, தெற்காக சுமார் 4 கி.மீ. நீளமும், கிழக்கு மேற்காக 800 மீற்றர் அகலமும் கொண்ட ஓர் ஒடுங்கிய நீண்ட நிலப்பரப்பே காரைதீவு எனும் பெயர் வரக் காரணமாக இருந்தது. இந்நிலப்பரப்பின் வடபகுதி மாளிகைக் காடு, சாய்ந்தமருது ஆகிய பிரதேசங்களையும் தென்பகுதி காரைதீவையும், உள்ளடக்கியதாக இன்று காணப்படுகிறது. ஆங்கிலேயர் காலத்தில் எழுதப்பட்ட ஓர் நூலில் மட்டக்களப்பு வாவியின் தென் எல்லையாக காரைதீவை குறிப்பிட்டுள்ளதுடன் காரைதீவில் உள்ள கரைச்சி களப்பின் தேசப்படமும் குறிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது.


## வெடியரசன் விஷ்ணு புத்திரன் காலத்தில் தோற்றம் பெற்ற வழிபாடு

பொ.ஆ. 2ஆம் நூற்றாண்டில் வெடியரசன் விஷ்ணுபுத்திரன் காலத்தில் மட்டக்களப்புப் பிரதேசத்தில் கண்ணகி வழிபாடு பரவியதாகக் கூறப்படுகிறது. இக்காலப் பகுதியிலேயே கஜபாகு மன்னன் மூலம் இலங்கையின் வடபகுதி யான நாகதீபத்திற்கு கண்ணகி வழிபாடு கொண்டுவரப்பட்டதாக ஐதீகம்.

இங்கிருக்கும் கண்ணகி சிலையின் ஆரம்ப காலம் பற்றி ஓர் வரலாறும் கூறப்படுகிறது. சுமார் 500 வருடங்களுக்கு முன்பு மதுரையிலிருந்து கதிர்காம யாத்திரைக்காக வந்த ஒரு தாயும், மகளும் தம்முடன் ஒரு கண்ணகியம்மன் சிலையையும் கொண்டு வந்ததாகவும், இவர்கள் காரைதீவில் ஓர் மரத்தின் கீழ் தமது பொருட்களை வைத்துவிட்டு தாம் கொண்டு வந்த சிலையை இவ்விடத்தில் வைத்து பூஜை செய்த வேளையில், அட்டப்பள்ளம் சிங்காரத் தோப்பிலிருந்து இப்பகுதியை ஆண்டு வந்த வன்னிய குல சிற்றரசன் இவ்வம்மனின் மகிமை கண்டு அங்கேயே கண்ணகி அம்மனுக்கு ஆலயம் அமைத்ததாகவும் ஆலய வரலாறு கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இதன்பின் இப்பகுதியை ஆண்ட கங்கன் எனும் வன்னிய சிற்றரசனின் நேர்த்திக்கடனாக இவ்வாலயத்திற்கு 101 ஏக்கர் காணியை மானியமாக கொடுத்ததாகவும், இக்காணிகள் உள்ள பகுதியே 'கங்கன் வெளி' என அழைக்கப்படுவதாகவும் தெரியவருகிறது.



கல் உரல்கள்

## காரேறு மூதூர் எனும் காரைதீவு

சுமார் 500 வருடங்களுக்கு மேற்பட்ட பாரம்பரியத்தை கொண்டுள்ள இக்கோயில், இப்பகுதி 'காரேறு மூதூர்' என வழங்கப்பெற்று வந்த காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டதாக வரலாறு கூறுகிறது. காரேறு மூதூர் என்ற பெயரே திரிபடைந்து இன்று காரைதீவு என அழைக்கப்படுகிறது. மிகவும் பழைமை வாய்ந்த வேம்பு மரம் இவ்வாலயத்தின் தலவிருட்சமாகும்.



கஜலட்சுமி சிற்பம் பொறிக்கப்பட்ட பீடக்கல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண இராச்சியம் உன்னத நிலையிலிருந்த பொ.ஆ. 1370ஆம் ஆண்டளவில் இவ்வாலயம் தோன்றியதாகவும் கூறப்படுகிறது. யாழ்ப்பாண இராச்சியத்தின் சிங்கை சேகராசசேகரம் ஜெய வீரசிங்கம் எனும் (பொ.ஆ. 1370 - 1417) மன்னனால் கண்ணகி வழக்குரை காவியம் இயற்றப்பட்டது. இக்காவியம் எழுதப்பட்ட ஏடு இவ்வாலயத்தில் இன்றும் உள்ளது. (துரியோட்டு காதை: செய்யுள் 151, 152).

## ஆலயத்தின் புராதன தொல்பொருட் சின்னங்கள்

இவ்வாலயத்தின் தொன்மைக்குச் சான்றாக விளங்கும் சில புராதனச் சின்னங்கள் சில ஆலய வளாகத்தில் காணப்படுகின்றன. வடக்கு நோக்கி அமைக்கப்பட்டிருக்கும் ஆலயத்தின் பிரதான வாசலின் முன்பாக கஜலட்சுமி சிற்பம் செதுக்கப்பட்ட பீடக்கல்லொன்றின் மேல்பாகமும், பெரிய குதைக்குழிக் கல்லும், கருவறைக்கருகில் காணப்படும் இரண்டு கல் உரல்களும், கற்றூணொன்றும் இவ்வாலயத்தின் ஆரம்பகால எச்சங்களாகும். ஆலயத்தின் அர்த்த மண்டபத்தின் கிழக்கு நோக்கிய வாசலில் உள்ள மரத்தினால் அமைக்கப்பட்ட அழகிய சிற்பங்கள் செதுக்கப்பட்ட கதவு நிலையும் ஓர் பண்டைய சின்னமாகும். இங்குள்ள கல் உரல்கள் இரண்டும் எங்கும் காணக்கிடைக்காத அரிய பொக்கிஷங்களாகும்.




*வெள்ளைக்கல் விநாயகர் சிலை*

இவற்றைத்தவிர கல் கதவு நிலையின் ஓர் தூணும், இரண்டு அரைப்புக் கற்களும் இங்கு காணப்படும் புராதன சின்னங்களாகும். இவை எல்லா வற்றையும் விட மிகப்புராதனமானதும், முக்கியமானதுமான மூன்று அரிய தொல்பொருட் சின்னங்கள் இவ்வாலயத்தில் உள்ளன. அவை ஐம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னினால் ஆன கண்ணகி அம்மன் சிலை, வெள்ளைக்கல் பிள்ளையார் சிலை, ஓர் புடைப்புச் சிற்பம் ஆகியவையே. அம்மன் சிலையும், பிள்ளையார் சிலையும் பழைய ஆலயத்திலும், புடைப்புச் சிற்பம் பழமை வாய்ந்த தலவிருட்சமான வேம்பு மரத்தின் கீழும் காணப்படுகின்றன இங்கிருந்த ஐம்பொன் அம்மன் சிலை 1985 ஆம் ஆண்டு கலவரத்தின் போது நாசகாரர் களால் வெட்டி எடுக்கப்பட்டுள்ளது. அம்மன் சிலையின் பாதங்கள் மட்டுமே எஞ்சியுள்ளன. இச்சிலையை பெயர்த்து எடுக்க முடியாத நிலையில் நாசகாரர்கள் கால்வரை வெட்டி எடுத்துள்ளனர். இந்த நாசகார வேலையைச் செய்தவர்கள் யாரும் தற்போது உயிருடன் இல்லை என மக்கள் கூறுகின்றனர். 1985 ஆம் ஆண்டு இவ்வாலயம் முற்றாக அழிக்கப்பட்டதோடு, இதன் பண்டைய ஏட்டுச்சுவடிகள் மற்றும் 500 வருட பழமை வாயந்த ஆலயச் சின்னங்கள், மற்றும் பண்டைய பாத்திரங்கள் யாவும் அழிக்கப்பட்டன. இவ்வாலயம் அண்மையில் 5 தள ராஜகோபுரத்துடன் புதுப்பொலிவு பெற்று காட்சியளிக்கிறது. அம்பாறை மாவட்டத்தில் 5 தள இராஜகோபுரம் முதன் முதல் கட்டப்பட்ட ஆலயம் என்ற பெருமையை காரைதீவு கண்ணகி அம்மன் ஆலயம் பெற்றுள்ளது.




*மிகப்புராதன புடைப்புச் சிற்பம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடத்தடி மீனாட்சியம்மன் கோயில்

கல்முனையிலிருந்து அக்கரைப்பற்று செல்லும் வீதியில் உள்ள அட்டப்பள்ளத் திற்கும் திராய்க் கேணிக்கும் இடையில் பிரதான வீதியின் மேற்குப் பக்கத்தில் பரந்த வயல்வெளி காணப்படுகிறது. இவ்வயல்வெளியின் மத்தியில், பிரதான வீதியிலிருந்து சுமார் 100 மீற்றர் தூரத்தில் ஓர் அழகிய தென்னஞ்சோலை உள்ளது. இச்சோலையின் மத்தியில் அகன்று விரிந்த ஓர் ஆலமரத்தின் கீழ் மீனாட்சியம்மன் ஆலயம் அமைந்துள்ளது. இவ் ஆலமரமே இக்கோயிலின் தலவிருட்சமாகும்.



*மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலய வளவு*

## சிங்காரபுரி இராஜதானியின் எச்சங்கள்


கிழக்கின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த 'சிங்காரபுரி' என அழைக்கப்பட்ட தமிழ் இராசதானியின் சில எச்சங்கள் இப்பகுதியில் உள்ளன. இவ்வால யத்தின் வடகிழக்கில் சுமார் 2 கி.மீ. தூரத்தில் உள்ள அட்டப்பள்ளம் என்னுமிடத்தில் தான் சிங்காரபுரி மாளிகை அமைந்திருந்தது.

சுமார் 500 வருடங்களுக்கு முன்பு சிங்காரபுரியை இராஜதானியாக கொண்டு ஆட்சி செய்து வந்த தமிழ் மன்னனான வன்னிய இராஜசிங்கன் இப்பகுதியில் பல கோயில்களைக் கட்டியெழுப்பியதோடு மானியங்களும் வழங்கினான். அவனால் ஸ்தாபிக்கப்பட்டதே மடத்தடி மீனாட்சியம்மன் ஆலயமாகும். வன்னிய இராசசிங்கனின் மனைவியான கோதையின் அரண் மனை இருந்த இடமே 'அழகாபுரி' என அழைக்கப்பட்டது. அரசி உல்லா சமாக பவனி வந்த இடம் 'கோதையார் மேடு' என அழைக்கப்படுகிறது. இப்பகுதியிலுள்ள கிணறுகள், மடங்கள், சுமை தாங்கிகள் போன்றவற்றையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னன் எழுப்பியிருந்தான். இன்றும் 'சுமைதாங்கியடி' எனும் இடம் இங்கு உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரசனுக்குரிய மாட்டுப்பட்டி கறவை மாடுகளும் ஆடுகளும் மேய்ந்த நிலப்பகுதி 'மாட்டுப்பளை' என அழைக்கப்பட்டது. இன்றும் அவ்வாறே அழைக்கப்படுகின்றது. மன்னனது பாசறை, படையணிகள் நிறுவப்பட்ட இடம் 'செங்கண்படை' என்றழைக்கப்பட்டது. தற்போது அது மருவி 'செ ங்கட் படை' என அழைக்கப்படுகிறது. வழக்குகளை விசாரணை செய்வதற்கான நீதிமன்றம் அமைந்திருந்த இடம் தற்போது 'சங்கிருத்தார் காடு' எனவும் 'துரையிட கா' எனவும் அழைக்கப்படுகிறது.



*புராதன தலவிருட்சம்- ஆலமரம்*


## காளியோடையும், தட்டான்புட்டியும்

இங்கிருந்த காளி கோயில்களுக்கருகில் ஓடும் ஓடை 'காளியோடை' என்று அழைக்கப்பட்டது. தற்போது இது களியோடை என அழைக்கப்படுகிறது. கோயில்களுக்கான விக்கிரகங்கள் மற்றும் அரச குடும்பத்தினருக்கான ஆபரணங்களை செய்து கொடுத்த தட்டானுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட பகுதி 'தட்டான் புட்டி' என அழைக்கப்படுகிறது.

இங்கிருந்த பறையர் இனத்தவருக்கு வழங்கப்பட்ட பகுதி 'பறையர் வெளி' என அழைக்கப்டுகிறது. இவை தவிர அரசியின் பார்வை மீளப் பெற்றமைக்காக காரைதீவு கண்ணகியம்மன் ஆலயத்திற்கு வன்னியராச சிங்கன் 101 ஏக்கர் நிலப்பரப்பை வழங்கினான். இப்பகுதி தற்போது 'கங்கன் வெளி' என மருவி கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு சொந்தமாகவுள்ளது. இன்றும் அட்டப்பள்ளத்திலுள்ள மாரியம்மன் கோயில் சிங்காரபுரி மாரியம்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் என்றே பெயரிலேயே அழைக்கப்படுகிறது. மீனாட்சியம்மன் ஆலயமும் அரசனால் பரிபாலிக்கப்பட்டது என்பதை அம்மன் பாடல்கள் உறுதி செய்கின்றன. இப்பாடல்கள் ஏட்டுச்சுவடிகளில் எழுதப்பட்டுள்ளன.



*மீனாட்சி அம்மன் கோயில்*

## கொஞ்சம் கொஞ்சமாக அழிந்துவரும் ஆலய வளவு

இத்தனை சீரும் சிறப்பும் பெற்ற இராசதானியும், ஆலயமும் இன்று சிதைவடைந்து காணப்படுகின்றன. 1990 ஆம் ஆண்டு கலவரத்தின்போது இக்கோயிலின் பெரும்பகுதி அழிக்கப்பட்டுள்ளது. வழிபாட்டு மண்டபம் கூட உடைத்து நொறுக்கப்பட்டுள்ளது. சிறிது காலத்திற்கு முன்பு 12 ஏக்கர் நிலத்தில் அமைந்திருந்த கோயில் பகுதி தற்போது 7 ஏக்கராகக் குறைந்து விட்டது. கோயிலுக்கான நெல் வயல்களும் பிற இனத்தவரால் கைப்பற்றப்பட்டு தற்போது பயிர்ச்செய்கை பண்ணப்பட்டு வருகிறது. கோயில் காணியும் கொஞ்சம் கொஞ்சமாக அபகரிக்கப்பட்டு வருகிறது.


1990 ஆம் ஆண்டுக்கு முன்பு சோலையாக காணப்பட்ட இடம் தற்போது இல்லை. இக்கோயிலில் வெள்ளி தோறும் நடைபெறும் பூஜையைக் காண்பதற்காக திராய்க்கேணி, மல்வத்தை, வளத்தாப்பிட்டி, சம்மாந்துறை, காரைதீவு, வீரமுனை, தம்பிலுவில், கோளாவில், ஆலையடி வேம்பு, அக்கரைப்பற்று ஆகிய ஊர்களிலும் இருந்து பக்தர்கள் வந்து கலந்து பூஜைகளை சிறப்பிப்பார்கள்.

ஆலய வளவில் மட்டும் சுமார் 100 தென்னை மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. மேலும், பல தென்னைகளும் தாவரங்களும் இரசாயன எண்ணெய் ஊற்றப்பட்டு கருக்கப்பட்டுள்ளன. இக்கோயிலுக்கென பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிணறுகளும், மடங்களும், பரிவாரக் கோயில்களும் புராதன காலத்தில் அமைக்கப்பட்டிருந்தன. இவற்றின் பெரும்பகுதி அழிந்து போய்விட்டது. ஆலயத்தின் பின்பகுதியில் சில கட்டிட இடிபாடுகளும் அத்திவாரங்களும் காணப்படுகின்றன. கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து கொண்டு வரும் இப்புராதன ஆலயத்தைப் பாதுகாப்பது இந்துக்களின் கடமையாகும்.

இவ்வாலயத்தின் தலவிருட்சமாகக் காணப்படும் ஆலமரம் சுமார் 500 வருடங்கள் பழமை வாய்ந்ததாகும். அண்மையில் இம்மரத்தின் கீழிருந்த புற்றிலிருந்து சுமார் மூன்று அங்குல உயரமுள்ள நாகலிங்கம் ஒன்று கண்டெடுக்கப்பட்டது. இம்மரத்தின் கீழேயே 500 வருடங்களுக்கு முன்பு மீனாட்சி அம்மன் சிலை ஸ்தாபிக்கப்பட்டு, திறந்தவெளி மரக்கோயிலாக வழிபடப்பட்டு வந்தது.



நாகலிங்கம்

## கரவாகு ஐயானர் கோயில் - கல்முனை

கல்முனை நகரிலிருந்து காரைதீவு செல்லும் நெடுஞ்சாலையில் சுமார் 2 கி. மீ. தூரத்தில் இருந்த கரவாகு என்னுமிடத்தில் இவ்வாலயம் அமைந்திருந்தது.

### பொ.ஆ. 15 ஆம் நூற்றாண்டில் செட்டியார் குலத்தவர்களால் அமைக்கப்பட்ட ஆலயம்


பொ.ஆ. 1450-1505 காலப்பகுதியில் இவ்வாலயம் ஸ்தாபிக்கப்பட்டது. அன்று இப்பகுதியில் செறிந்து வாழ்ந்த தமிழ் மக்களின் உதவியுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னிந்தியச் செட்டிமாரால் இவ்வாலயம் அமைக்கப்பட்டு சிறப்புடன் விளங்கியது. அம்பாறை மாவட்டத்தின் பழந்தமிழ்க் கிராமங்களில் கரவாகும் ஒன்றாகும். தமிழும் சைவமும் செல்வாக்குப் பெற்றிருந்த ஊர் இதுவெனலாம். புராதன இராசதானியான காளிதேசம் மற்றும் காரேறு மூதூர் எனப்படும் காரைதீவு இங்கிருந்து தெற்கில் சுமார் 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

பொ.ஆ. 15 ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற இக்கிராமத்தின் வளர்ச்சிக்கு தென்னிந்தியாவிலிருந்து வந்து இப்பகுதியில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த செட்டிமாரே காரணமாயிருந்தனர். இவர்களின் ஆதரவுடனேயே இங்கு ஆலயங்கள் அமைக்கப்பட்டதோடு சைவசமய வளர்ச்சிப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டதாக தெரிகிறது. மட்டக்களப்பு வாவிக்கரையிலிருந்த நற்பிட்டிமுனை, கிட்டங்கி, சேனைக் குடியிருப்பு, சம்மாந்துறை, வீரமுனை போன்ற இடங்கள் முக்கிய வர்த்தக மையங்களாக விளங்கின. செட்டிமாரின் வர்த்தக சமய நடவடிக்கைகள் திருக்கோயில் வரை பரந்திருந்தது.

இச்செட்டிமாரால் பனங்காடு ஐயனார் ஆலயம் தோற்றுவிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. இக்காலகட்டத்தில் இலங்கையின் கரையோரத் துறைமுகங்களில் முஸ்லிம்கள் வர்த்தகம் புரிந்து வந்தனர். தமிழ் மொழி பேசும் இவர்களும் செட்டிமாருடன் சேர்ந்து வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்தனர். காலப்போக்கில் இவர்கள் சம்மாந்துறை, மருதூர், நற்பிட்டிமுனை ஆகிய இடங்களைச் சேர்ந்த தமிழ்ப் பெண்களை மணம் புரிந்து இப்பகுதியிலேயே குடியமர்ந்தனர்.




*கல்முனை கோட்டடி ஐயனார் கோயில்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்மாந்துறை வன்னிச் சிற்றரசர்களின் ஆதரவைப் பெற்ற ஆலயம்

இக்காலப்பகுதியில் சம்மாந்துறையில் ஆட்சி செய்து வந்த வன்னியச் சிற்றரசர்களாலும் கரவாகு ஐயனார் ஆலயம் நல்ல முறையில் பரிபாலிக்கப் பட்டு வந்ததோடு திருப்பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. இவ்வால யத்துடன் தொடர்புடைய இடமே 'சாத்தன் கேணி'யாகும். இது கரவாகு ஐயனார் ஆலயத்தின் தீர்த்தக்கேணி இருந்த இடமாகும். ஐயனாருக்கு சாத்தன் என்ற இன்னொரு பெயரும் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

பொ.ஆ. 1623 இல் கண்டியை ஆட்சி செய்த செனரதன் என்னும் மன்னர் காலத்தில் இலங்கையின் மேற்குப் பகுதியில் போர்த்துகீசர் ஆதிக்கம் மேலோங்கியிருந்தது. அங்கிருந்த முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டனர். இவர்கள் கண்டி மன்னனிடம் தஞ்சம் புகுந்த வேளை இம்மன்னன் பொ.ஆ. 1626 இல் சம்மாந்துறையில் ஆட்சி செய்த வன்னிச் சிற்றரசனின் உதவியுடன் கரவாகு, கல்முனை ஆகிய பிரதேசங்களில் முஸ்லிம் மக்களை குடியமர்த் தினான். இவர்கள் தமிழ் மக்களுடன் சேர்ந்து வாழ்ந்து வந்தனர்.



*கரவாகு ஐயனார் கோயில் கல்வெட்டு*


## நான்கு இந்துக் கோயில்கள் அமைந்திருந்த கிராமம்

இதன் பின்பும் கரவாகு கிராமத்தில் ஐயனார் ஆலயம் சிறப்புற்று விளங்கியது. ஐயனார் ஆலயத்திற்கு முன்பாக சிறிய வழிப்பிள்ளையார் ஆலயமும் தோன்றியது. இது மருதயடிப் பிள்ளையார் ஆலயம் என அழைக்கப்பட்டது. கரவாகு மக்களின் முயற்சியாலும் தென்னிந்திய செட்டிமாரின் உதவியாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பல சைவ ஆலயங்கள் தோற்றம் பெற்றன. பொ.ஆ. 1885இல் வெம்புத் தெரு சித்திவிநாயகர் கோயிலும், அதன் பின் கதிரேசப்பிள்ளையார் கோயில், விஷ்ணு கோயில் ஆகிய ஆலயங்களும் இக்கிராமத்தில் ஸ்தாபிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

கரவாகில் சுமார் 300 வருட காலம் தமிழ் மக்களுடன் முஸ்லிம் மக்களும் இணைந்து வாழ்ந்து வந்தனர். இங்கிருந்த ஆலயங்களும் சிறப்பாக பராமரிக்கப்பட்டு வந்தன. 1962 ஆம் ஆண்டு இங்கு ஏற்பட்ட மதப் பூச ல்கள் காரணமாக இனக்கலவரம் ஏற்பட்டது. இங்கிருந்த தமிழ் மக்கள் கரவாகு கிராமத்தை விட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இக்கிராமத்தின் பூர்வீககுடியினரான தமிழர்கள் தாம் இருந்த இடத்தை விட்டு வடக்கு நோக்கி பாண்டிருப்பு, சேனைக்குடியிருப்பு போன்ற இடங்களுக்கு வந்து குடியமர்ந்தனர்.



*பண்டைய ஆலயத்தின் எச்சங்கள்*

## கரவாகிலிருந்து இடம்பெயர்ந்த ஆலயங்கள்

கரவாகிலிருந்து வெளியேறிய மக்கள் தம்முடன் கரவாகு ஆலயங்களிலிருந்த விக்கிரகங்களையும் சாக்கில் கட்டி எடுத்துக்கொண்டு வந்தனர் என்றும் இதில் ஐயனார், பிள்ளையார், விஷ்ணு சிலைகளுடன் மூஷிக வாகனம், பலிபீடம் போன்றனவும் கொண்டு வரப்பட்டன என்றும் கரவாகு கிராமத்தில் வாழ்ந்து வந்த மூத்த குடிமகனான இளையதம்பி கிருஷ்ணபிள்ளை (வயது 80-2003ல்) கூறினார். இவர் கூறிய தகவல்களின் படி ஐயனார் விக்கிரகம், கல்முனை நீதிமன்றத்தின் அருகிலும் பிள்ளையார், மூஷிகம். பலிபீடம் போன்றவை பாண்டிருப்பு கடற்கரை ஓரமாகவும், விஷ்ணு விக்கிரகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிட்டங்கித் துறையடியில் வாவிக்கரை ஓரத்திலும் பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ளன.

கரவாகு மக்கள் கிராமத்தை விட்டு வெளியேறிய பின் இவர்களது குடியிருப்புகளும், இங்கிருந்த ஆலயங்களும் அழிக்கப்பட்டுள்ளன. பிரசித்தி பெற்ற ஐயனார் கோயில் தற்போதைய கல்முனை நகர மண்டபத்திலிருந்து 500 மீற்றர் தொலைவில் உள்ள அரசடி சந்தியில் அமைக்கப்பட்டிருந்தது.விஷ்ணு கோவில் தற்போதைய சாய்ந்தமருது சாஹிரா கல்லூரி மற்றும் மெதடிஸ்த மிஸன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு கிழக்குப் பக்கத்தில் பிரதான வீதியிலிருந்து ஒரு கி.மீ. தூரம் கடற்கரைப் பக்கத்தில் இரண்டு ஏக்கர் பரப்பளவுடைய வளாகத்தில் அமைந்திருந்தது.

கதிரேசப் பிள்ளையார் கோயில் சாஹிரா கல்லூரியின் எதிரில் பிரதான வீதியின் மேற்குப் பக்கத்தில் வயல் பகுதியில் அமைந்திருந்தது. தற்போது இவ்விடத்தில் வேறு கட்டிடங்கள் காணப்படுகின்றன. முன்பு இவ்வாலயம் முக்குவ வன்னிமைகளால் பராமரிக்கப்பட்டு வந்ததாக கூறப்படுகிறது. தற்போது முற்றாக அழிந்து போன தமிழர் குடியிருப்புகளும், ஆலயங்களும் அமைந்திருந்த கரவாகு கிராமம் சுமார் 6 சதுர கி.மீ. பரப்பளவில் அமைந் திருந்தது. சுமார் 500 தமிழ் சைவ குடும்பங்கள் இங்கு வாழ்ந்து வந்ததாக கிராமவாசிகள் கூறுகின்றனர்.

1961 ஆம் ஆண்டு அழிக்கப்பட்ட கரவாகு ஐயனார் ஆலயத்தின் தொடர்ச்சியாக கல்முனை கோட்டடி ஐயனார் கோயில் உருவானதாக தெரிய வருகிறது. கரவாகுப் பகுதியில் வாழ்ந்த சைவ மக்கள் அழிக்கப்பட்ட இவ்வாலய மூலமூர்த்தியுடன் வந்து கல்முனைக் கோட்டடியில் குடியமர்ந்த தோடு தாம் கொண்டு வந்த புராதன ஐயனார் சிலையை பிரதிஸ்டை செய்து கோட்டடி ஆலயத்தைக் கட்டி வணங்கி வருகின்றனர்.



புராதன கோமுகி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரவாகு ஆலயத்தின் தொல்பொருட் சின்னங்கள்

மேலும் கரவாகு ஆலயத்தின் தொல்பொருட் சின்னங்கள் சிலவும் இவ்வாலயத்தில் காணப்படுகின்றன. சிறிய வட்டக்கல், பெரிய வட்டக்கல், கல்தூணின் துண்டு மற்றும் கல்கதவு நிலையின் துண்டு ஆகியவை கரவாகு ஐயனார் ஆலயத்திலிருந்து புதிய ஐயனார் ஆலயத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. கல்கதவு நிலையின் துண்டு புதிய ஆலயத்தின் வாசல் படிக்கல்லாக பயன்படத்தப்படுகிறது. இதில் ஓர் கல்வெட்டு பொறிக்கப் பட்டுள்ளது. சில தமிழ் எழுத்துக்களும் "விபவ 1929" எனவும் இதில் பொறிக்கப்பட்டுள்ளன. இவையாவும் பாதுகாக்கப்பட வேண்டிய தொல் பொருட் சின்னமாகும்.

## பிள்ளையார் கோயில் - நிந்தவூர்

கல்முனையிலிருந்து அக்கரைப்பற்றுக்குச் செல்லும் வீதியில் உள்ள காரைதீவு சந்தியை அடுத்து நிந்தவூர் அமைந்துள்ளது. இங்கு பிரதான வீதியில் உள்ள முருகன் கோயிலின் முன்பாக கடற்கரையை நோக்கிச் செல்லும் வீதியில் சுமார் 300 மீற்றர் தொலைவில் இப்பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலின் அருகில் மாரியம்மன் கோயிலும் அமைக்கப்பட்டுள்ளது.



*நிந்தவூர் பிள்ளையார் கோயில்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பாறை மாவட்டத்தில் அதிகளவில் தொல்பொருட் சின்னங்கள் உள்ள கோயில்களில் ஒன்று.

அம்பாறை மாவட்டத்தில் அதிகளவில் பழமை வாய்ந்த தொல்பொருட் சின்னங்கள் காணப்படும் ஓரிரு ஆலயங்களில் நிந்தவூர் பிள்ளையார் ஆலயம் முக்கியத்துவம் பெறுகிறது. முதலாவதாக திருக்கோயில் முருகன் கோயிலில் அதிகமான புராதன சின்னங்கள் உள்ளன. அடுத்ததாக அதிகள விலான பண்டைய சின்னங்களை நிந்தவூர் பிள்ளையார் கோயிலில் காணக் கூடியதாக உள்ளது.

பொ.ஆ.மு. 2 ஆம் நூற்றாண்டில் இலங்கையை ஆட்சி செய்த கூத்திகன் எனும் மன்னன் இப்பகுதியில் தனது கோடை வாசல் தலத்தையும், உப நகரையும் அமைத்திருந்தான். இக்காலப்பகுதியில் தென்னிந்தியாவிலிருந்து தமிழ் மக்களை வரவழைத்து தென்கிழக்கிலங்கையில் குடியமர்த்தினான். அவ்வாறு தமிழர்கள் குடியமர்த்தப்பட்ட இடங்களில் நிந்தவூரும் ஒன்றாகும். கூத்திக மன்னனின் உபநகராக சம்மாந்துறையும், கோடை வாசல் தலமாக நிந்தவூரை அடுத்துள்ள அட்டப்பள்ளத்திலுள்ள சிங்காரபுரி என்னுமிடமும் விளங்கியுள்ளன. இதன்படி நிந்தவூர் 2200 ஆண்டுகள் பழமை வாய்ந்த தமிழ்க் கிராமமாகும். இன்று நிந்தவூரில் நாம் காணும் பழமை வாய்ந்த பிள்ளையார் ஆலயத்திற்கு முன்னோடியாக அமைக்கப்பட்ட சைவக் கோயில் கூத்திக மன்னனால் அமைக்கப்பட்டதாகும்.


## எல்லாளன் காலத்தில் சிறப்புற்று விளங்கிய நிந்தவூர் கோயில்

பொ.ஆ.மு. 145- 101 வரையான காலப்பகுதியில் இலங்கையை ஆட்சி செய்த தமிழ் மன்னன் எல்லாளன் மண்ணாலும், மரத்தாலும் அமைக்கப் பட்டிருந்த திருக்கோயில் முருகனாலயத்தை சிறிய கற்கோயிலாகக் கட்டினான். இக்காலப் பகுதியிலும் நிந்தவூர் கோயில் சிறப்புற்று விளங்கியிருக்க வேண்டும்.

கூத்திக மன்னனின் காலமான பொ.ஆ.மு. 177- 155 வரையான காலப் பகுதியிலிருந்து சோழர் காலம் வரை 18 சிற்றரசர்கள் மட்டக்களப்பு எனும் சம்மாந்துறைப் பகுதியிலிருந்து தென்கிழக்கிலங்கையை ஆட்சி செய்து வந்துள்ளனர். இக்காலகட்டத்தில் நிந்தவூர் கோயில் மிக்க செழிப்புடன் விளங்கியதாகக் குறிப்புக்கள் கூறுகின்றன. நிந்தவூரின் தென்கிழக்கில் சுமார் 10 கி.மீ. தூரத்தில் உள்ள தீகவாப்பியில் எல்லாளனின் சிற்றரசர்கள் இருவர் ஆட்சி செய்ததாகவும், துட்டகாமினியின் படைகள் இவ்விருவரையும் வெற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டதாகவும் பாளி நூல்கள் கூறுகின்றன. இத்தமிழ் சிற்றரசர்களின் ஆட்சியின் கீழ் நிந்தவூர் பகுதியும் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.



*சோழர் கால கோமுகி*

## பொ.ஆ. 10ஆம் நூற்றாண்டில் புனரமைக்கப்பட்ட ஆலயம்

மட்டக்களப்பு இராச்சியத்தை ஆட்சி செய்த 18 சிற்றரசர்களில் குணசிங்கனின் மகனான கதிர்சுதன் பொ.ஆ. 1013 இல் மட்டக்களப்பு, மண்முனை, உன்னரசுகிரி ஆகிய இராச்சியங்களில் ஆட்சி செலுத்திய காலத்தில் சிவாலயங்களையும், பௌத்த ஆலயங்களையும் புனரமைத்ததாக மட்டக் களப்பு மான்மியம் கூறுகிறது. எனவே இவனது ஆட்சிக்குட்பட்ட மட்டக் களப்பு இராச்சியத்திலிருந்த நிந்தவூர் பிள்ளையார் கோயிலும் புனரமைக்கப் பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.


பண்டைய காலம் முதல் இவ்வாலய சந்நிதியில் ஓர் அபூர்வ சம்பவம் நடந்து வந்ததாம். ஊரில் குற்றம் செய்தவர்களை விநாயகர் சந்நிதியின் முன் நிறுத்தி பிரம்படி கொடுத்து தோப்புக்கரணம் போடச் செய்வார்களாம். இவ்வழமை இன்றும் நடப்பதாக இங்கிருக்கும் முதியவர்கள் கூறுகிறார்கள்.

## சோழர் காலத்தில் கருங்கல்லினால் கட்டப்பட்ட ஆலயம்

மட்டக்களப்பு இராச்சியத்தை ஆட்சி செய்து வந்த மன்னர்களின் போஷிப்பைப் பெற்றிருந்த இவ்வாலயம் பொ.ஆ. 11 ஆம் நூற்றாண்டில் சோழர் காலத்தில் அவர்களால் திருப்பணி செய்யப்பட்டுள்ளது. இக்காலப்பகுதியில் தான் இவ்வாலயம் கருங்கல்லினால் கட்டப்பட்டுள்ளது என்பதை ஆலயத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படும் பழமை வாய்ந்த சிலைகளும் கருங்கற் தூண்களும் உறுதி செய்கின்றன.



*மாரியம்மன் கோயிலும், தல விருட்சமும்*

பொ.ஆ. 13 ஆம் நூற்றாண்டில் கிழக்கிலங்கையில் ஆலயத் திருப் பணிகளை மேற்கொண்ட கலிங்க மாகோன் காலத்திலும் இவ்வாலயம் செழிப்புற்று செல்வாக்குடன் விளங்கியுள்ளது. இக்காலகட்டத்தில் பிள்ளையார் ஆலயத்தின் அருகிலிருந்த பழம்பெரும் விருட்சத்தின் கீழ் மாரியம்மன் வழிபாடு, ஆரம்பிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

பொ.ஆ. 14 ஆம் நூற்றாண்டு முதல் நிந்தவூர், அட்டப்பள்ளம் ஆகிய பகுதிகள் வன்னிய இராசப் பிரதானிகளின் ஆட்சியின் கீழ் இருந்ததாகத் தெரிய வருகிறது. இக்காலப்பகுதியிலும் நிந்தவூர் ஆலயங்கள் வன்னிய அரசப் பிரதானிகளின் போஷிப்பைப் பெற்றிருந்தன. பொ.ஆ. 16 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் திருக்கோயில் முருகனாலயத்தை இடித் தழித்த காலத்தில் நிந்தவூர் ஆலயமும் அவர்களால் அழிக்கப்பட்டுள்ளது.

## வன்னிய அரச பிரதானிகள் கூடிய சிங்காரவத்தை

பொ.ஆ. 1747- 1781 காலப்பகுதியில் கண்டியை ஆட்சி செய்த கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் காலத்தில் மட்டக்களப்பு தமிழகத்தை ஏழு வன்னிய அரச பிரதானிகள் பரிபாலனம் செய்து வந்தனர். இவர்கள் கூடும் இடமாக சிங்காரவத்தை விளங்கியது. இது நிந்தவூரின் அருகில் உள்ளது. இக்கால கட்டத்தில் சிங்காரபுரியை இராசதானியாகக் கொண்டு ஆட்சி புரிந்த அரசப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதானியால் நிந்தவூர் பிள்ளையார் கோயில் மீண்டும் கட்டப்பட்டதாகத் தெரிய வருகிறது.

பொ.ஆ. 1800 ஆம் ஆண்டளவில் ஆங்கிலேயர் மட்டக்களப்புத் தமிழகத்தைக் கைப்பற்றிய காலப்பகுதியில் நிந்தவூர் பகுதியில் தமிழும், சைவமும் செழிப்புற்று காணப்பட்டன. இக்கால கட்டத்தில் நிந்தவூர் பிள்ளையார் கோயிலின் அருகில் இருந்த புராதன விருட்சத்தின் கீழ் மீண்டும் மாரியம்மன் வழிபாடு ஆரம்பிக்கப்பட்டதாக குறிப்புக்கள் கூறுகின்றன. இக்காலத்தில் பொறிக்கப்பட்ட கல்வெட்டொன்றும் பிள்ளையார் கோயிலில் காணப்படுகிறது.

## ஆலயங்களில் சேமிக்கப்பட்ட ஏட்டுச் சுவடிகள்

1900 ஆண்டளவில் நிந்தவூர் உட்பட, அக்கரைப்பற்று, பானமை ஆகிய பிரதேசங்களை சின்னத்தம்பி செட்டி வன்னியன் பரிபாலனம் செய்து வந்ததாகத் தெரியவருகிறது. பொ.ஆ. 13 ஆம் நூற்றாண்டிலிருந்து எழுதப்பட்ட இலக்கியங்கள் ஏட்டுச் சுவடிகளாய் நிந்தவூர், அட்டப்பள்ளம், மடத்தடி ஆகிய இடங்களிலிருந்த கோயில்களில் சேமித்து வைக்கப்பட்டன. இவற்றில் சிலவற்றை எடுத்த கணபதிப்பிள்ளை எனும் பெரியார் இவற்றை நூலாக வெளியிட்டார். இக்கால கட்டத்திலேயே நிந்தவூரில் முருகனாலயம் தோற்றம் பெற்றது.


கடந்த 1960 ஆம் ஆண்டு இப்பகுதியில் ஏற்பட்ட இனக்கலவரத்தின் போது நிந்தவூர், அட்டப்பள்ளம் கோயில்களில் இருந்த பெறுமதி வாய்ந்த ஏட்டுச் சுவடிகள் திருடப்பட்டு காணாமல் போயின. 1975 ஆம் ஆண்டு ஏற்பட்ட கலவரத்தின் போது நிந்தவூர் பிள்ளையார் ஆலயம் அழிக்கப்பட்டது. அதன் விக்கிரகங்கள் அருகிலிருந்த கிணற்றில் போடப்பட்டன. 1983 ஆம் ஆண்டு மாரியம்மன் கோயிலும், பிரதான வீதியினருகில் இருந்த முருகன் கோயிலும் அழிக்கப்பட்டது. இக்கலவரங்களின் போது நிந்தவூரில் இருந்த இந்துக்களில் பலர் இடம் பெயர்ந்தனர்.

## கிணற்றிலிருந்து மீட்கப்பட்ட புராதன விக்கிரகங்கள்

ஆலயம் நாசகாரர்களால் அழிக்கப்பட்டு பழமை வாய்ந்த பிள்ளையார் கோயிலின் கருங்கற் தூண்கள் இடிபாடுகளாய் சிதறிக் கிடந்தன. மக்கள் கிணற்றினுள் போடப்பட்டிருந்த விநாயகர் விக்கிரகத்தையும், ஏனைய சின்னங்களையும் தேடி எடுத்து கருங்கல் தூண்கள் இரண்டை நட்டு நடுவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடை அமைத்து அதில் விநாயகரை வைத்து வணங்கி வந்தனர். இவ் விநாயகர் சிலை சோழர் காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.



சோழர் கால விநாயகர் சிலை

1993 இல் பிள்ளையார் கோயில், மாரியம்மன் கோயில் ஆகியவை மீண்டும் புத்துயிர் பெற்றன. சோழர் காலத்து விநாயகர், மூஷிகம், பலிபீடம் ஆகியவற்றை பிரதிட்டை செய்யப்பட்டு புதிய ஆலயம் உருவானது. மாரியம்மன் கோயிலின் அருகில் பரிவாரக் கோயில்கள் கட்டப்பட்டன. மணிக்கோபுரமும், சுற்று மதிலும் அமைக்கப்பட்டன. பிரதான வீதி அருகில் இருந்த கந்தசுவாமி கோயிலும் சிறிய கோயிலாக புத்துயிர் பெற்றது.




புராதன மூஷிக வாகனம்

## 1000 வருட வரலாற்றைக் கூறும் தொல்பொருட் சின்னங்கள்


நிந்தவூர் விநாயகர் கோயிலின் 1000 வருட வரலாற்றைக் கூறும் ஏராளமான தொல்பொருட் சின்னங்களும், சிலைகளும் இன்றும் ஆலயத்தில் காணப் படுகின்றன. மொத்தமாக 12 புராதன கருங்கற் தூண்கள் இவ்வாலயத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளன. சில தூண்கள் 5 அடி உயரமும், சில 4 அடி உயரத்திலும் காணப் படுகின்றன. ஆலயத்தின் முன்பக்கம் இரண்டு தூண்கள் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளன. ஏனையவை ஆலயத்தின் பின்பக்கம் உள்ளன.



சதுரமான குழிக்கல்




பண்டைய ஆலயத்தின் கருங்கல் தூண்கள்

## ஆலயத்தில் காணப்படும் இரண்டு கல்வெட்டுக்கள்


இத்தூண்களில் இரண்டில் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பழமை வாய்ந்த ஓர் தூணில் சில எழுத்துக்கள் சிதைந்த நிலையில் வாசிக்க முடியாதபடி காணப்படுகின்றன. அடுத்த கல்வெட்டு பிற்காலத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. இதில் 1890 எனப் பொறிக்கப்பட்டு ஆண்டின் அருகில் திரிசூலமும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னுமோர் குறியீடும் பொறிக்கப்பட்டுள்ளன. இதன்படி இவ்வாலயம் 1890 இல் புனரமைக்கப்பட்டுள்ளமை உறுதியாகிறது.



*சிதைந்த கல்வெட்டு*



*1890 இல் பொறிக்கப்பட்ட கல்வெட்டு*


## சோழர் காலக் கருங்கற் கோமுகி

இவற்றைத் தவிர மிகப் பழமை வாய்ந்த சோழர் காலத்தைச் சேர்ந்த கற்கோமுகி ஒன்றும் ஆலயத்தின் பின்புறம் காணப்படுகிறது. மேலும் ஆலயத்தின் புராதன கல் கதவு நிலையின் ஒரு பக்கத் துண்டு முன்பக்கம் காணப்படுகிறது. இதில் இரண்டு துளைகளும், தடுப்பு விளிம்பும் செதுக்கப்பட்டுள்ளது. இது சுமார் 5 அடி உயரமானதாகும்.

ஆலய வளவில் ஓர் புராதன பீடக்கல்லும், ஓர் வட்டமான சந்தனக் கல்லும், இரண்டு கற்தூண் துண்டுகளும் ஆங்காங்கே காணப்படுகின்றன. ஆலய மண்டபத்தில் புராதன பீடத்தின் மேல் பழமை வாய்ந்த மூஷிகமும், பலிபீடமும் காணப்படுகின்றன. கருவறையில் உயரமான கற்பீடத்தில் புராதன பிள்ளையார் சிலை காணப்படுகிறது. இத்தனை ஏராளமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்பொருட் சின்னங்கள் அம்பாறை மாவட்டத்தில் திருக்கோயில் முருக னாலயத்தைத் தவிர வேறெங்கும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றை இதுவரை பாதுகாத்து வைத்திருப்பது பாராட்டத்தக்கது.



கல் கதவு நிலை

## விநாயகர் கோயில் - மல்வத்தை

அம்பாறை நகரிலிருந்து கல்முனைக்குச் செல்லும் வீதியில் 8 கி.மீ. தொலைவில் மல்வத்தை எனும் சிறிய கிராமம் அமைந்துள்ளது. இங்கு பிராதன வீதியில் விநாயகர் கோயில் அமைந்துள்ளது. மல்வத்தை கிராமம் முற்றிலும் வயல் நிலங்களால் சூழப்பட்ட சிறு மேட்டு நிலத்தில் அமைந்துள்ளது. கிராமத்தைச் சுற்றிக் காணப்படும் வயல் நிலங்களுக்கு வீரகொடை குளத்திலிருந்தும், வளத்தாப்பிட்டி குளத்திலிருந்தும் நீர் கிடைக்கிறது. காட்டு மல்லிகை மரங்கள் நிறைந்து காணப்பட்ட இப்பகுதியில் அதன் பூக்கள் பூத்துக் குலுங்கி இப் பகுதியை ஓர் பூங்காவாக உருவாக்கி இருந்தன. இதனால் இப்பகுதி மல்லிகைத் தோட்டம், மல்லிகைத்தீவு என அழைக்கப்பட்டது. இதுவே சிங்கள மொழியில் மலகவத்தை எனவும் மல்வத்தை எனவும் அழைக்கப்பட்டது. இன்று இது மல்லிகைத்தீவு, மல்வத்தை என இருவேறு கிராமங்களாகப் பிரிந்துள்ளது.

### சீர்பாததேவி காலத்தில் ஆரம்பமான விநாயகர் வழிபாடு

பொ.ஆ. 8 ஆம் நூற்றாண்டில் இங்கு மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். சீர்பாததேவியின் காலத்தில் குடியமர்த்தப்பட்ட இம்மக்களினால் மல்வத்தையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விநாயகர் வழிபாடு ஆரம்பிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. வீரமுனையில் செல்வாக்குப் பெற்றிருந்த இவ்வழிபாடு மல்வத்தை, மல்லிகைத்தீவு ஆகிய இடங்களிலும் பரவியதாகத் தெரிகிறது. வீரமுனை பிள்ளையார் ஆலயத்திற்கு மன்னனால் வழங்கப்பட்ட நெற்காணிகள் மல்வத்தை, மல்லிகைத்தீவு ஆகிய கிராமங்களைச் சுற்றிக் காணப்படுகின்றன.



மல்வத்தை விநாயகர் கோயில்

## ஆரம்ப காலத்தில் சிவவழிபாடு நிலவிய மல்வத்தை கிராமம்

சேனன், கூத்திகன், எல்லாளன் ஆகிய மன்னர்கள் காலத்தில் மல்வத்தையில் கோயில்கள் அமைக்கப்பட்டு சிறப்புற்று விளங்கியதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். எனினும் இங்கிருந்த ஆலயம் எந்த தெய்வத்திற்குரியது என்பது தெரியவில்லை. இங்கு ஆரம்ப காலத்தில் சிவவழிபாடே இருந் திருக்கும் எனக் கூறப்படுகிறது. மல்வத்தையின் மேற்குப் பக்கத்தில் சுமார் 5. கி.மீ. தொலைவில் உள்ள புத்தங்கல மலையில் சிவன் சம்பந்தமான ஓர் பிராமிக் கல்வெட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது.




மல்வத்தை பற்றி குறிப்பிடும் இராசமலைக் கல்வெட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மல்வத்தை பற்றிக் கூறும் இராசமலைக் கல்வெட்டு

பொ.ஆ. 8 ஆம் நூற்றாண்டில் மல்வத்தை பகுதி பிரசித்தி பெற்று விளங்கியமைக்கான கல்வெட்டு ஆதாரங்கள் உள்ளன. மல்வத்தையின் வடமேற்கில் சுமார் 20 கி.மீ. தொலைவில் உள்ள இராசமலை எனும் ரஜகல மலையில் காணப்படும் ஓர் கல்வெட்டில் மல்வத்தை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு பொ.ஆ. 777 - 797 காலப்பகுதியில் அனுராதபுரத்திலிருந்து ஆட்சி செய்த இரண்டாம் மகிந்தன் காலத்தில் ரோகன இராச்சியத்தின் (தென்னிலங்கை இராச்சியம்) மன்னனாக இருந்த தத்தசிவன் எனும் தமிழ் அரசனால் பொறிக்கப்பட்டதாகும். இக்காலப் பகுதியில் மல்வத்தை உட்பட கல்லோயா நதியின் வடக்குப் பக்கமும் தத்தசிவனின் ஆட்சி அதிகாரத்தில் இருந்தது. தத்தசிவன் என்ற பெயரில் பொ.ஆ. 639 முதல் 650 வரை ஓர் மன்னன் அனுராதபுரத்திலிருந்து ஆட்சி செய்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் மகிந்தன் காலத்தில் ரோகன இராச்சியத்தை ஆட்சி செய்த சிவனின் ஆட்சிப் பகுதியின் ஒரு பிரிவாக மல்வத்தையை மையமாகக் கொண்ட ஓர் பகுதி இருந்துள்ளது. இது 'மலவத்து மண்டலம்' என அழைக்கப் பட்டுள்ளது. இராசமலைக் கல்வெட்டில் 'அரித்தாரா' எனும் ஆலயத்திற்கு மன்னனால் நிவந்தமாக வழங்கப்பட்ட மூன்று ஊர்களின் பெயர்கள் பொறிக் கப்பட்டுள்ளன. இவை மாலத்தே, குளவெல்லே, மிவன்கமு ஆகிய ஊர்களாகும்.



புராதன கோமுகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொ.ஆ. 8ஆம் நூற்றாண்டில் செழிப்புற்று விளங்கிய மல்வத்தை

இதில் 'மாலத்தே' என்பது மல்வத்தை எனவும், குளவெல்லே என்பது குடுவில் எனவும், மிவன்கமு என்பது முவன்கலை எனவும் ஆய்வாளர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது. இக்கல்வெட்டின்படி பொ.ஆ. 8 ஆம் நூற்றாண்டில் மல்வத்தை செழிப்புற்று விளங்கியுள்ள ஓர் கிராமம் என்பது தெளிவாகத் தெரிகிறது. அத்துடன் இக்கிராமம் தத்தசிவன் எனும் தமிழ் சைவ மன்னனால் ஆட்சி செய்யப்பட்டிருப்பதால் இங்கிருந்த கோயில்களும் நன்கு பராமரிக்கப்பட்டு செல்வாக்கு பெற்று விளங்கியிருக்கும் என்பதில் ஐயமில்லை. மல்வத்தையில் பண்டைய மன்னர்களின் காலத்திலும், சீர்பாத தேவி காலத்திலும் அமைக்கப்பட்ட இந்துக் கோயில்கள் போர்த்துக்கேயர் காலத்தில் இடித்தழிக்கப்பட்டன. இன்று இங்கு நாம் காணும் விநாயகர் ஆலயம் சுமார் 100 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டதாகும்.



*மல்வத்தை திடல்*

## விநாயகர் கோயிலில் காணப்படும் புராதன ஆலயத்தின் தொல்பொருட் சின்னங்கள்

மல்வத்தை விநாயகர் கோயிலில் புராதன ஆலயத்தின் எச்சங்களான தொல்பொருட் சின்னங்கள் சில காணப்படுகின்றன. தற்போது நாம் காணும் ஆலயம் புதுப்பொலிவுடன் காணப்பட்டாலும் இங்கிருந்த புராதன ஆலயத்தின் சின்னங்கள் இக்கிராமத்தின் வரலாற்றுச் சான்றுகளாக விளங்குகின்றன. ஆலயத்தின் வாசலில் முன்னடிக்கல்லாகப் பயன்படுத்தப்படும் ஓர் சதுரமான கல் காணப்படுகிறது. நடுவில் வட்ட வடிவில் ஓர் குழியும் இதில் செதுக்கப்பட்டுள்ளது. புராதன ஆலயத்தின் விபூதிக் கல்லாக இது பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்ததாக ஆலயத்தின் கருவறையின் வலது பக்கம் காணப்படும் கற்கோமுகி மிகப் புராதனமானதாகக் காணப்படுகிறது. சாதாரண வடிவமைப்புடன் காணப்படும் இக்கோமுகி கருவறையுடன் இணைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டிருக்கின்றமை மெச்சத்தக்க விடயமாகும்.

### பண்டைய ஆலயம் அமைந்திருந்த திடல்

மல்வத்தையில் மிகப்பண்டைய காலத்தில் ஆலயம் அமைந்திருந்த இடம் திடல் என அழைக்கப்படுகிறது. இங்கு காலத்துக்குக் காலம் வயல் நிலங்களில் பண்டைய ஆலயத்தின் தொல்பொருள் சின்னங்கள் வெளிப்படுகின்றன. இங்கு கிடைக்கப்பெற்ற சில கற்கள் மல்வத்தை பிள்ளையார் கோயில், விளாவடி விநாயகர் கோயில், திருவள்ளுவர் புரம் பிள்ளையார் கோயில், திடல் விஷ்ணு கோவில் ஆகியவற்றில் காணப்படுகின்றன.

## நாக கோயில் - தீகவாபி

பண்டைய நகரமான தீகவாபியில் பொ.ஆ.மு. 1000 ஆண்டளவில் இலங்கையின் ஆதிக்குடிகளான நாகர் வாழ்ந்து வந்தனர். இவர்கள் காலத்தில் நாக வழிபாடு மேற்கொள்ளப்பட்ட இடங்களில் தீகவாபியும் ஒன்றாகும். தீகவாபி புனித நகரில் முதன் முதல் ஸ்தாபிக்கப்பட்டது நாக கோயிலாகும்.

புத்தபகவான் மூன்று தடவைகள் இலங்கைக்கு வந்து சென்றதாக பாளி நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. புத்தபகவான் 3வது முறை இலங்கைக்கு வந்தபோது அவர் தரிசித்த இடங்களில் தீகவாபியும் ஒன்றாகும் எனவும், தீகவாபியில் அப்போது இருந்தது நாக வழிபாடு நிலவிய ஆலயம் எனவும், பாளி நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே பொ.ஆ.மு. 6 ஆம் நூற்றாண்டில் தீகவாபியில் நாக வழிபாடு நிலவிய ஆலயம் இருந்துள்ளது என்பது பாளி நூல்கள் மூலம் தெரிய வருகிறது. நாக வழிபாட்டை அன்று முதல் இன்று வரை மேற்கொண்டவர்கள் தமிழர்களே என்பது குறிப்பிடத்தக்கது.

## விநாயகர் கோயில் - பிள்ளையார் காடு, தீகவாபி

சம்மாந்துறை நகரின் தெற்கில் உள்ள மல்கம்பிட்டி, செங்கட்படை ஆகிய கிராமங்களுக்கு அடுத்ததாக சுமார் 10 கி.மீ. தொலைவில் தீகவாபி அமைந்துள்ளது. தீகவாபியின் அருகில் பிள்ளையார் காடு என்னுமிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துள்ளது. மிகப் பண்டைய காலத்தில் இங்கு விநாயகர் வழிபாடு நிலவியுள்ளது.

## பிள்ளையார் கோயில் அமைந்திருந்த பிள்ளையார் காடு

இவ்விடத்தில் விநாயகர் கோயில் இருந்தமையால் இது பிள்ளையார் காடு எனப் பெயர் பெற்றிருந்தது. இங்கு நெல் வயல்களின் மத்தியில் இருந்த இவ்வாலயத்தின் இடிபாடுகளை சில காலத்திற்கு, முன்பு காணக்கூடியதாக இருந்தது. தற்போது இவை மண் போட்டு மூடப்பட்டு விட்டன.

இங்கிருந்த பிள்ளையார் கோயிலின் இடிபாடுகளை ஓர் பௌத்த வழிபாட்டுத் தலம் என பௌத்தர்கள் தற்போது கூறி வருவதோடு 'பிள்ளையார் காடு' எனும் பெயரை 'விஹாரகாடு' என திரிபுபடுத்தி அழைத்து வருகின்றனர். தீகவாபி பகுதியில் 2500 வருடங்களுக்கு முன்பிருந்தே பல இந்துக் கோயில்கள் அமைந்திருந்தன. இவை கூத்திக மன்னன், எல்லாளன் ஆகியோர் காலத்திலும் சோழர் காலத்திலும், அதன் பின்னரும் சிறப்புடன் விளங்கி யமைக்கான ஆதாரங்கள் பல உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொடுப்பத்தை பிள்ளையார் கோயில் - கோமாரி

பொத்துவிலிலிருந்து அக்கரைப்பற்றுக்கு செல்லும் வீதியில் 16 கி.மீ. தூரத்தில் கோமாரி எனும் கிராமம் அமைந்துள்ளது. இக் கிராமத்தின் மேற்குப் பக்கத்தில் அமைந்துள்ள கோமாரி களப்பின் வடகரையில் உள்ள சிறிய மலைப் பாறை மீது கொடுப்பத்தை பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது. பிரதான வீதியிலிருந்து சுமார் 2 கி.மீ. தூரத்தில் கிராமத்தின் வட எல்லையில் இம்மலைப் பாறை காணப்படுகிறது. தென்னிந்தியாவிலிருந்து வந்த இராஜ குமாரியின் கப்பல் உடைந்து கரை ஒதுங்கிய இடமே குமரிமுனை எனப் பெயர் பெற்று பின்பு கோமாரி என திரிபடைந்துள்ளது.

## குமரிமுனை கொடுப்பத்தை மலையில் தெய்வ வழிபாடுகள்

குமரிமுனைக் களப்பின் வடகரையில் உள்ள கொடுப்பத்தை எனும் மலைப் பாறையில் மிகப் பண்டைய காலம் முதல் விநாயகர் வழிபாடும், அம்மன் வழிபாடும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் நடந்து செல்பவர்களைப் பற்றி இழுக்கும் 'கொடு' எனும் முட்பற்றைகள் இம்மலைப் பாறைப் பகுதியில் நிறைந்து காணப்பட்டமையால் இவ்விடம் 'கொடுப்பற்றை' எனவும், பேச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கில் கொடுப்பத்தை எனவும் அழைக்கப்பட்டு வந்தது. இப்பாறையில் வைத்து வணங்கப்பட்ட விநாயகர் கொடுப்பத்தைப் பிள்ளையார் எனவும் பெயர் சூட்டி அழைக்கப்பட்டார். அடுத்தடுத்து அமைந்துள்ள இரண்டு மலைப் பாறைகளில் மக்கள் விநாயகரையும், அம்மனையும் வழிபட்டு வருகின்றனர்.



கொடுப்பத்தை மலைப்பாறை

பண்டைய காலத்தில் குமரி முனையில் வாழ்ந்த மக்கள் இம்மலைப் பாறையில் காணப்பட்ட விநாயகர் உருவமைப்பில் இருந்த ஓர் கல்லை பிள்ளையாராக உருவகப்படுத்தி மலைப்பாறையில் இருந்த இயற்கையான நீர்ச்சுனைக்கு அருகில் இருந்த ஓர் இத்தி மரத்தின் கீழ் ஸ்தாபித்து வழிபட்டு வந்தனர். அது போலவே அடுத்த மலைப் பாறையில் உள்ள ஓர் கல்லில் அமர்ந்த நிலையில் புடைப்புச் சிற்பம் போல் காணப்படும் ஓர் உருவத்தை அம்மனாக நினைத்து வழிபட்டு வந்துள்ளனர். பல்லாண்டு காலமாக இவ்வழிபாடுகள் திறந்தவெளி மலைக் கோயில் வழிபாடாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.




கோமாரி கொடுப்பத்தை பிள்ளையார் கோயிலும், கற்கனையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர்த்துக்கேயர் காலத்தில் தடைப்பட்டு மீண்டும் தழைத்த வழிபாடு

போர்த்துக்கேயர் காலத்தில் இவ்வழிபாடுகள் தடைப்பட்டுள்ளன. அதன் பின்பு சுமார் 100 வருடங்களுக்கு முன்பு இம்மலைப் பாறைக்குப் பின்பக்கமாக இருந்த சமதரை நிலங்களில் விவசாயம் செய்யச் சென்றவர்கள் மலைப்பாறை மீது கல் பிள்ளையார் சிலை இருப்பதைக் கண்டு அவ்விடத்தில் இருந்த மரத்தின் கீழ் அச்சிலையை வைத்து பூஜைகள் செய்து வழிபடத் தொடங்கினர்.



புராதன பிள்ளையார் சிலை

பின்பு அருகிலிருந்த அடுத்த மலைப் பாறையில் இருந்த ஓர் கல்லில் அம்மனின் வடிவம் இருப்பது கண்டு அங்கும் பூஜைகள் செய்து வழிபட்டு வந்தனர். பிள்ளையாரை வைத்து வணங்கிய பாறைக்கு அருகில் இருந்த கள்ளி மரத்தின் கீழ் வளர்ந்திருந்த புற்றில் நாகம் இருப்பதைக் கண்டு அங்கும் பூஜைகள் செய்து அதை நாகதம்பிரானாக நினைத்து வழிபட்டு வந்தனர்.

இவ்வாறாக மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட இப்பண்டைய வழிபாடுகளால் இன்று இவ்வாலயம் சிறப்புடன் விளங்கி வருகிறது. பிள்ளையாருக்கு கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம் ஆகியவற்றுடன் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. நாகதம்பிரான், வைரவர் ஆகிய தெய்வங்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிவாரக் கோயில்கள் அமைக்கப்பட்டு வருவதோடு, மணிக்கோபுரமும் அமைக்கப்பட்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.



*பிள்ளையார் கல்லும், கோமாரிக் களப்பும்*

## இயற்கையாகவே தெய்வ வடிவங்கள் காணப்படும் மலைப் பாறை

கொடுப்பத்தை மலைப் பாறைகளில் இயற்கையாகவே தெய்வ வடிவங்களைக் காணக்கூடியதாக உள்ளது. அம்மன் கோயில் இருக்கும் ஓர் கற்பாறையில் அம்மனின் வடிவம் இருப்பது போல விநாயகர் கோயில் அமைந்திருக்கும். பாறையின் தெற்குப் பக்கத்தில் களப்பின் ஓரமாக இருக்கும் ஓர் பாறையில் பிள்ளையாரின் யானை முகம் போன்ற வடிவம் அமைந்துள்ளமை வியக்கத் தக்கது. ஆலயத்தின் முன்பாக இயற்கையாகவே அமைந்துள்ள நீர்ச்சுனையில் நீர் நிரம்பிக் காணப்படுகிறது. இதுவே பண்டைய ஆலயத்தின் தீர்த்தமாக விளங்கியுள்ளது.




*திறந்தவெளி அம்மன் கோயில்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோரக்கர் பிள்ளையார் கோயில் - சம்மாந்துறை

காரைதீவு சந்தியிலிருந்து அம்பாறைக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் 5 கி.மீ. தூரத்திலும், அம்பாறை நகரிலிருந்து 16 கி.மீ. தூரத்திலும் சம்மாந்துறை அமைந்துள்ளது. இங்குள்ள அரசினர் வைத்தியசாலையின் பின் பக்கமாக உள்ள மட்டக்களப்புத் தரவை என்னுமிடத்தில் கோரக்கர் பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது.



கோரக்கர் பிள்ளையார் கோயில்

## கோரக்கர் சித்தர் ஸ்தாபித்த ஆலயம்

இவ்வாலயம் ஆரம்பிக்கப்பட்டது பற்றி ஓர் வரலாறு கூறப்படுகிறது. சுமார் 500 வருடங்களுக்கு முன்பு இந்தியாவிலிருந்து கதிர்காமத்திற்கு யாத்திரை செல்ல 5 சித்தர்கள் வந்ததாகவும், அதில் ஒருவரே கோரக்க சித்தர் எனவும், இவர் தற்போது பிள்ளையார் ஆலயம் அமைந்திருக்கும் இடத்தில் உள்ள ஓர் மரத்தடியில் லிங்கம் போன்ற நடுகல் ஒன்றை ஸ்தாபித்து, அதன் முன்பாக வட்டக்கல் ஒன்றைப் பதித்து அதில் சூலம் ஒன்றையும் வரைந்து, பூஜை செய்து இவ்விடத்தில் தங்கி இருந்ததாகவும், இவருடன் வந்த ஏனைய நான்கு சித்தர்களில் ஒருவர் இங்கிருந்து சற்று தூரத்தில் ஓடிக் கொண்டிருந்த ஆற்றங்கரை ஓரத்தில் இருந்த ஓர் மாமரத்தின் கீழ் முருகப் பெருமானை நினைத்து வேலொன்றை ஸ்தாபித்து வணங்கிச் சென்றதாகவும், முருகனின் வேல் வைத்து வணங்கப்பட்ட மாமரத்தடியே பின்பு மாவடி என அழைக்கப் பட்டதாகவும், பின்பு இவ்விடம் மாவடிப்பள்ளி எனத் திரிபடைந்ததாகவும் இங்குள்ள முதியவர்கள் கூறுகின்றனர். இதன்படி கோரக்கர் பிள்ளையார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயம் 500 வருடங்களுக்கு மேற்பட்ட பாரம்பரியத்தை உடைய கோயில் எனக் கூறப்படுகிறது.



கோரக்கர் சமாதியும், லிங்கக் கல்லும்

## 1700 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த கோரக்க சித்தர்

இவ்வாலயத்தை ஸ்தாபித்த கோரக்கர் எனும் முனிவர் வடஇந்தியாவிலிருந்து கதிர்காமத் திருத்தலத்தை தரிசிக்க வந்தவர் என ஆலய வரலாறு கூறுகிறது. வட இந்தியாவிலிருந்து கதிர்காமத்திற்கு வந்தவர்களில் கோரக்கர் எனும் பெயரில் இருவர் உள்ளனர். இவர்களில் ஒருவர் வட இந்தியாவில் பிறந்து தென் இந்தியாவிற்கு வந்து சதுரகிரி மலையை அடைந்து சித்தர் போகரின் நண்பனாகி அவரையே குருவாக ஏற்றுக் கொண்டவராவார். கொல்லி மலைப் பகுதியில் வசித்து வந்த இவர் 80 வயது வரை வாழ்ந்தார் எனவும், கோயம் புத்தூருக்கு அருகிலுள்ள பேரூரில் சமாதி நிலையை அடைந்ததாகவும் குறிப்புகள் கூறுகின்றன. இவர் சித்தர் போகர் காலத்தவர் என்றபடியால் பொ.ஆ. 2ஆம், 3ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் எனத் தெரிகிறது. இவர் இற்றைக்கு 1700 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்துள்ளார்.


## 800 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த கோரக்கநாத் சித்தர்

இந்தியாவிலிருந்து கதிர்காமத்திற்கு யாத்திரை வந்த இன்னுமொருவர் கோரக்கநாத் சித்தர் என்பவராவார். இவரையும் கோரக்கர் என்றே தமிழர்கள் அழைத்தனர். இவரும் வடஇந்தியாவில் பிறந்து சைவ சமயத்தின் பால் ஈடுபாடுடைய சித்தராவார். இவர் பொ.ஆ. 11 ஆம், 12 ஆம் நூற்றாண்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்தவர். ஆப்கானிஸ்தான், பலூச்சிஸ்தான், பஞ்சாப், சிந்து, நேபாளம், உத்தர பிரதேசம், வங்காளம், அசாம், மகாராஸ்டிரா, கர்நாடகம், தமிழ்நாடு, இலங்கை ஆகிய இடங்களுக்கு கோரக்கநாத் சித்தர் யாத்திரை பயணங்கள் மேற்கொண்டார் என வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.

இவர் வடஇந்திய நாதர்கள் ஒன்பது பேரில் ஒருவராகப் பூஜிக்கப்படுகிறார். மத்ஸ்யேந்திரநாத் எனும் முனிவரை தனது குருவாக ஏற்றுக்கொண்டவர். வடஇந்தியாவில் கணேஸ்பூர், அகமத் நகர் ஆகிய இடங்களில் இவருக்கு கோயில்கள் அமைத்து மக்கள் இவரை வழிபட்டு வருகின்றனர்.



சூலம் பொறித்த கோரக்கர் கல்

## 800 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஆலயம்

சம்மாந்துறை கோரக்கர் கோயிலின் தோற்றக் காலத்தை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்பொழுது இரண்டாவதாக கதிர்காம யாத்திரை வந்த கோரக்கநாத் எனும் சித்தரே இவ்வாலயத்தை ஸ்தாபித்தவர் என்பதில் ஐயமில்லை. எனவே இவர் வாழ்ந்த காலமான பொ.ஆ. 12 ஆம் நூற்றாண்டிலேயே கோரக்கர் கோயிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி இவ்வாலயம் சுமார் 800 ஆண்டுகள் பழமையானது என்பதே சரியாகும். இக்கூற்றை உறுதிப்படுத்தும் வகையில் இவ்வாலயத்தில் பல தொல்பொருள் சின்னங்களும் பழமை வாய்ந்த சிலைகளும் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயத்தின் இன்றைய அமைப்பு

கோரக்கர் பிள்ளையார் கோயில் சம்மாந்துறை நகரின் கிழக்கு எல்லையில் அமைந்துள்ளது. ஆலயத்தின் கிழக்குப் பக்கம் வயல் வெளிகளும், மேற்குப் பக்கம் குடியிருப்புகளும் காணப்படுகின்றன. ஆலய வளவின் மத்தியில் பிள்ளையார் கோயில் கிழக்கு திசை நோக்கியவாறு அமைக்கப்பட்டுள்ளது. கோயிலின் தெற்குப் பக்கம் மாமரத்தின் கீழ் புராதன நடுகல் கோயிலும், தென் மேற்கு பக்கம் உள்ள குருவிச்சை மரத்தின் கீழ் நாகதம்பிரான் சந்நிதியும், வடக்குப் பக்கத்தில் காடாரி அம்மன் சந்நிதியும், அதை அடுத்து அகோர மாரியம்மன் பரிவாரக் கோயிலும் அமைந்துள்ளன. மாரியம்மன் கோயிலின் இடதுபக்கம் ஆஞ்சநேயர், முருகன், பிரத்திரியன், காளி ஆகியோரின் சந்நிதிகளும், முன் பக்கம் வீரபத்திரர் சந்நிதியும், வலது பக்கம் பேச்சியம்மன் ஆதி வைரவர், இருளன், மருளன் ஆகியோரின் சந்நிதியும் அமைக்கப் பட்டுள்ளன.



*புராதன கற்தூண்கள்*

## ஆலயத்தின் தொன்மைக்கு சான்றாக விளங்கும் தொல்பொருட் சின்னங்கள்

கோரக்கர் கோயிலில் உள்ள தொல்பொருட் சின்னங்களில் மிகப் பழமை வாய்ந்ததாகக் கருதப்படும் லிங்கக்கல் போன்ற நடுகல் மாமரத்தின் கீழ் காணப்படுகிறது. இக்கல்லுக்கு அருகில் கோரக்க சித்தரால் ஸ்தாபிக்கப்பட்ட வட்டக்கல் தற்போது காடாரி அம்மன் சந்நிதியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் சதுரமான மேடையின் மீது சுதையினால் தாமரை இதழ்கள் அமைக்கப் பட்டு இதன் மத்தியில் அவ்வட்டக்கல் பதிக்கப்பட்டுள்ளது. சுமார் மூன்றரை அடி விட்டமுள்ள இக்கல்லின் மத்தியில் கோரக்க முனிவரால் பொறிக்கப்பட்ட வடமொழி எழுத்தும் அதன் நடுவில் திரிசூலமும் காணப்படுகின்றன.

இவற்றைத் தவிர ஆலயத்தின் புராதன கற்தூண்களின் பாகங்கள் மூன்றும் காணப்படுகின்றன. மேலும் ஆசனக் கற்கள் இரண்டும், ஓர் அரைப்புக் கல்லும் ஆலய வளவில் காணப்படுகின்றன. மாரியம்மன் ஆலயத்தின் சந்நிதி இருக்கும் இடத்தில் சில ஆண்டுகளுக்கு முன்பு நிலத்திலிருந்து வெளிப்பட்ட பழமை வாய்ந்த அம்மனின் கருங்காலி மரத்திலான முகக்களை கருவறையில் காணப்படுகிறது. மேலும் தோணியின் வடிவில் ஓர் புராதன கல்லும் இவ்வாலய வளவில் காணப்படுகிறது. இக்கல் எதற்காகப் பயன்படுத் தப்பட்டது என்பதை யூகிக்க முடியவில்லை. அத்துடன் ஓர் புராதன கற்பூரக் கல்லும் இங்கே உள்ளது. ஆலயத்தின் வெளியே உள்ள வழிப்பிள்ளையார் சந்நிதியில் உள்ள விநாயகர் விக்கிரகம் பழமை வாய்ந்தது எனக் கூறப் படுகிறது.




*வழிப் பிள்ளையார்*

திறந்தவெளி மரத்தடிக் கோயிலாக இருந்து பின்பு இவ்வாலயம் சற்று பெரிதாகக்கட்டப்பட்ட வேளை இவ்விநாயகரையே மூல மூர்த்தியாகப் பிரதிஸ்டை செய்தார்கள். இவையாவும் பாதுகாக்கப்பட வேண்டிய அரிய பொக்கிஷங்களாகும். இவற்றையெல்லாம் ஆலயபரிபாலன சபையினர் பாதுகாத்து வைத்துள்ளமை பாராட்டத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருகன் மலை கந்தசுவாமி கோயில் - கண்ணகிபுரம்

அக்கரைப்பற்று நகரிலிருந்து தெற்கு நோக்கிச் சாகாமத்திற்குச் செல்லும் வீதியில் உள்ள கோளாவில், பனங்காடு ஆகிய கிராமங்களைக் கடந்து செல்லும் பொழுது, பாதையின் இடதுபக்கம் பெரிய களப்பு வாவியும், வலது பக்கம் வயல்களுக்கு மத்தியில் சில மலைக் குன்றுகளும் காணப்படும். இங்கு மொத்தமாக உள்ள நான்கு மலைக் குன்றுகளின் மத்தியில் காணப்படும் மலைக் குன்றே முருகன் மலை என அழைக்கப்படுகிறது. இம்மலையில் மிகப் பண்டைய காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டதே முருகன் மலை கந்தசுவாமி கோயிலாகும். அக்கரைப்பற்றிலிருந்து சுமார் 7 கி.மீ. தூரத்தில் முருகன் மலை அமைந்துள்ளது.



*கண்ணகிபுரம் முருகன் மலை*

## இயற்கை அழகுடன் காணப்படும் கண்ணகி கிராமமும், அதன் அமைப்பும்

முருகன் மலை கந்தசுவாமி கோயில் அமைந்திருக்கும் பகுதி மூன்று மலைகளைக் கொண்ட அழகிய இயற்கை வனப்பு மிக்க பிரதேசமாகும். முருகன் மலையை மையமாக வைத்து இங்கு அழகிய கிராமங்கள் ஆங்காங்கே உருவாகியுள்ளன. இப்பகுதி கண்ணகி கிராமம் என அழைக்கப்படுகிறது. அக்கரைப்பற்று - சாகாமம் பிரதான வீதியின் வடமேற்குப் பக்கத்தில் பசுமையான வயல் வெளிகளும், அவற்றின் மத்தியில் மலைகளும், மலைகளைச் சுற்றி கிராமங்களும் அமையப் பெற்று ரம்மியமான அழகிய சூழலை இங்கு உருவாக்கியுள்ளது.

பிரதான வீதியிலிருந்து கண்ணகி கிராமத்திற்கு செல்லும்போது முதலாவதாகக் காணப்படும் மலை கரடி மலை என அழைக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மலையின் பின்பக்கம் இரண்டாம் கிராமம் உள்ளது. அதை அடுத்து விநாயகர் கோயிலும், கோயிலின் வடபகுதியில் வயல்களின் மத்தியில் முதலாம் கிராமமும் அமைந்துள்ளன. இங்குதான் கண்ணகி கிராமத்திற்குரிய பாடசாலை, மற்றும் முக்கிய கட்டிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக் கிராமத்தின் வடமேற்கில் ஆண்டிப் போடியார் குளம் அமைந்துள்ளது.

விநாயகர் கோயிலின் மேற்குப் பக்கமாக செல்லும் போது பாதையின் இரு மருங்கிலும் பசுமையான வயல் நிலங்களும், அதனை அடுத்து மூன்றாம் கிராமமும் அமைந்துள்ளது. கிராமத்தின் வாசலில் பேச்சி அம்மன் ஆலயம் மரத்தின் கீழ் காணப்படுகிறது. இதனை அடுத்து முருகன் மலைக்குச் செல்லும் வழியில் இடதுபக்கம் சிறிய வள்ளி மலையும், வலது பக்கம் தீர்த்தக் கேணியும் அமைந்துள்ளன. இவற்றை அடுத்தே அழகிய முருகன் மலையும், மலையின் உச்சியில் நின்ற நிலையில் 21 அடி உயரமான பொன் வண்ண முருகன் சிலையும் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றன. இம்மலை வடக்கு தெற்காக சுமார் 400 அடி நீளமும், கிழக்கு மேற்காக 350 அடி அகலமும் கொண்ட மாங்காய் வடிவில் அமைந்துள்ளது.

முருகன் மலையின் தெற்குப் பக்கத்தில் உள்ள மூன்றாம் கிராமத்தில் ஆங்காங்கே பெரியதும் சிறியதுமான 12 மலைப் பாறைகள் இயற்கையாகவே அமைந்து இப்பகுதியை மனதை மயக்கும் வனப்பு மிக்க இடமாக உருவாக் கியுள்ளன. முருகன் மலையின் வடக்குப் பக்கத்தில் பத்து வீட்டுக் குடியிருப்பும், மேற்குப் பக்கம் பாக்குருட்டி மலை எனும் பெரிய மலைக் குன்றும் அமைந் துள்ளன. முருகன் மலையின் தெற்குப் பக்கத்தில் ஒரு கி.மீ. தூரத்தில் பட்டி நகர் கண்ணகி அம்மன் கோயிலும், அதன் தெற்குப் பக்கம் கவடாப்பிட்டி எனும் கிராமமும், கிராமத்தின் பின் பக்கம் உள்ள மலைப் பாறையின் அருகில் மரத்தடியில் பிள்ளையார் கோயிலும் அமைந்துள்ளன.



*முருகன் மலைக் கோயில்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதிர்காமத்திற்கு பாதயாத்திரை வந்த முனிவர் ஸ்தாபித்த வேல்

இத்தனை இயற்கை அழகும், சிறப்பும் கொண்ட இப்பகுதிக்கு மிகப் பண்டைய காலத்தில் இந்தியாவிலிருந்து ஓர் முனிவர் வந்ததாகவும், கதிர் காமத்திற்கு பாத யாத்திரையாக வந்த இம் முனிவர் தான் கொண்டு வந்த முருகப் பெருமானின் வேல் ஒன்றை இங்கிருந்த ஓர் மலை உச்சியில், இயற்கையான நீர்ச்சுனையின் அருகில் ஸ்தாபித்து அதற்கு பூஜைகள் செய்து வணங்கியதாகவும், பின்பு சில நாட்கள் இங்கே தங்கியிருந்து பின்னர் கதிர்காமத்திற்கு தனது பயணத்தைத் தொடர்ந்ததாகவும் தெரிய வருகிறது.

அப்போது காடடர்ந்து காணப்பட்ட இம்மலைப் பகுதியில் முனிவர் ஒருவர் இருந்ததையும், இங்கிருக்கும் மலை உச்சியில் வேலை வைத்து பூஜித்ததையும் அறிந்த ஏனைய யாத்திரீகர்கள் மலைக்குச் சென்று தாமும் அவ்வேலை வணங்கி பூஜைகள் செய்து பின்பு கதிர்காமத்திற்குச் சென்றனர். அதன் பின்பு ஒவ்வொரு வருடமும் கதிர்காமத் தீர்த்த யாத்திரை செல்பவர்கள் இம்மலையில் உள்ள வேலை பூஜித்து சென்றுள்ளதாகவும் கூறப்படுகிறது.

## ஆண்டு தோறும் கதிர்காமம் செல்லும் யாத்திரீகர்கள் தரிசித்து செல்லும் வேல்

மலையில் உள்ள முருகனின் வேல் எக்காலத்தில் வைக்கப்பட்டது என்ற விபரங்கள் யாருக்கும் தெரியாது. முருகப் பெருமானே முனிவர் வேடத்தில் வந்து மலையின் உச்சியில் வேலை ஸ்தாபித்து பூஜித்து சென்றதாக இப்பகுதி மக்கள் நம்புகின்றனர். எனவே இப்பகுதி மக்களால் மிக்க பயபக்தியுடன் இவ்வேல் பூஜிக்கப்பட்டு வருகிறது.

மிகப் பண்டைய காலம் முதல் வருடத்திற்கொரு முறை கதிர்காமத்திற்கு பாதயாத்திரை செல்லும் பக்தர்களும், சித்தர்களும், முனிவர்களும் இம் மலையில் இருக்கும் முருகனின் வேலைத் தரிசித்து இம்மலையிலும், அடி வாரத்திலும் தங்கிச் செல்வதாக இப்பகுதியிலுள்ள முதியவர்கள் கூறுகின்றனர். பண்டைய காலத்தில் கதிர்காம யாத்திரீகர்கள் கருங்கொடித் தீவுக்கு வந்து, அங்கிருந்து முருகன் மலை, பட்டி நகர் ஊடாக திருக்கோயிலுக்கு சென்று முருகனைத் தரிசித்து அங்கிருந்து சங்கமன் கண்டி மலைக்கு செல்லும் வழக்கம் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்டைய போக்குவரத்துப் பாதையருகில் அமைந்திருந்த மலைக் கோயில்

இன்று மக்கள் பயன்படுத்தும் முக்கிய போக்குவரத்துப் பாதையான அக்கரைப் பற்றிலிருந்து தம்பட்டை ஊடாக திருக்கோயிலுக்குச் செல்லும் பாதை பண்டையகாலத்தில் பயன்படுத்தப் படவில்லை. பெரிய களப்பு வாவியின் கழிமுகங்களான பெரிய முகத்துவாரம், சின்ன முகத்துவாரம் ஆகிய நீர்த் தடைகளினால் பாதயாத்திரை செல்பவர்களும், ஏனைய பயணிகளும் பனங்காடு, பட்டிநகர் ஊடாகச் செல்லும் பாதையையே பயன்படுத்தி வந்தனர். தம்பட்டை கிராமத்திற்கு செல்பவர்கள் மட்டும் படகின் மூலம் பெரிய முகத்துவாரத்தைக் கடந்து சென்று வந்தனர். எனவே தரைவழிப் பயணத்தின் முக்கிய பாதையாக பனங்காடு, பட்டிநகர் பாதை விளங்கியதால் முருகன் மலை கந்தசுவாமி கோயில் பண்டைய காலத்தில் சிறப்புற்று விளங்கியது.

## உன்னரசுகிரி மன்னர்களால் திருப்பணி செய்யப்பட்ட ஆலயம்

உன்னரசுகிரி இராச்சியத்தை ஆட்சி செய்த சிற்றரசர்களாலும் மலையி லிருக்கும் வேல் பூஜிக்கப்பட்டுள்ளது. திறந்தவெளி மலைக் கோயிலாக இருந்த இவ்விடத்திற்கு ஓர் கருவறையை அமைத்ததோடு, இங்கு வந்து செல்லும் யாத்திரீகர்களுக்காக நீர்ச்சுனையின் அருகில் ஓர் ஓய்வெடுக்கும் மண்டபத்தையும் மன்னன் அமைத்துள்ளான். மேலும் இவ்வாலயத்தை பராமரிக்கும் பொருட்டு கருவறையின் பின் பக்கம் வைப்புத் திரவியங் களையும் சேமித்து அவற்றைப் பாதுகாத்து வந்துள்ளான். யாத்திரீகர்கள் வேலைத் தரிசிப்பதற்கு வசதியாக மலையடிவாரம் முதல் ஆலயம் வரை கற்பாறையில் படிகளை அமைத்துள்ளான். ஆலயத்தின் பின்பக்கம் உள்ள இன்னுமோர் நீர்ச்சுனைக்குச் செல்வதற்கும் கற்பாறையில் படிகளை வெட்டு வித்துள்ளான். இவற்றை உறுதி செய்யும் வகையில் மலையில் பல தடயங்கள் காணப்படுகின்றன.

## 2000 வருடங்களுக்கு முன்பு மாளிகை அமைக்கப்பட்டிருந்த கவடா மலை

பொ.ஆ. 1 ஆம் நூற்றாண்டில் மட்டக்களப்பு இராச்சியத்தை ஆண்டு வந்த பிரசின்னசித்து எனும் மன்னன் தனது ஆட்சிப்பிரிவின் தென்பகுதியை தனி இராச்சியமாக்கி கவடாமலையில் ஓர் மாளிகையை அமைத்து புவனேக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகுவிற்கு கொடுத்து உன்னரசுகிரி எனப் பெயரிட்டான் என மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள கவடாமலை இம்முருகன் மலையே எனத் தெரிகிறது. ஏனெனில் இப்பகுதியே கவடாப்பிட்டி என அழைக்கப்படுகிறது. அத்துடன் இப்பகுதியில் ஓர் மாளிகை அல்லது இராஜ தானியின் அடையாளங்களுடன் காணப்படும் மலை இம் முருகன் மலையே.



*திரிசூலம் பொறிக்கப்பட்ட வாயில் கல்*


## 1960 இல் மக்கள் குடியேறியபோது மலையில் கண்ட புராதன வேல்

முருகன் மலை அடிவாரத்தில் இன்று நாம் காணும் கண்ணகி கிராமம் 1960ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட குடியேற்றமாகும். இக்காலப்பகுதியில் மக்கள் இப்பகுதிக்கு வந்து காட்டை துப்பரவு செய்யும் பொழுது மலை உச்சியில் ஓர் பழமை வாய்ந்த வேலையும், ஓர் சிறிய கோயிலின் எச்சங் களையும் கண்டதாகவும், பின்பு அவ்வேலுக்கு பாதுகாப்பாக ஓர் குடிலை அமைத்து பயபக்தியுடன் பூஜை செய்து வணங்கி வந்ததாகவும், அருகில் பட்டிநகர் கண்ணகி அம்மன் கோயில் அமைந்திருந்ததால் இப்புதிய கிராமத் திற்கு கண்ணகி கிராமம் எனப் பெயர் சூட்டியதாகவும், பிற்காலத்தில் இக்கிராமமும், கோயிலும் பல சவால்களையும் இன்னல்களையும் சந்தித்து படிப்படியாக முன்னேறி, பக்தி மிக்க இம்மக்களின் முயற்சியால் முருகன் மலைக் கோயில் இன்று நாம் காணும் நிலைக்கு உருவாகி கருவறை, மண்டபம் ஆகியவற்றுடன் காட்சி தருவதாகவும் இங்குள்ள முதியவர்கள் கூறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருகன் மலையில் காணப்படும் புராதன தடயங்களும், நீர்ச்சுனைகளும்

முருகன் மலைக் கோயிலின் தொன்மைக்குச் சான்றாக மலையில் பல புராதன தடயங்களும், சின்னங்களும் காணப்படுகின்றன. மலை அடிவாரத்திலிருந்து உச்சிக்குச் செல்வதற்கு கற்பாறையிலேயே படிகள் செதுக்கப்பட்டுள்ளன. அடிவாரத்திலிருந்து 70 படிகள் செதுக்கப்பட்டிருந்த சிறிய பாறையைக் கடந்ததும் தரையும், புதர்களுமான ஓர் இடைவெளி காணப்படுகிறது. இதை அடுத்து சுமார் 5 அடி உயரத்தில் இரண்டு பக்கங்களும் உருண்டையான கற்பாறைகள் இரண்டு வாயில் போல அமைந்துள்ளன. இவற்றின் நடுவில் 20 படிகள் வரை கட்டப்பட்டுள்ளன. இவ்விரண்டு கற்பாறைகளிலும் இரண்டு பக்கங்களிலும் திரிசூலக் குறியீடு பொறிக்கப்பட்டுள்ளது. இக்குறியீடுகள் சிதைந்து காணப்படுகின்றன. இதனை அடுத்து மேலும் 50 படிகள் வரை செதுக்கப்பட்டுள்ளன. படிகளின் முடிவிலிருந்து சற்று தூரத்தில் பாறையில் ஓர் திரிசூலக் குறியீடும் வடக்கு நோக்கிய ஓர் அம்புக்குறியும் பொறிக்கப் பட்டுள்ளன.



*முருகன் மலை கல்சுனை*

மலை உச்சியில் கந்தசுவாமி கோயிலும், அதன் தெற்குப் பக்கம் பாறையில் அமைந்துள்ள இயற்கையான நீர்ச்சுனையும் காணப்படுகிறது. இச்சுனை 15 அடி அகலமும் 20 அடி நீளமும், 18 அடி ஆழமும் கொண்டது. சுனையில் இறங்குவதற்கு சில படிகள் செதுக்கப்பட்டுள்ளன. சுனையின் முன் பக்கம் தங்க முருகன் சிலை அமைக்கப்பட்டுள்ளது. சுனையின் பின் பக்கம் பாறையில் நீளமான சமதரை செதுக்கப்பட்டுள்ளது. இதை அடுத்து ஓர் கட்டிடம் இருந்ததற்கான அடையாளங்கள் தெரிகின்றன. பாறை மீது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தூண்கள் நிறுத்துவதற்காக சதுர வடிவில் குழிகள் வெட்டப்பட்டுள்ளன. இவற்றின் பின் பக்கம் பாறையில் வட்ட வடிவில் ஓர் குழி வெட்டப்பட்டுள்ளது. இது ஓர் உரலாகப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.



முனிவர் தங்கியிருந்த குகை

## சிதைந்த நிலையில் கல்வெட்டு

ஆலய கருவறையின் பின்பக்கம் 30 படிகள் வரை செதுக்கப்பட்டுள்ளன. பின்பக்கம் கீழ் நோக்கி செல்வதற்கு இவை பயன்படுத்தப்பட்டுள்ளன. இப்படிகளின் முடிவில் தூர்ந்து போன ஓர் சுனை காணப்படுகிறது. மண் நிறைந்து புற்கள் வளர்ந்து காணப்படும் இச்சுனையின் வலது பக்கமும் முன் பக்கமும் கற்பாறை சமதரையாக இரண்டு வரிகளில் செதுக்கப்பட்டுள்ளது. முன்பக்க சமதரையில் சில பிராமி எழுத்துக்கள் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன. இரண்டு வரிகளில் இவ்வெழுத்துக்கள் காணப்படுகின்றன.



பாறைக் கல்வெட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைப்புத் திரவியங்கள் இருந்த சதுரக் குழியும், கற்படுக்கையும்

கருவறையின் பின்பக்கம் பாறையில் சதுர வடிவில் ஓர் குழி வெட்டப்பட்டு அதனுள் சதுர வடிவில் இன்னுமோர் குழியும் வெட்டப்பட்டுள்ளது. இது வைப்புத் திரவியத்தை பாதுகாத்து மறைத்து வைப்பதற்காக பயன்படுத்தப் பட்ட இடமாகும். ஆலயத்தை திருத்திக் கட்டிய மன்னன் ஆலய பராமரிப் பிற்கென இதில் திரவியங்களை சேமித்து மறைத்து வைத்திருக்கலாம்.

ஆலயத்தின் வடக்குப் பக்கம் பாறையில் நீள் சதுர வடிவில் ஓர் பள்ளம் செதுக்கப்பட்டுள்ளது. இதன் ஒரு பக்கம் சற்று உயரமாக செதுக்கப்பட்டுள்ளது. இது ஓர் படுக்கையும், தலை வைக்கும் தட்டும் எனக் கூறப்படுகிறது. இதன் அருகில் பாறையில் கட்டிடம் ஒன்று இருந்தமைக்கான சதுரமான சிறிய குழிகள் காணப்படுகின்றன. இதனருகில் உள்ள ஓர் தனிப் பாறையை பிளப்பதற்காக ஒரே நிரையில் சில துளைகள் போடப்பட்டுள்ளன.



*கல் படிகள்*



*முனிவர் தங்கியிருந்த குகை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புராதன ஆலயத்தின் எச்சங்களும், முனிவர்கள் தங்கி இருந்த கற்குகையும்

ஆலயத்தின் கருவறையின் பின்பக்கம் புராதன ஆலயத்தின் எச்சங்கள் காணப்படுகின்றன. இவ்விடத்தில் ஆலயத்தின் செங்கட்டிகள் சிலவும் பண்டைய மட்பாண்டத்தின் துண்டுகள் சிலவும் மண்ணுள் மூடப்பட்டு ஆங்காங்கே தெரிகின்றன.

மலை அடிவாரத்திலிருந்து உச்சிக்கு ஏறுவதற்காக முதல் தொகுதி படிகள் செதுக்கப்பட்டுள்ள சிறிய பாறையின் வடக்குப் பக்கத்தில் ஓர் சிறிய கற்குகையும், சிறிய நீர்ச்சுனையொன்றும் காணப்படுகிறது. மலை உச்சியில் வேலை ஸ்தாபித்த முனிவர் இக்குகையில் தான் சிலகாலம் இருந்த தாகவும் நம்பப்படுகிறது. இக்குகையின் முன்பக்கம் மன்னன் திருப்பணி செய்த காலத்தில் நான்கு தூண்களுடன் கூடிய சிறிய மண்டபத்தை கட்டிய தாகத் தெரிகிறது. தூண்களை நிறுத்தப் பயன்படுத்தும் சதுரமான குழியிடப் பட்ட வட்டமான குழிக்கற்கள் இரண்டு இவ்விடத்தில் காணப்படுகிறன. எனவே இவ்விடத்தில் சிறிய மண்டபம் இருந்திருக்கலாம் என யூகிக்கக் கூடியதாய் உள்ளது. இம்மண்டபத்தையும், கற்குகையையும் பின்பு இம் மலைக்கு வந்த சித்தர்களும் பயன்படுத்தியிருக்கலாம் என நம்பப்படுகிறது.




*தங்கமுருகன் சிலை*

## தங்க நிற முருகன் சிலை

பிரதான வீதியிலிருந்து கண்ணகி கிராமத்திற்குள் நுழைந்தவுடன் எம்மை வரவேற்பது முருகன் மலையில் அமைக்கப்பட்டிருக்கும் பொன் வண்ண முருகன் சிலையாகும். முருகன் மலையின் இடதுபக்கத்தில் மலைச் சாரலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டி இச்சிலை அமைக்கப்பட்டுள்ளது. அழகிய பீடத்தின் மேல் நின்ற நிலையில் அபய முத்திரை காட்டிய வண்ணம் வலது பக்கம் வேலுடனும், காலடியில் மயில், நாகம் ஆகியவற்றுடனும் இச்சிலை கச்சிதமாக அமைக்கப் பட்டுள்ளது. இலங்கையில் வேறெங்கும் காணக் கிடைக்காத அரிய பொக்கிஷமாக காணப்படும் இச்சிலை சுதையினால் வடிவமைக்கப்பட்டு தங்க நிறம் பூசப்பட்டுள்ளது. முருகன் மலை நில மட்டத்திலிருந்து சுமார் 60 அடி உயரமான தாகும். மலை உச்சியில் அமைக்கப்பட்டிருக்கும் முருகன் சிலை 21 அடி உயரமுடையது. இச்சிலை கடந்த 2010 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது.



*வைப்புத்திரவிய குழி (புதையல் குழி)*

## விநாயகர் கோயில் - நாவிதன்வெளி

கல்முனை நகரிலிருந்து மேற்கு நோக்கி செல்லும் வீதியில் 6 கி.மீ. தூரத்தில் கிட்டங்கிப் பாலத்தை அடுத்து, சவளக்கடை எனும் கிராமம் அமைந்துள்ளது. இங்கிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் வீதியில் 3 கி.மீ. தூரத்தில் நாவிதன் வெளி அமைந்துள்ளது. இக்கிராமத்தின் தென் எல்லையில் உள்ள நாவிதன் வெளி குளத்தின் கிழக்குப் பக்கம் இவ் விநாயகர் கோயில் அமைந்துள்ளது. ஆலயத்தின் முன் பக்கம் வயல் நிலங்களும், அதை அடுத்து மட்டக்களப்பு வாவியும் காணப்படுகிறது. வாவியை அடுத்து துறை நீலாவணை கிராமம் அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொ.ஆ. 5 ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற கிராமம்

நாவிதன்வெளி கிராமம் பொ.ஆ. 5 ஆம் நூற்றாண்டளவில் உலக நாச்சியின் காலத்தில் தோற்றம் பெற்றதாகக் கூறப்படுகிறது. இக்காலப்பகுதியில் இந்தியாவிலிருந்து வந்த மக்கள் இப்பகுதியில் குடியமர்த்தப்பட்டதாக ஆய்வுகள் கூறுகின்றன. இக்காலப்பகுதியிலேயே மக்கள் இங்கு ஓர் ஆலயத்தை அமைத்து பூஜித்து வந்துள்ளனர்.

எனவே நாவிதன்வெளி கிராமமும் இங்கு அமைக்கப்பட்டிருந்த கோயிலும் சுமார் 1500 வருட பாரம்பரியமிக்கவையாகும். அதேசமயம் இக்கிராமத்தில் மக்கள் குடியேறியபோது அவர்களின் வழிபாட்டுத் தேவைக்காக அமைத்த ஆலயம் எந்த தெய்வத்திற்குரியது எனவும் இது கிராமத்தில் எங்கு அமைந்திருந்தது என்பதும் தெரியவில்லை. இக்கோயில் போர்த்துக்கேயர் அல்லது ஒல்லாந்தர் காலத்தில் அவர்களால் அழிக்கப் பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.



நாவிதன்வெளி விநாயகர் கோயில்

## 350 ஆண்டுகளுக்கு முன்பு ஸ்தாபிக்கப்பட்ட கோயில்


நாவிதன் வெளியில் இன்று நாம் காணும் விநாயகர் கோயில் பொ.ஆ. 1650 ஆம் ஆண்டு தோற்றம் பெற்றதாக ஆலய வரலாறு கூறுகிறது. இக்கோயில் சுமார் 350 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்டுள்ளது. தென்னிந்தியாவில் உள்ள திருவொற்றியூரில் இருந்து வந்த மக்களே இவ்வாலயத்தை ஸ்தாபித்த தாகவும் வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயத்தில் காணப்படும் ஒரே ஒரு தொல்பொருட் சின்னம்

இவ்வாலயத்தில் 350 வருடகால பழமைக்கு சான்று கூறும் தொல்பொருட் சின்னமாக விளங்குவது புராதன விநாயகர் விக்கிரகம் மட்டுமே. இது ஆலயத்தின் கருவறையில் புதிதாக பிரதிஸ்டை செய்யப்பட்டிருக்கும் மூல மூர்த்தியின் அருகில் வைக்கப்பட்டுள்ளது. ஆலய மண்டபத்தில் காணப்படும் மூஷிகம், பலிபீடம் ஆகியவை சற்று பழமை வாய்ந்ததாகத் தெரிகின்றன. இவை 1922 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றபோது ஸ்தாபிக்கப் பட்டவையாகும். இவை 90 வருடங்கள் பழமையானவை எனக் கூறலாம். ஆலயத்தின் ஆரம்ப காலச் சின்னங்களான கல்கோமுகி, படிக்கற்கள் போன்ற பழம் பெரும் சின்னங்கள் எதுவும் இங்கு காணப்படவில்லை.

1922 ஆம் ஆண்டு முதல் அவ்வப்போது ஆலயம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டபோது இங்கிருந்த புராதன சின்னங்களின் அருமை, பெருமை தெரியாதவர்கள் இவற்றை அகற்றி விட்டதாகவும், இவற்றில் சிலவற்றை மண்ணுள் போட்டு புதைத்து அதன் மேலே ஆலயத்தைக் கட்டியதாகவும் கூறப்படுகிறது.



*மட்டக்களப்பு வாவி*

## மாமரத்தின் கீழிருந்த திறந்தவெளி மரக்கோயில்

தற்போது ஆலயம் அமையப் பெற்றுள்ள இடத்தின் தெற்குப் பக்கத்தில் 100 மீட்டர் தூரத்திலேயே நாவிதன் வெளி குளக்கரையில் புராதன ஆலயம் பொ.ஆ. 1650 இல் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததாகவும், அங்கிருந்த ஓர் பழமை வாய்ந்த மாமரத்தின் கீழ் பிள்ளையாரை ஸ்தாபித்து திறந்தவெளி மரக் கோயிலாக வணங்கி வந்ததாகவும் கூறப்படுகிறது. 1922 ஆம் ஆண்டு ஆலயத்தை பெரிதாகக் கட்ட எண்ணிய போது தற்போது ஆலயம் அமைந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


துள்ள இடத்தைத் தேர்ந்தெடுத்து அங்கு புதிய ஆலயத்தை அமைத்ததாக ஆலய வரலாறு கூறுகிறது.

## பண்டைய ஆலயத்தின் தீர்த்தக் குளம்

பண்டைய காலம் முதல் ஆலயத்தின் பின்பக்கத்தில் உள்ள நாவிதன்வெளி குளமே ஆலயத்தின் தீர்த்தக் குளமாகப் பயன்படுத்தப்பட்டது. அண்மைக் காலத்திலிருந்து கோயிலின் முன் பக்கத்தில் சுமார் 200 மீற்றர் தூரத்தில் உள்ள மட்டக்களப்பு வாவியில் தீர்த்தமாடப்படுகிறது. பண்டைய காலம் முதல் விநாயகரைப் பாதுகாத்து வந்த தல விருட்சமான புராதன மாமரம் 1978ஆம் ஆண்டு ஏற்பட்ட சூறாவளியின்போது அடியோடு சாய்ந்து அழிந்து விட்டது. தற்போது கருவறை, அந்தராளம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், பரிவாரக் கோயில்கள், வாயிற்கோபுரம், மணிக்கோபுரம் ஆகியவற்றுடன் சுற்றுமதிலும் அமைக்கப்பட்டு புதிய வடிவில் இவ்வாலயம் காட்சியளிக்கிறது.

## சிவன் கோயில் - தீகவாபி

அம்பாறை நகரின் கிழக்கில் வரிப்பத்தாஞ்சேனை ஊடாக 13 கி.மீ. தூரத்திலும், சம்மாந்துறை நகரின் தெற்கில் சுமார் 12 கி.மீ. தொலைவிலும் தீகவாபி அமைந்துள்ளது. மிகப் புராதன காலத்தில் இங்கு ஓர் சிவாலயம் அமைந் திருந்தமை ஆய்வுகள் மூலம் தெரியவருகிறது.



தீகவாவி பௌத்த தூபி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்மையில் வெளிப்பட்ட புராதன சிவாலயத்தின் நந்தி

தீகவாபியில் மிகப் பண்டைய காலத்தில் ஓர் சிவாலயம் அமைந்திருந்தமைக் கான ஆதாரங்கள் அண்மையில் கிடைக்கப்பெற்றுள்ளன. இங்குள்ள பௌத்த தூபியின் கிழக்குப் பக்க வாசலின் அருகில் கடந்த 2011 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போது இரண்டு கட்டிடங்களின் இடிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இவற்றில் ஒரு கட்டிடத்தில் புத்த பகவானின் சிதைந்த தலையொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இது ஓர் பௌத்த சிலைமனை என அடையாளம் காணப்பட்டுள்ளது. அடுத்த கட்டிடத்தில் ஓர் நந்தியின் சிலை கிடைத்துள்ளது. இக்கட்டிடமே ஓர் சிவன் கோயில் எனக் கூறப்படுகிறது. இக்கட்டிடம் பொலநறுவை காலத்திற்குரியது என தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் கூறியுள்ளனர். எனவே இங்கிருந்த சிவாலயம் சோழர் காலத்தில் புனரமைக்கப் பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

இங்கு கிடைக்கப் பெற்ற நந்தி அமர்ந்த நிலையில் உள்ளது. வெள்ளை பளிங்குக் கல்லினால் செதுக்கப்பட்டுள்ளது. இங்கிருந்த சிவாலயத்தின் மகாமண்டபத்தில் பலிபீடத்திற்கு முன்பாக இந்நந்தி இருந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. அருகில் இருந்த அடுத்த கட்டிடத்தில் கிடைக்கப் பெற்ற புத்தபகவானின் தலையும், இந்நந்தியும் ஒரே வகையான கல்லிலே செதுக்கப் பட்டுள்ளன. எனவே இவை ஒரே காலத்தவை என்பதில் சந்தேகமில்லை.

பல நூறு ஆண்டுகள் மண்ணுள் புதையுண்டு இருந்தமையால் இந் நந்தியின் அங்க இலட்சணங்கள் சிதைந்துபோய் கரடுமுரடாகக் காணப் படுகின்றன. இந்நந்தி கிடைக்கப் பெற்ற கட்டிடத்தின் அடியிலேயே ஏனைய சிவாலய சின்னங்களும், தெய்வச் சிலைகளும் புதையுண்டு கிடக்கலாம் என நம்பப்படுகிறது. உரிய முறையில் அகழ்வாய்வுகள் மேற்கொண்டால் இவை வெளிப்படும் சாத்தியம் உள்ளது.



புராதன பளிங்குக்கல் நந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொ.ஆ. 2 ஆம் நூற்றாண்டில் தீகவாபியை ஆண்ட தமிழ் மன்னர்கள்

இலங்கையில் பௌத்த சமயம் அறிமுகமாவதற்கு முன்பு தீகவாபியில் நாக, சிவ, முருக வழிபாடுகள் நிலவியமைக்கான சான்றுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. கதிர்காம சத்திரிய மன்னர்கள், சூத்திகன், எல்லாளன் ஆகிய மன்னர்கள் காலத்தில் தீகவாபி பகுதியை இவர்களின் சிற்றரசர்கள் ஆட்சி செய்து வந்துள்ளனர். எல்லாளன் 44 ஆண்டுகள் இலங்கைய ஆட்சி செய்த காலத்தில் தீகவாபியில் சிவ வழிபாடு மேலோங்கிக் காணப்பட்டது.

எல்லாளனின் தமிழ் சிற்றரசர்கள் இருவர் தீகவாபி பகுதியை ஆட்சி செய்துள்ளனர். பொ.ஆ.மு. 205 முதல் 161 வரை இவர்களின் ஆட்சி இப்பகுதியில் நிலவியது. எல்லாளனுடன் போரிட மாகமையிலிருந்து வந்த துட்டகைமுனு தீகவாபியில் இரண்டு தமிழ் மன்னர்களை வெற்றி கொண்ட பின் 'அம்பர கிராமம்' என்னுமிடத்தின் அருகில் இருந்த 'அம்பிலபிட்டி பியங்கன' என்னுமிடத்தில் முகாம் அமைத்து சில நாட்கள் தங்கியிருந்து முன்னேறியதாக 'சகஸ்ஸவத் துப்பகரணய' எனும் பண்டைய நூலில் குறிப் பிடப்பட்டுள்ளது. துட்டகைமுனு பௌத்த சமயத்தைத் தழுவிய போதும் முருக வழிபாட்டிலும் ஈடுபாடு கொண்டவனாவான். துட்டகைமுனுவின் கிரீடத்தில் இரண்டு திரிசூலங்களும், இரண்டு வேல் சின்னங்களும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இதன்படி தீகவாபி பகுதியை எல்லாளன் காலத்தில் இரு தமிழ் சிற்றரசர்கள் ஆட்சி செய்துள்ளனர் என்பது நிரூபனமாகிறது.



புத்தபகவானின் பளிங்குக்கல் தலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லாளன் காலத்தில் அமைக்கப்பட்ட சிவாலயம்

எல்லாளனின் தமிழ் சிற்றரசர்கள் காலத்தில் தீகவாபியில் சிவாலயம் கட்டப்பட்டு செழிப்புடன் விளங்கியதாகக் கருதப்படுகிறது. எல்லாளனின் ஆட்சியின் பின்பு துட்டகைமுனு இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் துட்டகைமுனுவின் தம்பியான சத்தாதீசன் தீகவாபி பகுதியை ஆட்சி செய்து வந்தான். இவனது காலத்திலேயே இங்கு பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன. சத்தாதீசன் காலத்தில் இப்பகுதியில் பௌத்த வழிபாட்டிடங்கள் அமைக்கப்பட்ட போதும் இந்துக் கோயில்களையும் இம் மன்னன் நன்கு பராமரித்து பாதுகாத்து வந்துள்ளான் என்பது குறிப்பிடத்தக்கது.

தீகவாபியின் மேற்குப் பகுதியில் உள்ள வாவின்ன, தேவாலஹிந்த, பல்லன்ஹெல, நெவ்கல ஆகிய இடங்களில் சத்தாதீசன் காலத்தில் கோயில்கள் இருந்தமை பற்றி ஆய்வுக் குறிப்புகள் கூறுகின்றன. இவற்றின் எச்சங்களையும், இடிபாடுகளையும் இன்றும் காணக்கூடியதாக உள்ளது.



*புராதன இடிபாடுகள்*

## சோழர் காலத்தில் புனரமைக்கப்பட்ட ஆலயம்

தீகவாபி சிவன் கோயில் எல்லாளன் காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டு சிறப்புடன் விளங்கியுள்ளது. பொ.ஆ. 11 ஆம் நூற்றாண்டில் சோழர் காலத்தில் இவ் வாலயம் புனரமைக்கப்பட்டுள்ளது. மேலும் பொ.ஆ. 13 ஆம் நூற்றாண்டில் கலிங்க மாகோன் காலத்திலும் செல்வாக்கு பெற்று விளங்கியுள்ளது எனலாம். இவ்வாலயம் பொ.ஆ. 16 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. 350 ஆண்டுகளுக்கு மேலாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணுள் புதையுண்டு கிடந்த தீகவாபி சிவாலயத்தின் எச்சங்களில் ஒன்றே அண்மையில் வெளிப்பட்டுள்ள நந்தி சிலையாகும்.

## மகா கந்தக் குளம் கந்தசுவாமி கோயில் - உகனை

அம்பாறை நகரிலிருந்து வடக்கு நோக்கி மகா ஓயா செல்லும் வீதியில் சுமார் 9 கி.மீ. தொலைவில் உகன என்னும் சிறிய கிராமம் அமைந்துள்ளது. இங்கிருந்து மேற்கு நோக்கிச் சுமார் 6 கி.மீ. தூரம் வரை செல்லும் சிறிய வீதி மகா கந்தக் கரைக்குச் செல்லும் வழியாகும்.

### பண்டைய காலத்தில் இந்துக்கள் வாழ்ந்த மலைப் பகுதி

பொ.ஆ. மு 2 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் அமைக்கப்பட்டதாகக் கருதப்படும் இப்பண்டைய குளத்தின் மேற்கில் பல உயரமான மலைத் தொடர்கள் அமைந்துள்ளன. இம்மலைப் பகுதியில் பண்டைய காலத்தில் இந்துக்கள் வாழ்ந்துள்ளமை பற்றியும், இப்பகுதியில் முருக வழிபாடு நிலவியமை பற்றியும் பல குறிப்புகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இக்குளம் தீகவாபி எனவும் அழைக்கப்பட்டது. நீண்ட குளம் எனும் பொருளுடன் சிங்கள மொழியில் திகவாபி எனவும் பின்பு தீகவாபி எனவும் திரிபடைந் துள்ளது. இன்று இறக்காமத்தை அடுத்து உள்ள பண்டைய நகரமான தீகவாபி யும், மகா கண்டிக்குளம் எனப்படும் தீகவாபியும் இரு வேறு இடங்களாகும்.

### கதிர்காம சத்திரியர்களின் ஆட்சி நிலவிய பகுதி


ஊவா மலைகளில் உற்பத்தியாகி கிழக்குப் பக்கமுள்ள தாழ்ந்த பிரதேசத்தை நோக்கிப் பாயும் அந்தல ஓயா, தம்பே எல ஆகியவற்றின் குறுக்கே இரண்டு சிறிய அணைகளைக் கட்டியதன் மூலம் இக்குளம் அமைக்கப்பட்டுள்ளது. இக்குளம் சுமார் 6 மைல் நீளத்தையும் ஒரு மைல் அகலத்தையும் கொண்ட ஒடுங்கிய நீண்ட குளமாகும். இதன் மூலம் அன்று 10,000 முதல் 20,000 ஏக்கர் நெற்காணிகளுக்கு நீர் கிடைத்தது. அன்று கதிர்காம சத்திரியர்களின் ஆட்சி நிலவிய இப்பகுதி அதிகளவில் நெல் விளைநிலங்களுடன் செழிப்புற்று விளங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தக்குளம் எனும் தீர்த்த வாவி

பண்டைய காலத்தில் இக்குளம் 'தீர்த்த வாவி', என்று பெயர் பெற்றிருக்கலாம் என நம்பப்படுகிறது. இதுவே திரிபடைந்து தீகவாபி என அழைக்கப்பட்டது. அத்துடன் இக்குளம் இன்னுமோர் பெயருடன் இப்பகுதியில் நிலவிய கந்த வழிபாட்டுடன் தொடர்புடையதை அறியக் கூடியதாக உள்ளது. பிற்காலத்தில் மகா கண்டிக்குளம் என அழைக்கப்பட்ட இக்குளத்தின் பண்டைய பெயர் மகா கந்தக்குளம் என்பதாகும். இதுவே பின்பு மகா கண்டிவெவ என அழைக்கப்பட்டது. சுமார் 2500 வருடம் பழமை வாய்ந்த இக்குளம் இங்கு நிலவிய கந்த வழிபாட்டின் பெயரிலேயே அழைக்கப்பட்டுள்ளது.

இன்று காடுகள் நிறைந்து அழிந்த நிலையில் காணப்படும் மகா கந்தக் குளத்தின் மேற்குப் பகுதி பண்டைய காலத்தில் இந்துக்கள் வாழ்ந்த பகுதியாகவும், இந்து சமயம் தழைத்தோங்கிய பகுதியாகவும் விளங்கியிருக்க வேண்டும் எனக் கூறக் கூடியதாக உள்ளது.



*மகா கந்தக் குளத்தின் வரைபடம்*

## மகா கந்தக் குளத்தின் அருகில் இந்துக்கல் மலை

குளத்தின் மேற்கில் உள்ள மலைப்பகுதியில் ஒன்று 'பம்புத்திமலை' எனவும் அடுத்தது 'ஹிந்து கல கந்த' எனவும் அழைக்கப்படுகிறது. அது 'இந்து கல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலை' என்பதின் பண்டைய பெயராக இருக்க வேண்டும். பிற்காலத்தில் இப்பெயர் மருவி 'ஹிந்து கல கந்த' என்றழைக்கப்படுகிறது. அடுத்ததாக உள்ள பம்புத்திமலை என்பதன் மூலப்பெயர் 'பாம்புப் புற்று மலை' என்பதாகவும், இதுவே தற்போது திரிபடைந்து பம்புத்திமலை என அழைக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. இது நாகவழிபாடு நிலவிய மலையாக இருக்கலாம்.

## கண்டியிலிருந்து கிழக்குப் பகுதிக்கு வரும் பண்டைய முக்கிய தரைப் பாதை

இங்கு நிலவிய பண்டைய கந்த வழிபாட்டிற்கும், இக்குளத்திற்கும் ஓர் முக்கிய தொடர்புள்ளதை அவதானிக்கக் கூடியதாய் உள்ளது. இக்குளம் பிற்காலத்தில் 'மகா கண்டிய' என சிங்களத்திலும், 'கண்டியக் கட்டு' என தமிழிலும் அழைக்கப்பட்டது. முக்கியமாக 'மகா கண்டிய குளம்' என்பதே பழைய பெயராகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கண்டி இராச்சியத்திலிருந்து கிழக்குப் பகுதிக்கு வரும் பண்டைய பாதையாக இப்பகுதி விளங்கியது. இக்குளம் காக்கவண்ண திஸ்ஸன் காலத்தில் இருந்ததாக குறிப்புகள் இருந்தாலும் யாரால் இது கட்டப்பட்டது என்பதற்கான குறிப்புகள் கிடைக்கப் பெறவில்லை.

## கந்தசுவாமி கோயில் - கல்முனை

கல்முனை நகரின் கிழக்குப் பக்கத்தில் அம்மன் கோயில் வீதியில் இவ்வாலயம் அமைந்துள்ளது. இவ்வாலயம் சுமார் 200 வருட பாரம்பரியம்மிக்கது எனக் கூறப்படுகின்ற போதிலும், இங்கு காணப்படும் விக்கிரகங்களும், தொல்பொருட் சின்னங்களும் இது சுமார், 500 வருடங்களுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்தது என்பதை உணர்த்துகின்றன.



*கல்முனை கந்தசுவாமி கோயில்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1000 வருடங்களுக்கு முன்பு இந்துக்கள் குடியேறிய கண்டுமுனை

பொ.ஆ. 998-1030 வரையான காலப்பகுதியில் கஜனி முகம்மதுவின் படை எடுப்பின் போது வடமதுரையிலிருந்து வந்த இந்துக்கள் கரை சேர்ந்த இடமே கண்டுமுனையாகும். பின்பு இம்மக்களுடன் மதுரையிலிருந்து வந்த தமிழ் வர்த்தகர்களும் தொடர்புகளை ஏற்படுத்திய போது கண்டுமுனை சிறிய படகுகள் தரிக்கக்கூடிய ஓர் துறையாக விளங்கியது. இக்காலகட்டத்திலேயே கல்முனையில் முதன்முதல் இங்கு குடியமர்ந்த இந்துக்களால் கோயில்கள் அமைக்கப்பட்டன. கல்முனையில் முதன்முதல் அமைக்கப்பட்டது முருகன் கோயிலே எனக் கூறப்படுகிறது. இங்கு வேல் வழிபாடு நிலவியது.

இதே காலப்பகுதியில் இலங்கையை சோழர் ஆட்சி செய்து வந்தனர். அப்போது கிழக்கிலங்கைப் பகுதியை கதிர்சுதன் எனும் சோழ சிற்றரசன் ஆட்சி செய்து வந்தான். இவன் காலத்தில் கண்டுமுனையில் இருந்த ஆலயங்கள் சிறப்புற்று விளங்கின. அதன்பின் இவ்விடம் ''கல்லேறுமுனைத் துறை'' என அழைக்கப்பட்டு பின்பு கல்முனை எனத் திரிபடைந்ததாகவும் தெரியவருகிறது.

பொ.ஆ. 13 ஆம் நூற்றாண்டின் மாகோன் காலத்திலும், அதன்பின் பாண்டியர் கிழக்கிலங்கையை ஆட்சி செய்த காலத்திலும் கல்முனையிலிருந்த வேல் கோயில் சிறப்புற்று விளங்கியது. பின்பு பொ.ஆ. 16 ஆம் நூற்றாண்டு போர்த்துக்கேயரால் இவ்வாலயம் அழிக்கப்பட்டதாக நம்பப்படுகிறது.



பண்டைய சிவலிங்கம்

## முனைகளில் ஆலயங்கள் அமைத்த இந்துக்கள்

கண்டுமுனையிலிருந்த சைவ ஆலயங்களை தடம் தெரியாமல் அழிந்து போனமைக்கு இன்னுமோர் காரணமும் இங்கே உற்று நோக்கத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழர் காலத்திலே கண்டுமுனைக்கும், மருதமுனைக்கும் இடைப்பட்ட கரையோரம் ஓர் குடாவாக உருப் பெற்றிருந்தது. இப்பகுதியில் குடியமர்ந்த இந்துக்கள் கண்டுமுனையின் முனைப்பகுதியில் ஆலயமொன்றை அமைத்து வழிபட்டு வந்ததாகவும், இப்பகுதியில் தீவிர கடலரிப்பின் காரணமாக இம்முனைப் பகுதி அரிக்கப்பட்டு கடலில் மூழ்கியபோது இங்கிருந்த ஆலயமும் அழிந்து கடலில் மூழ்கிவிட்டதாகவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இலங்கையில் கரையோரங்களிலிருந்த முனைகளில் இந்துக்கள் பல கோயில்களை அமைத்து வழிபட்டு வந்தமை இங்கே குறிப்பிடத்தக்கது.

வடக்கில் கீரிமலைமுனை, பருத்தித்துறைமுனை, பூநகரி, கல்முனை, கௌதாரிமுனை, பாலாவி முனை, மேற்கில் குதிரமலை முனை, கற்பிட்டி முனை, காரைதீவுமுனை, நீர்கொழும்புமுனை,பெந்தோட்டைமுனை, தெற்கில் வெலிகாமம்முனை, தெய்வேந்திரா முனை, கிரிந்தமுனை, பிராமண தொட்டமுனை, கிழக்கில் முள்ளுத்தீவு முனை, தென்னமரவாடிமுனை, கல்லாறுமுனை, திருகோணமலை முனை, இலங்கைத்துறை முனை, நாச்சி வன்தீவு முனை, கோட்டை முனை, கோட்டைக் கல்லாறு முனை, சங்கமான் கண்டி முனை, பானமை முனை, உகந்தை முனை, கூமுனை போன்ற முனைப் பகுதிகளில் கோயில் அமைக்கப்பட்டிருந்தமை பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன இதன்படி கண்டுமுனையிலும் ஆலயம் அமைக்கப்பட்டிக்க வேண்டும் எனக் கருத இடமுண்டு. போர்த்துக்கேயர் காலத்திற்கு முன்பே கடலரிப்பினால் கண்டுமுனைக் கோயில்கள் அழிந்து போனமையால் இவை பற்றிய குறிப்புக்கள் எழுதப்படவில்லை என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்



புராதன ஐம்பொன் வேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒல்லாந்தர் காலத்தில் கல்முனை

பொ.ஆ. 1637 இல் ஒல்லாந்தர் காலத்தில் கறுவாய்பட்டை வர்த்தகம் சம்பந்தமாக ஒல்லாந்து தேசத்திலிருந்து ஜோன்தைசென் மற்றும் அன்ரூ ஹெல்மொண்ட் எனப்படும் இரு அரச பிரதிநிதிகள் கல்முனை துறையில் வந்திறங்கி பின்பு இங்கிருந்த அரசனின் நிதிமந்திரியை சந்தித்து சென்றமை பற்றிய குறிப்புக்களும் உள்ளது. இதன்படி சோழர் காலம் முதல் கல்முனை ஓர் முக்கிய துறையாக விளங்கியதோடு, இங்கிருந்த ஆலயங்களும் சிறப்புற்று விளங்கியிருந்தன எனக் கூறக்கூடியதாக உள்ளது.



வெள்ளைக்கல் நாகசிலை

## கதிர்காம பாத யாத்திரீகர்களால் உருவாக்கம் பெற்ற திறந்த வெளி வேல் கோயில்

இங்கு கிழக்கு நோக்கியவாறு முருகன் கோயிலும், ஆலயத்தின் முன்பாக இடது பக்கத்தில் வடக்கு நோக்கியவாறு கண்ணகி அம்மன் கோயிலும் அமைக்கப்பட்டுள்ளன. கல்முனை நகரில் உள்ள மிகப் பழமை வாய்ந்த கோயிலாக கந்தசுவாமி கோயில் விளங்குகிறது. மிகப் பண்டைய காலத்தில் கதிர்காமம் செல்லும் பாத யாத்திரீகர்கள் சிலர் இவ்விடத்தில் தங்கியபோது, ஓர் வேலை வைத்து வழிபட்டு வந்ததாகவும், காலப்போக்கில் இது ஓர் திறந்த வெளி வேல் கோயிலாகவும் பின்பு இங்கிருந்த மக்களால் சிறிது சிறிதாக ஆலயமாக அமைக்கப்பட்டு வழிபடப்பட்டு வந்ததாகவும் கூறப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகிறது. வருடா வருடம் கதிர்காமம் செல்லும் பாத யாத்திரீகர்கள் இவ்வால யத்தை பயபக்தியோடு பூஜித்து வந்ததாகவும் தெரிய வருகிறது.

## பண்டைய கருங்கல் விக்கிரகங்களும், சிவலிங்கமும்

இங்கு காணப்படும் தொல்பொருட் சின்னங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். ஒன்று புராதன கல் விக்கிரகங்கள், அடுத்தது பண்டைய பித்தளைச் சிலைகள், மூன்றாவது ஏனைய கருங்கல்லிலான கோயிலின் பாகங்கள் என்பனவாகும். இவற்றில் கல்லினால் ஆன புராதன நாகதம்பிரான் விக்கிரகம் முக்கியமானதாகும். இது வெள்ளைக் கல்லில் செதுக்கப்பட்ட ஐந்து தலை நாகத்தின் சிலையாகும். இச்சிலை கரடுமுரடான தோற்றமுடையது. அடுத்த தாக வட்டவடிவமான பீடத்துடன் காணப்படும் சிறிய சிவலிங்கமும் மிகத் தொன்மை வாய்ந்ததாகத் தென்படுகிறது. கல்லினால் கரடுமுரடாக செதுக்கப் பட்டிருக்கும் இந்த லிங்கத்தின் ஆவுடையார் மட்டுமே தொன்மையானதாகத் தெரிகிறது. ஆவுடையாரின் மத்தியில் லிங்கம் இருக்கும் இடத்தில் அதே அளவிற்கேற்ப ஓர் கறுப்பு பளிங்குக் கல்லினால் ஆன லிங்கம் பொருத்தப் பட்டுள்ளது. இந்த ஆவுடையாரும், நாகதம்பிரான் சிலையும் சுமார் 500 வருடங்களுக்கு மேற்பட்டவை எனக் கூறக்கூடியதாக உள்ளன. மேலும் ஓர் பழமை வாய்ந்த கருங்கல் விநாயகர் சிலையும் இவ்வாலயத்தில் காணப் படுகிறது. நேர்த்தியற்ற முறையில் செதுக்கப்பட்டிருக்கும் இச்சிலையின் வடிவமே இதன் தொன்மையைப் பறை சாற்றுகிறது. இவ்விக்கிரகம் சுமார் 300 - 400 வருடங்களுக்கு மேல் பழமையானதாகத் தெரிகிறது.

## புராதன பித்தளை தெய்வப் படிமங்கள்

கல்முனை கந்தசுவாமி கோயிலில் காணப்படும் தொல்பொருட் சின்னங்களில் சில பித்தளைப் பொருட்களும், தெய்வ படிமங்களும் அடங்குகின்றன. வலது கையிலே சிலம்பொன்றை ஏந்திய வண்ணம் கண்ணகி அம்மனின் படிமம் காணப்படுகிறது. கண்ணகியம்மனின் சடாமுடி மீன் வடிவத்தில் இடது பக்கம் சரிந்த நிலையில் வார்க்கப்பட்டுள்ளது. இது நின்ற நிலையில் உள்ளது. இது போலவே நின்ற நிலையில் உள்ள ஓர் மீனாட்சி அம்மன் படிமமும் இங்கே காணப்படுகிறது. சிறிய வடிவமுள்ள இச்சிலை சுதேச முறைப்படி வார்க்கப்பட்டுள்ளது. இதன் இடது கையில் கிளியொன்றும் உள்ளது. நீண்ட கூம்பு வடிவில் சடாமுடியும், காதுகளுக்குப் பின்னால் முடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீளமாகத் தொங்கி தோள்கள் இரண்டையும் முட்டிய வண்ணமும் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.



புராதன ஐம்பொன் கண்ணகி படிமம்

## பித்தளை வேலும், நாகதீபமும்

இவ்வாலயத்தில் உள்ள பழமைவாய்ந்த தொல்பொருட் சின்னங்களில் பித்தளையால் செய்யப்பட்ட வேல் ஒன்றும் காணப்படுகிறது. இங்குள்ள பித்தளைப் பொருட்களில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ள நாகதீபம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஐந்து தலைகளைக் கொண்ட இந்நாக தீபத்தின் இடது பக்கம் 'காசிநாதர்' எனவும் வலது பக்கம் 'சிறாப்பு 1832' எனவும் எழுதப்பட்டுள்ளது. இதன் மூலம் 1832ஆம் ஆண்டு காசிநாதர் என்ற பெயருடையவரால் இந்நாகதீபம் ஆலயத்திற்கு வழங்கப்பட்டுள்ளமை தெரிகிறது. இதன்படி இந்நாக தீபம் 180 ஆண்டுகள் பழமையானது என்பதும் தெரியவருகிறது.



*1832 இல் வழங்கப்பட்ட நாகதீபம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயத்தின் பண்டைய வரலாற்றை காலத்தின் அடிப்படையில் அறியக்கூடிய வகையில் உள்ள இந்நாகதீபம் மிக முக்கியமானதும், பாதுகாக்கப்பட வேண்டியதுமான அரிய பொக்கிஷமாகும். இங்குள்ள பித்தளையால் செய்யப்பட்ட படிமங்களும், பொருட்களும் சுமார் 200 ஆண்டுகள் பழமை வாய்ந்தவை எனவும் கூறக் கூடியதாக உள்ளது.

## கந்தசுவாமி கோயிலில் காணப்படும் ஏனைய தொல்பொருட் சின்னங்கள்

இவ்வாலயத்தில் மேலும் பல தொல்பொருட் சின்னங்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன. ஆலய வாசலில் ஓர் வட்டவடிவமான கல் உள்ளது. இது முன்னடிக் கல்லாகப் பயன்படுத்தப்படுகிறது. கருங்கல்லினால் செய்யப் பட்ட புராதன தூண்களின் இரண்டு துண்டுகளும் ஆலய வளவில் உள்ளன. மேலும் ஒரு கல் துண்டு தெய்வச் சிலை வைக்கப்பட்ட பீடக் கல்லாக காணப்படுகின்றது. மேலும் கல் கதவு நிலையின் தூண்கள் நான்கும் இங்கு காணப்படுகின்றன. இவற்றை மேலும், கீழும் பொருத்தக் கூடிய வகையில் தூணின் அடிப்பாகம் சதுர வடிவில் உட்குழிவாகவும், மேல்பாகம் சதுர வடிவில் புடைப்பாகவும் செதுக்கப்பட்டுள்ளன. தூணின் ஒரு பக்க விளிம்பில் அரை அங்குலத்தில் ஓர் பள்ளம் மேலிருந்து கீழே வரை வெட்டப்பட்டுள்ளது.



கல்வெட்டு பொறிக்கப்பட்ட தூண்

## சிதைந்த நிலையில் காணப்படும் தூண் கல்வெட்டு


இக்கதவு நிலைகளில் ஒரு தூணின் மேல் பாகத்தில் சிதைந்த நிலையில் சில எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளமையை உற்று நோக்கினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இது ஓர் தூண் கல்வெட்டாகும். இதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பதை விளங்கிக் கொள்ள முடியாத வகையில் எழுத்துக்கள் சிதைந்து காணப்படுகின்றன. நிச்சயமாக ஆலயம் சம்பந்தமான ஏதோ முக்கிய குறிப்புகள் இதில் பொறிக்கப்பட்டிருக்கலாம் என்பதில் ஐயமில்லை.

## மாணிக்க வைர விநாயகர் கோயில் - தம்பட்டை

அக்கரைப்பற்றுக்கும், திருக்கோயிலுக்கும் இடையில் தம்பட்டை எனும் பழம் தமிழ் கிராமம் அமைந்துள்ளது. அக்கரைப்பற்றின் தென் எல்லையிலிருந்து திருக்கோயில் வரை 13 கி.மீ. நீளத்தில் பரந்து காணப்படும் பெரிய களப்பு வாவிக்கும், வங்கக் கடலுக்கும் இடைப்பட்ட மிகவும் ஒடுங்கிய நிலப்பரப்பில் இக்கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் மிகப் பண்டைய காலத்தில் மாணிக்க வைர விநாயகர் கோயில் அமைக்கப்பட்டது.



*பெரிய களப்பு வாவி*

### 4 கி.மீ. நீளமுள்ள ஒடுங்கிய மணல் தீவு

தம்பட்டை கிராமம் 4 கி.மீ. நீளமுடைய ஓர் ஒடுங்கிய நிலப்பரப்பில் காணப்படுகிறது. இக்கிராமத்தின் மத்திய பகுதியே அதிக அகலமுடையதாகும். இது சுமார் 700 மீற்றர் அகலமுடையது. ஏனைய பகுதிகள் 200 முதல் 300 மீற்றர் அகலமுடையவையாகக் காணப்படுகின்றன. தம்பட்டை ஓர் நீளமான ஒடுங்கிய மணல் தீவாகும். பரந்து விரிந்து காணப்படும் பெரிய களப்பு வாவியின் நீர் தம்பட்டையின் வடக்கில் உள்ள சின்ன முகத்துவாரத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடாகவும், தம்பட்டையின் தெற்கில் உள்ள பெரிய முகத்துவாரத்தின் ஊடாகவும் வங்கக் கடலுடன் சங்கமித்து, இவ்விரு முகத்துவாரங்களுக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பை ஓர் தீவாக உருவாக்கியுள்ளது. பிற்காலத்தில் இவ்விரு நீர்ப்பகுதிகளுக்கு மேல் பாலங்கள் அமைக்கப்பட்டதன் மூலம் தம்பட்டை கிராமம் பெரு நிலப்பரப்புடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது.



பெரிய முகத்துவாரம்

## மனுநேயகயபாகு அந்தணர்களைக் குடியமர்த்திய தீவு

தம்பட்டையின் வரலாறு பொ.ஆ. 1 ஆம் நூற்றாண்டில் தொடங்குகிறது. இக்காலப் பகுதியில் உன்னரசுகிரி இராச்சியத்தை ஆட்சி செய்து வந்த மனுநேயகயபாகு எனும் மன்னன் நாகர் முனை எனும் திருக்கோயில் முருகன் ஆலயத்தை புனரமைத்து, இவ்வாலயத்தில் பணி செய்வதற்கென வந்த அந்தணர்களை மக்கள் குடியிருப்புகள் இல்லாத ஓர் தீவாக விளங்கிய ஓரிடத்தில் குடியமர்த்தி, அத்தீவிற்கு தம்பட்டார் ஊர் எனப் பெயரிட்டதாகவும், மேலும் பட்டையும், வரிசைகளையும் கொடுத்து மாணிக்க வைரத்தினால் ஆன ஓர் விநாயகர் விக்கிரகத்தையும் அங்கே ஸ்தாபித்து, அருகில் தனது தாயின் பெயரான தம்பதி நல்லாள் பெயரில் ஓர் வாவியும் வெட்டி அதற்கு தம்பதிவில் எனப் பெயரிட்டு பின்பு உன்னரசுகிரிக்குச் சென்றதாக மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது.

## திருக்கோயில் பகுதியில் இருந்த அக்கிரகாரம்

மட்டக்களப்பு மான்மியத்தின் குறிப்புகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மக்கள் தொடர்பின்றி பெருநிலப்பரப்புடன் நீரினால் துண்டிக்கப்பட்டிருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் இடத்தில் மன்னன் அந்தணர்களைக் குடியமர்த்தியமை அவர்களின் ஆச்சாரத்தை பேணும் வகையில் மன்னனால் செய்யப்பட்ட செயலாகும். அத்துடன் அவர்களுக்கென ஓர் விநாயகர் ஆலயத்தையும் ஸ்தாபித்து அந்தண குலத்தவர்கள் மட்டும் தனியாக வழிபடும் வகையில் வழி செய்தமையையும் ஆராய்ந்து பார்க்கும் போது தம்பட்டை கிராமம் இப்பகுதியில் ஓர் அக்கிரகாரமாக இருந்திருக்க வேண்டும் என்பதில் சந்தேகமில்லை. இங்கிருந்து அயலிலுள்ள கோயில்கள் அனைத்தையும் பராமரித்து நித்திய பூஜைகளை செய்யும் பணியும் இவர்களுக்கு மன்னனால் வழங்கப்பட்டிருக்கும்.

நான்கு வேதங்களும் கற்ற பிராமணர்களுக்காக மன்னர்களால் சகல வசதிகளுடன் மானியமாக வழங்கப்பட்ட கிராமங்கள் பிரம்மதேயங்கள் என அழைக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட பிரம்மதேயங்கள் பல இலங்கையில் பண்டைய காலங்களில் இருந்தன. இவை போன்ற ஓர் பிரம்மதேயமாகக் கூட தம்பட்டை ஊர் விளங்கியிருக்கலாம்.



சின்ன முகத்துவாரம்

## பண்டைய காலத்தில் தனிச் சிறப்புடைய பெறுமதி மிக்க ஆலயம்

தம்பட்டையில் மன்னனால் ஸ்தாபிக்கப்பட்ட விநாயகர் கோயில் அக்காலத்தில் மிகவும் சிறப்புற்று விளங்கியிருக்க வேண்டும். ஏனெனில் இவ் விக்கிரகம் மாணிக்கம், வைரம் போன்றவை பதிக்கப்பட்ட விநாயகர் விக்கிரகமாகும். எனவே பெறுமதிமிக்க இவ்விக்கிரகம் பாதுகாப்பான ஓர் இடத்தில் இருக்க வேண்டும் என்பதற்காகவே இது தம்பட்டை ஊரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். இதன் காரணமாக இவ்வாலயம் தனிச் சிறப்புடன் விளங்கியிருக்கும் எனக் கூறக்கூடியதாக உள்ளது.

இது போன்று மாணிக்கம், வைரம் ஆகியவை பதிக்கப்பட்ட ஓர் சிவலிங்கம் பண்டைய காலத்தில் இந்தியாவின் மேற்குக் கரையிலிருந்த சோமநாதர் கோயிலில் பிரதிஸ்டை செய்யப்பட்டு மிகப் பிரசித்தி பெற்று விளங்கியதாகவும், கஜனி முகம்மது இவ்வாலயத்தை அழித்து இப்பெறுமதி மிக்க லிங்கத்தை எடுத்துச் சென்றதாகவும் வரலாற்றுக் குறிப்புகள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. மட்டக்களப்பு மான்மியத்தின் படி தம்பட்டை ஊரில் இருந்த மாணிக்க வைர விநாயகர் கோயில் சுமார் 2000 வருடம் பழமை வாய்ந்ததாகும்.

## சித்தி விநாயகர் கோயில் - சேனைக்குடியிருப்பு, கல்முனை

கல்முனை நகரிலிருந்து கிட்டங்கி துறையூடாக சவளக்கடைக்குச் செல்லும் வீதியில் கல்முனையிலிருந்து சுமார் 4 கி.மீ. தூரத்தில் மட்டக்களப்பு வாவியின் கிழக்குப் பக்கத்தில் சேனைக்குடியிருப்பு எனும் பழந்தமிழ்க் கிராமம் அமைந் துள்ளது. இக்கிராமத்தின் தென்பகுதியிலுள்ள பெருங்குளம் எனும் குளத்தின் அருகில் இவ்விநாயகர் கோயில் அமைந்துள்ளது.

### 350 வருடங்கள் பழமையான ஆலயம்

இவ்வாலயம் சுமார் 350 வருடங்கள் பழமை வாய்ந்தது எனக் கூறப்படுகிறது. 17 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், ஒல்லாந்தர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை ஆட்சி செய்து கொண்டிருந்த காலத்தில் மட்டக்களப்பைச் சேர்ந்த சைவப் பெரியாரான காசிநாதர் எனும் கணக்குப்பிள்ளை ஒருவரால் இவ்வாலயம் ஸ்தாபிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. இக்காலகட்டத்தில் மட்டக்களப்பு வாவியின் முக்கிய துறையாக கிட்டங்கித்துறை விளங்கிய தாகவும், பொருட்களை ஏற்றுமதி செய்வதும் இறக்குமதி செய்வதும் இத் துறையில் மும்முரமாக நடைபெற்று வந்ததாகவும் ஆய்வுகள் கூறுகின்றன.

### சுமார் 800 ஆண்டுகள் பழமை வாய்ந்த கிராமம்

சேனைக் குடியிருப்பு விநாயகர் ஆலயம் சுமார் 350 வருடங்களுக்கு முன்பு ஸ்தாபிக்கப்பட்டாலும், இக்கிராமம் இதை விட மிகப் பழமை வாய்ந்தது என்பதை வரலாற்று ஆய்வுக் குறிப்புகளின் மூலமாக பெறக் கூடியதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது. இக்கிராம மக்கள் வீரமுனைப் பகுதியிலிருந்து இங்கு வந்ததாக அறியப்படுகிறது. வீரமுனைக் கிராமத்தில் பொ.ஆ. 8ஆம் நூற்றாண்டில் குடியேறிய மக்களில் சிலர் சில காலத்தின் பின்பு வீரமுனையிலிருந்து அருகிலிருந்த வேறு சில இடங்களுக்குச் சென்று குடியமர்ந்ததாக தெரிய வருகிறது. எனவே சேனைக் குடியிருப்பு கிராமம் பொ.ஆ. 9 ஆம் அல்லது 10 ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றிருக்கலாம். அல்லது இதற்கு சற்று பிற்பட்ட காலத்தில் கூட இக்கிராமம் உருவாகியிருக்கலாம். எனவே சேனைக் குடியிருப்பு கிராமம் சுமார் 1000 அல்லது 800 ஆண்டுகள் பழமை வாய்ந்தது என நம்ப இடமுண்டு.



*சேனைக்குடியிருப்பு விநாயகர் கோயில்*

## போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட பண்டைய ஆலயம்

சேனைக்குடியிருப்பு கிராமம் பொ.ஆ. 10 ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றுள்ளது. இருப்பினும் இக்கிராமத்தில் 1000 அல்லது 800 ஆண்டுகள் பழமையான ஆலயம் எதுவும் காணப்படவில்லை. இங்குள்ள பழமையான ஆலயம் கூட சுமார் 350 வருட பாரம்பரியத்தைக் கொண்டதே. எனவே கிராமம் தோற்றம் பெற்ற காலத்தில் ஸ்தாபிக்கப்பட்ட கோயில் எந்த தெய்வத் திற்காக அமைக்கப்பட்டிருந்தது என்பதை அறிந்துகொள்ளக் கூடிய எவ்வித சான்றுகளும் இங்கு கிடைக்கவில்லை.

அதே சமயம் இக்கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின்போது சித்திவிநாயகர் கோயிலில் காணப்பட்ட சில தொல்பொருள் சின்னங்கள் சித்திவிநாயகர் கோயிலுக்குரியவை அல்ல எனவும், இவை வேறு ஓர் கோயிலுக்குரியவை எனவும் இங்குள்ள முதியவர்கள் கூறினர். இதன்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு ஓர் பண்டைய ஆலயம் இருந்துள்ளது எனவும், இது போர்த்துக்கேயர் காலத்தில் அழிக்கப்பட்டிருக்கலாம் எனவும் நம்ப இடமுண்டு.

## சேனைக்குடியிருப்பில் அமைந்திருந்த ஆதி கோயில்

சேனைக் குடியிருப்பில் அமைந்திருந்து அழிந்துபோன ஆலயம் பிள்ளை யாருக்குரிய ஆலயமாக இருக்க வேண்டும் என யூகிக்கக் கூடியதாக உள்ளது. ஏனெனில் இங்குள்ள மக்கள் பண்டைய காலத்தில் வீரமுனையிலிருந்து குடியேறியவர்களாவர். வீரமுனை மக்களின் குலதெய்வம் பிள்ளையார் என்பதால், இம்மக்களின் சந்ததியினர் குடியேறிய புதிய கிராமத்திலும் பிள்ளையாருக்கே கோயில் அமைத்திருப்பர் என்பதில் ஐயமில்லை. அத்து டன் இக்கோயில் கிட்டங்கித் துறையின் அருகில் அல்லது குளக்கரையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கலாம் எனவும் கூறப்படுகிறது. எனவே இன்று நாம் காணும் சித்தி விநாயகர் கோயிலின் மேற்குப் பக்கத்தில் பண்டைய ஆலயம் இருந்திருக்கலாம் எனக்கூறக் கூடியதாக உள்ளது.



ஆலயமும் பெருங்குளமும்

## சித்திவிநாயகர் கோயிலில் காணப்படும் தொல்பொருட் சின்னங்கள்

இவ்வாலயத்தில் பல புராதன தொல்பொருட் சின்னங்கள் காணப்படுகின்றன. கருவறையில் உள்ள விநாயகர் விக்கிரகம் புராதனமானது. மற்றும் பலிபீடம், மூஷிகம் போன்றவையும், கருவறை கோமுகியும் ஆலயத்தின் பண்டைய சின்னங்களாகும். இவை தவிர மூன்று புராதன கருங்கல் கதவு நிலைகள் இங்கு காணப்படுகின்றன. ஆலயத்தின் அந்தராள கதவு நிலை, நிருத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டபத்தின் தெற்கு வாசல் கதவு நிலை மற்றும் இம்மண்டபத்தின் கிழக்கு வாசல் கதவுநிலை ஆகியவை புராதனமானவையாகும். இவற்றில் கிழக்கு வாசல் கதவுநிலை சிற்பங்கள் பொறிக்கப்பட்டதாகும். இதன் கீழே கருங் கல்லிலான படிக்கல்லும் காணப்பட்டது.

இத்தொல்பொருட் சின்னங்களில் இரண்டு கதவு நிலைகள் மிகப் புராதன மானவையாகும். இவை இவ்வாலயத்திற்குரியவை அல்ல எனவும் இவையே பண்டைய ஆலயத்தின் எச்சங்கள் எனவும் கூறப்படுகிறது. கடந்த 2003 ஆம் ஆண்டு இவ்வாலயத்தில் மேற்கொண்ட கள ஆய்வின் போது மேற்குறிப் பிடப்பட்டுள்ள புராதன சின்னங்கள் காணப்பட்ட போதும், அண்மையில் ஆலயம் புனரமைக்கப்பட்ட போது இவற்றில் சிலவற்றை அத்திவாரத்துள் போட்டு மூடிவிட்டமை கவலைக்குரிய விடயமாகும். இதன் மூலம் எமது பண்டைய வரலாறும் மூடப்பட்டு மறைந்து போய்விடுகிறது.



*மணிக்கோபுரம்*

## கிராமத்தில் உள்ள ஆறு கோயில்களில் பழமையான விநாயகர் கோயில்

சேனைக் குடியிருப்பில் மொத்தமாக ஆறு கோயில்கள் காணப்படுகின்றன. இவற்றில் மூன்று விநாயகர் கோயில்களும், மூன்று அம்மன் கோயில்களும் அடங்குகின்றன. இக்கோயில்களில் மிகப் பழமை வாய்ந்த கோயிலாக விளங்குவது சித்தி விநாயகர் கோயிலாகும். இதற்கு பின்பு காளி கோயிலும், அதன் பின்பு மாரியம்மன் கோயிலும், பிற்காலங்களில் காமாட்சி அம்மன் கோயிலும், கிட்டங்கிப் பிள்ளையார் கோயிலும், முத்து விநாயகர் கோயிலும் அமைக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதி வில்லுப் பிள்ளையார் கோயில் - வளத்தாப்பிட்டி

அம்பாறை நகரிலிருந்து கல்முனைக்குச் செல்லும் வீதியில் சுமார் 5 கி.மீ. தூரத்தில் வளத்தாப்பிட்டி எனும் பழந்தமிழ் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தின் வடக்குப் பக்கமாக பிரதான வீதியிலிருந்து சுமார் 300 மீற்றர் தூரத்தில் வளத்தாப்பிட்டி குளம் அமைந்துள்ளது. இக்குளத்தின் கரையிலே கிராமத்தின் வடக்கு எல்லையில் சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன்பு ஸ்தாபிக் கப்பட்டதே ஆதி வில்லுப் பிள்ளையார் கோயிலாகும்.



*வளத்தாப்பிட்டி ஆதி வில்லுப் பிள்ளையார் கோயில்*

## 5000 ஏக்கர் நெற் காணிகளுக்கு பாசனம் வழங்கிய உடங்கை ஆறும், அதன் குறுக்கே கட்டப்பட்ட குளமும்

பண்டைய காலத்திலே வளத்தாப்பிட்டி, மல்வத்தை, மல்லிகைத்தீவு ஆகிய பகுதிகளில் இருந்த சுமார் 5000 ஏக்கர் நெற் காணிகளுக்கு நீர் வழங்கிய வளம் மிகு ஆறாக விளங்கியது உடங்கை எனும் ஆறாகும். அம்பாறைக் குளத்தின் வடபகுதியில் உருவாகி அம்பாறை - உகனை வீதியை ஊடறுத்து அம்பாறை நகரின் பின்பக்கமாகப் பாய்ந்து புத்தங்கல மலையின் தெற்குப் பக்கமாக ஓடி வளத்தாப்பிட்டி, மல்வத்தை, செந்நெல் கிராமம் ஆகிய கிராமங் களுக்கூடாக பட்டிப்பளை ஆற்றுடன் சங்கமிப்பதே உடங்கை ஆறு என அழைக்கப்படுகிறது. இங்கிருந்து பட்டிப்பளை ஆற்றுடன் கலந்து மாவடிப் பள்ளி, கரவாகு ஆகிய கிராமங்களுக்கூடாக நற்பிட்டிமுனைக்கருகில் மட்டக் களப்பு வாவியில் உடங்கை ஆற்று நீர் சங்கமாகிறது.

சுமார் 16 கி.மீ. நீளமான உடங்கை ஆற்றின் குறுக்கே ஓர் அணையைக் கட்டி நீரைத் தேக்கி வைப்பதன் மூலம் இப்பகுதியை பொன் விளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமியாக மாற்றும் நோக்கில் பண்டைய காலத்தில் இப்பகுதியை ஆட்சி செய்த தமிழ் சிற்றரசர்கள் வளத்தாப்பிட்டியில் ஆற்றின் குறுக்கே ஓர் அணையைக் கட்டி குளத்தை உருவாக்கியுள்ளனர். குளத்திற்கு பாதுகாப்பாக அருகில் இருந்த முதிரை மரத்தின் கீழே விநாயகர் சிலையை ஸ்தாபித்து வழிபட்டு வந்துள்ளனர்.



ஆதி கல் விநாயகர்

## வாலசிங்க மன்னன் கட்டிய வளத்தாப்பிட்டி குளம்

வளத்தாப்பிட்டி குளம் பொ.ஆ. 9 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்கும் என யூகிக்கக் கூடியதாக உள்ளது. இக்குளத்தைக் கட்டியவன் சிங்கை நகர் இளவரசனான வாலசிங்கனாக இருக்க வேண்டும். இக்கூற்றை உறுதி செய்வது வாலசிங்க மன்னனால் வீரமுனை சிந்தா யாத்திரைப் பிள்ளையார் கோயிலுக்கு மானியமாக நெற்காணிகள் வழங்கியது பற்றிய செப்பேடாகும். இச்செப்பேடு 'வீரர் முனைச் செப்பேடு' என்ற பெயரில் சீர்பாதகுல வரலாறு எனும் நூலில் பண்டிதர் அருள் செல்வநாயகம் அவர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இச்செப்பேட்டின் படி கிண்ணறையம் வெளி, மல்வத்தை வெளி, மல்வத்தைக் குளம், தரவை முன்மாரி, கரந்தை முன்மாரி எனும் 5 நெல் வயல் காணிகள் வாலசிங்க மன்னனால் ஆலயத்திற்கு மானியமாக வழங்கப் பட்டுள்ளன. இந்நெற்காணிகள் அனைத்தும் வளத்தாப்பிட்டி, மல்வத்தை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகைத் தீவு ஆகிய இடங்களிலேயே அமைந்துள்ளன. இக்காணிகளில் நெற்பயிர் செய்து இதன் வருமானத்தை ஆலயத்திற்கு வழங்க வேண்டு மென்பதே வாலசிங்க மன்னனின் வேண்டுகோளாகும். எனவே இந்நெற் காணிகள் நல்ல விளைச்சலைக் கொடுக்க வேண்டுமானால் இவற்றிற்கு நிரந்தர நீர்ப்பாசன வசதி இருக்க வேண்டும். எனவே செப்பேட்டை எழுது வதற்கு முன்பு மன்னன் இந்நெற்காணிகளுக்கு நீர் கிடைக்கும் பொறி முறையை ஏற்படுத்தியுள்ளான். அதன்படி இப்பகுதியில் ஓடிய உடங்கை ஆற்றை இடைமறித்து வளத்தாப்பிட்டி குளத்தை கட்டியுள்ளான்.



வளத்தாப்பிட்டி குளம்

## வீரமுனை கிராமத்துடன் தொடர்புடைய வளத்தாப்பிட்டி கிராமமும், கோயில்களும்

இம்மன்னன் குளத்தின் கரையிலே இக்குளத்திற்கு பாதுகாப்பாக இங்கிருந்த முதிரை மரத்தின் கீழ் விநாயகரை பிரதிஸ்டை செய்து வழிபட்டுள்ளான். வாலசிங்க மன்னன் சென்ற பின்பு இங்குள்ள காணிகளில் விவசாயம் செய்வதற்காக வீரமுனையிலிருந்து சிலர் வந்து குளத்தின் அருகிலுள்ள மேட்டுப் பகுதியில் தங்கியிருந்து வயல் வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். சில காலத்தின் பின்பு அவர்கள் குடும்பத்துடன் இங்கு குடியமர்ந்துள்ளனர். இது வளத்தாப்பிட்டியில் மக்கள் இரண்டாவது தடவையாக குடியேறிய சந்தர்ப்பமாகும்.

வாலசிங்க மன்னனால் நியமிக்கப்பட்ட அரசப் பிரதிநிதி ஒருவன் வளத்தாப்பிட்டி கிராமத்தையும், குளத்தையும், வயல் நிலங்களையும் பராமரித்து வந்துள்ளான். மலைப் பாறையில் இருந்த சிவன் கோயிலும் குளக்கரையில் இருந்த விநாயகர் கோயிலும் நன்கு பராமரிக்கப்பட்டு செழிப்புடன் விளங்கியுள்ளன. வீரமுனைப் பிள்ளையார் கோயிலின் பிரதம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவின் மேற்பார்வையின் கீழ் வளத்தாப்பிட்டி கோயில்கள் இரண்டிலும் விஷேட பூஜைகள், திருவிழாக்கள் நடைபெற்றுள்ளன. வளத்தாப்பிட்டி சிவன் கோயிலின் வலது பக்கத்தில் (வடக்கு பக்கம்) ஓடும் உடங்கை ஆற்றின் இரு பக்கங்களிலும் வாலசிங்க மன்னன் வீரமுனை கோயிலுக்கு மானியமாக எழுதிய நெற்காணிகள் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இக் காணிகள் செப்பேட்டில் கரந்தை முன்மாரி எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. இது கறங்கா வட்டை என அழைக்கப்படுகிறது.

## அம்பாறைப் பகுதியில் சோழரினதும், கலிங்க மாகோனினதும் தொடர்புகள்

சோழர் காலத்தில் பொ.ஆ. 11 ஆம் நூற்றாண்டில் வளத்தாப்பிட்டியிலிருந்த சிவன் கோயிலும், விநாயகர் கோயிலும் சிறப்புற்று விளங்கியுள்ளது. இக்காலப் பகுதியில் வீரமுனையில் நானாதேசிகர் எனும் வணிகர்கள் ஆலயங்களுக்கு தானம் வழங்கியது தொடர்பான மூன்று தமிழ்க் கல் வெட்டுக்கள் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுக்கள் மூலம் அம்பாறைப் பகுதியில் சோழரின் தொடர்பு இருந்தமையும், அவர்கள் ஆலயத் திருப்பணி களில் ஈடுபட்டமையும் உறுதியாகிறது. வீரமுனையுடன் தொடர்புள்ள வளத்தாப்பிட்டி கிராமமும் சோழ வணிகர்களின் போஷிப்பைப் பெற்றிருக்கும் என்பதில் ஐயமில்லை.



*உடங்கை ஆறு*

சோழர் காலத்தின் பின்பு பொ.ஆ. 13 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் மகோனின் ஆட்சி நிலவிய காலத்தில் இப்பகுதி செழிப்புடன் விளங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகோனின் ஆட்சி முடிவுற்ற காலம் முதல் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலை காரணமாக வளத்தாப்பிட்டி பகுதியில் இருந்த மக்கள் கிழக்கு நோக்கி நகர்ந்துள்ளனர். வளத்தாப்பிட்டி கிராமம் பொழிவிழந்து சிதைவடைந்து போயுள்ளது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் ஏற்பட்ட சமய நெருக்கடி காரணமாக இங்கிருந்த ஆலயங்களும் சிதைவடைந்துள்ளன.

## புராதன வளத்தாப்பிட்டி குளமும், கிராமமும்

இன்று நாம் காணும் வளத்தாப்பிட்டி கிராமம் 1958 ஆம் ஆண்டு மீண்டும் தோற்றம் பெற்றதாகும். வளத்தாப்பிட்டியின் தென் கிழக்கில் 2 கி.மீ. தூரத்தில் வயல்களின் மத்தியில் காணப்படும் மல்லிகைத் தீவு எனும் பழந்தமிழ் கிராமமே இன்றைய வளத்தாப்பிட்டி மக்களின் பூர்வீகப் பிரதேசமாகும். 1958 ஆம் ஆண்டில் ஓர் பெரிய வெள்ளம் இப்பகுதியை ஆக்கிரமித்தபோது மல்லிகைத் தீவு கிராமம் முற்றாக நீரில் மூழ்கியுள்ளது. இச்சமயம் இங்கிருந்த மக்கள் மேட்டு நிலப் பகுதிகளை நோக்கி இடம்பெயர்ந்துள்ளனர். அப்போது மல்லிகைத் தீவில் இருந்த சில குடும்பங்கள் வளத்தாப்பிட்டி குளத்தின் தெற்குப் பகுதியில் அமைந்திருந்த மேட்டு நிலத்திற்கு சென்று குடியமர்ந்தனர். தாம் குடியமர்ந்த போது குளத்தின் தெற்குக் கரையில் ஓர் பழமை வாய்ந்த முதிரை மரத்தின் கீழ் ஓர் சிறிய பிள்ளையார் கோயில் இருந்ததாக இங்கிருக்கும் முதியவர்கள் கூறுகின்றனர். இது வளத்தாப்பிட்டியில் மக்கள் மூன்றாவது தடவையாக குடியேறிய காலமாகும்.

பண்டைய காலத்தில் வளத்தாப்பிட்டி குளம் கட்டப்பட்ட போது குளத்திற்கு பாதுகாப்பாக இப்பிள்ளையார் கோயில் அமைக்கப்பட்டுள்ளது. 1990 ஆம் வருடம் கலவரத்தின் போது இக்கிராம மக்கள் இடம் பெயர்ந்து 5 வருடங்களின் பின் இங்கு வந்து பார்த்த போது பழமை வாய்ந்த விநாயகர் கோயிலின் தலவிருட்சமான முதிரை மரம் அடியோடு வெட்டி எடுக்கப்பட்டிருந்ததாக மக்கள் கூறுகின்றனர். இம்மரம் சுமார் 1000 வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்தது என முதியவர்கள் கூறுகின்றனர்.

## R.L புரோஹியரின் புராதன குளங்கள் பற்றிய நூலில் வளத்தாப்பிட்டி குளம் பற்றிய குறிப்புகள்

ஆங்கிலேயர் காலத்திலே இலங்கை நில அளவை திணைக்களத்தின் உதவித் தலைவராகக் கடமையாற்றிய ஆங்கிலேயரான R.L புரோஹியர் 1915 ஆம் ஆண்டளவில் இலங்கையிலுள்ள பழமை வாய்ந்த குளங்களை ஆய்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தார். இவற்றில் அம்பாறை மாவட்டத்தில் மொத்தமாகவே 10 குளங்களே இருந்தன. இன்று அம்பாறை மாவட்டத்தில் 50 குளங்கள் காணப்படுகின்றன. புரோஹியர் கண்டுபிடித்த இப்புராதன 10 குளங்களில் வளத்தாப்பிட்டி குளமும் ஒன்றாகும். 1935 இல் R.L புரோஹியர் வெளியிட்ட 'Ancient Irrigation works in Ceylon' எனும் நூலில் வளத்தாப்பிட்டி குளம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. மேலும் இக்குளத்திற்கு நீரை வழங்கிய 'ஒடங்கா ஆறு' பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வளத்தாப்பிட்டி குளக்கரையில் காணப்படும் விநாயகர் ஆலயம் சுமார் 1000 வருடங்கள் பழமை வாய்ந்தது. பல நூற்றாண்டுகளாக ஓர் திறந்தவெளி மரத்தடிக் கோயிலாகக் காட்சி தந்த இப்பழமை வாய்ந்த ஆலயம் இன்று கருவறை, மண்டபம், தூபி ஆகியவற்றுடன் கல்லினால் கட்டப்பட்டு 2012 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டு அழகாகக் காட்சி தருகிறது.

## மாணிக்கப் பிள்ளையார் கோயில் - பாண்டிருப்பு

கல்முனை நகரிலிருந்து மட்டக்களப்புக்கு செல்லும் வீதியில் 2 கி.மீ. தூரத்தில் பாண்டிருப்பு எனும் பழந்தமிழ் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் பிரதான வீதியின் இடது பக்கம் இவ்வாலயம் அமைந்துள்ளது.



*பாண்டிருப்பு மாணிக்கப் பிள்ளையார் கோயில்*

## எட்டுக் கோயில்களைக் கொண்ட சிறிய கிராமம்

பாண்டிருப்பு கிராமம் சுமார் ஒரு கி.மீ. அகலமும் ஒன்றரை கி.மீ. நீளமும் கொண்ட சிறிய கிராமமாகும். கல்முனை - மட்டக்களப்பு வீதியின் கிழக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் இக்கிராமம் அமைந்துள்ளது. வீதியின் மேற்குப் பக்கத்தில், மேட்டு வட்டைக் குளம், பெரிய குளம் ஆகியன அமைந்துள்ளன. இக்குளங்களுக்கும் பிரதான வீதிக்கும் இடைப்பட்ட ஒன்றரை கி.மீ. நீளமான ஒடுங்கிய நிலப் பரப்பில் வீடுகளும், இரண்டு கோயில்களும், பாடசாலையும் அமைந்துள்ளன. குளங்களின் பின்பக்கம் நெற் கழனிகள் காணப்படுகின்றன. கிராமத்தின் தெற்கு எல்லையில் தாளவட்டவான் குளம் எனும் சிறிய குளம் அமைந்துள்ளது. பாண்டிருப்பு கிராமத்தில் மொத்தமாக எட்டு இந்துக் கோயில்கள் அமைக்கப் பட்டுள்ளன. 1901ஆம் ஆண்டு குடிசன புள்ளி விபரங்களின்படி நூறு வீதம் இந்துக்களைக் கொண்ட சைவக் கிராமமாக பாண்டிருப்பு விளங்கியுள்ளது.

## 450 வருடங்கள் பழமை வாய்ந்த ஆலயம்

பாண்டிருப்பு கிராமம் சுமார் 2200 வருடங்கள் பழமை வாய்ந்தது என ஆய்வுகள் மூலம் தெரிய வருகிறது. எனினும் இப்பிள்ளையார் கோயில் பொ.ஆ. 1550 ஆம் ஆண்டளவில் மன்னசிங்கன் எனும் கலிங்க தேசத்து சிற்றரசனால் பராமரிக்கப்பட்டு வந்ததாகவும், இம்மன்னன் ஆலயத்திற்கு காணிகளை நிவந்தமாக வழங்கியதாகவும் ஆலய வரலாறு கூறுகிறது. இதன்படி இவ்வாலயம் 450 வருடங்கள் பழமை வாய்ந்ததாகும். மேலும் தாதன் கல்வெட்டில் இவ்வாலயம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. பண்டைய காலம் முதல் 18 குடிவழியினர் பெண் உரிமைப்படி இவ்வாலயம் பரிபாலனம் செய்யப்பட்டு வருகிறது. பாண்டிருப்பு கிராமத்தில் இன்று நாம் காணும் மூன்று பழமை வாய்ந்த கோயில்களில் இதுவும் ஒன்றாக விளங்குகிறது.

## ஆலயத்தில் காணப்படும் தொல்பொருட் சின்னங்கள்

பாண்டிருப்பு மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் பழமை வாய்ந்த பல தொல்பொருட் சின்னங்கள் காணப்படுகின்றன. இவ்வாலயத்தின் 450 வருட கால தொன்மைக்குச் சான்றாக இச்சின்னங்கள் விளங்குகின்றன. ஆலயத்தின் கருவறைக் கோமுகியும், கந்தசுவாமி பரிவார கோயிலின் கோமுகியும் மிகப் பழமை வாய்ந்தவையாகும். மகா மண்டப வாயில், தெற்கு வாயில், நிருத்த மண்டப வாயில் ஆகியவற்றின் படிக்கற்களும் புராதன கருங்கல்லினால் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் ஓர் கருங்கல் கதவு நிலையும் புராதனமானதே. இவற்றைத் தவிர இரு கருங்கல் பீடக்கற்களும் இங்கு காணப்படுகின்றன. மேலும் ஆலய மஹாமண்டபத்தில் காணப்படும் பலிபீடம், மூஷிகம் ஆகியவையும் புராதன சின்னங்களே. மற்றும் பழமை வாய்ந்த மரத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னாலான, சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய கதவு நிலையொன்றும் இக் கோயிலில் காணப்படுகிறது.



புராதன கோமுகி

## கதிர்காமம், மண்டூர் ஆகிய ஆலயங்களை ஒத்த கட்டிட அமைப்பு

இவ்வாலயத்தின் கருவறை கதிர்காமம், மண்டூர் ஆகிய பண்டைய ஆலயங்களின் அமைப்பைப் போல கட்டப்பட்டுள்ளது. ஆலயத்தின் பின்பகுதி கதிர்காம முருகன் ஆலயத்தின் பின்பகுதியை ஒத்ததாகக் காணப்படுகிறது. மற்றும் இவ்வாலயத்தின் கருவறையின் மேற்பகுதியும் அதில் காணப்படும் பழமை வாய்ந்த கோபுர கலசங்களும் கதிர்காமம், மண்டூர் ஆகிய ஆலயங்களில் உள்ளது போன்றே காணப்படுகின்றன. இவ்வமைப்பானது ஆலயத்தின் தொன்மைக்கு மேலும் சான்றாக அமைகிறது.



கதிர்காமத்தை ஒத்த கருவறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மல்லிகைத்தீவு சைவக் கோயில் - மல்வத்தை

அம்பாறை நகரிலிருந்து கிழக்கு நோக்கி கல்முனை செல்லும் வீதியில் 8 கி.மீ தொலைவிலுள்ள மல்வத்தை சந்தியின் தெற்கில் சுமார் 3 கி.மீ தூரத்தில் மல்லிகைத்தீவு எனும் பழந்தமிழ் கிராமம் அமைந்துள்ளது. மிகப் புராதன காலத்தில் சந்தனகாமம் அரசுக்குட்பட்டிருந்த இப்பிரதேசம் ஆதிகாலம் தொட்டு தமிழ் மக்கள் வாழ்ந்து வந்த பகுதியாகும். அதன் பின் அமைக்கப்பட்ட பழைய மட்டக்களப்பு இராஜதானியின் கீழ் இப் பிரதேசமும் அடங்கியிருந்தது.



*மல்லிகைத்தீவு கிராமம்*

### வீரமுனையுடன் தொடர்புபட்டுள்ள மல்லிகைத்தீவு

வீரமுனைக்கும், மல்லிகைத்தீவுக்கும் நெருங்கிய தொடர்புகள் உள்ளதாகத் தெரியவருகிறது. வீரமுனையிலுள்ள கோயிலுக்கு மல்லிகைத் தீவு, மல்வத்தைப் பகுதியில் தான் மானிய நிலங்கள் வழங்கப்பட்டிருந்தன. மல்லிகைத்தீவு என்ற பெயரையே சிங்கள மொழியில் மொழிபெயர்த்து 'மல்வத்தை' (பூந்தோட்டம்) என மல்லிகைத்தீவின் வடபகுதிக்கு சூட்டப் பட்டதாகக் கூறப்படுகிறது.



*மல்லிகைத் தீவில் புராதன ஆலயம் இருந்த இடம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வயல் வெளியால் சூழப்பட்ட மிகச் சிறிய கிராமம்

மல்லிகைத்தீவு கிராமம் நான்கு பக்கமும் வயலால் சூழப்பட்ட பசுமையான மிகச் சிறிய கிராமமாகும். இக்கிராமத்தைச் சுற்றி சுமார் 2 கி.மீ. தூரத்திற்கு எந்தக் குடியிருப்புகளும் இல்லை. வடக்கில் 3 கி.மீ. தூரத்தில் மல்வத்தை கிராமமும், தென் கிழக்கில் 2 கி.மீ. தொலைவில் செங்கற்படை கிராமமும், தெற்கில் 2 கி.மீ. தூரத்தில் கல்லோயா ஆறும், மேற்கில் 3 கி.மீ. தூரத்தில் வளத்தாப்பிட்டி கிராமமும் மல்லிகைத் தீவைச் சுற்றி அமைந்துள்ளன. ஒரு பாடசாலை, 2 கோயில்கள், 5 தெருக்கள், 70 வீடுகள் இவற்றைச் சூழ்ந்த தென்னை, மா, பலா மரச் சோலைகள் ஆகியவையே இக்கிராமத்தின் உடைமைகளாகும். கிராமத்தின் தெற்குப் பகுதியில் ஓடும் பட்டிப்பளை ஆறு எனும் மொறவில் ஆற்றின் கிளை ஆறான பள்ளாறு, கிராமத்தின் முக்கிய நீர்நிலையாக விளங்குகிறது.

## காட்டு மல்லிகைப் பூக்கள் பூத்துக் குலுங்கிய சோலை

பண்டைய காலத்தில் இக்கிராமத்தில் காட்டு மல்லிகைச் செடிகள் சோலையாகப் பூத்துக் குலுங்கி எந்நேரமும் நறுமணம் வீசிக் கொண்டிருக்குமாம். பசுமையான வயல்களும், அருகில் நீரோடைகளும், காட்டு மல்லிகைப் பூக்களின் வாசமும் வீசும் ஓர் ரம்மியமான இடமாக இக்கிராமம் விளங்கியதாலும், மழை காலத்தில் இவ்விடத்தைச் சுற்றி உள்ள வயல் நிலங்கள் நீரில் மூழ்கி இவ்விடம் தீவாகக் காட்சி தருவதாலும் இது 'மல்லிகைத் தீவு' எனப் பெயர் பெற்றுள்ளது. இதன் அழகையும், நறுமணத்தையும் கேள்வியுற்ற ஆங்கிலேய அதிகாரிகள் தமது குடும்பத்துடன் வந்து இங்கு தங்கிச் செல்வார்களாம். அதன் பின்பு அக்கம் பக்கத்திலுள்ள ஊர்களில் இருந்த மாட்டுப் பட்டிக்காரர்கள் பசுமையான இவ்விடத்திற்கு மாடுகளை ஓட்டிக் கொண்டு வந்து கட்டி விட்டு காவலுக்கு இருந்து தங்கிச் செல்லும் இடமாக மல்லிகைத்தீவு விளங்கியுள்ளது.

மல்லிகைத்தீவு கிராமத்திற்கு ஆங்கிலேயர் பொ.ஆ. 1750 - 1800 காலப் பகுதியில் வந்து சென்றதாக இங்குள்ள முதியவர்கள் கூறுகின்றனர். இதன்படி இக்கிராமம் 250 வருடத்திற்கு மேற்பட்ட பாரம்பரியத்தைக் கொண்டது என்பது உறுதியாகத் தெரிகிறது. அதே சமயம் இப்பகுதி சுமார் 1200 வருடங்களுக்கு முன்பிருந்தே வயல் நிலங்கள் நிறைந்ததாகக் காணப் பட்டுள்ளது. வீரமுனை சிந்தா யாத்திரைப் பிள்ளையார் கோயில் தொடர்பான செப்பேட்டில் இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளமையையும் உற்று நோக்க வேண்டியுள்ளது. எனவே மல்லிகைத் தீவு எனும் இடத்தில் அப்போது வயல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலங்கள் மட்டும் இருந்தனவா அல்லது வயல் நிலங்களோடு கிராமமும் இருந்ததா என்பதை உறுதியாகக் கூற முடியவில்லை. மல்லிகைத் தீவைச் சுற்றி உள்ள சம்மாந்துறை, செங்கற்படை ஆகிய பண்டைய குடியிருப்புக் களுக்கும் மல்லிகைத் தீவுக்கும் தொடர்புகள் இருந்ததற்கான ஆதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை.

இருப்பினும் சம்மாந்துறைக்கு அருகில் உள்ள வீரமுனை கிராமத்துடன் இவ்விடத்திற்கு தொடர்பிருந்தமை பற்றிய செப்பேடு ஒன்றில் கூறப் பட்டுள்ளது இச்செப்பேடு பொ.ஆ. 8 ஆம் நூற்றாண்டில் வாலசிங்க மன்னனால் எழுதப்பட்டதாக வீரமுனை ஆலய வரலாறு கூறுகிறது. இதில் கிண்ணறையன் வெளி, மல்வத்தை வெளி, மல்வத்தைக் குளம், தரவை முன்மாரி, கரந்தை முன்மாரி ஆகிய 5 இடங்களின் பெயர்கள் குறிப்பிடப் பட்டுள்ளன. இவ்விடங்கள் யாவும் வயல்வெளிகளே. இவை வீரமுனை ஆலயத்திற்கு மானிய மாகக் கொடுக்கப்பட்டதாக செப்பேடு கூறுகிறது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் 'கிண்ணறையன் வெளி' எனக் குறிப்பிடப்பட்டுள்ள வயல்வெளி இன்று மல்லிகைத் தீவின் வடக்குப் பக்கம் காணப்படும் இடம் என அடையாளம் காணப்பட்டு உள்ளது. மேலும் செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மல்வத்தைக் குளம், மல்வத்தை வெளி, தரவை முன்மாரி ஆகிய வயல் வெளிகள் மல்வத்தையை சுற்றி அமைந் துள்ளன. வளத்தாப்பிட்டி குளத்திலிருந்து நீரை கொண்டு வரும் உடங்கை ஆற்றின் மூலமே மல்வத்தை வெளி வயல்களுக்கு நீர் கிடைக்கிறது. கிண்ண றையன் வெளி எனக் குறிப்பிடப்படும் மல்லிகைத் தீவு வயல் வெளி வீரமுனை ஆலயத்துடன் தொடர்புபட்டிருப்பதால் இவ்வயல் காணிகளில் விவசாயம் செய்ய வீரமுனையிலிருந்து வந்தவர்களே மல்லிகைத் தீவில் முதன் முதல் குடியேறி இருக்க வேண்டும். இதன்படி மல்லிகைத் தீவின் தொடக்க காலம் பொ.ஆ. 9ஆம், 10ஆம் நூற்றாண்டு எனக் கூறலாம். எனவே இக்கிராமம் சுமார் 1000 வருடம் பழமை வாய்ந்த கிராமமாகும்.

## புராதன ஆலயத்தின் இடிபாடுகள்

புராதன காலத்தில் மல்லிகைத் தீவில் ஓர் சைவக் கோயில் அமைக்கப்பட்டி ருந்தமை தெரிய வந்துள்ளது. 1960 ஆம் ஆண்டளவில் ஓர் பாடசாலை அமைக்கும் பொருட்டு அத்திவாரம் வெட்ட நிலத்தை அகழ்ந்த போது, புராதன சைவ ஆலயத்தின் இடிபாடுகளும், சின்னங்களும் கண்டுபிடிக் கப்பட்டன. இதன் மூலம் இப்பகுதியில் உன்னத நிலையில் விளங்கியிருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் சைவ ஆலயம் அழிந்து போயுள்ளமை அறியப்பட்டுள்ளது. இவ்வாலயம் இக்கிராமம் தோற்றம் பெற்ற காலத்தில் அமைக்கப்பட்டதா என்பது தெரிய வில்லை. தற்போது, இங்கு மாரியம்மன் கோயில் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. இவ்வாலயம் புராதன ஆலயம் இருந்த இடத்திலிருந்து சுமார் 200 மீற்றர் தொலைவில் அமைக்கப்பட்டுள்ளது.



மல்லிகைத்தீவு அம்மன் கோயில்

மல்லிகைத்தீவு கிராமம் உருவான காலத்தில் இங்கு ஆலயமும் உருவாகி இருக்கும் என்பதில் ஐயமில்லை. வீரமுனை மக்களின் குல தெய்வமாக விநாயகர் விளங்குவதாலும், நெல் வயல் காணிகளுக்கு காவலாக இருக்கும் தெய்வமாக விநாயகரை வணங்குவதாலும் மல்லிகைத் தீவில் ஓர் விநாயகர் ஆலயமே முதன் முதலில் அமைக்கப்பட்டிருக்கும். பல நூற்றாண்டு காலம் செழிப்புற்று விளங்கிய இவ்வாலயம் ஒல்லாந்தர் காலத்தில் பராமரிப்பின்றி அழிந்து போயுள்ளது. இவ்வாறு அழிந்து மண்ணுள் புதையுண்டு போன புராதன ஆலயத்தின் எச்சங்களே பாடசாலை அமைக்க அத்திவாரம் வெட்டும் போது கிடைக்கப் பெற்றவை எனக் கூறப்படுகிறது.



புராதன மூஷிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மல்லிகைத் தீவைச் சுற்றியுள்ள பண்டைய பொன் விளையும் பூமி

மல்லிகைத் தீவு கிராமத்தைச் சுற்றி காணப்படும் வயல் நிலங்கள் இப்பகுதியில் உள்ள பழமையான வயல்வெளிகளாகும். இதன் மேற்கெல்லை வளத்தாப் பிட்டி குளம் முதல் மாணிக்க மடு கிராமம் வரையுமாகும். தெற்கெல்லையாக பட்டிப்பளை ஆறும், கிழக்கெல்லையாக ஒலுவில் முதல் காரைதீவு சந்தி கல்முனை, நீலாவணை வரையுமாகவும் வடக்கெல்லையாக வளத்தாப்பிட்டி குளத்தின் வட கரையிலிருந்து ஓடும் உடங்கை ஆறு தொடக்கம் கொறிக்கல் முனை வரையும், அங்கிருந்து மட்டக்களப்பு வாவியின் கிழக்குக் கரை ஓரமாக துறைநீலாவணை வரையுமுள்ள சுமார் 36,000 ஏக்கரில் பழமை வாய்ந்த, நல்ல விளைச்சலைக் கொடுத்து வந்த இந்நிலங்கள் காணப்படுகின்றன. இவ்வயல்வெளிகள் கரங்கா கண்டம், விக்குலாமடு கண்டம், பள்ளவெளி கண்டம், பழைய கண்டம், கரவாகு கண்டம், நெல்லிக்காடு கண்டம், எனும் பெயர்களைக் கொண்ட பெரிய வயல் நிலங்களாகும். பட்டிப்பளை ஆறும் உடங்கை ஆறும் நீர்ப்பாசனம் வழங்கி இவற்றைப் பசுமைப்படுத்தி இலங்கையின் முக்கிய நெற் களஞ்சியங்களில் ஒன்று எனும் பெயரைப் பெற்றுக் கொடுத்துள்ளன. இவை 'பட்டிப்பளை ஆற்று படுக்கையின் பொன் விளையும் பூமி' என பண்டைய காலம் முதல் அழைக்கப்பட்டு வந்தன.



*புராதன பலிபீடம்*


## மல்லிகைத்தீவில் காணப்படும் தொல்பொருட் சின்னங்கள்

மல்லிகைத்தீவு கிராமத்தில் தெற்கில் அம்மன் கோயிலும், வடக்கில் பிள்ளையார் கோயிலும் அமைந்துள்ளன. அம்மன் கோயிலில் சில தொல்பொருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னங்கள் காணப்படுகின்றன. இவற்றில் மிகப் புராதனமான மூஷிகமும், பலிபீடமும் உள்ளன. அத்துடன் புராதன கல்குழி உரல் ஒன்றும் காணப்படு கின்றன. இங்குள்ள புராதன மூஷிகம் மற்றும் பலிபீடம் ஆகியவை சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்டு பின்பு அந்நியரால் அழிக்கப் பட்ட விநாயகர் கோயிலின் எச்சங்களாக இருக்கலாம் என நம்பப்படுகிறது.

மேலும் மல்லிகைத்தீவு கிராமம் முழுவதிலும் ஆங்காங்கே கருங்கல் தூண்களின் துண்டுகள் காணப்படுகின்றன. இங்கு ஓர் பழமை வாய்ந்த வீட்டின் ஒரு பகுதியும் காணப்படுகிறது. இதன் படிக்கல் கருங்கல்லினால் ஆனது மரத்தினாலான கதவு நிலை, யன்னல், மரத்தூண்கள், கூரையிலுள்ள உத்தரம் ஆகியவை மிகப்பழமை வாயந்தவையாகும். ஆங்கிலேயர் காலத்தில் இவ்வீட்டில் ஓர் அதிகாரி வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. இவ்வீட்டின் கருங்கல்லினாலன படிக்கட்டில் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. எழுத்துக்கள் சிதைந்து வாசிக்கமுடியாத நிலையில் காணப்படுகின்றன.



*கல்குழி உரல்*

## 1871 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டு பதிவில் மல்லிகைத்தீவு

1871 ஆம் ஆண்டுக்கான இலங்கைக் குடிசன மதிப்பீட்டு புள்ளி விபரம் பற்றிய குறிப்பில் மல்லிகைத் தீவு, மல்வத்தை, களவெட்டி முன்மாரி, வெட்டிப்புட்டி, அம்பாறை வீதி ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய பிரதேசத்தில் 71 குடும்பங்களைச் சேர்ந்த 331 பேர் வசித்துள்ளனர். 1891 இல் மல்லிகைத் தீவில் மட்டும் 219 பேர் வசித்துள்ளனர். 1901 இல் 261 பேரும், 1911 இல் 236 பேரும், 1921 இல் 163 பேர்களும், 1931 இல் 209 பேரும் மல்லிகைத் தீவில் வசித்துள்ளனர். 1921ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டு புள்ளிவிபரக் குறிப்பில் 154 இந்துக்கள் இருந்ததாக கூறப்பட்டுள்ளமை இங்கே குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் பழமை வாய்ந்த இக்கிராமம் இன்றும் பழமை மாறாமல் அப்படியே உள்ளது. அம்பாறை மாவட்டத்தில் எந்தவித முன்னேற்றமுமில்லாமல் இன்றும் பழைய நிலையிலேயே உள்ள பண்டைய ஊர்களில் மல்லிகைத்தீவும் ஒன்றாகும். இங்கு சுமார் 75 குடும்பங்களைச் சேர்ந்த 300 தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.



*பழைய வீட்டிலுள்ள கல்வெட்டு*

## முத்துமாரியம்மன் கோயில் - கோளாவில், அக்கரைப்பற்று

மட்டக்களப்பு - பொத்துவில் வீதியில் சுமார் 65 கி.மீ. தூரத்தில் அக்கரைப்பற்று அமைந்துள்ளது. இங்கிருந்து தெற்கு நோக்கி சாகாமம் செல்லும் வீதியில் சுமார் ஒரு கி.மீ தொலைவிலுள்ள கோளாவில் என்னுமிடத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது.



*கோளாவில் மாரியம்மன் கோயில் இராஜகோபுரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் இராஜசிங்கன் மானியங்கள் வழங்கிய ஆலயம்

சுமார் 400 வருட பாரம்பரியத்தைக் கொண்ட இவ்வாலயம் பொ.ஆ. 1600ஆம் ஆண்டளவில் கட்டப்பட்டதாகத் தெரிய வருகிறது. 1635 இல் கண்டியை ஆண்ட முதலாம் இராஜசிங்க மன்னனால் இவ்வாலயத்திற்கு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாலயத்திலுள்ள அம்மனின் முகக்களை, மணி, வாள் போன்றவை இராஜசிங்க மன்னால் இக்கோயிலுக்கு வழங்கப்பட்டதாகத் தெரிகிறது.

பொ.ஆ. 1880ஆம் ஆண்டளவில் இப்பகுதியில் அம்மை நோய் பரவி மக்கள் பலர் இறந்தனர். மக்கள் கோதாரிக் கும்பம் வைத்து வழிபட இந்நோய் முற்றாக நீங்கியது. 1905ஆம் ஆண்டு இங்கு ஏற்பட்ட வெள்ளத்தினால் இவ்வாலயம் சிதைவடைந்தது. பின் அம்மன் விக்கிரகம் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டு பூஜிக்கப்பட்டது. 1935ஆம் ஆண்டளவில் மீண்டும் பழைய இடத்திலேயே ஆலயம் அமைக்கப்பட்டு வழிபடப்பட்டு வருகிறது.

பொ.ஆ. 14ஆம் நூற்றாண்டில் இப்பகுதியில் குடிகொண்ட மக்கள் மாரியம்மன், கடலாட்சியம்மன் வழிபாடுகளில் ஈடுபட்டு வந்தனர். ஆரம்பத்தில் ஊரின் நடுவிலேயே சிறு ஆலயம் அமைத்து வழிபாடுகள் நடைபெற்றன. அதன் பின் மக்கள் ஒன்று கூடி ஊரின் கிழக்கெல்லையில் சிறுக்களப்பு வாவிக்கரை ஓரத்தில் புதிதாக ஆலயத்தை அமைத்தனர்.



கருங்கல் கோமுகி

## ஆலயத்தில் காணப்படும் தொல்பொருட் சின்னங்கள்


இன்று கோளாவில் முத்துமாரியம்மன் ஆலயம் வாவிக் கரை ஓரத்தில் வம்ச மரங்கள் நிறைந்த சோலையின் மத்தியில் வடக்குத் திசை நோக்கி, மூன்றடுக்கு இராஜ கோபுரத்துடன் கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. அம்பாறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மாவட்டத்தில் இராஜ கோபுரத்துடன் காணப்படும் ஓரிரு ஆலயங்களில் இதுவும் ஒன்றாகும்.

இவ்வாலயத்தின் தொன்மைக்கு சான்றாக இருப்பது இங்குள்ள மாரியம்மன் விக்கிரகம் எனக் கூறப்படுகிறது. அத்துடன் ஆலய வாசலில் தேங்காய் உடைக்கும் முன்னடிக் கல்லாகப் பயன்படுத்தப்படும் நீள்சதுர வடிவுடைய கருங்கல் பலகை இவ்வாலயத்தின் ஆரம்பகால தொல்பொருட் சின்னமாகும்.

2 அடி அகலமும், 4 அடி நீளமும் கொண்ட இந்த ஆசனக்கல்லின் கீழ் மூலைப் பகுதிகளில் இரண்டு சதுர வடிவமான பள்ளங்கள் செதுக்கப் பட்டுள்ளன. இதைத் தவிர விநாயகர் கோயிலின் கருங்கல் கோமுகியும் வட்டவடிவமான ஓர் கல்லும் புராதன சின்னங்களாகும்.



கற்பலகை



வட்டக்கல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தன் வெளி கந்தசுவாமி கோயில் - மல்கம்பிட்டி, சம்மாந்துறை

மட்டக்களப்பு - பொத்துவில் வீதியிலுள்ள காரைதீவுச் சந்திக்கு அடுத்ததாக, காரைதீவு சந்தியின் தெற்கில் 5 கி.மீ. தொலைவிலுள்ள புல்லடிப்பிட்டியின் மேற்கில் தீகவாபி செல்லும் வீதியில் 5 கி.மீ. தூரத்தில் மல்கம்பிட்டி அமைந்துள்ளது. இங்குள்ள கந்தன்வெளி என்னுமிடத்தில் பண்டைய காலத்தில் அமைக்கப்பட்டிருந்த கந்தசுவாமிக் கோயில் பற்றிய சான்றுகள் கிடைத்துள்ளன.

### கூத்திக மன்னன் காலத்தில் மண், கல் வெட்டி எடுத்த இடம்

பொ.ஆ.மு. 2ஆம் நூற்றாண்டில் இலங்கையை ஆட்சி செய்த கூத்திக மன்னனால் இந்தியாவிலிருந்த காளிகட்டம் பிரதேசத்திலிருந்து மக்கள் அழைத்து வரப்பட்டு இப்பகுதியில் குடியமர்த்தப்பட்டதாகவும், இம்மக்கள் மட்டக்களப்பு நகரை அமைக்க சிங்காரத் தோப்புக்கு மேற்கில் மண், கல் மலையாய் இருந்த புட்டியை வெட்டி களப்பை மூடி கூத்திக மன்னனுக்கு மாளிகை அமைத்துக் கொடுத்ததாகவும், இதுவே மட்டக்களப்பு எனப் பெயர் பெற்றதாகவும், மட்டக்களப்பை மூட மண், கல் எடுத்த புட்டியே மண்கல்புட்டி என அழைக்கப்பட்டதாகவும், இதுவே காலப்போக்கில் மல்கம்பிட்டி எனத் திரிபடைந்ததாகவும் மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது.



*மன்னனின் மாளிகை அல்லது கோயில் இருந்ததாக கருதப்படும் இடம்*

இத்தனை தொன்மை வாய்ந்த மல்கம்பிட்டியில் பண்டைய காலத்தில் அமைக்கப்பட்டதே கந்தன்வெளிக் கந்தசுவாமிக் கோயிலாகும். இவ்வாலயம் பொ.ஆ. 13ஆம் நூற்றாண்டில் ஸ்தாபிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொ.ஆ. 1215-1255 வரையான காலத்தில் பொலநறுவையை ஆட்சி செய்த கலிங்க மாகோன் காலத்தில் இங்கு வந்த உப வேந்தனான குளக்கோட்டு மன்னனால் திருக்கோயில் கந்தசுவாமிக் கோயில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு மானியங்கள் வழங்கப்பட்ட காலத்தில் கந்தன்வெளி கந்த சுவாமிக் கோயிலும் ஸ்தாபிக்கப்பட்டதாக நம்பப்படுகிறது. குளக்கோட்டன், மாகோன் காலத்தில் செல்வாக்குப் பெற்று விளங்கிய இவ்வாலயம் காலப் போக்கில் பராமரிப்பின்றி அழிந்து போயுள்ளது. தற்போது மல்கம்பிட்டிச் சந்தியில் அமைந்துள்ள பள்ளிவாசலின் அருகில் இவ்வாலயம் அமைக்கப் பட்டிருந்ததாக கூறப்படுகிறது.



கந்தன் வெளி

## ஆதி திராவிடர்களின் பெருங்கற்கால குடியிருப்பின் எச்சங்கள்

இலங்கையில் ஆதி திராவிடரான தமிழ்க் குடிகள் வளர்த்த பெருங்கற்காலப் பண்பாடு மல்கம்பிட்டியிலும் நிலவியதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. பொ.ஆ.மு. 1000 - 500 வரையான காலப்பகுதியிலேயே இப்பண்பாடு தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் நிலவியது. ஆதி தமிழ்க்குடிகளின் பெருங்கற்கால இடுகாடுகள் அமைந்திருந்ததற்கான தடயங்கள் தீவின் பல பாகங்களிலும் கிடைத்துள்ளன. இதில் ஈமத்தாழிகள் முக்கியமானவையாகும். ஈமத்தாழியொன்றின் கல்லால் ஆன மூடியொன்றே மல்கம்பிட்டியில் கிடைக்கப் பெற்றுள்ளது. இம்மக்கள் முருக வழிபாட்டையும், சிவ வழிபாட்டையும் மேற்கொண்டவர்கள் என ஆய்வுகள் கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கஞ்சிக்குடிச்சாறு சிவாலயம் - திருக்கோயில்

பொத்துவிலிலிருந்து மட்டக்களப்பு செல்லும் வீதியில் சங்கமன் கண்டிக்கும் திருக்கோயிலுக்கும் இடையில், திருக்கோயிலின் தெற்கில் சுமார் 5 கி.மீ. தொலைவில் உள்ள ரூபஸ்குளம் சந்தியிலிருந்து மேற்கு நோக்கிச் செல்லும் வீதியில் 5 கி.மீ. சென்று அங்கிருந்து தென் மேற்காக பக்மிடியாவை, மீரஹல செல்லும் சிறிய காட்டுப் பாதையில் சுமார் 9 கி.மீ. தூரம் பயணம் செய்து கஞ்சிக் குடிச்சாறு கிராமத்தை அடையலாம்.



*கஞ்சிக்குடிச்சாறு வள்ளி மலை*

### பண்டைய சிவன் கோயில் இடிபாடுகளும், எச்சங்களும்

கொண்டுறுஹெல மலைப்பகுதியில் உற்பத்தியாகி மிக அடர்த்தியான காட்டின் மத்தியில் ஓடும் சிறிய ஆறு கஞ்சிக்குடிச்சாறு என அழைக்கப்படுகிறது. இக்காட்டாற்றின் குறுக்கே அணைகட்டி சிறிய குளமொன்று அமைக்கப் பட்டுள்ளது. இக்குளத்தின் அருகிலுள்ள சிறிய மலைக்குன்று பண்டைய காலத்தில் சைவம் செழிப்புற்றுக் காணப்பட்ட இடமாகக் கருதப்படுகிறது. காடு மண்டிக் கிடக்கும் இக்குன்றில் புராதன சிவாலய இடிபாடுகள் பல காணப்படுகின்றன. கற்தூண்களும், செங்கற்களும், விக்கிரக பீடங்களும் உள்ளன. இவற்றின் மத்தியில் பண்டைய சிவாலயமெனக் கருதப்படும் கட்டிடத்தின் இடிபாடுகள் காணப்படுவதாக இப்பகுதி மக்கள் கூறுகின்றனர். இங்கு கிடைக்கப் பெற்ற பீடங்களையும், கற்தூண்களையும் கொண்டு புதிதாக சிறிய முருகன் ஆலயமொன்று அமைக்கப்பட்டுள்ளது. இங்கு மிகப் பழமை வாய்ந்த கல் பிள்ளையாரும் முருகனின் வேலும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. குன்றின் அடி வாரத்திலும் ஆங்காங்கே ஆலய எச்சங்கள் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வள்ளி மலையில் கற்குகைகளும், கல்வெட்டுக்களும்

இம்மலைக் குன்றிற்கு வடக்கில் குளத்தின் ஓரமாக இன்னுமோர் மலைக் குன்றும் அமைந்துள்ளது. சற்று பெரியதான இம்மலைக் குன்றில் குளக்கரைப் பக்கமாக சில குகைகள் அமைந்துள்ளன. புராதன காலத்தில் இக்குகைகளில் மக்கள் வாழ்ந்திருந்ததற்கான அடையாளங்கள் உள்ளன. இங்கும் புராதன கட்டிட எச்சங்கள் காணப்படுகின்றன. இக்குகைகளில் இரண்டில் பண்டைய காலத்தில் பொறிக்கப்பட்ட தமிழ் பிராமி கல்வெட்டுக்கள் காணப் படுகின்றன. இரண்டிலும் தமிழ் பிராமிக்குரிய 'பருமகன்' என்ற பதம் பொறிக்கப்பட்டுள்ளது. இது வள்ளிமலை என அழைக்கப்படுகிறது.



முருகன் கோயில்


மிகப் புராதன காலத்தில் இக்குகைகளில் தமிழ்ப் பிராமணர்கள் வாழ்ந்து வந்துள்ளனர். அக்காலப்பகுதியில் இப்பகுதியில் சிவ, முருக வழிபாடுகள் மேலோங்கியிருந்துள்ளன. கஞ்சிக் குடிச்சாற்றின் தெற்குப் பகுதியில் உள்ள குடும்பிகலைக் கல்வெட்டில் சிவ வாகனமான நந்திக் குறியீடு பொறிக்கப் பட்டுள்ளது. மேலும் அம்பாறைக்குக் கிட்டவுள்ள தமண, ரஜகல, பம்பரகஸ் தலாவ, வெகெரகல்கந்த ஆகிய இடங்களில் சிவன் சம்பந்தமான கல் வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவையாவும் இப்பகுதியில் ஆதியில் செல்வாக்குப் பெற்றிருந்த சிவ வழிபாட்டின் வெளிப்பாடாகக் காணப்படுகின்றன. சிவன் எனும் பிராமணனுக்குச் சொந்தமான கற்குகைகள் பல பௌத்த துறவிகளுக்கு தானம் செய்யப்பட்டமை சம்பந்தமான பல கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை தவிர கலிங்க மாகோன் காலத்திலும், பாண்டியர் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்திலும் இப்பகுதியில் சைவம் செழிப்புற்று விளங்கியுள்ளது. இக்காலப்பகுதியில் கஞ்சிக்குடிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாறு சிவாலயம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அல்லது புனரமைக்கப் பட்டிருக்க வேண்டும் எனக் கூறப்படுகிறது.



புராதன கல் பிள்ளையார்



வள்ளி மலையின் பின்பக்கம் உள்ள குகைகள்

## கதிர்காம சத்திரிய பாண்டிய மன்னர்களின் ஆட்சி நிலவிய இடம்

மிகப் புராதன காலத்தில் இப்பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த சிவாலயங் களும், சைவ வழிபாட்டுத் தலங்களும் ரோகன நாட்டிலிருந்து காலத்துக்குக் காலம் ஏற்பட்ட படையெடுப்புகளின் போது அழிவுற்றிருக்கலாம் என அறியப்படுகிறது. கஞ்சிக்குடிச்சாறு சிவாலய இடிபாடுகள் இருந்த இடத்தில் தற்போது முருகன் கோயில் கட்டப்பட்டுள்ளது. இப்பகுதியில் பொ.ஆ.மு. 3 ஆம் நூற்றாண்டில் ஆட்சி செலுத்திய கதிர்காம சத்திரிய மன்னர்கள் காலத்தில் இங்கு சிவ, முருக வழிபாடு மேலோங்கிக் காணப்பட்டமை குறிப் பிடத்தக்கது. மேலும் பொ.ஆ. 2 ஆம் நூற்றாண்டில் சிவன், மற்றும் முருக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாட்டில் ஈடுபாடுடைய மன்னனான மகாசேனன் ஆடக சவுந்தரியுடன் உன்னரசுகிரியை ஆட்சி செய்த காலத்தில் இங்கு சிவ, முருக வழிபாடுகள் செல்வாக்கு பெற்று விளங்கியிருக்கும். மேலும் கதிர்காம சத்திரியர் காலத்தில் இங்கு சிவ வழிபாடு நிலவியமைக்கான சான்றாக இங்கு கிடைக்கப் பெற்ற ஓர் கல்வெட்டு துண்டு காணப்படுகிறது. இதில் திரிசூலக் குறியீடும், இரு மீன் சின்னக் குறியீடுகள் மேலும் சில பிராமி எழுத்துக்களும் காணப்படுகின்றன. இக்கல்வெட்டு திருக்கோயிலில் காஞ்சிரங்குடா என்னுமிடத்தில் காணப் படுகிறது. இக் கல்வெட்டு கஞ்சிக்குச்சாறு பகுதியில் இருந்து கொண்டு வரப்பட்டதாக முதியவர்கள் கூறுகின்றனர்.



பாண்டியர்களின் திரிசூலம், மீன், சின்னம் பொறிக்கப்பட்ட கல்வெட்டு




புராதன ஆலயத்தின் எச்சங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செண்பக நாச்சியம்மன் கோயில் - ஊரக்கை, சாகாமம்

திருக்கோயிலில் இருந்து மேற்கு நோக்கி 6 கி.மீ. தொலைவில் சாகாமம் அமைந்துள்ளது. சாகாமத்திற்குக் கிழக்கேயும் தம்பிலுவிலின் மேற்கேயும் உள்ள 'ஊரக்கை' என்ற இடத்தில் செண்பகநாச்சி கோயில் அமைந்திருந்தது.



ஊரக்கை வெளி

## பொ.ஆ. 2 ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற ஆலயம்

பொ.ஆ. 2 ஆம் நூற்றாண்டில் தென்கிழக்கிலங்கையில் பாண்டியர் செல்வாக்கு உன்னத நிலையிலிருந்த காலத்தில் இவ்வாலயம் தோன்றியதாகத் தெரிய வருகிறது. பாண்டிய நாட்டின் மதுரையிலிருந்து மூன்று அம்மன் சிலைகள் கொண்டு வரப்பட்டதாகவும், அவற்றில் ஒன்று இலங்கைத்துறையிலும், இன்னுமொன்று சம்பூரிலும், செண்பக நாச்சியம்மன் விக்கிரகம் ஊரக்கையிலும் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபடப்பட்டு வந்தது. இவ்வம்மனை கண்ணகி அம்மன் என்றும் மக்கள் அழைத்து வந்தனர்.

மதுரையில் கண்ணகிக்குச் செண்பகச்செல்வி என்ற பெயரில் கோயில் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இங்குதான் கோவலன் தான் கொலை செய்யப்படுவதற்கு முன்பு கண்ணகியை பிடாரியம்மை என்ற மூதாட்டியிடம் விட்டுச் சென்றான். இங்கிருந்தே கண்ணகி திருவாங்கூருக்குப் புறப்பட்டுச் சென்றதாகவும் சிலப்பதிகாரம் கூறுகிறது. பொ.ஆ. 2 ஆம் நூற்றாண்டில் தம்பிலுவில் ஊரக்கைப் பகுதியில் ஆரம்பமான இவ்வழிபாடு பொ.ஆ. 12 ஆம் நூற்றாண்டு வரை உன்னத நிலையில் இருந்ததாகத் தெரியவருகிறது. தமிழ் அரசர்கள் முதல் சிங்கள அரசர்களும் கூட ஊரக்கை கண்ணகி அம்மன் ஆலயத்தைப் பூஜித்து வந்துள்ளனர். பொ.ஆ. 11 ஆம் நூற்றாண்டில் இலங்கையை ஆட்சி செய்த விஜயபாகு (பொ.ஆ. 1055- 1110) ஊரக்கை கண்ணகியம்மன் மீது மிகுந்த பக்தி கொண்டிருந்ததாகவும், இவ்வாலயத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்கொடைகள் பலவும் வழங்கியதாகவும் கிராமிய இலக்கிய நூலொன்று குறிப்பிடுகிறது.

## சோழரின் முக்கிய படைத் தளமாக விளங்கிய சாகாமம்

பொ.ஆ. 11 ஆம் நூற்றாண்டில் சோழர் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் சாகாமம் பகுதி முக்கியத்துவம் பெற்று விளங்கியது. சோழர்களின் பெரிய படைத்தள ஒன்று சாகாமத்தில் அமைக்கப்பட்டிருந்தது. சோழர் பிரதிநிதியான கதிர்சுதன் எனும் சிற்றரசன் இப்பகுதியை ஆட்சி செய்து வந்தான். அன்று சாகாமம் தென்னிலங்கையில் முக்கிய நகரங்களில் ஒன்றாக விளங்கியது. இதனைச் சூழ்ந்திருந்த இடங்களில் தமிழ் மக்கள் பெருமளவில் வாழ்ந்து வந்தனர். தமிழும் சைவமும் செழிப்புற்று விளங்கியது. இக்கால கட்டத்தில் ஊரக்கை அம்மன் ஆலயமும் சிறப்புடன் விளங்கியது.

## விஜயபாகுவின் திருப்பணி

சோழர் காலத்தின் போது ரோகனையிலிருந்து வந்த விஜயபாகு உகந்தையை யும், சங்கமன் கண்டியையும் கைப்பற்றி சங்கமன் கண்டியில் பாசறையமைத்துத் தங்கியிருந்தான். அங்கிருந்து சோழருக்கெதிராக தனது படைகளை அனுப்பி சாகாமத்தைக் கைப்பற்றினான். விஜயபாகுவின் படைத் தளபதி அருகிலிருந்த ஊரக்கை அம்மன் கோயிலுக்குச் சென்று வழிபட்டு, தனது மன்னனின் வெற்றிக்கு அருள் கொடுத்தால் நிலபுலங்களும், தங்க நகைகளும் தானமாக அளிப்பார் என வாக்குறுதி கொடுத்தான். இதன் பின் விஜயபாகு சோழரைத் தோற்கடித்து விட்டு பொலநறுவையைக் கைப்பற்றிய பின் கால் நடையாக ஊரக்கை வந்து தனது வெற்றிக்குக் காரணமான இவ்வம்மனை வணங்கி காணிக்கைப் பணத்தையும், நகைகளையும் பொற்சிலம்பும் வழங்கியதோடு தங்க மாம்பழம் ஒன்றையும் தானமாக அளித்ததாக கிராமிய இலக்கியம் கூறுகிறது. விஜயபாகுவினால் வழங்கப்பட்ட பொற்சிலம்பு, அம்மானைக் காய் என்பவற்றை தம்பிலுவில் கண்ணகியம்மன் கோயிலில் இன்றும் காணலாம். விஜயபாகு வழங்கிய தங்க மாம்பழம் சில வருடங்களுக்கு முன்பு ஆலயத்திலிருந்து திருடப்பட்டு விட்டதாகத் தெரிய வருகிறது.

## பாண்டியர் காலத்தில் செண்பக நாச்சியம்மன் கோயில்

இலங்கை பாண்டியப் பேரரசின் கீழிருந்த காலமான பொ.ஆ. 1284 - 1304 வரையான காலகட்டத்தில் தென்கிழக்கிலங்கையை பாண்டியப் பேரரசின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணையை ஏற்றிருந்த தமிழ் சிற்றரசன் ஆண்டு வந்தான். இவன் காலத்திலேயே திருக்கோயில் முருகனாலயம் புனர் நிர்மாணிக்கப்பட்டதாக நம்பப்படுகிறது. இதே காலப்பகுதியில் ஊரக்கை செண்பக நாச்சியம்மன் கோயிலும் சிறப்புற்று விளங்கியுள்ளது.



ஊரக்கை அம்மன் கோயில் இருந்த இடம்

## பொ.ஆ. 14 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட கண்ணகி வழங்குரை

சுமார் 1800 வருடங்களுக்கு முற்பட்ட இவ்வாலயம் பொ.ஆ. 1215 வரை செல்வாக்குப் பெற்று விளங்கியது. பொ.ஆ. 1215 இல் ஏற்பட்ட கலிங்க மாகோனின் முற்றுகையின் போது இப்பகுதி மக்களும் இடம்பெயர்ந்ததாகத் தெரிய வருகிறது. இக்காலப்பகுதியில் இவ்வாலய வழிபாடுகளும் கைவிடப்பட்டன. இருப்பினும் சில ஆண்டுகளின் பின்னர், பாண்டியர் கிழக்கிலங்கையில் செல்வாக்குப் பெற்றிருந்த பொ.ஆ. 1284 - 1304 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மீண்டும் கண்ணகி வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. பாண்டியர் காலத்தில் இப்பகுதியில் வாழ்ந்து வந்த மக்கள் இக்கண்ணகியைத் தாயெனப் போற்றி வணங்கினர்.

பொ.ஆ. 14 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னனான சயவீரசிங்கையாரியன் (பொ.ஆ. 1380-1410) காலத்தில் தென்கிழக்கில் கூமுனை வரை இவனது செல்வாக்கு நீடித்திருந்தது. கண்ணகி வழிபாட்டை ஆதரித்து வந்த இம்மன்னன் காலத்தில் 'கண்ணகி வழக்குரை' என்ற காவியம் எழுதப்பட்டது. சிற்றரசர்களான முக்குவ வன்னியர்களும் கண்ணகி வழிபாட்டை ஆதரித்து வந்தனர். இவர்கள் காலத்திலே தான் ஊர்க்கை கண்ணகியம்மனின் தொடர்ச்சியாக தம்பிலுவில்லில் கண்ணகி வழிபாடு ஆரம்பமானது.

பொ.ஆ. 1450 இல் கோட்டையிலிருந்து படையெடுத்துச் சென்ற செண்பகப்பெருமாள் யாழ்ப்பாண மன்னர்களை வெற்றிகொண்ட பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பை ஆட்சி புரிந்து வந்த வன்னியர் எனப்படும் முக்குவ சிற்றரசர்கள் சுதந்திரமான ஆட்சியை நடத்தி வந்தனர். பொ.ஆ. 1450- 1595 வரை இவர்களின் தனியாட்சி நிலைத்திருந்தது. இக்காலப்பகுதியில் தம்பிலுவிலில் கண்ணகி அம்மன் வழிபாடு சிறப்புப் பெற்றிருந்தது.

## சிங்காரபுரி மாரியம்மன் கோயில் - அட்டப்பள்ளம்

மட்டக்களப்பு - பொத்துவில் வீதியில் சுமார் 47 கி.மீ. தூரத்தில் நிந்தவூர் உள்ளது. இங்கிருந்து சற்று தெற்கில் அட்டப்பள்ளம் எனும் பழந்தமிழ் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் சுமார் 2000 வருடங்களுக்கு முன்பு ஸ்தாபிக்கப்பட்டதே சிங்காரபுரி மாரியம்மன் கோயிலாகும். வடக்கே காரை தீவையும், தெற்கே களியோடை ஆற்றையும் எல்லைகளாகக் கொண்டதே நிந்தவூர் பிரதேசமாகும். ஆதிகாலத்தில் நாகர் குலத்தவர் இங்கு வாழ்ந்ததாக அறிய முடிகிறது. இவர்கள் வாழ்ந்த இடமான 'நாகமேடு' என்னுமிடம் களியோடைக்கு அருகில் காணப்படுகிறது.



சிங்காரபுரி மாரியம்மன் கோயில்

### கூத்திக மன்னன் காலத்து சிங்கார தோப்பு

பொ.ஆ.மு. 3ஆம் நூற்றாண்டில் இலங்கையை ஆண்ட தமிழ் மன்னன் கூத்திகன் நகர் வலம் வரும்போது பொழுதுபோக்கு வாசல் தலமாக, தென் கிழக்கின் காட்டுப் பகுதியில் ஓர் ரம்மியமான சூழலில் சிங்கார மண்டபம் ஒன்றையும், பூஞ்சோலையையும் அமைத்து அதற்கு 'சிங்காரத் தோப்பு' எனப் பெயரிட்டான். எனவும் இதனருகிலிருந்த காடுகளை அழித்து அபிவிருத்தி செய்து மக்களைக் குடியமர்த்தி, சிங்காரத் தோப்பிற்கு மேற்கில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த மண், கல் புட்டியாக இருந்த இடத்தை வெட்டி எடுத்து மூடுவித்து, அப்பரப்பில் தனது அரச மாளிகையை நிறுவினான் எனவும் மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. இவ்விடம் இன்று மல்கம்பிட்டி எனவும், சிங்காரத் தோப்பு அட்டப்பள்ளத்திலுள்ள சிங்காரவத்தை எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளது.



தலவிருட்சம்

## குறுநில வன்னிய மன்னர்கள் கூடும் இடம்

இத்தனை சிறப்புப் பெற்ற சிங்கார புரியில் புராதன காலத்தில் இவ்வம்மன் ஆலயம் கட்டப்பட்டது. கூத்திக மன்னன் காலத்தில் இராஜதானி அந்தஸ்தைப் பெற்ற இச்சிங்காரபுரி பின்பு வந்த சிற்றரசர்களின் இராஜதானியாகவும் விளங்கியது. பொ.ஆ. 14 ஆம் நூற்றாண்டில் இப்பகுதியை ஆட்சி செய்த குறுநில வன்னியர்கள் கூடும் இடமாக சிங்காரபுரி விளங்கி வந்துள்ளது. இவர்கள் ஆட்சிக் காலத்தில் இப்பகுதியில் தமிழும் சைவமும் தழைத்தோங்கி இருந்தன. இக்காலப்பகுதியில் இவ்வம்மன் கோயிலும் சிறப்புற்று விளங்கியது.



சிங்காரத் தோப்பு (சிங்காரவத்தை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொ.ஆ. 13 ஆம் நூற்றாண்டில் கலிங்க மாகோன் இலங்கையை கைப்பற்றி ஆட்சி செய்த காலத்தில் தென்கிழக்கில் பல சிற்றரசுகள் தோற்றுவிக்கப்பட்டன. இவற்றில் ஒன்றான சிங்காரபுரி அட்டப்பள்ளத்தை இராஜதானியாகக் கொண்டு வன்னிச் சிற்றரசனால் ஆளப்பட்டது. இக்காலகட்டத்தில் சிங்காரபுரி அம்மன் ஆலயம் சிறப்புற்று விளங்கியது. பொ.ஆ. 16 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் இவ்வாலயம் அந்நியர்களால் அழிக்கப்பட்டிருக்க வேண்டும் என நம்பப்படுகிறது.


## சிங்காரபுரி மாரியம்மன் ஆலயத்தின் புராதன எச்சங்கள்

அன்று சீரும் சிறப்பும் பெற்று விளங்கிய இவ்வாலயம் இன்று சிறிய ஆலயமாக, இப்பகுதியில் வாழும் இந்துக்களால் பராமரிக்கப்பட்டு வருகிறது. புராதன ஆலயத்தின் கற்தூண்கள் சில இங்கு காணப்படுகிறன. இங்கிருந்து சுமார் 2 கி.மீ. தொலைவில் ஓர் ஆலமரத்தின் கீழ் மிகப் பழைய கிணறு ஒன்றும் உள்ளது. இவ்வாலயத்திலிருந்து தெற்குப் புறமாக சுமார் ஒன்றரை கி.மீ. தொலைவில் 'சிங்காரத் தோப்பு' அமைந்திருந்தது. இதன் புராதன மண்டபத்தின் இடிபாடுகள் அண்மைக்காலம் வரை காணப்பட்டன. இரண்டு அறைகளும், அவற்றின் கற்தூண்களும் இங்கிருந்த வரலாற்றுச் சின்னங் களாகும். அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின் போது இவை அழிந்து போனதாகவும் கூறப்படுகிறது. இவ்விடம் கடற்கரையிலிருந்து சுமார் 100 மீற்றர் தூரத்தில் இருக்கிறது. இங்கிருந்து ஓர் ஓடை வெட்டப்பட்டு அது அருகிலுள்ள நொச்சியடி ஆற்றுடன் தொடர்புபடுத்தப்பட்டு, அங்கிருந்து கடலுக்கும் போக்குவரத்துப் பாதையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. வயல் களின் மத்தியில் உள்ள தென்னஞ்சோலை ஒன்று இன்றும் ''சிங்காரவத்தை'' என அழைக்கப்படுகிறது.

## கண்ணகியம்மன் கோயில் - தம்பிலுவில்

திருக்கோயிலுக்கு வடக்கில் ஒரு கி.மீ. தூரத்தில் தம்பிலுவில் எனும் பழம்பதி அமைந்துள்ளது. கிழக்கில் வங்கக் கடலும், மேற்கில் பெரிய களப்பு வாவியும், வடக்கில் தம்பட்டைக் கிராமமும், தெற்கில் திருக்கோயிலும் தம்பிலுவிலின் எல்லைகளாக உள்ளன. இக் கிராமத்தின் புராதன ஆலயமே கண்ணகியம்மன் ஆலயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தம்பிலுவில் கண்ணகி அம்மன் கோயில்

## பொ.ஆ. முதலாம் நூற்றாண்டில் உருவான கிராமம்

பொ.ஆ. 48இல் (கலி ஆண்டு 3150) உன்னரசுகிரி இராஜதானியை ஆட்சி செய்த மனுநேயகயபாகு எனும் மன்னனின் தாயாரே தம்பதி நல்லாள் எனும் சோழ அரசியாவார். மனுநேயகயபாகு தான் திருத்தியமைத்த திருக்கோயில் ஆலயத்தின் அருகில் தன் தாயாரின் நினைவாக குளமொன்றை வெட்டியதாகவும், இக்குளத்திற்கு தம்பதிவில் எனப் பெயரிட்டதாகவும், இக்குளத்தை யண்டி உருவாகிய ஊரும் தம்பதிவில் என அழைக்கப்பட்டு பின்பு தம்பிலுவில் எனத் திரிபடைந்ததாகவும் மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. மேலும் நாகர்முனை எனும் திருக்கோயிலில் திருப்பணிகள் செய்வதற்கு தம்பட்டார் எனும் அந்தணர்கள் வரவழைக்கப்பட்டு திருக்கோயிலின் வடக்கில் குடியமர்த்தப்பட்டனர். திருக்கோயில் குடமுழுக்கு விழாவிற்கு சோழ நாட்டிலிருந்தும், கலிங்க நாடுகளிலிருந்தும் அழைப்பிக்கப்பட்ட அரசர்களையும், குடிகளையும் இவ்வந்தணர்களே வரவேற்றனர். தம்பட்டார் குடியமர்ந்த இவ்வூரே இன்று தம்பிலுவில்லின் வட எல்லையின் சுமார் 2 கி.மீ. தூரத்திலுள்ள தம்பட்டை என்னும் கிராமமாகும். இவ்வாறு மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது.

பொ.ஆ. 2ஆம் நூற்றாண்டில் தென் கிழக்கிலங்கையில் செல்வாக்குப் பெற்று விளங்கிய உன்னரசுகிரி அரசின் முக்கிய இடமாக தம்பிலுவில் அமைந்திருந்தது. இக்காலப்பகுதியில் மதுரையிலிருந்து கொண்டு வரப்பட்ட செண்பக நாச்சியம்மன் விக்கிரகம், சாகாமத்திலுள்ள ஊரக்கை என்னுமிடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இவ்வம்மனை கண்ணகி எனவும் அழைத்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வழிபாட்டுத் தலத்தின் தொடர்ச்சியே தம்பிலுவில் கண்ணகியம்மன் கோயிலாகும்.



தம்பதிவில் குளம்

## 600 வருடங்கள் பழமை வாய்ந்த ஆலயம்

பொ.ஆ. 1330 - 1450 வரை யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட தமிழ் மன்னர்களின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்த மட்டக்களப்பு முக்குவ வன்னிச் சிற்றரசர்கள் காலத்தில் தம்பிலுவில் கண்ணகியம்மன் கோயில் ஸ்தாபிக்கப் பட்டது. இற்றைக்கு சுமார் 600 வருடங்களுக்கு முற்பட்ட பாரம்பரியத்தைக் கொண்ட இவ்வாலயம் மிகவும் சக்தி வாய்ந்த ஆலயமாகக் கருதப்படுகிறது. பொ.ஆ. 1629- 1637 வரை கண்டியை ஆண்ட 2 ஆம் இராஜசிங்க மன்னன் காலத்தில் இவ்வாலயத்தில் 'ஊர்சுற்று காவியம்' பாடப்பட்டது. இப்பாடலில் மட்டக்களப்பு பிரதேசத்தில் கண்ணகி கோயில்கள் அமைந்திருந்த 30 கிராமங்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும் "மழைக்காவியம்" எனும் பாடலும் இவ்வாலயத்தில் பாடப்பட்டுள்ளது.


## ஆலயத்தில் காணப்படும் தொல்பொருட் சின்னங்கள்

இவ்வாலயத்தில் பழமை வாய்ந்த சில புராதனச் சின்னங்கள் காணப்படு கின்றன. பொ.ஆ. 11 ஆம் நூற்றாண்டில் பொலநறுவையை ஆட்சி செய்த முதலாம் விஜயபாகுவால் ஊரக்கை அம்மன் கோவிலுக்கு பரிசாக வழங்கப் பட்ட பொற்சிலம்பு, அம்மானைக் காய் போன்றவை அவ்வாலயம் அழிந்த பின் தம்பிலுவில் கண்ணகியம்மன் ஆலயத்திற்கு கொண்டுவரப்பட்டு இங்கு வைக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் வழங்கப்பட்ட தங்க மாம்பழம் சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடங்களுக்கு முன்பு இவ்வாலயத்திலிருந்து திருடப்பட்டு விட்டதாகத் தெரிய வருகிறது.

இவை தவிர இவ்வாலயத்தில் இன்னுமோர் தொல்பொருட் சின்னமாகக் காணப்படுவது கருங்கல்லினால் ஆன ஓர் தேர்ச் சில்லாகும். இதன் அமைப்பைப் பார்க்கும் பொழுது இது சுமார் 1000 வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்தது எனக் கூறலாம். இது போன்ற ஓர் கல் தேர்ச்சில்லு நயினாதீவு நாகபூஷனி அம்மன் ஆலயத்திலும் காணப்படுகின்றமை குறிப் பிடத்தக்கது. எனவே பண்டை காலத்தில் இவ்வாலயத்தில் கல்லினால் ஆன தேரோடும் வீதியும் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். உரிய முறையில் இங்கு தொல்லியல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டால் மேலும் பல ஆலயச் சின்னங்களைக் கண்டெடுக்கலாம். இங்குள்ள தேர்ச்சில்லு கிழக்கில் வேறு எந்த ஆலயங்களிலும் காணக்கிடைக்காத அரிய பொக்கிஷமாகும். ஆலயத்தின் தொன்மையை பறைசாற்றும் இன்னுமோர் சான்று இங்குள்ள புராதன ஆலமரமாகும். இது சுமார் 600 வருடங்களுக்கு மேற்பட்டது எனக் கூறப் படுகிறது.



புராதன தேர்ச்சில்லு

## கோளாவில் விநாயகர் கோயில் - அக்கரைப்பற்று

அக்கரைப்பற்று நகரின் தெற்கில் சாகாமம் செல்லும் வீதியில் பெரிய களப்பு வாவியின் வடகோடியில், கோளாவில் அமைந்துள்ளது. அக்கரைப்பற்று பகுதியின் ஆதி குடியேற்றப் பகுதியாக கோளாவில் விளங்கியுள்ளது. தற்போதுள்ள அக்கரைப்பற்றின் தென்மேற்குப் பகுதியே மிகப் பண்டைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலக் குடியிருப்புக்கள் நிறைந்த பகுதியாகக் காணப்பட்டுள்ளது. இக் குடியிருப்புகளுக்கு மத்தியில் இவ்வாலயம் அமைக்கப்பட்டிருந்தது.



*கோளாவில் விநாயகர் கோயில்*

## பொ.ஆ. 11 ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற ஆலயம்


பொ.ஆ. 11ஆம் நூற்றாண்டில் சோழர் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் கோளாவிலில் தமிழ் மக்கள் குடியமர்த்தப்பட்டதாக தெரிய வருகிறது. இக்காலப்பகுதியில் நாகர்முனை கந்தனாலயம் சிறப்புற்று விளங்கிய போதிலும், தமது வழிபாட்டுத் தேவையின் நிமித்தம் கோளாவில் கிராமத்தில் இவ்வாலயம் ஸ்தாபிக்கப்பட்டதாக வரலாற்று நூல்கள் கூறுகின்றன.

## வேடர்களால் ஸ்தாபிக்கப்பட்ட ஆலயம்

பண்டைய வரலாற்றைக் கொண்ட கோளாவில், கிராமம் பெரியகளப்பு, தில்லையாறு, பெரிய குளம், வண்ணம்கேணி ஆகிய நீர்ப்பரப்புகளை எல்லைகளாகக் கொண்டுள்ளது. புராதன காலத்தில் இப்பகுதி 'கோணாவில்' என்ற பெயருடன் விளங்கியது. அதுவே மருவி கோளாவில் ஆகிவிட்டது. இன்னுமோர் குறிப்பின்படி பொ.ஆ. 14 ஆம் நூற்றாண்டில் பண்டைய நாகரீகம் நிலவியிருந்த பகுதிகளிலிருந்து புலம்பெயர்ந்த மக்கள் இப்பிர தேசத்திலுள்ள தில்லை ஆற்றைக் கடந்து அங்கிருந்த காட்டுப் பிரதேசத்தை துப்பரவு செய்து குடியிருப்புகளை அமைத்துக் கொண்டனர். இவர்கள் குடியேறிய பகுதியே 'கோணாவில்' ஆகும். இப் பகுதிக்கு வந்த வேடர்கள் சிலர் இங்கிருந்த நாவல் மரத்தினடியில் இருந்த பொந்துகளில் பிராணிகளைத் தேடும் போது மரத்தை வெட்ட அதிலிருந்து இரத்தம் போன்ற சிவப்புச்சாறு கசிந்ததும் ஊர் மக்களிடம் இது பற்றிக் கூறியதாகவும், மக்கள் இது தெய்வ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள் விளையாட்டு என எண்ணி அவ்விடத்தில் ஓர் கல் பிள்ளையாரை வைத்து வழிபடத் தொடங்கியதாகவும், இவ்வாறே இவ்வாலயம் முதன் முதல் ஸ்தாபிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.



*புராதன கோமுகி*

## ஆலயத்தில் நடந்த அற்புதங்கள்

இவ் விநாயகர் ஆலயத்தில் பல அற்புதங்கள் நடப்பதாகவும் கூறப்படுகிறது. மழை பெய்யாக் காலங்களில் 'கொம்பு விளையாட்டு' விளையாடி மழை பெய்விக்கும் வழக்கம் இங்குள்ளது. சுமார் 200 வருடங்களுக்கு முன்பு ஒரு பக்தர் தனது நோய் தீர வேண்டி, பின் தனது நாக்கை அறுத்துக் கொண்ட தாகவும், இறைவன் கிருபையால் நாக்கு மீண்டும் ஒட்டியதாகவும், இதன் காரணமாக 'அறுத்த நாக்கொட்டிப் பிள்ளையார்' என்ற திருநாமமும் இப்பிள்ளையாருக்கு உண்டெனவும் கூறப்படுகிறது. இவ்வாலயத்தின் கருவறையில் கலை கோட்டு மாமுனிவரின் சமாதி உள்ளதாக நம்பப்படுகிறது.

## ஆலயத்தில் காணப்படும் புராதன சின்னங்கள்


இவ்வாலயத்தில் புராதன சின்னங்கள் சில காணப்படுகின்றன. மூல விக்கிரகம் சுமார் 500 வருடங்களுக்கு முற்பட்டது. முருகன், நாகதம்பிரான் விக்கிரகங்கள் 400 வருட பழமை வாய்ந்தவை. புராதன கருங்கற் பீடமொன்றும், கல் கோமுகியும், வட்டமான கல்லொன்றும், நீள்சதுரமான பீடக்கல்லொன்றும், வட்டமான குழிக்கல் ஒன்றும், கல் உரலொன்றும் ஆலய வளவில் காணப்படும் ஏனைய சின்னங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை யாவும் ஆலயத்தின் 500 வருட தொன்மைக்கு சான்றாக விளங்கும் தொல்பொருட் சின்னங்களாகும். இவற்றில் காணப்படும் கல் உரல் மிகப் புராதனமானது. புராதனமான இக்கல் உரலில் அண்மைக்காலத்தில் சில ஆங்கில எழுத்துக்களும், 1984 எனும் இலக்கமும் பொறிக்கப்பட்டுள்ளன. இவையாவும் பேணிப் பாதுகாக்க வேண்டியவையாகும்.



பண்டைய பீடக்கல்



கல் உரல்

## களியோடை காளியம்மன் ஆலயம் - ஒலுவில்

மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் செல்லும் வீதியில் கல்முனையைக் கடந்து செல்லும் போது எதிர்ப்படும் காரைதீவு சந்திக்கும், அக்கரைப் பற்றுக்கும் இடையில் ஒலுவில் கிராமம் அமைந்துள்ளது. காரைதீவிலிருந்து சுமார் 10 கி.மீ. தூரத்தில் உள்ள இக்கிராமத்திலிருந்து மேற்கு நோக்கிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லும் சிறிய பாதையூடாக சிறிது தூரம் சென்றதும் 'களியோடை' கிராமத்தை அடையலாம்.



காளி ஓடை ஆறு

## களி ஓடை எனத் திரிபடைந்த காளி ஓடை

பண்டைய காலத்தில் இக்கிராமம் 'காளியோடை' என்ற பெயரைக் கொண்டிருந்தது. கல்லோயா ஆறு களியோடை ஆறு என்ற பெயரில் இக்கிராமத்தின் ஊடாகப் பாய்ந்து ஒலுவில் கடலில் கலக்கிறது. இந்த ஆறும் அருகிலிருந்த காளி கோயிலும் சேர்ந்ததன் காரணத்தினால் இக்கிராமம் 'காளியோடை' என்றழைக்கப்பட்டது. காலப் போக்கில் இதுவே மருவி இன்று களியோடை என அழைக்கப்படுகிறது. கல் ஓயா ஆற்றின் கிளை ஆறு களியோடை ஆறு என்ற பெயரில் குறுக்கறுத்துச் செல்லும் இப்பகுதியும், இதன் மேற்குப் பகுதிகளும் பண்டைய காலத்தில் பட்டிபளைப் பிரதேசம் என அழைக்கப்பட்டன. பொ.ஆ.மு. 5 ஆம் நூற்றாண்டில் இப்பகுதியில் நிலவிய 'இயக்கி அம்மன்' வழிபாடே காளியம்மன் வழிபாடாக பின்பு மாறியுள்ளதாகக் கூறப்படுகிறது. இவ்வழிபாடு சம்மாந்துறையிலும் பண்டைய காலத்தில் நிலவியமை குறிப்பிடத்தக்கது. இதே காலப்பகுதியில் தான் களியோடை காளிகோயில் ஸ்தாபிக்கப்பட்டது.

## மாகோன் காலத்திலும், பாண்டியர் காலத்திலும் சிறப்புடன் விளங்கிய ஆலயம்

இப்பகுதி தமிழ் சைவமக்கள் செறிந்து வாழ்ந்த பகுதியாக விளங்கியது. களியோடையின் மேற்கில் சில மைல்கள் தொலைவில் தீகவாபி அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தீகவாபி பண்டைய காலத்தில் தமிழ் சைவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் செல்வாக்குப் பெற்றிருந்த பகுதியாக விளங்கியது. களியோடையிலும், தீகவாபியை அடுத்துள்ள குடுவிலிலும் உள்ள பொ.ஆ.மு. 2 ஆம் நூற்றாண்டுக் குரிய கல்வெட்டுகள் இதனை உறுதிபடுத்துகின்றன. இப்பகுதியிலுள்ள காடுகளில் பல சைவ ஆலயங்களின் இடிபாடுகள் காணப்படுகின்றன.

இக்காலப் பகுதியில் களியோடையிலும் அம்மன் வழிபாடு ஆரம்பிக் கப்பட்டுள்ளது. கலிங்கமாகோன் ஆட்சியின் போது குளக்கோட்டு மன்னனால் திருப்பணி செய்யப்பட்ட திருக்கோயில், களியோடைக்கு தெற்கில் சுமார் 20 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மாகோன் காலத்தில் களியோடைப் பகுதி சிறப்புப் பெற்று விளங்கியது. இதன் பின் பொ.ஆ. 1284-1314 வரையான பாண்டியர் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்திலும் களியோடை காளியம்மன் கோயில் உன்னத நிலையில் இருந்ததாகத் தெரிய வருகிறது. பிற்காலத்தில் இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் புலம் பெயர்ந்த பின் இப்பகுதி காடாக மாறியது. அப்போது இங்கிருந்த ஆலயமும் கைவிடப் பட்ட நிலையில் அழிந்து போயுள்ளது.



ஒலுவில் பல்கலைக்கழகம்

## பண்டைய நாகர் குடியிருப்பின் தென் பகுதியில் அமைந்திருந்த ஆலயம்

களியோடை காளிகோயில் களியோடைப் பாலத்தின் கிழக்கில் ஆற்றின் வடகரையில் அமைந்திருந்ததாகவும், ஆலயம் இருந்த இடம் தற்போது மண்மேடாகக் காட்சி தருவதாகவும் கிராம வாசிகள் கூறுகின்றனர். இவ்வாற்றின் தென் கரையில் தான் தற்போது ஒலுவில் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்பல்கலைக்கழகம் அமைந் திருக்கும் பகுதியே பண்டைய நாகர் குடியிருப்பான 'நாகமேடு' எனும் இடத்தின் தென் பகுதியாகும். இப்பகுதி பொ.ஆ.மு. 3 - 2 ஆம் நூற்றாண்டு காலப் பகுதியில் நாகர் செல்வாக்குப் பெற்றிருந்த பிரதேசமாகும். பொ.ஆ.மு. 5ஆம் நூற்றாண்டில் காளிசேனனால் ஆளப்பட்ட காளி தேசத்தின் தென் பகுதியே காளி ஓடை என்பதும் குறிப்பிடத்தக்கது. புராதன வரலாற்றைக் கொண்ட களியோடை காளி கோயிலின் எந்தவித எச்சங்களும் இன்று கிடைக்கக் கூடியதாக இல்லை. இதே காலப்பகுதியில் உருவான சம்மாந்துறை காளி கோயிலையும், பெரிய போரதீவு காளி கோயிலையும் நாம் காணக் கூடியதாக உள்ளது.

இக்காலப்பகுதியில் பொறிக்கப்பட்ட 3 பிராமிக் கல்வெட்டுக்களில் கபதி எனும் தமிழ்ச் சொல் காணப்படுகிறது. களி ஓடையில் குடிமனைகளைக் கொண்டிருந்த நகுலி, சமுத்தா, தீச ஆகியோரின் கற்குகை பற்றிய செய்தி கல்வெட்டில் காணப்படுகிறது.தீசன் எனும் பெயரில் தமிழ் வணிகன் இருந்தது பற்றி குடுவில் கல்வெட்டு கூறுகிறது. களி ஓடையிலிருந்து சுமார் 8 கி.மீ தூரத்தில் குடுவில் அமைந்துள்ளது.

## கண்ணகி அம்மன் கோயில் - வீரமுனை

அம்பாறையிலிருந்து கல்முனைக்குச் செல்லும் வழியில் உள்ள சம்மாந்துறையின் அருகில் வீரமுனைக் கிராமத்தில் சிந்தாத்திரிப் பிள்ளையார் ஆலயத்தின் அருகில் அதன் வடக்குப் புறத்தில் இக்கண்ணகி அம்மன் கோயில் அமைந்துள்ளது. இலங்கையிலேயே மட்டக்களப்புத் தமிழகத்தில் தான் கண்ணகி வழிபாடு அதிகளவில் காணப்படுகிறது. சுமார் 25க்கும் மேற்பட்ட கண்ணகியம்மன் கோயில்கள் மட்டக்களப்பு பிரதேசத்தில் உள்ளன.


### பொ.ஆ. 13 ஆம் நூற்றாண்டில் பாண்டியர் காலத்தில் அமைக்கப்பட்ட ஆலயம்

மட்டக்களப்பு பிரதேசத்தில் உள்ள கண்ணகி கோயில்களில் சில கஜபாகு காலத்தில் அமைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்ற போதும் அதற்கான சான்று கள் கிடைக்கவில்லை. சில 14 ஆம் நூற்றாண்டில் பாண்டியர் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்திலும், பல ஆலயங்கள் போர்த்துக்கேயர் காலத்திலும், அதன் பின்பும் உருவானவையாகும். வீரமுனை கண்ணகியம்மன் ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொ.ஆ. 13 ஆம் நூற்றாண்டில் பாண்டியர் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில் கட்டப்பட்டதாகத் தெரிய வருகிறது.

பட்டிப்பளை எனப்படும் கல்லோயா பிரதேசத்திலும், சம்மாந்துறைப் பிரதேசத்திலும் தனிப் பெரும்பான்மையினராக தமிழ், சைவ மக்கள் வாழ்ந்து வந்த காலம் பாண்டியர் செல்வாக்குப் பெற்றிருந்த காலமாகும். மாகோனது ஆட்சியின் பின் இலங்கையின் கிழக்குப் பிரதேசத்தில் பாண்டியர் செல்வாக்குப் பெற்றிருந்த காலமான பொ.ஆ. 1284- 1314 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வீரமுனை கண்ணகியம்மன் ஆலயம் அமைக்கப்பட்டது. இக்கால கட்டத்தில் கிழக்கிலங்கையில் கண்ணகி வழிபாடு உன்னத நிலையை அடைந்திருந்தது. வீரமுனையின் தென்பகுதியில் உள்ள கைகாட்டி மலைப் பகுதியில் பாண்டியர் நாணயங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இது இப்பகுதி பாண்டியர் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தது என்பதை உறுதி செய்கிறது.



*வீரமுனை கண்ணகி அம்மன் கோயில்*

இவ்வாலயம் வடக்கு நோக்கியவாறு மட்டக்களப்பு வாவியின் ஓரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. பொ.ஆ. 13 ஆம் நூற்றாண்டில் பாண்டிய மன்னர் களாலும் பொ.ஆ. 17 ஆம் நூற்றாண்டில் கண்டி மன்னர்களாலும் புனரமைக்கப் பட்ட இவ்வாலயம் அதன்பின் ஏதோ காரணத்தினால் கைவிடப்பட்டு சிதைந்து போயிலுள்ளது. தற்போது மீண்டும் புனரமைக்கப்பட்டதோடு, அழகிய கருவறை, விமானத்துடன் காட்சி தருகிறது.

## கண்ணகி அம்மன் கோயிலில் காணப்படும் தொல்பொருட் சின்னங்கள்

பாண்டியர் காலத்தில் இக்கோயில் கற்கோயிலாக கட்டப்பட்டு வழிபடப் பட்டுள்ளது என்பதற்கான ஆதாரங்கள் உள்ளன. இக்கோயிலில் பண்டைய சின்னங்களாக சில கற்றூண்களின் பாகங்களும், சைவக் கோயில்களில் மிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபூர்வமாகக் காணப்படும் ஓர் சந்திரவட்டக்கல்லும் உள்ளது. இவ்வாலயத்தின் முன்பாக உள்ள இச்சந்திரவட்டக்கல் சுமார் மூன்றரை அடி விட்டமுடையது. யானைகள் ஒன்றின் பின் ஒன்றாக செல்வது போல சிற்பங்கள் இதில் செதுக்கப்பட்டுள்ளன. இவை சந்திரவட்டக்கல்லின் ஓரத்திலும், அதற்கடுத்ததாக கொடிகளும், மையத்தில் வட்ட வடிவத்தினுள் பூவும் செதுக்கப்பட்டுள்ளது



*சந்திரவட்டக்கல்*

பொ.ஆ. 1605 - 1635 வரை கண்டியை ஆட்சி செய்த செனரதன் மன்னன் காலத்தில் சிந்தாத்திரிப் பிள்ளையார் ஆலயம் புனரமைக்கப்பட்ட போது, இக்கண்ணகியம்மன் கோயிலும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது. அப்போது இச்சந்திரவட்டக் கல்லும் அமைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் இந்துக் கோயில்கள் சிலவற்றில் சந்திரவட்டக்கல் காணப்படுகிறது. புராதன காலம் முதல் பௌத்த மன்னர்கள் இந்துக் கோயில்களை அமைத்ததோடு, பல கோயில்களை புனர்நிர்மாணம் செய்துள்ளனர். அவ்வாறு அமைக்கும் போது பௌத்த கட்டிடக்கலை மரபுகளில் சிலவற்றையும் இந்துக் கோயில்களில் சேர்த்துள்ளனர். பொ.ஆ.மு. 483 இல் இலங்கை மன்னனான விஜயன் முதல் பொ.ஆ. 1706-1739 வரை கண்டியை ஆண்ட ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திர சிங்கனான கடைசி சிங்கள பௌத்த மன்னன் வரை அனைத்து பௌத்த சிங்கள மன்னர்களும் இந்துக் கோயில்களை அமைத்ததுடன், புனரமைப்பும் செய்து மானியங்களும் வழங்கியுள்ளமை பற்றி சூளவம்சம் கூறுகிறது..


## இந்துக் கோயில்களில் திருப்பணி செய்த பௌத்த மன்னர்கள்

தமிழர்களின் எதிரியாக சித்தரிக்கப்படும் துட்டகைமுனு கூட கதிர்காமத்தில் முருகன் கோயிலை புனர்நிர்மாணம் செய்துள்ளதாக வரலாற்று நூல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகின்றன. எனவே இலங்கையில் ஆட்சி செய்த எல்லா மன்னர்களும் இந்து சமய ஆதரவாளர்களாகவே இருந்துள்ளனர். அத்துடன் ஏராளமான இந்துக் கோயில்களை அவர்கள் அமைத்துள்ளனர். அவ்வாறு அமைக்கும் போது பௌத்த கட்டிடக்கலை மரபுகளையும் சேர்த்துள்ளனர்.

இவ்வுண்மையைப் புரிந்து கொள்ளாத சிலர் சந்திரவட்டக்கல் கோயில் களில் இருந்தால் அது முன்பு பௌத்த விஹாரை இருந்த இடமென்றும், விஹாரையை அழித்தே கோயில் கட்டப்பட்டுள்ளது என்றும் ஓர் தவறான கருத்தைக் கூறி வருகின்றனர். அண்மையில் முன்னேஸ்வரம் சிவன் கோயிலிலும் ஓர் சந்திரவட்டக்கல் வெளிப்பட்டதன் மூலம் இவ்வாறான கருத்துக்கள் கூறப்பட்டன. அவ்வாலயம் கோட்டை இராச்சியத்தை ஆட்சி செய்த 6 ஆம் பராக்கிரமபாகுவால் புனரமைக்கப்பட்டதோடு, கல்வெட்டு சாசனமும் பொறிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




*சிதைந்த நிலையில் (தூண் கல்வெட்டு)*

## ஆலய உள்வீதியில் காணப்படும் கல்வெட்டு

வீரமுனைக் கண்ணகி அம்மன் ஆலயத்தின் உள்வீதியில் ஓர் தூண் கல்வெட்டு காணப்படுகிறது. 4 அடி உயரமான ஓர் சதுரத் தூணில் எழுத்துக்கள் பொறிக்கப் பட்டுள்ளன. இக்கல்வெட்டு இது வரை ஓர் கல் தூண் என்றே கூறப்பட்டு வந்தது. அண்மையிலேயே இதில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளமை தெரிய வந்தது. இது இதுவரை வாசிக்கப்படவில்லை. இதன் அருகில் ஓர் பழமை வாய்ந்த பீடக் கல்லும் காணப்படுகிறது. இவற்றைத் தவிர ஆலயத்தின் வாசலில் முன்பாக அமைக்கப்பட்டுள்ள தீர்த்தக் கேணியின் முன் பக்கத்திலும் ஓர் உடைந்த வாயில் தூணின் மேற்பகுதி காணப்படுகிறது. சதுரமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இத்தூணின் உச்சிப்பகுதி உருண்டையாகவும் அதன் அடிப்பாகத்தில் கழுத்து போன்ற வட்டமும் செதுக்கப்பட்டுள்ளது.



*தீர்த்தக்கேணியும், கல்தூணின் மேல்பாகமும்*

## பாலையடிபால விக்னேஸ்வரர் கோயில் - காரைதீவு

மட்டக்களப்பு நகரிலிருந்து தெற்கு நோக்கி செல்லும் நெடுஞ்சாலையில் 45 கி.மீ. தூரத்தில் காரைதீவு கிராமம் அமைந்துள்ளது. காரைதீவிலுள்ள பிரதான வீதியிலிருந்து கிழக்கு பக்கமாக கடற்கரையை நோக்கிச் செல்லும் வீதியில் சுமார் 1 கி.மீ. தூரத்தில் இப்புராதன ஆலயம் அமைந்துள்ளது.




*பாலையடிபால விக்னேஸ்வரர் கோயில்*

## பாலை மரத்தின் கீழ் புராதன விநாயகர் கோயிலின் எச்சங்கள்

காரைதீவு கிராமத்தில் புராதன காலத்தில் ஓர் விநாயகர் கோயிலின் சிதைவுகள் காணப்பட்டுள்ளன. ஆங்கிலேயர் காலத்தில் இப்பகுதியிலிருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடுகள் அழிக்கப்பட்ட போது பல நூற்றாண்டு பழமை வாய்ந்த விருட்சங்கள் பலவும் காணப்பட்டன. அப்பகுதியில் இருந்த பழமையான பாலை மரத்தை வெட்ட முயற்சித்த போதே ஓர் புராதன ஆலய எச்சங்கள் பாலை மரத்தின் கீழே தென்பட்டன. விநாயகரின் விக்கிரகம் ஒன்றும். தூப தீபங்களும், அகல் விளக்குகளும், சங்குகளும் பாலை மரத்தினடியில் கிடைக்கப் பெற்றன. இச் சைவ ஆலய சின்னங்கள் அழிந்துபோன ஓர் புராதன விநாயகர் கோயிலின் சின்னங்களாக இருந்தது. இவ்வாலயம் எப்போது யாரால் அமைக்கப்பட்டது என்பது தெரியவில்லை. அழிந்து போன புராதன விக்கினேஸ்வர ஆலயத்தின் விக்கிரகம் ஆங்கிலேயர் காலத்தில் புதிதாக கட்டப்பட்ட ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு பூஜிக்கப்படுகிறது.



புராதன கோமுகி


மதுரைப் பகுதியிலிருந்து வந்த சாத்திரி எனும் பெரியாரும் இவரது சந்ததியினருமே அன்று முதல் இவ்வாலயத்தை பராமரித்து வருகின்றனர். அன்று முதல் இன்று வரை காலத்துக்கு காலம் சிறிது சிறிதாக முன்னேற்ற மடைந்து வந்த இவ்வாலயம் இன்று அழகிய இரண்டு கோபுரங்களுடன் காட்சி கொடுக்கிறது. கிழக்கு நோக்கிய இராஜகோபுரமும், தெற்கு நோக்கிய இன்னுமோர் கோபுரமும் கண்ணைக் கவரும் வண்ணம் அழகுற அமைக்கப் பட்டுள்ளன. அம்பாறை மாவட்டத்தில் உயரமான இரண்டு கோபுரங்களை கொண்ட ஒரே ஆலயம் இதுவாகும். இங்கு முருகன், வைரவர், நாகதம்பிரான் ஆகியோருக்கும் பரிவார கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள இன்னுமோர் பரிவார கோயிலான நவக்கிரக கோயில் இம்மாவட்டத்திலுள்ள பழமை வாய்ந்த நவக்கிரகக் கோயிலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயத்தில் காணப்படும் பழமை வாய்ந்த தொல்பொருள் சின்னங்கள்

இவ்வாலயத்தில் தொன்மை வாய்ந்த சில சின்னங்கள் காணப்படுகின்றன. கருங்கல்லால் செதுக்கப்பட்ட சிற்பங்களைக் கொண்ட கதவு நிலை, பிள்ளையார், முருகன் ஆலயக் கோமுகிகள், மூன்று கற்தூண்கள், பிள்ளையார் மூல விக்கிரகம் போன்றவையே இவ்வாலயத்தின் புராதனச் சின்னங்களாகும்.

இங்கிருந்த மேலும் பல புராதனச் சின்னங்கள் 1985 ஆம் ஆண்டு ஏற்பட்ட கலவரத்தின் போது நாசகாரர்களால் அழிக்கப்பட்டதாகக் கூறப் படுகிறது. மரத்தேர்கள் இரண்டும், மூஷிக வாகனம் உட்பட ஐந்து கருங்கற் சிலைகள், ஒன்பது நவக்கிரகங்கள் போன்றவையே அழிக்கப்பட்டவையாகும். இவற்றுடன் இவ்வாலயத்தின் மிகப் பண்டைய சின்னமான, பாலை மரத்தின் கீழ் கண்டெடுக்கப்பட்ட சொறிக்கல்லினால் செய்யப்பட்ட பிள்ளையார் விக்கிரகமும் நாசகாரர்களால் அழிக்கப்பட்டுள்ளது.



இன்னுமோர் புராதன கோமுகி

## மாகாளியம்மன் கோயில் - சொறிக்கல்முனை

அம்பாறை - கல்முனை வீதியில் இருக்கும் சம்மாந்துறையின் வடக்கே சுமார் 4 கி.மீ. தொலைவில் உள்ள வீரமுனை கிராமத்திற்கடுத்தாற் போல் சொறிக் கல்முனை அமைந்துள்ளது. சொறிக்கற்கள் நிறைந்து காணப்பட்டதால் இவ்வூர் சொறிக்கல்முனை எனப் பெயர் பெற்றது. கிழக்குத் திசையில் மட்டக்களப்பு வாவியும் மேற்கில் காடும் நிறைந்த இப்பிரதேசத்தில் இலங்கையின் ஆதிக்குடிகளான இயக்கர்களால் பொ.ஆ.மு. 242- 82 காலப்பகுதியில் இவ்வம்மன் கோயில் வழிபாடு ஆரம்பிக்கப்பட்டதாக வரலாறு கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## சீர்பாததேவி காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டு ஒல்லாந்தர்களால் அழிக்கப்பட்ட ஆலயம்

பொ.ஆ. 8 ஆம் நூற்றாண்டளவில் சோழ இளவரசியான சீர்பாத தேவியோடு இந்தியாவிலிருந்து வந்த பரமன் என்ற பக்தன் தான் கொண்டு வந்த மாகாளி அம்மன் விக்கிரகத்தை இவ்விடத்தில் பிரதிஸ்டை செய்து கோயிலமைத்து வழிபட்டதாகத் தெரியவருகிறது.



சேனைக்குடியிருப்பு காளி கோயில்

சீர்பாததேவி காலத்தில் சீரோடும் சிறப்போடும் விளங்கிய இவ்வாலயம் 1747 ஆம் ஆண்டு மட்டக்களப்பைத் தாக்கியழித்த ஒல்லாந்தத் தளபதியான பஸ்கோல் முதலியின் தலைமையில் நாச வேலைகளில் ஈடுபட்டவர்களால் அழிக்கப்பட்டதாகவும், பின்பு சில வருடங்கள் இடிபாடுகளுடன் அழிந்து போன நிலையில் காணப்பட்டதாகவும், 1749 இல் ஒல்லாந்தர் ஆட்சியின் போது இந்தியாவிலிருந்து இங்கு வந்த குதிரைப்படைத் தளபதியான கெஜபுரி என்னும் பால்குடி பாவாவினால் மீண்டும் புத்துயிர் பெற்றதாகவும் தெரிய வருகிறது.



வட்டமான பூக்கல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் சொறிக்கல்முனைக்குச் சென்று இடிந்து மறைந்து கிடந்த அவ்வாலயச் சின்னங்களையும், அம்மனையும் கொண்டுவந்து கிட்டங்கித் துறையின் வடகிழக்கிலுள்ள சேனைக் குடியிருப்பு பகுதியில் தக்க இடம் தேடி, மேற்கில் வாவியினாலும், வடக்கில் சதுப்பு நிலத்தினாலும், கிழக்கிலும், தெற்கிலும் காடுகளினாலும் சூழப்பட்ட அமைதியான இடத்திலே இரண்டு இலுப்பை மரங்களின் கீழ் தான் கொண்டு வந்த அம்மனை பிரதிஸ்டை செய்து வழிபட்டதாகவும், பால்குடி பாவாவுடன் நாப்புட்டி முனையில் இருந்த நில அதிகாரியான கந்தப்பொடி என்பவரும் ஒன்று சேர்ந்து புதிதாக உருவாகிய ஆலயத்தை பராமரித்து வந்ததாகவும் கூறப்படுகிறது.



*சொறிக்கல்முனை கிறிஸ்தவ ஆலயம்*

## மாகாளி அம்மன் ஆயத்தின் புராதன சின்னங்கள்


தற்போது இவ்வாலயம் ஸ்ரீ பத்ர காளியம்மன் கோயில் என அழைக்கப் படுகிறது. இங்கு இருக்கும் தலவிருட்சமான மூன்று இலுப்பை மரங்கள் சுமார் 250 வருடங்கள் பழமை வாய்ந்தவையாகும். புராதன மாகாளி அம்மன் ஆலயத்தின் சின்னங்களாக இங்கு இருப்பவை மூலமூர்த்தியான அம்மன் விக்கிரகமும், பீடக்கல்லும், அரைப்பக்கல்லும் ஆலயத்தின் வாசலின் அருகில் காணப்படும் சிற்பங்கள் செதுக்கப்பட்ட வட்டவடிவமான கருங்கல்லும் ஆகும். இக்கல் சுமார் 10 அங்குல விட்டமுடையது.

அன்று மாகாளியம்மன் ஆலயம் இருந்த இடத்தில் தற்போது ஓர் கிறிஸ்தவ ஆலயம் அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இக்கிறிஸ்தவ ஆலயம் ஒல்லாந்தர் காலத்தில் அவர்களால் இடிக்கப்பட்ட மாகாளி அம்மன் ஆலய இடிபாடுகள் மீது அமைக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

1807 இல் பஸ்கோஸ் முதலி சொறிக்கல் முனையில் கத்தோலிக்க தேவாலயத்தைக் கட்டியதாக எஸ்.ஓ. கனகரத்தினம் "Monograph of Batticaloa

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


District of the Eastern Provina" எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். இதன்படி 1807 ஆம் ஆண்டுக்கு முன்பு சொறிக்கல் முனையில் மாகாளி அம்மன் கோயிலே இருந்துள்ளது என்பது உறுதியாகிறது.



செவ்வக பீடக்கல்லும், அரைப்புக்கல்லும்

## திரெளபதி அம்மன் கோயில் - பாண்டிருப்பு

பாண்டிருப்பு கிராமம் கல்முனை பட்டினத்தில் வடக்கில் 2 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்கு திரெளபதி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது. இலங்கையில் திரெளபதி அம்மனுக்காக அமைக்கப்பட்ட ஒன்றிரண்டு கோயில்களில் பாண்டிருப்பு கோயிலும் ஒன்றாகும். இவ்வாலயத்தில் உள்ள பட்டயத்தின் படி வட இந்தியாவிலிருந்து வந்த தாதன், கவுத்தன் என்பவர்கள் கந்த பாணந்துறையில் இறங்கி இப்பகுதியில் அன்றிருந்த எதிர்மன்ன சிங்கன் எனும் சிற்றரசனின் உதவியுடன் இவ்வாலயத்தைக் கட்டியதாக அறியக் கூடியதாய் உள்ளது.



பாண்டிருப்பு திரெளபதி அம்மன் கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொ.ஆ. 16ஆம் நூற்றாண்டில் எதிர்மன்ன சிங்கனால் கட்டப்பட்ட ஆலயம்

பொ.ஆ. 1538-1578 காலப்பகுதியில் உன்னரசுகிரி, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளை ஆட்சி செய்த எதிர்மன்னசிங்கனால் இவ்வாலயம் கட்டப்பட்டது. எதிர்மன்னசிங்கன் இக்காலப்பகுதியில் மட்டக்களப்பு, மண்முனை, போர் முடை நாடு, கோறளை நாடு, உன்னரசுகிரி போன்ற பகுதிகளை ஆட்சி செய்து வந்தான். இக்காலப் பகுதியில் இலங்கை வந்த தாதன் எனும் துறவி திருக்கோயிலில் இருந்த சைவ மக்களுக்கு மகாபாரதக் கதையின் அருமை பெருமைகளை எடுத்துரைத்தார். தாதன் வந்திருப்பதையும், மகாபாரத அற்புதங்களையும் கேள்வியுற்ற எதிர்மன்னசிங்கன் பாண்டவர் வரலாற்றை செய்து காட்டுமாறு தாதனிடம் வேண்டுகோள் விடுத்தான். தாதனும் கடற் கரையோரமாக ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்து வடவால் மரங்கள் அடர்ந்திருந்த அவ்விடத்தில் தீ வளர்த்து, பாண்டவர் வேடம் தரித்து, அத்தீயில் இறங்கி வெளிவந்தார். இவ்வதிசயத்தை கண்ட எதிர்மன்னசிங்கன் அவ்விடத்திலேயே ஆலயம் ஒன்றை அமைத்து, 'பாண்டுறுப்பு முனை' என்று பெயரிட்டான்.

அன்று, தாதனால் ஆரம்பிக்கப்பட்ட தீ மிதிப்பு வைபவம் இன்றும் 'தீப்பள்ளயம்' என்ற பெயரில் இங்கு மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இவ்வாலயத்திலுள்ள விக்கிரகங்கள் அனைத்தும் தாதனால் கொண்டு வரப் பட்டவையாகும். பஞ்சபாண்டவர்கள் ஐவரும், திரௌபதி அம்மனும் இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டு பூஜிக்கப்பட்டிருந்தாலும் சகாதேவன் விக்கிரகம் மட்டும் தற்போது இங்கு இல்லை. அச்சிலைக்கு பூஜைசெய்ய இயலாது எனக் கூறி பூசகர்கள் சகாதேவன் சிலையை கடலில் போட்டு விட்டதாகத் தெரியவருகிறது.



*வடவால் மரச்சோலை -ஆலயவளவு*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விமலதர்ம சூரியன் திருப்பணி செய்த ஆலயம்

பொ.ஆ. 1603 இல் கண்டி மன்னன் விமலதர்ம சூரியன் மட்டக்களப்புக்கு விஜயம் செய்து சம்மாந்துறை வன்னிய ராசாவின் மாளிகையில் தங்கியிருந்த வேளையில், இவ்வன்னிமையின் உதவியுடன் இப்பகுதியிலிருந்த பிரசித்தி பெற்ற ஆலயங்களுக்குச் சென்று திருப்பணிகளுக்கு நன்கொடைகள் வழங்கி யதாகத் தெரிய வருகிறது. இவ்வாலயங்களில் பாண்டிருப்பு திரௌபதி அம்மன் கோயிலும் ஒன்றாகும். இக்காலப் பகுதியில் செழிப்புற்று விளங்கிய மட்டக்களப்பு ஆலயங்களில் இதுவும் ஒன்றாகும். இலங்கையில் திரௌபதி அம்மன் ஆலயங்கள் மிக அரிதாகவே உள்ளன. பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலயத்தைப் போலவே புத்தளம் மாவட்டத்தில் உடப்பு என்னும் இடத்தில் திரௌபதி அம்மன் ஆலயம் பிரசித்தி பெற்று விளங்குகிறது. இவ்வாலயத்திற்கு சற்று வடக்கில் முந்தல் என்னுமிடத்திலும் திரௌபதி யம்மன் ஆலயம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



பஞ்சபாண்டவர் வாசல்

## ஜேம்ஸ் ஹாட்மனின் குறிப்பு

இந்தியாவிலிருந்து வந்த பொற்கொல்லர் ஒருவர் பஞ்ச பாண்டவர் சிலைகளையும், திரௌபதி அம்மன் சிலையொன்றையும் கொண்டு வந்து இங்கு திரௌபதி அம்மன் ஆலயத்தை அமைத்து வழிபட்டு வந்ததாக 'Hinduism in Ceylon' எனும் நூலில் ஜேம்ஸ் ஹாட்மன் எனும் அறிஞர் குறிப்பிட்டுள்ளார்.

பொ.ஆ. 11ஆம் நூற்றாண்டில் சோழர் காலத்தில் பாண்டிருப்பு பகுதியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்மாளர் குடியமர்ந்ததாக ஆய்வுகள் மூலம் தெரியவருகிறது. கம்மாளரை பொற்கொல்லர் என்றும் அழைப்பர். இவர்களில் ஒருவரே பஞ்சபாண்டவர் சிலைகளையும், திரௌபதி அம்மன் சிலையையும் இந்தியாவிலிருந்து கொண்டுவந்து இங்கே ஆலயத்தை அமைத்ததாக ஜேம்ஸ் ஹாட்மன் கூறுவது குறிப்பிடத்தக்கது.

## ஜெயங்கொண்ட சலாமேக ஈஸ்வரம் - மகாகிரிந்திகம

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் மகாகிரிந்திகம அமைந்துள்ளது. இங்கு கிடைக்கப் பெற்ற கற்சாசனம் ஒன்றின் மூலம் இப்பகுதியில் இருந்த பிரம்மதேயம் எனப்படும் சதுர்வேதி மங்கலம் பற்றிய தகவல்கள் கிடைத்துள்ளன. பொ.ஆ. 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இக்கல்வெட்டு பொ.ஆ. 1134 இல் பொறிக்கப்பட்டுள்ளது. இதன்படி இப்பகுதி 'ஜெயங் கொண்ட சலாமேக சதுர்வேதி மங்கலம்' என்ற பெயருடன் விளங்கியுள்ளது.



பக்கி எல்ல

## இலங்கையில் இருந்த இரண்டு பிரம்மதேயங்கள்

இதுவரை கிடைக்கப் பெற்ற தொல்லியல் சான்றுகளின் படி இலங்கையில் பிரம்மதேயங்கள் எனப்படும் சதுர்வேதி மங்கலங்கள் இரண்டு மட்டுமே அறியப்பட்டுள்ளன. ஒன்று 'இராஜராஜ சதுர்வேதி மங்கலம்' எனும் கந்தளாய் பிரதேசம். இரண்டாவது 'ஜெயங் கொண்ட சலாமேக சதுர்வேதி மங்கலம்' எனும் மகாகிரிந்திகம பகுதியாகும். இவை இலங்கையை சோழர் ஆட்சி செய்த காலத்தில் இந்துக்களின் சமய, வழிபாட்டுத் தேவைகளுக்காக உருவாக்கப்பட்ட நகரங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதுர்வேதி மங்கலம் என்பது நான்கு வேதங்களையும் கற்ற பிராமணர் களுக்காக அரசர்களால் வரியில்லாமல் வழங்கப்பட்ட, சகல வசதிகளையும் கொண்ட குடியிருப்பு ஆகும். அத்துடன் அப்பகுதியின் சமயத் தேவைகளும் ஆலய நிர்வாக முறைகளும் இங்கிருந்தே கவனிக்கப்பட்டன. இத்தனை சிறப்புப் பெற்ற ஓர் நகரம் மகாகிரிந்திகம பகுதியில் சோழர்களின் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்டிருந்தது. இப்பிரம்மதேயம் தென்னிந்திய வணிகர் களினதும், அரசர்களினதும் செல்வாக்கைப் பெற்றிருந்தது.



*மகா கிரிந்திகம கல்வெட்டு*

## இரண்டாம் கஜபாகு பொறித்த தமிழ்க் கல்வெட்டு

பொ.ஆ. 12 ஆம் நூற்றாண்டில் இலங்கையை ஆட்சி செய்த சோழரை வென்ற முதலாம் விஜயபாகு இறந்த பின் இவனது தம்பியான முதலாம் ஜயபாகு மன்னனானான். சில மாதங்களின் பின் ஆட்சியைக் கைப்பற்றிய முதலாம் விக்கிரமபாகு, (பொ.ஆ. 1111-1132) அதன்பின் இரண்டாம் கஜபாகு (பொ.ஆ. 1132-1153) ஆகிய மன்னர்களின் 42 வருட ஆட்சியும் ஜயபாகுவின் ஆட்சியாண்டாகவே கல்வெட்டுக்களில் பொறிக்கப்பட்டன. ஜயபாகுத் தேவரின் 24 ஆவது ஆண்டில் ஓர் கல்வெட்டு பொறிக்கப்பட்டது. இது பொ.ஆ. 1134 ஆம் ஆண்டுக்குரியதாகும். சைவ சமயத்தின் மீது பற்றுக் கொண்டு பல சிவாலயத் திருப்பணிகளை மேற்கொண்ட கஜபாகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலநறுவையின் மன்னனாக முடிசூடி இரண்டு ஆண்டுகளில் இக்கல்வெட்டு எழுதப்பட்டுள்ளது. இது போன்ற இன்னுமோர் பிரம்மதேயமான கந்தளாய் சதுர்வேதி மங்கலத்திற்கும் கஜபாகு மன்னன் தான தர்மங்கள் செய்தது பற்றி கல்வெட்டு ஒன்றின் மூலம் அறியப்படுகிறது. இது கஜபாகு மன்னனாக முடிசூடி 14 ஆண்டுகளில் அதாவது பொ.ஆ. 1146 இல் எழுதப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மகா கிரிந்திகம கல்வெட்டு தமிழும் கிரந்தமும் கலந்து எழுதப்பட்டுள்ளது. இச்சாசனத்தில் முதல் 11 வரிகளும் தெளிவாக உள்ளன. நடுப்பகுதியின் வாசகங்கள் அழிந்து போயுள்ளன. கடைசியாகவுள்ள 6 வரிகளும் வாசித் தறியக் கூடியதாக உள்ளது. இச்சாசனத்தில் இங்கிருந்த பிரம்மதேயத்திற்கு மன்னனால் வழங்கப்பட்ட நில தானங்கள் வல்லபர் எனப்படுபவரின் வசமானது பற்றியும், இவை மீண்டும் பிராமணர்களுக்கு தானம் கொடுக்கப் பட்டது பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிராமணர் குடியிருப்பான ஜெயங்கொண்ட சலாமேக சதுர்வேதி மங்க லத்தில் இந்து ஆலயங்கள் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சோழர் காலத்திலும், அதன் பின் சைவசமயத்தில் மிகுந்த பற்றுக் கொண்டவனான கஜபாகு மன்னனின் காலத்திலும் இவ்வாலயங்கள் சிறப்புற்று விளங்கியிருக்க வேண்டும் என நம்பக்கூடியதாக உள்ளது. சதுர்வேதி மங்கலத்திலிருந்த பிராமணர்களாலும், வணிகர் சமூகத்தினராலும் இவ்வாலயங்கள் பூஜிக்கப்பட்டிருக்க வேண்டும். இக்காலப் பகுதியில் சிவாலயங்கள் பரவலாக அமைக்கப்பட்டிருந்ததால் மகாகிரிந்திகமவிலும் சிவாலயமே இருந்திருக்க வேண்டும் என யூகிக்கக் கூடியதாக உள்ளது.

## சோழர் காலத்து சாலாமேகபுரங்களில் சிவாலயங்கள்

சோழர் காலத்தில் குருநாகல் மாவட்டத்தில் புதுமுத்தாவ என்னுமிடத்தில் இது போன்ற ஓர் வணிக நகரம் அமைந்திருந்தது பற்றிய கல்வெட்டு ஆதாரங்கள் உள்ளன. இது விக்கிரமசலாமேகபுரம் எனும் தமிழ் நகரமாகும். இங்கு 'விக்கிரமசலாமேக ஈஸ்வரம்' எனும் சிவாலயம் இருந்தது பற்றியும் அக்கல்வெட்டு செய்தி கூறுகிறது. எனவே, மகா கிரிந்திகமவிலும் ஜெயங் கொண்ட சலாமேக சதுர்வேதி மங்கலத்தில் 'ஜெயங்கொண்ட சலாமேக ஈஸ்வரம்' எனும் சிவாலயம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் எனக் கூறலாம்.

மேலும் இலங்கையில் சோழர்காலத்திலும் அதற்கு சற்று பின்பும் பல வணிக நகரங்கள் இருந்தமை பற்றிய சுமார் 20 கல்வெட்டுகள் கிடைக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுள்ளன. இந்நகரங்களில் பலவற்றில் சிவாலயங்கள், அம்மன் கோயில்கள் அமைக்கப்பட்டிருந்தமை பற்றியும் இக்கல்வெட்டுகள் கூறுகின்றன. பல வணிக நகரங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட கோயில்கள் இருந்தமை பற்றியும் அறியக் கூடியதாக உள்ளது. இதன்படி ஜெயங்கொண்ட சலாமேக சதுர்வேதி மங்கலத்திலும் சிவாலயம் மட்டுமல்லாது மேலும் ஓர் ஆலயம் இருந்திருக் கலாம் என எண்ணக்கூடியதாக உள்ளது. ஏனெனில் கிரிந்திகம கல்வெட்டின் இறுதியில் வல்லவரையன் எனும் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இது விநாயகரைக் குறிக்கும் ஓர் பெயராகும். இக்கல்வெட்டைப் பொறித்தவர் களின் காவற் கடவுளாக விநாயகர் இருந்திருக்கலாம் எனவும், கூறப்படுகிறது. எனவே, மகா கிரிந்திகமவில் சிவாலயத்துடன் விநாயகர் ஆலயமும் அமைக் கப்பட்டிருக்கலாம் என்பது வரலாற்று ஆய்வாளர்களின் கணிப்பாகும். மகா கிரிந்திகமவில் அமைந்திருந்த ஜெயங்கொண்ட சலமேக சதுர்வேதி மங்கலம் பற்றியும், தமிழ்க் கல்வெட்டு பற்றியும் பேராசிரியர் பத்மநாதன் 'இலங்கைத் தமிழ் சாசனங்கள்' எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

## ஜெயங்கொண்ட சலமேக சதுர்வேதி மங்கலம் அமைந்திருந்த இடம்

மகாகிரிந்திகம அம்பாறை மாவட்டத்தில் எங்கிருந்தது என சரியாகக் கூற முடியாவிட்டாலும் பராக்கிரமபாகு மன்னன் ரோகணைக்கு படைதிரட்டிச் சென்றது பற்றிய குறிப்பில் மகாகிரிந்திகமவின் அமைவிடத்தை ஓரளவு தெரிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

இரண்டாம் கஜபாகுவின் பின் முதலாம் பராக்கிரமபாகு பொலநறுவையின் மன்னனானான். இக்காலப்பகுதியில் புத்தரின் புனித பாத்திரமும் தந்தமும் ரோகன நாட்டின் இராணியான சுகலாவின் பொறுப்பில் இருந்தது. இது முழு நாட்டிற்கும் உரித்தது என மன்னன் கேட்கவே ரோகன நாட்டு மக்கள் புனித தந்தத்தைத் தர மறுத்ததோடு பராக்கிரமபாகுவுடன் போரிடவும் துணிந்தனர்.

புனித தந்தத்தை மீட்கும் பொருட்டு பராக்கிரமபாகுவின் படைகள் பொலநறுவையிலிருந்து ரோகனைக்குப் புறப்பட்டன. பொலநறுவையி லிருந்து எரகுலு பகுதிக்கு வந்தனர். இங்கிருந்து தெற்கு நோக்கி நகர்ந்து கிவுலபா எனும் அரண்களுடன் கூடிய இடத்தைக் கைப்பற்றினர். இது திவுலான என்ற இடமாகும். அங்கிருந்து மேலும் தெற்கு நோக்கி உதகம என்னுமிடத்திற்கு முன்னேறி அங்கு மூன்று மாதங்கள் தங்கினர். இது உகன என்னுமிடமாகும். இங்கிருந்து மிகவும் பலம் வாய்ந்த அரண்களுடன் கூடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஹிஹொபு' என்னுமிடத்தைக் கைப்பற்றினர். இது அகழிகளினாலும் முள் வேலிகளினாலும் சூழப்பட்ட நகரமாகும். இந்நகருக்கு அடுத்ததாகக் காணப்பட்ட இன்னுமோர் பலம் வாய்ந்த இடமே கிரிந்தகமவாகும். இவ்விடத்தையும் கைப்பற்றிய பின் இங்கிருந்து தீகவாபிக்கு பராக்கிரம பாகுவின் படைகள் சென்றன என வரலாற்று நூல்கள் கூறுகின்றன.

இதன்படி கிரிந்தகம அம்பாறை மாவட்டத்திலுள்ள உகனைப் பகுதியில் அமைந்திருந்தது எனக் கூறலாம். அத்துடன் சோழர் காலம் தொடங்கி பராக்கிரமபாகு காலத்திலும் இது பலம்மிக்க இடமாகத் திகழ்ந்துள்ளது எனக் கூறக்கூடியதாக உள்ளது.

## பக்கிஎல்ல பகுதியில் அமைந்திருந்த மகா கிரிந்திகம

மகாகிரிந்திகம கல்வெட்டின்படி இது பிராமணர்களின் நகரம் என்பது தெளிவாகத் தெரிகிறது. இதன் சரியான அமைவிடத்தை அறியக்கூடிய வகையிலும், இது பிராமணர்களின் நகரம் தான் என்பதற்கும் இன்னுமோர் வலுவான ஆதாரம் உள்ளது.

பக்கி எல்ல கிரிகும்பர விஹாரையில் நான்கு பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. பொ.ஆ.மு. 2 ஆம் நூற்றாண்டுக்குரிய இக்கல்வெட்டுக் களில் ஒன்றில் இப்பகுதியிலுள்ள பிராமணகம வாவி எனும் குளம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் இப்பகுதியில் பிராமணர்களுக்கென ஓர் கிராமமும், குளமும் இருந்துள்ளமை தெரியவருகிறது. சுமார் 2200 வருடங்களுக்கு முன்பு இங்கிருந்த பிராமணர் கிராமமே பொ.ஆ. 11 ஆம் நூற்றாண்டில் சோழர் காலத்தில் ஓர் பிரம்மதேயமாக வளர்ச்சியடைந்துள்ளது எனலாம்.



No. 14 (4)

பக்கிஎல்ல கல்வெட்டு


எனவே ஜெயங்கொண்ட சலாமேக சதுர்வேதி மங்கலம் எனும் பிராமணர் கிராமமும் ஈஸ்வரன் கோயிலும் உகனையின் வடக்கில் சுமார் 15 கி.மீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரத்தில் உள்ள பக்கிளல்ல பகுதியில் இருந்துள்ளன என உறுதியாகக் கூறலாம்.

## ஈஸ்வரன் கோயில் - பிராமணகாமம், பானமை

பொத்துவிலில் இருந்து பானமை நோக்கி செல்லும் வீதியில் சுமார் 10 கி.மீ. தொலைவில் உள்ள சாத்திரவெளி என்னுமிடத்திற்கருகிலே பிராமணகம ஈஸ்வரன் கோயில் அமைந்திருந்ததாக நம்பப்படுகிறது. இப்பகுதியே பொ.ஆ. 3 ஆம் நூற்றாண்டில் கலந்தன் எனும் பிராமணர் தலைவன் பரிபாலித்து வந்த 'பிராமணகாமம்' அமைந்திருந்த பகுதியாகும். இக்காலப் பகுதியில் இலங்கையின் கிழக்குப் பகுதியில் பிரசித்தி பெற்று விளங்கிய பெரிய சிவாலயங்களில் ஒன்று இங்கு தான் அமைக்கப்பட்டிருந்தது. பிராமணன் கலந்தனின் நிர்வாகத்தின் கீழ் இவ்வாலயம் நன்கு பராமரிக்கப்பட்டு சீரும் சிறப்பும் பெற்று விளங்கியது எனலாம்.



*சாஸ்திரவெளி மலை*

## பொ.ஆ. 3 ஆம் நூற்றாண்டில் அழிக்கப்பட்ட மூன்று சிவாலயங்களில் ஒன்று

பண்டைய காலத்தில் கிழக்கு இலங்கைப் பகுதியில் சிறப்புற்று விளங்கிய சைவ ஆலயங்களில் ஒன்று தான் பிராமணகம சிவாலயம். பொ.ஆ. 275-301 வரை இலங்கையை ஆண்டு வந்த மன்னனான மகாசேனனால் கிழக்கில் மூன்று இந்துக் கோயில்கள் அழிக்கப்பட்டதாக மகாவம்சம் கூறுகிறது. இவை கோகர்ணத்து சிவாலயமும், எரகாவில சிவாலயமும், கலந்தன் எனும் பிராமணனின் ஊரிலிருந்த சிவாலயமும் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாசேனன் கட்டிய பௌத்த விகாரைகள்

இச்சிவாலயங்களை அழித்து கோகர்ண விகாரையையும், ஏரக்காவில விகாரையையும், கலந்த விகாரையையும் மகாசேனன் கட்டினான் என அந்நூலில் கூறப்பட்டுள்ளது. கலந்தன் எனும் பிராமணனின் ஊர் பிராமணகம எனத் தெரிய வருகிறது. இக்கோயில்கள் புத்த சாசனத்திற்குத் தடையாக இருப்பதால் இவை அழிக்கப்பட்டு விகாரைகள் கட்டப்பட்டன என மகாவம்சம் கூறுகிறது. இக்கூற்றின்படி பிராமணகம சிவாலயம் திருக்கோணேஸ்வரத்திற்கு இணையான பெரிய கோயிலாக இருந்திருக்க வேண்டும். மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய பிராமண கிராமங்களில் அமைந்திருந்த கோயில்கள் பற்றி இங்கே குறிப்பிடுதல் மூலம் கலந்தனின் சிவாலயத்தின் ஆரம்ப காலம் பற்றி ஓர் முடிவுக்குவரக்கூடியதாக உள்ளது.

பொ.ஆ.மு. 3 ஆம் நூற்றாண்டில் தேவநம்பியதீசன் காலத்தில் அனுராதபுரத்தின் வடக்கே திவக்கன் எனும் பிராமணனின் கோயில் அமைந்திருந்தது பற்றிய குறிப்பும், அனுராதபுரத்தில் பிராமணன் தியவசனின் கோயில் பற்றிய குறிப்பும் மகாவம்சத்தில் காணப்படுகின்றன. இக்காலப் பகுதியில் பிராமணர்கள் இலங்கையின் பல பாகங்களிலும் செல்வாக்கு பெற்று விளங்கியிருந்தமையை மகாவம்சக் குறிப்புகள் கூறுகின்றன. எனவே, பிராமணன் கலந்தனின் கோயிலும் இதே காலப்பகுதியில் அமைக்கப்பட்டிருக்கலாம் என பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் கூறுகிறார்.இதன்படி பிராமணன் கலந்தனின் சிவாலயம் பொ.ஆ.மு. 3 ஆம் நூற்றாண்டில் இருந்திருக்க வேண்டும் என்பது ஆய்வாளர்களின் முடிவாகும்.



*முதலைப்பாறை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புராதன காலத்தில் இலங்கையில் பிராமணக் கிராமங்கள்

மகாவம்சத்தில் பிராமணன் கலந்தனின் ஊர் என இது குறிப்பிடப்பட்டுள்ளது. 'பிராமணகம' எனப்படும் இவ்வூர் பிராமணர்கள் மட்டும் தனியாக செறிந்து வாழ்ந்த பகுதியாக இருக்க வேண்டும். இத்தகைய கிராமங்கள் பற்றி பல சிங்கள இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளது. பொ.ஆ.மு. 4 ஆம் நூற்றாண்டில் பண்டுகாபயன் காலத்தில் 'பிராமணவத்த' அமைந்திருந்தது பற்றியும், பொ.ஆ.மு. 3 ஆம் நூற்றாண்டில் தேவநம்பியதீசன் காலத்தில் 'பிராமணன் திவக்கவின் கிராமம்' பற்றியும், பொ.ஆ. 1 ஆம் நூற்றாண்டில் அமைந்திருந்த 'பமணகம' எனப்படும் பிராமணக் கிராமம் பற்றி சஸ்சேருவக் கல்வெட்டிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பிராமணக் கிராமங்கள் கோயில்களும் குளங்களும் சூழ பிராமணர்களின் தனிக் குடியிருப்பாக விளங்கியிருக்க வேண்டும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.



பாறைக் கல்வெட்டு

## சங்க இலக்கிய பார்ப்பன சேரிகளுக்கு நிகரானவை

பொ.ஆ.மு. 3 ஆம் நூற்றாண்டில் அநுராதபுரத்தை ஆட்சி செய்த முதலாம் ஜெட்ட திஸ்ஸனால் (பொ.ஆ. 266-276) பிராமணக் கிராமத்தில் குளமொன்று கட்டப்பட்டது பற்றி பூஜாவலிய எனும் நூலில் கூறியுள்ளமை இங்கே குறிப்பிடத்தக்கது. இதன்படி கோயில்கள் குளங்களுடன் கூடிய பிராமணக் கிராமங்கள் பல புராதன காலத்தில் இலங்கையின் பல பாகங்களிலும் செல்வாக்குப் பெற்று விளங்கியுள்ளன. சங்க இலக்கியங்களில் குறிப்பிடப் பட்டுள்ள 'பார்ப்பனச் சேரிகள்' எனப்படும் பிராமணர்கள் தனியாக வாழ்ந்த இடங்களுக்கு நிகராக இவை இருந்திருக்க வேண்டும். சிறுபாணாற்றுப்படை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற நூல்களிலும் 'பார்ப்பனச் சேரிகள்' பற்றி குறிப்புகளுண்டு. பிராமணச் சேரிகள் என்றழைக்கப் பட்ட இவையே பிற்காலத்தில் வளர்ச்சி பெற்ற 'சதுர்வேதிமங்கலம்' எனப்படும் பிரம்மதேயங்களுக்கு முன்னோடியாக இருந்தவையாகும். இப்படிப்பட்ட, பிராமணச் சேரிகளுக்கு நிகரான கிராமங்களில் ஒன்றாகவே பிராமணகமவும் மகாசேனன் காலத்தில் சிறப் புற்று விளங்கியிருக்க வேண்டும்.

## 'கல்யாண கன்னிகா' ஆடக சவுந்தரி கரை ஒதுங்கிய இடம்

பிராமண காமம் அமைந்திருந்த இந்தப் பிரதேசம் 'கல்யாண கன்னிகா' என்ற பெயரைக் கொண்ட பிரதேசமாகும். இப்பிரதேசத்தின் கிழக்குப் பகுதியில் நாவல் ஆற்றின் கரையில் ஆறு கடலுடன் சங்கமமாகும் கழிமுகத்திற்கருகில் உள்ள மலையடிவாரத்தில் கலந்தனின் சிவாலயம் அமைந்திருக்கலாம் என நம்பக் கூடியதாக உள்ளது. இன்று 'ஹெடஓயா' என்ற பெயரில் அழைக்கப்படும் நாவல் ஆறு இரண்டாகப் பிரிந்து அதில் ஒரு கிளை வடகிழக்கு நோக்கிப் பாய்ந்து அறுகம் குடாவில் சங்கமமாகிறது. அடுத்த கிளை 'குடாக்கள்ளி ஆறு, சின்னடி ஆறு எனும் பெயர்களில் மேலும் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து குடாக்கள்ளி எனும் இடத்தில் கடலுடன் சங்கமமாகிறது.



மலைக்குச் செல்லும் வழி

'கல்யாண கன்னிகா' என்றழைக்கப்பட்ட இப்பகுதி ஆடக சவுந்தரி பேழையுடன் கரை ஒதுங்கிய இடமாகும். பின்பு இந்த ஆடக சவுந்தரி மகாசேனன் எனும் மன்னனை திருமணம் முடித்ததாக மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. ஆடக சவுந்தரி கரை ஒதுங்கிய இப்பகுதி உன்னரசுகிரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் இராஜதானி அமைந்திருந்த இடமாகும். மனுநேய கயபாகு மன்னன் உன்னரசுகிரியை ஆடக சவுந்தரியிடம் ஒப்படைத்தான் எனவும் மட்டக்களப்பு மான்மியம் மேலும் கூறுகிறது. ஆடக சவுந்தரி குழந்தையாக கரை ஒதுங்கி, வளர்ந்து கன்னியான பின் இப்பகுதியை ஆட்சி செய்ததனாலும் மகாசேனனை கல்யாணம் செய்ததனாலும் இப்பகுதிக்கு 'கல்யாண கன்னிகா' என்ற பெயர் வந்திருக்கலாம் என எண்ணக்கூடியதாக உள்ளது. இருப்பினும் இப்பெயருக்கும், ஆடக சவுந்தரிக்கும் ஓர் தொடர்பு உள்ளது என்பது உறுதியாகத் தெரிகிறது.

## சிவாலயம் அமைந்திருந்த இடத்தில் கலந்த விகாரை

இப்பகுதி தான் புராதன பிராமண காமம் அமைந்திருந்த இடமெனக் கருதக் கூடியதாக உள்ளது. பொ.ஆ. 3 ஆம் நூற்றாண்டில் மகாசேனன் இவ்வாலயத்தை இடித்தழித்ததுடன் இங்கு 'கலந்த விகாரை' எனும் பௌத்த விகாரையை கட்டினான். இந்த பௌத்த விகாரை கூட பிராமண காமத்தின் தலைவனான கலந்தனின் பெயரில் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பொ.ஆ. 772-777 வரை ஆட்சி செய்த 7 ஆம் அக்ரபோதி இக்கலந்த விகாரையை புனரமைத்து கட்டியதாகவும் வரலாற்று நூல்கள் கூறுகின்றன.




கற்குகை

## கல்வெட்டில் வேல முகம்

மகாசேனனாலும், 7ஆம் அக்ரபோதியினாலும் கட்டப்பட்ட கலந்த விகாரை அமைந்திருந்த இடமே புராதன சிவாலயம் அமைந்திருந்த இடமாகும். இப்பிரதேசம் 'கல்யாண கன்னிகா' என்றழைக்கப்பட்டது. இப்பகுதியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொ.ஆ. 7 முதல் 9 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் மகாதாதிக மகாநாக எனும் மன்னனால் 'மணிநாகபப்பத்த' எனும் விகாரை கட்டப்பட்டது. இவ் விகாரையின் எச்சங்கள் உள்ள பகுதி தற்போது 'சாஸ்திராவெல' என அழைக்கப்படும் இடம் என அடையாளம் காணப்பட்டுள்ளது. இது நாவல் ஆறு கடலுடன் கலக்கும் கழிமுகத்தின் அருகில் காணப்படுகிறது. மணி நாகபப்பத்த எனும் விகாரையிலுள்ள கல்வெட்டில் 'வேலமுகம்' எனும் பெயர் காணப்படுகிறது. நாவல் ஆறு கடலுடன் கலக்கும் கழிமுகம் அமைந் திருந்த பகுதி 'வேலமுகம்' என்ற பெயரில் அழைக்கப்பட்டுள்ளது. ஆகவே, இதே இடத்தில் தான் புராதன சிவாலயமும் அமைந்திருக்க வேண்டும் என யூகிக்கக் கூடியதாக உள்ளது. சாஸ்த்ராவெல பகுதியில் பல புராதன கட்டிட இடிபாடுகள் காணப்படுகின்றன. இவ்விடிபாடுகள் மூன்று தொகுதிகளாகக் காணப்படுகின்றன. கடலின் அருகில் ஒரு தொகுதியும், மலையடிவாரத்தில் ஒரு தொகுதியும், மலைமீது ஒன்றுமாக இவை உள்ளன.



ஆலய இடிபாடுகள்

## புராதன கட்டிட இடிபாடுகள்

சாஸ்த்ராவெல பகுதியில் உள்ள மலை 'பன்மலை' என அழைக்கப்படுகிறது. இங்கிருந்து சுமார் அரை கி.மீ. தூரத்தில் ஓர் சிறிய மலை உள்ளது. இதன் அடிவாரத்திலேயே குடாக்கள்ளி ஆறு கடலில் சங்கமிக்கிறது. இம்மலை முதலைப்பாறை என அழைக்கப்படுகிறது. இம்மலையில் குகைகள் காணப் படுகின்றன. இதனருகில் புராதன செங்கட்டிகள் பரவலாக வீசப்பட்டுக் கிடக்கின்றன. இக்குகையிலிருந்து மலைக்குச் செல்ல கற்படிகள் செதுக்கப் பட்டுள்ளன. இக்கற்படிகள் கற்குகையினூடாக மலை உச்சிக்குச் செல்கின்றன. மலை உச்சியில் ஓர் கட்டிடம் அமைந்திருந்தமைக்கான செங்கற்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன இங்கிருந்து வடக்குப்பக்கமாக மேலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

300 மீற்றர் தூரத்தில் தூவை ஆறு கடலில் கலக்கும் இடம் உள்ளது. இவ்விடத்தில் தட்டையான பாறை ஒன்று உள்ளது. இப்பாறையில் இரண்டு கட்டிட இடிபாடுகள் காணப்படுகின்றன. கற்பாறையிலிருந்து ஆற்றுமுகத்திற்கு செல்வதற்கு சுமார் 50 கற்படிகள் செதுக்கப்பட்டுள்ளன.

இவ்விடமே ஆடக சவுந்தரி எனும் இளவரசி பேழையொன்றில் கரை ஒதுங்கிய இடமெனக் கூறப்படுகிறது. உன்னரசுகிரிய இராச்சியத்திற்குட்பட்ட இப்பகுதியை ஆண்ட மனுநேய கயபாகு எனும் சிற்றரசன் இப்பேழையை எடுத்து அதிலிருந்த குழந்தைக்கு ஆடக சவுந்தரி எனப் பெயரிட்டு வளர்த்தான் எனவும் இக்குழந்தை கரை சேர்ந்த இடத்திற்கு 'பாலர் நகை' எனப் பெயரிட்டு அழைத்ததாகவும் இவ்விடமே பானகை என்றும் திரிபடைந்து பின்பு பானமை என வழங்கப்பட்டு வருவதாகவும் மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது.



நாவல் ஆற்று சங்கமம்

## பன்மலை அடிவாரத்தில் இந்து தெய்வச் சிலை

நீண்ட மலைத் தொடரான பன்மலை சுமார் ஒரு கி.மீ. நீளமானதும், கடல் மட்டத்தில் இருந்து சுமார் 200 அடி உயரமானதுமாகும். பன்மலையின் அடிவாரத்தில் சுமார் பத்துக்கும் மேற்பட்ட கற்குகைகள் உள்ளன. இவற்றின் அருகில் கற்தூண்கள் சிலவும் ஏராளமான கட்டிட இடிபாடுகளும் செங்கட்டிகளும் காணப்படுகின்றன. இவற்றிடையே இந்து தெய்வச்சிலை யொன்றும் காணப்படுகின்றது. இது ஓர் பெண் தெய்வத்திற்குரிய சிலையாகும். இதனருகில் பீடக் கல்லொன்றும் காணப்படுகின்றது.


## பிராமிக் கல்வெட்டுகளில் நாகமலை

மலை மீது பெரிய கற்குகையொன்று காணப்படுகிறது. இதில் பிராமிக் கல்வெட்டொன்றும் உள்ளது. மலையின் மேற்குப் பக்கத்தில் கற்படிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செதுக்கப்பட்டுள்ளன. இங்கும் சில கட்டிட இடிபாடுகள் தென்படுகின்றன. இப்பகுதியில் சில கட்டிட இடிபாடுகளும் தூண்களும் காணப்படும் அதே வேளை தெய்வத் திருவுருவங்கள் வைக்கப்படும் கற்பீடங்களும் காணப் படுகின்றன. எண்கோணக் கற்தூண்கள் இரண்டும் இங்கு உள்ளன. இங்கிருந்து கீழே செல்வதற்கு மேலும் சுமார் 50 கற்படிகள் செதுக்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் மொத்தமாக மூன்று பிராமிக் கல்வெட்டுகள் காணப் படுகின்றன. இவற்றில் ஒன்று குகைக் கல்வெட்டாகும். ஏனைய இரண்டும் மலைப்பாறையில் பொறிக்கப்பட்டுள்ளன. இதில் இம்மலை 'நாக மலை' (நாகபப்பத்த) எனக் குறிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இப்பகுதி நாக வழிபாட்டுத் தலம் இருந்த இடம் என்றும் எண்ணக் கூடியதாக உள்ளது. பொ.ஆ.மு. 3 ஆம் நூற்றாண்டில் ரோகண பகுதியை ஆட்சி செய்த மகாநாகன் என்பவனால் இவ்வழிபாட்டுத் தலம் ஸ்தாபிக்கப்பட்டதாகத் தெரிகிறது. இங்கிருந்து தெற்கு நோக்கி சுமார் 15 கி.மீ. தொலைவில் யால வனவிலங்கு சரணாலயத்தை ஒட்டி அமைந்துள்ள ஓர் மலையும் 'நாக பர்வத மலை' என அழைக்கப்படுகிறது. இதுவும் ஓர் நாக வழிபாட்டுத் தலமாகும்.



*குடாக்கள்ளி*

## சிவ, முருக நாக வழிபாட்டுத் தலம்

பன்மலைப் பகுதியில் பரவலாகக் காணப்படும் கட்டிட இடிபாடுகளில் பல பௌத்த வழிபாட்டுத் தலங்களுக்குரியவை எனக் கூறப்படுகிறது. எனினும் புராதன காலம் தொட்டு சிவ, முருக நாக வழிபாடு நிலவி வந்த இப்பகுதியில் உள்ள இடிபாடுகளில் இந்து ஆலய இடிபாடுகளும் காணப்படுகின்றன. இவற்றில் ஒன்றே புராதன காலத்தில் அமைந்திருந்த கலந்தனின் சிவன் கோயில் இருந்த இடம் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இங்குள்ள ஓர் கல்வெட்டில் போககிரி எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.இது போகர் மலை என்பதாகும். இங்கு சித்தர் போகர் தங்கியிருந்து கதிர்காமத்திற்கு சென்றுள்ளார்.

## தீகவாபி முருகன் கோயில்

கல்முனை- அம்பாறை வீதியில் உள்ள சம்மாந்துறைச் சந்தியிலிருந்து தெற்கு நோக்கி சுமார் 10 கி.மீ. தொலைவில் தீகவாபி அமைந்துள்ளது. அம்பாறை சியம்பலாண்டுவ வீதியில் சுமார் 5 கி.மீ. தூரத்தில் உள்ள வரிப்பத்தான் சேனையின் வடகிழக்காக 8 கி.மீ. தூரம் பயணம் செய்தும் தீகவாபியை அடையலாம்.



*தீகவாபி வாயில்*

## அகழ்வின் போது கிடைக்கப் பெற்ற இந்துசமய வழிபாட்டுச் சின்னங்கள்

இங்கு மிகப் புராதன காலத்தில் முருக வழிபாடு நிலவியிருந்தமைக்கான தொல்பொருட் சின்னங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. 1964 ஆம் ஆண்டு தீகவாபி புராதன தூபிக்கருகில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போது இந்து சமய வழிபாட்டு சின்னங்கள் பல வெளிப்பட்டன. வெண் கலத்திலான இந்து தெய்வச் சிலைகள் நான்கும், வெண்கலத்தில் செய்யப்பட்ட சேவலுடன் கூடிய ஆயுதங்கள் மூன்றும் இவற்றில் முக்கியமானவை. சேவல் முருகனுக்குரிய சின்னம் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட பல செங்கற்களும் கிடைக்கப்பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்ட ஒரு தலைச் சூலங்கள், இருதலைச் சூலங்கள், முத்தலைச் சூலங்கள், சூலம் பொறிக்கப்பட்ட மண்பாண்டத் துண்டுகள் போன்ற தொல்லியல் சின்னங்கள் இங்கு செல்வாக்குப் பெற்று விளங்கிய சக்தி மற்றும் சிவ வழிபாட்டின் தொன்மையை கூறுகின்றன. இவை பெருங்கற் கால பண்பாட்டுக்குரியவை என அறியப்பட்டுள்ளது. தீகவாபிப் பகுதியில் ஆதி முதல் இந்துசமயம் தழைத்தோங்கி விளங்கியுள்ள மைக்குச் சான்றாக அமையும் இச்சின்னங்கள் யாவும் தீகவாபி அரும்பொருட் காட்சிச் சாலையில் வைக்கப்பட்டுள்ளன.

## பௌத்தம் அறிமுகமாவதற்கு முன்பு இருந்த புனிதத் தலம்

பொ.ஆ.மு. 6 ஆம் நூற்றாண்டில் தீகவாபி ஓர் புனிதத் தலமாக விளங்கியதாக மகாவம்சம் குறிப்பிடுகிறது. இக்காலப் பகுதியில் இங்கு பெருங்கற்கால பண்பாடு நிலவியது. பெருங்கற்காலம் என்பது பொ.ஆ.மு. 1000 - பொ.ஆ.மு. 500 வரையான காலப்பகுதியாகும். இலங்கையில் நாகரீகத்தின் தோற்றத்திற்கு வித்திட்டது பெருங்கற்காலப் பண்பாடு என்பது குறிப்பிடத் தக்கது. இக்கால கட்டத்தில் தீகவாபி பிரதேசத்தில் தமிழ் மக்கள் வாழ்ந்து வந்தனர் என்பதற்கான தொல்லியல் சான்றுகள் கிடைத்துள்ளன.

புத்த சமயம் இலங்கையில் அறிமுகமானது தேவநம்பியதீசன் (பொ.ஆ.மு. 250 - 210) காலப்பகுதியிலே என்பதாலும், இக்காலப்பகுதிக்கு முன்பு இங்கு வாழ்ந்தவர்கள் தமிழ், இந்துக்கள் என்பதாலும் பொ.ஆ.மு. 6 ஆம் நூற்றாண்டில் தீகவாபி எனும் புனிதத்தலம் ஓர் சைவத் தலம் என்பது உறுதியாகிறது. இச்சைவ ஆலயம் எங்கே அமைந்திருந்தது என்பதை சரியாக அறியக்கூடிய வகையில் எந்தவித தொல்லியல் சான்றுகளும் இதுவரை கிடைக்கவில்லை. இருப்பினும் தற்போதைய தீகவாபி தூபியை அண்டிய பகுதியில் இவ்வாலயம் அமைந்திருக்கலாம் எனக் கொள்ள இடமுண்டு.

## பொ.ஆ.மு. 2 ஆம் நூற்றாண்டில் தமிழ் மக்கள் வாழ்ந்த பகுதி

பொ.ஆ.மு. 2 ஆம் நூற்றாண்டுக்குரிய தமிழ் பிராமிக்கல்வெட்டொன்று தீகவாபி அருகிலுள்ள குடுவில் என்ற கிராமத்தில் கிடைத்துள்ளது. இக் கல்வெட்டில் திசன் என்னும் தமிழ்க் குடிமகன் தீகவாபி என்ற இடத்தில் வாழ்ந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. புராதன காலத்தில் திசன் என்ற பெயரில் தமிழர்களும் இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் உள்ள அழகன் குளத்தில் கிடைக்கப்பெற்ற புராதன மட்பாண்டத்தில் 'திச அன்' என்ற பெயர் எழுதப்பட்டுள்ளமை இதற்கு ஓர் உதாரணமாகும்.

குடுவில் கல்வெட்டின் படி இப்பகுதியில் பொ.ஆ.மு. 2 ஆம் நூற்றண்டிலும் தமிழ் மக்கள் வாழ்ந்துள்ளமை தெரிகிறது. பொ.ஆ.மு. 2 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ் மன்னன் எல்லாளனும் பிற்பகுதியில் புலகித்தன், பாகியன் உட்பட 5 தமிழ் மன்னர்கள் இலங்கையை ஆட்சி செய்தமை குறிப்பிடத்தக்கது. இத்தமிழ் மன்னர்களுக்கிடையில் துட்டகைமுனு, சத்தாதீசன், வலகம்பா உட்பட 6 சிங்கள மன்னர்கள் இலங்கையை ஆட்சி செய்துள்ளனர். இவர்களில் சத்த திஸ்ஸன் (பொ.ஆ.மு. 137-119) காலத்திலேயே தீகவாபியில் பௌத்த வழிபாட்டிடங்கள் அமைக்கப்பட்டன. இருந்த போதிலும் இங்கு தமிழ் மக்களும் இந்து வழிபாட்டிடங்களும் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



*மகாசேனன் எனும் முருகன் கோயில்*

## எல்லாளன் காலத்து தமிழ் சிற்றரசர்கள்

பொ.ஆ.மு. 205-161 வரையான காலப்பகுதியில் இலங்கையை ஆட்சி செய்த தமிழ் மன்னனான எல்லாளன் ஆட்சியின்போது தென்னிலங்கையில் 32 தமிழ் சிற்றரசர்கள் ஆட்சி புரிந்ததாகவும் இவர்களை வெற்றி கொண்ட பின்னரே துட்டகாமினி அநுராதபுத்தை அடைந்து எல்லாளனை வெற்றி கொண்டான் எனவும் மகாவம்சம் கூறுகிறது. எல்லாளன் காலத்தில் தென்னி லங்கையில் அதிகாரத்திலிருந்த 32 தமிழ் மன்னர்களில் இருவரால் தீகவாபி பகுதியும் ஆளப்பட்டுள்ளன. இவர்கள் காலத்தில் இங்கு சைவ ஆலயங்கள் அமைக்கப்பட்டிருந்ததாகவும் நம்பப்படுகிறது. துட்டகைமுனுவின் படைகள் ரோகன நாட்டிலிருந்து கச்சதீர்த்தம், மகியங்கனைக்கு படையெடுத்து வரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது பல தமிழர்கள் அவனது படையில் சேர்ந்ததாக மகாவம்சம் கூறுகிறது. இது தீகவாபி வரை தமிழர்கள் பரந்து வாழ்ந்ததை உறுதி செய்கிறது.

பொ.ஆ.மு. 2 ஆம் நூற்றாண்டில் தென்னிலங்கையில் 'மகாகொத்தன்' எனும் தமிழ் மன்னன் இருந்ததாக மகாவம்சம் கூறுகிறது. இதன்படி தமிழ் மன்னர்கள் தென்னிலங்கையை ஆட்சி செய்தமை உறுதியாகத் தெரிகிறது. இவர்கள் காலத்தில் இப்பகுதிகளில் தமிழும், சைவமும் தழைத்தோங்கியிருக்க வேண்டும்.

## சோழர் காலத்து சிற்றரசர்களும், பணிகளும்

தீகவாபி பகுதியில் சுமார் 12,000 ஏக்கர் பரப்பளவிலுள்ள பிரதேசத்தில் புராதன கட்டிட இடிபாடுகள் காணப்படுகின்றன. இவற்றில் பல சைவ ஆலயத்திற்குரிய இடிபாடுகளைக் கண்டதாக இப்பகுதி கிராமவாசிகள் கூறுகின்றனர். இக்கூற்றின்படி தீகவாபி பகுதியில் இந்துக்கள் வாழ்ந்ததுடன் கோயில்கள் அமைத்து வழிபாடு நடத்தியுள்ளமை தெளிவாகத் தெரிகிறது.

பொ.ஆ. 11 ஆம் நூற்றாண்டில் இலங்கையை சோழர் ஆட்சி செய்த காலத்தில் இப்பிரதேசம் முழுவதும் சோழரின் ஆட்சியின் கீழிருந்தது. அக்காலப்பகுதியில் சோழர் பிரதிநிதியான கதிர்சுதன் எனும் சிற்றரசன் இப்பகுதியில் சைவ சமயத்தையும், பௌத்த சமயத்தையும் பேணிப் பாது காத்து வந்தான். இவனுக்குப் பின் வந்த மதிசூதன் என்பவனும் இரு மதங் களையும் நேசித்து வந்தான். இவர்கள் காலத்தில் தீகவாபியிலிருந்த சைவ ஆலயங்களும், பௌத்த விகாரைகளும் நன்கு பராமரிக்கப்பட்டு வந்தன.

## தீகவாபி பகுதியில் கந்த வழிபாடு

பண்டைய காலங்களில் தீகவாபி ஓர் சைவத் தலமாக விளங்கியிருந்தமைக்கான வரலாற்றுச் சான்றுகள் பல உள்ளன. பொ.ஆ.மு. 250-210 வரையில் அநுராதபுரத்தை தேவநம்பிய தீசன் ஆட்சி செய்த காலத்தில் தென்னிலங்கையின் மாகமை இராஜதானியை அவனது தம்பி மகாநாகன் ஆட்சி செய்தான். இவன் காலத்தில் 10 பாண்டிய சத்திரிய சிற்றரசர்கள் தென்கிழக்கிலங்கையில் மகாநாகவின் ஆதரவுடன் செல்வாக்கு பெற்று விளங்கினர். இவர்கள் தென்கிழக்கிலங்கையில் கந்த வழிபாட்டிற்கு முக்கியத்துவம் அளித்திருந்த படியால் இப்பிரதேசத்தில் கந்த வழிபாடு சிறப்புற்று விளங்கியது.

முக்கியமாக கதிர்காமம், தீகவாபி போன்ற இடர்களில் இவ்வழிபாடு சிறப்புடன் விளங்கியமை குறிப்பிடத்தக்கது. கதிர்காம சத்திரிய சிற்றரசர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் ஆட்சி மட்டக்களப்பு மாவட்டம் வரை பரவியிருந்தது. இதனால் தீகவாபி உட்பட இப்பகுதியில் பழைமையான முருக வழிபாட்டு முறைகள் பேணப்பட்டு வந்தமையும் பின்பு இவர்கள் மதம் மாறியதையும் பிராமிக் கல்வெட்டுகள் மூலம் அறியக் கூடியதாக உள்ளது.

இவர்களின் ஆட்சி பொ.ஆ.மு. 2 ஆம் நூற்றாண்டு வரை மகாநாகனின் பேரனான கோத்தாபயவின் ஆட்சிக் காலம் வரை நீடித்திருந்தது. இவர்களது மூன்றாம், நான்காம், ஐந்தாம் தலைமுறையினர் தொடர்ந்தும் தென்கிழக்கு இலங்கைப் பகுதியில் வாழ்ந்ததற்கான கல்வெட்டு ஆதாரங்கள் உள்ளன. தீகவாபியில் கிடைக்கப் பெற்ற மேலும் ஓர் பிராமிக்கல்வெட்டு இங்கிருந்த தமிழ் நாட்டு வணிகர்கள் பற்றிக் குறிப்பிடுகிறது. இதன் மூலம் தீகவாபியில் இந்துமத செல்வாக்கும் தமிழ் வணிகர் செல்வாக்கும் நிலவியிருந்தமை உறுதியாகிறது.

## தீகவாபி பகுதியின் பாதுகாவலனாக மகாசேனன் எனும் தெய்வ மகன்

புத்தபகவான் தனது மூன்றாவது இலங்கை விஜயத்தின் போது தீகவாபிக்கு சென்றதாக பாளி நூல்கள் கூறுகின்றன. இச்சமயம் மகாசேனன் எனும் தெய்வ மகன் இப்பகுதியில் ஆதிக்கம் செலுத்தி வந்ததாகவும், இத்தெய்வ மகனையே தீகவாபி பிரதேசத்திற்கு பாதுகாப்பாக புத்த பகவான் அமர்த்திச் சென்றதாகவும் இந்நூல்கள் கூறுகின்றன.

மிகப் பண்டைய காலத்திலிருந்து இப்பிரதேசம் இத்தெய்வத்தினால் பாதுகாக்கப்பட்ட பிரதேசமாக விளங்கியதாகவும், மகாசேனன் எனும் இத் தெய்வத்திற்கு பண்டைய காலத்திலிருந்து இங்கு ஆலயம் அமைத்து பண்டைய மக்கள் வழிபாடு நடத்தி வந்ததாகவும் கூறப்படுகிறது. இந்த மகாசேனன் வழிபாடு இன்றும் இங்கு நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. இன்றும் தீகவாபியில் மகாசேனன் கோயில் பௌத்த தூபியின் வடக்கில் 300 யார் தூரத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

## மகாசேனன் எனும் தெய்வ மகன் யார்?

மகாசேனன் என்பது முருகனைக் குறிக்கும் பெயராகும். பண்டைய காலத்தில் இங்கு நிலவிய முருக வழிபாடு பிற்காலத்தில் பௌத்த மக்களால் மகாசேனன் என்ற பெயரில் மாற்றியமைக்கப்பட்டது. முருகனுக்கு மகாசேனன் என்ற பெயர் எப்படி வந்தது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தபெருமான் இலங்கைக்கு வந்ததாகக் கூறப்படும் காலத்தில் தென்னிலங்கையில் குறிப்பாக கதிர்காமம் பகுதி மகாசேனன் எனும் அரசனின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்ததாகவும், மகாசேனன் என்பது மிகப் பெரிய சேனையை அதாவது, படைகளை வைத்திருப்பவன் எனவும் சிங்கள மக்கள் நம்புகின்றனர்.

பண்டைய புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள போர்க்கடவுள் எனும் கார்த்திகேயனை மகாசேனன் எனவும் அழைப்பதுண்டு. சூரபத்மனை அழிப்பதற்காக சிவனால் படைக்கப்பட்ட குமரனே கார்த்திகேயனாகும். இந்த அர்த்தத்தில் கதிர்காமத்திற்கு கார்த்திகேயன் கிராமம் எனவும் ஓர் பெயருண்டு. போர்க்கடவுள் கார்த்திகேயனின் கிராமம் - மகாசேனன் கிராமம் என்பதே இதன் அர்த்தமாகும். மகாசேனன் எனும் தெய்வ மகன் என்பது மிகப் பெரிய சேனைகளை உடையவன். சிவபெருமானின் மகன் என்பதாகும்.

பொ.ஆ. 14 ஆம் நூற்றாண்டில் கோட்டை இராஜ்ஜியத்தில் பௌத்த ஆலயங்களை விட இந்துக் கோயில்களே அதிகளவில் அமைக்கப்பட்டிருந்தன. இவற்றில் ஒன்று பிரசித்தி பெற்ற கோட்டை கந்தசாமிக் கோயிலாகும். இக்காலப்பகுதியில் ஸ்ரீ ராகுலதேரர் எனும் பௌத்த பிக்குவால் எழுதப்பட்ட சலலிஹினி சந்தேச எனும் நூலில் கோட்டை கந்தசுவாமி கோயில் 'மகாசேனன் எனும் தேவ அரசனின் மாளிகை' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது சிங்கள மக்கள் முருகனை மகாசேனன் என அழைத்தமைக்கு ஓர் முக்கிய சான்றாக விளங்குகிறது.


கதிர்காமத்தைப் போன்று பண்டைய காலங்களில் தீகவாபியிலும் முருக வழிபாடு நிலவியிருந்து பிற்காலத்தில் அது மகாசேனன் என்ற பெயரில் மாற்றமடைந்து கோயில்களும் எழுப்பப்பட்டு இன்றுவரை பௌத்த மக்களால் பூஜிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## முருகன், பத்தினியம்மன் கோயில்கள் - பானமை

பானமை நகரின் மேற்குப் பக்கத்தில் பானமைக் குளத்திற்குச் செல்லும் வழியில் 2 கி.மீ தூரத்தில் முருகன், வீரபாகுத்தேவர், பத்தினியம்மன் ஆகியோருக்கு ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாலயங்கள் அமைந்திருக்குமிடம் 'அம்பிட்டியே தேவால' என அழைக்கப்படுகிறது. இவ்வாலயத்தின் வடக்கு, கிழக்குப் பகுதிகள் பசுமையான வயல் வெளிகளாலும், மேற்கு தெற்கு பகுதிகள் பற்றைக் காடுகளாலும் சூழப்பட்டுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பானமையில் மிகப் பண்டைய காலத்தில் முதன் முதலாக முருகன் வழிபாடு ஆரம்பிக்கப்பட்ட இடமும் இதுவே.



பானமை பத்தினி அம்மன் கோயில்

முருகன் சூரனை அழிக்க வீரபாகுத் தேவருடனும், பரிவாரங்களுடனும் உகந்தையில் வந்திறங்கி, அங்கிருந்து பானமைக்கு வந்து தற்போது ஆலயம் அமைந்திருக்கும் இடத்திலே தங்கியிருந்து பின்பு உகந்தை, கும்புக்கன், ஊடாக கபிலித்தைக்குச் சென்றதாகவும், அங்கிருந்து கதிரமலைக்குச் சென்று அங்கு குடிகொண்டதாகவும் பானமை மக்கள் கூறுகின்றனர். எனவே தான் கதிர்காமக் கந்தனின் புனித பூமியின் தொடக்கத்தில் பானமையிலும், மத்தியில் உகந்தை, கபிலித்தை ஆகிய இடங்களிலும், முடிலில் கதிர்காமத்திலும் முருகன் ஆலயங்கள் அமைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. கதிர்காமத் திருவிழா முடிந்தவுடன் உகந்தை திருவிழாவும், அதுவும் முடிந்தவுடன் பானமையில் திருவிழாவும் நடைபெறுகின்றன.




திரிசூலங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதி வேடர்களால் அமைக்கப்பட்ட கோயில்

முருகனும், வீரபாகுத் தேவரும் பானமைக்கு வந்து சென்றுள்ளதால் ஆதி வேடர்களால் இவ்விடத்தில் இருவருக்கும் ஓர் கோயில் அமைக்கப்பட்டு வழிபடப்பட்டு வந்ததாகக் கூறப்படுகிறது. அதன் பின்பு கஜபாகு மன்னன் காலத்தில் கண்ணகி வழிபாடு இலங்கையில் பரவியபோது முருகன் கோயிலுக்கு அருகில் பத்தினி அம்மனுக்கும் ஓர் கோயில் அமைக்கப் பட்டதாகக் கூறப்படுகிறது. இதன்படி பானமை முருகன் கோயில் 7000 வருடங்களுக்கு முன்பும், பத்தினியம்மன் கோயில் பொ.ஆ. 2ம் நூற்றாண்டிலும் தோற்றம் பெற்றுள்ளன. திறந்தவெளிக் கோயில்களாக இருந்த இவ்விரு கோயில்களும் 200 வருடங்களுக்கு முன்பு கற்கோயில்களாகக் கட்டப்பட்டுள்ளன.

பானமை மக்கள் இன, மத பேதமின்றி முருகன், வீரபாகுதேவர், பத்தினியம்மன், பிள்ளையார் ஆகியோரை வழிபட்டு வருகின்றனர். இம்மக் களின் குலதெய்வங்களாக முருகப் பெருமானும், பத்தினியம்மனும் விளங்கு கின்றனர். இன்று பானமை மக்கள் போற்றி வணங்கும் தெய்வமான 'அளுத் தெவியோ' என்பது முருகனையும், வீரபாகுத் தேவரையும் குறிக்கும் பெயராகும். முருகனும், பத்தினியம்மனும் வந்து அமர்ந்ததாகக் கருதப்படும் இரண்டு புராதன புளிய மரங்கள் இன்றும் ஆலய வளவில் காணப்படுகின்றன. இம்மரங்கள் பானமை மக்களால் போற்றி வணங்கப்படுகின்றன. இவற்றின் முன்பாகவே 'அங்கெலிய' என்றழைக்கப்படும் பிரசித்திபெற்ற கொம்பு முறிப்பு விளையாட்டு வருடாவருடம் திருவிழாவின் போது நடைபெறுகிறது. இக்கொம்பு முறிப்பு விளையாட்டிற்காக பண்டைய காலம் முதல் பானமை மக்கள் இருகுழுக்களாகப் பிரிந்துள்ளனர். முருகனுக்கான குழு மேல்பிரிவு (உடுபில) எனவும், பத்தினியம்மனுக்கான குழு கீழ்ப்பிரிவு(யட்டிபில) எனவும் பெயர் பெற்றுள்ளது.



*புராதன கற்கள்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலர் நகை நகரம் எனும் பண்டைய வனஜநாடு

பானமை பண்டைய காலத்தில் 'பாலர் நகை நகரம்' எனப் பெயர் பெற்று விளங்கியதாக மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. ஆடகசவுந்தரி எனும் இளவரசி கரை ஒதுங்கிய இடம் இதுவெனவும், சிரித்தபடி பெண் குழந்தையைக் கண்டெடுத்த இடமாகையால் 'பாலர் நகை' என இவ்விடம் பெயர் பெற்ற தாகவும் அந்நூல் மேலும் விபரிக்கிறது. இப்பெயரே காலப் போக்கில் திரிபடைந்து பானகை எனவும், பின்பு பானமை எனவும் அழைக்கப்படு வதாகக் கூறுப்படுகிறது.

பானமை மிகப் பண்டைய கிராமமாகும். இது இராவணனின் இலங்காபுரி பகுதியின் முக்கிய இடங்களில் ஒன்றாக விளங்கியுள்ளது. இக் காலப் பகுதியில் இப்பகுதி 'வனஜ நாடு' என அழைக்கப்பட்டதாக ஓர் கல்வெட்டின் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. பண்டைய பாளி நூல்களிலும் பானமை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பண்டைய காலம் முதல் உன்னரசுகிரி இராஜதானியின் ஓர் பகுதியாக விளங்கிய பானமைப் பிரதேசம் பொ.ஆ. 16ம் நூற்றாண்டில் கண்டி இராச்சியம் தனி அரசாகப் பலம் பெறாத காலத்தில் தென் கிழக்கிலங்கையில் இருந்த மூன்று சிற்றரசுகளில் ஒன்றாக வன்னிச் சிற்றரசர்களால் பரிபாலனம் செய்யப் பட்டு வந்தது.

## பானமை கிராமத்தின் அமைப்பு, வனப்பும்

பானமை நீர் நிலைகள் மிக்க ஓர் வளமான பிரதேசமாகும். பானமையின் மேற்குப் பகுதியில் இருந்து ஓடிவரும் விலா ஓயா ஆறு பல கிளைகளாகப் பிரிந்து பானமையின் வடக்கில் உள்ள முகத்துவாரத்தில் வங்கக் கடலுடன் சங்கமமாகிறது. பானமை கிராமத்தின் மேற்குப் பக்கத்தில் பானமைக்குளம் அமைந்துள்ளது. விலா ஓயா ஆற்றின் கிளை ஒன்றின் மூலம் இக்குளத்திற்கு நீர் கிடைக்கிறது. பண்டைய பாளி நூல்களில் 'பாஷாண வாபி' எனக் குறிப்பிடப்பட்டுள்ள குளம் பானமைக் குளத்தையே குறிப்பதாகும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இவ்விரு நீர் நிலைகள் மூலம் பானமைப் பகுதி செழிப்பான வளம் மிக்க பிரதேசமாக பண்டைய காலம் முதல் விளங்கியுள்ளது.

பானமை கிராமத்தின் தெற்குப் பக்கத்தில் அமைந்திருக்கும் பானமை வில்லுக்குளமும் ஓர் நன்னீர் நிலையாகும். பானமையின் கிழக்குப் பக்கத்தில் கடற்கரைக்கு அருகில் அமைந்திருக்கும் உள்ளவட்டை களப்பு உப்பு நீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்த நீர் நிலையாகும். இக்கலப்பை அடுத்து வடக்குப் பக்கமாகச் செல்லும் வீதியூடாக 2 கி.மீ தூரம் சென்றால் அழகிய பானமைக் கடற்கரையை அடையலாம். இக்கடற்கரையில் முகத்துவார மலைப் பாறை காணப்படுகிறது. கடற்கரைக்குச் செல்லும் வழியில் ஆங்காங்கே சில மணல் மலைகளும் காணப்படுகின்றன.

பண்டைய காலம் முதல் வேடர்கள் குடியிருந்த பானமைப் பகுதியில் இன்று நாம் காணும் மக்கள் குடியிருப்பு பொ.ஆ. 1818 ம் ஆண்டில் உருவான தாகும். இக்காலப்பகுதியில் வெல்லஸ்ஸ கிளர்ச்சியின் போது ஊவா பகுதியிலிருந்து ஆங்கிலேயரின் கொடுமைகளுக்குத் தப்பி தெற்குப் பக்கம் வந்தவர்களே பானமையில் குடியமர்ந்ததாகக் கூறப்படுகிறது. இவர்கள் வந்த காலத்தில் பானமையில் முருகன், பத்தினியம்மன், பிள்ளையார் ஆகிய தெய்வ வழிபாடுகள் சிறப்புற்று விளங்கியதாகக் கூறப்படுகிறது.

## முள்ளிக்குளம்மலை சிவன் கோயில் - பாலமுனை

கல்முனையிலிருந்து அக்கரைப்பற்றுக்கு செல்லும் வீதியில் பாலமுனை அமைந்துள்ளது. பாலமுனையிலிருந்து மேற்கு நோக்கிச் செல்லும் சிறிய பாதை வழியே சுமார் 3 கி.மீ தூரத்தில் முள்ளிக்குளம்மலை அமைந்துள்ளது. இம்மலை உச்சியில் புராதன காலத்தில் சிவாலயம் அமைந்திருந்தது.



*முள்ளிக்குளம் மலை*

ஜனசஞ்சாரமற்ற காட்டுப்பகுதியில் இரு சிறிய குன்றுகளுக்கு மத்தியில் உயர்ந்த குன்றாகக் காட்சியளிக்கும் முள்ளிக்குள மலையின் அடிவாரத்திலும், மலையிலும் ஆலயங்களின் இடிபாடுகள் காணப்படுகின்றன. அருகிலிருக்கும் இரு சிறிய மலைகளிலும் கட்டிட இடிபாடுகளைக் காணக்கூடியதாக உள்ளது. இம்மலைகளின் சரிவுகளில் கற்புருவம் வெட்டப்பட்ட 37 இயற்கையான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைக் குகைகள் உள்ளன. இயற்கையான மலைச்சரிவில் செதுக்கப்பட்ட படிகளும், ஆங்காங்கே பல அளவுகளில் கற்தூண்களும், புராதன கட்டிடங் களுக்குப் பயன்படுத்தப்பட்ட செங்கற்களும் ஆங்காங்கே குவியல்களாகவும், பரவியும் காணப்படுகின்றன.

## தமிழ்ச் சொல் பொறிக்கப்பட்டுள்ள பிராமிக் கல்வெட்டு

பிரதான மலைக்குன்றிலிருந்து சிறிய மலைக்குன்றுக்குச் செல்லும் குறுகிய பாதையின் அருகில் கற்குகைகள் காணப்படுகின்றன. இவற்றில் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவை பொ.ஆ.மு. 2ம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். இதில் 'ஹஹபதி' எனும் தமிழ்ச் சொல் காணப்படுகிறது.

'ஹஹபதி' எனும் சொல் ஓர் தமிழ்ப் பட்டப்பெயராகும். குடும்பத் தலைவன் என்பதைக் குறிக்கும். 'கிருஹபதி' என்ற சமஸ்கிருதச் சொல்லின் பிராகிருத வடிவமாகும். அனுராதபுரத்தில் கிடைக்கப் பெற்ற தமிழ் வணிகர் பற்றிய கல்வெட்டில் இச்சொல் சற்று மாறி 'ஹஹபதிகன்' எனப் பொறிக்கப் பட்டுள்ளது.



*மலையிலுள்ள ஓர் குகை*

## பொ.ஆ. 13ம் நூற்றாண்டில் நாவிதர் குடியமர்த்தப்பட்ட பகுதி

இக்கல்வெட்டுக்களின் படி இப்பகுதியில் பொ.ஆ.மு. 2ம் நூற்றாண்டில் தமிழர்கள் வாழ்ந்துள்ளமை தெளிவாகத் தெரிகிறது. இவர்களால் வழிபாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும் எனக் கூறப்படுகிறது. இதன் பின் பொ.ஆ. 13ம் நூற்றாண்டில் மாகோனின் ஆட்சியின் போதும் மாகனால் நாவிதர் குடியினர் இப்பகுதியில் குடியமர்த்தப்பட்டனர். இக்காலத்தில் இப்பகுதி தமிழ் மக்களின் செல்வாக்குப் பெற்றிருந்த பகுதியாக விளங்கியது.

இக்காலப் பகுதியில் முள்ளிக்குளமலையிலிருந்த சைவ ஆலயம் மாகோனால் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு நல்ல நிலையில் பராமரிக்கப் பட்டு செல்வாக்குப் பெற்று விளங்கியிருக்க வேண்டும் என நம்பப்படுகிறது.

பிற்காலத்தில் இங்கிருந்த மக்கள் கிழக்கு கரையோரத்தை நோக்கி குடிபெயர்ந்த பின்பு கைவிடப்பட்ட முள்ளிக்குளமலை ஆலயங்கள் கவனிப் பாரற்று அழிந்து போயுள்ளன. இன்றுவரை காடுகளால் மூடப்பட்டுள்ள இங்குள்ள சைவ ஆலய இடிபாடுகள் இப்பகுதியிலிருந்த தமிழர் நினைவுச் சின்னங்களாக உள்ளன.

## நந்திகோயில் தொடர்பான பிராமிக் கல்வெட்டு

முள்ளிக்குளம் மலைப்பகுதியில் பல கற்குகைகளில் கற்புருவம் வெட்டப் பட்டுள்ளது. இதன் மூலம் இக்குகைகளில் மக்கள் வாழ்ந்துள்ளமை புலப் படுகிறது. இம்மலை மீது பாறையிலும் கல்வெட்டுக்கள் பொறிக்கப் பட்டுள்ளன. இவற்றிடையே பல குறியீடுகளும் பொறிக்கப்பட்டுள்ளன. மலைக்குகைகளில் உள்ள கல்வெட்டொன்றில் 'நதிகிரிய' எனும் சொல் பொறிக்கப்பட்டுள்ளது. இது 'நந்திகிரி' எனப் பொருள்படுவதாக தொல்பொரு ளாய்வாளரான பூஜ்ய எல்லாவெல மேதானந்த தேரர் குறிப்பிட்டுள்ளார். இதன்படி முள்ளிக்குளம் மலை நந்திகிரி என்ற பெயரைப் பெற்று விளங்கியுள்ளமை தெரிகிறது.

இம்மலையில் அல்லது மலைக்குகையில் நந்திதேவர் வழிபாடு அல்லது சிவவழிபாடு நிலவிய ஆலயம் இருந்ததினாலேயே இம்மலை நந்திகிரி எனப் பெயர் பெற்றுள்ளதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். எனவே இம் மலைப்பகுதியில் ஆதி தமிழர்கள் வாழ்ந்ததோடு பொ.ஆ.மு. 3ம் நூற்றாண்டில் சிவனையும் வழிபட்டுள்ளனர் எனக் கூறக்கூடியதாக உள்ளது.

## மடத்துறை அம்மன் கோயில்
## (சின்ன கபிலித்தை அம்மன் கோயில்) - கூமுனை

உகந்தை முருகன் கோயிலில் இருந்து காட்டுப்பாதை ஊடாக சுமார் 20 கி.மீ தொலைவில் கும்புக்கன் ஆற்றங்கரைக்குச் சென்றால் ஓர் சிறிய காட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலைக் காணலாம். இதுவே சின்னக் கபிலித்தை அம்மன் கோயிலாகும். இது சிங்கள மொழியில் 'மடம்தொட்ட தேவாலய' எனவும் தமிழில் 'மடத்துறை அம்மன் கோயில் எனவும் அழைக்கப்படுகிறது.



*மடத்துறை அம்மன் கோயில்*

கோயிலின் இடது பக்கத்தில் கும்புக்கன் ஆறு கரைபுரண்டு ஓடிக் கொண்டிருக்கிறது. ஆலயத்தைச் சுற்றி மிகப் பிரமாண்டமான மருதமரங்கள் நிறைந்து காணப்படுகின்றன.



*கோயிலின் பின்புறம் உள்ள பானைகளும், விளக்குகளும்*

## பத்தினி அம்மன் துறை

சின்னக்கபிலித்தை எனும் மடத்துறையில் கோயில் உருவானது பற்றிய கர்ணபரம்பரைக் கதையொன்று கூறப்படுகிறது. இன்று காளியம்மன் குடி கொண்டிருக்கும் இவ்விடத்தில் முதன்முதலில் முருகப் பெருமானே குடி கொண்டிருந்ததாகவும், உகந்தைக் கடற்கரையில் வந்திறங்கிய முருகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமான் அவருக்குத் துணையாக வந்த வீரபாகுத் தேவருடன் கதிர மலைக்குச் செல்லும் வழியில் முதன் முதலாக கும்புக்கன் ஆற்றங்கரை யிலேயே தங்கி விட்டதாகவும் கூறப்படுகிறது. அவ்வாறு முருகப் பெருமான் முதலில் குடிகொண்ட இடமே இன்று அம்மன் கோயில் அமைந்திருக்கும் இடமாகும். சில காலத்தின் பின்பு இங்கு மக்கள் நடமாட்டம் அதிகமாகவே முருகன் இங்கிருந்து வடமேற்கு பக்கமாக நடுக்காட்டின் மத்தியில் இருந்த கபிலித்தை என்னுமிடத்திற்குச் சென்று அங்கே குடிகொண்டதாகவும், முருகன் இவ்விடத்தை விட்டுச் சென்றவுடன் இங்கு வீரபாகுத்தேவரும், காளி அம்மனும் குடிகொண்டதாகவும், பின்பு பத்தினி அம்மனும் இங்கு வந்து குடிகொண்டதாகவும் கூறப்படுகிறது. இந்துக்கள் இங்குள்ள அம்மனை காளி அம்மன் எனவும், சிலர் கெவுளி அம்மன் எனவும் அழைக்கின்றனர். சிங்கள மக்கள் பத்தினி அம்மன் என நினைத்து வழிபடுகின்றனர். இதன் காரணமாக ஆலயத்தின் அருகில் ஆற்றைக் கடக்கும் இடம் பத்தினி அம்மன் துறை (பத்தினி ஹாமினி தொட்ட) என அழைக்கப்படுகிறது.

## இந்தியாவிலிருந்து வந்த பிராமணர் அமைத்த மடம்

மிகப் பண்டைய காலத்தில் கதிரமலை, கபிலித்தை ஆகிய இடங்களில் இருக்கும் முருகப் பெருமானின் திருத்தலங்களின் மகிமைகளைக் கேட்டறிந்த பிராமணர்கள் பலர் இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக இலங்கையின் தென்பகுதிக்கு வந்து கிரிந்தி ஓயா ஆறு, மாணிக்ககங்கை, கும்புக்கன் ஆறு ஆகியவற்றின் கழிமுகங்களில் இறங்கி அங்கிருந்து கதிரமலைக்கும், கபிலித்தை ஆலயத்திற்கும் சென்றுள்ளனர். மாணிக்க கங்கையின் கழிமுகத்திற் கருகில் அவ்வாறு பிராமணர்கள் வந்திறங்கிய இடம் இன்றும் 'பிரமாணத் தொட்ட' என அழைக்கப்படுகிறது. இது பிராமணர்துறை எனப் பொருள்படும். அதுபோல கும்புக்கன் ஆற்றின் கழிமுகத்திற்கருகில் அவர்கள் இறங்கியதோடு அவ்விடத்தின் அருகில் திறந்த வெளியில் முருகன் இருப்பதைக் கண்டு அங்கு ஓர் மடத்தை அமைத்து முருகப் பெருமானைப் பூஜித்து வணங்கி பின் அங்கிருந்து கபிலித்தைக்குச் சென்றுள்ளனர். இந்தியாவிலிருந்து வரும் சன்னியாசிகளும், சித்தர்களும், பக்தர்களும் இங்கிருந்த துறையடியில் இறங்கி இம்மடத்தில் தங்கியிருந்த முருகனைத் தரிசித்து சென்றுள்ளனர். எனவே இவ்விடம் 'மடத்துறை' என அழைக்கப் பட்டது. இதுவே சிங்கள மொழியில் மடமே தொட்ட எனத் திரிபடைந்துள்ளதாக கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு அமைந்துள்ள ஆலயம் 'மடமே தொட்ட தேவால' (மடத்துறை கோயில்) என அழைக்கப்பட்டது.



கோயில் வளவில் கதிர்காம பாத யாத்திரீகர்கள்

## மடத்துறை அம்மனின் அற்புதங்கள்


மடத்துறையில் குடிகொண்டிருக்கும் காளிஅம்மன் மிகவும் சக்தி வாய்ந்ததாகவும், இதனால் இங்கு வருபவர்கள் மிகவும் பயபக்தியுடன் அம்மனைத் தரிசித்து செல்வதாகவும் கூறப்படுகிறது. இவ்வம்மனின் கிருபையால் பல அற்புத சம்பவங்கள் இப்பகுதியில் நிகழ்ந்துள்ளதாகவும் பானமை மக்கள் கூறுகின்றனர். தமது வீடுகளில் திருட்டு, மற்றும் வேறு தகாத சம்பவங்கள் நடந்தால் பயபக்தியுடன் விரதமிருந்து கால்நடையாக மடத்துறைக்கு வந்து அம்மனை வேண்டி காசை இரண்டாக வெட்டி முடிந்து வைத்தால் மூன்று நாட்களுக்குள் அப்பிரச்சினைக்கு ஓர் முடிவு கிட்டி விடுமாம்.



வேல், சூலம், சிலைகள் காணப்படும் மேடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தடவை ஓர் செல்வந்தர் காணிக்கையாக இவ்வாலயத்தின் அம்மனுக்கு தங்கமாலை ஒன்றை அணிவித்து விட்டுச் சென்று விட்டதாகவும், கொஞ்ச நாட்களின் பின் ஓர் திருடன் மாலையைத் திருடிச் சென்று விட்டு காலையில் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றதாகவும், சென்றவன் படகு கவிழ்ந்து கடலிலேயே இறந்து, 4 நாட்களின் பின்னேயே சடலமாகக் கரை ஒதுங்கிய தாகவும் பானமையிலுள்ள முதியவர்கள் கூறுகின்றனர்.



*கும்புக்கன் ஆறு*

இன்னுமோர் சமயம் பானமையிலுள்ள ஓர் வயது முதிர்ந்த பாட்டி ஓர் செம்பிலே சில்லறைப் பணத்தை போட்டு சேமித்து வைத்திருந்தாராம். ஒருநாள் ஒரு திருடன் அச்செம்பைக் களவாடிச் சென்று விட்டானாம். மனமுடைந்த பாட்டி மடத்துறை அம்மனை நினைத்து விரதமிருந்து கால் நடையாக ஆலயத்திற்கு வந்து காசுவெட்டி முடிந்து விட்டுச் சென்றாராம். அவர் வீட்டுக்கு வரும் போது, செம்பைத் திருடியதாக சந்தேகித்த ஒருவன் வீட்டு வளவில் உள்ள மாமரத்தடியில் இறந்து கிடந்தானாம்.



*மருதமரச் சோலை ஆலய வளவு.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுபோல இன்னுமோர் சம்பவமும் இப்பகுதியில் நடந்ததாம். பொத்துவில் பகுதியில் இருந்த ஒருவர் மடத்துறை அம்மன் மீது பக்தி கொண்டவராய் பல வேண்டுதல்களை கேட்டு அவை நிறைவேறிய பின் ஓர் முதலாளியாக வளர்ந்து விட்டாராம். அவர் நல்ல நிலைக்கு வந்தபின் அவருடைய மேலதிகமான வேண்டுதல்கள் எதுவும் பலிக்கவில்லையாம். உடனே அம்முதலாளி மடத்துறைக்கு வந்து தான் செய்தவற்றைச் சத்தம் போட்டு கூறி அம்மனைத் திட்டிவிட்டுச் சென்று விட்டாராம். பேசிவிட்டு அங்கிருந்து சென்றவர் இடைவழியில் 'பக்கவாதம்' ஏற்பட்டு நடக்க முடியாமல் கஸ்டப்படுவதாகவும், இருந்த சொத்துக்கள் எல்லாம் அழிந்து விட்டதாகவும் கூறப்படுகிறது.

இவ்வாறான பல அற்புதச் சம்பவங்கள் இப்புனித பூமியில் நடப்பதாகவும் பானமை மக்கள் கூறுகின்றனர். மேலும் மடத்துறை அம்மன் ஆலயத்திற்கு நேர்த்திக்கடன் வைத்து இங்கு வரும் பக்தர்கள், பொங்கல் வைத்து நேர்த்திக் கடன் நிறைவேறிய பின்பு தாம் கொண்டு வந்த பானை, அகப்பை, விளக்கு போன்றவற்றை மீண்டும் எடுத்துச் செல்வதில்லையாம். அப்படிக் கொண்டு சென்றால் செல்லும் வழியில் பல இடைஞ்சல்களும், துன்பங்களும் ஏற்படு வதாகவும் கூறப்படுகிறது. இதனால் பக்தர்கள் தாம் கொண்டு வந்த பானை, விளக்கு போன்றவற்றை ஆலயத்திலேயே விட்டுச் செல்கின்றனர். இவ்வாறு விட்டுச் சென்ற நூற்றுக்கணக்கான அலுமினியப் பானைகள் ஆலய கருவறையின் மேலுள்ள தட்டையான கூரையின் மீது அழகாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. ஏராளமான விளக்குகள் கருவறையில் பின்பக்கம் உள்ள மருதமரத்தின் அடியில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. இவையாவும் ஜனநடமாற்றம் அற்ற சின்னக்கபிலித்தையில் உள்ள அம்மனின் அற்புதங் களாகும்.

## ஆலையடி பிள்ளையார் கோயில் - குண்டுமடு, பொத்துவில்

பொத்துவில் நகருக்குச் செல்லும் வீதியின் அருகில் பிரதான வீதியின் கிழக்குப் பக்கம் குண்டுமடு ஆலையடிப் பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது.

### ஆலயத்தின் தொல்பொருள் சின்னங்கள்

சுமார் 300 வருடங்களுக்கு முன்பு ஒல்லாந்தர் காலத்தில் இவ்வாலயம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. எனினும் இவ்வாலயத்திற்கு முன்னோடியாக ஓர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொத்துவில் குண்டுமடு பிள்ளையார் கோயில்

புராதன ஆலயம் இருந்தமைக்கான எச்சங்கள் இங்கு காணப்படுகின்றன. புராதன பிள்ளையார், இரண்டு கல்விளக்குகள், நீளமான கற்தூண்கள், கற்தூண்களின் துண்டுகள் ஆகிய பண்டைய சின்னங்கள் இவ்வாலயத்தில் காணப்படுகின்றன. இதன்மூலம் இங்கிருந்த பண்டைய ஆலயம் போர்த்துக் கேயரால் அழிக்கப்பட்டுள்ளது என்பது தெரிகிறது. அழிக்கப்பட்ட ஆலயத்தின் புராதன சின்னங்களே இங்கு எஞ்சியுள்ளன. இவ்வாலயத்தில் இருக்கும் ஓர் சதுரக்கல்லில் நீள்வட்டக் குழியும், அதன் இரு பக்கங்களிலும் அதைவிடச் சிறிய வட்டமான குழிகளும் செதுக்கப்பட்டுள்ளன. இக்கல் பண்டைய ஆலயத்தில் விபூதி, சந்தனம், குங்குமம் ஆகியவை பக்தர்கள் தரித்துக் கொள்வதற்காக வைக்கப் பயன்படுத்தப்பட்ட கல் எனக் கூறப்படுகிறது. ஆலயத்தின் முன்பக்கம் பண்டைய ஆலயத்தின் தீர்த்தக்கேணி காணப்படுகிறது. பண்டைய காலத்தில் சதுரவடிவில் இருந்த இக்கேணி தூர்ந்து போய் வட்ட வடிவில் காணப்படுகிறது.



புராதன ஆலயத்தின் கல்தூண்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொத்துவிலில் நடந்த தமிழ்ப் பேரவை.

பொத்துவில் நகரமும் இதை அடுத்துள்ள அறுகம்குடாவும் சரித்திரப் பெருமை வாய்ந்த இடங்களாகும். தமிழகத்தில் மூன்று தமிழ்ச் சங்கங்கள் நடந்தது போல இலங்காபுரியிலும் மூன்று தமிழ்ப் பேரவைகள் நடந்துள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன. இவற்றில் முதலாவது தமிழ்ப் பேரவை மகேந்திர மலையிலும், இரண்டாவது தமிழ்ப் பேரவை மணிமலையிலும், மூன்றாவது தமிழ் பேரவை பொதியிலும் நடந்ததாக ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். பொதியில் தமிழ்ப் பேரவையில் அகத்தியர் கலந்து கொண்டுள்ளார் எனவும் முருகப் பெருமான் இதற்குத் தலைமை தாங்கியுள்ளார் எனவும், பொதியில் என்பதே பொதிவில் எனவும் பின்பு பொத்துவில் எனவும் திரிபடைந்ததாகவும் குறிப்புகள் கூறுகின்றன.

சூரபத்மனை வதம் செய்ய வீரபாகுத் தேவருடன் உகந்தையில் வந்திறங்கிய முருகப் பெருமான் பானமைக்கு வந்து சென்றதாக பானமை மக்கள் ஐதீகமாகக் கூறிவருகின்றனர். பானமைக்கு வந்த முருகன் பொதிவில் பேரவையில் அகத்தியரின் அழைப்பின் பேரில் கலந்து தலைமை தாங்கிச் சென்றுள்ளார் எனத் தெரிய வருகிறது.




*புராதன பிள்ளையார் சிலை*

## அறுகம்பை துறைமுகம்

ஆலையடிப் பிள்ளையார் கோயிலின் தெற்குப் பக்கத்தில் பொத்துவில் நகரை அடுத்து இரண்டரை கி.மீ தூரத்தில் அறுகம்குடா அமைந்துள்ளது. இங்குள்ள அறுகம்குடா பாலத்தின் மேற்குப்பக்கம் களப்பும், கிழக்குப் பக்கம் குடாவும் அமைந்துள்ளன. இப்பகுதிக்கு வளம் கொடுக்கும் கரந்தை ஓயா ஆற்றின் தென் கிளையும், ஹெட ஓயா ஆற்றின் வட கிளையும் அறுகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களப்பிலே கலப்பதால் வருடம் முழுவதும் நீர் நிறைந்த ஏரியாக இது காணப் படுகிறது. ஏனைய களப்புகளைப் போலல்லாத ஆழமான கரைகளைக் கொண்டதாக இக்களப்பு இருப்பதால் பண்டைய காலம் முதல் ஓர் துறைமுகமாக இக்களப்பு விளங்கியுள்ளது.



புராதன கல்

இது வடக்குத் தெற்காக 1900 மீற்றர் நீளமும், கிழக்கு மேற்காக 1700 மீற்றர் அகலமும் 6 கி.மீ சுற்றளவும் கொண்ட களப்பாகும். வட்டவடிவான இக் களப்பு இராவணனின் முக்கிய துறைமுகங்களில் ஒன்றாக விளங்கியதாக ஆய்வுகள் கூறுகின்றன. கதிர்காம பாண்டிய சத்திரிய மன்னர்களும், சேனன், கூத்திகன் ஆகிய மன்னர்களும், உன்னரசுகிரி இராச்சியத்தின் சிற்றரசர்களும் இத்துறைமுகத்தைப் பயன்படுத்தியுள்ளனர். கூத்திகளின் மகன் சேனன் தனது திக்கதிபர்களை சந்திக்கும் இடங்களில் ஒன்றாக 'அறுகமணப்பூமனை' விளங்கியதாக மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. அறுகமணப்பூமனை என்பது அறுகம் குடாவையே என ஆய்வுகள் கூறுகின்றன.




கல்விளக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்துக்கேயர் இலங்கைத் துறைமுகங்கள் பற்றி குறிப்பிடும் பொழுது இங்கு 31 கடல்துறைகள் இருந்ததாக அவர்களின் குறிப்புகள் கூறுகின்றன. இத்துறைகளில் அறுகம்குடா துறையும் ஒன்றாகும். உறுகுணை பகுதியைக் காவல் செய்யும் கப்பல்கள் அறுகம்பை உட்பட திருக்கோயில், பானமை ஆகிய துறைகளுக்கு அடிக்கடி வந்து சென்றுள்ளன. இக்கப்பல்கள் அறுகம் பையை தங்குமிடமாகக் கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இத்துறை வர்த்தக நடவடிக்கைகளுக்காக ஒரு வருடத்தில் 8 மாதங்கள் பயன்படுத்தப் பட்டுள்ளது. போர்த்துக்கேயர் பொ.ஆ. 1605ல் இத்துறை ஊடாக உட்புகுந்து உருகுணை காடுகளில் இருந்து பொதி எருதுகள் மூலம் கொண்டு வந்த பொருட்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளார்கள்.

ஒல்லாந்தரும் அருகம்பை துறையை அதிகம் பயன்படுத்தியுள்ளனர். உருகுணைப் பகுதியிலிருந்து கொண்டுவரும் உப்பு, தேன், மிளகு, யானைத் தந்தம், முதிரை, கருங்காலி, மரங்கள் போன்றவற்றை இத்துறை வழியாக ஏற்றுமதி செய்துள்ளனர்.



*கல்லில் செதுக்கப்பட்ட விபூதி மடல்*

## மீனோடைக்கட்டு பிள்ளையார் கோயில்

அக்கரைப்பற்றின் வடக்கில் 4 கி.மீ தூரத்தில் அட்டாளைச்சேனை எனும் இடம் அமைந்துள்ளது. இதன் அருகில் மீனோடைக்கட்டு எனும் கிராமம் உள்ளது. இந்துக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த இக்கிராமத்தில் பிள்ளை யார் கோயில் அமைந்திருந்தது. சுமார் 200 வருடங்களுக்கு மேற்பட்ட பாரம்பரியத்தைக் கொண்ட இவ்வாலயம் கிராமத்தின் முக்கிய வழிபாட்டுத் தலமாக விளங்கியுள்ளது. இதன் அருகில் 1850 ஆம் ஆண்டளவில் இக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்தில் ஓர் திறந்தவெளி மாரியம்மன் கோயிலும், பாதையின் அருகில் ஓர் வழிப்பிள்ளையார் கோயிலும் உருவாகியுள்ளன. கதிர்காமத்திற்கு பாதயாத்திரை செல்லும் பக்தர்கள் இவ்வாலயத்தில் இளைப்பாறிச் செல்வது வழக்கமாக இருந்தது.

## பாண்டியர்களால் மக்கள் குடியமர்த்தப்பட்ட பாண்டியத் தீவு

மீனோடைக்கட்டு கிராமத்தின் பண்டைய பெயர் பாண்டியத் தீவு என்பதாகும். இது பாண்டியர் காலத்தில் அவர்களால் மக்கள் குடியமர்த்தப்பட்ட கிராமமாகும். எனவே தான் இதற்கு பாண்டியத் தீவு எனப் பெயரிடப்பட்டது. பொ.ஆ. 1284ல் முதலாம் புவனேகபாகு யாப்பஹுவாவை ஆட்சி செய்த காலத்தில் பாண்டியர் யாப்பஹுவாவைக் கைப்பற்றி இலங்கையின் பல பகுதிகளை ஆரியச் சக்கரவர்த்திகளின் அனுசரணையுடன் ஆட்சி செய்து வந்தனர். இக்காலப்பகுதியில் தென்கிழக்கிலங்கையில் பாண்டியர் செல்வாக்கு உருவானது. திருக்கோயில் முருகன் கோயிலை பாண்டியர் இக்காலப் பகுதியிலேயே புனர் நிர்மானம் செய்தனர்.

இக்காலகட்டத்தில் அவர்களால் உருவாக்கப்பட்டதே பாண்டியத்தீவு கிராமமாகும். களியோடை ஆற்றிலிருந்து தெற்கு நோக்கி ஓடிவரும் கிளை ஆறும், தில்லையாற்றிலிருந்து வடக்கு நோக்கி வரும் கிளை ஆறும், கோணவத்தை ஆற்றுடன் கலந்து கடலில் சங்கமிக்கின்றன. மேலும் மீனோடைக்கட்டின் மேற்கில் உள்ள நீர்க்களப்புகள் இவ்வாறுகளுடன் தொடர்பு பட்டிருந்தன. இதன்மூலம் இப்பகுதி ஓர் தீவாகக் காணப்பட்டது. இத்தீவிலேயே பாண்டியர் காலத்தில் மக்கள் குடியேற்றப்பட்டனர்.



*மீனோடைக்கட்டு ஆலயத்தில் இருந்த பண்டைய பிள்ளையார் சிலை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துக்கள் வாழ்ந்த பாண்டியத் தீவு எனும் மீனோடக்கட்டு

பாண்டியர் காலமான பொ.ஆ. 13ம் நூற்றாண்டில் இங்கு மக்கள் குடியேற்றப் பட்டதோடு கோயிலும் அமைக்கப்பட்டு வழிபாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இக்காலம் முதல் 1871ம் ஆண்டு வரை இத்தீவு பாண்டியத் தீவு எனப் பெயர் பெற்று விளங்கியுள்ளது. 1871ம் ஆண்டு புள்ளிவிபரத்தின் படி அக்கரைப்பற்று பிரிவில் அட்டாளைச் சேனையை அடுத்து பாண்டியத்தீவு காணப்படுகிறது. பாண்டியத்தீவு எனும் இப்பெயர் காலத்திற்கு காலம் மாற்றமடைந்து வந்துள்ளதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

1901 ம் ஆண்டு இது பனையடித்தீவு என மாற்றம் பெற்றுள்ளது. இங்கு 130இந்துக்கள் வாழ்ந்துள்ளனர். அதேசமயம் 14 முஸ்லீம்கள் மட்டுமே வாழ்ந்துள்ளனர். இதன் அருகில் உள்ள ஆலையடிக்காலை என்னுமிடத்தில் 20 இந்துக்கள் மட்டுமே வாழ்ந்துள்ளனர். வேறு இனத்தவர்கள் ஆலையடிக் காலையில் இருக்கவில்லை. 1921 ஆம் ஆண்டு பனையடித்தீவு கிராமம் பனையடிப்பிட்டி என மாற்றம் பெற்றுள்ளது. இக்காலகட்டத்தில் 162 இந்துக் களும், 14 முஸ்லீம்களும் வாழ்ந்துள்ளனர். இதுவே பிற்காலத்தில் மீனோடைக் கட்டு என மாற்றமடைந்துள்ளது. சுமார் 700 மீற்றர் நீளமான இச்சிறிய கிராமத்தின் இரு மருங்கிலும் மக்கள் குடியிருப்புக்கள் அமைந்திருந்தன.

பொ.ஆ. 13ம் நூற்றாண்டில் உருவான பாண்டியத்தீவு ஆலயம் போர்த்துக் கேயர் காலத்தில் அழிக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. அதன் பின்பு சுமார் 250 ஆண்டுகளுக்கு முன்பு இங்கு பிள்ளையார் வழிபாடு ஆரம்பிக்கப்பட்டது. இப்பிள்ளையார் ஆலயம் பிரதான வீதியிலிருந்து சுமார் 200 மீற்றர் தூரத்தில் ஊரின் மத்தியில் அமைந்திருந்தது. இவ்வாலயத்தில் மிகப்பழமை வாய்ந்த கல் பிள்ளையார் சிலை பூஜிக்கப்பட்டு வந்தது. இவ்வாலயத்தின் அருகில் பிற்காலத்தில் ஓர் அம்மன் கோயில் அமைக்கப்பட்டு பூஜைகள் நடத்தப்பட்டுள்ளன. இதற்கென தனியாக ஓர் பூசாரி இருந்து அம்மன் கோயிலைப் பராமரித்து வந்துள்ளார்.

மீனோடைக்கட்டு கிராமத்தில் பாடசாலையின் அருகில் ஓர் பழமை வாய்ந்த ஆலமரத்தின் கீழ் ஓர் வழிப்பிள்ளையார் கோயில் அமைக்கப் பட்டிருந்தது. திறந்தவெளி மரக்கோயிலாக இருந்த இவ்வாலயம் பின்பு கருவறை, மண்டபம் ஆகியன அமைக்கப்பட்டு பூஜிக்கப்பட்டுள்ளது. பழைய பிள்ளையார் கோயில் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம் ஆகிய வற்றுடன் கூடிய முழுமையான கோயிலாகக் காணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீனோடைக்கட்டில் அழிக்கப்பட்ட இந்துக்கோயில்கள்

இந்துக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த மீனோடைக்கட்டு கிராமத்தின் மக்கள் காலத்திற்கு காலம் ஏற்பட்ட குழப்ப சூழ்நிலை காரணமாக இங்கிருந்து இடம்பெயர ஆரம்பித்தனர். இவர்களில் பலர் திராய்க்கேணி என்னுமிடத்தில் குடியேறினர். 1985ம் ஆண்டில் மீனோடைக்கட்டில் ஏற்பட்ட கலவரத்தின் போது இங்கிருந்த ஆலயங்கள் மூன்றும் அழிக்கப்பட்டதாகவும், இங்கிருந்த மக்கள் திராய்க்கேணி, ஆலயடிவேம்பு, தம்பட்டை ஆகிய இடங்களுக்குச் சென்று குடியமர்ந்ததாகவும் இங்கிருந்து சென்ற வயோதிப பெரியவர்கள் கூறினர்.

இங்கு மொத்தமாக 160 இந்துக்குடும்பங்கள் இருந்ததாகவும், புராதன பிள்ளையார் சிலை தம்பட்டை செம்மண்புலை விநாயகர் ஆலயத்திற்கும், மாரியம்மன் சிலை கோளாவில் மாரியம்மன் கோயிலுக்கும் கொண்டு செல்லப்பட்டு பூஜிக்கப்படுவதாகவும் பெரியவர்கள் கூறினர். 25 வருடங்களுக்கு முன்பு வரை தமிழ் சைவ மக்கள் வாழ்ந்து வந்த மீனோடைக்கட்டு கிராமத்தில் இன்று இந்துக்கள் யாரும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.


## முருகன் மலை கந்தசுவாமி கோயில்சங்கமன் கண்டி

திருக்கோயில் இருந்து13கி.மீ தொலைவில் சங்கமன் கண்டி அமைந்துள்ளது. சங்கமன் கண்டி மலைகளில் முதலாவதாக நாம் காண்பது முருகன் மலையாகும். இது நேர்த்திமலை எனவும் அழைக்கப்படுகிறது. இவ்வழியாக கதிர்காமத்திற்கு தீர்த்த யாத்திரை சென்ற முனிவரொருவர் இம்மலையில் வேலை வைத்து பூஜை செய்ததாகக் கூறப்படுகிறது. இம்மலையில் பெரிய நீர்ச்சுனையொன்றும், சிறிய நீர்ச்சுனைகள் மூன்றும் காணப்படுகின்றன. இம்மலையிலேயே தற்போது முருகனுக்கு ஓர் ஆலயமும் அமைக்கப் பட்டுள்ளது. பெரிய நீர்ச்சுனையில் அல்லிக் கொடிகளும் பூக்களும் நிறைந்து காணப்படுகின்றன. சுமார் 2000 வருடங்களுக்கு முன்பு இவ்வாலயம் தோற்றம் பெற்றதாகக் கூறப்படுகிறது.

முருகன் மலையை அடுத்து தெற்குப் பக்கத்தில் சிவன் மலை காணப் படுகிறது. இம்மலையின் கிழக்குப் பக்கத்தில் பாதை ஓரத்தில் புதிய ரோட்டுப் பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது. இம்மலையிலும் ஓர் சிறிய நீர்ச்சுனை அமைந்துள்ளது. இம்மலையை அடுத்து இரண்டு நீர்ச்சுனைகள் உள்ள ஓர் மலை காணப்படுகிறது. இது கற்சுனை மலை என அழைக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மலையின் கிழக்குப் பக்கத்தில் பாதை ஓரத்தில் படிக்கட்டுமலை காணப் படுகிறது. இம்மலையில் நூற்றுக்கும் மேற்பட்ட படிகள் பாறையில் செதுக்கப் பட்டுள்ளன. இம்மலை மீது ஓர் ஆலயம் அல்லது காப்பரண் இருந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.



*சங்கமான் கண்டி முருகன் மலை*

இம்மலைகளை அடுத்து தெற்குப் பக்கத்தில் சில சிறிய தனித்தனி மலைப்பாறைகள் காணப்படுகின்றன. இவற்றின் தெற்கில் கோமாரிக்களப்பின் வடகரையில் கொடுப்பத்தை மலைப்பாறை அமைந்துள்ளது.



*மலை முருகன் கோயில்*

## சங்கமன் கண்டி மலைகளும், பண்டைய இராஜதானியும்

சங்கமன் கண்டி மலைத்தொடர் உமிரிக்களப்பிற்கும், கோமாரிக்களப்பிற்கும் இடையில் பாதையின் மேற்குப் பக்கத்தில் காணப்படுகிறது. இம்மலைத் தொடரில் வடக்குத் தெற்காக ஒன்பது மலைக்குன்றுகள் காணப்படுகின்றன. காட்டுப்பிள்ளையார் ஆலயத்தின் பின்பக்கம் உள்ள மலைகள் தட்டையான மலைப்பாறைகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைய காலம் முதல் கண்டி இராச்சிய காலம் வரை இம்மலைப்பகுதி ஓர் சிற்றரசனின் இராஜதானியாக விளங்கியுள்ளது. உயரமான மலைக் குன்றுகளில் கோயில்களும், தட்டையான மலைப்பாறைகளில் அரசமாளிகை மற்றும் ஏனைய அரச கட்டிடங்களும் அமைக்கப்பட்டிருந்தன. பிரதான வீதியின் ஓரத்தில் முருகன் மலை, சிவன் மலை, கற்சுனை மலை, படிக்கட்டு மலை ஆகிய மலைக்குன்றுகள் காணப்படுகின்றன.

சுமார் 12 கி.மீ சுற்றளவில் 4 கி.மீ அகலமும், 4 கி.மீ நீளமும் கொண்டதாக இம்மலைத்தொடர் அமைந்துள்ளது. இவ்வட்ட வடிவமான மலைத் தொடரிலேயே பண்டைய இராஜதானி அமைந்திருந்தது. முற்றிலும் பாதுகாப்பான ஓர் அரணாக இம்மலைகள் காணப்பட்டதால் பண்டைய உன்னரசுகிரி மன்னர்கள் இவ்விடத்தில் தமது உப இராஜதானியை அமைத் திருந்தனர். இம்மலையைச் சுற்றி பல குளங்களையும், அவற்றை அடுத்து ஏராளமான பரப்பு நெற் கழனிகளையும் உருவாக்கியிருந்தனர். சங்கமன் கண்டி மலையைச் சுற்றி இன்றும் தூர்ந்து போன நிலையிலும், நல்ல நிலையிலும் பல குளங்கள் காணப்படுகின்றன.

மலையின் வடக்கில் மண்டியாவளை குளமும், கொக்கலை குளமும், மேற்குப் பகுதியில் வேலமுனை குளமும் தெற்கில் ஆலடிகுளமும், கிழக்கில் காரலையான் குளமும் இன்றும் காணப்படுகின்றன. சங்கமன் கண்டி மலை களில் பண்டைய காலம் முதல் சிவன், முருகன், விநாயகர், நாகம் ஆகிய தெய்வ வழிபாடுகள் நிலவி வந்துள்ளன.



*மலையில் கோயிலும், சுனையும்*

## சங்கமன் கண்டி மலையில் வாழ்ந்த முனிவர்கள்

கதிர்காமத்திற்கு பாதயாத்திரை சென்ற முனிவர்களும், சித்தர்களும் சங்கமன்கண்டி மலையிலும், மலைக் குகைகளிலும் தங்கிச் சென்றுள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுப் பிள்ளையார் ஆலயத்தின் மேற்குப் பகுதியில் திருக்கேதீஸ்வரத்திலிருந்து கதிர்காமத்திற்கு தீர்த்த யாத்திரை வந்த துவட்டாமுனிவர் தங்கிச் சென்ற மலைக்குகை உள்ளதாகக் கூறப்படுகிறது. இங்கு இவர் சிவனை வழிபட்டுச் சென்ற குகைக்கோயில் இருப்பதாகவும் கூறப்படுகிறது. இதுபற்றி ஓர் கர்ணபரம்பரைக் கதையையும் இப்பகுதியில் உள்ள மக்கள் கூறுகின்றனர்.

ஒரு தடவை காட்டிற்குச் சென்ற ஒருவர் வழிதடுமாறி நின்றபோது இக்கோயிலின் மணியோசையைக் கேட்டு சென்று பார்த்தபோது ஓர் குகைக் கோயில் காணப்பட்டதாகவும், அங்கிருந்து பிரசாதம் பெற்று உண்டபின் அவ்விடத்திலேயே அவர் உறங்கி விட்டதாகவும், காலையில் ஒருவர் அவரை எழுப்பி வழியை காட்டிவிட்டு மறைந்ததாகவும், வீடு வந்து சேர்ந்த அவர் தனது மனைவி பிள்ளைகளுக்கும் பிரசாதம் கொடுத்துவிட்டு, தான் கண்ட கோயிலைப் பற்றி மனைவியிடம் கூறி முடித்தபின் ஊமையாகி விட்ட தாகவும், அதன் பின்பு ஊர்மக்கள் காட்டுக்குச் சென்று பல நாட்கள் தேடியும் அக் கோயிலைக் கண்டுபிடிக்க முடியாமல் போய்விட்டதாகவும் கர்ண பரம்பரைக் கதையொன்று கூறப்படுகிறது.

சங்கமன் கண்டி மலைப்பகுதியில் சில காலம் தங்கியிருந்த மயில்வாகன சித்தரின் சமாதிக் கோயில் காட்டுப் பிள்ளையார் ஆலயத்தின் வடக்குப்பக்கம் உள்ள சிறிய குளத்தின் அருகில் காணப்படுகிறது. மயில்வாகனம் சுவாமிகள் என அழைக்கப்பட்ட இவர் திருக்கோயில் பிரதேசத்தில் வாழ்ந்தவராவார். இவர் கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் வாழ்ந்தவராவார்.

1885 ம் ஆண்டு காலப்பகுதியிலும் சில சந்நியாசிகள் சங்கமன் கண்டி மலைப்பகுதியில் வாழ்ந்து வந்ததோடு, இங்கு மான்கள் போன்றவற்றை வளர்த்து வந்ததாகவும் முதியவர்கள் கூறுகின்றனர். எனவே சங்கமன் கண்டி மலைப்பகுதி சித்தர்களுக்கும், முனிவர்களுக்கும் உகந்த இடமாக விளங்கியுள்ளது.



*கருவறையில் வேலும், கல் விளக்கும்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்டைய முருகன் கோயிலின் வேலும், கல்விளக்கும்

இன்று மலை மீது அமைக்கப்பட்டிருக்கும் முருகன் கோயிலில் புராதன ஆலயத்தின் பழமை வாய்ந்த தொல்பொருள் சின்னங்கள் இரண்டு காணப்படுகின்றன. கருங்கல்லினால் ஆன கல்விளக்கொன்றும், புராதன வேலும் இன்னும் மலை மீது காணப்படுகின்றன. மேலும் சில பண்டைய சின்னங்கள்காட்டுப் பிள்ளையார் கோயிலில் காணப்படுகின்றன.

## படிக்கட்டு மலையும், காடும்

சங்கமன் கண்டி ரோட்டுப் பிள்ளையார் ஆலயத்தை அடுத்து சிறிது தூரத்தில் படிக்கட்டு மலை உள்ளது. இம்மலைப்பகுதியைக் கடந்தவுடன் ஓர் காட்டுப் பகுதி காணப்படுகிறது. சங்கமன் கண்டி மலைப்பகுதியிலிருந்து 2 கி.மீ தூரம் வரை இக்காடு அமைந்துள்ளது. இக்காட்டின் முடிவில் பாதையின் மேற்குப் பக்கம் ஓர் மலையும், அதை அடுத்து கோமரிக் கிராமத்தின் வட எல்லையும், இவற்றை அடுத்து கோமாரிக் களப்பும், களப்பின் கரையில் கொடுப்பத்தை மலை பிள்ளையார் கோயிலும் காணப்படுகின்றன. பாதையின் மேற்குப் பக்கத்தில் 600 மீற்றர் தொலைவில் கொடுப்பத்தை மலை அமைந்துள்ளது.




படிக்கட்டு மலை.

## சங்கமன் கண்டி காட்டுப் பிள்ளையார் கோயில்

திருக்கோயிலில் இருந்து பொத்துவில் செல்லும் வீதியில் உள்ள தாண்டியடி கிராமத்தின் மேற்கில் 1 கி.மீ தூரத்தில் சங்கமன் கண்டி மலையடி வாரத்தில் புராதன காட்டுப்பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது. கதிர்காம பாத யாத்திரீகர்கள் தங்கிச் செல்லும் முக்கிய இடங்களில் ஒன்றாக இது விளங்கு கிறது. 2000 வருடங்களுக்கு முன்பு இப்பகுதி ஓர் இராஜதானியாக இருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் மலையில் சிவவழிபாடும், முருக வழிபாடும், மலையடிவாரத்தில் விநாயகர் வழிபாடும், கோயிலின் பின்பக்கம் உள்ள அரண்மனை இடிபாடுகள் இருக்கும் இடத்தில் நாகவழிபாடும் நிலவியதாக ஆய்வுகள் கூறுகின்றன. மலையிலும், அடிவாரத்திலும் இருந்த ஆலயங்கள் போர்த்துக்கேயரால் பொ.ஆ. 1623 இல் அழிக்கப்பட்டுள்ளன.



காட்டுப் பிள்ளையார் கோயில்

சுமார் 300 வருடங்களுக்கு முன்பு ஒல்லாந்தர் காலத்தில் மலையடி வாரத்தில் ஆவுடையாரற்ற மூன்று சிவலிங்கக் கற்களை கண்டெடுத்த விவ சாயிகள் இவ்விடத்திலிருந்து வில்வமரத்தின் கீழ் இக்கற்களை வைத்து பிள்ளையார் என வழிபட்டு வந்தனர். திறந்த வெளிக் கோயிலாக இருந்த இவ்விடத்தில் ஆங்கிலேயர் காலத்தில் சிறு ஆலயம் அமைக்கப்பட்டு இப்பகுதியில் மீண்டும் குடியமர்ந்த மக்களால் வழிபடப்பட்டது. இந்த லிங்கக் கற்களே மலை மீதிருந்த சிவாலயத்தின் எச்சங்களாகும்.



ரோட்டு பிள்ளையார் கோயில்

மேலும் இங்கு காணப்படும் புராதன தொல்பொருட் சின்னங்களான பலிபீடக்கற்கள், புராதன கோமுகியின் பாகம், புராதன தூணின் உச்சிப்பாகம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிங்கக் கற்கள் போன்றவை இங்கு பண்டைய காலத்தில் ஓர் ஆலயம் இருந்தமைக்கான சான்றுகளாக விளங்குகின்றன.



*புராதன ஆலய இடிபாடுகள்*

## சங்கமன் கண்டி ரோட்டுப்பிள்ளையார் கோயிலில் பண்டைய சிவலிங்கம்

சங்கமன் கண்டி பிரதான வீதியில் தெற்குப் பக்கமாகச் செல்லும் போது பாதையருகே ரோட்டுப் பிள்ளையார் கோயிலைக் காணலாம். காட்டுக்குள் இருக்கும் பிள்ளையாரைத் தரிசிக்க முடியாதவர்கள் இவ்வழிப் பிள்ளையாரை வணங்கிச் செல்கின்றனர். இவ்வழியில் செல்லும் அனைத்து வாகனங்களிலும், பேரூந்துகளிலும் செல்பவர்கள் இவ்விடத்தில் இறங்கி கற்பூரம் கொழுத்தி, காணிக்கை செலுத்தி இப்பிள்ளையாரை வணங்கிச் செல்கின்றனர். போர்த்துக்கேயர் காலத்தில் மலைமீது இருந்து அழிக்கப்பட்ட ஆலயங்களின்



*கோயில் அருகில் புராதன 10 பட்டை சிவலிங்கம்*

பழமை வாய்ந்த சின்னங்கள், தெய்வச் சிலைகள் ஆகியவை சிதைந்த நிலையில் இங்கும் காணப்படுகின்றன. 10 பட்டைகள் செதுக்கப்பட்ட மிகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைய லிங்கக்கல் ஒன்றும் இவ்வழிப்பிள்ளையார் கோயிலில் காணப்படுகிறது. இது இவ்வாலயத்தின் பின்பக்கம் இருந்த சிவன் கோயிலின் லிங்கம் எனக் கூறப்படுகிறது. இங்கிருந்து கிழக்கு நோக்கி ஓர் நேர்கோடு வரைந்தால் அது சங்கமன் கண்டி முனையில் முடிவடைகிறது. சிவன் கோயிலின் நேர் கிழக்கில் 4 கி.மீ தூரத்தில் இம்முனை உள்ளது. இதுவே இலங்கைத்தீவின் அதிகூடிய கிழக்கு முனை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பானமை பிள்ளையார் கோயில்

பொத்துவிலிலிருந்து 18 கி.மீ தூரத்தில் பானமை அமைந்துள்ளது. கதிர்காமத்திற்கு செல்லும் பாத யாத்திரீகர்கள் தங்கிச் செல்லும் முக்கிய இடங்களில் பானமையும் ஒன்றாகும். பானமைச் சந்தியில் உள்ள பானமை பிள்ளையார் கோயிலிலேயே கதிர்காம பாதயாத்திரீகர்கள் தங்கிச் செல்கின்றனர். முல்லைத் தீவிலிருந்து ஆரம்பமாகும் கிழக்குக் கரையோரை கற்பாதை பானமையிலேயே முடிவடைகிறது. இவ்விடம் வரை கற்பாதையில் நடந்து வரும் யாத்திரீகர்கள் இங்கிருந்து கதிர்காமம் வரை கிரவல் மண்பாதையிலேயே நடந்து கதிர்காமத்திற்குச் செல்வர். கந்தசுவாமிக் கடவுளின் புனித பூமியும் இவ்விடத்திலிருந்து தான் ஆரம்பமாகிறது. எனவே பானமை கிராமம் கதிர்காம பாதயாத்திரீகர்களுக்கு ஓர் முக்கிய தலமாக விளங்குகிறது.



*பானமை பிள்ளையார் கோயில் சிலை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பம்பரகஸ்தலாவையிலிருந்து கொண்டுவரப்பட்ட புராதன பிள்ளையார் சிலை

இன்று பானமை பிள்ளையார் கோயில் அமைந்திருக்கும் இடத்தில் பண்டைய காலம் முதல் ஓர் அரச மரத்தின் கீழ் புராதன பிள்ளையார் சிலை ஒன்று இருந்ததாகக் கூறப்படுகிறது. இச்சிலையை கந்தக் கடவுளின் புனித வனத்தில் அமைந்துள்ள பம்பரகஸ்தலாவ என்னுமிடத்திலிருந்து கொண்டு வந்து இம்மரத்தின் கீழ் வைத்து பண்டைய பானமை மக்கள் பூஜித்து வந்ததாகவும், புராதன காலம் முதல் இப்பிள்ளையார் ஆலயம் திறந்தவெளி மரக்கோயிலாக இருந்ததாகவும் கூறப்படுகிறது.

சுமார் 100 வருடங்களுக்கு முன்பு பானமையில் வாழ்ந்த வன்னிய சிங்கம் போடியாரும், வக்கீல் சுப்ரமணியம் என்பவரும் இணைந்து 1902ம் ஆண்டு இம்மரத்தடிப் பிள்ளையாருக்கு ஓர் ஆலயம் அமைத்ததாகவும், இவர்களது பொருட்களை களஞ்சியப்படுத்தும் கிட்டங்கி ஒன்றும் ஆலயத்தின் முன்பக்கம் அமைத்திருந்ததாகவும், வருடா வருடம் கதிர்காமத்திற்கு பாத யாத்திரை வரும் பக்தர்கள் இங்கிட்டங்கியில் தங்கிச் செல்வதாகவும், அதன் பின்பு அவ்விடத்திலேயே யாத்திரீகர்களுக்கான மடம் ஒன்றையும் அவர்கள் அமைந்திருந்ததாகவும் கூறப்படுகிறது. இம்மடம், மற்றும் கிட்டங்கி இருந்த இடத்தில் பிற்காலத்தில் பௌத்த ஆலயம் அமைக்கப்பட்டதாகவும், யாத்திரீகர் மடமும் பௌத்த ஆலயத்தின் உடமையாகி விட்டதாகவும் கூறப்படுகிறது.



*கோயில் கருவறை கோபுரம்*

பானமை பிள்ளையார் கோயில் அண்மையில் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. அப்போது கருவறையில் புதிய விநாயகர் சிலை பிரதிஸ்டை செய்யப்பட்டு புராதன பிள்ளையார் சிலை வசந்த மண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தின் அருகில் பிரதிஸ்டை செய்யப்பட்டிருந்தது. சில மாதங்களுக்கு முன்பு இப்புராதன விநாயகர் சிலை ஆலயத்திலிருந்து அகற்றப்பட்டு பத்தினியம்மன் கோயிலுக்குச் செல்லும் வழியில் ஓர் மரத்தின் கீழ் வைக்கப்பட்டுள்ளது.



*கோயிலில் இருந்து அகற்றப்பட்ட புராதன பிள்ளையார் சிலை*

பானமையிலுள்ள பிள்ளையாரை இங்குள்ள சிங்கள மக்களும் பய பக்தியுடன் வணங்கி வருகின்றனர். தூர பயணங்கள் செல்லும் முன்பு விநாயகர் கோயிலுக்கு வந்து கற்பூரம் கொழுத்தி தேங்காய் உடைத்து விநாயகரை வணங்கிச் செல்கின்றனர். தமது பயணங்களின் போது தமக்கு வழித்துணைக் கடவுளாக இருப்பவர் விநாயகர் என பானமை மக்கள் நம்பு கின்றனர்.

## மாவடி முருகன் கோயில் - மாவடிப் பள்ளி

கல்முனையிலிருந்து அக்கரைப்பற்றுக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் உள்ள காரைதீவு சந்தியிலிருந்து அம்பாறைக்குச் செல்லும் வீதியில் ஒன்றரை கி.மீ தூரத்தில் மாவடிப்பள்ளி என்னுமோர் இடம் அமைந்துள்ளது. இங்குள்ள மாவடிப் பள்ளி பாலத்தை அடுத்து பிரதான வீதியின் இடது பக்கம் ஆற்றின் அருகில் பண்டைய காலத்தில் ஓர் முருகன் கோயில் அமைந்திருந்ததாகக் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவிலிருந்து வந்த சித்தர் ஸ்தாபித்த வேல் கோயில்

பொ.ஆ. 11ம் நூற்றாண்டளவில் இந்தியாவிலிருந்து கதிர்காமத்திற்கு பாத யாத்திரை வந்த கோரக்கநாத் எனும் முனிவருடன் வந்த 5 சித்தர்களில் ஒருவர் இவ்விடத்தில் ஆற்றங்கரையில் இருந்த ஓர் மாமரத்தின் கீழ் தான் கொண்டு வந்த வேலை ஸ்தாபித்து முருகனை வணங்கிச் சென்றதாகத் தெரியவருகிறது. முருகனின் வேல் ஸ்தாபிக்கப்பட்ட மாமரம் இங்கு இருந்த படியால் இவ்விடம் மாவடி என்று அழைக்கப்பட்டு பின்பு மாவடிப் பள்ளி என மருவியுள்ளது.

இவருடன் வந்த கோரக்கநாத் சித்தர் சம்மாந்துறையில் உள்ள கோரக்கர் கோயில் இருக்கும் இடத்தில் தங்கி ஓர் லிங்கக் கல்லை நட்டுச் சென்றுள்ளார். இச்சித்தர் லிங்கக் கல்லை ஸ்தாபித்த இடத்தின் தான் அவர் பெயரிலேயே கோரக்கர் பிள்ளையார் கோயில் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயில் மாவடிப் பள்ளியிலிருந்து இரண்டு கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது.

## குடும்பி மலை சிவன் கோயில்

பானமையிலிருந்து உகந்தைக்குச் செல்லும் காட்டுப்பாதையில் உள்ள சலவைக் களப்பின் மேற்குப் பக்கத்தில் 4 கி.மீ தொலைவில் குடும்பிமலை உள்ளது. பொ.ஆ. 1ம் நூற்றாண்டில் கிழக்கு இலங்கையின் தலைநகராக விளங்கிய உன்னரசுகிரி இராஜதானியே குடும்பி மலையாகும். குடும்பி மலைப் பகுதியில் சுமார் 500 ஏக்கர் பரப்பளவில் உன்னரசுகிரி இராஜதானியின் இடிபாடுகளைக் காணக்கூடியதாக உள்ளது. குடும்பி மலையில் புராதன சைவ ஆலய இடிபாடுகளும் காணப்படுகின்றன. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலும் பொ.ஆ. 1ம் - 4ம் நூற்றாண்டு வரையான காலத்திலும் இங்கு சிவவழிபாடு செல்வாக்குப் பெற்றிருந்தமைக்கான கல்வெட்டு ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. குடும்பிமலையில் கிடைத்துள்ள கல்வெட்டுக்களில் தமிழ் பிராமிச் சொற்களும், சிவன் சம்பந்தமான பெயர்களும் பொறிக்கப் பட்டுள்ளன. 'நதிக' என்ற சொல் பொறிக்கப்பட்ட கல்வெட்டொன்றில் நந்தியின் பாதமும் காணப்படுகிறது. இதன் மூலம் இங்கு சிவவழிபாடு நிலவியுள்ளதாக பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் குறிப்பிட்டுள்ளார்.

நூற்றுக்கணக்கான மலைக்குகைகள் இங்கு காணப்படுகின்றன. இக்குகை களில் சிலவற்றில் கல்வெட்டுக்கள் எழுதப்பட்டுள்ளன. சில குகைகளில் மயில், நாகம் போன்றவற்றின் சித்திரங்களும் காணப்படுகின்றன. மலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிவாரத்தில் செங்கற்கற்கள், கற்தூண்கள் போன்ற புராதனச் சின்னங்கள் காணப்படுகின்றன. தமிழ் மன்னர்களும், பாண்டிய குல சிற்றரசர்களும் ஆட்சி செய்த இராஜதானியான குடும்பி மலையில் பிற்காலத்தில் பௌத்த குருமார்கள் வாழ்ந்துள்ளனர். அப்போது இம்மலை மீது பௌத்த தூபிகள் கட்டப்பட்டுள்ளன.



நந்திபாதம்

## இராவணனின் உபநகரும், உன்னரசுகிரியின் தலை நகரும்


7000 ஆண்டுகளுக்கு முன் தமிழ் வேந்தன் இராவணன் ஆட்சி நிலவிய இலங்காபுரியின் தலைநகரம் கிழக்கிலங்கையில் அமைந்திருந்ததாக ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இராவணனின் உபநகரான குடும்பி மலையையே உன்னரசுகிரி இராச்சியத்தின் தலைநகராகவும் கிழக்கிலங்கை மன்னர்கள் கொண்டிருந்தனர் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். உன்னரசுகிரி ஓர் மலைப்பகுதி என்பது அதன் பெயர் மூலம் தெளிவாகத் தெரிகிறது. தென் கிழக்கிலங்கையில் உள்ள மலைப்பகுதிகளில் ஓர் இராஜதானிக்குரிய அமைப்புகளுடன் மூன்று மலைப் பிரதேசங்கள் காணப்படுகின்றன. இவை சங்கமன்கண்டி மலை, குடும்பி மலை, நாகபர்வதமலை (பம்பரகஸ்தலாவ) ஆகிய மலைப்பிரதேசங்களாகும்.

இவற்றில் நாகபர்வதமலையில் இராவணன் பெயர் பொறிக்கப்பட்ட பிராமிக்கல்வெட்டொன்று காணப்படுகிறது. நாகபர்வதமலை எனும் பம்பரகஸ்தலாவ மலைப்பகுதியும் இராவணனின் உபநகராக இருக்க வேண்டும். நாகபர்வத மலையின் வடகிழக்கில் 10 கி.மீ தொலைவில் குடும்பி மலைப்பகுதி அமைந்துள்ளது. குடும்பிமலையில் சிவவழிபாடு நிலவியிருந் தமைக்கான கல்வெட்டு ஆதாரங்கள் உள்ளன. எனவே நாகபர்வதமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் குடும்பி மலைப் பகுதியிலேயே இராவணனின் உபநகரங்கள் அமைந்திருக்கும் எனக் கருதப்படுகிறது.

இராவணன் சிறந்த சிவபக்தனாவான். எனவே இவன் தனது இராச்சியத்தின் உபநகரில் பெரிய சிவாலயமொன்றை அமைத்திருப்பான் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மேலும் குடும்பி மலை உச்சியில் ஓர் சிவலிங்கக் கோயில் இருந்ததாக பானமைப் பகுதியில் உள்ள முதியவர்கள் கூறுகின்றனர். இப்பகுதியிலிருந்தே ஓர் புராதன விநாயகர் சிலை கிடைக்கப் பெற்றதாகவும் கூறப்படுகிறது. அத்துடன் இங்குள்ள மலைக்குகைகளில் ஒன்றில் ஆவுடையார் அற்ற மிகப் பழமைவாய்ந்த லிங்கம் ஒன்று காணப் படுவதாகவும் தெரியவருகிறது.



*குடும்பி மலையும், தூபியும்*

## குடும்பிமலையில் சிவலிங்க வடிவில் தூபி

இவ்விடயங்களை வைத்துப் பார்க்கும் பொழுது குடும்பி மலையில் சிவாலயம் இருந்தது எனும் கூற்று உறுதியாகிறது. இங்கு அமைந்துள்ள உயரமான மலையான 'பழும்கல' எனும் மலையின் உச்சியில் சிவலிங்கத்தின் வடிவில் ஓர் செங்கல் தூபி காணப்படுகிறது. இது சிலிண்டர் வடிவமான பௌத்த தூபி எனக் கூறப்படுகிறது. இவ்வடிவத்தில் இலங்கையில் தூபி எதுவும் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. சுமார் 10 அடி உயரமும் 15 அடி விட்டமும் கொண்ட இத்தூபி சதுரவடிவுடைய மேடை மீது அமைக்கப் பட்டுள்ளது. இவ்விடத்தில் மேலும் ஒரு சதுர மேடையில் ஓர் சிறிய தூபியும் காணப்படுகிறது. இவை தவிர மேலும் இரு கட்டிடங்கள் இருந்தமைகான எச்சங்கள் இம்மலையில் காணப்படுகின்றன. இங்கு சிவலிங்க வடிவில் உள்ள தூபி இருக்கும் இடத்தில் தான் இராவணன் காலத்தில் சிவலிங்கம் பிரதிஸ்டை செய்யப்பட்டு சிவாலயம் அமைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது. இதே காலப் பகுதியில் இராவணனால் உகந்தை மலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உகந்தகிரி சிவாலயமும் அமைக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மான்மியத்திலும் உகந்தை கிரியில் இராவணன் சிவாலயம் அமைத்தது பற்றிக் குறிப்பிடப் பட்டுள்ளது. இலங்கையில் குபேரன் முருகவழிபாட்டையும், இராவணன் சிவவழிபாட்டையும் பேணி வந்ததோடு ஆலயங்களையும் அமைத்ததாக மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பாக நோக்கத்தக்கது.

சிவனின் பாதம் பதிந்த சிவனொளிபாதம், புத்தரின் பாதம் பதிந்த ஸ்ரீ பாத, ஆதாமின் பாதம் பதிந்த ஆதம்மலை என இலங்கை மக்களால் அழைக்கப்படும் சுமண கூட பர்வதம் இன்றைய சிவனொளிபாதம் அல்ல என்றும் இது கிழக்கு மாகாணத்தில் உள்ள குடும்பி மலையே எனவும் சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.



கோமுகி

## மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சுமனகூட பர்வதம் குடும்பி மலையா?

இலங்கையின் பௌத்த நூல்களான தீபவம்சம், மஹாவம்சம், சிங்கள தூபவம்சம், சமந்த பாசாதிகா, சிங்கள போதி வங்சய, கடயிம் பொத் ஆகியவற்றிலும் தொலமியின் தேசப்படத்திலும் சமனகூட பர்வதம் (சிவனொளிபாதமலை) இரத்தினபுரிக்கு அருகில் இருந்தது எனும் குறிப்புகள் எதுவும் காணப்படவில்லை. மாறாக உருகுணு மாகமைக்கு அருகில் உள்ள தாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மஹாவம்சத்தில் புத்த பகவான் நாகமன்னன் மணியக்கிரனின் வேண்டு கோளை ஏற்று கல்யாணி நாட்டுக்கு வந்து மணியக்கிரனைச் சந்தித்தபின் அங்கிருந்து சுமனகூட பர்வதத்திற்கு சென்று தனது பாதச்சுவட்டைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதித்துவிட்டு அங்குள்ள மலையடிவாரத்தில் தங்கியிருந்து அடுத்த நாள் தீகவாப்பிக்கு சென்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி கல்யாணி எனும் நாக இராச்சியத்திற்கு அருகில் சுமனகூட மலையும், தீகவாப்பியும் இருந்தன என்பது புலனாகிறது.

இலங்கையில் பண்டைய காலத்தில் வடக்கில் நாகதீபம் எனும் நாக இராச்சியமும், தெற்கில் கல்யாணி எனும் நாக இராச்சியமுமாக இரண்டு நாக இராச்சியங்கள் இருந்தன. கல்யாணி மன்னன் மணியக்கிரனின் காலத்திற்கு பின்பு இலங்கைக்கு வந்த கிரேக்க அறிஞரான தொலமியின் இலங்கைத் தேசப்படத்தில் நாக இராச்சியம் மகாவலி கங்கையின் கீழ்ப் பக்கத்தில் ரோகன நாட்டிலுள்ள மாகமையின் கிழக்குத் திசையில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தொலமியின் தேசப்படத்தில் நகதுப (Nagaduba) நகெய்ரொய் (nageiroi) என இரு நாக பிரதேசங்களின் பெயர்கள் குறிக்கப் பட்டுள்ளன.

மகாவம்சத்தில் 'கல்யாண கன்னிகா' எனும் இடம் குறிப்பிடப்பட்டுள்ளது. இது களனிதீசன் ஆட்சிசெய்த கல்யாணி இராச்சியம் எனவும், இது பொத்து விலுக்கு அருகில் உள்ள பானம பகுதியில் உள்ளதாக பேராசிரியர் அபய ஆரியசிங்க குறிப்பிட்டுள்ளார். மேலும் சுமனகூட மலை பானமை, தீகவாபி ஆகிய இடங்களுக்கு அருகிலேயே உள்ளது எனவும் அது பானமை பற்றில் உள்ள குடும்பிமலை பிரதேசமே எனவும் அவர் கூறியுள்ளர்.



ஆலய இடிபாடுகள்

இக்கூற்றை உறுதி செய்யும் வகையில் குடும்பி மலைப் பகுதியில் சான்றுகள் உள்ளன. குடும்பி மலையில் இரண்டு மலைகள் காணப்படுகின்றன. அவற்றில் ஒன்று பெலும்கல என அழைக்கப்படுகிறது. இம்மலை உச்சியில் லிங்க வடிவில் (சிலிண்டர் வடிவில்) ஓர் தூபி அமைந்துள்ளது. இம்மலையே இங்கு அளவில் பெரியதாகக் காட்சி தருகிறது. இம்மலையின் சற்று தூரத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னுமோர் மலை அமைந்துள்ளது. இம்மலையிலே மூன்று பிரமிக்கல் வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இதில் ஒன்று 'சுமன குட்டேலேன' எனவும் இரண்டாவது 'பருமக அஸி சுமனஹ லேன சகஸ' எனவும் எழுதப் பட்டுள்ளது. இக்கல்வெட்டுக்களின் படி சுமனகூட மலை இதுவே என ஆரியசிங்க குறிப்பிட்டுள்ளார். பௌத்த நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள சுமனகூட பர்வதமும் இதுவே என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.



*சிவலிங்க வடிவில் தூபி*

இம்மலையிலேயே சுமன சமன் எனும் பக்தன் வசித்து வந்துள்ளான். இலங்கையின் தென் கிழக்குப் பகுதியில் சுமன சமன் தொடர்பான மேலும் பல பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. பியன்கல என்னுமிடத்தில் 3 கல்வெட்டுக்களும், மேலும் கிரலான, கிரிபொக்குன ஹெல, வெஹெரகல, ஹிமிதுராவ, இலுக்பிட்டி கந்த, புலுக்குணாவி, முள்ளிக்குளம்மலை ஆகிய இடங்களிலும் இக்கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.


## உகந்த மலை முருகன் கோயில்

இலங்கையின் முதல் மன்னனான குபேரன் காலத்தில் ஆதிவேடர்களால் உகந்தை மலையில் வேல் ஸ்தாபிக்கப்பட்டு பூஜிக்கப்பட்டதாகக் கூறப் படுகிறது. அதன் பின் இராவணன் ஆட்சிக்காலத்தில் இங்கு சிவாலயம் அமைக்கப்பட்டதாகவும், பொ.ஆ. 1018ல் கிழக்கிலங்கையை ஆட்சி செய்த தினசிங்கன் என்பவனால் இச்சிவாலயம் அழிக்கப்பட்டு இதன் செல்வங்கள் சோழ நாட்டிற்கு அனுப்பப்பட்டதாகவும் மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. அதன் பின்பு உகந்தமலையில் மீண்டும் முருக வழிபாடு செல்வாக்குப் பெற்று விளங்கியது. கிழக்கிலங்கையில் உள்ள திருப்படைக் கோயில்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோயிலுக்கு அடுத்த படியாக விளங்குவது உகந்தமலைக் கோயிலாகும். முருகப் பெருமானும், வீரபாகுத் தேவரும் சூரனை வதம் செய்வதற்காக தங்கத்தோணியில் வந்திறங்கிய இடமே உகந்தையாகும்.

கதிர்காமத்திற்குச் செல்லும் பாதயாத்திரீகர்கள் அனைவரும் தங்கிச் செல்லும் முக்கிய இடமாக உகந்தை விளங்குகிறது. அதிகமான பாதயாத்திரீகர்கள் இங்கிருந்து தான் தமது யாத்திரையைத் தொடங்குகின்றனர்.



*உகந்தை முருகன் கோயில்*

## உகந்தையிலுள்ள மலைகள்

பானமையிலிருந்து கூமுனைக்குச் செல்லும் வீதியிலிருந்து உகந்தை முருகன் கோயிலுக்குச் செல்லும் வழியில் ஓரிடத்தில் பாதையின் இரு மருங்கிலும் உயரமான மலைப் பாறைகள் ஆலயத்திற்கு இயற்கையான வாயில்களாக அமைந்துள்ளன. இவ்வாயிலைக் கடந்து சென்று வலது பக்கத்தில் திரும்பி சிறிது தூரம் சென்றதும் மலையடிவாரத்தில் முருகனாலயம் காணப்படுகிறது. ஆலயத்தின் வடக்குப் பக்கத்தில் இரு மலைக்குன்றுகள் அமைந்துள்ளன. இவற்றில் முதலாவது மலை வள்ளிமலை எனவும், அடுத்தது பிள்ளையார் மலை எனவும் அழைக்கப்படுகிறது. ஆலயத்திலிருந்து சிறிது தூரத்தில் கடற்கரைப்பக்கமாக மேலும் மூன்று மலைப்பாறைகள் அமைந்துள்ளன. அவை மஞ்சள்கிரி மலை, தோணிமலை, தோணிதட்டாமலை என அழைக்கப்படுகின்றன.

வள்ளிமலையின் பின்பக்கம் மலையடிவாரத்தில் சித்தர்கள் தங்கியிருந்த கற்குகையொன்று காணப்படுகிறது. பிள்ளையார் மலையின் வடக்குப் பக்க அடிவாரத்தில் கல்குடைவடிவில் ஓர் பாறை காணப்படுகிறது. இதனருகில் ஓர் சிறிய நீர்ச்சுனையும் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரசம்ஹாரத்தின் பின்பு முருகப் பெருமான் தனது படைவீடுகளில் ஒன்றாக உகந்த மலையைக் கொண்டு, இங்கு வந்து களைப்பாறிச் சில காலம் தங்கி இருந்தாரென்றும், போருக்கு முன்னரும் பின்னரும் முருகன் உவந்து வந்து இருந்தபடியால் உகந்தைமலை எனப் பெயர் பெற்றதென்பதும் ஐதீகம்.



முருகன் கோயில் கருவறை கோபுரம்


இம்மலைக்குக் கிழக்கில் உகந்தைக் குடா அமைந்துள்ளது. இயற்கை யாகவே அமைந்த ஓர் துறைமுகமாக இது காணப்படுகிறது. புராதன காலம் தொட்டு இத்துறைமுகம் தென்கிழக்கையாண்ட தமிழ் குறுநில மன்னர்களால் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளதாகத் தெரிய வருகிறது. முருகப் பெருமான் தனது தங்கப்படகின் மூலம் இக்குடாவில் தரையிறங்கி வந்ததாகவும், இதனருகிலுள்ள மலைக்குன்று 'தங்கத்தோணி மலைக்குன்று' என அழைக் கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

உகந்தை மலைக் குன்றுகளில் முதலாவது மலையான வள்ளிமலையில் வள்ளியம்மன் கோயில் அமைந்துள்ளது. இம்மலைக்கு ஏறுவதற்கு மலையடி வாரத்திலிருந்து கற்படிகள் செதுக்கப்பட்டுள்ளன.



வள்ளி மலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*சரவணப் பொய்கை நீர்ச்சுனை*

இம்மலை மீது ஏழு இயற்கை நீர்ச்சுனைகள் இருக்கின்றன. வள்ளி கோயிலின் முன்பாக இருப்பதே பெரிய நீர்ச்சுனையாகும். இதுவே இங்கு பக்தர்கள் நீராடும் தீர்த்தச் சுனையாக உள்ளது. இதை 'சரவணப் பொய்கை' என அழைக்கிறார்கள். கடலில் நீராடி விட்டு வரும் அடியார்கள் இங்குள்ள சுனைகளிலெல்லாம் நீராடி, இறுதியில் சரவணப் பொய்கையில் நீராடுவதைப் பெரிய புண்ணியமாகக் கருதுகிறார்கள். இதனருகிலுள்ள வள்ளியம்மன் ஆலயத்தில் வள்ளியம்மன் விக்கிரகமும், பிள்ளையார் விக்கிரகமும் பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ளன. இம்மலை அடிவாரத்தில் கடற்கரைப்பக்கமாக ஒரு கோயிலும் கட்டப்பட்டுள்ளது. இது சன்னியாசிகள் மடாலயமாக உள்ளது.

இரண்டாவது மலையில் முருகன் ஆலயமும், மலையடிவாரத்தில் மலையுடன் இணைத்து பிள்ளையார் கோயிலும் அமைக்கப்பட்டுள்ளன. இக் கோயில் வாசலில் தான் இப்பழம்பதியின் தலவிருட்சமான வெள்ளை நாவல் விருட்சம் உயர்ந்து விரிந்து கம்பீரமாகக் காட்சி தருகிறது. முருகன் கோயிலுக்கு வடபுறத்தில் பிள்ளையார் கோயிலுக்கு தென்புறத்தில் மிகப் பெரிய ஆலமரம் ஒன்றுள்ளது. இம்மரத்தின் கீழ் ஒரு வேலாயுதம் வைத்து அதற்கு மேடையமைத்து கட்டப்பட்டுள்ளது. இந்த இடத்தில் தான் ஆதி காலத்தில் வேல் வைத்து பூஜிக்கப்பட்டது.

பிரதான வீதியிலுள்ள கோயில் சந்தியிலிருந்து கிழக்கு நோக்கி உகந்தை மலையடிவாரத்திற்குச் செல்லும் வீதியின் இரு மருங்கிலும் பெரிய ஆல மரங்களும், பெரிய தேத்தா மரங்களும் அடர்ந்து பசுமையாகக் காட்சி யளிப்பதோடு இப்பகுதியில் குளிர்ச்சியான நிழலையும் தருகின்றன. இவை இங்கு வரும் பக்தர்களுக்கு இயற்கை உறையுள்களாக அமைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலின் பின்புறமாக உள்ள பெரிய கேணியும் கோயிலுக்கும் பக்தர் களுக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.



*வள்ளி அம்மன் கோயில்*

பானமையிலிருந்து கூமுனை செல்லும் காட்டுப்பாதையின் ஓரமாக கடற்கரையை அண்டிய பகுதியில் அமைந்திருக்கும் இப்புராதன ஆலயத் திற்கு 100 ஏக்கர் நிலம் சொந்தமாக இருந்ததாகவும், இவற்றில் தற்போது 30 ஏக்கர் மட்டுமே எஞ்சியுள்ளதாகவும் தெரிய வருகிறது. வடக்கே உகந்தை மலைக் காட்டையும், கிழக்கே வங்கக் கடலையும், தெற்கே குமண சரணாலய வாயிலையும், மேற்கே பிரதான வீதியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளதே இக்கோயிலுக்குரிய பூமியாகும்.



*கற்பாறையில் பொறிக்கப்பட்ட வேல் சின்னம்*

தற்போது இங்கிருக்கும் ஆலயங்கள் 1885 ல் கட்டப்பட்டவையாகும். கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலம் முதல் போர்த்துக்கேயர் காலம் வரை இத் திருத்தலம் பல மன்னர்களால் பூஜிக்கப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வள்ளிமலையில் பிராமிக் கல்வெட்டும், வேல் சின்னமும்

வள்ளிமலையில் வள்ளிகோயிலின் பின்பக்கம் உள்ள தட்டையான பாறையில் முருகனின் வேல் சின்னமும், பிராமிக் கல்வெட்டும் பொறிக்கப்பட்டுள்ளன. இவை கதிர்காம பாண்டிய சத்திரியர்களால்பொறிக்கப்பட்டவை என ஆய்வுள் கூறுகின்றன.



*பிள்ளையார் மலை*



*பிள்ளையார் மலை கோயில்*

## முருகன் வள்ளி தெய்வானையுடன் விளையாடிய மஞ்சள் கிரிமலை

உகந்தை முருகனாலயத்திலிருந்து சுமார் 200 மீற்றர் தூரத்தில் கடற்கரை அமைந்துள்ளது. இங்கிருந்து தெற்குப் பக்கத்தில் சிறிது தூரத்தில் உகந்தைக் குளத்து நீர் கடலில் சங்கமமாகும் இடத்தின் அருகில் பெரிய இருமலைப் பாறைகள் அடுத்தடுத்து காணப்படுகின்றன. இவற்றில் பெரிய மலைப்பாறை மஞ்சள்கிரி மலை என அழைக்கப்படுகிறது. இம்மலையில் முருகனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளியும் மஞ்சள் பூசி விளையாடிதாகவும் இதன் காரணமாக இம்மலை மஞ்சள்கிரி என அழைக்கப்படுவதாகவும் ஐதீகம்.

இம்மலைப்பாறையின் உச்சியில் பித்தளை வேல் ஒன்று நாட்டப்பட்டு அதைச்சுற்றி 12 விளக்குகள் வைக்கப்பட்டுள்ளன. இவ்விளக்குகள் நேர்த்திக் கடனாக இங்கு வைக்கப்பட்டவையாகும். வேலைச் சுற்றி சின்னஞ்சிறிய கற்துண்டுகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. இவ்வேலை வணங்க வருபவர்கள் ஓர் கற்துண்டை எடுத்து வேலின் அருகில் வைத்து வணங்கிச் செல்வதாகவும், இவ்வாறு வைக்கப்பட்ட கற்களே வேலைச் சுற்றி குவிந்து காணப்படுவதாகவும் கூறப்படுகிறது. இவ்வேல் உள்ள இடத்திலிருந்து சிறிது தூரத்தில் கறுப்பு நிறத்தில் இரண்டு அடையாளங்கள் தெரிகின்றன. இவை வள்ளியம்மனின் பாதச்சுவடுகள் எனக் கூறப்படுகின்றன. இங்கு வரும் பக்தர்கள் இப்பாதச் சுவட்டின் மீது கற்பூரம் கொழுத்தி வணங்கிச் செல்வதால் இவை கறுப்பு நிறத்தில் காணப்படுகின்றன.

மஞ்சள்கிரி மலையின் அடிவாரத்தில் மேற்குப் பக்கத்தில் உகந்தைக் குளம் அழகாகக் காட்சியளிக்கிறது. இவ்விடத்தில் ஓர் சிறிய மலைப்பாறைக் குகையும் காணப்படுகிறது. இங்கிருந்து கிழக்கு பக்கத்தில் குளத்தின் மேலதிக நீர் கடலில் கலக்கிறது.

## தோணி மலையும், தோணி தட்டா மலையும்

உகந்தை குளத்து நீர் கடலில் கலக்கும் முகத்துவாரத்தில் தோணி மலையும், தோணி தட்டாமலையும் காணப்படுகின்றன. சூரனை வதம் செய்ய வந்த முருகப் பெருமானும், வீரபாகுத் தேவரும், பரிவாரங்களுடன் வந்திறங்கிய இடமே இதுவெனவும், அவர்கள் வந்த தங்கத் தோணியே கல்லாக மாறி இவ்விடத்தில் காணப்படுவதாகவும் கர்ண பரம்பரையாகக் கூறப்படுகிறது.

இங்கு கடலோரத்தில் மூன்று நீளமான மலைப்பாறைகள் காணப்படு கின்றன. இரண்டு பாறைகள் சமாந்தரமாக கடற்கரையிலும், ஒரு பாறை கடல் ஓரமாகவும் காணப்படுகின்றது. இப்பாறையே தங்கத் தோணி மலை என அழைக்கப்படுகிறது. சுமார் 80 அடி நீளமும் 30 அடி அகலமும் கொண்ட இப்பாறையின் நடுவில் நீள வாட்டில் பாறையை இரண்டாக வெட்டியது போல ஓர் பிளவு காணப்படுகிறது. அலை அடிக்கும் போது இப்பிளவின் ஊடாக நீர் ஓடிவருகிறது. பிளவில் மணலும் காணப்படுவதால் இது ஓர் வடிகான் போல நீர் வருவதும் போவதுமாக உள்ளது.

அடுத்ததாக உள்ள பாறைகள் இரண்டும் ஒன்றோடு ஒன்று ஒட்டியது போல் காணப்படுகின்றன. இதில் பெரிய பாறை 'தோணி தட்டா மலை'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என அழைக்கப்படுகிறது. இப்பாறை சுமார் 100 அடி நீளமும் 30 அடி அகலமும் கொண்ட நீண்ட பாறையாகும். தோணி மலையின் தென்மேற்குப் பக்கத்தில் 50 அடி தூரத்தில் இம்மலை காணப்படுகிறது.




*கல்கிணறு*

## இராசமலை சிவன் கோயில் - பக்கிஎல்ல

அம்பாறை - மகா ஓயா வீதியில் 23 கி.மீ.தூரத்தில் உள்ள பக்கிஎல்ல கிராமத்தின் மேற்குப் புறத்தில் 2 கி.மீ தொலைவில் காட்டின் நடுவே அமைந்துள்ள நவக்கிரி ஆறு குளத்தின் அருகில் இராசமலை அமைந்துள்ளது.

இன்று ராஜகல என அழைக்கப்படும் இம் மலையின் பண்டைய பெயர் ராக்ஷஹெல என்பதாகும். இம்மலையிலேயே புராதன காலத்தில் ஓர் சிவன் கோவில் அமைந்திருந்தமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன.



*இராசமலை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராவணனுடன் தொடர்புடைய ராக்ஷச மலை

சுமார் 1000 அடி உயரமான இம் மலையில் 1300 ஏக்கர் பரப்பளவில் புராாதன இடிபாடுகள் காணப்படுகின்றன. பண்டைய காலத்தில் இங்கு ராக்ஷச இனத்தவர் வாழ்ந்ததாகவும், இதனால் இம்மலை ராக்ஷச மலை என அழைக்கப்பட்டதாகவும், இதுவே பின்பு மருவி இம்மலைக்கு ராஸ்ஸகல, ரஜகல என மாற்றமடைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. ராக்ஷச என்பது இராவணனைக் குறிப்பதாகும். எனவே இராவணனின் முக்கிய இடங்களில் ஒன்றாக ராக்ஷச மலை விளங்கியிருக்க வேண்டும். இராவணன் காலத்தில் இங்கு சிவ வழிபாடு தோற்றம் பெற்றிருக்கலாம்.

இமயமலைப் பகுதியில் உள்ள ராக்ஷச தல் எனும் ஏரி இராவணன் ஏரி எனவும், பலாங்கொடையின் அருகில் உள்ள ராக்ஷச ஹெல இராவணன் இருந்த மலை எனவும் அழைக்கப்படுகிறது. எனவே இதுவும் இராவணன் இருந்த மலையாக இருக்கலாம்.

## சிவன் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள்

ராக்ஷஹெல (ரஜகல) மலைக்குகைகளில் மொத்தமாக 52 பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவற்றில் இந்து சமயத்துடன் தொடர்புடைய ஏராளமான கல்வெட்டுக்கள் உள்ளன. இவற்றில் சிவன் பெயர் பொறிக்கப்பட்ட நான்கு கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இக் கல்வெட்டுக்கள் பேராசிரியர் பரணவித்தான எழுதிய 'Inscription of ceylon - vol 1" எனும் நூலில் 431, 443, 449, 450, ஆகிய இலக்கங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் முருகன், நாகம் ஆகியவை தொடர்பான கல்வெட்டுக்களும் இம் மலையில் உள்ளன.



ராசமலை சிவலிங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாகக்கல்

## கோமுகிகள்

இவற்றைத் தவிர சிவ வழிபாடு தொடர்பான மேலும் சில தொல் பொருட் சின்னங்கள் இராசமலையில் காணப்படுகின்றன. சைவக் கோயில்களின் கருவறையுடன் இணைத்துக் கட்டப்படும் கோமுகிகள் இரண்டு இம் மலையில் காணப்படுகின்றன. இதில் ஒன்று மகரக் கோமுகியாகும். அடுத்த கோமுகி பாதி உடைந்த நிலையில் உள்ளது.



மகர கோமுகி


## முச்சூலக் குறியீடுகளும், புணூல் தரித்த காவற் சிலைகளும்

இராசமலையில் பண்டைய கால வேடர்கள் வரைந்த சித்திரங்கள் காணப் படுகின்றன. இவற்றில் முச்சூலக் குறியீடுகள் சில வரையப்பட்டுள்ளன. அத்துடன் இங்குள்ள காவல் கற்சிலைகளில் சிலவற்றில் புணூலுடன் வடிவங்கள் காணப்படுகின்றன. இக் காவற்கற்கள் சிவாலயத்திற்குரியவையாக இருக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவ, முருக வழிபாட்டில் ஈடுபாடு கொண்ட துட்டகைமுனு

இராசமலையில் பௌத்த வழிபாட்டுத் தலத்தின் எச்சங்கள் பல காணப்படுகின்றன. துட்டகைமுனு மன்னனால் இங்கு பௌத்த ஆலயம் கட்டப்பட்டதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மன்னன் துட்டகைமுனு சிவ வழிபாட்டிலும், முருக வழிபாட்டிலும் ஈடுபாடு கொண்டவன். எனவே தான் இவனின் கிரீடத்தில் திரிசூலம், வேல் ஆகிய சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. (Ref. Ancient Ceylon - பக்.537, 538) நிக்காவெல குகையில் இக் கிரீடம் பொறிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கதிர்காம முருகன் ஆலயத்தை புனரமைத்தவன் துட்டகைமுனு மன்னனே.



இன்னுமோர் கோமுகி



சோழர்கால சிவலிங்கம்

## சோழர் கால சிவலிங்கம்

இவை எல்லாவற்றையும் விட மிக முக்கியமான ஓர் தொல்பொருட் சின்னம் இராசமலையில் ரஜகலதன்ன என்னுமிடத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது சதுர வடிவமான ஆவுடையாருடன் கூடிய சோழர் கால சிவலிங்கமாகும். இச்சிவலிங்கம் தற்போது அம்பாறை நூதன சாலையில் வைக்கப்பட்டுள்ளது. எனவே இவை யாவும் ரஜகல எனும் இராச மலையில் மிகப் பண்டைய காலம் முதல் கொண்டு சோழர் காலத்திலும் சிவ வழிபாடு நிலவியமையை உறுதி செய்கின்றன.

## சிந்தாயாத்திரை பிள்ளையார் கோயில் - வீரமுனை

மட்டக்களப்பிலிருந்து பொத்துவிலுக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் 46 கி.மீ. தூரத்தில் காரைதீவு சந்தி அமைந்துள்ளது. இங்கிருந்து மேற்கு நோக்கி அம்பாறைக்குச் செல்லும் வீதியில் சுமார் 6 கி.மீ. தொலைவில் சம்மாந்துறையை அடுத்து வீரமுனை எனும் பழைமைவாய்ந்த தமிழ்க் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்திலேயே சிந்தாயாத்திரை பிள்ளையார் கோயில் உள்ளது.



*சிந்தாயாத்திரை பிள்ளையார் கோயில்*

### கோயிலை அண்டிய பகுதிகளில் 6 குளங்கள்

இவ்வாலயத்தின் தேவைக்காகவும் இவ்வூர் மக்களின் உபயோகத்திற் காகவும் இக்கோயிலை அண்டிய பகுதிகளில் 6 குளங்கள் மன்னர்களால் அமைக்கப்பட்டுள்ளன. கோயிலின் வடதிசையில் மட்டக்களப்பு வாவி பரந்து காணப்படுவதால் ஏனைய மூன்று திசைகளிலும் சிறிய குளங்கள் பல கட்டப்பட்டுள்ளன. கோயிலின் முன்பாக கிழக்குத்திசையில் தீர்த்தக்குளம் காணப்படுகிறது. இது தாமரைக் குளம் என்றழைக்கப்படுகிறது. வட கிழக்கில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணான் குளமும், தென் கிழக்கில் உடையார் குளமும், தெற்கில் பிச்சையர் குளமும், தென் மேற்கில் ஐயர் குளமும், மேற்கில் கருவளர் குளமும், இளந்தாரிக் குளமும் அமைந்துள்ளன.

## நாவற்காட்டில் கிடைக்கப்பெற்ற விநாயகரின் வெண்கலச் சிலை

இவ்வாலயத்தின் தொன்மையை பறைசாற்றும் ஓர் புராதன சின்னம் வீரமுனைக் கிராமத்திற்கு அருகிலுள்ள 'நாவற்காடு' என்னுமிடத்தில் 1986ல் வெளிப்பட்டுள்ளது. இவ்விடத்தில் வீடு கட்டுவதற்காக அத்திவாரம் வெட்டியபோது 12'' உயரமான ஐம்பொன்னினாலான விநாயகர் சிலை ஒன்று கண்டெடுக்கப்பட்டது. கால் பகுதியில் மண்வெட்டியால் தாக்குண்டு சிறிது காயப்பட்டுள்ள இச்சிலை 8ம் 9ம் நூற்றாண்டுக்குரியதென அடையாளம் காணப்பட்டுள்ளது. தற்போது இது சிந்தாத்திரிப் பிள்ளையார் கோயிலில் வைக்கப்பட்டுள்ளது. இச்சிலை கண்டெடுக்கப்பட்ட இடம் கோயிலிருந்து சுமார் 50 யார் தொலை விலுள்ளது.

பல நூற்றாண்டு காலமாக இவ்வாலயம் கைவிடப்பட்ட நிலையில் மக்கள் வழிபாடற்ற கோயிலாகி அழிந்து போயுள்ளது. அந்தக் காலகட்டத்தில் இதிலிருந்த விக்கிரகங்கள் பாதுகாப்பு கருதி ஆலய குருமார்கள் அல்லது பக்தர்கள் மறைந்து வைக்கப்பட்டிருக்கலாம். பின் அவர்கள் காலத்தின் பின்பு யாருக்கும் தெரியாமலே மண்ணில் புதையுண்டிருக்கலாம். அப்படிப் புதை யுண்ட விக்கிரங்களில் நாவற்காட்டில் கிடைத்த பிள்ளையார் படிமமும் ஒன்றா அல்லது நாவற்காட்டில் புராதன காலத்தில் அமைந்திருந்த வேறோர் கோயிலின் படிமமா என்பது ஆராயப்பட வேண்டிய விடயமாகும்.




கல்வெட்டு தூண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச மாளிகையும், பொய்கையும்

மேலும் இவ்வாலயத்தின் பின்புறமாக மேற்குத்திசையில் ஓர் மண் மேடு காணப்படுகிறது. மேட்டில் அரச மாளிகையொன்று இருந்ததாகவும், இதன் மேற்குப் பகுதியில் தூர்ந்த குளமொன்றும் காணப்படுவதாகவும், இது ஓர் அரச பொய்கையாக இருக்கலாம் எனவும், இவ்விடத்தில் தொல்லியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டால் இவ்வரச மாளிகை சம்பந்தமான எச்சங்களையும், தகவல்களையும் கண்டுபிடிக்க வாய்ப்புண்டு எனவும் இப்பகுதி மக்கள் கூறுகிறார்கள்.



*முன்னடிக்கல்*

## கண்டி மன்னன் சேனரதன் பொறித்த செப்பேடு

இவ்வாலயம் கண்டி மன்னர்களாலும் அவ்வப்போது வழிபடப்பட்டு மானியங்கள் வழங்கப்பட்டள்ளது. கி.பி. 1605-1635 வரை கண்டியை ஆண்ட சேனரதன் என்ற மன்னனால் இவ்வாலயத்திற்கு மானியங்கள் வழங்கப்பட்டதாக செப்பேடு ஒன்றின் மூலம் அறிய வருகிறது. கி.பி 1615ல் எழுதப்பட்ட இச்செப்பேடு தற்போது கண்டி தொல்பொருள் நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## ஆலய வளவில் காணப்படும் புராதன தொல்பொருள் சின்னங்கள்

இது தவிர இவ்வாலயத்தின் தொன்மையை எடுத்தியம்பும் பல வரலாற் றெச்சங்கள் இவ்வாலய வளவினுள் காணப்படுகின்றன. ஆலய வாசலில் கல்லிலான முன்னடிக்கல் ஒன்றும், கல்லினால் அமைக்கப்பட்ட நீண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியும் காணப்படுகின்றன. அத்துடன் பல இடங்களில் கற்தூண்களையும் ஆங்காங்கே காணக்கூடியதாக உள்ளது. இவையனைத்தையும் நோக்கும் பொருட்டு புராதன காலத்தில் சீரும் சிறப்புடனும் விளங்கிய இவ்வாலயம் பல நூற்றாண்டுகள் கைவிடப்பட்டு சிதைந்து போய் தற்போது மீண்டும் புத்துயிர் பெற்று எழுந்துள்ளது என ஊகிக்கக்கூடியதாக உள்ளது.

## ஆலய வளவில் காணப்படும் கல்வெட்டுக்கள்

வீரமுனை கோயில் வளவில் உள்ள கற்துண்டங்களில் ஏழு கல்வெட்டுக்கள் இருப்பதாக அண்மையில் பேராசிரியர் பத்மநாதன் தனது ஆய்வுக் குறிப்புகளில் எழுதியுள்ளார். இவற்றில் பல பொ.ஆ. 11 ஆம் நூற்றாண்டில் சோழர் காலத்தில் இலங்கையில் இருந்த நானாதேசிக வணிகர்களால் பொறிக்கப்பட்டவை எனவும், இக்கல்வெட்டுக்களை முழுமையாக வாசிக்க முடியாதபடி அவை சிதைந்து காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளனர். தென்கிழக்கிலங்கையில் உள்ள கோயில்களில் திருக்கோயிலுக்கு அடுத்தபடியாக அதிகளவில் தொல்பொருட் சின்னங்களும், கல்வெட்டுக் களும் உள்ள கோயில் வீரமுனை சித்தா யாத்திரை பிள்ளையார் கோயில் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கல்வெட்டு சாசனங்களை ஆராய்ந்து பார்க்கும்பொழுது சோழர் ஆட்சிக்காலத்தில் இவ்வாலயம் கிழக்கிலங்கையில் பிரசித்தி பெற்ற ஆலயமாக விளங்கியிருக்கலாம் என பேராசிரியர் பத்மநாதன் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

# இந்துக்களின் [தமிழர்களின்] பாரம்பரிய சொத்துக்கள்

இந்துக்களின் (தமிழர்களின்) பாரம்பரிய சொத்துக்களாக விளங்குபவை எமது புராதன ஆலயங்களே. இவ்வாலயங்களில் தான் எமது புராதன வரலாற்றுச் சின்னங்கள் நிறைந்து காணப்படுகின்றன. கருங்கல் தெய்வச்சி லைகள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், கற்தூண்கள் போன்ற எமது பண்டைய தொல்பொருட் சின்னங்கள் இப்புராதன ஆலயங்களில் தான் காணப்படுகின்றன. எனவே நாம் பேணிப் பாதுகாக்க வேண்டிய பாரம்பரிய சொத்துக்கள் இவ்வாலயங்களே. இவை தவிர புராதன நாணயங்கள், புராதன ஆலய கட்டிட இடிபாடுகள் போன்றவையும் எமது வரலாற்றைக் கூறக் கூடிய தொல்பொருட் சின்னங்களாகும்.

## இந்துக்களின் பாரம்பரியச் சொத்துக்களை பாதுகாத்தலும் அவற்றை உலகறியச் செய்தலும்

எமது முன்னோர்களால் கட்டப்பட்ட புராதன ஆலயங்களின் வரலாறு உரிய முறையில் ஆராயப்பட வேண்டும். பல வருட காலமாக இந்துக்களின் வரலாறு திட்டமிட்டு மறைக்கப்பட்டும், திரிபுபடுத்தப்பட்டும் வருகிறது. பொ.ஆ. 5ம் நூற்றாண்டு முதல் கொண்டு காலத்துக்காலம் எழுதப்படும் வரலாற்று மூலகங்கள் மூலம் இக்காரியம் கச்சிதமாக நடைபெற்று வருகிறது. எமது வரலாறு மட்டுமல்லாது வரலாற்று சின்னங்களும் அழிக்கப்பட்டும், மறைக்கப்பட்டும் வருகின்றன. தமிழ் மாணவர்கள் தமது வரலாறு என்ன என்பதை சரியாகத் தெரியாதவர்களாய் குழப்ப நிலைக்காளாக்கப்படுகிறார்கள். தமது பாரம்பரியத்தையும், அதன் அருமை பெருமைகளையும் அறியாதவர் களாய் உள்ளனர்.

இலங்கைத் தீவெங்கிலும் தமிழர் வரலாற்று, பாரம்பரியச் சின்னங்கள் ஏராளமாக உள்ளன. தமிழர் அதிகளவில் வாழும் வடக்கு கிழக்கில் இந்துக்களின் வரலாற்று, பாரம்பரியச் சின்னங்களை வெளியே கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் நடவடிக்கைகளும் குறைவாகவே உள்ளன. சரியான முறையில் தொல்லியல் ஆய்வுகள் மெற்கொள்ளப்படுவதில்லை. பல தொல்லியல் மையங்கள் மண்மேடுகளாய் உள்ளன. அங்கொன்றும் இங்கொன்றுமான ஆய்வுகள் நடத்தப்பட்டாலும் அவற்றின் மூலம் கிடைக்கப்பெறும் தமிழர் மற்றும் இந்து பாரம்பரியச் சின்னங்கள் சரியான முறையில் பாது காக்கப்படுவதில்லை. ஏராளமான பகுதிகள் ஆய்வுகளுக்குட் படுத்தப்படாமல் உள்ளன.

அதேசமயம் தென்னிலங்கையில் வரலாற்று மையங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அங்கு கிடைக்கப் பெறும் தொல்பொருள் சின்னங்கள் நல்ல முறையில் பாதுகாக்கப்படுகின்றன. வடக்கு கிழக்கு உட்பட தென்னிலங்கையில் உள்ள எத்தனையோ பிரதேசங்கள் தமிழ் மன்னர் களாலும், சிற்றரசர்களாலும் ஆளப்பட்டுள்ளன. தமிழ் மக்கள் செறிந்து வாழ்ந்துள்ளனர். பௌத்த மக்களும் சைவ மக்களும், அவரவர் மதங்கைளப் பின் பற்றி வழிபாடுகள் செய்துள்ளனர். புராதன காலத்தில் தென்னிலங்கையில் பல இடங்களில் பௌத்த மன்னர்களாலும், தமிழ் மன்னர்களாலும், சைவ மக்களாலும் கோயில்கள் கட்டப்பட்டு பூஜிக்கப்பட்டுள்ளன.

வடக்கு கிழக்கைப் பொறுத்தவரையில் தமிழர் பாரம்பரியச் சின்னங்கள் ஏராளமாக உள்ளன. அவற்றில் முக்கியமாக கோயில்களை எடுத்துக் கொள்ளலாம். அரண்களும், அரச மாளிகைகளும் ஒரு சில இடங்களில் மட்டுமே அமைந்துள்ளன. ஆனால் கோயில்களும், குளங்களும் பரவலாக எல்லா இடங்களிலும் காணப்படுகின்றன. இவற்றில் எமது பாரம்பரியத்தை உணர்த்தும் வரலாற்று சிறப்புமிக்க ஆலயங்களைக் கண்டறிந்து அவற்றில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

வடக்கு கிழக்கில் உள்ள ஏனைய மத சின்னங்கள் தூணித்துருவி ஆராய்ச்சி செய்யப்படுகின்றன. தேடிக் கண்டுபிடித்து ஆவனப்படுத்தப் படுகின்றன. மிகுந்த அக்கறை செலுத்தி அவை வெளிக்கொணரப்பட முயற்சி கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதேசமயம் இந்து பாரம்பரியச் சின்னங்கள் தேடுவாரற்றுக் கிடக்கின்றன. வடக்கு கிழக்கிலுள்ள காடுகளில் ஏராளமான ஆலயங்கள் பாழடைந்து காடு வளர்ந்து, அழிந்து போயுள்ளன. மக்கள் அவற்றை அடையாளம் காண முடியாதவர்களாய் உள்ளனர். ஆங்காங்கே எதேச்சையாக கிடைக்கும் வரலாற்றுச் சின்னங்கள் அவற்றின் அருமை பெருமை தெரியாத நிலையில் உதாசீனப்படுத்தப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துக்கள் தமது பூர்வீக வரலாற்றை பாதுகாப்பது எப்படி?

எமது வரலாற்று பாரம்பரியமிக்க சின்னங்களும், இடங்களும் அடையாளம் காணப்பட வேண்டும். மக்களால் தேடிக் கண்டுபிடிக்கப்பட வேண்டும். கண்டுபிடிக்கப்பட்ட பகுதிகளில் அகழ்வுகள் மற்றும் ஆய்வுகள் செய்யப்பட வேண்டும். அவற்றின் மூலம் கிடைக்கப்படும் வரலாற்றுச் சின்னங்களும், செய்திகளும் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும். அந்தந்தப் பகுதியிலுள்ள தொடர்பு சாதனங்களை அணுக வேண்டும். அவற்றின் மூலம் வரலாற்றுச் சின்னங்களும், செய்திகளும் உலகளாவிய மட்டத்தில் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

1. ஒவ்வொரு ஆலயங்களும் தமது ஆலய வரலாற்றை ஆவணப்படுத்தல் வேண்டும்.
2. தத்தமது ஆலயங்களிலுள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க பாரம்பரியச் சின்னங்களை அடையாளம் கண்டு, அவற்றைப் பாதுகாத்தல் வேண்டும்.
3. தமது ஆலய வரலாற்றையும், பாரம்பரியச் சிறப்பையும், சின்னங்களையும் அப்பகுதி மக்களுக்கு தெரியப்படுத்தும் வகையில் பிரசங்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. இதன் மூலம் மக்களுக்கு தத்தமது பகுதியில் உள்ள பாரம்பரியச் சின்னங்களின் அருமை பெருமைகளை உணர்த்துவதோடு, அவற்றை அழிந்து போகாமல் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வையும் அவர் களுக்கு ஏற்படுத்த வேண்டும்.
5. அறநெறிப் பாடசாலைகளில் தமது ஆலய வரலாற்றையும், தமது பிரதேச த்தில் உள்ள வரலாற்று பாரம்பரியம் மிக்க ஏனைய ஆலயங்கள் பற்றிய அறிவையும் புகட்டுதல் வேண்டும்.
6. இதன் மூலம் சிறு வயது முதல் எமது பிள்ளைகளுக்கு எமது பிரதேச த்திலுள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களின் அருமை பெருமைகளை உணர்த்துவதோடு அவற்றின் மீது ஓர் பற்றுதலை உண்டாக்கலாம்.
7. பிரதேச மட்டத்தில் எமது வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயங்கள் பற்றிய சொற்பொழிவுகளையும், ஆய்வுக் கருத்தரங்குகளையும் நடத்த வேண்டும். இது மாவட்ட, மாகாண, நாடளாவிய ரீதியில் விரிவு படுத்தப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. எமது வரலாற்று சிறப்பு மிக்க ஆலயங்களை நாடளாவிய உலகளாவிய ரீதியில் அனைவரும் அடையாளம் கண்டு கொள்ளும் வகையில் அவ்வாலயங்களின் பெயர்களில் சிறு மாற்றம் செய்யப்பட வேண்டும்.

உதாரணமாக வரலாற்று சிறப்பூமிக்க பௌத்த ஆலயங்கள் ''இரஜ மஹா விஹாரை'' அல்லது ''புராண விஹாரை'' என்று பெயரிட்டு அழைக்கப்படுவது மட்டுமல்லாது அப்பெயரிலேயே பதிவு செய்யப்பட்டு, பெயர்ப்பலகைகளும் அமைக்கப்படுகின்றன.

இது போன்ற ஓர் பெயர் மாற்றம் செய்வதன் மூலம் எமது பிரதேசத்திலுள்ள மக்கள் மட்டுமல்லாது நாட்டிலுள்ள சகலரும் எளிதில் அவற்றை அடையாளம் கண்டு கொள்ள முடியும்.

9. எமது சமூகம், சமயம், கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றின் வரலாற்றை வெளிக் கொணரக் கூடிய ஆதாரங்களாகக் கருதப்படும் 500க்கும் மேற்பட்ட பிராமிக் கல்வெட்டுக்களும், பல தமிழ்க் கல்வெட்டுக்களும் இதுவரை வாசிக்கப்படாமல் கிடக்கின்றன. இவற்றை வாசித்து இதன் விபரங்களை வெளியிட ஆவனை செய்தல் வேண்டும். இதன் மூலம் எமது சமூக, சமய சம்பந்தமான அரிய தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

10. மிக முக்கியமாக எமது ஆலயங்களை புனர்நிர்மானம் செய்யும்போது, ஆலய வரலாற்றைக் கூறக் கூடிய கருங்கற்தூண்கள் போன்றவற்றை நிலத்தின் கீழ் போட்டு புதைத்து மூடி அதன் மேல் சீமெந்து தரை அமைப்பதும், இப்படிப்பட்ட புராதன தூண்களை குப்பையில் போடுவதும் அல்லது எங்கோ ஓர் மூலையில் ஒதுக்கி வைப்பதும் முற்றாக நிறுத்தப்பட வேண்டும். எமது ஆலயங்களில் குப்பையில் வீசப்பட்டும், தேடுவாரற்று ஒதுக்கித் தள்ளப்பட்டதுமான பல கற்தூண்களில் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டிருப்பதை எனது கள ஆய்வின் போது பல இடங்களில் காணக்கூடியதாக இருந்தது.

11. மேலும் ஆலயங்களை புனரமைக்கும் பொழுது அங்கிருக்கும் புராதன தெய்வச் சிலைகளை கடலிலும், குளத்திலும் போடுவதை முற்றாக நிறுத்தப்பட வேண்டும். இவை பழையனவாக இருந்தாலும், சிதலமடைந்திருந்தாலும் இவற்றை ஆலயத்தின் உள் வீதியில் ஓர் இடத்தில் பாதுகாப்பாக வைக்க வேண்டும். இப்புராதன விக்கிரங்களே எமது ஆலயத்தின் முன்னோடி தெய்வம் என்பதை மறக்கலாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ், சிங்கள, பௌத்த மன்னர்களால் கட்டப்பட்ட கோயில்களை இடித்தழித்த ஐரோப்பியர்

இன்று நாம் காணும் எமது பண்டைய வரலாற்றைக் கூறும் ஆலயங்கள் எல்லாம் சுமார் 200 வருடங்களுக்குள் கட்டப்பட்டவையே. 2000 ஆண்டுகளுக்கு முன்பு தோற்றம் பெற்ற ஆலயங்கள், சோழர் கட்டிய 1000 வருட பாரம்பரியமிக்க ஆலயங்கள், சோழர்காலத்தின் பின்பு விஜயபாகு, பராக்கிரமபாகு ஆகிய பௌத்த மன்னர்கள் கட்டிய நூற்றுக்கணக்கான கோயில்கள், மேலும் பல தமிழ், சிங்கள மன்னர்களும், சிற்றரசர்களும் அரசப் பிரதானிகளும் கட்டி மானியங்கள் வழக்கப்பட்ட கோயில்கள் என சுமார் 1000 கோயில்கள் பொ.ஆ.16 ஆம், 17ஆம் நூற்றாண்டு காலப் பகுதியில் இலங்கைக்கு வந்த ஐரோப்பியர்களால் இடித்தழிக்கப்பட்டன. சில நூற்றாண்டுகளின் பின்பு ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே பண்டைய ஆலய இடிபாடுகளும், கோயில்கள் இருந்த இடங்களும் அடையாளம் காணப்பட்டு புதிதாக அங்கு கோயில்கள் கட்டப்பட்டன. பல ஆலயங்கள் இருந்த இடமே தடம் தெரியாமல் மண்ணுள் புதையுண்டு போய்விட்டன. அழிக்கப்பட்ட ஆலயங்கள் இருந்த இடத்தில் இருந்து அவ்வப்போது புராதன தெய்வச் சிலைகளும், சின்னங்களும் வெளிப்பட்ட வண்ணம் உள்ளன. உண்மை இப்படி இருக்க, சிங்கள, பௌத்த மன்னர்கள் தமிழ், இந்து சமயத்தின் விரோதிகள் எனும் மாயை திட்டமிட்டு உருவாக்கப்பட்டுள்ளது.

## துட்டகைமுனு தமிழர்களுக்கு எதிரானவனா?

கி.மு.3 ஆம் நூற்றாண்டில் தமிழ் மன்னன் எல்லாளனுடன் துட்டகைமுனு போரிட்டு அனுராதபுரத்தைக் கைப்பற்றியது பற்றி மகாவம்சம் கூறுகிறது. அரசியல் இலாபங்களுக்காக இப்போர் தமிழருக்கும், சிங்களவர்களுக்கும் இடையில் நடந்த போர் என இனவாதம் பூசப்பட்டு காண்பிக்கப்படுகிறது. துட்டகைமுனு அந்நிய நாட்டு ஆட்சியை எதிர்த்தானே தவிர தமிழர்களை எதிர்க்கவில்லை. துட்டகைமுனுவின் படைகளில் தமிழர்கள் பலர் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் கதிர்காம முருகன் ஆலயம் துட்டகைமுனுவால் பெரிதாகக் கட்டப்பட்டது என கந்த உப்பாத்த எனும் நூலில் கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் துட்டகைமுனு தமிழர்களுக்கோ, இந்து சமயத்திற்கோ எதிரானவன் அல்ல என்பது தெளிவாகிறது. எல்லாளன் இறந்தபின்பு பண்டைய அனுராதபுர நகரின் துட்டகைமுனு மன்னன் எல்லாளனுக்கு சமாதி அமைத்ததோடு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வழியாக போகிறவர்கள் எல்லாளன் சமாதிக்கு மரியாதை செலுத்தி விட்டு செல்ல வேண்டும் எனவும் உத்தரவிட்டான். துட்டகைமுனு தமிழர்களுக்கு எதிரானவன் என்றால் இப்படி செய்திருப்பானா?

## மகாசேனன் சைவசமயத்திற்கு எதிரானவனா?

அனுராதபுரம், பொலநறுவை தென்னிலங்கை உட்பட வடக்கு கிழக்கில் உள்ள பல இந்துக் கோயில்கள் சிங்கள, பௌத்த மன்னர்களின் போஷிப்பைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. பொ.ஆ. 3ஆம் நூற்றாண்டில் அனுராதபுரத் திலிருந்து ஆட்சி செய்து வந்த மகாசேனன் கிழக்கிலங்கையில் கோகர்ணம் (திருக்கோணேஸ்வரம்) எரக்காவில், கலந்தகாமம் ஆகிய இடங்களில் மூன்று சிவாலயங்களை அழித்து அவ்விடங்களில் பௌத்த விஹாரைகளைக் கட்டினான் என மகாவம்சம் கூறுகிறது. அதேசமயம் மகாசேனன் கோயில்களை மாத்திரம் அழிக்கவில்லை. வைதூலிய சமயத்தைப் பின்பற்றிய இம்மன்னன் சங்கமித்ரன் எனும் பிக்குவின் உதவியுடன் அனுராதபுரத்திலிருந்த முதன்மையான பௌத்த தலமான மகாவிஹாரையையும், ஏழு தள பௌத்த கட்டிடமான லோவமகாபாயவையும் அழித்து இவற்றின் தூண்களைக் கொண்டு அபயகிரி விஹாரையை அமைத்தான் எனவும் மகாவம்சம் கூறுகிறது.

ஆனால் மட்டக்களப்பு மான்மியம் மகாசேனன் தட்சிணாபதி (திருக்கோணேஸ்வரம்)யை புனரமைத்தோடு, பௌத்த ஆலயங்களை இடித்தான் எனவும், பின்பு ஆடக சவுந்தரியை மணமுடித்த பின் ஜெத்ததீச னின் உதவியுடன் தான் இடித்த பௌத்த ஆலயங்களைப் புனரமைத்தோடு, ஒவ்வொரு பௌத்த ஆலயத்தின் அருகிலும் ஒவ்வொரு முருகனாலயத்தை அமைத்தான் எனவும் கூறுகிறது.

## முதலாம் விஜயபாகு தமிழர்களுக்கும் இந்து சமயத்திற்கும் எதிரானவனா?

பொ.ஆ.11 ஆம் நூற்றாண்டில் முதலாம் விஜயபாகு சோழருக்கெதிராகப் போரிட்டு பொலநறுவையைக் கைப்பற்றினான். அவனும் அந்நிய நாட்டு ஆட்சியை எதிர்த்தானே தவிர தமிழர்களையோ, இந்து சமயத்தையோ எதிர்க்கவில்லை. இவன் பல இந்துக் கோயில்களைக் கட்டியது பற்றி சூளவம்சம் கூறுகிறது. பொலநறுவை இராஜதானியில் பல இந்துக் கோயில்களை விஜயபாகு கட்டியுள்ளான். அவற்றின் இடிபாடுகளை இன்றும் பொலநறுவை பண்டைய நகரில் காணக் கூடியதாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து சமயத்தை வளர்த்த, பௌத்த சிங்கள மன்னர்கள்

» பொ.ஆ.மு.3 ஆம் நூற்றாண்டுகளில் பொறிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டுக்களில் சிவ வழிபாடு பற்றிய செய்திகளும், சிவனுக்குரிய குகைகள் பற்றிய செய்திகளும் பொறிக்கப்பட்டுள்ளன. சிவன் பற்றிய சுமார் 90 கல்வெட்டுக்களை டாக்டர் பரணவித்தான பதிவு செய்துள்ளார்.

» பண்டுகாபய மன்னன் யக்ஷ வழிபாடு, மற்றும் சிவ வழிபாடு போன்றவற்றை பேணி வந்தமை பற்றி மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தேவநம்பியதீசன் பௌத்த மதத்தைத் தழுவுமுன் இசுருமுனியவில் சிவவழிபாட்டை செய்தவனாவான்.

» பொ.ஆ. 2ம் நூற்றாண்டில் கஜபாகு மன்னன் சேர நாட்டிற்குச் சென்று வந்து இலங்கையின் பல இடங்களில் கண்ணகி அம்மன் கோயில்களை அமைத்தான். யாழ்ப்பாணம், மடு, அனுராதபுரம் ஆகிய இடங்களில் கண்ணகியம்மன் கோயில்களை அமைத்து வழிபாடு செய்தான். பிற்காலத்தில் இவ்வழிபாடு கிழக்கிலங்கையில் செல்வாக்கு பெற்று விளங்கியது.

» சோழர் காலத்தின் பின்பு வந்த விஜயபாகு பல இந்துக் கோயில்களைக் கட்டியது பற்றி சூளவம்சமும், அம்மன்னனால் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்களும் கூறுகின்றன.

» விஜயபாகு பல கோயில்களை கட்டியமை பற்றி கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

» 2 ஆம் விக்ரமபாகு, முதலாம் தப்புலன், 2 ஆம் மகிந்தன், 2ஆம் பராக்கிரமபாகு ஆகிய மன்னர்கள் இந்துக் கோயில்களைக் கட்டியது பற்றி சூளவம்சம் குறிப்பிடுகிறது.

» மானாபரன மன்னன் தெவிநுவர விஷ்ணுவை வழிபட்டு வந்தான் என சூளவம்சம் கூறுகிறது.

» முதலாம் பராக்கிரமபாகு சுமார் 79 இந்து ஆலயங்களை புனரமைத்ததுடன், 13 கோயில்களை புதிதாக அமைத்தான் என சூளவம்சம் கூறுகிறது. மேலும் அழிந்து போன 24 கோயில்களை மீண்டும் கட்டினான். இதன்படி மொத்தமாக 116 இந்துக் கோயில்களுக்கு இவனது திருப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

» தம்பதெனியாவை ஆண்ட விஜயபாகு மன்னன் தெவிநுவர விஷ்ணு ஆலயத்தை புனரமைத்ததோடு, பெந்தோட்டையில் ஓர் காளி கோயிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியதாக சூளவம்சமும், ரோயல் ஆசியா கழகத்தின் வரலாற்றுக் குறிப்பும் கூறுகின்றன.

- மன்னன் நிஸ்ஸங்கமல்லன் இராமேஸ்வர ஆலயத்தை திருத்தியமைத்த தோடு, நிஸ்ஸமகேஸ்வரம் எனும் கோயிலையும் அங்கு அமைத்ததாக இலங்கை பல்கலைக்கழக வெளியீடான History of ceylon எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- 4 ஆம் விஜயபாகு இந்துக் கோயில்களுக்கு ஆற்றிய பணிகள் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள் உள்ளன.
- முதலாம் சேனன் சைவ சமயப் பணிகள் செய்தது பற்றி 'நிக்காய சங்கராவ' எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- மேலும் 4 ஆம் பராக்கிரமபாகு, 4 ஆம் புவனேகுபாகு, 3ஆம் விக்ரமபாகு, 5ஆம் புவனேகபாகு போன்ற மன்னர்கள் இந்துக் கோயில்களைக் கட்டினர் என ரோயல் ஆசியாக் கழகக் குறிப்புகள் கூறுகின்றன.
- முதலாம் இராஜசிங்கன் 100க்கும் மேற்பட்ட பத்தினி அம்மன் கோயில்களை தென்னிலங்கையில் அமைத்தான்.
- 6ஆம் பராக்கிரமபாகு (கோட்டை மன்னன்) முன்னேஸ்வரத்தை திருத்தியடைத்ததோடு, தனது இராச்சியத்தில் பல இந்துக் கோயில்களைக் கட்டியது பற்றி ரோயல் ஆசியாக் கழக குறிப்புகள் கூறுகின்றன. சந்தேச நூல்களும் இவை பற்றி கூறுகின்றன.
- இவ்வாறு காலம் காலமாக சிங்கள பௌத்த மன்னர்களின் ஆதரவையும் போஷிப்பையும் பெற்று வந்தது இந்து சமயம் என்பது குறிப்பிடத்தக்கது.

## சோழ, பாண்டிய மன்னர்களுடன் திருமண உறவு பூண்டிருந்த இலங்கை மன்னர்கள்

தென்னிந்தியாவை சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் ஆட்சி செய்த காலத்தில் சோழர்களுக்கும், பாண்டியர்களுக்குமிடையில் ஒற்றுமை இருக்கவில்லை. ஒருவரோடு மற்றவர் போர் செய்த வண்ணமே இருந்தனர். அக்கால கட்டத்தில் இலங்கையில் இருந்த சிங்கள மன்னர்கள் சோழ, பாண்டிய மன்னர்களுடன் திருமண உறவு பூண்டிருந்தனர். உள்நாட்டில் கிளர்ச்சி, புரட்சி போன்றவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் தென்னிந்தியாவிலிருந்து சோழர் படைகளோ, பாண்டியர் படைகளோ இங்கு வந்து இலங்கை மன்னனின் படைகளுடன் சேர்ந்து கிளர்ச்சிகளை முறியடித்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழ மன்னனின் இளவரசியை இலங்கை சிங்கள மன்னர்கள் மணம் முடித்து அவர்களுடன் உறவை ஏற்படுத்தி ஆட்சி செய்து கொண்டிருக்கும் சமயத்தில் பாண்டியர் இலங்கையுடன் போர் தொடுத்து எதிரி மன்னனுக்கு அனுசரணையாக இருந்து ஆட்சியைக் கைப்பற்றி அவனிடம் கொடுத்துள்ளனர். அதேசமயம் பாண்டிய மன்னனுடன் திருமண உறவு பூண்டு இலங்கை மன்னன் ஆட்சி செய்யும் காலத்தில் சோழர் தமது படைகளை இலங்கைக்கு அனுப்பி அவனது ஆட்சியை கைப்பற்றியுள்ளனர்.

## தமிழர்களுக்கும், இந்து சமயத்திற்கும் ஆதரவாக இருந்த சிங்கள மன்னர்கள்

எனவே தென்னிந்தியாவில் சோழ, பாண்டிய மன்னர்களுக்கிடையே இருந்த பகைமை இலங்கையிலும் எதிரொலித்தது என்பதை இலங்கை வரலாற்று நூல்கள் கூறுகின்றன. மொத்தத்தில் இலங்கை மன்னர்கள் அனைவரும் சோழருடனோ அல்லது பாண்டியருடனோ உறவு பூண்ட வண்ணமே தமது ஆட்சியை மேற்கொண்டுள்ளனர்.

எனவே இலங்கை மன்னர்களிடையே தமிழன எதிர்ப்போ, இந்து சமய எதிர்ப்போ இருந்ததில்லை. சோழரை அல்லது பாண்டியரை எதிர்த்தார்களே யன்றி தமிழர்களை எதிரியாக சிங்கள மன்னர்கள் கருதவில்லை. இந்துக் கோயில்களை சிங்கள பௌத்த மன்னர்கள் இடித்தழித்ததில்லை. மாறாக பல இந்துக் கோயில்களை சிங்கள பௌத்த மன்னர்கள் கட்டினார்கள் என்பதை மகாவம்சம், சூளவம்சம் போன்ற பாளி நூல்கள் மூலம் அறியக் கூடியதாக உள்ளது.

## இந்துக் கோயில்களை இடித்தழித்த ஐரோப்பிய கிறிஸ்தவ ஆட்சியாளர்கள்

சிங்கள மன்னர்களும், தமிழ் மன்னர்களும் கட்டிக் காத்து வந்த இந்துக் கோயில்களை இடித்து அழித்தவர்கள் ஐரோப்பியர்களே பொ.ஆ.1505 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயர் தமது கத்தோலிக்க மதத்தைப் பரப்பும் நோக்கில் பிரசித்தி பெற்ற இந்துக் கோயில்களை இடித்து தரைமட்டமாக்கினர். பல பௌத்த ஆலயங்களும் அழிக்கப்பட்டன. யாழ்ப்பாணத்தில் மட்டும் 500 கோயில்களை அழித்ததாக போர்த்துக்கேய தளபதி போர்த்துக்கல் மன்னனுக்கு கடிதம் எழுதியனுப்பினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் பிரசித்தி பெற்ற சைவத் திருத்தலங்களான நகுலேஸ்வரம், நல்லூர் கந்தசுவாமி கோயில், திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், முன்னேஸ்வரம், சீதவாக்கை சிவன் கோயில், பெந்தோட்டை காளி கோயில், காலி சிவன் கோயில், தெய்வந்துறை விஷ்ணு கோயில், சந்திரசேகர ஈஸ்வரம், கோடடை இராச்சியத்திலிருந்த கோயில்கள், திருக்கோயில் முருகன் ஆலயம் என சுமார் 700 கோயில்களை போர்த்துக்கேயர் அழித்தனர். தமது கத்தோலிக்க மதத்தை தமிழர்களிடையே பரப்பவும், தமக்குப் பாதுகாப்பாக கோட்டைகள் அமைக்கவும் எமது கோயில்களை இடித்து அழித்தனர். இவர்களின் ஆக்கிரமிப்பையும், அராஜகத்தையும் கோட்டை சீதவாக்கை, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய இராச்சியங்களிலிருந்த சிங்கள, தமிழ் மன்னர்கள் கூட்டாக எதிர்த்துப் போராடினர். மேற் சொன்ன கோயில்கள் அழிப்பு பற்றியும், போர்த்துக்கேயர் எமக்கு செய்த அநியாயங்களும், அராஜகமும் எத்தனை கொடூரமானது என்பது பற்றியும் போர்த்துக்கேய பாதிரியான 'Rev.Fernando de Queyroz' (குவைரோஸ் பாதிரி) என்பவர் தான் எழுதிய 'The Temporal and spiritual conquist of ceylon' எனும் நூலில் விபரமாகக் குறிப்பிட்டுள்ளார்.

போர்த்துக்கேயருக்குப் பின் இலங்கைக்கு வந்த ஒல்லாந்தர் அவர்களுக்கு போட்டா போட்டியாக தமது புரட்டஸ்தாந்து மதத்தைப் பரப்பும் பொருட்டு எஞ்சியிருந்த சிறிய கோயில்களையும் முற்றாக அழித்தனர். இவ்விரு அந்நியர் காலத்திலும் இந்துக்கள் தமது கடவுள்களை வணங்க முடியாதவர்களாய் இருந்தனர். போர்த்துக்கேய தளபதியான பிலிப் தி ஒலிவேறா என்பவன் கத்தோலிக்க கிறிஸ்து சமயமே மெய்ச்சமயமென்றும், மற்ற சமயங்கள் பிசாசு வணக்கமுடையவை எனவும் பிரசங்கம் செய்து, தமிழர்களை ஆயுத முனையில் பயமுறுத்தி யாழ்ப்பாணத்தில் 52,000 தமிழர்களை கிறிஸ்தவர்களாக்கினான். யாழ்ப்பாணத்தில் கோயில்கள் இருந்த இடங்களில் கிறிஸ்தவ தேவாலயங்கள் அமைக்கப்பட்டன..

## தமிழர்களையும், சிங்களவர்களையும் பிரித்து விரோதிகளாக்கிய ஆங்கிலேயர்

போர்த்துக்கேயர், ஒல்லாந்தரை அடுத்து இலங்கைக்கு வந்த ஆங்கிலேயர் காலத்தில் இங்கு கிறிஸ்தவ மதம் பரவியிருந்தது. எனவே மதமாற்றத்தில் இவர்கள் பெரிதாக நாட்டம் காட்டவில்லை. ஆனால் அதைவிட மிக மோச மான சூழ்ச்சி ஒன்றை மேற் கொண்டனர். இலங்கை வரலாறு எழுதப்பட்டிருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாளி நூல்களை மொழிபெயர்க்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இந்திய வேதநூல்களை மொழிபெயர்ப்பதாகக் கூறி வட இந்தியர்களை ஆரியர் எனவும், தென் இந்தியர்களை திராவிடர் எனவும் மாக்ஸ் முல்லர் போன்ற பாதிரியார்கள் பிரித்தது போல ஒற்றுமையாக இருந்த தமிழ், சிங்கள மக்களை பிரித்தாளும் சூழ்ச்சியை மேற்கொண்டனர். அந்த வகையில் இலங்கை மக்களிடையே பிரிவினை எனும் நஞ்சை விதைத்தனர். மாக்ஸ் முல்லரின் வழியில் சென்று சிங்களவர் ஆரியர் எனவும், தமிழர் திராவிடர் எனவும் கூறி இலங்கை மக்களைப் பிளவுபடுத்தினர். அன்று முதல் இருந்து தான் சிங்களவர், தமிழர் இடையே விரோதப் போக்கு உருவானது.

ஒற்றுமையாக இருக்கும் மக்களைப் பிரித்தாளும் கொள்கை கொண்ட பிரித்தானியர் (ஆங்கிலேயர்) எம்மிரு இனங்களையும் பிரித்து ஒருவருக் கொருவர் எதிரிகளாகப் பார்க்கும் நிலையை உருவாக்கினர். அந்த நிலை வளர்ந்து இன்று விஸ்வரூபம் எடுத்துள்ளது.

இலங்கை வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் சிங்கள, பௌத்த மன்னர்கள் தமிழ் மக்களுடன் நல்லுறவைப் பேணியதோடு, இந்து சமயத்திற்கும் ஆதரவாக இருந்தமையும், ஐரோப்பிய கிறிஸ்தவர்கள் தமிழர்களுக்கு எதிரிகளாக இருந்ததோடு, ஆயிரக்கணக்கான கோயில்களை இடித்துத் தரைமட்டமாக்கி, அப்பாவி இந்துக்களை மதம் மாற்றி இந்து சமயத்தை அழித்து, தமிழ் சிங்கள நல்லுறவில் பகைமையை ஏற்படுத்தி எம்மை விரோதிகளாக்கியுள்ளமையும் தெளிவாகத் தெரியும். எனவே இனிமேலாவது தமிழ் இந்து மக்கள் தமது உண்மையான நண்பன் யார், விரோதி யார் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணை நூல்கள்

## அத்தியாயம் – 1
## தென்கிழக்கிலங்கையின் பூர்வீகம்


1. Census 1871 Appendix to Report - பக்.77-80.
2. Census of 1891 - பக்.81-83.
3. மட்டக்களப்பு மான்மியம் - F.X.C நடராஜா - மட்டக்களப்பு (1962).1998 - பக். 4,5,16,17.
4. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி - திருமதி.தனபாக்கியம் குணபாலசிங்கம் - மட்டக்களப்பு - 1993 - பக்.3 - 5, 19 - 22,27, 62, 63, 64, 94, 95, 103, 108, 185, 186, 187, 188.
5. யாழ்ப்பாண சரித்திரம் - செ.இராசநாயகம் - புதுடில்லி, சென்னை-1999, பக். 144
6. மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் - வித்துவான் சா.இ.கமலநாதன், கமலா கமலநாதன் - கொழும்பு - சென்னை - 2005 - பக்.5
7. ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள் - நா.நவநாயகமூர்த்தி -அக்கரைப்பற்று - 2002- பக். 101
8. அக்கரைப்பற்று வரலாறு - A.R.M. சலீம் - அக்கரைப்பற்று - பக்கம் - 141.
9. கதிர்காமத்தை தரிசித்த சித்தர்களும் முனிவர்களும்- என்.கே.எஸ். திருச்செல்வம்- கொழும்பு-2014- பக். 2


## அத்தியாயம் – 2
## தென்கிழக்கிலங்கையின் பண்டைய இராச்சியங்கள்

### இராவணனின் லங்காபுரி


1. மட்டக்களப்பு மான்மியம் - F.X.C.நடராஜா - மட்டக்களப்பு (1962) 1998 - பக்.4.
2. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி - திருமதி.தனபாக்கியம் குணபாலசிங்கம் - மட்டக்களப்பு - 1993 - பக். 62, 94.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. Inscriptions of ceylon - vol.1 - Early Brahmi Inscriptions - S. Paranavitana - Colombo - 1970 பக். 40 - plate LV - 515.

4. Dakunu Budu Siripathula Pihiti Makkama saha Rawana Rajuge sellipi - Jayarathna Pathira Arachchi - Boralesgamuwa - 2005 - பக்.65, 71.

5. பாரம்பரியமிக்க கதிர்காம பாத யாத்திரையும் கந்தசுவாமி கடவுளின் புனித பூமியும் - என்.கே.எஸ். திருச்செல்வம் கொழும்பு - 2013 - பக்.128, 162, 290, 291, 320, 321.

6. ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள் - நா.நவநாயகமூர்த்தி -அக்கரைப்பற்று - 2002 - பக்.25.

7. Chethihasika Rawana -Acharya Suriya Gunasekara Nugegoda - 2012 பக். 56, 79, 89.

8. Ravana Sishtacharaya - Acharya Mirundo Gunasekara - Ja Ela - 2012 பக்.65.

9. Srilankave Ravana Airajayage Sangskruthika Urumaya - Acharya Mirundo Gunasekara - Ja Ela - 2013 106, 10, 35.

10. மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் - வித்துவான் சா.இ.கமலநாதன், கமலா கமலநாதன் - கொழும்பு - சென்னை - 2005 - பக்.4

11. கதிர்காமத்தை தரிசித்த சித்தர்களும் முனிவர்களும்- என்.கே.எஸ். திருச்செல்வம்- கொழும்பு-2014-பக் 2,3

12. மட்டக்களப்பு தமிழகம் - வி.சி.கந்தையா - யாழ்ப்பாணம் - 1964 - பக்.7.

## விபீஷனனின் கல்யாணி

1. Dating the Era of Lord Rama - Pushkar Patnagar.

2. வாயு புராணம்.

3. Ramayana in lanka - Chinmaya Mission Srilanka Colombo - 2008.

4. The Mahavamsa - wilhelm geiger - New Delhi - Madras 1993 (1912, 1986) - பக் 7,8.

5. மகாவம்சம் - தமிழாக்கம் S.சங்கரன் - சென்னை - 1962 பக்.18,19.

6. Divayaina News Paper - 30.3.2005 - Prof.அபய ஆரியசிங்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. Inscriptions of Ceylon - Vol.11 part 1-8 Paranavithana - Moratuwa - 1983 - 1983 - பக்.36,37.

8. Journal of the ceylon branch of the Royal Asiatic Society- new series vi. special- colombo- 1963, பக்.22.

## உகந்தை இராச்சியம்

1. மட்டக்களப்பு மான்மியம் - F.X.Cநடராஜா மட்டக்களப்பு 1998 (1962) - பக்.12.

2. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி - திருமதி.தனபாக்கியம் குணபாலசிங்கம் - மட்டக்களப்பு - 1993 - பக் 22, 24, 63.

3. மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் - வித்துவான் சா.இ.கமலநாதன், கமலா கமலநாதன் - கொழும்பு - சென்னை - 2005

## நாகர்முனை இராச்சியம்

1. மட்டக்களப்பு மான்மியம் -F.X.C நடராஜா - மட்டக்களப்பு (1962).1998 - பக். 12, 13.

2. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி - திருமதி. தனபாக்கியம் குணபாலசிங்கம் - மட்டக்களப்பு - 1993 - பக்.25, 62, 63, 103.

3. ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள் - நா.நவநாயகமூர்த்தி -அக்கரைப்பற்று - 2002-பக்.28.

4. இலங்கையில் தொல்லியலாய்வுகளும் திராவிடக் கலாசாரமும்- ஜி. தனபாக்கியம்- மட்டக்களப்பு, 1988 பக்.55,56.

## காளிதேச இராச்சியம்

1. மட்டக்களப்பு மான்மியம் -F.X.C. நடராஜா - மட்டக்களப்பு (1962).1998 - பக்.16, 19.

2. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி - திருமதி.தனபாக்கியம் குணபாலசிங்கம் - மட்டக்களப்பு - 1993 - பக். 5,6,63,95,96.

3. மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் - வித்துவான் சா.இ.கமலநாதன், கமலா கமலநாதன் - கொழும்பு - சென்னை - 2005 - பக்.7.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தனகாம இராச்சியம்


1. மகாவம்சம் - தமிழாக்கம் S.சங்கரன் - சென்னை - 1962 -பக்.210.
2. The Mahavamsa - wilhelm geiger - New Delhi - Madras 1993 (1912, 1986) - - பக்.132 (XIX:54).
3. ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள் - நா.நவநாயகமூர்த்தி -அக்கரைப்பற்று - 2002 - பக்.31, 90.
4. ஈழத்து இந்து சமய வரலாறு - சி.க.சிற்றம்பலம் - திருநெல்வேலி - 1996 பக்.107.
5. Digamadulu Danavva - Piyasena Kahandagamage - Colombo - 2000 - பக். 121, 117, 126, 129, 148.
6. Census 1871 - Appendix to Report - page. 77-80.
7. Census of 1891 page . 83.
8. Census of ceylon - 1901 - Vol.iv - Town and village Statisticals - page.258 - 278.
9. Census of ceylon - 1921 - Page . 243.


## சங்கமன் கண்டி இராச்சியம்


1. Inscriptions of ceylon - vol.1 - Early Brahmi Inscriptions - S. Paranavitana - Colombo - 1970 - பக்.38 ( No.488) 42, 43, 44.
2. Navathama Seelalipi Gavesana - Poojya Ellawala Medananda Himi - Colombo - 2008 -பக்.38,63.
3. 24.10.2010 ல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்.
4. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி - திருமதி.தனபாக்கியம் குணபாலசிங்கம் - மட்டக்களப்பு - 1993 - பக். 105.
5. மட்டக்களப்பு சைவக்கோயில்கள் - வி.சி.கந்தையா - கொழும்பு 1997- பக். 46.
6. பாரம்பரியமிக்க கதிர்காம பாத யாத்திரையும் கந்தசுவாமி கடவுளின் புனித பூமியும் - என்.கே.எஸ். திருச்செல்வம் கொழும்பு - 2013 - பக்.143, 144, 146.
7. மகாகும்பாபிஷேக மலர் - அருள்மிகு ஸ்ரீ சங்கமன்கண்டி காட்டுப் பிள்ளையார் கோயில் - தாண்டியடி - 2009 - பக்.102,103, 119, 120, 123, 124.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. அம்பாறை சங்கமங்கண்டியில் ஆலயம் காணப்பட்டதை உறுதிப்படுத்தும் புதிய தொல்பொருள் சின்னங்கள்- பேராசிரியர்.பந்தநாதன் - வீரகேசரி வாரமலர் - 12.05.2013 - பக்.8.

## மட்டக்களப்பு இராச்சியம்

1. மட்டக்களப்பு மான்மியம் -F.X.C நடராஜா - மட்டக்களப்பு (1962).1998 - பக். 22-28.
2. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி - திருமதி.தனபாக்கியம் குணபாலசிங்கம் - மட்டக்களப்பு - 1993 - பக்.28-32, 35,36,65.
3. மட்டக்களப்பு வரலாறு ஓர் அறிமுகம் - வெல்லவூர் கோபால் - மட்டக்களப்பு - 2005, பக்.17.

## தீகவாபி இராச்சியம்

1. Dutugemunu maharajatuma - Pujya Ellawala Medananda himi - Colombo - 2009, பக்53.
2. Sagassawath Dupagaranaya.
3. ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள் - நா.நவநாயகமூர்த்தி -அக்கரைப்பற்று - 2002- பக்.43-46.
4. The Mahavamsa - wilhelm geiger - New Delhi - Madras 1993 (1912, 1986) - 1:78, பக்.8.
5. மட்டக்களப்பு தமிழகம் - வி.சி.கந்தையா - யாழ்ப்பாணம் - 1964 - பக் 399-401.

## உன்னரசுகிரி இராச்சியம்

1. மட்டக்களப்பு மான்மியம் -F.X.C நடராஜா - மட்டக்களப்பு (1962).1998 - பக். 28,29,33,40.
2. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி - திருமதி.தனபாக்கியம் குணபாலசிங்கம் - மட்டக்களப்பு - 1993 - பக்.102, 32,33,34,67,68.
3. 24.10.2010ல் மேற் கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் – 3
## தென்கிழக்கிலங்கையின் பெருங்கற்கால பண்பாட்டு தொல்லியல் மையங்கள்


### உகந்தை

1. இலங்கையில் தொல்லியலாய்வுகளும், திராவிடக் கலாசாரமும் ஜி.தனபாக்கியம் - மட்டக்களப்பு - 1988, பக்.60,80
2. இலங்கையில் தமிழர் - கா.இந்திரபாலா- சென்னை, கொழும்பு - 2006, பக். 130, 104.
3. கிழக்கிலங்கை பூர்வீக வரலாறு - க.தங்கேஸ்வரி - சென்னை - 2007, பக். 121.

### சங்கமன் கண்டி

1. அம்பாறை சங்கமன்கண்டியில் ஆலயம் காணப்பட்டதை உறுதிப்படுத்தும் புதிய தொல்பொருள் சின்னங்கள் - பேராசிரியர்.பத்மநாதன் - வீரகேசரி வாரவெளியீடு 12 மே 2013 - பக்.8.

### மல்கம்பிட்டி, வீரையடி

1. இலங்கையில் தொல்லியலாய்வுகளும் திராவிடக் கலாசாரமும்- ஜி. தனபாக்கியம்- மட்டக்களப்பு, 1988 - பக்.80.
2. Journal of the ceylon branch of the Royal Asiatic Society - New series- vol. vi- special number C.W. Nicholas- 1963, பக்.30.

### பாணமை, கும்புக்கன்

1. இலங்கையில் தமிழர் - கா.இந்திரபாலா- சென்னை, கொழும்பு - 2006,- பக். 103, 104.

### ஓமுனகல

1. Raversing the unexplored: The Maduruoya Mahaoya Road - Udesi Amarasing - Serendib - April 2010.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஹூலன்நுகே

1. Mahindagamanayata Pera Srilankeya vangsa kathava - Jeevana Suranga gamage - Mathugama - 2009, பக்.175

### வாகூர மலை

1. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி - திருமதி.தனபாக்கியம் குணபாலசிங்கம் - மட்டக்களப்பு - 1993 - பக்.94.
2. மட்டக்களப்பு சைவக்கோயில்கள் - வி.சி.கந்தையா - கொழும்பு 1997- பக்.50.
3. மட்டக்களப்பு தமிழகம் - வி.சி.கந்தையா - யாழ்ப்பாணம் - 1964 - பக். 406.


## அத்தியாயம் – 4
## தென்கிழக்கிலங்கையின் பண்டைய கிராமங்களும், குடியேற்றங்களும்


1. மட்டக்களப்பு மான்மியம் -F.X.C நடராஜா - மட்டக்களப்பு (1962).1998 - பக். 107, 24, 29.
2. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி - திருமதி.தனபாக்கியம் குணபாலசிங்கம் - மட்டக்களப்பு - 1993 - பக். 94, 95, 96, 98, 99, 100, 103, 105, 104, 109, 110, 126, 144.
3. மட்டக்களப்பு வரலாறு ஓர் அறிமுகம் - வெல்லவூர் கோபால் - மட்டக்களப்பு - 2005, பக். 127, 170, 28, 132, 133, 134, 163, 170, 156, 61, 162.
4. மாகோன் வரலாறு - க.தங்கேஸ்வரி - ஆரையம்பதி - 1995 பக். 80, 55.
5. மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் - வித்துவான் சா.இ.கமலநாதன், கமலா கமலநாதன் - கொழும்பு - சென்னை - 2005- பக்: 92, 78.
6. மட்டக்களப்பு தமிழகம் - வி.சி.கந்தையா - யாழ்ப்பாணம் - 1964 - - பக். 398, 424, 425.
7. Digamadulla Danavva - பக். 60, 66, 70, 150, 151.
8. Census of ceylon & 1921 - பக்.245.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. அக்கரைப்பற்று வரலாறு - A.R.M. சலீம் - அக்கரைப்பற்று -பக். 42, 59.
10. இந்திய வரலாறு - சு. சத்தியநாதய்யர், பாலசுப்பிரமணியம்.1958.
11. ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள் - நா.நவநாயகமூர்த்தி -அக்கரைப்பற்று - 2002- பக்.
12. பாரம்பரியமிக்க கதிர்காம பாத யாத்திரையும் கந்தசுவாமி கடவுளின் புனித பூமியும் - என்.கே.எஸ். திருச்செல்வம் கொழும்பு - 2013 - பக். 211.

## அத்தியாயம் – 5
## பிராமிக் கல்வெட்டுக்கள்

### வெஹெரகல்கந்த, தமன

1. Inscription of Ceylon - vol.1-S.Paranavithana Colombo - 1970 - பக் 41, (No. 537) 36 (No.478).
2 பண்டைய இலங்கையில் தமிழும் தமிழரும் - பரமு புஸ்பரட்ணம் கொழும்பு - 2001 - பக். 36, 30, 31.

### மொட்டையாகல்லு

1. Inscriptions of ceylon - vol.1 - Early Brahmi Inscriptions - S. Paranavitana - Colombo - 1970- பக். 37 (No. 487)
2. பண்டைய இலங்கையில் தமிழும் தமிழரும் - பரமு புஸ்பரட்ணம் கொழும்பு - 2001 - பக். 24.
3. ஈழத்து இந்து சமய வரலாறு - சி.க.சிற்றம்பலம் - திருநெல்வேலி - 1996 - பக்.125,198.
4. Negenehira Palathe ha uthuru Palathe Singhala Boudda Urumaya - Poojya Ellawela medananda himi-colombo -2003 - பக்-51.

### உஹபிட்ட கல்கே, வடினாகல, மாவறகல

1. Inscriptions of ceylon - vol.1 - Early Brahmi Inscriptions - S. Paranavitana - Colombo - 1970 - பக்.36 No.477, 475), 56, 748, 749, 746, 750)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஈழத்து இந்து சமய வரலாறு - சி.க.சிற்றம்பலம் - திருநெல்வேலி - 1996 - பக். 187, 236, 344, 238, 746, 750.

## விஹாரேகல, திஸ்னாவுலகம, நாவலர் குளம், குடுவில்

1. Inscriptions of ceylon - vol.1 - Early Brahmi Inscriptions - S. Paranavitana - Colombo - 1970-- பக். 33, 38, (No.421-494), 37 (No. 480).40, 41, (No. 529- 532)
2. ஈழத்து இந்து சமய வரலாறு - சி.க.சிற்றம்பலம் - திருநெல்வேலி - 1996 - பக். 236, 237, 238, 342, 343, 341, 424, 102.
3. இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் - S. பத்மநாதன் - கொழும்பு - 2006 பக். XXXVII.
4. Dutugamunu Maharajathuma - Poojya Ellawala Medananda himi colombo - 2009 - பக். 53.

## நியந்தவரகலமலை, முள்ளிக்கொழுடுமலை

1. Inscriptions of ceylon - vol.1 - Early Brahmi Inscriptions - S. Paranavitana - Colombo - 1970 - பக். 31 (No.401, 402), 37 (No. 481, 482).

## கோவிந்தஹெல

1. Navathama Seelalipi Gavesana - Poojya Ellawala Medananda Himi - Colombo - 2008 - பக். 89, 90 (No.. 256, 257).
2. Dakunu budu sripathula Pihiti Makkama Saha Rawana Rajuge sellipi - Jayarathna Pathira Arachchi - Boralesgamuwa - 2005 பக். 96, 63, 59,60, 68.
3. Monarch of lanka premasiri Mahingoda colombo - 2006 - பக். 135.
4. Asirimath Uva palathe sancharya - Laxman palitha Ranathunga - Mirigama - 2010- பக்.75.
5. Journal of the ceylon branch of the Royal Asiatic Socity No.61 - 1908 - பக். 167.
6. Inscriptions of ceylon - vol.1 - Early Brahmi Inscriptions - S. Paranavitana - Colombo - 1970- பக் cxx.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## களிஓடை, வெஹெரகம, தெஹியத்தகண்டிய, கரந்தஹெல, மலையடிகந்த, மாதனகந்த, பியன்கல, சமன்கல, முள்ளிக்குளம்மலை


1. Inscriptions of ceylon - vol.1 - Early Brahmi Inscriptions - S. Paranavitana - Colombo - 1970-பக்37 (No. 484), 35 (No. 469), 62.
2. ஈழத்து இந்து சமய வரலாறு - சி.க.சிற்றம்பலம் - திருநெல்வேலி - 1996-பக். 288, 341, 303, 128, 236, 238, 257.
3. Sanskrit - English Dictionary - Sir.Mornier Williams பக்.1218.
4. Negenehira Palathe ha uthuru Palathe Singhala Boudda Urumaya - Poojya Ellawela medananda himi-colombo -2003 - பக். 300, 170-175.
5. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி - திருமதி.தனபாக்கியம் குணபாலசிங்கம் - மட்டக்களப்பு - 1993 - பக். 19.
6. Navathama Seelalipi Gavesana - Poojya Ellawala Medananda Himi - Colombo - 2008 - பக்.50 (No.91,92), 45 (No.77.78), 39 (No. 38, 39, 40, 41, 45, 46), 38 (No. 36) 32, 33, 34 (No. 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 11, 12, 13, 14, 15, 16, 19) 35, 36,37, (No. 20, 21, 26, 27, 34, 35), 47 (No. 82)
7. மகாவம்சம் தரும் இலங்கை சரித்திரம் - கலாநிதி க.குணராசா - யாழ்ப்பாணம் 2003 - பக். 92.
8. Inscriptions of ceylon - vol.2 - Part 2 - S.Paranavithana -Colombo - 2001 - பக். 270 - 272.


## புத்தங்கல, ஹேனென்னேகல, நுவரகல, நெலும்பத் பொக்குன


1. Navathama Seelalipi Gavesana - Poojya Ellawala Medananda Himi - Colombo - 2008 பக்.49. (No.89)
2. Inscriptions of ceylon - vol.1 - Early Brahmi Inscriptions - S. Paranavitana - Colombo - 1970- பக்.36 (No.471) 32 (No. 406), 31 (No. 404)
3. Negenehira Palathe ha uthuru Palathe Singhala Boudda Urumaya - Poojya Ellawela medananda himi-colombo -2003 - பக்.195, 253, 83, 84.
4. ஈழத்து இந்து சமய வரலாறு - சி.க.சிற்றம்பலம் - திருநெல்வேலி - 1996 - பக்.198.
5. Ancient ceylon - H.parket - Newdelhi - 1981 (1909) பக்.451.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. Veddo (The Veddas) - Chandrasiri Ranasinha - Colombo - 2009- பக். 5, 11, 70, 106, 160.

7. Inscriptions of ceylon - vol.2 - Part 2 - S.Paranavithana -Colombo - 2001 - பக். 148 - 150.

## சங்கமன் கண்டி, திவியாகல, கஞ்சிக்குடிச்சாறு, கலகிட்டி ஓடை, நீலகிரிமலை

1. Inscriptions of ceylon - vol.1 - Early Brahmi Inscriptions - S. Paranavitana - Colombo - 1970- பக்.38 (No.488) , 38 (No. 492, 493) .
2. Negenehira Palathe ha uthuru Palathe Singhala Boudda Urumaya - Poojya Ellawela medananda himi-colombo -2003 - பக்.169.170, 153 - 155, 102 - 110.
3. Inscriptions of ceylon - vol.2 - Part 2 - S.Paranavithana -Colombo - 2001 - பக். 41

## லைன் மலை, ஹிங்குரான, கிரிபொக்குன ஹெல மலை

1. Inscriptions of Ceylon - Vol.11 part 1-8 Paranavithana - Moratuwa - 1983 - 1983 - பக்.- 29, 30.
2. Inscriptions of ceylon - vol.2 - Part 2 - S.Paranavithana -Colombo - 2001 - பக். 137,138.
3. Negenehira Palathe ha uthuru Palathe Singhala Boudda Urumaya - Poojya Ellawela medananda himi-colombo -2003 - பக்.139 - 142, 182.
4. Inscriptions of ceylon - vol.1 - Early Brahmi Inscriptions - S. Paranavitana - Colombo - 1970 - பக்.40 (No.529, 523)
5. ஈழத்து இந்து சமய வரலாறு - சி.க.சிற்றம்பலம் - திருநெல்வேலி - 1996 - பக். 302

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிரலான, பானமை, மலையாறு, போவத்தகல, குடும்பிகல, கோன்கல , பண்டாரதுவ, பக்கிஎல்ல, ஓமுனகல, நாகபர்வத மலை (பம்பரகஸ்தலாவ), ரஜகல, சாஸ்த்ராவெல**


1. Inscriptions of ceylon - vol.1 - Early Brahmi Inscriptions - S. Paranavitana - Colombo - 1970- பக். 38 (No.496, 497), 38 (No.495) 42, 43 (No.549, 550, 551), 38 (No. 498, 500), 41 (No.538, 540, 545 - 547) 31 ( No.403), 39 - 40, 33 - 35 (No 431, 443, 449, 450, 451, 452) (No.454, 457, 458, 435, 460, 462).
2. ஈழத்து இந்து சமய வரலாறு - சி.க.சிற்றம்பலம் - திருநெல்வேலி - 1996 - பக். 304, 198, 131, 174, 176, 288, 300, 305, 177, 123, 129, 134, 300, 301.
3. Negenehira Palathe ha uthuru Palathe Singhala Boudda Urumaya - Poojya Ellawela medananda himi-colombo -2003 - பக்.115 - 118, 90 - 93, 94 - 98, 110 - 114, 83, 84, 224.
4. கிழக்கிலங்கை பூர்வீக வரலாறு - க.தங்கேஸ்வரி - சென்னை - 2007- பக். 82, 83.
5. மட்டக்களப்பு மான்மியம் -F.X.C நடராஜா - மட்டக்களப்பு (1962).1998 - பக். 31, 32.
6. வரலாற்றுத் திருகோணமலை - கனகசபாபதி சரவணபவன் - சென்னை - 2003 பக். 172, 173, 89.
7. கோணேசர் கல்வெட்டு - பண்டிதர் இ.வடிவேல் - கொழும்பு - 1993 பக். 123 - 127.
8. Sinhalaye Raja Vangsaya - Shaminthra de soyza - Kandy - 2004 பக்.. 59.
9. Navathama Seelalipi Gavesana - Poojya Ellawala Medananda Himi - Colombo - 2008 - பக்.41 - 42, 50 - 51, 52, 53, 42 - 44.
10. Epigraphical Notes - No 1 - 18 - Malini Dias - Colombo - 1991- பக்.. 99, 23, 17.
11. Inscriptions of Ceylon - Vol.11 part 1-8 Paranavithana - Moratuwa - 1983 - 1983 - பக்.17 - 21.
12. Journal of the ceylon branch of the Royal Asiatic Society - vol.XLIII - 1998 - பக்.83.
13. பண்டைய இலங்கையில் தமிழும், தமிழரும் - கலாநிதி பரமு புஸ்பரட்ணம் - கொழும்பு - பக்.21, 18,19


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. Dakunu Budu Siripathula Pihiti Makkama saha Rawana Rajuge sellipi - Jayarathna Pathira Arachchi - Boralesgamuwa - 2005 பக்.96,98.

15. Inscriptions of ceylon - vol.2 - Part 2 - S.Paranavithana -Colombo - 2001 - பக்.2-4, 15-16, 259 - 260, 36 - 37.

16. கதிர்காமத்தை தரிசித்த சித்தர்களும் முனிவர்களும் - என்.கே.எஸ். திருச்செல்வம் - கொழும்பு - 2014- பக் 32,33

## அத்தியாயம் – 6
## புராதன கோயில்கள்

### சித்திர வேலாயுத சுவாமி கோயில் - திருக்கோயில்

1. மட்டக்களப்பு மான்மியம் - F.X.C.நடராஜா - மட்டக்களப்பு - 1962, 1998 (பக்கம் 185, 186).

2. குளக்கோட்டன் தரிசனம் - செல்வி.க.தங்கேஸ்வரி - ஆரையம்பதி - 1993 - பக்கம் - 43, 49, 57, 58.

3. மாகோன் வரலாறு - க.தங்கேஸ்வரி - ஆரையம்பதி - 1995- பக்கம் - 53, 91, 92.

4. இலங்கையில் திராவிடர் கட்டிடக் கலை - கலாநிதி.க.இந்திரபாலா - சென்னை - 1970, 1999 - பக்கம் - 53, 54.

5. மட்டக்களப்புத் தமிழகம் - வி.சி.கந்தையா - யாழ்ப்பாணம் - 1964- பக்கம் - 407, 408, 409.

6. ஈழத்தமிழர் வரலாற்று சுவடுகள் - நா.நவநாயக மூர்த்தி - பனங்காடு- பக்கம் - 100, 40, 41, 56.

7. மட்டக்களப்பு சைவக்கோயில்கள் -. வி.சி.கந்தையா - கொழும்பு - 1997 - பக்கம் - 48, 63.

8. மட்டக்களப்பு மான்மியம் - ஓர் ஆராய்ச்சி - திருமதி.தனபாக்கியம் குணபாலசிங்கம் - மட்டக்களப்பு - 1993 - பக்.103, 104.

9. மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் - வித்துவான் சா.இ.கமலநாதன், கமலா கமலநாதன் - கொழும்பு - 2005 - பக். 16, 17, 18.

10. 9.9.2003 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உகந்தைகிரி சிவாலயம்


1. ஈழத்து இந்து சமய வரலாறு - சி.க.சிற்றம்பலம் - யாழ்ப்பாணம் - 1996- பக்கம் - 217, 219.
2. ஈழத்தமிழர் வரலாற்று சுவடுகள் - நா.நவநாயக மூர்த்தி - பனங்காடு- பக்கம் - 25.
3. இலங்கையில் தொல்லியல் ஆய்வுகளும், திராவிட கலாசாரமும் - ஜி.தனபாக்கியம் - மட்டக்களப்பு - 1988 - பக்கம் 80, 99.
4. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி - ஜி. தனபாக்கியம்- மட்டக்களப்பு- பக்கம் - 94, 95.
5. மட்டக்களப்புத் தமிழகம் - வி.சி.கந்தையா - யாழ்ப்பாணம் - 1964- பக். 407 - 409.
6. மட்டக்களப்பு சைவக் கோயில்கள் - வி.சி.கந்தையா - கொழும்பு- 1997- பக்கம் - 35.
7. மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் - வித்துவான் சா.இ.கமலநாதன், கமலா கமலநாதன்- கொழும்பு - 2005 - பக். 26, 27.
8. 23.10.2010 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புக்கள்.


## ஓமுன மலை கந்தசுவாமி கோயில் - மாதுரு ஓயா


1. Negenehira Palathe ha uthuru Palathe Singhala Boudda Urumaya - Poojya Ellawela medananda himi-colombo -2003 - பக்கம். 254 - 255.
2. Ancient ceylon - H.parker - New Delhi - 1909. பக்கம். - 178.
3. Veddo - chandrasiri ranasinghe - colmbo - 2009 - பக். 195, 208, 219, 184 (The Veddas - C.G.Seligmann.M.D.and Brenda Z.Seligamann - 1911.
4. Article by Udeshi Amarasinghe - Traversing the Unexplored The Maduru Oya Maha Oya Road.
5. 11.4.2012 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புக்கள்.


## அம்பாறை சிவன் கோயில்


1. Lakdiva Purathana varimarge - Thunvana Kotasa (Part - 3) (Ancient Irrigation works in ceylon - part - 3 R.L.P.K.Thornhill - L.Piyasena - Colombo - 2001 (R.L. Brohier 1935) பக்..55.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. A Short History of Hinduism in ceylon - C.S.Navaratnam- Jaffna - 1964 - பக். 89.

3. மட்டக்களப்பு தமிழகம் - வி.சி.கந்தையா - யாழ்ப்பாணம் - 1964 பக்.400.

4. இந்து நாகரிகம் பாகம் II பக்கம் 157.

5. Monograph of Batticoloa district of the Eastern province -S.O.Kanagaratnam - Batticoloa 1921.

6. Madagalpauva Districkaya Vuruthanthaya - Y.W.Gunavardana - Boralesgamuwa - 2008 - பக்கம்- 69.

7. கைலாச நாதம் - சி.க.சிற்றம்பலம் பக்கம் - 205, 208

8. Nahenahira Palathe Sha uthuru Palathe sinhala Boudha Urumaya - Pooja Ellawala Medananda Himi - colombo - 2003 -பக்கம் - 425, 440

9. Navathama Seelalipi Gavesane - Poojya Ellawala Medananda Himi - colombo - 2008 பக்கம் - 38, 39, 129

10. மாகோன் வரலாறு - க.தங்கேஸ்வரி - ஆரையம்பதி - 1995- பக்கம் - 55.

11. ஈழத் தமிழர் வரலாற்று சுவடுகள் - நா.நவநாயக மூர்த்தி - பனங்காடு- பக்கம் - 93.

12. இலங்கையில் தொல்லியல் ஆய்வுகளும் திராவிட கலாசாரமும் ஜி.தனபாக்கியம் - மட்டக்களப்பு - 1988 - பக்கம் - 96.

13. Censes of ceylon - 1921 -பக்கம் 245, 246, 247.

14. Digamadulu Danavva - Piyasena Kahandagamage - பக்கம். 112, 124, 131, 138, 153.

15. 13.5.2004 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்.

## சன்னாசிமலை முருகன், பிள்ளையார் கோயில்கள்

1. கிழக்கிலங்கை பூர்வீக வரலாறு - க. தங்கேஸ்வரி - சென்னை - 2007 பக்கம் - 83.

2. Inscription of ceylon - Late Brahmi Inscription - Dr.S.Paranavithana 1983 vol. II - part I - பக்.36, 37.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மட்டக்களப்பு சைவக்கோயில்கள் - பண்டிதர் வி.சி. கந்தையா - கொழும்பு - 1997 - பக். 42, 43.
4. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி - திருமதி.தனபாக்கியம் குணபாலசிங்கம் - மட்டக்களப்பு - 1993 - பக். 102, 67, 105.
5. Nahenhira Palatha saha Uthuru palatha sinhala Boudha Urumaya - Pooja Ellawala Medananda Himi - colombo - 2003 - பக். 114, 115.
6. 23.10.2010 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்

## வைரவர் கோயில் - தேவாலயகுடி, வட்டினாகல

1. Nahenhira Palatha saha Uthuru palatha sinhala Boudha Urumaya - Pooja Ellawala Medananda Himi - colombo - 2003 - பக்கம் - 52, 179, 180.
2. மாகோன் வரலாறு - க.தங்ஸேஸ்வரி - ஆரயம்பதி - 1995 - பக்கம் -54, 55.
3. MR.Ajith Kumarasiri Devalahinda வழங்கிய தகவல்கள்.
4. Digamadulu Danavva - Piyasena Kahandagamage - Colombo - 2000பக்கம் . 126, 59.
5. 12.6.2011 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்

## காளியம்மன் கோயில் - சம்மாந்துறை

1. ஈழத்தமிழர் வரலாற்று சுவடுகள் - ந.நவநாயக மூர்த்தி - பனங்காடு பக்கம் - 88, 95.
2. மாகோன் வரலாறு - க.தங்கேஸ்வரி - ஆரயம்பதி - 1995 பக்கம் - 55.
3. மட்டக்களப்பு வரலாறு - ஓர் அறிமுகம் - வெல்லவூர் கோபால் - மட்டக்களப்பு - 2005 - பக். 127, 170.
4. மட்டக்களப்புத் தமிழகம் - வி.சி.கந்தையா - யாழ்ப்பாணம் - 1964- - பக். 428.
5. அம்பாறை மாவட்டத்தில் மறைக்கப்பட்ட வரலாற்று இந்து ஆலயங்கள் - நா.நவநாயகமூர்த்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் கோயில் - அக்கரைப்பற்று

1. அக்கரைப்பற்று வரலாறு - A.R.M. சலீம் - அக்கரைப்பற்று- பக்கம் - 42, 59, 61, 141, 171.
2. ஏர்முனை 3 - ஆலையடி வேம்பு வணக்கஸ்தலங்களின் வரலாறு - க.செல்வரத்தினம்.
3. ஏர்முனை 3- கருங்கொடித்தீவு மான்மியத் துளிகள் - சி.சிவஞானமூர்த்தி.
4. மட்டக்களப்பு வரலாறு ஓர் அறிமுகம் - வெல்லவூர் கோபால் - மட்டக்களப்பு - 2005 - பக். 127, 170.

## ஐயனார் கோயில் - பனங்காடு

1. ஆண்டிக்கேணி ஐயனார் - பக்கம் - 64.
2. ஏர்முனை - இலங்கை வரலாற்றில் பனங்காடும், பழைய ஐயனார் வழிபாடும்.
3. 12.5.2004 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்

## நாக கோயில் - நாகபர்வதமலை

1. Inscriptions of ceylon - vol.1 - Early Brahmi Inscriptions - S. Paranavitana - Colombo - 1970-பக்கம் 39,40.
2. Navathama seelalipi Gavesane - Poojya Ellawala Medananda Himi - colombo - 2008 - பக்கம்.42,44.
3. Negenehira Palathe ha uthuru Palathe Singhala Boudda Urumaya - Poojya Ellawela medananda himi-colombo -2003 - பக்கம். 85,90.
4. ஈழத்து இந்து சமய வரலாறு - சி.க.சிற்றம்பலம் யாழ்ப்பாணம் - 1996 - பக்கம். 125, 126.
5. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி - ஜி.தனபாக்கியம் - மட்டக்களப்பு - பக்கம் 102, 32 - 35.
6. 25.7.2012 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விஷ்ணு கோயில் - பெரிய நீலாவணை**

1. வீரகேசரி வாரமலர் - த.தங்கராசா - 15.06.2003.
2. மட்டக்களப்பு வரலாறு ஓர் அறிமுகம் - வெல்லவூர் கோபால் - மட்டக்களப்பு - 2005, பக்.133.
3. பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலயம் - வீரகேசரி - 9.9.2012 - செல்லையா பேரின்பராசா.
4. 13.5.2004 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்

**சங்கமன் கண்டி சிவாலயம்**

1. பண்டைய தமிழர் பண்பாட்டு கோலங்கள் - நா.நவநாயகமூர்த்தி - பனங்காடு - பக்கம் - 10.
2. மாகோன் வரலாறு - க.தங்கேஸ்வரி - ஆரையம்பதி - 1995 - பக்கம் 92, 93.
3. மட்டக்களப்பு சைவக் கோயில்கள் - வி.சி.கந்தையா - கொழும்பு - 1997- பக்கம் 41, 43, 46.
4. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி - ஜி.தனபாக்கியம் - மட்டக்களப்பு - பக்கம் 105.
5. 24.10.2010 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்

**கண்ணகி அம்மன் கோயில் - காரைதீவு**

1. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி - ஜி.தனபாக்கியம் - மட்டக்களப்பு - பக்கம் 95, 96.
2. மட்டக்களப்பு சைவக் கோயில்கள் - வி.சி.கந்தையா - கொழும்பு - 1997 - பக்கம் 143, 145.
3. ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள் - நா.நவநாயகமூர்த்தி - பனங்காடு - பக்கம் 95.
4. 24.11.2012 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வும், அவை பற்றிய குறிப்புகளும்.
5. 13.5.2004 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மடத்தடி மீனாட்சியம்மன் கோயில்

1. 22.4.2005 ல் மேற் கொள்ளப்பட்ட கள ஆய்வும், அவை பற்றிய குறிப்புகளும்.
2. 25.11.2012 ல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வும் அவை பற்றிய குறிப்புகளும்.
3. தினக்குரல் - 24.4.2011 ல் வெளிவந்த கட்டுரை - செ.துஷ்யந்தன்.

## கரவாகு ஐயனார் கோயில் - கல்முனை

1. அம்பாறை மாவட்டத்தில் மறைக்கப்பட்ட வரலாற்று இந்து ஆலயங்கள் - நா.நவநாயகமூர்த்தி.
2. 24.11.2012 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வும் அவை பற்றிய குறிப்புகளும்.
3. பாரம்பரியமிக்க கதிர்காம பாத யாத்திரையும் கந்தசுவாமி கடவுளின் புனித பூமியும் - என்.கே.எஸ். திருச்செல்வம் - கொழும்பு - 2013 - பக். 75-78.

## பிள்ளையார் கோயில் - நிந்தவூர்

1. ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள் - நா.நவநாயகமூர்த்தி - பனங்காடு - பக்கம் 47, 82, 91, 97, 105, 110.
2. 17.03.2013 இல் மேற் கொள்ளப்பட்ட கள ஆய்வும் அவை பற்றிய குறிப்புகளும்.

## விநாயகர் கோயில் - மல்வத்தை

1. Epigraphia Zeylanica - H.W.Codrington & S.Paranavitana -New Delhi, Madras - 1994 - பக்கம் 171,175.
2. Journal of the ceylon Branch of the Royal Asiatic society - C.W.Nicholas - Colombo - 1963 - பக்கம் 28, 29.
3. 25.11.2012ல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வும் அவை பற்றிய குறிப்புகளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாககோயில் - தீகவாபி

1. The Mahavamsa - wilhelm geiger - New delhi/ madras - 1993 - பக்.8 (1.78).
2. Digavapi Rajamaha vihara - poojya mahaoye sobitha himi - colombo 2006 - பக். 17, 18.
3. Journal of the ceylon branch of the Royal Asiatic Society - new serial vi பக். 27.

## விநாயகர் கோயில் -பிள்ளையார் காடு, தீகவாபி

1. Digavapi Rajamahavihara - பக். 54.
2. 20.4.2013 இல் மேற் கொள்ளப்பட்ட கள ஆய்வும், அதன் குறிப்புகளும்.

## கொடுப்பத்தை பிள்ளையார் கோயில் - கோமாரி

1. 16.3.2013 ல் மேற் கொள்ளப்பட்ட கள ஆய்வும், அவை பற்றிய குறிப்புகளும்.
2. கோமாரி அறநெறிப் பாடசாலை பொறுப்பாசிரியர் திரு.சுபோகரன் வழங்கிய வரலாற்றுத் தகவல்கள்.
3. பாரம்பரியமிக்க கதிர்காம பாத யாத்திரையும் கந்தசுவாமி கடவுளின் புனித பூமியும் - என்.கே.எஸ். திருச்செல்வம் கொழும்பு - 2013 - பக். 153-156.

## கோரக்கர் பிள்ளையார் கோயில் - சம்மாந்துறை

1. 25.11.2012 ல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வும், அதன் குறிப்புகளும்.
2. சம்மாந்துறை கோரக்கர் கோயில் பகுதியைச் சேர்ந்த தங்கம்மா (வயது 75) பேச்சிமுத்து (வயது 80) ஆகியோர் வழங்கிய தகவல்கள்.

## முருகன் மலை கந்தசுவாமி கோயில் - கண்ணகிபுரம்

1. ஏர்முனை - 03, பக்கம் 26, 55.
2. மட்டக்களப்பு மான்மியம் - F.X.C. நடராஜா மட்டக்களப்பு - 1998 - பக்கம் - 29.
3. 25.11.2012 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வுகளும் அதன் குறிப்புகளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் கோயில் - நாவிதன்வெளி

1. 17.3.2013 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்

## சிவன்கோயில் - தீகவாபி

1. 2011 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிக் குறிப்புகள்.
2. Dutugamunu maharajathuma - Poojya Ellawala medananda himi colombo - 2002 - பக். 53.
3. 20.4.2013இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்

## மகாகந்தக் குளம் - உகனை

1. Ancient ceylon - H. Parker - New Delhi - 1909- பக்கம் - 396.
2. Lakdiva Purathana varimarga (Sinhala Translation) R.L.Brohier - Colombo - 2002- தேசப்படம் -பாகம் மூன்று - பக்கம் - 52.

## கந்தசுவாமி கோயில் - கல்முனை

1. இலங்கை திருநாட்டின் இந்துக்கோயில்கள் - இந்து சமயத் திணைக்களம் - கொழும்பு - 1984 - பக்கம்.363
2. 24.11.2012 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்
3. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி - திருமதி.தனபாக்கியம் குணபாலசிங்கம் - மட்டக்களப்பு - 1993 - பக். 121.
4. Ceylon the portugas Era- P.E. Pieris - பக். 198.

## மாணிக்கவைர விநாயகர் கோயில் - தம்பட்டை, தம்பிலுவில்

1. மட்டக்களப்பு மான்மியம் FXC.நடராஜா மட்டக்களப்பு 1998 - பக்கம் 31.
2. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி - ஜி.தனபாக்கியம் மட்டக்களப்பு - பக்கம் 104, 105, 175.
3. 17.3.2013 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சித்தி விநாயகர் கோயில் - சேனைக்குடியிருப்பு, கல்முனை


1. 29.10.2003 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்
2. 24.11.2011ல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்


### ஆதிவில்லுப் பிள்ளையார் கோயில் - வளத்தாப்பிட்டி


1. Lankave Puradana Varimara - Part 03 (Ancient Irrigation work.in ceylon) RL.Brohier - பக் 56
2. 25.11.2012 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்


### மாணிக்கப்பிள்ளையார் - பாண்டிருப்பு, கல்முனை


1. 30.10.2003 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்
2. 24.11.2012 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்


### மல்லிகைத்தீவு சைவக்கோயில் - சம்மாந்துறை


1. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி - ஜி.தனபாக்கியம் மட்டக்களப்பு - பக்கம் - 126.
2. தினக்குரல் வாரமலர் - 16-09-2012, பக்கம் - 14B செ.துஸ்யந்தன்.
3. Census of ceylon - 1921 - பக்கம் - 245 - 247.
4. 22.4.2005 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்
5. 25.11.2012 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்


### முத்துமாரியம்மன் கோயில் - கோளாவில், அக்கரைப்பற்று


1. மயூர மங்கலம் - பக்கம் - 414
2. 12.5.2004 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்
3. 20.4.2005 ல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்
4. 20.4.2013 ல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கந்தன்வெளி கந்தசுவாமி கோயில் - மல்கம்பிட்டி, சம்மாந்துறை

1. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி - ஜி.தனபாக்கியம் மட்டக்களப்பு - பக்கம்.98,99,100.
2. 21.4.2013 இல்மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்

### கஞ்சிக்குடிச்சாறு சிவாலயம் - திருக்கோயில்

1. Nehenahira Palathe Saha Uthuru Palathe Sinhala Boudha Urumaya - Poojya Ellawala Medananda Himi - Colombo - 2003 பக்கம் - 154, 155.
2. கைலாசநாதம் - சி.க.சிற்றம்பலம் - பக்கம் - 208.
3. 24.10.2010 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்
4. 13.6.2011இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்

### செண்பக நாச்சியம்மன் கோயில் - ஊரக்கை, சாகாமம்

1. பண்டைய ஈழத்தமிழர் வரலாறு- நா.நவநாயகமூர்த்தி- பக்கம் - 55, 67.
2. A Centre of folk religion for sinhalese and tamils in the island- 08-06-1985 N.Tharmalingam.
3. திருகோணமலை மாவட்ட திருத்தலங்கள் - பண்டிதர் இ. வடிவேல் - கொழும்பு - பக்கம் - 141.
4. 24.10.2010ல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்

### சிங்காரபுரி மாரியம்மன் கோயில் - அட்டப்பள்ளம்

1. P. செல்லப்பா (முன்னாள் தலைவர்) வழங்கிய தகவல்கள்
2. 22.4.2005 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்
3. 25.11.2012 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்

### கண்ணகியம்மன் கோயில் - தம்பிலுவில்

1. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி -ஜி.தனபாக்கியம் - மட்டக்களப்பு - பக்கம் 104, 105.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பண்டைய ஈழத்தமிழர் வரலாறு - நா.நவநாயகமூர்த்தி - பக்கம் 55.
3. மட்டக்களப்பு சைவக்கோயில்கள் - வி.சி.கந்தையா - கொழும்பு - 1997. பக்கம் 339, 340.
4. 12.05.2004 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்

**கோளாவில் விநாயகர் கோயில் - அக்கரைப்பற்று**

1. மட்டக்களப்பு வரலாறு ஓர் அறிமுகம் - வெல்லவூர் கோபால் - மட்டக்களப்பு - பக்கம் 172.
2. அக்கரைப்பற்று வரலாறு - A.R.M..சலீம் - அக்கரைப்பற்று - பக்கம் 11-13.
3. ஏர்முனை - ஆலயவேம்படி பிரதேச வரலாற்றுப் பின்னணி- நா.நவநாயகமூர்த்தி.
4. 20.4.2005 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்

**களியோடை காளியம்மன் கோயில் - ஒலுவில்**

1. ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள் - நா.நவநாயகமூர்த்தி - பனங்காடு - பக்கம் 95.
2. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி - ஜி.தனபாக்கியம் - மட்டக்களப்பு - பக்கம் 95, 96.
3. Inscriptions of ceylon - vol.1 - Early Brahmi Inscriptions - S. Paranavitana - Colombo - 1970- பக்கம் 37.
4. 25.11.2012 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்

**கண்ணகி அம்மன் கோயில் - வீரமுனை**

1. ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள் - நா.நவநாயகமூர்த்தி - பனங்காடு - பக்கம் 94, 95.
2. 7.9.2003 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்
3. 22.4.2005 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்
4. 15.4.2012 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலையடிபால விக்னேஸ்வரர் கோயில் - காரைதீவு


1. மட்டக்களப்பு சைவக் கோயில்கள் - வி.சி.கந்தையா - கொழும்பு - 1997 - பக்கம் 109.
2. 13.5.2004ல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்


## மாகாளியம்மன் கோயில் - சொறிக்கல்முனை


1. நற்பிட்டிமுனை சேனைக்குடியிருப்பு ஸ்ரீபத்திரகாளியம்மன் ஆலய வருடாந்த உற்சவப் பெருவிழா - S. சிவகுருநாதன் - 17.10.2001.
2. சிவஸ்ரீ. நல்லதம்பிக் குருக்கள் (திரு நீலகண்டேஸ்வரர் தேவஸ்தானம் சேனைக்குடியிருப்பு - கல்முனை.) வழங்கிய தகவல்கள்.
3. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி - ஜி.தனபாக்கியம் - மட்டக்களப்பு - பக்கம் 125.
4. Monograph of the Batticaloa District of the Eastern Province - S.O.Kanagaratnam - Batticaloa - 1921, பக்கம் 40.
5. மட்டக்களப்பு மான்மியம் - F.X.C.நடராஜா - மட்டக்களப்பு - 1998 - பக்கம் 73.
6. 21.4.2013 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்


## திரௌபதி அம்மன் கோயில் - பாண்டிருப்பு


1. மட்டக்களப்பு சைவக் கோயில்கள் - வி.சி.கந்தையா - கொழும்பு - 1997 - (பக்கம். 151 - 152)
2. ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள் - நா.நவநாயகமூர்த்தி - பனங்காடு - பக்கம். 100.
3. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி - ஜி.தனபாக்கியம் - மட்டக்களப்பு - பக்கம். 122.
4. Hinduism in ceylon - பக்கம். 119.
5. 24.11.2012 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெயங்கொண்ட சலாமேக ஈஸ்வரம் - மகா கிரிந்திகம

1. இலங்கையில் இந்து கலாசாரம் - சி.பத்மநாதன் - கொழும்பு - 2000 - பக்கம். 145, 155.
2. Lankave Dravida Sihivatana - பக்கம். 148, 149.
3. இலங்கை தமிழ் சாசனங்கள் - சி. பத்மநாதன் - கொழும்பு- 2006-பக்கம் 142.
4. Journal of the ceylon branch of the Royal Asiatic Society - New series volume IV - பக்கம் 30.
5. Digamadulla Danavva - Piyasena Kahandagamage - Colombo - 2000 - பக்கம்121.

## ஈஸ்வரன் கோயில் - பிராமணகாமம், பானமை

1. A Short History of Hinduism in ceylon - C.S.Navaratnam -Jaffna - 1964 - பக்கம் 43.
2. The Mahavamsa - Wilhelm Geiger - New Delhi - 1912 பக்கம் - 270.
3. ஆய்வுக் கட்டுரைகள் - சி.க.சிற்றம்பலம் - பக்கம் - 22, 24.
4. Journal of the Royal Asiatic Socity of ceylon - volume 1 -1963 -பக்கம் 22, 23.
5. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி - ஜி. தனபாக்கியம் - மட்டக்களப்பு - பக்கம். 109, 110.
6. Nehenahira Palathe Saha Uthuru Palathe Sinhala Boudda Urumaya - Poojya Ellawala Medananda Himi - Colombo - 2003 -பக்கம்.119, 123.
7. ஈழத்து இந்து சமய வரலாறு - சி.க.சிற்றம்பலம் - திருநெல்வேலி - 1996 - பக்கம் 151.
8. 23.10.2012 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்

## தீகவாபி முருகன் கோயில்

1. Degavapi Rajamahavihara - பக்கம் - 40, 51.
2. இரண்டாம் உலக இந்து மாநாடு சிறப்பு மலர் - 2003 பக்கம். 52.
3. Inscriptions of ceylon - vol.1 - Early Brahmi Inscriptions - S. Paranavitana - Colombo - 1970 - பக்கம் - 37.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பண்டைய இலங்கையில் தமிழும் தமிழரும் - பரமு புஸ்பரட்ணம் - 2003 - பக்கம் 31, 41.
5. புராதன இலங்கையின் தமிழ் சிங்கள உறவுகள் - லயனல் சரத் - கொழும்பு - 1997 - பக்.52.
6. 20.4.2013 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்

## முருகன், பத்தினியம்மன் கோயில்கள் - பானமை

1. பாரம்பரியமிக்க கதிர்காம பாதயாத்திரையும் கந்தசுவாமிக் கடவுளின் புனித பூமியும் - என்.கே.எஸ்.திருச்செல்வம் - 2013 - கொழும்பு-பக்.180, 181.
2. Negenehira Palathe ha uthuru Palathe Singhala Boudda Urumaya - Poojya Ellawela medananda himi-colombo -2003 - பக். 116.
3. ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள் - நா.நவநாயகமூர்த்தி -அக்கரைப்பற்று - 2002- பக்.81.
4. 23.10.2010 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்

## முள்ளிக்குளம் மலை சிவன் கோயில் - பாலமுனை

1. Negenehira Palathe ha uthuru Palathe Singhala Boudda Urumaya - Poojya Ellawela medananda himi-colombo -2003 - பக். 185-187.
2. பண்டைய இலங்கையில் தமிழும் தமிழரும் - கலாநிதி பரமு புஸ்பரட்ணம், கொழும்பு - 2001 - பக். 36.
3. மகோன் வரலாறு - க. தங்கேஸ்வரி - ஆரையம்பதி - பக். 55
4. Navathama Seelalipi Gavesana - Poojya Ellawala Medananda Himi - Colombo - 2008 - பக். 47.
5. 25.11.2012 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்

## மடத்துறை அம்மன் கோயில் - (சின்னக் கபிலித்தை அம்மன் கோயில்)

1. Splendours of Ruhuna's Heritage - Gamini De S.G.Punchihewa - Pannipitiya - 2005 -பக் 147.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. Katharagama Deviyange Adaviye haaskama (Lankadeepa News Paper) - Kartha Mandalaya.
3. Kumana Kurulu Paaradisaya - Shantha Kumara Vithana -Gampaha - 2011 - பக் 41.
4. பாரம்பரியமிக்க கதிர்காம பாத யாத்திரையும் கந்தசுவாமி கடவுளின் புனித பூமியும் - என்.கே.எஸ். திருச்செல்வம் - கொழும்பு - 2013 -பக். 279 - 283.
5. Yala Negenahira Ahimi Vanamang - Gamini Vijith Samarakoon - Colombo - 2000
6. 25.07.2012 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்.

## ஆலையடி பிள்ளையார் கோயில் - குண்டுமடு, பொத்துவில்

1. 16.03.2013 ல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்.
2. பாரம்பரியமிக்க கதிர்காம பாத யாத்திரையும் கந்தசுவாமி கடவுளின் புனித பூமியும் - என்.கே.எஸ். திருச்செல்வம் - கொழும்பு - 2013 - பக். 161.
3. முத்தூர் அகத்தியர் - க.பாலசுப்பிரமணியம் - திருகோணமலை - பக். 5, 6
4. பல்லவ ராச்சியம் - பல்லவ ராசசேகரம் - திருகோணமலை - 2007, பக். 51.
5. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி - திருமதி.தனபாக்கியம் குணபாலசிங்கம் - மட்டக்களப்பு - 1993 - பக். 126
6. மட்டக்களப்பு தமிழகம் - வி.சி.கந்தையா - யாழ்ப்பாணம் - 1964 - பக். 410, 425, 426.

## மீனோடைக்கட்டு பிள்ளையார் கோயில் - அக்கரைப்பற்று

1. ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள் - நா.நவநாயகமூர்த்தி -அக்கரைப்பற்று - 2002- பக். 107.
2. 25.11.2012 ல் மேற்கொள்ளப்பட்ட களஆய்வின் குறிப்புகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பாரம்பரியமிக்க கதிர்காம பாத யாத்திரையும் கந்தசுவாமி கடவுளின் புனித பூமியும் - என்.கே.எஸ். திருச்செல்வம் கொழும்பு - 2013 -பக். 99.

4. அம்பாறை மாவட்டத்தில் மறைக்கப்பட்ட வரலாறு இந்து ஆலயங்கள் நா.நவநாயகமூர்த்தி.

5 Cences - 1871 - Appendix to Report - P. 77 - 80

6. Cences of Ceylon - 1901- Vol.IV - P. 258 - 278

7. Cences of Ceylon - 1921 - P. 243

8. Digamadulu Danavva - Piyasena Kahandagamage - Colombo - 2000 - பக். 121, 126, 129, 1488

## முருகன் மலை கந்தசுவாமி கோயில் – சங்கமன் கண்டி

1. சங்கமன் கண்டி காட்டுப்பிள்ளையார் கோயில் - கும்பாபிஷேக மலர் திருக்கோயில் - 2009.

   A. சங்கமன் கண்டி பண்டைய வரலாறு - க.தங்கேஸ்வரி பக். 119 - 124.

   B. சங்கமன் கண்டி மலை பிள்ளையார் ஆலயம் தோற்றம், வளர்ச்சி, வழிபாடு - நா.நவநாயகமூர்த்தி - பக். 102 - 116.

2. அம்பாறை சங்கமன் கண்டியில் ஆலயம் காணப்பட்டதனை உறுதிப்படுத்தும் புதிய தொல்பொருள் சின்னங்கள் - பேராசிரியர் எஸ். பத்மநாதன் - வீரகேசரி வாரவெளியீடு - 12.05.2013.

3. 23.10.2010 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புக்கள்.

4. 16.03.2013 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புக்கள்.

## சங்கமன் கண்டி காட்டுப் பிள்ளையார் கோயில்

1. சங்கமன் கண்டி காட்டுப்பிள்ளையார் கோயில் - கும்பாபிஷேக மலர் திருக்கோயில் - 2009.

2. 24.10.2010 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்

3. 16.03.2013 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பானமை பிள்ளையார் கோயில்

1. பாரம்பரியமிக்க கதிர்காம பாத யாத்திரையும் கந்தசுவாமி கடவுளின் புனித பூமியும் - என்.கே.எஸ். திருச்செல்வம் கொழும்பு - 2013 -பக். 177 - 179
2. 23.10.2010 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்
3. 24.07.2012 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்.

## மாவடி முருகன் கோயில் - மாவடிப்பள்ளி

1. 25.11.2012 இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புக்கள்.
2. 23.10.2010இல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புக்கள்.
3. சம்மாந்துறை கோரக்கர் கோயில் பகுதியில் வசிக்கும் திரு.பேச்சிமுத்து (வயது. 80) திருமதி தங்கம்மா (வயது 75) ஆகிய முதியவர்கள் வழங்கிய தகவல்கள்.

## குடும்பிமலை சிவன் கோயில்

1. ஈழத்து இந்து சமய வரலாறு -சி.க. சிற்றம்பலம் - திருநெல்வேலி, யாழ்ப்பாணம் - பக். 174
2. Negenehira Palathe ha uthuru Palathe Singhala Boudda Urumaya - Poojya Ellawela medananda himi-colombo -2003 - பக் 216 - 221 பக். 110-14.
3. Divayina Article .on 30.03.2005
4. Rivira Article on 06.11.2011
5. 23.10.2010 ல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்
6. Inscriptions of ceylon - vol.1 - Early Brahmi Inscriptions - S. Paranavitana - Colombo - 1970-பக். 38, 39

## உகந்தை மலை முருகன் கோயில்

1. Negenehira Palathe ha uthuru Palathe Singhala Boudda Urumaya - Poojya Ellawela medananda himi-colombo -2003 - பக். 93, 94

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மட்டக்களப்பு சைவக்கோயில்கள் - வி.சி.கந்தையா - கொழும்பு 1997- - பக். 30, 32, 35
3. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி - திருமதி.தனபாக்கியம் குணபாலசிங்கம் - மட்டக்களப்பு - 1993 - - பக். 94
4. 24.07.2012 ல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்


## இராசமலை சிவன் கோயில் - பக்கிஎல்ல


1. Negenehira Palathe ha uthuru Palathe Singhala Boudda Urumaya - Poojya Ellawela medananda himi-colombo -2003 - பக் 216 - 221
2. Inscriptions of ceylon - vol.1 - Early Brahmi Inscriptions - S. Paranavitana - Colombo - 1970- பக்33, 34, 35
3. 12.06.2011 ல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்


## வீரமுனை சிந்தாயாத்திரை பிள்ளையார் கோயில்


1. மட்டக்களப்பு சைவக்கோயில்கள் - வி.சி.கந்தையா - கொழும்பு 1997- - பக் 261, 262.
2. சீர்பாத குல வரலாறு - அருள் செல்வநாயகம் - 1982 - பக். 45, 46, 50
3. ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள் - நா.நவநாயகமூர்த்தி -அக்கரைப்பற்று - 2002- பக். 100.
4. 7.9.2003 ல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்
5. 15.4.2012 ல் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் குறிப்புகள்
6. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி - திருமதி.தனபாக்கியம் குணபாலசிங்கம் - மட்டக்களப்பு - 1993 - பக். 100.
7. தினக்குரல் வாரமலர் கட்டுரை - 19.12.2012 - பேராசிரியர் எஸ். பத்மநாதன்- பக்.17
8. கலைக்கேசரி - நவம்பர் 2012- பக்- 12-16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 7
## இந்துக்களின் (தமிழர்களின்) பாரம்பரிய சொத்துக்கள்


1. The Mahavamsa - Wilhelm Geiger - Madras, New Delhi - 1993. -XXV - 72, 73, 74 - பக் 175.
2. The temporal and Spiritual Conquest of Ceylon Rev. Fernao de Queyroz - New Delhi, Madras - 1992.
3. Kanda Upatha
4. Monarchs of lanka - Premasiri Mahingoda - Colombo - 2006. பக். 66.
5. The Mahavamsa - XXXVII - 9, 10, 11, 12, 41 -பக். 268,270.
6. மட்டக்களப்பு மான்மியம் -F.X.C நடராஜா - மட்டக்களப்பு (1962).1998 - பக். 38, 39
7. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி - திருமதி.தனபாக்கியம் குணபாலசிங்கம் - மட்டக்களப்பு - 1993 - பக்.70
8. Culavamsa - Wilhelm geiger - New Delhi, Madras - 2003- LXXXIX - 19, 22,81 - பக். 117,123.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Kumaran Printers Pvt) Ltd. 0112 364550

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org